JL
Lm, 211
N18
N20
218
225574

கடவுள் துணை

14 SEP 1920

KATHA
கதாரத்னகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்

—ஔவை குறள்

Vol. 3. தொகுதி 3.	July, 1920. 1920-ம் ௵ ஜூலை ௴	No. 2. பகுதி. 2.

ஞானவிநாயகர்

1. மோகமெனுங் கடல்கடந்து முக்தியெனுங்
கரைகாண்பான் முதிர்ந்த நாலாம்
பாகமெனு மலர்கொண்டு பக்தியெனும்
புனலாட்டிப் பரிந்து சாத்திச்
சோகமெனப் பாவித்துத் துரியமெனும்
விளக்கேற்றிச் சோக நீங்கி
ஆகமெனுங் கோயிலின்கண் அறிவென்னும்
கணபதிக்கே அன்பு செய்வோம்.

தக்ஷிணாமூர்த்தி

2. கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
யாறங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லமுமாய் அல்லவுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்லாம்.

[illegible]

பெரியதிருமொழி.

3. வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தாற்
பெருந்துயரிடும் பையிற்பிறந்து
கூடினேன்கூடி யிளையவர்தம்மோ
டவர்தருங்கலவியே கருதி
ஓடினேனோடி உய்வதோர் பொருளா
லுணர்வெனும் பெரும்பதந்தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்.

4. ஆவியே அமுதே யெனநினைந்துருகி
அவரவர்பணை முலைதுணையாப்
பாவியேனுணரா தெத்தனைபகலும்
பழுதுபோ யொழிந்தனநாட்கள்
தூவிசேரன்னம் துணையொடும் புணரும்
சூழ்புனற்குடந்தையே தொழுதேன்
நாவினாலுய்ய நான்கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

குரு ஸ்தோத்திரம்.

5 தந்தைதாயாவானுஞ் சார்கதியிங்காவானும்
அந்தமிலாவின்ப நமக்காவானும்
எந்தனுயிர் தானாவானுஞ் சானாவானு
மருட் கோனாவானுங்குரு.

திருச்சிற்றம்பலம்.

6. நீலனேன் கொடும்பொய்யலதுரையா
நீசனென்பதென்னெஞ் சறிந்ததுகாண்
சாலவாயினு நின்கழல டிக்கே சரண்
புகுந்திடிற்றள்ளுதல் வழக்கோ
வாலமுண்ட நின்றன்மை மாறுவதே
லகில கோடியு மழிந்திடுமன்றே
சீலமேவிய வொற்றியம் பரனே
தில்லையம் பலத்திகழொளி விளக்கே.

14 SEP 1920
MADRAS

கேஸரி ஹிண்டு மெடல் பெற்ற
சகோதரி
சுப்பு லக்ஷ்மி அம்மாள் பி. ஏ.

கணித சாஸ்திரத்தில் பிரசித்திபெற்று
(காலஞ்சென்ற)
இராமானுஜம்.

14 SEP 1920
MADRAS



ஸர் பி. ஸி. ரே.
பிரபலசாஸ்திர நிபுணர்.



மகாகவி டாகூர்
ரவீந்திரநாத டாகூர்.

“கதாரத்நாகரம்” அனுபந்தம்.

கடவுள் துணை.

14 SEP 1920

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

Vol. 3. | June, 1920. | No. 1.
தொகுதி 3. | 1920-ம் ஹு ஜூன் மீ | பகுதி. 1.

1 கடவுள் வணக்கம்.

(All Rights Reserved)

225574

1. எல்லாக் காரிய முயற்சிக்கும் முதலில் சர்வகாரணராகிய கடவுளைப் பணிய வேண்டுமென்பது மனிதரின் கடமை. கடவுள் எங்கும் நிறைந்தவர். யாவர்க்கும் பொது வானவர்.

2. உலக முழுமைக்கும் பகவானே முதலாக விருக்கின்றார். எப்படி யெனில் எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் எப்படி முதலாக விருக்கின்றதோ அப்படி யென அறிந்து கொள்ள வேண்டும்.

3. அப்படிக் கொத்த ஆதிபகவானுடைய பாதார விந்தத்தை தொழாதவன் எவ்வளவு கற்றும் பலனென்ன.

4. அன்பருடைய மனதில் வாசஞ்செய்கின்ற பகவானுடைய திருவடிகளைப் போற்றி பணிகின்றவர்கள் பரலோகத்தில் நற்கதி யடைந்து அழிவில்லாமல் எப்போதும் வாழ்வாரென்று அறியவும்.

5. வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாத பகவானுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்களுக்கு எக்காலத்திலும் பிறவித்துன்ப மில்லை.

6. இறைவனுகிய பகவானது கீர்த்தியை விரும்பித் துதிசெய்கின்றவர்களுக்கு அந்தகாரம் பொருந்திய கர்மபந்த மொன்றுமிராது.

7. மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற பஞ்சேந்திரியங்களின் வழியால் வருகின்ற ஐந்தாசைகளையும் நீங்கினவர்களுடைய

ஒழுக்க நெறியில் நின்றவர்கள், பிறப்பிறப்பில்லாமல் எக்காலத்திலும் ஒரு தன்மையுடன் வாழ்வார்கள்.

8. ஒப்பிடப்படாத பரமாத்மாவினுடைய திருவடிகளை யடையாதவர்கள் தமக்குள்ள மனக்கவலையை விட்டு நீங்கமாட்டார்கள்.

9. சர்வதயாபரனாகிய கடவுளினது பாதாரவிந்தத்தைச் சேர்ந்தவர்கள் தவிர மற்றவர்கள், பிறவிக் கடலைக் கடக்கச் சக்தியுள்ளவர்களாக மாட்டார்கள்.

10. அஷ்டகுணங்களை யுடைய பரமனது பாதங்களை வணங்கி நமஸ்கரியாதவர்களுக்கு, யாதொரு பயனுங் கிடைக்கமாட்டாது.

11. ஆதலால் நன்மைப் படைத்துப் பாது காத்து வீடுபெறச் செய்யும் பகவானைத் துதிசெய்ய வேண்டியது அவசியமென் றறிய வேண்டும்.

225574 சென்னை 600 008.

2. கலா ஞானம்

1. இளமைப் பருவத்தில் கல்வியைக் கற்கவேண்டும். கல்வியைக் கற்கச் சோம்பலுற்றவன் தரித்திரத்தை யடைவான்.

2. கல்வியால் நல்லறிவு மிகும். அது பெரியோர்கள் சென்ற நல்லொழுக்கத்தில் புத்தியைச் செலுத்தும்.

3. கணித நூலும் இலக்கண நூலும் மனிதருக்குக் கண்களென்று சொல்லத் தக்கவைகளாம். ஆதலால் கற்றவர்கள் கண்ணுடையவர்களென்றும் கல்லாதவர்கள் குருடர்களென்றும் சொல்லப்படுவார்கள்.

4. நன்றாய் வாசித்தறிந்தவர்களை யாவரும் வணங்கி உபசரிப்பார்கள். ஆதலால் கல்வியினிடத்து இடைவிடாது சிந்தையை வைத்துக் கற்கவேண்டும்.

5. மணற்கேணி, தோண்டு மளவும் தண்ணீர் சுரப்பது போலக் கல்வியைக் கற்குமளவும் நல்லறிவு மிகும்.

6. மிகுந்த தூரத்திலிருக்கும் அந்நியதேசத்திற்கூட சுவதேசத்திற்போல உபசரிக்கப்படுவதற்குக் கல்வியே காரணமாதலால் அதை வாழ் நாளளவும் பயிர்ச்சி செய்து வரவேண்டும்.

ஸ்ரீராமஜெயம்.

சுதேசமித்திரன் புத்தகசாலை

இராஜீய நூல்கள்

"சுதேசமித்திரன்" பிரசுரங்கள்.

இராஜ பக்தி, தேசீய ஞானம், காலதேச வர்த்தமான விவகாரங்கள் இவைகளை மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும் என்பது நம் தேசத்து மேதாவிகளின் கருத்து ஆகையால் இத்துறை தீர்க்க, யாம் காலந்தோறும் தமிழ் நாட்டுக்கு பயந்தரக் கூடிய இராஜீய விஷயங்களை அவ்வப்போது, புத்தக ரூபமாய் வெளியிட்டு வருகிறோம். பாரத புத்திரர்கள் அனைவரும் அவசியம் படித்துணர வேண்டிய நூல்களாகும்.

		ரூ	
1.	காங்கிரஸ் லீக் கோரிக்கைகளும் அதிகார வர்க்கத்தின் தவறும்	0	12
2.	பொது விஷய விளக்கம்	1	8
3.	கோகலேயின் ஜீவிய சரித்திரம்	0	8
4.	தாதாபாய் நௌரோஜி	0	3
5.	மணி ஐயர் சரிதை	0	12
6.	ரவீந்தர நாதரின் பஞ்சரத்தினம்	0	10
7.	அப்துர் ரஹிம் மறுப்புரை	2	0
8.	விசேஷ காங்கிரஸ் மகாசபைப் பிரசங்கங்கள்	0	8
9.	மகாத்மா காந்தி	0	4
10.	பாரத ஜன சபை	1	0
11.	இந்தியாவின் தொழில், மாளவியா சிறப்புரை	1	0
12.	சிவாஜி மகாராஜா சரித்திரம்	1	0
13.	ராஜாங்க துவேஷ மசோதா	0	4
14.	முஸ்லீம் லீக் விசேஷக் கூட்டம்	0	8

பண்டித நடேச சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட இனிய தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.
திக்கற்ற இருகுழந்தைகள்	1	0
தானவன்	0	12
தலையணை மந்திரோபதேசம்	9	8
தீனதயாளு	0	6
ஷேக்ஸ்பியர் கதைகள்	0	9
மிருச்சகடி	0	4

இனிய தமிழ் நாவல்கள்.

ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனைகள்.
4-பாகங்கள் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 3.

	ரூ.	அ.		ரூ.	அ.
வித்தியானந்தர்	1	4	ஜெகத்ஜோதி	0	8
பரிமளா	1	0	இயற்கை அற்புதங்கள்	0	8
ஜானகி பரிணய நாடகம்	0	12	த்ரௌபதி	0	8
திருச்சுழியல் வெண்பா	0	8	ராஜம் ஐயர் சரிதை	0	8
சுந்தரவல்லி	0	8	ஹிமார்ஜுனே	0	8
பாரிசால் சொரேமைகள்	0	4	ஒட்டக் கூத்தர் சரித்திரம்	0	8
ஆரியகுமாரி	0	6	ஸற்குண சந்திரன்	0	10
பீஷ்ம விஜயம்	0	8	முரளி தரன்	0	10
லலிதா	0	4	மரகதவல்லி	0	10
ராஜப்பிரபா	0	6	பஞ்சரத்தினம்	0	12
சாதனு	0	4	வ்யாசவிதானம்	0	12
பார்வதி கல்யாணம்	0	4	ஔவை	0	6
திருமயிலைச் சிறப்பு	0	2	காரைக்காலம்மை சரித்திரம்	0	1
கமலாகாந்தன்	0	2	குஹபெருமான்	0	3
க்ஷத்திரிய ரமணி	0	2	வடிவேலன் அந்தாதி	0	4
ராம்நாதன்	0	2	ஆனந்தமடம்	0	12
அனுமப் பிரபாவம்	0	3	சச்சுதானந்த சிவம்	0	14
கிரிஸல்டா	0	3	பதார்த்தகுண சிந்தாமணி	1	8
தேடாத செல்வம்	0	4	சித்திரரேகை	1	0
பிரபாவதி	0	6	குமரேசசதகம்	0	6
நிர்மலா	0	6	பங்கஜாக்ஷி	1	8
ஷேக்ஸ்பியர் Vol. 1.	0	6	சோமசுந்தரம்	0	4
லோபி	0	8	மதிமுகு	0	8

இனிய தமிழ் நாவல்கள்

	ரூ.	அ.
ஆனந்த கதா கல்பகம்	3	0
இரத்நபுரி ரகசியம் (2 பாகமும்)	3	4
கன்னியின் முத்தம் 4 பாகமும்	3	0
மாண்டி கிரிஸ்டோ (2 பாகமும்)	2	8
கனக பூஷணம் (2 பாகமும்)	2	0
அயோத்யா (2 பாகமும்)	1	8
கமலாக்ஷி	1	8
தனபாலன் (2 பாகமும்)	1	8
கௌபல் நாகசுந்தர் சரித்திரம்	1	8
மூக்தமாலா ...	1	8
விஜயசுந்தரம் ...	1	8
ஜடாவல்லவன் ...	1	8
கமலாம்பாள் சரித்திரம் ...	1	6
கமலசேகரன் ...	1	4
ஞானாம்பிகை ...	1	4
கதாசரித்ர சாகரம் 1-ம் பாகம் (ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு)	1	4
பத்மாவதி ...	1	4
மனமோஹனமாணிக்கம் என்னும் மஹா விந்தையான மாயக்கதை ...	1	4
வித்தியாநந்தர் அல்லது கற்பின் வெற்றி ...	1	4
தர்மாம்பாள் (2-பாகமும்) ...	1	2
அஞ்சனாக்ஷி ...	1	0
அற்புத நவீனம் ...	1	0
அற்புத பூலோகரம்பை ...	1	0
அன்பானந்தன் ...	1	0
இந்திராணி (இந்திரபுரி) ரகசியம்) ...	1	0
இரங்கநாயகி ...	1	0
கமலநாதன் அல்லது களவுபோன இரத்நமாலை (துப்பறியுங் கதை)	1	0
கருங்குயில் குன்றத்துக்கொலை:		
1-ம் பாகம்	1	0
2-ம் ,,	1	0
கலாவல்லபி அல்லது தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி	1	0
கற்பகக்காதலன் ...	1	0
கனகவல்லி ...	1	0
காமேந்திரன் ஞானலோசனி	1	0
சச்சிதானந்த சிவம்... ...	1	0
சந்திரசேகரி ...	1	0
சந்திரோதயம் ...	1	0
சிதம்பரதேவர் சரிதம் ...	1	0
சிதாராம் ...	1	0
சுகுணதிரன் 1-ம் பாகம் ...	1	0
ஷை 2-ம் ,, ...	1	4
சுசீலா ...	1	0
சுந்தராங்கி ...	1	0
சுயம் பிரகாசவதனி ...	1	0
ஞான சம்பந்தம் ...	1	0
தானவன் என்னும் போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள் (துப்பறியுங் கதை)	1	0
திரிலோக மோஹனாங்கி ...	1	0
துர்கேச நந்தனி	1	0
எமபட்டணமென்னும் சாலத் அஸ்ஞ சரித்திரம் ...	1	0
பண்டிதை மெஸ்மரிஸா ...	1	0
மங்கம்மாள் அல்லது மதுரைக் கரசி ...	1	0
மதனகாந்தி ...	1	0
மதனபூஷணம் ...	1	0
மனோரஞ்சிதம் 1-ம் பாகம் ...	1	0
ஷை 2-ம் ,, ...	1	0
மனோஹரி ...	1	0
மீனாக்ஷி ...	1	0
ராபின்ஸன் குருஸோ ...	1	0
லண்டன் சாமர்த்தியத் திருடர்கள் 1-ம் பாகம் ...	1	0
2-ம் பாகம் ...	1	4
வசீகரி ...	1	0
வாதசுந்தரம் (துப்பறியும் இரண்டு நக்ஷத்திரங்கள்) ...	1	0
வீரவர்மன் வெற்றி 1ம்பாகம்...	1	0
ஷை 2-ம். பாகம்	1	0
வெண்டாமரையாள் ,,	1	0
ஜயசீலன் ...	1	0
ஜெயங் கொண்ட சௌந்தரவல்லி ...	1	0
ஹேமலதா ...	1	8
அந்தப்புரக் காதல் ...	0	14
அந்தப்புர ரகசியம் ...	0	14

	ரூ.	அ.
அரண்மனை ரகசியம் ...	0	14
கல்பலதா ...	0	14
[illegible]வசுந்தரி ...	0	14
பத்மினி ...	0	14
ரத்தினப்பிரமை ...	0	14
அம்சராஜன் கதை (நவகுமாரர்கள் சரித்திரம்) ...	0	12
அம்பாலிகை ...	0	12
அநுமான்சிங் (துப்பறியும் கதை) ...	0	12
ஆநந்த கிருஷ்ணன் ...	0	12
ஆநந்தசுந்தரி	0	12
ஆநந்தபவன் அதிசயம் ...	C	12
இராஜாம்பாள் (துப்பறியும் கதை ...	0	12
இந்திரஜித்தன் அல்லது கள்ளர் தலைவன்	0	12
ஐவன்ஹோவ (ஸர் வால்டர் ஸ்காட்) ...	0	12
கண்ணகி (கதை) ...	0	12
கமலரேகை ...	0	12
கமலலோசனி ...	0	12
கர்பகவல்லி ...	0	12
காதலி ...	0	12
காலனை வென்று கணவனைக்காத்த கற்பகவல்லி ...	0	12
கிருஷ்ணவேணி ...	0	12
குசாவதி அல்லது ஒரு வஞ்சக வனிதை ...	0	12
குணபூஷணம் அல்லது கடமையின முரண் ...	0	12
சங்கநிதி ...	0	12
சத்தியவல்லி ...	0	12
சந்தனவதி ...	0	12
சந்திரகாந்தா (துப்பறியுங் கதை) ...	0	12
சாந்தபரியின் காந்தமணி ...	0	12
சாரஙநேத்ரி ...	0	12
சித்திரரேகை ...	0	12
சின்மய சிகாமணி ...	0	12
[illegible]மதி ...	0	12
சுகுணங்கதன் அல்லது பரோபகாரி ...	0	12

	ரூ.	அ.
சுந்தரராஜா அல்லது [illegible]ட்பு	0	12
சுந்தரன் ...	0	12
சுந்தரி மனோகரன் ...	0	12
சுந்தரேசன் அல்லது உரிமையிழந்தோன்	0	12
சுமுகன் ...	0	12
ஞானகாந்தி ...	0	12
ஞானமிர்தம் ...	0	12
தங்கம்மாள் ...	0	12
தனஞ்செயன் ...	0	12
தாமோதரன் ...	0	12
திக்கற்ற இரு குழந்தைகள் ...	1	0
தினகரசுந்தரி ...	0	12
நளோபாக்யானம் ...	0	12
நீதிபாலன் ...	0	12
நோரமா 1-ம் பாகம் ...	0	12
ஷை 2-ம் ,, ...	0	12
பக்த சந்திரிகா ...	0	12
பணத்தினால் வந்த பழி ...	0	12
பதிவிரதா சிரோன்மணி ...	0	12
பத்மரேகை ...	0	12
பத்மலோசனி ...	0	12
பனங்குளம் (ஆர். வி. டட் இயற்றிய Lake O. P. M. S. என்னும் ஆங்கில நாவலின் மொழி பெயர்ப்பு) ...	0	12
பாமா விஜயம் ...	0	12
பிரேமகலாவதீயம் ...	0	12
பிரேமகாந்தன் ...	0	12
புஷ்பவனம் ...	0	12
பொற்சொடி ...	0	12
மங்கையர்க்கரசி ...	0	12
மதன மனோல்லாசன் ...	0	12
மதிவாணன் ...	0	12
மனோரஞ்சனி ...	0	12
மனோன்மணி ...	0	12
மீனாக்ஷி சுந்தரன் ...	0	12
மூதேவியார் ...	0	12
மைனாவதிக் கதை ...	0	12
மோகனசுந்தரம் (துப்பறியும் கதை) ...	0	12
லீலா அல்லது மங்கைபுர மாணிக்கம் ...	0	12
விஜயகாருண்யம் ...	0	12

	ரூ.	அ.
விஜயமார்த்தாண்டம் ...	0	12
விவேகவதி ...	0	12
வீரவல்லி ...	0	12
வனரோஜா ...	0	12
ஏகம் பஞ்சாதம் ...	0	10
கமலபவன அற்புதம் ...	0	10
கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து ...	0	10
குணசீலன் ...	0	10
குலசேகரன் ...	0	10
கோசகி கோகிலமானது ...	0	10
சத்யசீலன் ...	0	10
சுவர்ணாம்பாள் அல்லது பெருவிரல் மர்மம் ...	0	10
சோமகாந்தன் ...	0	10
ஞானகல்யாணி ...	0	10
தேவீசந்திரப்பிரபா ...	0	10
பத்மநாபன் ...	0	10
பத்மநிதி ...	0	10
பத்மாசனி (துப்பறியும் கன்னிகை) ...	0	10
புதியவனத்துக் குழந்தைகள்	0	10
புருஷோத்தமன் ...	0	10
பொய் சொல்லா புண்ணியவதி என்னும் பூலோக லக்ஷ்மி ...	0	10
மதனலீலாவதி ...	0	10
மாலிகா பூஷணி ...	0	10
மதிசூதனன் ...	0	10
மாதவன் ...	0	10
ரம்பை அல்லது களா பூர்ணோதயம் ...	0	10
ரோஜா ...	0	10
லீலாவதி ...	0	10
விஜயலக்ஷ்மி ...	0	10
ஆசன்பே சரித்திரம் ...	0	8
அபயமதி அல்லது உண்மைக் காதலி ...	0	8
அமிர்தவல்லி ...	0	8
அழகுசுந்தரி ...	0	8
ஆகாயபக்ஷி சரித்திரம் ...	0	8
ஆரிய குமாரி ...	0	8
ஆனந்தமஹிளா ...	0	8
ஆனந்த மடம் (இது வங்காளி பாஷையில் ஸ்ரீ பங்கிம் சந்திர		

	ரூ.	அ.
சட்டோபாத்யாயரியற்றிய நாவலின் மொழி பெயர்ப்பு) ...	0	8
இராஜேசுவரி அல்லது கற்பின் வெற்றி ...	0	8
இளமையும் ஒழுக்கமும் (2 பிள்ளைகள்) ...	0	8
உமா ...	0	8
உத்திரை ...	0	8
சண்டிராஜன் கதை ...	0	8
கமலினி கலஹம்சம் ...	0	8
கற்பைக் காத்துக் காதலனை இழந்த கனகரத்நம் ...	0	8
கனவினால் காரியத்தை முடித்த கமலவதி ...	0	8
காமவல்லி ...	0	8
காமாக்ஷி ...	0	8
கிருபாம்பிகை ...	0	8
குணசுந்தரன் ...	0	8
குணசுந்தரி அல்லது இல்லற பொக்கிஷம் ...	0	8
குபேரபுரி ...	0	8
கொண்டவனுக்கு இரண்டகம் செய்த கோமளவல்லி ...	0	8
கோமளம் காஞ்சியாத்திரை	0	8
கோமளம் குமரியானது ...	0	8
கோஹர்ஜான் ...	0	8
சஞ்சீவிகிரி அல்லது செஞ்சி	0	8
சந்திரசேகரன் ...	0	8
சந்திரவதனி ...	0	8
சரசமோஹனா ...	0	8
சரஸ்வதி ...	0	8
சாரதாம்பாள் ...	0	8
சாவித்திரி ...	0	8
ஸ்ரீஹரி ...	0	8
சுந்தரவல்லி ...	0	8
சுந்தரி ...	0	8
சுகதேவி ...	0	8
சுமுக சௌந்தரியவல்லி ...	0	8
சுவர்ணகாந்தி ...	0	8
செந்தாமரை ...	0	8
சோபன வீட்டில் சுகமிழந்த சுந்தரி ...	0	8
ச்யவனோபாக்யானம் ...	0	8
ஞானசுந்தரம் ...	0	8

	ரூ.	அ.
ஞானரஞ்சனி	0	8
கண்டபெஜாரி	0	8
தக்ஷிணா மந்திரோப தேசம்	0	8
தாசி தையலநாயகி சமர்த்து	0	8
தாம்பூலம் தப்பிய தங்க வேணி	0	8
தாலி கட்டித் தடுமாறின தம்பதி	0	8
தியாகராஜன்	0	8
திருமலை சேதுபதி	0	8
திரௌபதை	0	8
தேவசுந்தரி	0	8
தைரியத்தாற் சஞ்சல மகற்றிய சத்தியவசனி	0	8
நளினசுந்தரி அல்லது நாகரிக	0	8
நட்புடல்	0	8
நன்றியறியா மகன்	0	8
நாககாட்டரசி குமுதவல்லி	0	8
நாகரத்தினம் அல்லது விஷக் குண்டூசி	0	8
நீலி வசீகரம்	0	8
பக்தி விளக்கம்	0	8
படுக்கையறையில் பாசாங்கு செய்த பங்கஜவல்லி	0	8
பவானந்தரின் அபூர்வ சாமர்த்தியம்	0	8
பாதாள புவனராணி	0	8
பீமன்	0	8
புது வேதாளக் கதை	0	8
புத்திமானே பலவான்	0	8
புஷ்பகாந்தி	0	8
மஹீஸுதா	0	8
மங்களாம்பாள்	0	8
மதனமஞ்சரி	0	8
மன்மலி அல்லது சென்னைபுரவாச கஷ்ட சுகங்கள்	0	8
மதிவல்லவன் மங்கைமோகனாள்	0	8
மனோரமா	0	8
மாண்டவன் மீண்டமாயம் (துப்பறியும் கதை)	0	8
மாயராக்ஷதனை வென்ற மனோன்மணி	0	8

	ரூ.	அ.
முத்துமீனாக்ஷி	0	8
மெய்க்காதலி	0	8
மேனாமினுக்கி	0	8
மைமைகள்ளி (உலகாநுபவக் கதைகள்	0	8
மோஹன ராணி அல்லது பத்தாரத்னம்	0	8
ராஜாமணி	0	8
லக்ஷ்மீ	0	8
லலிதாங்கி	0	8
வத்ஸலா	0	8
வசுஸுதா	0	8
வனஜாக்ஷி	0	8
வல்லி பரிணயம்	0	8
விகடசுந்தரி	0	8
விதுரநீதி	0	8
விராஜினி	0	8
வீணைகானன் ஞானேந்திரி	0	8
ஸ்ரீமதி ஸரஸா	0	8
ஸ்ரீ மாமி கொலுவிருக்கை	0	8
ஜலந்தர்ஷா சரித்திரம்	0	8
ஜயலக்ஷ்மி	0	8
ஜலஜாக்ஷி	0	8
ஜாலரம்பை நீலலோசனி	0	8
ஜெகதல ஜெகஜ்ஜோதி	0	8
ஜெயத்ஸேனு	0	8
ஜெயம்பெற்ற சுந்தரவல்லி	0	8
ஜ்வலிதாங்கி	0	8
ஹிமார்ஜுனை	0	8
ஹேமாம்பரி	0	8
க்ஷோக் சுந்தரி	0	8
ஒரு பெண் வேலை	0	7
ஸுமதி	0	7
திருமாளிகை	0	7
மணவினை கெடுத்தது	0	7
அகடவிகட ஆனந்தவல்லி	0	6
அம்புஜவல்லி அல்லது கண்டதும் காதல்	0	6
ஆகாயபக்ஷி தீர்த்தம்	0	6
எலேன்	0	6
கண்ணம்மா	0	6
கற்புக்கரசி	0	6
காந்தாமணி	0	6
கீர்வாணி	0	6

	ரூ.	அ.
குணமாலிகை	0	6
ஸ்ரீ குமுதவல்லி, திருமங்கை மன்னன்	0	6
சத்தியவல்லியும்	0	6
சந்திரவல்லி	0	6
சந்திரானனை	0	6
சற்குணதிடன்	0	6
சுகுணரஞ்சனி	0	6
சிவகாமி அல்லது தப்பியோடிய பெண்	0	6
சீனிவாசன்	0	6
ஞானப்பான்	0	6
தனேசுவரி	0	6
தீனதயாளு	0	6
தேவராஜா	0	6
நித்யாநந்தன்	0	6
பவழக்கொடி	0	6
பாலநாகம்மாள்	0	6
பிமலா அல்லது திவான் மகள்	0	6
புத்தியில் மிகுந்த உத்தமியென்னும் பூர்ணவல்லி	0	6
புஷ்பவதி	0	6
பெருமுடிச்சோழன்	0	6
மீனலோசனி	0	6
மோகனசுந்தரி	0	6
ராஜப்பிரபா	0	6
லோபி	0	6
வேலையின் கூலி அல்லது கள்வர் கவர்ந்த கல்யாணப்பெண் (துப்பறியுங்கதை)	0	6
காஞ்சனவல்லி	0	5
காணாமற்போனவர்	0	5
கிழவன் தேஸ் அல்லது புஷ்பம்	0	5
குணலாபன் அல்லது பட்டமிழந்தவன்	0	5
சிந்தாமணி	0	5
நளினாக்ஷி	0	5
பரதன்	0	5
மாணிக்கவல்லி	0	5
முராஹரி	0	5
மூன்று வைரங்கள்	0	5
மோஹனலீலா	0	5
மோஹனா	0	5
ஸ்நேகலதா	0	5

	ரூ.	அ.
அரிச்சந்திரா	0	4
அன்புக்கும் அழிவோ	0	4
அன்புவல்லி	0	4
இரமணீயம்	0	4
கண்மணிக்கதை	0	4
கமலாம்பிகை	0	4
கம்பனும் கலைமகளும்	0	4
கருணாகரன் (துப்பறியும் நாவல்	0	4
காதலவெற்றி	0	4
காலவரிஷி	0	4
குலசேகரன்	0	4
கொடுநீலிக்கதை	0	4
சகுந்தலை	0	4
சண்டைக்காரி சாதுவாக்கப்பட்டது	0	4
சம்பகமாலினி	0	4
சம்பந்தமூர்த்தி	0	4
சாரதாநந்தர்	0	4
சின்னத்தம்பி	0	6
சிவபாக்கியம் அல்லது மூத்தாள் இளையாளானது	0	4
சூக்ஷ்மதரிசி	0	4
தாக்ஷாயணி	0	4
தாம்பூலம் தப்பிய தங்கவேணி	0	4
நளசக்கரவர்த்தி	0	4
நம்பிக்கைத் துரோகம் ஞ	0	4
நாகரிக பாரிஜாதம்	0	4
நாட்டுப் புறத்தான் நகரப்பிரவேசம்	0	4
நாட்டுப்புறத்தான் நகரவாசம்	0	4
நூர்ஜிஹான சக்கரவர்த்தினி	0	4
பரமார்த்த குருகதை	0	4
பாரிஜாத பஹரணம்	0	4
பாலவியாபாரி கதை	0	4
பிரபாவதி	0	4
புருஷத்துரோகப் புண்பட்ட புராணம்	0	4
புவனசுந்தரி	0	4
மந்திரவீணை	0	4
யோகினி ஜாலக்கதை	0	4
ருக்மணிபரிணயம்	0	4
லீனு அல்லது அருளானந்தரின் ஆச்சரிய அனுபவங்கள்	0	4
வசந்தசேனை	0	4

	ரூ.	அ.
வீண்பக்தி வேஷதாரி ...	0	4
வேதவல்லி ...	0	4
அபிராதுவஷா கதை ...	0	4
இந்திரா ...	0	3
காணமற்போனகண்மணி ...	0	3
கிரிசெல்டா (பொறுமையுள்ள மனைவி) ...	0	3
கௌரிமணி ...	0	3
ஸர்தார்சிங் அல்லது ஓர் பத்திராசிரியரின் ஆச்சரிய அனுபவம் ...	0	3
சுலோசன உபாக்கியானம் ...	0	3
குணாபூணி ...	0	3
கவுரீதம் ...	0	3
மாவலிகேதோபாக்கியானம் ...	0	3
நாயகனை வஞ்சித்த நாரிபட்டபாடு ...	0	3
பத்மினி ...	0	3
மலையமான் ...	0	3
மனோன்மணி ...	0	3
பாலதி ...	0	3
விஜயத் தவசியும் சிவவேடனும் ...	0	3
வெரோணா நகரத்து இருகுலமக்கள் ...	0	3
சந்திரகாசன் சாமர்த்தியங்கள் (தர்ப்பங்கா தாசி) ...	0	2½
பாடலிபரிணயம் ...	0	2½
அடைக்கலங்காத்தல் ...	0	2
அம்புஜா ...	0	2
இரண்மயி ...	0	2
இஸாஸல்லா ...	0	2
என் தங்கை [ஓர் கதை) ...	0	2
கண்மணி கமலம் ...	0	2
கமலாபாய் ...	0	2
சத்தியவதி ...	0	2
சித்திரகேது ...	0	2
சீமந்தினி சரித்திரம் ...	0	2
சுகுமார திலகம் ...	0	2
ஸானல்லிதா மனோஹரன் ...	0	2
தர்மசிங் ...	0	2
தாதாவின் தந்திரம் ...	0	2
தெய்வம்மிசமேல் ...	0	2
நிர்ப்பதுலக்ஷம் ரூபாய் ...	0	2
நான்குயர்திரி கதை ...	0	2

	ரூ.	அ.
நெப்போலியன் சரித்திரம் ...	0	2
பொன்னால் ...	0	2
மல்லிகா ...	0	2
மீனம்பாள் ...	0	2
ராதா ராணி ...	0	2
வாமன் சரித்திரம் ...	0	2
வேணுகோபாலன் அல்லது தெய்வசக்தி ...	0	2
விபீஷணர் சரணாகதி ...	0	2
ஜயவீரன் ...	0	2
ஹேமந்த குமாரி ...	0	2
ஸ்ரீமதி (பக்தி சந்திரிகா நெம்பர் 1) ...	0	1½
அய்யாக்குட்டி அல்லது விவாஹ கரகர்கள் ...	0	1½
கரிசிலாதாள் அல்லது உத்தம பத்தினி ...	0	1½
அவிவேக பூரண குருகதை ...	0	1½
கலியுக தர்மம் ...	0	1½
நிர்மலா ...	0	1½
பால விநோதினி ...	0	1½
பிரணவப் பொருளறியாத பிரமன் ...	0	1½
புருஷத்வேஷ பூதகி ...	0	1½
மனமோகனராஜன் ...	0	1½
கடன்பட்ட கர்தன் ...	0	1
உஷா கல்யாணம் ...	0	1
சிபிச்சக்கரவர்த்தி ...	0	1
போலீஸ் வீரன் சமர்த்து ...	0	1
அசுவத்யா ...	0	½
திலோத்தமா ...	0	½
பிருந்தை ...	0	½
விநோதரசமஞ்சரி ...	1	2
திராவிட பூர்வகாலக் கதைகள்	0	8
திராவிடமத்தியகாலக் கதைகள்	0	4
அராபிரைட் கதை படங்களுடன் ...	2	8
ஷை திக் காகிதம் ...	3	0
பாரிசக் கதைகள் ...	2	8
விக்கிரமாதித்தன் கதை ...	1	8
தேவலோகக் கிரிமினல் கேஸ்	1	8
வேதாந்தவிவகார கிரிமினல் கேஸ் ...	1	8
சிவலோகக் கிரிமினல் கேஸ்	0	8

விநோதக் கதைகள்,

முதலியன.

	ரூ.	அ.
நாரதர் கலகம் 4 பாகமும் ஒரு கட்டடம் ...	1	8
மனமோஹனக் கண்ணடி ...	0	8
விஜயவிகட பூஷணம் ...	0	6
வியாசன் விபரீதம் ...	0	4
கண்ணம்மாள் அல்லது கண்டதும் காதல் ...	0	8
உலக விசித்திரக் கதைகள் ...	1	0
பலவித சாமர்த்திய ஜெகஜாலப் புரட்டன் கதை ...	0	4
கொழுத்த சிரிப்பு ...	0	6
கூலிக்குத் தாலிகட்டின கதை	0	4
பூலோக விநோதகதைகள் (பாகம் 5-க்குத் தனித்தனி) ...	1	0
சதகண்ட ராவணன்கதை ...	0	2
யாருக்கும் அஞ்சாத அசர்சூரன் கதை ...	0	6
தக்காணத்துப் பூர்வ கதைகள்	1	0
பழமொழிக் கதைகள் ...	0	10
பன்னிரு நீதிக்கதைகள் ...	0	10
கதாரத்நம் ...	0	5
அபிநவ கதைகள் ...	0	6
தண்டசோத்துத் தடிராமன் கதை ...	0	4
திண்ணைத்தூங்கி தடிராமன் கதை ...	0	4
தம்படி தருமம் செய்த தனவான் கதை ...	0	4
துக்கம் பெரிதென்னும் துயராளன் கதை ...	0	12
தாசியால் மோசம்போன சந்திரசேகரன் கதை ...	0	4
மதிசூதனன் என்னும் ஓர் சேனாபதியின் சாமர்த்தியக் கதை	0	10
மகாசாமர்த்திய பண்டிபிரவாகன் கதை ...	0	8
விதியை மதியால் வென்ற விவேகாநந்தன் கதை ...	0	8
பொப்பிலி ராஜன் கதை ...	0	6
காசி ராமேசுவர மாஜிலி கதை	0	12

	ரூ.	அ.
கூத்திக்கிட்டுக் குரங்கானேன் கதை ...	0	8
கலியுக விகடன் கதை ...	0	5
கலியுக தந்திரக் கதைகள் ...	0	2
கலியுக விநோதக் கதைகள் ...	0	8
அகடவிகடவிலாச விநோதக் கதை ...	0	8
32-பதுமை கதை ...	0	4
சண்டாளர் சகவாசம் ...	0	8
விகட விநோத விசித்திரக்கதைகள் ...	8	0
பிரபஞ்ச பாவபுண்ணியம் ...	0	8
பூலோக இன்பதுன்பம் ...	0	8
கதாமோஹன ரஞ்சிதம் ...	1	0
மதனகாமராஜன் என்னும் 12 மந்திரி கதை ...	0	0
அகடவிகட சம்சாரி ...		
நூதன விசித்திர பஞ்சகதை 44 கள் ...	0	4
கதாமஞ்சரி ...	0	4
பஞ்சதந்திரம் வசனம் ...	0	4
ஷை அரும்பதவுரையுடன் ...	0	6
ஷை இங்கிலீஷ் குறிப்புடன்	0	10
ஷை இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு ...	0	6
ஷை செய்யுள் ...	0	4
ஆரியமத உபாக்கியானம் 1-ம் பாகம் (படங்களுடன்) ...	0	4
ஷை 2-பாகம் ...	0	6
டில்லிபாஷா கதைகள் ...	0	5
இந்தியமாயா விநோதக் கதைகள் ...	0	4
நீதிசாரமஞ்சரி ...	0	4
நீதி விநோதக்கதை ...	0	4
ஆட்கொல்லி ...	0	3
சிறுவர்க்கேற்ற கதைகள் ...	0	2
மூடினமுத்து (கதைகள்) ...	0	1½
இந்துதேசத்து விநோத கதாமஞ்சரி ...	0	1
பண்டைக்காலக் கதைகள் ...	0	3
இலங்கைத் தீவின் காட்டுமனிதர் ...	0	[illegible]
சித்திரக்கதைகள் ...	0	1

	ரூ.	அ.
சுந்தரமுத்தூக் கதை ...	0	1
வீண் பெருமையையும் திருப்தி யின்மையையும் பற்றிய கதை ...	0	¼
பொன்னூற் கதை தனித்தனி		
உப்பும் உப்புக்கனியும் [2 பை)		

சிறுவர்களுக்கான கதைகள்

	ரூ.	அ.
கதைக்கொத்து மலர் 5 ...	0	1
ஷை ,, 2 ...	0	5
ஷை ,, 4 ...	0	4
ஷை ,, 4 ...	0	6
ஷை ,, 5 ...	0	3
ஷை ,, 6 ...	0	8
கதைக் கொடி :		
மலர் 1: சண்பகமொட்டு, தங்கக் கிளி, பொன் ஆடு	0	4½
மலர் 2: உண்மைச் சேவகன் ஏழைச் செல்வி, மாதுளங்கனி ...	0	7½
மலர் 3 ஸஞ்சீவகரணி, மல்லாளன், மந்திரவாதி ...	0	12
நாற்பது திருடர் கதை ...	0	3
அல்லாவுதீன் ...	0	2½
இரட்டைப் பிள்ளைகள் ...	0	2
சீல சயபன்னன் ...	0	2
செங்கை வளவன் ...	0	2
டிக் உட்டிங்டன் ...	0	2
தென்னாலிராமன் ...	0	2
நற்பழக்கம் ...	0	2
நீதிக்காபுரம் ...	0	2
பாண்டவர் சூது ...	0	2½
மரியாதை ராமன் ...	0	2
மல்லிகா ...	0	2
மாயத்தாமரை ...	0	2
மாயூரம் இடபதீர்த்தம் ...	0	2
ஸரஸ்வதி ...	0	2
ஸுலோசனை ...	0	2
இட்டார்க்கு இட்டபயன் ...	0	1
ஊக்கமே உயிர்த்துணை ...	0	1
கனகாங்கி ...	0	4
சுப்பண்ணன் ...	0	1
மீனாக்ஷி ...	0	1
கண்களின் பயன் ...	0	1

	ரூ.	அ.
எறும்பின் அதிசயங்கள் ...	0	[illegible]
நக்கீரன் ...	0	1
பீஷ்மன் ...	0	1½
பரதன் ...	0	1
கௌசல்யாதேவி ...	0	2
நிலைமைக்குத் தக்கபடி நில் ...	0	1½
விசித்திர வைத்தியன் ...	0	2
பொன்மான் ...	0	1
சோமனாங்கி ...	0	1½
பெரிய மனிதனுடைய பிள்ளை	0	6
இரண்டு நாய்களின் கதை ...	0	1½
உலோகங்களின் உபயோகம்	0	1
அதிசயங்கள் ...	0	¾
இரண்டு சகோதரர்கள் ...	0	1½
ஸ்திரீமணி ...	0	¾
பலதேவன் ...	0	2
மூராத் (ஓர் துர்ப்பாக்கியசாலி)	0	2
மூன்று பரதேசிகள் ...	0	2
விக்டோரியா ...	0	2
தைரியமுள்ள சிறுவன் ...	0	2
ஆபத்தில் நேசன் ...	0	1½
ஆராயும் அங்குட்டன் ...	0	1½
செங்கைவளவன் ...	0	1½
செம்படவன் ...	0	1½
திலகவதி ...	0	1½
அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை	0	1½
கைமன் ...	0	1½
ஈனக் ஆர்டன் ...	0	1½
ஜமேசன் ...	0	1½
ஜார்ஜ் மன்னன் ...	0	1½
நல்ல பாடம் ...	0	1½
ராயர் அப்பாஜி ...	0	1½
அதிசயமான கிளி ...	0	1
அன்புள்ள சகோதரி ...	0	1
ஆனந்தக் கண்ணாடி ...	0	1
உருத்திரன் ...	0	1
ஐந்து திருடர் கதை ...	0	1
கணையும் கண்ணீரும் ...	0	1
மாயப் பொம்மை ...	0	2
கதிர்காலத்துச் சந்திரிகை ...	0	1
சட்டகனர வாசம் ...	0	1
கண்ணப்பன் ...	0	1
கம்பரும் சோழரும் ...	0	1

	ரூ.	அ.
குசேலன் ...	0	1
குமணன் ...	0	1
கூண்டுவிட்டுக் கூடு போய்தல் ...	0	1
கோவிந்தன் ...	0	1
சந்திரஹாஸன் ...	0	1
தாளில்லாக்கதவு ...	0	1
துருவாசரும் துரியோதனனும்	0	1
தோட்டக்காரன் ...	0	1
நல்ல சிநேகிதர்கள் ...	0	1
நல்ல பிள்ளைகள் ...	0	1
நல்ல மாட்பிள்ளை ...	0	1
நளன் ...	0	1
நான்கு பாடர்கள் ...	0	1
நாய்காட்டிய நல்லறிவு ...	0	1
நீதிக்கதைகள் ...	0	1
நைட்டிங்கேல் அம்மையார்	0	1
பச்சைத் தேவதை ...	0	1
பால நியாயாதிபதி ...	0	1
புலவர் வறுமை ...	0	1
போலி ராஜகுமாரன் ...	0	1
மறுபடி முயற்சிசெய் ...	0	1
மூன்று குமாரர்கள் ...	0	1
மூன்று தங்க மாம்பழங்கள்	0	1

வேதாந்த சித்தாந்தம்

	ரூ.	அ.
ஸ்ரீ பகவத்கீதை வசனம்		
ஸ்ரீ பொன்னம்பல	1	4
ஸ்ரீ பகவத்கீதை தமிழ் செய்யுளும், சுவாமிகளியற்றிய கூடார்த்ததீபிகை உரையும்	2	0
கீதாசாரத், தாலாட்டு திருத்தாலாட்டு	0	1
ஸ்ரீ சங்கர விஜயம்	0	1
சௌந்தரியலகரி, ஆனந்தலகரி உரையும்மூலமும்	0	6
போதாரியை அல்லது சுவாத்தும நிருபணம்	0	3
பிரச்நோத்தர ரத்நமாலிகை	0	2
அபரோக்ஷாநுபூதி	0	2
ஸ்ரீதத்துவபோதம்	0	1
தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்	0	4
பஞ்சதசப்பிரகரணம் வினாவிடை	1	0
ஸ்ரீ விசாரசாகரம்	3	4
ஸ்ரீ விருத்திப்பிரபாகரம்	4	6
பிரபோத சந்திரோதய வசனம்	1	0
தத்துவராய சுவாமிகள் சிவப்பிரகாச வெண்பா, தத்துவாமிர்தம் சரித்திரத்துடன்	0	2
குமாரதேவர் சாஸ்திரம்	0	10
இராஜயோக வித்யா வினாவிடை	0	1
ஸ்ரீ பர்த்ருஹரி வைராக்கிய சதகம்	0	3
ஒழிவிலொடுக்கம் உரையுடன்	1	0
மாயாப்பிரலாபம்	9	2½
பிரபுலிங்கலீலை வசனம்	0	12
கைவல்லிய நவநீத மூலம்	0	2
வேதாந்தசூளாமணி மூலம்	0	2
விவேகசிந்தாமணி	0	6
ஆர்யர் சந்தியாவந்தனம்	0	1
உபநயனார்த்த தீபிகை	0	½
அகம்புற ஆராய்ச்சி விளக்கம் வசனம்	1	4
தத்துவவாதம்	0	4
ஸ்ரீசங்கராசாரியர் அவதார மகிமை	0	4
வேதாந்த சங்கை நிவாரணம்	0	4
சித்தாந்திகளும் ஏகாத்மவாதிகளே	0	1
அத்வைத தூஷண பரிகாரம்	0	8
பதிபசுபாசவாதம், துவிதசைவரே மாயாவாதிகள்	0	12
மாயாவாத சைவசண்டமாருதம்	1	0
திருவள்ளுவர் முதற்குறள்	0	½
அத்வைத உண்மை	0	4
பசு சச்சிதானந்த முடையதா?	0	1½
அவைதிக சைவ சண்டமாருதம்	1	0
பஞ்சதசப்பிரகரண ஆபாச விளக்கச் சண்டமாருதம்	0	2
முடிவுரைச் சூறாவளி	0	½
துவிதாத்துவிதவாதம்	0	10
துவிதசைவ மறுப்பு	0	6
துவைதசைவகண்டனம் 1-ம் வால்யூம்	2	0
முதற்குறள்வாதம்	0	1
பேதவாத திரஸ்காரம்	0	8

	ரூ.	அ.
திருமந்திர விசாரணை	0	4
ஜீவான்மாவின் பரிமாணம்	0	½
அத்வைத விளக்கம்	0	12
வேதாந்த தீபிகை	0	8
முதற்குறளுண்மை அல்லது முதற்குறள்வாத நிராகரண சததூஷணி	1	0
துவைதசைவ கண்டனம் 2-ம் வாலியம்	1	8
ஸ்ரீ விவேகாநந்த விஜயம்	1	4
ஷை 2-ம் பாகம் (அச்சில்) ...	1	4
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்	1	0
ஔவைகுறள்	0	4
பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்	0	1½
வேதப்பொருள் விளக்கம்,	0	12
வேதப்பொருள் சாரசங்கிரகம்	0	4
பரமாநந்ததீபம்	0	1
பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தம்	0	2
பஞ்சாக்ஷரப்பதிபசுபாச விளக்கமும், ஆத்ம சொரூப விளக்கமும்	0	1½
பக்தி	0	2
மதவிருக்ஷம்	1	12
இந்து டைமில் ஆரியர் சத்திய வேதம்	1	12
சைவசித்தாந்த வரலாறு	0	4
தசகாரிசரூபம் உரை ...	0	4
சித்தாந்தப்பிரகாசிகை (வசனம்). ...	0	2
சித்தாந்த தத்துவ லக்ஷணம் ...	0	1
ஓங்காரத்தின் மகத்வம் ...	0	1
அஷ்டாக்ஷரமகத்வம் ...	0	1
வேதாந்த சேவை ...	0	1

கட்டளை.

	ரூ.	அ.
ஞானஜீவவாதக் கட்டளை ...	0	1
ஞானக்கட்டளை ...	0	2
தத்துவாமிர்தக் கட்டளை ...	0	1
வேதாந்த தத்துவக் கட்டளை, வேதாந்த தசாவத்தைக் கட்டளை, வேதாந்த தசகாரியக்கட்டளை, உபதேச சித்தாந்தக் கட்டளை ...	0	1
உபதேசவுண்மைக் கட்டளை, பிரமோபதேசக் கட்டளை ...	0	4
திருவாலவாய்க் கட்டளை ...	0	1
சித்தாந்தக்கட்டளை ...	0	1
சிவப்பிரகாசக் கட்டளை ...	0	3
சித்தாந்தசாதனக் கட்டளை, சித்தாந்த தசகாரியக் கட்டளை ...	0	1
கட்டளைப் பிரபந்தம் (ஷை) கட்டளைகள் 14-ம் சேர்ந்தது ...	0	8

இதிகாசம்.

	ரூ.	அ.
ஸ்ரீமத் கம்பராமாயண வசனம்	3	8

புராணம்

	ரூ.	அ.
ஸ்ரீ சிவமஹா புராண வசனம் ...	5	0
சூதசங்கிதை தமிழ்ச் செய்யுள்	1	8
குசேலோபாக்கியானம் மூலமும் உரையும் (படங்களுடன்)...	3	0
ஸ்ரீ மூலமும் அரும்பதப் பொருளும் ...	0	8
ஸ்ரீ பிரசவாத சரித்திரம் ...	0	4
பெரியபுராணம், திருவிளையாடல் வசனச் சுருக்கம் (பாக்கெட்) ...	1	4
திருநாவலூர்ப் புராணம் ...	0	4
அருணாசலபுராண வசனம்...	1	0
அரிச்சந்திரபுராண வசனம் (புதிய பதிப்பு) ...	1	8
காஞ்சிப்புராண வசனம் 1ம் பாகம் ...	1	4
பட்டினத்துப் பிள்ளையார் பாடல் முற்றும், புராண முற்றும், பத்திரகிரியார் புலம்பல் முற்றும் ...	1	0
பட்டணத்தார் பாடல் ...	0	2
திருவாதவூரார் புராண வசனம் ...	0	3

மான்மியம்.

	ரூ.	அ.
சிவராத்திரி மான்மிய வசன முதலியன ...	0	4
காசிமான்மியம், ஸ்தலயாத்திரைப் பொதுவிதி, காசி இராமேசுவர யாத்திரை விளக்கமும் (வசனம்) ...	0	6
(சமயாசாரியர்) நால்வர்சரித்திரம்	0	3

தோத்திரம்.

	ரூ.	அ.
அகஸ்தியர் தேவாரத் திரட்டு மூலமும் உரையும் ...	0	12
திருவாசகம் மூலம் ...	1	0
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட்டிரட்டு மூலமும் உரையும்	0	12
தேவார திருவாசகத் தோத்திரத் திரட்டும், நால்வர்களது சரித்திரச் சுருக்கமும் ...	0	8
சிவபூஜைத் திரட்டு ...	0	2
தாயுமானவர் பாடல் குறிப்புரை ...	1	0
மஹாதேவமாலை மூலம் ...	0	1

இலக்கண இலக்கியங்கள்.

	ரூ.	அ.
நன்னூல் முகவை இராமாநுஜ கவிராயர் விருத்தியுரை ...	1	12
நன்னூல் மூலம் இங்கிலீஷ், தமிழ் அவதாரிகைகளுடன் (பாக்கெட்) ...	0	2
யாப்பிலக்கண வினாவிடை...	0	2
வச்சணந்திமாலை யென்னும் வெண்பாப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல் உரை	0	2
உவமானசங்கிரகம், இரத்தினச் சுருக்கம் மூலமும் உரையும்	0	4
அணியிலக்கண வசனம் ...	0	4
நளவெண்பா மூலமும் உரையும் ...	1	0
நைடதம் மூலமும் உரையும்	2	8
ஷை மூலம் ...	0	12

பிரபந்தம்

	ரூ.	அ.
அஷ்டப்பிரபந்தம் மூலம் ...	0	8
தாலாட்டுப் பிரபந்தம் ...	0	4
கட்டளைப் பிரபந்தம் ...	0	8

கோவை, திருப்புகழ்.

	ரூ.	அ.
திருவெங்கைக்கோவை மூலமும் உரையும் ...	2	8
ஒரு துறைக்கோவை ...	0	4
நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ் ...	0	8

நிகண்டு.

	ரூ.	அ.
பிங்கல நிகண்டு மூலமும் உரையும் ...	2	8
உரிச்சொல் நிகண்டு மூலமும் உரையும் ...	0	8
தமிழ்ப்பழமொழி அகராதி	2	0

நீதி நூல்

	ரூ.	அ.
திருக்குறள் மூலம் ...	0	4
திருக்குறள் திருவருட்பயன் குடாரம் ...	0	1
நாலடியார் மூலமும் உரையும் இங்கிலீஷ் மொழி பெயர்ப்புடன் ...	1	8
ஆத்திசூடி வெண்பா மூலமும் உரையும் ...	0	12
ஆத்திசூடிப் பதவுரை ...	0	½
கொன்றைவேந்தன் பதவுரை	0	¼
வெற்றிவேற்கைப் பதவுரை	0	1
வாக்குண்டாம் பதவுரை ...	0	1¼
நல்வழிப் பதவுரை ...	0	1½
நன்னெறிப் பதவுரை ...	0	1½
ஆத்திசூடி கொன்றைவேந்தன் வெற்றிவேற்கை ...	0	12
நீதிநூற்கொத்து மூலமும் உரையும் ...	0	6
நான்மணிக்கடிகை உரையுடன்	0	5
இனியதுநாற்பது உரையுடன்	0	2
இன்னாநாற்பது உரையுடன்	0	2
சிறுபஞ்சமூலம் உரையுடன்	0	4
முதுமொழிக்காஞ்சி உரையுடன்		2½
திரிகடுகம் உரையுடன் ...	0	4
ஏலாதி உரையுடன் ...	0	6
களவழிநாற்பது உரையுடன்	0	2
கார்நாற்பது உரையுடன் ...	0	[illegible]
நீதிநெறிவிளக்கம் உரையுடன்	0	5
வேழமுகம், உலகநீதி ...	0	½

	ரூ.	அ.
நீதிச்செய்யுட்டிரட்டு ...	0	2
பாரதநீதி ...	0	2
விவேகசிந்தாமணி உரையுடன்	0	6
நீதிசூடாமணி ...	0	8
நல்லொழுக்கம் வசனம் ...	0	$\frac{3}{4}$

வைஷ்ணவ நூல்கள்.

	ரூ.	அ.
திருவரங்கத்தாசத் திருநாமம். ஸ்ரீரங்க நாயகியார் ஸஹஸ்ர திருநாமம் ...	0	$\frac{3}{4}$
நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ் ...	0	8
ஸ்ரீ வைஷ்ணவ சமயதீபம்	0	$\frac{3}{4}$

பிள்ளைத்தமிழ், கலம்பகம்.

	ரூ.	அ.
மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்	0	2
சீகாளத்திக் கலம்பகம் ...	0	2
திருவரங்கக் கலம்பகம் ...	0	$1\frac{1}{4}$

அந்தாதி.

	ரூ.	அ.
மறைசையந்தாதி உரையுடன்	0	5
கல்வளையந்தாதி உரையுடன்	0	5
சரஸ்வதியந்தாதி உரையுடன்	0	5
கந்தரந்தாதி உரையுடன் ...	0	$\frac{3}{4}$
நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி	0	5
திருவரங்கத்தந்தாதி ...	0	$\frac{3}{4}$
அழகரந்தாதி ...	0	$\frac{3}{4}$

மாலை.

	ரூ.	அ.
ஹாதேவமாலை ...	0	1
விநாயகரகவல், பூஜை, இரட்டை மணிமாலை ...	0	$\frac{1}{2}$
நால்வர் நான்மணிமாலை ...	0	$\frac{1}{2}$
விதேகமுத்திப்பாமாலை ...	0	1
திருவரங்கத்துமாலை ...	0	$\frac{3}{4}$
திருவேங்கடமாலை ...	0	$\frac{3}{4}$
டிஸ்கவுண்டு மாலை ...	0	1

வெண்பா

	ரூ.	அ.
ஆத்திசூடி வெண்பா உரையுடன் ...	0	12
இரங்கேசர் வெண்பா உரை	0	8
ஸ்ரீசிவப்பிரகாச வெண்பா, தத்துவாமிர்தம் ...	0	2

சதகம்

	ரூ.	அ.
அறப்பளீசுர சதகம் உரையுடன் ...	0	10
ஷை மூலம் ...	0	2
குமரேச சதகம் உரையுடன் ...	0	10
ஷை மூலம் ...	0	2
திருவேங்கட சதகம் ...	0	2
தண்டலையார் சதகம் ...	0	1
ஷை உரையுடன் ...	0	8
கோவிந்த சதகம் ...	0	$\frac{3}{4}$
எம்பிரான் சதகம் ...	0	1
சிவசங்கர சதகம் ...	0	$\frac{3}{4}$
சதகத்திரட்டு 1-ம் பாகம் ...	0	9
கயிலாசநாதர் சதகம் ...	0	2
ஜெயங்கொண்டார்சதகம் ...	0	2
குருநாத சதகம் ...	0	1
அவையாம்பிகை சதகம் ...	0	2
அருணாசல சதகம் ...	0	1
அண்ணாமலைச் சதகம் ...	0	2
வடவேங்கட நாராயண சதகம் பொழிப்புரையுடன் ...	0	2
தொண்டை மண்டல சதகம் ...	0	2
கோகில சதகம் ...	0	2
திருத்தொண்டர் சதகம் ...	0	$\frac{3}{4}$
சதகத்திரட்டு 2-ம் பாகம் ...	1	0

கீர்த்தனை.

	ரூ.	அ.
பணவிடு தூது ...	0	2
சிவகாயாத்து விதக்கீர்த்தனை ...	0	4
அம்பணியம், ஐயாசாமியம், இராஜேசுவரம் மூன்றும் உரையுடம் ...	0	8
வியாதி மூலம் ...	0	$\frac{1}{4}$
விஷப்பிரதிவிஷத்திரட்டு ...	0	2
அகஸ்தியர் ...	1	4

தமிழ் சட்ட புஸ்தகங்கள்.

	ரூ	அ
இந்து லா ...	1	8
ரெவினியூ லா ...	1	8
சிவில் லா ...	3	0
இந்தியன் பீனல் கோட் ...	2	8
க்ரிமனல் புரோஸிஜர்கோட்	2	8
எவிடன்ஸ் ...	1	0
சிவில் விதிகள் ...	1	8
தேவஸ்தான ஆக்ட் ...	0	8
டிரஸ்டி ஆக்ட் ...	0	8
கர்ணம் டெக்ஸ்ட் ...	1	4
கிராம முனிசிப் சட்டம் ...	1	0
ஸ்டாம்பாக்ட் ...	0	14
மகம்மதியன் லா ...	2	4
ஜமீன் சட்டம் ...	1	4
டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் ...	0	12
ஆப்காரி ஆக்ட் ...	0	8
பரம்பரை கிராம உத்தியோக ஆக்ட் ...	0	8
நில ஆக்கிரமிப்பு (என்குரோச்மென்ட்)சட்டம் ...	0	4

கமலாகாந்தன்

கதாநாயகன் உத்தியோகஞ் செய்யும் விதமும், பின்னர் லாகிரி வஸ்துக்களை உட்கொண்டு பித்தம் பிடித்துத் திரிவதும், டசுக் களவு, சிவில் நீதி ஸ்தலத்தில் சாக்ஷியாக தோன்றி வக்கீல் முதலியோர்களை அலட்சியம் செய்வதும் வாசிக்க வாசிக்க இனிட்யைட் உண்டு பண்ணக் கூடிய ஒரு சிறிய தமிழ்க் கதை மாணாக்கர்கள் கையிலிருக்கத் தக்கது

விலை அணா 2

ராஜம் அய்யர் சரிதை

இப்புத்தகம் கமலாம்பாள் சரித்திரம் என்னும் அற்புதக்கதையின் நூலாசிரியராயும் பிரபுத்த பாரதம் என்ற மாதாந்தப் பத்திரிகையை மிகுந்த சிறப்புடன் நடத்தி ஆங்கிலம் உணரும் திறனுடையவர்களுக்கு நம்து வேதாந்த உண்மைகளை எளிய நடையில் ஸுலபமாகத் தெரிவித்தவருமாகிய ஸ்ரீமான் பீ. ஆர். ராஜம் அய்யர் என்பவரது திவ்விய சரித்திரத்தை அடக்கியுள்ளது. இதில் இவர் செய்த நூல்களிலிருந்து உபதேச மொழிகளையும் இவர் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய வேதாந்த வியாஸத்தையும் இதனோடு சேர்க்கப் பட்டுள்ளது.

விலை அணா 8

இயற்கை அற்புதங்கள்.

இது ஆ. வீ. கஸ்தூரிரங்கய்யர் பி. ஏ. எல். டி. அவர்கள் செய்தது ரிடையர்டுஸ்கூல் இன்ஸ்பெக்டர் காலஞ்சென்ற ராவ்பஹதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதிலடங்கிய விஷயங்கள்: 1. மனமுக்கால்கள்; 2. எரிமலை; 3 பூகம்பம்; 4. வெந்நீர், ஊற்றுகள் 5. கானல் வரும் அதன் ரூபாந்தரங்களும்; 6 வால் நக்ஷத்திரங்கள்;

7 எரி நக்ஷத்திரங்களும், பொறி நக்ஷத்திரங்களும்; 8 வானவில், 9 கிழலும் கிரகணங்களும்; 10 ஹாலி வால் நக்ஷத்திரம், 11. மொழிபெயர்ப்பு விளக்கமும் இதில் அநேக படங்கள் அழகாய் அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

விலை அணா 8,

தேடாத செல்வம்

இது ஸ்ரீசைவர் இயற்றியது. ஆண் பெண் இருபாலரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய செந்தமிழ் நடையில் எழுதப் பட்டுள்ளது. தற்காலத்து வெளிவரும் அனேக கதைப் புத்தகங்கள் போன்று இராமல் உலக நடையைப் பெரும்பாலும் தழுவி எல்லா வகுப்பினருக்கும் அறி வூட்டக்கூடியது பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு மிகவும் உபயோகமுள்ளது. சோம்பலின் தீமையும், சூதாட்டத்தின் முடிவும், லாட்டரி சீட்டின் சூதுகளும். வீண் வம்பளப்பார் அடையும் கதியும், பொறுமையின் பெருமையும், அதிர்ஷ்ட விசித்திரத்தின் அமைப்பும் செவ்வனே வர்ணிக்கப்பட்டுள்ளன.

இதன் விலை அணா 3,

பிமலா அல்லது திவான் மகள்

ஆர். பி. குழந்தைசாமிப் பிள்ளை, பி. ஏ, எல். டி.

அவர்கள் இயற்றியது

இஃது வெகு இன்பமான எளிய நடையில் எழுதியுள்ள தமிழ் நாவல் வாசிப்பவர் மனங் களிக்கச்செய்யும் படியானதும், புத்திபுகட்டும் படியானதுமாயிருக்கிறது. பல வேலைகளால் அயர்ச்சியடைந்தவர்க்கு 'பிமலா, அவ்வயர்ச்சியைப் போக்கி மகிழ்ச்சியை ஆக்குமென்பதில் ஐயமில்லை. மகாசேதையின் கோன்பும், சதிசந்திரனின் சதியோசனைகளும், பிமலா என்னும் திவான் மகளின் அதிசய நற்குணங்களும், தோடர்மாலின் நீதி முறைமையும். வெகு அலங்காரமாய் எடுத்து எழுதப் பெற்றிருக்கின்றன. பிமலா தன் தந்தையை ரக்ஷிப்பதும், வேஷமாறி தன் சிநேகிதனின் தப்பியோட வழி செய்வதும் வாசிக்க வாசிக்க மனதைக்கவரும். சாரதாவின் கலியாணவைபவமுதங்க மோதிரத்தின் பெருமையையும் படித்தறிந்தால் தான்தெரியும். இது வங்காளி பாஷையில் கனந்தங்கிய ரோமேஷ சந்திர தத்தர் இயற்றிய நவீனத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு மிகவும் அருமையான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை அணா 6

மகா யுத்த சரித்திரம்

725 பக்கங்கள்.

225 யுத்த படங்கள்.

32 பூகோளப் படங்கள்.

விலை ரூ. **1—14—0**.

—

பால ராமாயணம்

எ. மாதவய்யாவால் எளிய தமிழ் நடையில் சிறு குழந்தைகளும் படிக்கக் கூடிய வண்ணம் எழுதப் பெற்றது. விலை அணா 12

—

ஸ்ரீமத் சங்கராச்சாரியர்

திவ்ய சரித்திரம், எளிய நடை. சிறுவர், சிறுமியரும் படிக்கத்தக்க சின்னஞ் சிறு சொற்களால் அமையப்பெற்றது.

விலை அணா 5. வீ. பி. யில் அணா 7.

—

நாடகக் கம்பெனியார்களுக்கு ஒரு விருந்து.

துருவன்

மிக்க பக்தியும் சிறந்த வைராக்கியமும் ஒருங்கே அமையப்பெற்று என்றும் அழியாத பெரும் பதவியை யடைந்த துருவனின் சரித்திரத்தை நாடகமாக இயற்றப் பட்டுளது. இது கிருஷ்ணசாமி சர்மாவால் எழுதப்பட்டது.

விலை அணா 5. தபாற் கூலி பிரத்தியேகம்.

—

ஆரிய சரித்திரம்

நீதிக்கதைகள், சுமார் 300 பக்கங்கள் உள்ளது.

சித்திரப்படங்களும் அமையப்பெற்றது.

மூன்றும் பதிப்பு.

தெள்ளிய நடையில் எழுதப்பட்டு, உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டு அழகாய் பயிண்டு செய்துள்ளது. 1 0 0.

உத்தம சகோதரன்.

பரதன்

பல கோடி நீதிகளைப் புகட்டும் ஸ்ரீராமாயணக் கதைகளைச் சுருக்கமாகவும் அவற்றுள் பரதனது குணாதிசயங்களை விரித்தும், கம்பராமாயணத்தினின்றும் சில முக்கிய மேற்கோட்பாக்களுடன் தெள்ளிய நடையில் யாவருக்கும் எளிதில் புலப்படும்படி இனிமையாக எழுதப்பட்டுள்ளது. விலை அணா 8,

---

ஆத்திசூடி நீதிக்கதைகள்

ஸ்ரீ கலைமகள் அவதாரமாகிய ஔவையார் அருளிச் செய்த ஆத்திசூடி நீதி வாக்கியங்களுக்கு, உதாரணமாக, இதிகாச, புராண, சரித்திரங்களிலிருந்து எடுக்கப்பெற்ற 108-கதைகள் இனிய செந்தமிழ் நடையில் நீதிகளை விளக்கி எழுதப் பெற்றுள்ளன. இந்நூல் சில படங்களும் அமையப் பெற்றது. விலை அணா 8.

பஞ்சரத்தினம்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

மரகதவல்லி என்னும் உயர்தர நாவலின் ஆசிரியரான, ஸ்ரீமான் ப. சி. கோவிந்தசாமி ராஜா அவர்கள் எழுதியது.

ருக்மணி, சாவித்திரி, ஸீதை, தமயந்தி சகுந்தலை, முதலிய ஐந்து புண்ணியவதிகளின் சரிதங்கள் கொண்டது.

ஆப்டோன் படங்கள் 5 இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது விலை அணா 12

ஆனந்தமடம்

தேசபக்தியைச் செவ்வனே ஊட்டக்கூடிய புஸ்தகம் இது ஒன்றே என்று நாம் திடமாகச் சொல்லுவோம். வங்காளி பாஷையில் இயற்றிய ஸ்ரீ ஜதீபங்கிம் சந்திர சட்டர்ஜியின் ஆனந்தமடப் புஸ்தகத்தினின்று இது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தேசபக்தர்கள் எல்லோரும் இப்புஸ்தகத்தை வாங்கிப் படிப்பது அவசியம். கொஞ்சம் காப்பிகளே யிருக்கின்றன. இதன் விலை அணா 12,

---

வர்த்தக யுக்தி

வியாபார சம்பந்தமான 36 விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப்புகழாத பத்திரிகை கிடையாது. முதற்பதிப்பு விளம்பரமின்றி விற்பனை, இரண்டாம்பதிப்பு, பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒருவாரத்துக்குள் விற்பனை இது மூன்றும் பதிப்பு. விலை அணா 4, வி. பியில் அணா 6.

கதாரத்னம்

10, விநோத கதைகள் அடங்கியுள்ளன. படிக்கப் படிக்க ஆச்சரியத்தை உண்டாக்கும் பத்துக்கதையும் பத்து ரத்தினமே. விலை அணா 5,

---

சின்மய சிகாமணி

ஓர் அலங்கார நடை நாவல் அடுக்குப் பதங்களால் விரவி லோக ரகஸ்யங்களை தத்ரூபமாய் விளக்கிக்காட்டியிருக்கிறது. ஜவுளி வியாபார ரகஸ்யம், ஸாகஸம், போலி உபசரணை ஏமாற்றம், இவைகளை வெகு அழகாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. உயர்ந்த கிளேஸ் பேப்பரில் அச்சிடப்பட்டிருக்கிறது, விலை அணா 12.

இராமகிருஷ்ண வைபவம்

ஸ்ரீயுத. சுப்பிரமணியசிவமவர்களால் எழுதப்பட்டது இது, ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் ஞானாசாரியராய் விளங்கிய ஸ்ரீபரமஹம்ஸ இராமகிருஷ்ணரின் அரிய சரித்திரத்தையும், அவருடைய வாக்கியங்களாகிய அமிருதமொழிகளையும், பரமஹம்ச மூர்த்திக்கும் அவரது சீடர்களாகிய விவேகானந்தர் முதலியோர்க்குமிடையே நிகழ்ந்த ஆத்மஞானசம்பாஷணை ரூபமான உபதேசங்களையுங் கொண்டது. "இவ்வரியநூல் படிப்பவர் மனத்தைத் தூயதாக்கி உலகவின்பங்களை உபேட்சிக்கச் செய்யும் பான்மை வாய்ந்தது." பரமஹம்சரின் திருவுருவப்படம் நூன் முகத்தில் அமைக்கப்பெற்றுள்ளது, உய

ர்ந்த காகிதத்தில் நன்கு அச்சிட்டு அழகாகக் கலிக்கோ பயிண்டு கட்டப் பெற்றுள்ளன. இதன் விலை ரூ 1—4—0

ஆநந்தகதா கல்பகம்

(2-ம் வால்யம்)

ஸஞ்சீவி பாபுவின் சாகஸங்களும் துப்பறியும் அற்புதங்களும் நிரம்பிய அநேக நாவல்கள் ஒருங்கே அடங்கப்பெற்ற நாவல்களின் களஞ்சியம், இது ஸ்ரீரங்கம் பிரஜாநுகூலன் பத்திராதிபர் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு இயற்றியது. விலை ரூ. 3 வி. பியில் ரூ 3—4.

தாக்ஷிணாத்யகானம்

தியாகராஜஸ்வாமிகள் அருளிச்செய்த கீர்த்தனங்கள்.

மேற்படி கீர்த்தனங்கள் சரியான பாடத்துடனும் தமிழ் மொழி பெயர்ப்புடனும் விசேஷார்த்தங்களுடனும் ஸ்வரங்களுடனும் மாதாந்தர சஞ்சிகை ரூபமாக பிரசுரிக்கப்படுகின்றன.

முதல் நான்கு பாகங்கள் வெளியாயின ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் டபிள் கிரௌன் 8-பக்க ஸைஸில் 64 பக்கங்கள் அடங்கியிருக்கின்றன. விலை அணா 12. நான் 4 பாகங்களுக்கும் விலை ரூ. 3. வி. பி. செலவு வேறு.

பக்தி ரஸத்துடனும் கூடின ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனங்களை பலவித இராகங்களுடன் பாடுவதைக் கேட்டிருப்பீர்கள். அவைகளின் நிஜஸ்வரூபம் மேற்படி புஸ்தகத்தைப் பார்த்தால் தான் தெரியவரும் ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் 12-கீர்த்தனங்களுக்குக் குறையாமலும் அவருடைய சரித்திரத்தைப்பற்றி சில பாகங்களும் அடங்கியிருக்கும்.

சித்தார்த்தன்

மிஸ்டர் எ. மாதவய்யர் இயற்றியது.

(அருமையான தேச சரித்திரம்)

இந்தியாவில் ஆதிகாலத்தில் அருணோ உருவாய் அவதரித்து, தாம் ஒரு ராஜ்யத்திற்குடையவராயிருந்தும் அதைப் பொருட்படுத்தாது ஆத்மாக்கள் உஜ்ஜீவிக்குமாறு செய்யும் மார்க்கத்தையே நாடி பல இடங்களில்

திரிந்து, கடைசியாக இரகசியத்தை உணர்ந்து, நம்முடைய தேசத்திய ஜனங்களுக்கு போதித்து, ஒரு பெரிய மதத்தையும் ஸ்தாபித்த புத்தருடைய திவ்ய சரித்திரச் சுருக்கத்தை யாவரும் படித்தறிய வேண்டும்.

தனித் தமிழ் நடையில்

எழுதப்பட்டிருப்பதே இப்புத்தகத்தின் முக்கியகுணம், இறுதியில் புத்த சரிதையின் ஒருபாகம் நவரஸங்களும் பொருந்திய செய்யுட்பாக்களாக அமைக்கப் பட்டிருக்கிறது. 166 பக்கங்களடங்கியது. உயர்ந்த காகிதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 12 தான்.

வித்தியானந்தர்

வித்தியானந்தரின் விசாரணையை எவரும் போற்றுவரென்பது நிச்சயம். அவரும் அவரது ஸகோதரியும் மணஸாக்ஷியை மதித்து லோக கஷ்டங்களில் நீந்துதலும், காதலித்த காரிகையின் சாசினி வாழ்வும், கடற் சஞ்சாரங்களும், ஸாகரரின் மதிநுட்பமும், லக்ஷ்மியின் ஸகிப்பும், ஸத்திய விங்கின் நட்பும், வனமாலாவின் வரலாறும், இடையே தொடரும் நவீனமான பல உபகதைகளும், ரஸம் செறிந்த வேதாந்த சாரங்களும், அடிக்கடி சிரிப்பை மூட்டும் சமயோசித சம்பாஷணைகளும் இவ்வளவும் கூடி வரப் பெற்றுள்ள நாவலின் கற்பனா முறையின் போக்கு யாவர் மனதையும் கவர வல்லது. ஒவ்வொருவரும் வாசித்து உள மகிழத்தக்கது, வாசிக்க வாசிக்க மிகு அற்புதமாயிருக்கும்.

வித்தியானந்தர் வெண்ணிறம் பொருந்திய பளபளப்புள்ள கடிதத்தில் முத்துக்கள் போன்ற புதிய எழுத்துகளில் நேர்த்தியாய் அச்சிடப்பட்டு ஸொகுஸான பைண்டுடனும் விளங்குகிறது. சுமார் 400-பக்கங் கொண்டது.

விலை ரூ. 1 4 0. வி. பி. யில் ரூ. 1 7 0

சூளாமணி வசனம்

ஜைன காவியங்களுள் ஒன்றாகிய சூளாமணியை இனிய வசன நடையில் யாவரும் எளிதில் படித்து ஆனந்தமடையுமாறு, கடலூர் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ந. பலராமையர் அவர்கள் இயற்றியது. உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களால் அரும் பதவகராதியுடன் பிரசுரிக்கப்பெற்றுள்ளது. விலை ரூ 1,

காமாக்ஷி,

	ரூ. அ
ஓர் சைவப்பெண்ணின் கதி, இரண்டாம் பதிப்பு.	0 8

அநுமான்ஸிங்

ஓர் துப்பறியும் கதை, மூன்றாம் பதிப்பு.	0 12

பன்னிரு தேசபக்தர்களின் சரிதையும், அவர்கள் படமும்,

தேசாபிமானிகளின் சரித்திரம்

இரண்டாம் பதிப்பு,	0 12

தமயந்தி

ஓர் நவீன நாடகம், மூன்றாம் பதிப்பு,	0 8

பனங்குளம்

ஆர். வி. டட் எழுதிய லேக் ஆப் பாம்ஸ் என்னும் அற்புதமான ஆங்கில நாவலின் மொழிபெயர்ப்பு.	0 12

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

ஞாந இரத்நாவளி

இதில் (1) நமது பூமியே புண்ணியபூமி, (2) எனது குருநாதர், (3) வேதாந்த தத்துவம், (4) *கிழக்கும் மேற்கும், (5) கடிதங்கள் 1-ம் பாகம், (6) கடிதங்கள் 2-ம் பாகம், (7) *எதிரொலிகள், இவ்வேழும் உயர்ந்தபயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. ஸ்வாமிகள் படத்துடன் இரண்டு பாகங்கள் தனித்தனி

விலை ரூ. 1—4—0

*இக்குறிப்பிட்டுள்ள புத்தகங்கள் தனித்தனி விலை அணா 8.

கனகமாலை

—— புதிய பதிப்பும், ஆப்டோன் படத்துடன் வந்திருப்பதுமான நமது "கனகமாலை" என்ற ஓர் அருமையான தமிழ் நாவல்தான். இதில் சிமாட்டிகளும் பிரபுக்களும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய அரியபெரிய

விஷயங்களடங்கியதும், ஸத்யமே ஜெயமெனும் படிப்பினையும், ஆ ஷூ நம்பினோர் கைவிடப்படார் என்ற நீதியும், வாக்கின் நடையும், பாஷையின் போக்கும், கதையின் தாட்டியும், மனதைபிழுக்கும் வன்மையும், கதாநாயகியான "கனகமாலை" மெஸ்மரிச சக்தியால் அரசர்களை ஏமாற்றித் தன் கற்பைக் காப்பாற்றிய விநோதமும் 1000-வருடங்களுக்கு முந்தியே அவள் அனுஷ்டித்த சத்யாக்கிரஹத்தின் தீரமும். கடைசியில் மூன்று ராஜ்யத்திற்கு மஹாராணியாவதும், மெத்த ஆச்சரியமாயிருக்கும் முத்துப்போன்ற எழுத்துக்களால் 300 பக்கங்களுக்கு மேற்பட்டது. உயர்ந்த பதிகபு, பல பத்திரிகைகளாலும், கௌரவஸதர்களாலும் புகழ்ப்பெற்றது. சில காப்பிகளேயுள்ளன உடனே எழுதுங்கள். விலை ரூபா 1—4—0 தான்.

இந்தியாவின் இணையிலா மஹான்.

எனது குருநாதர்

(ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸா அவதார அற்புதம்)

ஸ்ரீஸ்வாமி விவேகாநந்தர் மேல்நாட்டில் யாத்திரை செய்து அமெரிக்கா நியூயார்க்பட்டணத்தில் வாசஞ்செய்திருந்தபோது ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அவதார அற்புதத்தை 'my master' என்று ஆங்கிலத்தில்செய்த அரிய உபந்நியாசமாம், இது தற்சமயம் தமிழில் வெளிவந்துள்ளது, மஹா பண்டித சிரோமணியான மோக்ஷமூலபட்டாசாரிய (P.ofessor Max Muller ரே ஒரு "உண்மை மகாத்மா" என்ற தலையங்கத்துடன் "19-வது நூற்றாண்டு" என்ற ஆங்கிலபத்திரிகையில் விளக்கியுள்ளார். ஸ்ரீ பரமஹம்ஸரின் அனுபவங்கள் ஆசாரியர் நிலைமை, மஹான்களின்பெருமையைப்பற்றி பரமஹம்ஸரேகீழ்வருமாறு கூறுகிறார். "உலகத்தாரைப்பார்த்து ஆத்மவித்தையைக்கைக்கொள்ளுங்கள்?" உண்மைப்பொருளை நீங்கள் பிரத்தியட்சமாக தெரிந்து கொள்ளுங்கள்? இதில்சிஷ்யன் குருபக்திசெய்யவேண்டியவிதங்கள் முதலான அரியபெரியவிஷயங்களை அறிந்துகொள்ளுவதற்கு இதைஓர் ஞான பொக்கிஷமென்றே கூறலாம். இது ஒவ்வொரு தமிழ்ச்சகோதரர்களும் வாசிக்கவேண்டிய முதல் நூலாகும், விலை அணா 8.

ஸ்ரீஸ்வாமி விவேகாநந்தர் கடிதங்கள்

(1, 2, பாகங்கள்)

ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதங்களே அந்த மஹானுடைய உண்மையான உட்கருத்துக்களையும் லட்சணத்தையும் விளக்குகின்றன. இக்கடிதங்கள் ஸ்வாமிகள் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அந்நிய தேசங்

களில் யாத்திரை செய்தபொழுது ஆங்காங்கிருந்து அவர் தமது நண்பர்களுக்கு ஆங்கிலத்தில் எழுதிய வையாகும். இவை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. ஸ்வாமிகளின் ஹிருதயத்தில் கொதித்துக்கொண்டிருந்த தேசாபிமானம் என்னும் நெருப்புக் கொழுந்துவிட்டு எரிவதை இக்கடிதங்களில் காணலாம். அநேக கடிதங்களில் ஸ்வாமிகளே, "எனக்குள் இருக்கும் நெருப்பைத் தீவிரமாகப் பற்றிக் கொள்ளுங்கள்" என்று இந்திய ஜனங்களிடத்தில் கதறுகின்றார். முதற்பாகத்தில் மதராஸ் டைம்ஸ் பத்திரிகையின் பிரதிநிதியொருவர் ஸ்வாமிகளுடன் செய்த அரிய சம்பாஷணைகளும் அடங்கியுள்ளன. இக்கடிதங்கள் ஊக்கம் ஊட்டுகின்றன. ஒளிரளிக்கின்றன, உற்சாகத்தைக் கிளம்புகின்றன. ஸ்வாமி விவேகாநந்தருடைய கொள்கைகளைத் தமிழ் நாடில் விரித்துப் பரப்பிவிட வேண்டுமென்பதே நமது முக்கிய நோக்கமாதலால், விலை மிகவும் குறைத்து வைக்கப் பட்டிருக்கிறது. தனித் தனி பாகங்கள் படங்களுடன் விலை அணா 6.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் எழுதிய
கிழக்கும் மேற்கும்

ஸ்ரீ ஸ்வாமிகள், மேல் நாடுகளெல்லாம் சுற்றி யாத்திரை செய்து தமது அநுபவ பூர்வமாக அந்நந்தத் தேசங்களின் நடையுடைபாவனைகளை மிகக் கூர்மையாக முற்றும் ஆராய்ந்து அவற்றின் குணகுணங்களையும்; நம் தாய் நாடாகிய பாரதநாட்டின் நடையுடை பாவனைகளையும் மிகவும் விரிவாக ஆங்கிலத்தில் எழுதியவை. ஸ்ரீ ஸ்வாமிகள் இரவும் பகலும் 'இந்திய ஜனசமூகம் எப்படி முன்னேற்றமடையும்" என்று ஒரே சிந்தனையாகச் சிந்தித்துக் கண்ணீர் விட்டுக் கதறிக்கொண்டிருந்ததினால், அந்நிய ஜனசமூகங்களின் போக்கையும் மாதிரிகளையும் எவ்வளவு கூர்மையாகக் கவனித்திருக்கிறார் என்று இதை வாசிப்போர்கட்கே நன்கு விளங்கும். ஸ்வாமிகளின் எழுத்துகளிலே மிக அற்புதமானவற்றுள் முதன்மையானது இது ஒன்றே உறங்கிக் கிடக்கும் பாரதப் புத்திரர்கள், இப்புத்தகத்தை வாசித்து உலகிலே சக்தி வாய்ந்திருக்கும் பல ஜன சமூகங்களின் பலத்தையும் பலயீனத்தையும் அறிந்து, நமது தாய் நாடாகிய பாரத வருஷத்தின் ஜனசமூக முன்னேற்றத்திற்கு உபயோகப்படுமாறு இது தமிழில் தற்சமயம் வெளிவந்திருக்கின்றது. இதின் அருமையையும் பெருமையையும் வாங்கிப் பார்த்தாலொழிய விரிவாக எழுதுவதில் பயன் என்ன.

1897 வருஷம் ஹிந்து" பத்திரிகையின் பிரதிநிதியொருவர் ஸ்ரீ ஸ்வாமிகளுடன் செய்த சம்பாஷணையும் இதிலடங்கியிருக்கின்றன. இது ஆன்டிக் கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் அச்சிடப் பெற்றது. படத்துடன் இதன் விலை அணா எட்டு

(இது வரையில் தமிழில் வெளிவராதது)

பிரபஞ்ச விலாசம்

1. ஆண் பிள்ளைகள் கூடி, சபை கூட்டி ஒற்றுமையாய்,—நாகரீகமாய்—சீர்திருத்தங்கள் பல செய்யலாம். அவரவர் வீட்டுக்குப் போனதும்—பெண் முகம்பார்த்ததும்—எல்லாம் மாறிவிடும்—மாய வாழ்வு.

2. "மௌன மென்பது ஞானவரம்பு" இது ஔவை சொல்லிய ஔவு. மௌனம் ஞானத்துக்கு மாத்திரமன்றி, தன் காரியக்குடும்ப நலப் பிரியர்களுக்கும் அனுகூலமாயிருக்கிறது.

3. மௌனம் புத்தி நிதானிய முள்ளவர்களுக்கு அறிவை விசாலப்படுத்தும்.

4. ஒருவர்க்கும் தெரியக் கூடாது என்று பரம ரகஸ்யமாய்ச் செய்கிற வேலைதான் அதிசீக்கிரம் வெளியாய்விடும்.

5. பாடுபடுகிறவனுக்கு, பணத்தின் அருமை தெரியும். அவனுக்கும் கட்ட முடியாத விருந்துகள் வந்தால் திண்டாட்டம் தான்.

6. ஊருக்குப் புறப்பட்டால் எத்தனை ரூபாயிருந்தாலும் போதுமானதா யிருப்பதில்லை. வீட்டை விட்டதும் பசியும் அதிகமாய் விடும். போனவிடத்திலும் எனக்கேன்ன வாங்கி வந்தீர்கள் என்றும் கேட்பார்கள்.

7. யுத்தம் நடக்கும்போது என்ன விலையானாலும் வேண்டிய பொருள் கிடைத்துக் கொண்டிருந்தது. யுத்தமும் நின்றது. என்ன விலையானாலும் வேண்டிய பொருள் கிடைப்பதருமை.

8. புத்தகம் அச்சிட்டு பணம் சம்பாதிப்பவர்க்கு இவ்வருஷம் கஷ்டம் அதிகப்படுமாம். என்ன விலை கொடுத்தாலும் பேப்பர் கிடைப்பது கடினம்.

9. குடும்பத்தில் ஒருவர் கடன்வாங்கத் தலைப்பட்டால் சனியன் பிடித்தது போலத்தான். கடன் பெருகும். தீர்ப்பது எப்பொழுது என்று சிந்திக்குங் காலம்.

துக்கடாக் கதைகள்.

ஒரு வக்கீலின் விநோதம்:

ஒரு புதிய வக்கீல் தன் கக்ஷிக்காரனுக்காக சுமார் 5 மணி நேரம் ஜூரிகளுக்கு முன் நியாயங்களை அநேக உபமானங்களோடு எடுத்துரைத்தார். எதிர் கக்ஷி வக்கீல் புன்னகையோடு எழுந்து, ஜட்ஜி முதலானவர்களைப் பார்த்து "பூவர் ஆனர்" எனது சிறிய நண்பர் புகன்ற உபமானங்களைப்போலவே யானும் சொன்னதாகப் பாவித்து அதிகம் பேசாமல் எனது கேஸை ஒப்புக் கொடுக்கிறேன். நியாயம் செய்ய வேண்டியதென்று சொல்லி உட்கார்ந்தார்.

படித்த பாடம்.

ஒரு உபாத்தியாயர் ஒரு மாணவனைப்பார்த்து, வசந்த காலத்தில் பகற்பொழுது அதிகமாயும், மழைகாலத்தில் குறைவாயுமிருக்கக் காரணமென்ன வென்று கேட்டார். அதற்கு, "உஷ்ணத்தில் பெரிதாகி குளிர்ச்சியினால் உரைந்து போகிறதெ"ன்று சொன்னான்.

சொல்லளவாய் நின்றவன்.

மூன்றாம் வகுப்பு சிறுவர்களுக்கு, உலகம் உருண்டையா யிருக்கிறதென்று சொல்ல, அது நன்றாய் விளங்காததால், தன்னுடைய பொடிக் குடுக்கையைப்போல் என்று சொல்லிக் கொடுத்தார். எல்லோர் மனதிலும் பதிந்து விட்டது.

பரீக்ஷை காலத்தில் ஒரு இன்ஸ்பெக்டர், ஒருவனைப் பார்த்து உலகம் எப்படியிருக்கிறதென்று கேட்டார். அதற்கு அச்சிறுவன் 'எங்க வாத்தியார் பொடிக்குடுக்கையைப்போல்' என்றான்.

விசித்திர வைத்தியன்.

ஒரு மாணவன் டாக்டரிடம் தன் உடம்பிலுள்ள பிணிகளைச் சொல்லி பரிகாரம் கேட்டுக் கொண்டு தன் தலையையும் நன்றாய்ப் பார்க்கும்படி சொன்னான். அதற்கு டாக்டர் "உன் தலையில் ஒன்றுமே இல்லை" என்றார். பக்கத்திலிருந்த ஒரு நண்பன் "மூளைகூட" என்று சொல்லி நகைத்தான்.

கேள்வி

1. கேள்வியா லுண்டாகும் விவேகச் செல்வம் நிலை பெற்றிருப்பது போலப் பொருளினா லுண்டாகுஞ் செல்வம் நிலைபெற்றிராது.

2. கேள்வியை யிச்சிக்கின்ற புத்திமான்கள் ஆகாரத்தினிடத்து விருப்பங் கொள்ளார்கள்; ஏனெனில், நல்ல சொற்களையுடைய வசனம், மதுரமான அமிர்த பானத்திற் கதிகமான தென்று பெரியோர்கள் உரைத்திருப்பதினாலே தான்.

3. நல்ல விவேகிகளுடன் தொண்டு பட்டுக் கேள்வி பெற்றவர்கள், துன்பத்திற் கிடங் கொடார்கள், அவர்கள் தேவர் களுக்குச் சரியாக மதிக்கப் படுவார்கள்.

4. கல்வி யில்லாத ஒருவனுக்குப் பெரியோர் களினது கேள்வி மாத்திர முண்டாயிருக்குமாயின் அது தளர்ச்சி வந்தபோது கற்கும்.

5. ஒழுக்கமுடைய வர்கள் சொல்லிய சொல் ஆபத்து வந்த விடத்தில் ஊன்று கோல் போலுதவு மாதலால் அச்சொல்லி னிடத்து புத்தியை இடைவிடாது செலுத்த வேண்டும்.

6. கேள்வி கொஞ்ச மாக விருக்கினும் அது நல்லதாக விருக்குமாயின், மிகுந்த பெருமை யுண்டாகும். கல்வியிலும் கேள்வியிலும் மேன்மை யடைந்த வர்கள் தாமத குணத்தினாலே பிழைபட வறிந்தாலும் அறிவு விளங்காச் சொற்களைச் சொல்லார்கள்.

7. நுட்பமான நல்ல கேள்வி யில்லாதவர்கள் தம்மைத் தாமே புகழுவதல்லது பிறரால் புகழப்படார்கள். அதனாலவர்களினத் தாழ்வத்தை யடைந்து நாணமுற்றிருப்பார்கள்.

8. நிரம்பக் கற்றோர் களுடைய வாய் மொழிகளைக் கேளாதவர்களினது செவி மற்ற ஓசையைக் கேட்கு மாயினுஞ் செவிடாகவே மதிக்கப் படும்.

9. அறு சுவைகளை யின்றி; கேள்விச் சுவை யறியாதவர்கள், இறந்தாலும் வாழ்ந்தாலும் உலகத்திற்கியாதொரு லாபமும் நஷ்டமுமில்லை யென்று பெரியோ ருரைத்திருக் கிறார்கள்.

(10). ஆகலால், பெரியோர்களுடைய கேள்வியெல்லா நன்மைகளையும் எளிதிலுண்டாக்கு மென நம்பி அதற்கு இடைவிடாது செவி சாய்த்து நடக்க வேண்டும்.

கல்லாமை

1. சபையிற் பேச விருப்பங்கொள்ளுகிறவன் கல்வியில்லாதவனுகில் செல்வத்தை யுடையவனுக விருக்கினும் அவமானப்படுவானென்பதற்குச் சந்தேகப்பட வேண்டியதில்லை.

2. புலவர்களின் கூட்டத்திற் சென்ற கல்வி யில்லாதவன் பேசாதிருப்பானுயின் அவனது கல்லாமை வெளிப்படாதாகையால் அவனுக்கிழுக்கு நேராமலிருக்கும்.

3. கல்வி யினிடத்துப் பொருந்தாத சிந்தையுடையவனது அறிவு மிகவுந் தெளிவாக விருக்கினும் சபையில் பேசுமிடத்துத் தகுந்த பிரயோசனத்தைக் கொடாதாதலால், அவன் வெறுக்கப் படுவான்.

4. கற்றவர்களே கண்ணுடையவர்கள். கல்லாதவர்களுடைய முகத்திற் காணப்படு மிரண்டு கண்களும், புண்களெனப் பெரியொருரைத்திருக்கிறார்கள்.

5. கற்ற பெரியோர்கள் முன் சென்று பேசுங் கல்வியில்லாதவன், தனக்குள்ளே பெருமையையு மிழந்து அவமானத்தையு மடைவான்.

6. கல்வியை யறியாதார் சிலருண்டு. அவர்கள் களர் நிலத்தைப் போல சிறிதும் பயன்படார்கள் ஏனெனில், களர் பூமியில் புல்லும் விளையாது; அது போலவே கல்வியறிவில்லாதார் மானிட சுரூபத்தைப் பெற்றிருந்தும் உலகத்திற்குப் பொதுவான நன்மையைச் செய்யத் தக்க விவேகத்தை யுடைத்தாயிருக்கமாட்டார்கள், ஒரு வேளை நற்காரியத்தை செய்ய முயலினும், அது நிறைவேறுவது அரிதாகவிருக்கு மென்று பெரியோர்களுரைத் திருக்கிறார்கள்.

கல்வியைக் கற்கச் சோம்பலுள்ளவன், உருவத்தில் சிறந்த அழகுடையவனுக யிருக்கினும் (அழகாகச் செய்யப்பட்ட மண் பிரதிமை போல) உலகத்தில் ஒரு பயனையு மடையமாட்டான், ஏனெனில், அவனுக்கு யுக்தாயுக்தங்களைத் தெரிவிக்கின்ற சாஸ்திர விசாரணை செய்வதற்கு வேண்டிய கல்வியறிவில்லாமையால் இம்மையில் தானடையவேண்டிய நற்பயனை யிழந்து மறுமையிலும் மோக்ஷத்தை யடையாமல் நரகத்தை யடைவானென்பதினலே தான்.

9. கற்றவர்களிடத் துண்டாகிய வறுமைகூட ஒருவரையுங் கெடுக்கமாட்டாது; கல்லாத மூடரிடத்துண்டாகிய செல்வமும் அவனையும், மற்றவர்களையும், கெடுக்குமாதலால், அதற்கு ஈது கொடியதாகும்.

10. கல்லாதவன் உயர்ந்த குலத்தானு விருக்கினும் தாழ்ந்தவனென்றும் கல்வியிலும் அறிவிலும் சிறந்தவன் இழி குலத்தானுக விருக்கினும், உயர்ந்தவ னென்றும், பலநூலிலுஞ் சொல்லியிருக்கின்றது.

11. மிருகங்களுக்கு மனிதரெவ் வளவுயர் வினராவரோ அவ்வளவு கற்றவர் முன் கல்லாதவர் தாழ் வினவராவர் ஏனெனில் கற்றவர் முன் கல்லாதவர்கள் வாயைத் திறக்க அஞ்சுவார்களென்பதினலே தான்.

12. கல்விமான்களுடைய கூட்டத்தில் வந்திருந்த ஒரு கல்லாத அழகுள்ள புருஷனைப் பார்த்து ஒரு வித்வான் சொல்லியதாவது ஓ காகமே நீ மாமரத்தின் மீது குயில்களுடைய கூட்டத்தில் சேர்ந்திருக்கிறு யாதலால் நீ வாயைத்திறந்து கூவாமலிருக்கிற வரையில் உன்னையும் குயிலாகவே நினைக்கிறேன ஏனெனில் இடத்தின் பெருமையால் சில பொருள்கள் பெருமை யடைவதுண்டு அதெப்படியெனில்,

13. கஸ்தூரி யுண்டாகிற நேபாள தேசத்தின் இராஜாவினுடைய நெற்றியின் பட்டமையைக்கூட கஸ்தூரியென்று சொல்வதற்குச் சந்தேகமில்லையல்லவா என்றான். கல்வியில்லாத சில பேதையர்கள் கல்விமான்களெனப் பெயர் பெரும் பொருட்டு புலித் தோலைப் போர்த்த.

14. பசுவைப் போல ஜனங்களைப் பிரமிக்கச் செய்யினும் கல்விமான்களாகார். ஆதலால் கல்லாதிருக்கும் தன்மையாலுண்டாகும் நஷ்டத்தையும் இழிவையும் யோசித்து நடக்கின்றவர்கள் அறிவுடையவர் களாவார்கள்.

REVIEW OF REVIEWS.

தமிழ்ச் சிறப்பு.

உலகந்தோன்றி மக்கள் பெருகிய முதற்காலத்திலேயே சீரும் சிறப்பும் வாய்ந்த அரும் பெறல் உயரிய மொழி "தமிழ்" ஒன்றேயாம் அதனிடத்திருந்தே நாள் செல்லச் செல்லப் பல மொழிகள் தோன்றின. இவ்வினிய மொழியின் சொற்கள் திரிந்தாயினும் திரியாதாயினும்வழங்காத மொழிகளோ உலகத்திலில்லை. அவையிற்றினைச்சீனம் பர்மீ, மலேயம், சையாம், சாவகம், சிங்களம், அரேபியம், இலேடின் ஊனாம், எப்ருஉ, முதலிய பல வெளிநாட்டு மொழிகளிலேயே காணலாம் என்றால் நம் பரதகண்டத்தின் மொழிகளைப் பற்றிச் சொல்லவேண்டுவதின்றெனவிடுத்தாம். ஒவ்வொரு சொற்களும் தமிழினின்று திரிந்தாயினும் திரியாதாயினும் வெவ்வேறு மொழிகளுட் சென்று வழங்கி வருகிறதை எடுத்துக் காட்டுவதென்றால் உறை பெருகு மென்று இத்துடன் நிறுத்துகின்றோம்.

ஊரும்பேரும் உருவுமில்லாதவன்
ஊரும்பேரு முருவமுந்தாங்கி
ஆதிசைவ அந்தண விருத்தனாய்
நாவலூராளியின் நறுமணந்தடுத்த
ஆவணவெழுத்தும் அந்தணர் முன்னர்ப்
பேசியபேச்சும் பெருந்தமிழ்ப் பாஷையே
பித்தனென்றே பீடுறப்பாடென
அத்தன்மெய்யுருவுட னறைந்ததும்தமிழே

... ...

பரவையார் விவாகப் பண்பும் பின்னர்த்
தூது நடந்துபோய்ச் சொற்றதும் தமிழே
திருமுதுகுன்றம் செல்வழி எதிரனக்
கூடலையாற்றூர் கொணர்வழிகூறி
மறையவர்கோலம் மறைத்ததும் தமிழே
திருக்குருகாவூர் செல்லும் வழியில்
பிராமணவடிவம் பீடுறத்தாங்கி
நீரும் சோறும் நிழலுமமைத்துப்
பசிதணிவித்த பாஷையும் தமிழே

... ...

உரைத்தமொழியு மொண்டமிழ் மொழியே
தில்லையில்வாழ்ந்த திருநீலகண்டர்
ஓட்டினை யொளித்தங் குரைத்ததும் தமிழே
இயற்பகைமனைவி யிசைத்ததும் தமிழே
மாறன்விருந்து வார்த்தையும் தமிழே
அமர்நீதிபாலங் கறைந்ததும் தமிழே

... ...

செந்தமிழ்ப்பெருமை செப்பவும்போமோ
இவ்வாறுய தெய்வநன்மொழியைச்
சின்னாட் பலபிணிச் சிற்றறிவுடையரிற்
கலி எனக்கூறுங் காலக்கொடுமையால்
கற்கவுங் கேட்கவுங் கருதாதந்தோ!
சோறிதுகொண்டு பிறலடைக்கும்
இம்மைச்சுகமே மெய்ம்மைசுகமென
வேற்றுபாஷையை விரும்பிக்கற்றே
அந்நியநாட்டி லவதரித்தவர்போல்
இன்று தான் கப்பலில் இறங்கினர்போலப்
பேசவும் எழுதவும் பிரசங்கம் புரியவும்
பழக்கமிலையெனப் பருமிதம் பகவர்
அறம்பொரு ளின்பம் வீடடையும் நூற் பெருக்கம்
வடமொழி தென்மொழி வாய்ந்தன போல
எப்பாஷையிலும் இலையென என்றார்

—செந்தமிழ்.

பிரபஞ்ச வர்த்தமானம்.

இந்தியாவில், அச்சுக்கூடங்களும், பத்திரிகைகளும்.

1919-ம் வருஷக் கணக்கு

மாகாணம்	அச்சுக்கூடம்,	பத்திரிகை,	புஸ்தகங்கள்,
வங்காளம்	721	334	2718
பீஹார், ஒரிஸா	136	56	790
யுனைடட் ப்ராவின்ஸ்	497	315	2274
பஞ்சாப்	217	261	1775
டில்லி	52	23	197
வடமேற்கு மாகாணம்	20	1	—
பர்மா	163	122	258

மத்திய மாகாணம்	87	30	120
அஸாமீ	40	21	53
அஜ்மீர்	14	9	78
குடகு	1	1	—
சென்னை	681	2,140	2,606
பம்பாய்	478	665	2,229
மொத்தம்,	2,401	3,978	13,098

சென்னை மாகாண ஜனத்தொகை 1911 வருஷக் கணக்குப் படி 41, 402, 000 இந்துக்கள் (100க்கு) 89, முகம்மதியர்கள் 6. கிருஸ்தவர்கள் 3, இதர வகுப்பினர்கள் 2.

விவசாயம் 100க்கு 68பேர் விவசாயம் செய்கிறார்கள். 49 குத்தகையாய்ச் செய்கிறார்கள். 225, 000 சிறு கிணறுகள் 400 000 ஊற்றுள்ள கிணறுகள். 6,114 கால்வாய்கள், 6,164, நதிக்கால்வாய்கள், 28,896 குளங்கள் சென்னை மாகாணத்திலிருக்கின்றன.

சுந்தர ஞானம்

7. "பெருவெளியாய் ஐம்பூதம் பிறப்பிடமாய்" என்று சித்தத்தை சிவன்பால்வைத்த தாயுமான ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தபடி, நிலம், நீர், நெருப்பு, காற்று, வெளி இவ்வைந்தும் பெருவெளியிலிருந்து பிறந்தனவாகும்.

8. நன்கு விசாரித்தறிய விசாலமான புத்திக்கு ஏதுவாய் பகுத்தறிவை கடவுள் அனுக்கிரகம் செய்துள்ளார்.

9. ஒன்றைப் பிரிதொன்றாய் அறியும், அறியாமையோடு கூடிய அறிவிருக்கின்றது. இதனை குருமுகமாய விசாரிக்கில் தெளிவு உண்டாகும்.

10. தெளிவு உண்டாயின், "விண்ணாதி பூதமெல்லாம் தன்னகத்திலடக்கி வெறு வெளியாய்" என்பதால் ஐம்பூதத்தை மனவெளியில் அடக்கி அப்பியாசம் செய்தல்வேண்டும்.

வீரகேசரி

துப்பறியும் விநோதம்.

மஞ்சப்பாறைக்கும் குருந்தலூருக்கும் வாரத்திற்கு மும்முறை ஓடும் தபால் டாங்காவண்டி, நடு வழியில் கோவிந்தய்யன் சாவடியென்ற ஊரில், கருப்பன் செட்டியார் சத்திரத்தின் வாயிலில், குதிரை மாற்றுவதற்கும், தபால் எடுப்பதற்கும் பிரயாணிகள் போஜனஞ்செய்வதற்கும் வழக்கப்படி தங்கிற்று. சத்திரத்தில் சேலம் செல்லப்பய்யர் கிளப்பில், வெகு நேர்த்தியான சாப்பாடும் வழியில், மயன்செய்வற்குச் சிற்றுண்டிகளும், சரசமாய்க் கிடைக்கும். செல்லப்பய்யர் தமாஷ் மனிதன், ஸரஸி, பரோபகாரி, நல்ல சொத்துச்சேர்த்தவர். ஜனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் மிகவும் வேண்டியவர். அவருடன் வேடிக்கையாய்ப் பொழுது போக்குவதற்காகவே சிலர் அங்கே இரண்டு மூன்று நாள்கள் தங்குவதுண்டு. சதுரங்கமாடுவதில் புலி— மதுரமாய்ப் பாடுவார் — கிராம போஸ்ட் மாஸ்டர்.

அன்று வண்டி கட்டிப் புறப்படும்போது, குருந்தலூர் டாங்கா வந்தது. அதிலிருந்து இறங்கினவர்களில் ஒருவரைச் செல்லப்பய்யர் வெகுஅன்புடனுடனும் மரியாதையுடனும் வரவேற்றி "அடே! சோமுநாயக்கர்வாள் ஸாமானை மாடியில் கொண்டுபோ, ஸ்நானத்திற்கு வென்னீர் ஜல்தியில் தயாராகட்டும். கைகால் கழுவ ஜலம், காபி வெற்றிலை எங்கே? கண்மூடி கண்திறப்பதற்குள் ஆஜராகவேண்டும் நாயக்கர்வாள்! இந்த ஈவிசேரில் சற்றுத் தயவு செய்யவேண்டும். சௌக்யந்தானே என்று குதூகலமாய் ஸப்ளை செய்து கொண்டிருக்கையில், என் வண்டி தெருக்கோடியில் சென்றுவிட்டது.

நான் எப்போதும் ஜட்காவில் வண்டிக்காரனுடன் பெட்டியின் மேல் உட்காருவது வழக்கம். அவர்களுடன் தாராளமாய்ப் பேசுவ

தாலும், வெற்றிலை பாக்கு புகையிலை நல்ல தினுசாய் வைத்துக் கொண்டு அடிக்கடி கொடுப்பதாலும், காப்பி கிளப்பில் அவர்களுக்கும் ஸப்ளை செய்வதாலும், அவர்கள் என்னிடத்தில் தேவதா விசுவாஸம் வைத்து, வேண்டிய சௌகரியங்களைக் குறைவறச் செய்வார்கள். அந்தவழியால் அவர்களிடத்திலிருந்து பல அருமையான விஷயங்களைத் தெரிந்து கொள்வதுண்டு. வண்டி நாலைந்து மைல் போன பிறகு பாக்கு வெற்றிலை போட்டுக்கொண்டு மஜாவாயிருக்கும்போது, "முருகப்பிள்ளை! நாம் புறப்படும் சமயத்தில் வந்திறங்கினது யார்? செல்லப்பய்யர் செய்யும் உபசாரத்தைப் பார்த்தால் யாரோ பெரிய உத்தியோகஸ்தரோ, அல்லது முக்கிய சிநேகிதரோ தெரியவில்லை; ஆள் வெகு டீக்காய் ஜமீன்தார், மாதிரியிருக்கிறார். என்ன ஸங்கதி" என்றேன்.

முருகப்பிள்ளை, கதுப்பில் அடக்கியிருந்த புகையிலையின் ரஸத்தைத் துப்பிவிட்டுக், குதிரையைச் சவுக்கால் ஒரு சொடுக்குச் சொடுக்கி அதட்டி, "மஹாராஜ்! (அவன் எனக்கு வைத்த பெயர்) தங்களுக்குத் தெரியாதா என்ன? ஓகோ! மறந்துபோய் விட்டேன் தாங்கள் இந்தப்புறத்தில் வருவதற்குமுன்பே அவர் வேறு தேசத்திற்குப் போய்விட்டார் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்! ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர்; பலத்தில் பீமஸேனன், அஞ்சாத சிங்கம், எந்த வேஷமும் எடுப்பார்; எந்த பாஷையும் பேசுவார்; அவருக்குத் தெரியாதவர் கிடையாது; அவருடைய நிஜரூபத்தைக் கண்டவரில்லை; டிபார்ட்மெண்டு தலைவருக்கு மாத்திரம் தெரியுமாம். திருடர்கள், கொள்ளைக்காரர்கள், கொலையாளிகள், சூதாடிகள் நோட்டு அடிக்கிறவர்கள் இவரைக்கண்டால் சிங்க சொற்பனம்! இவருடைய பெயர் சொன்னால் தலைவைத்துப் படுக்க மாட்டார்கள். சிக்கலான கேஸ்கள் யாவும் இவருடையசொத்து. வீராசாமி நாயக்கரென்று பெயர்; ஆனால், இருகையாலும், ஒரே நிமிஷத்தில், இடுப்பிலிருந்து கையைத் தூக்காமல், எதிரிகளைச் சுட்டு வீழ்த்துவதால், சவ்வியஸாசி யென்றும் அருச்சுனனென்றும், மனதால் நினைப்பதற்கு முன் சுடுவதால் மின்னல் வீரனென்றும் செல்லப் பெயர்களுண்டு அடே! அப்பா! இவருடைய வீரச் செயல்களையும் தந்திரத்தையும் புத்திக் கூர்மையையும் விளக்கும் கேஸ்கள் எவ்வளவோ உண்டு.

இந்த ஸமயத்தில் நான் குறுக்கிட்டுப் "பிள்ளை! அதற்கென்ன! உம்மிடத்தில் கதைகளுக்குப் பஞ்சமா? எங்கே, ஒரு ஆட்டம் வெற்றிலை நடக்கட்டுமே, இந்தப்புகையிலை அஸல் சிவகிரி சிதம்பரம் சித்ஸபேசதீக்ஷிதர் அனுப்பினது. வரட்டுப்பேச்சு வேண்டாமென்றுவெற்றிலை பாக்குச் செல்லத்தை நீட்டினேன். முருகப்பிள்ளை கும்பிட்டு, அதைப் பெற்றுக்கொண்டு. "எஜமான் சிரஞ்சீவியாய் வாழவேண்டுமென்று" வாழ்த்தி "நாயக்கர்வாள் இங்கிருந்து சிங்கப்பூருக்கு ஸர்க்கார் அலுவலாய்ப் போவதற்கு முன் நடத்தின கேஸ் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. மஞ்சப்பாறைக்குச் சமீபத்திலுள்ள தேவங்குடியில் ஓர் கள்ளப்பயல், நாகப்பனென்று பெயர், வெகு துஷ்டன், பலேபொக்கிரி செய்யாத அக்கிரமமில்லை, பினல் கோட்டில் (Penal Code) இவனுக்காகப் புதிய செக்ஷன்கள் ஏற்படுத்த வேண்டும். வழிப்பறி, தீவட்டிக் கொள்ளை, கொலை இவையே இவனுக்குத் தொழில், இவன் போலீஸாருக்கும் ஜனங்களுக்கும் கிலி பிடிக்கச் செய்து, கண்ணில் விரலை விட்டு ஆட்டிக்கொண்டு வந்தான். யாராரோ போலீஸ் புலிகள், ஸ்பெஷல் டிடெக்டிவ்கள் (Detectives) கஜகரணம், கோகரணம் போட்டுப்பார்த்தார்கள். நாகப்பன் (அந்த மாயாவியின் பெயர், ஆனால், அவன் தன் சொரூபத்தையும், சுபாவத்தையும் காட்டுவதற்கும் தனக்குக் கருநாகமென்று பெயர் வைத்துக் கொண்டான்) எல்லோரையும் ஏமாற்றிக் கேலி செய்து ஏப்பம் விட்டுக்கொண்டிருந்தான். நமது மின்னல் வீரனை எவ்வளவோ தடவை திணறவடித்தான். அடே! அப்பா!! அது வெகு வேடிக்கை எங்கேயும் கொல்லென்று இதைத் தவிர வேறு பேச்சில்லை.

ஒருநாள் நானும் நாயக்கரவர்களும் செல்லப்பய்யர் சத்திரத்துத் தெருத்திண்ணையில் உட்கார்ந்துப் பேசிக்கொண்டிருந்தோம். சுமார் இரண்டுமணி நேரம் இருக்கும். அப்பொழுது சாலையின் வழியாய் ஓர் இடையன் தள்ளாடிக்கொண்டு, கண்ணில் உயிரை வைத்துக்கொண்டு, சத்திரத்து வாசலில் வந்து விழுந்தான். அவனுடைய தோள்பட்டையில் குண்டுபாய்ந்து அதனாலுண்டான காயத்திலிருந்து இரத்தம் வழிந்துகொண்டே யிருந்தது. அவன் பயந்தாங்குள்ளி யென்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவன் வந்து விழுந்தவுடன் "அப்பய்யோ கொள்ளைக்காரன்— கருநாகமாய்

பணம் பிடுங்கிக்கொண்டு— அதிகமாய்க் கொண்டுவரவில்லை— சட், டான்ஸ் பிடி" யென்று தந்தி அடிப்பது போல் சம்பந்தமின்றிப் பிதற்றினன். அவன் சொல்லும்போதே அந்த ஞாபகம் வந்து, நடு நடுங்கி, முகம் வெளுத்துச் "செத்தேன்" என்று மூர்ச்சையடைந்தான்.

உடனே நாயக்கர், இடையனைக் கேலி செய்தவர்களை அடக்கிப், புருவத்தை நெறித்து, இடையனுடைய காயத்தைக் கழுவி, மருந்து வைத்துக் கட்டிக்கொண்டே "இந்த இடையன் கண்டபேர்வழி உண்மையாகவே கருநாகமானால், உங்களுடைய சிரிப்பெல்லாம் சீக்கிரத்தில் அழுகையாய் மாறும். சந்தேகமென்ன? நீங்கள் உங்களுடைய வீடுகளுக்குச் சென்று, கதவுகளுக்குப் புதிய தாழ்ப்பாள்களும், பெட்டிகளுக்குத் திண்டுக்கல் பூட்டுகளும் போடும்படியாயிருக்கும். நான் சொல்வதை தலைப்பில் முடிந்து கொள்ளுங்களென்றான்.

பிறகு மின்னல் வீரன் தன் சட்டைப்பையிலிருந்து ஓர் சிறு படத்தை எடுத்து, இமை கொட்டாமல் சற்று நேரம் அதிலிருந்த உருவத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். நான் அவனுக்குப் பின்புறத்திலிருந்து அதைப் பார்த்தேன். முகம், சோற்றிற்கில்லாமல் வெண்டிப்போன குறவனைப் போலிருந்தது. கண்கள் கன்னங்கறேலென்று, பிறருடைய மூளையை ஊசிபோல் துளைத்து, அதிலுள்ள ரகசியமான எண்ணங்களை வேருடன் பிடுங்கி எடுக்கும் கூர்மையான பார்வையால் விளங்கிற்று. நீண்டு கறுத்த கிருதாவும் எண்ணெய்யையும் சீப்பையும் என்றுமறியாத தலைமயிரும், பன்றிக்குட்டியைப்போல் ஓர் கிழிந்த தலைப்பாகைக் குள்ளிருந்து தப்பித்து ஓடப்பார்த்தது எஜமானே! எனக்கும் வயது ஏறக்குறைய எழுபதாகிறது ஆனாலும், அதைப்போல் அவ்வளவு குரூரமும் தந்திரமும் முள்ள மனிதனையாவது மிருகத்தையாவது கண்டதில்லை. அப்படத்தை எப்படிப் பிடித்தார்கள் தெரியுமா? தாங்கள் நூறு வருஷம் வரையில் யோசித்தாலும் சொல்ல முடியாது. அவனைப் பிடிப்பதற்காக இங்கே முன்பு வந்திருந்த ஓர் போலீஸ் இன்ஸ்பெக்டருக்குத் தபால் மூலமாய் அந்தக் கருநாகமே அனுப்பினன் அது மாத்திரமா? அதினடியில் என்ன வரைந்திருக்கிறான் தெரியுமா? "தங்களுடைய அன்பார்ந்த கருநாகம் க்ஷேமம். அங்கேயும் அப்படித்தானே? தங்களுடைய நண்பனுக்கு வயது முப்பத்

தேழு (37). ஒல்லி, கறுப்பு, 160 பவுண்டுகள் நிறை வெளுத்த பல்வரிசை; குண்டு பட்ட காயத்தால் ஒருகால் சற்று நொண்டும்; குதிரை சவாரி, துப்பாக்கியை உபயோகிப்பது; எல்லோரையும் கதறவடிப்பது அவன் கொடுத்த பிச்சை. வழிப்பறிக்கும் கொலை முதலிய சில்லரை வேடிக்கைகளுக்கும் அவனைக் குற்றம் சாட்டி சர்க்கார் அவனை உயிரோடாவது பிணமேயாவது பிடித்துக் கொடுப்பவனுக்கு ஏராளமான தொகை இனாம் கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். பிடிபடுவதற்கு அவன் தயாராயிருக்கிறான். இனாம் வேண்டியவர்கள் வரலாமென்று" எழுதியிருந்தது.

அதை மின்னல் வீரன் இடையனுக்குக் காட்ட, அவன் தன் காயத்தையும் மறந்து "அவனை லக்ஷம் பேரில் அவனை உடனே காட்டுவேன். ஆயிரம் வருஷமானாலும் அவன் முகத்தை மறப்பேனோ என்னைப்பார்த்துக் கேலிசெய்த உங்களுடைய அதிர்ஷ்ட வசத்தால் அந்தப் புண்யவானுடைய பார்வை உங்கள் மூளையைத் துளைக்கும்போது, நீங்கள் சிரிப்பதைப் பார்க்கிறேனென்"றான். அதை ஒப்பி, வீரன் தலையசைத்துச் "செல்லப்பா! (இவ்விருவரும் பால்யம் முதல் நெருங்கின தோழர்கள்) இந்த கருநாகமென்ற கழுதை, வெகு அல்பப் பயல் அவனுடைய மூச்சுப்பட்டால் கரும்பாறையும் குள்ளகரியாகும். இந்த நாயை நான் பிடிக்காவிட்டால் என் ஈரல் வேகாது. என்னைக் கேலிசெய்கிறான். சண்டைக்கழைக்கிறான். ஒன்று அவன் என்கையில் அகப்படவேண்டும்; அல்லது நான் எமன் கையில் அகப்படவேண்டும் இந்தக் கருநாகம் மாத்திரமல்ல 'செந்தலை வீரியனென்ற கள்ளனும் இனி ஜெயிலுக்கு வெளியிலிருந்தால், அவர்களுக்கு ஜ்வரம் வந்துவிடும். இவ்விரண்டு ஓநாய்களும் இந்தப் பக்கங்களில் கோழி திருட வந்திருப்பார்கள் நானும் அக்காரியமாகவே வந்திருக்கிறேன். இந்த மடாதிபதிகள் மாத்திரம் இன்னும் காற்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய பரமானந்த சிஷ்ய கோடிகள், தற்காலத்தில் கருணை பொருந்தின சர்க்காருடைய கட்டிடத்தில், யாதொரு அபாயமுமின்றிக், காப்பாற்றப்பட்டு வருகிறார்கள்."

பிறகு பூமியை உற்றுப் பார்த்துக் கொண்டு, வலது புறத்து மீசையை பழய வழக்கத்தால் முறுக்கிக் கொண்டு, எதையோ ஆலோசித்துச் "செல்லு! நான் சொல்வதைக் கேள். காசு பணம்,

நகை, நட்டு, எல்லாவற்றையும் சாக்கிரதையாய் எங்கேயாவது அப்புறப்படுத்திவை. இதைப்போன்ற இளப்புகளின் மேல் அந்தப் பயல்களுக்கு நல்ல நிகாவுண்டு. இந்தா, கருநாகத்தைப்பிடித்து, அதின் வாலை ஒட்ட நறுக்குவதற்காக இதோ புறப்படுகிறேன் ஆயுதங்கள், ஆகாரம் விலங்கு கொண்டுபோகாமல் தீராது. மற்ற மூட்டைகள் எதற்கு? இந்தத் தோல்பையில் சில முக்யமான கடிதங்களும் நோட்டுகளுமிருக்கின்றன. இதையும் எங்கேயாவது பத்திரப்படுத்து. இவ்விரண்டு காட்டுப் பூனைகளும் ஒன்று சேர்ந்து ஊரை அழிப்பதற்கு முன், தனித்தனியாய்ப் பிடித்துக், கல்மண்டபத்தில் அடைக்க வேண்டுமென்றான்.

செல்லப்பய்யர் அந்தப்பையை வாங்கிக்கொண்டு வீரன் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். இரண்டு கைத் துப்பாக்கிகளையும், பெரிய துப்பாக்கியையும் கழற்றி எண்ணை போட்டுத் துடைத்து குண்டுகள் வைத்தார். சிக்கிரத்தில் கெடாத உப்புத் தித்திப்பு பதார்த்தங்களைச் சிறுமூட்டையாக கட்டிக்கொடுத்தார். கேவலம் தோலும் எலும்புமாய் இப்பொழுதோ ஒரு நாழிகை கழித்தோ இது சாகுமென்று பார்ப்போர் நிச்சயிக்கும், ஓர் பிணம் போன்ற குதிரைமேல் ஏறிக்கொண்டு, வீரன் குரஞ்சிமலைச் சாரலை நோக்கிக் கடுவேகமாய்ச் சென்றான். அந்தக் குதிரை வீரனுடைய எண்ணப்படியெல்லாம் நடக்கும். அவன் சொல்லும் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு, அவனை காப்பதற்கும், பகைவரை எதிர்ப்பதற்கும் ஈட்டியும் கேடயமும் போல அவனுக்கு ஒரு உயிர்த்தோழனாய் விளங்கிற்று.

II

இடையனை வழிமறித்த விடத்தில் கருநாகம் தங்கியிருப்பானென்று எந்த மூடனாவது நினைப்பானா? அவன் இந்தத் திசையில் போனானென்று கண்டுபிடித்தால் போதாதா? ஒரு தடவை கொள்ளையடித்தவுடன் அசாமி யிருக்குமிடம் தெரியாமல் எங்கேயோ பதுங்கியிருந்து விட்டு ஜனங்களுக்குள் உண்டான அமர்க்களம் சற்று ஓய்ந்த பிறகு தலைகாட்டுவது நாகனுடைய வழக்கம். ஆகையால் அதை நன்றாய் அறிந்த வீரன், வெகுதூரம் மலையிலேறி, உன்னதமான சிகரத்திலுள்ள ஓர் ஆச்சாமரத்தின்கீழ் உட்கார்ந்து, நான்குபுறங்களிலும் பருந்தைப்போல் கண்ணோட்ட மிட்டுப் பகலில் எங்கேயாவது மனிதனுடைய ஜாடையும் ராத்திரியில் நெருப்பு மூட்டின வெளிச்சமும்

தென்படுமோ வென்று கண்கொத்திப் பாம்புபோல் பார்த்துக்கொண்டிருந்தான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஆகாரம் ஜாடவாய் ஒழிந்து போய், பட்டினி கிடக்க முடியாமல் வீரன் உன்பாடு என்பாடென்று தட்டி யடித்துக்கொண்டு சத்திரத்து வாசத்திண்ணையில் வந்து விழுந்தான்.

செல்லப்பய்யர் அவனைக்கண்டவுடன் தன் மனதில் கொதித்துக்கொண்டிருக்கும் சங்கதிகளை அது வரையில் கெட்டிபொட்டு அடைத்துக்கொண்டிருந்து, அப்பொழுது அது கட்டிற்கடங்காமல் பீறிக்கொண்டு கிளம்பி "கெட்டாயடா வீரு! என்ன பொ! நீயும் நாகனும் குஸ்தி பண்ணுவதா இருக்கட்டும். ஆட்டுக்கிடா சண்டையில் நரி மண்டை பிளந்து இறந்தது போல், அரசமரத்தைப்பிடித்த சனி பிள்ளையாரையும் பிடித்துவிட்டது. நீ இல்லாத வேளையில், அதாவது நேற்று இராத்திரி சுமார் இரண்டு மணி இருக்கும், அந்த நாகன், அவன் தலையில் இடிவிழ! இங்கே வந்து நுழைந்து, கோர்ட் அமீனாவைப் போல், சர்வ வில்லங்கசுத்தியாய், என்னை ஜப்தி செய்துவிட்டான்: நகை, பணம் துணி மணி வைத்திருக்கும் இடத்தைக் காட்டாவிட்டால் மண்டையை பேர்த்தெறிவேனென்று துப்பாக்கியை நெற்றியில் வைத்து அழுத்திக் கேட்டால் நான் வேறு என்ன செய்யமுடியும்? சர்வ வல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாக வென்ற வக்கணைப்படி, பிரமாணம் செய்து, பாத்திரத்தையும் அவ்வளவு தனத்தை வைத்து, அப்புண்யவானுக்குத் தாரை வார்த்தேன். உன் தோல்பையும், நான்கொடுத்த முதலுக்கு வட்டியாகத் தானம் செய்யப்பட்டது. கிராமத்து ஆட்கள் பிறகு கிளம்பி அவனை வெகுதூரம் துரத்தினார்கள். ஆனால் என்ன? ஒன்றும் பயன்படவில்லை. இந்திரஜித்தைப் போல் திடீரென மறைந்து விட்டான். அடாடா! மறந்து விட்டேனே! உனக்குக் கொடுக்கச் சொல்லி இக்கடிதத்தை என்னிடத்தில் ஒப்பிவித்தானென்றார்.

ஆச்சரியமும் ஆத்திரமும் பொங்கிவழியும் கண்களுடன், வீரன் அந்த அழுக்கடைந்த கடிதத்தை பிரித்துப் பார்க்கையில் அதில்:

"வீரா! கம்பீரா!! தீராதி தீரா!!!,

நீ என்னை வெறுக்க வெறுக்க, நான் உன் மேல் மட்டுப் படாத மையல் கொண்டிருக்கிறேன். தேக சௌக்கியத்திற்காக நீ மலைச் சிகரத்தில் காற்று வாங்கப் போனபொழுது, நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும் யாதொரு அபாயமு மின்றிப் பந்தோபஸ்தாய்க் காப்பாற்றுவது என் பொறுப்பென்று என் தலையில் எழுதியிருக்கிறதே. விலையுயர்ந்த சாமான்களையும் ஏராளமான பணத்தையும் சர்க்கார் தஸ்தாவேஜுகளையும் கண்டவிடத்தில் வாரி இறைத்து விட்டுப் போகும் உனக்கு என்ன கவலை? எனக்கல்லவா உயிர்போகிறது. செல்லப்பன் சுத்தமடையன் இன்னார் வேண்டியவர்கள் இன்னார் வேண்டாதவர்கள் என்று தெரியாத மூடன் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக என்னிடத்தில் ஒப்புவிக்கச் சொன்னால், ஸால்சாப் சொல்லுகிறான் முடிவில் இரண்டு தட்டு தட்டும்படி செய்து கொண்டான். உன் மலைச் சிகரப்பாரு முடிந்தவுடன் என்னிடத்திற்குவந்து உன் சாமான்களைப் பெற்றுக்கொள். எறும்பு கடிக்காமல் வசம்பு போட்டுக் கட்டி வைத்திருக்கிறேன். நாமிருவரும் ஓரிடத்திலேயே இருக்க முடியுமா? நீ இல்லாதவேளையில் உன் காரியத்தை நானல்லவா பார்க்க வேண்டும்? இந்த நாளையில் யாரையும் நம்பிவிட முடியாது, அது இருக்கட்டும். நீ எவ்வளவு தடவை சொன்னாலும் சிறுபிள்ளைத்தனம் விடாமலேயே இருக்கிறாய். ஆச்சாமரத்தின் கீழ், குறட்டை விட்டுக் கொண்டு தூங்கும் பொழுது உன்னை யார் என்ன செய்தாலும் கேள்வி முறையில்லை. போக்கிரிப் பயல்கள் ஏதாவது தாறுமாறாய் உன் மரியாதை தெரியாமல் விஷமம் செய்வார்கள். நீ இல்லாவிட்டால் எனக்கு எப்படி பொழுது போகும்? ஆகையால் அந்தக் கதி உனக்கு நேராமல் உன்னைத் தப்புவித்த தற்காக உனக்கு சற்றேனும் விசுவாசமுண்டா? நன்றி யில்லாத பன்றி! இனி அப்படிச் செய்யாதே. உன் நன்மையையே கோறும் கருநாகம்" என்று எழுதியிருந்தது.

இதில் ஒரு விசேஷம் வீரனுடைய தலைப்பாகையிலிருந்த ஓர் குண்டூசியை எடுத்து அந்தத் துணியில் ஒரு துண்டை கத்திரித்து அதையும் கடிதத்தையும் செல்லப்பய்யர் வீட்டுத் திண்ணைத் தூணில் சொருகி யிருந்தது. வீரன் தூங்கும்பொழுது கருநாகம் அங்கேவந்து, ஊசியையும் பாகைத் துணியையும் ஜப்தி செய்து விட்டான். அப்பொழுது வீரனை கொன்றால் கேள்வி முறை யார்? தயவால் விட்டதல்ல; எல்லோரும் கேலி செய்ய வேண்டுமென்றே இது நாகன் கட்டின கூத்து.

கடிதத்தைப் படிக்கும் பொழுது வீரனுடைய முகத்தைக் கண்கொண்டு பார்க்கமுடியுமா? கண்கள் இரத்தம் போல் சிவந்து, தெறித்து விழத்தயாரா யிருந்தன. கைகால்கள் படபடத்தன. புலியைப்போல் சீறினான். வார்த்தை எழவில்லை. இப்படி அரை நாழிகை வரையில் திணறிப், பிறகு மடைதிறந்தது போல், கர்ஜித்தான். "செல்லப்பா! எனக்கு இதுவும் வேண்டும் இன்னும் வேண்டும். மதியற்ற மடையர்களுக்கு வெகுமானம் செய்தால், முதல் பாக்கு வெற்றிலை எனக்கே! அந்தப் பயல் சொல்வதில் அணுவும் பிசகில்லை. அவனுடைய எல்லைக்குள் போய், கழுதையைப்போல் காலை நீட்டிக்கொண்டு தூங்கினால், வந்ததை வாங்கிக் கொள்ள வேண்டுமல்லவா? இதுவரையில் எத்தனையோ வில்லாதி வில்லன்களைத் தாமணியாய்க் கட்டி அடித்த என்னை இந்தப் பயல் தண்ணி காட்டுகிறானே! இருக்கட்டும், விட்டேனா பார் அவன் என்னிடத்தில் காட்டின அன்பையும் பொறுமையையும் நான் அவனிடத்தில் காட்டுவதற்கு, நானும் அவனைப்போல் முற்றும் துறந்த ஞானியா? நான் அவனுக்கு விளையாட்டுச் சாமானா? நான் இல்லாவிட்டால் பொழுது போகாதோ? காத்தவராயன் மேல் ஆணை என் தாமாஷை அவன் என்ன கண்டான்? அவன் பொழுது முற்றிலும் போகும்படி செய்வதைத் தவிர எனக்கு வேறென்ன வேலை? என் மேல் கிருபை கூர்ந்து கொல்லாமல் விட்டது அதற்கே யல்லவா? என் சாமான்களை அவன் பத்திரமாய்ப் பாதுகாத்தது போல் அவனுடைய உயிரையும் பத்திரமாய் என் பாதுகாப்பில் வைத்துக் கொள்ளுகிறேன். அவனிடத்திலிருந்தால் அதை யாராவது அடித்துக்கொண்டு போய் விடுவார்கள். செல்லப்பா! பிடிபந்தயம்! என்ன சொல்லுகிறாய்? இந்த ஆட்டத்தில் எந்தக் கை கெலிக்கும்? பயல் வீராசாமி தனித்து நப்புக்கோட் சொல்லி யிருக்கிறான். ஒரு பயல் மூச்சு விடக்கூடாது. கருநாகம் இதுவரையில் பல புற்றுகளில் புகுந்து பார்த்திருக்கிறது. ஆனால் இன்னும் இரண்டு புற்றுகள் பாக்கி யிருக்கின்றன. அவைகளையும் பார்த்து விட்டால், ஆசை ஒழிந்துவிடுமென்று தன் அரை கச்சையிலிருந்த

இரண்டு கைத்துப்பாக்கிகளின் வாயைத் தொட்டுக் காட்டினான்.

அவனை அன்று ராத்திரி அங்கே, தங்கி இளைப்பாற்றிக்கொண்டு காலையில் மலைக்குப் போகலாமென்று சமாதானம் செய்து நிறுத்தினது பிரம்மப் பிரயத்தன மாயிற்று. அன்று சத்திரத்து திண்ணையில் கூடிப்பேசிக்கொண்டிருந்த புத்திமான்களுடைய நோக்கம் என்னவென்றால்:—கருநாகம் மிகவும் அதிகமாய் ஆலாட்ட ஆரம்பித்துவிட்டது திமிர் தலைக்கேறி கண்காது தெரியவில்லை. கொஞ்சநாட்கள் வரையில் அவனிடத்திலிருந்த பயம் மாயமாய் மறைந்தது கண்டவுடன் கொல்லும் கருநாகம் காக்கையும் குத்தி குளறும் தண்ணீர்ப் பாம்பாயிற்று. அவனுக்குச்சரியான பாடம் படித்துக் கொடுக்கும் பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட்டான். மின்னல் வீரனே அவனுக்கு தத்துவோபதேச படலத்தையும் சந்தேகம் தெளிதல் படலத்தையும் லயம் திரிபின்றிப் பாடம் சொல்லுவான். ஆனால்! கொடுக்க வேண்டிய சம்பளம் மாத்திரம் வெகுகடுமையாயிருக்குமென்றார்கள்.

வீரன் தாகத்திற்குக் காப்பிகொண்டு வரச்சொல்லி, அதைக் குடிக்கப்போகையில், சத்திரத்து வாசலுக் கடுத்த வாய்க்காலின் அக்கரையிலிருந்து ஓர் துப்பாக்கி படீரென்று வெடித்தது. வீரனுடைய கையிலிருந்த கண்ணாடி டம்பிளர் தூள் தூளாய்க், காப்பி முழுவதும் கண்ணிலும் மூக்கிலும் காதிலும் மீசையிலும் தலைப்பாகையிலும் பரவி விசித்திரமான புள்ளிகளாலும் சிறிய நீர்த்தாரைகளாலும், அந்த பெயர் பெற்ற ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் புலியை விளங்கச் செய்தது.

அதே சமயத்தில் "என்கண்மணியே! இங்கே வா. என்னை இருட்டில் ஜாக்கிரதையாய் அழைத்துக் கொண்டுபோ. நானில்லாமல் நீ மாத்திரம் காப்பி சாப்பிடுவது அழகல்ல" வென்று யாரோ கை கொட்டிச் சிரித்து அழைத்தான். உடனே வீரன் திண்ணையிலிருந்த இரண்டு லாந்தல்களையும் ஒரே நிமிஷத்தில் இரண்டு குண்டுகளால் இடுப்பிலிருந்த கையை எடுக்காமல், பொடிப் பொடியாக்கி, எங்கும் பொட்டை இருளாய்ச் செய்தான். அஜாக்கிரதையால் மோசம் போவது அவனுக்கு வழக்கமல்ல. ஓரே நிமிஷத்தில், இரண்டு குறிவைத்துக், கண்ணால் பார்க்காமல், அடித்துத் தள்ளுவது விளையாட்டல்ல.

அடுத்த நிமிஷத்தில், பூனையைப் போல் காலடி ஓசைப் படாமல், வீரன் திண்ணையிலிருந்து குதித்து, வாய்க்காலில் இறங்கி, அக்கரை சேர்ந்து, கருநாகத்தைத் துரத்திச் சென்றான். சுமார் ஐம்பதடி தூரத்தில் ஒரு குண்டு வெடித்துப், பளிச்சென்று வெளிச்சம் தெரிந்தது. வீரனுடைய உருவம் எங்களுக்குத் தோன்றி மறைந்தது. அதே நிமிஷத்தில் நூறு கஜங்களுக்கு அப்பால், அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்து வெளிச்ச முண்டாயிற்று. யாரோ ஒருவன் அதிவேகமாய்க் குதிரையின் மேல் பாய்ந்தேறுவதைக் கண்டோம். அவனே கருநாகமா யிருக்கலாம்.

சில நிமிஷங்கள் கழித்து அவன் மேட்டில் ஏறும்பொழுது வீரனுடைய கண்ணில் பட்டான். உடனே வேறொரு வேட்டுக் கேட்டது. அதற்கு பதில் வேட்டில்லை. நெடுநேரம் வரையில் நிச்சப்தமாயிருந்தது. அரைநாழிகைக்குப் பிறகு, சென்னை கவர்மெண்டு, ஸி. ஐ. டி- போலீஸ் இன்ஸ்பெக்டர், வீராசாமி நாயக்கர் அவர்கள் முக்கி முரண்டிக்கொண்டு சத்திரத்து திண்ணைக் கருகில் வந்து அங்கிருந்த லாந்தல் வெளிச்சத்தில் கருநாகமென்று நாமம் பூண்ட கள்ளனுடைய உடலை, உளுந்து மூட்டையைப் போல் திண்ணையில் தொப்பென்று போட்டுத் தூணில் சாய்ந்து நின்றார்.

அவனுடைய இடது கையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டேயிருந்தது. சுண்டு விரல் புதியும்படியான குண்டு பாய்ந்த காயம், வாயைத் திறந்து கொண்டு ,இரத்தத்தைக் கொப்புளிப்பது போல் காணப்பட்டது. செல்லப்பய்யர் பக்கத்திலிருந்த வருடைய பட்டுலேஞ்சியைப் பிடுங்கி முருக்கிக் காயத்தில் வைத்து இறுக்கிக் கட்டினார். பிறகு கள்ளனைப் புரட்டிப் பார்க்கையில்! வீரனுடைய துப்பாக்கிக் குண்டு தலையின் பின்புறத்தில் பாய்ந்திருந்தது. சடையைப்போன்ற மயிரெல்லாம் இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. நாலுபேர் அவனைத் தூக்கிக் கொல்லைப் புறத்திலுள்ள ஓர் அறையில் கொண்டுபோய்க் கீற்றின் மேல் போட்டுக்கதவைச் சாத்திவிட்டு வந்தார்கள். அப்பொழுதும் நாகன் என்னசெய்வானோ வென்று எல்லோருக்கும் திகில் தான். "செல்லப்பா! அடித்தேனோடி, இல்லை? நான் அப்பொழுதே சொன்னேனல்லவா அந்தப் பயல் தலைக்குப் பாக்கு வைப்பே னென்று நான் சொல்வதெப்படி? இப்பொழுது அவனுக்கு நன்றாய் பொழுது போகும். பெரிய தமாஷைப் பார்க்கப் போகிறார் — துரை —சிண்டைப்பிடித்து —" இப்படிச் சொல்லிக் கொண்

டே அஞ்சாத நெஞ்சும் அளவில்லா வலுவுமுள்ள வீரன், காயத்திலிருந்து கொட்டின இரத்தத்தால் சோர்ந்து மயக்கம் கொண்டு, கிறுகிறு என்று சுற்றிக் கீழே விழுந்தான்.

நல்ல வேளையாய் சத்திரத்தில் தங்கியிருந்த பிரயாணிகளுக்குள் ஒருவருக்கு வைத்தியம் தெரியும். அவரை உடனே அழைத்து வந்து வீரனுடையக் காயத்தைக் கட்டிவேண்டிய சிகிச்சை செய்வித்தோம்.

மறுநாட்காலையில் கிராமத்திலுள்ளவர்கள்கூடி, நாகனைக் கொண்டுபோய்க் கொளுத்துவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். கோழி கூவும் தருணம் முதல் சங்கு தாரை சோமக்கலம் தம்மட்டம் முதலிய ஆட்டம் பரங்கள் செவியைத்துளைத்துக் கொண்டிருந்தன. வெகுநேர்த்தியாய்ப் பச்சைப் பல்லாக்கு கட்டிச் சத்திரத்து வாசலில் வைக்கப்பட்டிருந்தது, கூட்டம் தாங்கவில்லை. பெயர்பெற்ற நாகப்பன் மின்னல் வீரனால் சுட்டுக் கொல்லப் பட்டானென்ற செய்தி நொடிக்குள் வெகுதூரம் பரவி சுற்றுப்பட்ட கிராமங்களிலிருந்து ஆண் பெண் குஞ்சு குட்டி, கிழம் கிட்டெல்லாம் திருநாளுக்குக் கூடுவதுபோல் சாரி சாரியாய் வந்து கொண்டே யிருந்தார்கள். வயதில் மூத்தவனாகையால் பிரேதச்சடங்குகள் நடத்தும் பொறுப்பு என்தலையில் விழுந்தது நான் தோண்டி நவதான்யங்கள் வைகுண்டச் சல்லா பஞ்சாங்கப்பாப்பான் முதலியவைகளைப் பற்றி கவனமா யிருக்கையில் செல்லப்பய்யர் வந்து "என்ன முருகா! நாழிகை பதினைந்தாகிறது. இன்னும் பிணம் கிளம்பவில்லையே. இன்றைக்கு நமக்குப் பிண்டம் உண்டா யில்லையா? சல்தி பண்ணு. எல்லோரும் எவ்வளவு நேரம் காத்திருக்கிறது? பிணத்தைக்கழுவாரம்பிக்கலாமா வென்றார்.

"தடையென்ன? நான் இதோ கிளம்பிவிட்டேன். தாமதம், உங்களாலேயே யென்று சொல்லிவிட்டுத், தெருவில் வந்து, கொம்பு தம்மட்டம், தாரை சங்கு, சோமக்கலக்காரன்களையும் பண்டாரங்களையும் வரிசையாய் நிறுத்திக், தடியாள்களை அவர்களுக்கப்பால் நின்று சிலம்ப மடிக்கச் சொல்லி, மயானத்தில் சிதை அடுக்கியாயிற்று, விறகு முட்டை போதுமாவென்று விசாரித்துக் கொண்டிருக்கையில், சத்திரத்து கொல்லையிலிருந்து "கோ" வென்று ஓரிரைச்சல் கேட்டது. செல்லப்பய்யரும், மற்றுமுள்ளோரும் தலைவிரிகோலமாய்

ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு, வாசலில்வந்து வீழ்ந்தார்கள். "என்ன என்ன" வென்று எல்லோரும் பர பரப்புடன் கேட்கச், செல்லப்பய்யர், வார்த்தை குளறப் பேச்செழாமல், ஓர் காயிதத்தை தலைக்குமேல் காட்டி விசிறினார்.

நான் அதை வாங்கிப்பார்க்கையில் அதில் "அன்பார்ந்த வீரன் இருளன் காட்டேரி வல்கஜு, சிகாமணியே! வெகுநாளாய்க் காட்டிலும் மேட்டிலும் படுத்துத்தூங்கினவனுக்கு உன் தயவால் நேற்று ராத்திரி அடக்கமான ஓர் அறையும், படுக்க இரட்டைவிரியும் கிடைத்தது. என்னுடன் பிறந்தவனும் இவ்வளவு அன்பாய் என்னை தூக்கிக்கொண்டுவந்து படுக்கவிடமாட்டான் எனக்காகத்தயாராகும் பல்லக்கு வைகுண்டச் சல்லா சிதை முதலிய ஏற்பாடுகளைக் கலைக்கவேண்டாம். சமீபத்தில் அவையெல்லாம் உனக்கே வேண்டியிருக்கும் வீண் செலவு ஏன் செய்யவேண்டும்? நீ என்விஷயத்தில் காட்டின அக்கிரயைக் காட்டிலும் உன் விஷயத்தில் நான் கோடி மடங்கு காட்டப் போகிறேன். நான் இப்பொழுது அவைகளைப் பார்த்து மகிழ்வதுபோல், நீயும் இருந்து பார்க்கக் கொடுத்து வைக்க மாட்டாயே யென்று மாத்திரம் கவலைப்படுகிறேன். அடிக்கடி க்ஷேமத்தைத் தெரிவிக்கவு"மென்று எழுதியிருந்தது. அதைக் கேட்டவுடன் செல்லப்பய்யர் "அடே! தடிக்கண்டா—" அவர் பிராமணனாலும், அப்பொழுது அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைச் சொல்ல எனக்கே வெட்கமாயிருக்கிறது.

இதற்குள் யாரோ போய் மாடியில் படுத்திருந்த வீரனிடத்தில் இதைச் சொல்லிவிட்டார்கள். வைத்தியன் தன்னாலான மட்டும் கட்டிப் பிடித்தும், அவனை உதைத்துத்தள்ளிவிட்டு வீரன்சத்திரத்து வாசலில் ஓரே பாய்ச்சலாய் வந்து குதித்து "என்ன செல்லப்பா! நாகனைக்காணவில்லையா! இதென்ன! யார் செய்த புரளி? இது உன் தமாஷ் வகையறாவா யிருந்தால், தயாதாக்ஷிண்யம் பார்க்காமல் சர்க்காரை அவமதித்ததற்காக 187-வது செக்ஷன்படி கைதி செய்வேன், தெரியுமா இதோ பார். கேட்டதற்கு பதில் சொல் காதில் விழவில்லையா? நானென்ன விளையாடுகிறேன்று நினைக்கிறாயோ? நிஜத்தைச் சொல் உன் நாசமாய்ப் போகிற பரிகாசத்தை யெல்லாம் கட்டிவை" யென்று அந்த பிராமணனுடைய கழுத்தைப் பிடித்துக் குலுக்கினான்." பரிகாசமா. நெருப்பைவை. நல்ல பரிகாசம் கழுத்

தை விடு வடிக் கட்டின மடைத்தனத்திற்கு உனக்கு இரட்டைத் தோடாவும் விரசங்கிலியும் போடவேண்டும். பரிகாசமா நாகனை நீ சுட்டு விழ்த்தின அழகோ! வாயை மூடு. உன் குண்டு அவனுடைய தலையில் பட்டு ஒதுங்கிப் போய்விட்டது. ஒரு ஜாமம் வரையில் அவனுக்கு பிரக்ஞையில்லாமலிருந்ததே நீ செய்த உபகாரம். அவன் உன்னை தூக்கும்படியாய் அடித்ததற்கு அவனுக்கு என்ன வெகுமானம் செய்யலாம்? நீ இரத்தம் கொட்டிக்கொண்டு மூர்ச்சையாய் விழுந்தவுடன். உன்னைக் கவனிப்பதும் நாகனுக்குப் பிரேதச் சடங்குகளைச் சிறப்பாய் நடத்துவதுமே வாயில் ஈ புகுந்தது தெரியாமலிருந்தது. இதற்குள் அந்தத் திருட்டுப் பயல் மூர்ச்சைத் தெளிந்து, மறுபடியும் ஒரு நல்ல தூக்கம் போட்டுப் பல பலவென்று பொழுது விடியும் வேளையில் ஒருவரிடமும் உத்திரவு பெறாமல் உனக்கு மாத்திரம் யோக க்ஷேமத்தைப் பற்றிக் கடிதம் எழுதி வைத்து விட்டுப்போனான். பலே பேஷ்! இன்ஸ்பெக்டர்வாள்! இந்த வீரச் செயலுக்காகத் தங்களுக்கு இன்னும் ஒருபடி உயரும். எங்களுக்கு விருந்துண்டல்லவா வென்று செல்லப்பய்யர் தன் ஆத்திரத்தைக் காட்டிக் கேலி செய்தார்.

வீரன் அவனை லக்ஷியஞ் செய்யாமல் நாகன்மேல் ஆத்திரம் பொங்கப், "பல்லக்கும் சல்லாவும் எனக்குச் சமீபத்தில் வேண்டியிருக்குமோ? செல்லப்பா! அப்படியே ஆகட்டும் யார் அதில் ஊர்கோலம் வருகிறார் பார்ப்போம். அந்தீ நாகனுடைய மண்டையோட்டை நான் கால் காசிற்கு விற்காமல் போனால், என்பேர் வீரனல்ல. என் முகத்திலிருப்பது மீசையல்ல, கோழி இறகு நான் பீமா நாயக்கருக்குப் பிறந்தவனல்ல அவனை ஜெயிலில் கிரகப்ரவேசம் செய்வித்துப், பிபிள்ஸ் பார்க்கு குரங்குபோல் கால் அணா டிக்கெட் வைத்துக் காட்டாவிட்டால், என் ஒரு புறத்து மீசையைச் சிரைத்துக் கழுதையின் மேல் வால்பக்கமாய் உட்கார வைத்து ஊர்கோலஞ் செய்யலாம் இப்படியே ஐயனார் கோவிலில் பிரமாணஞ் செய்கிறேனென்று பேரிடிபோல் கர்ஜித்தான்.

அவனுக்குக் காயம் ஆறி ஜ்வரம் விட்டு, வெளியில் நடமாடுவதிற்குள் பலவிவகாரங்கள் நடந்தன, மூன்றுதடவை தபால்வண்டி மறிக்கப்பட்டுப் பிரயாணிகள் வெங்கடாசலபதி உண்டிக்குக் காணிக்கை செலுத்தினார்கள், நாலுகிராமங்களில் தீவட்டிக் கொள்ளை அடிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான சொத்துபறிமுதல் செய்யப்பட்டது, ஒவ்வொருதடவையும், நாகன் விவரமாய்க் கடித மெழுதிச் சத்திரத்து வாசல் சுவற்றில் ஒட்டிவைத்தான். கடைசியாய் ஒரு விளம்பரத்தில் "வீரா! உன்பதினாலு தலை முறை முன்னோரையும், உனக்கு வீண்தண்டத்திற்கு அழுகிற ஸர்க்காரையும் துணைக்குக் கூட்டிக் கொண்டு வந்து என்னைப் பிடித்துக் கொண்டு போவேன்" றெழுதிச் "செந்தலை வீரியனென்று" கையொப்ப மிட்டிருந்தது.

செல்லப்பையர் அதைப்படித்துக்காட்டி "வீரா! பலேபேஷ்! காற்றும் நெருப்பும் காலராவும் ப்ளேக்கும் சேர்ந்துவிட்டது போல், கருநாகமும் வீரியனும் சேர்ந்து விட்டால், லோகத்திற்கு நல்ல காலந்தான், நான் சொல்வதைக்கேள். நீ ஒண்டியாய் இந்த அஸாரப் பயல்களுக்கு ஸால்ஜாப் சொல்ல முடியாது. இரண்டு டஜன் கான்ஸ்டேபில்களை, அனுப்பச் சொல்லிப் பெரிய துரைக்குந் தந்தியடி. அசட்டுத்துணிச்சலாய்க், கண் காது தெரியாமல் போய் விழுந்தயோ அந்தப் படவாப்பயல்கள் உனக்குப் பாடைகட்டிவிடுவார்கள்; நான் உன்னை"—"மூடுவாயை இந்த 36-வருஷமாய், ஒரு ஈ காக்காய் தயவைத்தேடாமல், ஒண்டியாய், வில்லாதி வில்லன்களையெல்லாம் தலைகீழாய்ப் பிடித்துச் குலுக்கின இந்த வீரன், இப்போது இந்த இரண்டு மறவ நாய்களுக்காக ஒத்தாசை தேடுவேனா? எலிவேட்டைக்குத் தவிலடியா? கோழியடிக்கக்குறுந்தடியோ? அப்படிவேண்டுமானால், நாகனுடைய ஜமாவில் சேர்ந்து, என் மனுஷனைப், அங்கிருந்து வேலை செய்து, சமயம் வாய்த்தபோது அந்தப்பயல் கழுத்தில் சுருக்குப் போடக் கூடிய ஒரு பொறுக்கி வடிக்கட்டின பேர்வழி கிடைத்தால் போதும். வீரியன் சங்கதியை நானே கவனித்துக் கொள்ளுகிறேன். உனக்கு யாரையாவது தெரியுமா வென்றான்.

அங்கே தங்கியிருந்த வழிப்போக்கரில் ஒருவன் வீரனைக் கும்பிட்டு, "நாயக்கர்வாள்! உங்கள் மனிதனைப், நாகனுடைய செட்டில் சேர்ந்து, சமயம் நேர்ந்தபோது உங்களுக்கு ஒத்தாசை செய்ய அஸாமி வேண்டியிருந்தால், என் பேரைத் தாகல் செய்து கொள்ளலாம். கண்டனூர் வைத்திலிங்க மென்று என்னைச் சொல்லுவார்களென்றான்.

"வீரன்" அவனை ஏற இறங்கப் பார்த்துச் சற்று யோசித்து "உன்னை ஒப்புக் கொண்டேன். மாறு வேடம் பூண்டு, செந்தலையுடன் நான் வேலை செய்கிறேன். நாகனை நீ பார்த்துக்கொள், செந்தலை இந்தப் புறத்தில் வந்திருப்பதாய் அவனுக்குத் தெரியவே கூடாது. நாகன் பொல்லாத பயல். என் வேஷங்களெல்லாம் அவனிடத்தில் பலிக்காது. ஆகையால், உன்னை அனுப்புகிறேனெ"ன்றான். "போதும் மனதில் வாங்கிக் கொண்டேனெ"ன்று வீரனிடத்தில் சகல முஸ்திப்புகளும் பெற்றுப் புதுஅஸாமி புறப்பட்டுப் போனான்.

III

இருபது மைலுக்கப்பால், நூறுவருஷம் தேடினாலும் கண்டு பிடிக்க முடியாத ஒரு மலைக் குகையில், நாகன் வைக்கோல் மெத்தை மேல் படுத்துச் சுருட்டுக்குடித்துக் கொண்டிருந்தான். மன்னொரு சாமிபோன்ற இரண்டு கள்ளன்கள் ஒரு மூலையில் சமையல் செய்து கொண்டிருந்தார்கள். நமது புது அஸாமி அஸ்தமித்து ஒரு ஜாமமான பிறகு அங்கேவந்து, கோட்டானைப் போல் இரண்டு தடவை குரல் கொடுத்தான். உடனே நாகன் வெளியில் வந்து "என்ன வைத்தி! போனகாரியம் பலித்ததா? வீரனுடைய ஏற்பாடுகளெல்லாம் எப்படியிருக்கின்றன" வென்று, பதினாறு பல்லையும் காட்டிக் கேலி செய்து, யோகக்ஷேமம் விசாரித்தான். "அது கூடத்தெரியாமலா? தன் மனிதனை இங்கேயிருந்து வேலை செய்யச் சொல்லியிருக்கிறார், நாயக்கர்வாள் என்னை உஷார்! சமயம் பார்த்து, உன்னைச்செந்தூக்காய் அவரிடத்தில் ஒப்புவிக்கப் போகிறேன் தெரியுமா? பார்த்துப் பிழையென்றான் வைத்தி. "அடே அப்பா. உன்னைக் காலைத்தொட்டுக் கும்பிடறேன். பிள்ளை குட்டிக்காரன். அன்யாயமாய் என் சோற்றில் மண்ணைப் போடாதே" யென்று வெட வெடவென்று நடுங்கிப் பரதவித்துக் கெஞ்சுகிறவனைப் போல் நாகன் கேலி செய்தான். "அடே நாகா! மறந்து விட்டேனே! வீரன் தலையில் நெருப்புவை. அவன் கிடக்கிறான். கேட்டாயா சங்கதி! செந்தலை இங்கே வந்திருப்பதாய்க் கேள்வி. என்ன நினை—" "ஓகோ கோபலப்பேலே பாவாடைராயா! இது நிஜமாயிருந்தால் உனக்கு இரண்டு கிடா வெட்டுகிறேன். இப்போதே அவனுடைய ஜமாவைச் சேர்த்துக்

கொள்ள வேண்டும். அப்புறம் ஸர்க்காராவது! கிர்க்காராவது நாம் வைத்தது சட்டம் மரத்தாலி கட்டியடிக்கிறேன், பனைமுடி மாரியாத்தா என் பங்கிலிரு. செந்தலை மணிப்பயலென்று கேள்வி உனக்கு எப்படி தெரிந்தது? சத்திரத்துத் திண்ணைச்சுவரில் செந்தலையொட்டியிருந்த நோட்டீஸ் இதோ பார். வீரன் வேடம் மாறி அந்தக் கம்பெனியில் வேலை செய்யப் போகிறானாம்" "ஸரி வீரன் உன்னை இன்னானென்று அடையாளம் கண்டு பிடிக்க வில்லையென்று சொல்லு. விடியஜாமத்திற்கு இங்கிருந்து கிளம்பி, செந்தலையைக் கண்டு பிடித்து மேலே நடக்க வேண்டிய காரியங்களை யோசிக்க வேண்டுமென்றான் கருநாகம்.

பிறகு அந்த நான்கு துறவிகளும் உண்டுறங்கி அதிகாலையில் எழுந்து கொள்ளையையும் செந்தலை வீரியனையும் தேடிக் கொண்டு வெகு தூரம் சென்றார்கள். வீரன் லேசான பேர்வழியல்ல. கைகாரப்பயல் வெகு நாள்பெருச்சாளி தெரியுமா? செந்தலைஜமாவில் என்ன வேடம் போட்டுக் கிறானென்று ஊற்றமாய் கண்டு பிடியுங்களென்று எச்சரித்துக்கொண்டே "சீ! சீ இதென்ன சிறுபிள்ளை விளையாட்டு! இனிமேல் வெகுசங்கதிகள்நடக்கவேண்டியிருப்பதால்இந்தத்மாஷை முடித்து விடவேண்டும். முதலில் வீரனுக்குச்சீட்டுங்கொடுத்துவிட்டு அவனுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் பல்லக்கையும் சிதையையும் உபயோகித்து விக்னேச்வர பூஜை செய்து இந்த முதற்பலியால் கறுப்பண்ணனுடைய கிருபையைப் பெற்று மற்ற மங்கள காரியத்தை ஆரம்பிப்போமென்று வீரவாதம் பேசிக்கொண்டு சென்று சூரியன் மலைவாயில் விழும்பொழுது தங்களை நோக்கி நால்வர் வருவதைக் கண்டார்கள்.

ஒல்லியாய் மாநிறமாய் அக்கரைச் சீமையில் வெகு நாளிருந்தவர்களைப் போல் மூவர் தோன்றினார்கள். அவர்களுக்குத் தலைவனை வேறொருவன் உயரமும் பருமனும் வாட்ட சாட்டமாய்ப் புலிவெட்டாம் புள்ளிக் கருப்பனைப்போல் பார்க்கப் பயங்கரமாயிருந்தான். உலகம் உண்டானது முதல் வந்த அமாவாசை யெல்லாம், ஒன்று சேர்ந்து வந்தது போல் கறுத்திருந்த அவனுடைய தலைமயிர் மீசை, தாடி கிருதா புஸ்தி கல்மா வெல்லாம் சேரக் கொண்டைக் குஞ்சம் போலும், நெருப்பு கொழுந்து போலும் செக்கச் செவேலென்று,

சென்னை விளக்குக் கூண்டைப்போல் வெகுதூரத்திலேயே கண்ணைப் பறித்தது. எல்லோருக்கும் துப்பாக்கி, கத்தி, கட்டாரி, பூணுத்தடி, கவண்டி முதலிய அலங்காரங்களில் யாதொரு குறைவு மில்லை. அவனை கண்டவுடன் நாகன் ஒரே ஓட்டமாய் ஓடி "அடே! செந்தலை! சௌக்யமா? பிள்ளை குட்டியெல்லாம் க்ஷேமந்தானா? இந்த விசை கண்டு முதல் எப்படி" என்று குதூகலமாய் விசாரிக்க ஆரம்பித்தான். "கருநாக மல்லவா? அண்ணேன் கும்பிடறேன். எல்லாம் ஆண்டவன் கிருபையால் இது வரையில் சௌக்யம் அங்கேயும் அப்படித்தானே! இந்த விசை விளைச்சல் ரொம்ப மோசம். தனிப் பண்ணை வைத்தது போதும் கூட்டுப்பயிர்ச்சிலவு ஒரு கைபார்த்து விடுவோமென்று ஆசைபோராடுகிறது. ஆகச்சே, இந்தக் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு இந்தப்புறம் வந்தேன். பலே பேஷ்! கும்பிடபோன தெய்வம் குருக்கே வந்ததுபோல் எனக்கும் அதே எண்ணம் தோன்றி நீ இங்கே வருகிறதைக் கேள்விப் பட்டுப் புறப்பட்டேன். உன் பயல்களில் புது ஆசாமியுண்டோ?" "பெற்ற பிள்ளைமாதிரி சின்னக் குழந்தை முதல் என்னுடன் பழகின குட்டிகள் என் உயிரை அவர்களிடத்தில் ஒப்புவித்திருக்கிறேன்" இதைக் கேட்டவுடன் நாகனுக்கு ஒரு பெரிய பாரம் இறங்கிற்று.

வீரன் செந்தலையை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. "ஏன் தம்பி! நமது குலதெய்வத்திற்குப் பூசை போட்டு விட்டு ஊரூராய்க் கொள்ளையடிப்போமென்று, பல்லக்கு சல்லா சிதைமுதலியகதையைச்சொல்லிக் கோவென்று சிரித்தான். வீரியன் சரிதான், அண்ணே! நானும் அந்த நோக்கத்துடன் நோட்டீஸ் கொடுத்தேன். வேறே ஒரு முக்கியமான விஷயம். நடுவயல் மெ. வ. சி. கை. ரா. முனியன் செட்டி வீட்டில், நேற்றுச் சிங்கப்பூரிலிருந்து 4000 ஸ்வரன் வந்திருக்கிறதாம் அது சென்னை பாங்கிக்குப் போகுமுன் நாம் அடித்துக் கொண்டு விட வேண்டும். நேற்றே போய் எல்லாம் பார்த்துப் பந்தோபஸ்து செய்து விட்டு வந்தேன். கொத்துச் சாவி, பூட்டு, திராவகம் எல்லாம் தயாராயிருக்கின்றன. போலீஸ் பாரா வைத்திருப்பதாய்க் கேள்வி. ஒண்டியாய் வேலை செய்யலாமா, அல்லது, நம்பிக்கையான பேர் வழியைச் சேர்த்துக் கொள்ளலாமாவென்று நிச்சயந்" செய்யவில்லை.

பிறகு வீரனைக் கவனிப்போம்." ஒன்றுந்தர யோசனை, இன்று ராத்திரி மணி மூன்றிர்க்குத், தாலிவாங்கும் வேளையில், முனியன் செட்டியார் வீட்டில் கிரகப் பிரவேச முகூர்த்தம். நாலுநாள் முன்னதாக, ஸகுடும்ப சமேதராய், இஷ்டமித்ர பந்து பரிவாரங்களுடன், வந்திருந்து நடப்பிவிக்க வேண்டுமென்று கோறும், தங்கள் அன்புள்ள விதேயர்கள் கருநாகம், செந்தலை வீரியனென்று புரளி செய்து "நாம் நல்ல வேளையில் இப்போதே புறப்பட்டாலல்லாது, முகூர்த்தத்திற்குச் சரியான லக்கினத்தில் போய்ச் சேரமுடியாது. காலைத் தட்டி விடுங்களென்று எச்சரித்துக் கிளம்பினான். சமையலுக்காக வழியில் சற்று நேரம் தங்கிப், பெருநடையும் ஓட்டமுமாய், மூன்று மணிக்கு முந்தியே நடுவயலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

IV

தெருக்களில் ஈ காக்கையில்லை. முனிஸிபாலிடி லாந்தர்கள் இந்தியமாதாவின் கதியை நினைத்துக்கொண்டு, பகலில் அதிகாரி வர்கத்தினருக்குப் பயந்து, இரவில் ஒருவரு மில்லாதபோது கண்ணீர் விட்டழுதன. போலீஸ் புலிகள், மறைவுகட்டின திண்ணைகளில், குறட்டை விட்டுத் தூங்கினார்கள் அமாவாசை, மையிருட்டு, சந்திலும் பொந்திலும் விழுந்து, முடிவில் ஒரு பெரிய வீட்டு வாசலில் வந்தார்கள். எல்லோரையும் வழிகாட்டி அழைத்துக்கொண்டுபோகும் செந்தலையின் காதில், நாகன் "தம்பீ! போலீஸைக் 'காணோமே' யென்றான். செந்தலை "ஐயையோ! குடியைக் கொடுத்தாயே! கூச்சல் போடாதே. கள்ளுக்கடையில் ஏற்பாடுசெய்து, இன்னும் இரண்டு நாள் வரையில் மயக்கம் தெளியாதபடி, போதையைவைத்துத் தாக்கச் சொன்னேன் நீங்கள் இங்கேயேயிருங்கள் கதவைத்திறந்து வைத்துவிட்டு கூட்டிக்கொண்டு போகிறேனெ" ன்று, கொத்துச் சாவியால் பூட்டை ஒரு நொடியில் நெம்பி நாகனிடத்தில் வந்து, ஓசைப்படாமல் "அண்ணேன்! என் பயல்கள் முன்னே நுழைந்து விட்டார்கள். நீயும் 'பிள்ளைகளும், காலடி சத்தப்படாமல், பூனை மாதிரிபோய், நடையைத் தாண்டிச் சோத்துக்கைப்பக்கமாய்த் திரும்பி, முத்தத்திலிருங்கள் போலீஸ் சிங்கங்களை ஆஜர்பார்த்து விட்டு வருகிறேனெ"ன்று மெதுவாய் நகர்ந்தான்.

கருநாகமும் அவனைச் சேர்ந்த மூவரும் அடிமேல் அடி வைத்துத் தட்டித் தடவிக்கொண்டு, உள்ளே போய் ஓர் மூலையில் நின்றார்கள்.

செந்தலை வரக் காணோம் ஏதோ வாசல் கதவினருகில் 'டக்' கென்று ஓர் சத்தம் கேட்டது நாகன் சந்தேகப்பட்டு, நடையில் பாயப்பார்த்தான்! மூவரும் பின்தொடர்ந்தார்கள். உடனே அவ்விட மெங்கும் பட்டப்பகல் போல் வெளிச்சமுண்டாயிற்று இருபது போலீஸ் லாந்தர்கள் கண்கூசும்படி மின்ன, வாசல்கதவிற்கிப்பால் ஐந்துபேர்களும் நடையின் கோடியில் ஐந்துபேர்களும் காணப்பட்டார்கள்; பத்துத் துப்பாக்கிகள் நாகனையும் மூவரையும் யமலோகத்திற் கழைத்தன. பாக்குவெட்டிக்குள் அகப்பட்ட பாக்கைப் போல், கருநாகமும் குட்டிப்பாம்புகளும் பெப்பேயென்றே விழித்தன "அடே! ஓங்க—செந்தலே! மோசம்—" "கத்தாதே கழுதே! செந்தலையுமில்லை கருந்தலையு மில்லை டயல்களா! போடுங்கள் கீழே துப்பாக்கி கத்தி தடி ஸப்ஜாடா தூக்கு கையைத் தலைக்கு மேலே" யென்று செந்தலை கர்ஜித்தான். பார்த்தான் கருநாகம்; மாட்டிக்கொண்டான் தொழுவில் மூச்சுவிட முடியாது; முரட்டுத் தனமாய் உயிரைத் தாரை வார்ப்பதில் பயனென்ன! பிராணனுள்ள வரையில் பயமில்லை. போட்டான் கீழே ஆயுதங்களை; மூவரும் அப்படியே போலீஸ் கபாத்துப் பழகுவது போலிருந்து. "நீட்டு கையை! மாட்டு புதுச்சேரிக் கொலுஸை! பலே! நாகா! நீ எப்போதும் புத்திசாலி செந்தலையா! ஓங்கப்பன் செந்தலை இப்போது இந்தக் கை தனிக் கோட்டு அடிக்கப் போகிறது; ரீட்டைக் கீழே விட்டேடி எப்படி! கருநாகம்! உனக்கிப்போது போவதற்கு ஒருவர் வேண்டுமென்று கேள்வி. அந்த வேலைக்கு மனுச்செய்து கொள்ளட்டுமா? பல்லக்கு வைகுண்டச் சல்லா, சிதை கொம்பு தம்பட்டம் எல்லாம் தயாராயிருக்கிறது யருக்குத் துரைவாள்! இப்போதென்ன கண்டாய்? இனிமேலல்லவா யிருக்கிறது தமாஷ்? சத்திரத்து வாசலில் நோட்டிஸ் ஒட்டினது யார்? செந்தலையோ? அவன் கோயமுத்தூர் ஸெண்டரல் ஜெயிலில் மாப்பிள்ளையாய் விளங்கினான். எலே! வைத்தி! பலே கை யல்லவா நீ! என்னை ஏமாற்றி விட்டாயோ? ஓங்கம்மா போட்டின செவ்வெண்ணையைக் கக்கு; உன் தொப்புளறுத்த கத்தி என்னிடத்திலிருக்கிறது நீயே உன் குருநாதனைக் கரையேற்றும்படி செய்வதல்லவா வேலைத்தனம்! இந்தத் தாடி மீசை கிருதா, செம்பஞ்சு முதலிய தடபுட லெல்லாம் தங்கள் யஜமானுடைய தயவுக்காகவே செட்டியாருடைய பாங்கில் ஸவரன் கொள்ளை அடிப்பதற்கல்லவா நல்லவேளை பார்த்து புறப்பட்டது! கண்ணைத் திறந்து பார் மடையா மகா கருணை பொருந்தின ஸர்க்கார் தங்களைப் போன்ற கனவான்களுக் கென்று கட்டி வைத்திருக்கும் பங்களாவல்லவா? யமபாசத்தின் நுனியில் ஆனந்தத் தாண்டவம் புரியும் வரையில், இங்கே மஹாராஜா மாப்பிள்ளையைப்போல், சகலோப சாரங்களையும் திருவுள்ளம் பற்றலாம். செல்லப்பா! ஆட்டம் எப்படி? யார் கை கெலிப்பு? இதுவரையில் பொது ஜனங்களின் சொத்துகளை ஜாக்கிரதையாய் காப்பாற்றி வைத்துக் கொண்டிருந்த இந்த டிரஸ்டிகள், அவைகளைக் கோர்ட்டாரிடத்தில் ஒப்புவிக்கப் போகிறார்கள். அடே! யாரங்கே துரைமகன்களை பள்ளியறைக்கு அழைத்துக் கொண்டு போ"வென்று மின்னல் வீராசாமி நாயக்கர்வாள் செல்லப்பையருடன் வண்டியிலேறிச் சென்றார்.

பெண் பார்க்கும் விநோதம்.

இரங்கனுதய்யர் தன் புத்திரிக்கு அதிக வயதாகிறபடியால் அதி சீக்கிரம் விவாகம் முடிக்க வேண்டுமென்று, பாரதம் ரகுநாத சாஸ்திரியை அனுப்பி, இருபது வயதுக்குள் நல்ல மாப்பிள்ளையாய்ப் பார்த்து வாரும். மாப்பிள்ளைக்குப் பணம் இஷ்டம் போல் தருவோமென்று சொல்லும் என்று அனுப்பி வைத்தார். பாரத சாஸ்திரி வழிச் செலவுக்குப் பெற்றுக்கொண்டு ஊருக் கப்பால் போகும் போது சாஸ்திரிக்கு சந்தேகம் வந்து விட்டது. உடனே திரும்பி வந்து ரங்கனுதய்யரிடம் "இருபது வயது மாப்பிள்ளை கிடைக்காவிட்டால், பத்துப் பத்து வயதில் இரண்டு மாப்பிள்ளை பார்த்து தீர்மானிக்கட்டுமா" வென்று கேட்டார். போதும் பாரத சாஸ்திரியே நீர் போகவேண்டாம் என்று நிறுத்தினார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த இன்னொருவர் பாரதத்தில் திரௌபதைக்கு பதி ஐவராச்சே என்ற எண்ணம் போலும் என்று சொல்லி நகைத்தார்.

ஒரு காக்கை கவி பாடிய கதை

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி எழுதுகிறார்:—

ஒரு நாள் மாலையில் குற்றாலத்துக் கருகே, ஒரு சிறு குன்றின் மீது ஒரு பெரிய விஸ்தாரமான ஆலமரத்தின் கிளைகளில், ஒன்றின் மேல், ஒரு காக்கை மிகவும் விசனத்துடன் உட்கார்ந் திருந்தது. அப்போது அதன் மனைவி அதன் சமீபத்தில் வந்து:— "நீ எதன் பொருட்டு விசாரப்படுகிறாய்?" என்று கேட்டது.

அப்போது ஆண் காகம் தன் பெண்டாட்டி யிடம் சொல்லுகிறது:—"இன்று காலை எனக்கு மித மிஞ்சிய தீவனம் கிடைத்து விட்டது. அளவறியாமல் உண்டு தீர்த்து விட்டேன். எனவே இப்போது வேட்டை மீது செல்லவும் மனங் கொள்ள வில்லை. சும்மா உட்கார்ந் திருப்போ மென்றால், பொழுது போக வில்லை. மற்ற ஸ்நேகிதக்காகங்கள் இன்னும் வேட்டையிலிருந்து திரும்பி வர வில்லை. அவர்கள் வந்தால் கூட்டங்கூடி வம்பளப்பதிலே பொழுது போக்கலாம். சும்மா, காற்று வழியாக சுகமாகப்பறந்து 'சுற்றிக் கொண்டு, நாலுபக்கங்களிலும் நடக்கும் வேடிக்கைகளைக் கண்டு திரும்பலாம் என்றுத்தேசம் பண்ணுமிடத்தே, சிறகு, கால். உடம்பு, தலையெல்லாம் ஒருவிதமான உளைச்சலும் கனமும் ஸஹிக்க முடிய வில்லை. ஜ்வரம் வந்து விடும் போலிருக்கிறது. தொண்டை ரணகளமாக இருக்கிறது. வலிபொருக்க முடியவில்லை. பலமான ஜலதோஷம் பிடித்திருக்கிறது. நேற்றும் முந்தின நாளும் பக்கத்துக் காடுகளிலே சரியான தீனி கிடைக்கவில்லை. ஆகையால் கிழக்கே ஜனவஸதிகளில் நெடுந்தூரம் வரை சோற்றுக்காகப் போகும்படி நேரிட்டது. இருந்தும், மாலை வரை, அரைவயிற்றுக்குக்கூட உணவு போதவில்லை. மழை, இரவும் பகலும், இடைவிடாமல் பெய்தது. கோடை மழை. அதில் மிதமிஞ்சி நனைந்து போனேன். அதனாலேயே உடம்புக்கு பலமான ஜாட்யம் வந்துகொண்டிருந்தது. அத

னுடன் இன்று காலை அஜீர்ணமும் கூடி விட்டது. இந்த நிலையில் பொழுது போக்குவதற்கு என்ன செய்வேனென்பதைக் குறித்து விசனப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றது.

இது கேட்டுப் பெண் காகம் சொல்லுகிறது:—"பலவருஷங்களுக்கு முன்பு, நீ என்னை விவாகம் செய்து கொண்ட காலத்தில் உனக்கு இவ் வுலகத்திலுள்ள எல்லா இன்பங்களைக் காட்டிலும் என்னுடன் கூடி அளவளாவிக் கொண்டிருப்பதே பெரிய இன்ப மாகத் தோன்றுகிற தென்றும், எல்லாவிதமான பொழுது போக்குகளைக் காட்டிலும் என்னுடன் விளையாடி கொண்டிருப்பதிலே, பொழுது போக்குவது தான் அதிகப் பயனுடையதும் சுவையுடையது மாக இசைந்திருக்கிற தென்றும், நீ என்னிடம் லக்ஷந்தரம் சொல்லி யிருக்கிறாய். இப்பொது என்னைப் புறக்கணித்து விட்டு, நான் பக்கத்தில் இருக்கும் போதும், பொழுது போகவில்லை யென்று என்னிடத்திலேயே அழத் தொடங்கி என்னை அவமானப் படுத்துகிறாய் நான் பல நீர்ச் சுனைகளில் நாள் தோறும் என் முகத்தைப் பார்த்துக் கொண்டு தான் வருகிறேன். நமக்குள் விவாகம் நடத்திய காலத்தைக் காட்டிலும் இப்போது என் முகம் அதிக அழகாகத் தெரிகிறதே யல்லாமல், குறைந்த அழகுடையதாகத் தெரியவில்லை. என்னுடைய ஸ்நேகிதர் களிடமும் கேட்டேன். அவர்களும் நான் இப்போது முன்னைக் காட்டிலும் அதிக அழகு வாய்ந்திருப்ப தாகவே சொல்லுகிறார்கள். உனக்கு மாத்திரம் என்னிடம் இப்படி வரும்பில்லாத அருவருப் புண்டா யிருப்பதின் காரணம் யாது?" என்று (பெண்டாட்டி) சொல்லிற்று

இதைக் கேட்ட காக புருஷன் நீ முன்னைக் காட்டிலும் இப்போது அழகில் மிகுந்திருப்பதாகச் சொல்வோர் உன்னுடைய பெண் மித்திரரோ, ஆண் மித்திரர்களோ?" என்று வினவிற்று.

"என்னுடைய ஸகிகளே அங்ஙனம் கேட்கிறார்கள். எனக்கு ஆண் ஸ்நேஹிதர் கிடையாது" என்று காகப் பேடு கரைந்தது.

இதைக் கேட்டவுடன் ஆண் காகம் சிறகுகளைப் புடைத்துக் கொண்டு, அந்த ஆலமரக் கிளையினின்றும் புறப்பட்டுத் தென்றிசையை நோக்கிப் பறந்து சென்றது. பெண்காகமும் கூடவே பறந்து சென்றது. கா கா என்று கத்திக்கொண்டு பின்னே வந்த பெண்டா

ட்டியைக் காத்து நின்று லக்ஷித்து, ஆண்காகம்:—நீ ஏன் என் பின்னே வருகிறாய்? என்று கேட்டது.

"நீ உடம்பு நோய் மிகுந்திருக்கையில் தனியாகப் போகிறாயே இடை வழியில் உனக்கு ஒரு வேளை தலைக்கிறுக்கு உண்டாய் நீ கீழே விழுந்து விடக்கூடும். அதினின்றும் உனக்கு யாதாயினும் பேராபத்து விளையக் கூடும். அவ்விதமான ஸமயங்களில் உன் பக்கத்தில் நான் இருந்தால் அவ்வித விபத்துக்களைத் தடுத்து விடக் கூடுமாதலால், நானும் உன்னுடன் வருகிறேன்" என்றுபெண் காகம் சொல்லிற்று.

"ஓ! ஹோ! என்னைக் காக்கும் பொருட்டாகவா வருகிறாய்?" என்று ஆண் கேட்டது. "ஆம்" என்றது பேடு.

"அப்படியானால் நீ வரவேண்டிய அவசிய மில்லை. எனக்குச் சிறிது நேரத்திற்கு முன் உடம்பிலே யிருந்த கடுப்பு வலியும் ஆயாஸமும் இப்போது முற்றிலும் நீங்கிப் போய் விட்டன. நான் பரிபூரணமான ஆரோக்யத்துடனிருக்கிறேன். எனக்கு வழியில் மயக்கமுந் தோன்றாது. நான் கீழே விழவும் மாட்டேன். என்னை நரி தின்னவுஞ் செய்யாது. நீ என்னைக் காப்பாற்றவும் வேண்டியதில்லை. தயவுசெய்து, வீட்டிலேயே இரு." என்று ஆண் சொல்லிற்று.

"நீ எங்கே போகிறாய்?" என்று பேடு கேட்டது.

"பக்கத்திலே விக்ரமசிங்க புறத்துக்குப் போகிறேன்" என்று ஆண் சொல்லிற்று.

"ஹோ! விக்ரமசிங்கபுரம் பாபநாசத்துக்கு ஸமீபத்தி லன்றோ இருக்கிறது? நெடுந் தூரமாயிற்றே!" என்றது பேடு.

"நான் ஒரிமைப் பொழுதில் அங்கு போய் மீண்டு விடுவேன் நீ கவலைப் படவேண்டிய அவசிய மில்லை. வீட்டுக்குப் போ!" என்று சொல்லி ஆண் வற்புறுத்திற்று.

"நீ அங்கே இந்த சமயத்தில் எதன் பொருட்டாகப் போகிறாய்?" என்று பேடு வினவிற்று.

இது கேட்டு ஆண் காகம் சொல்லுகிறது. "விக்ரம சிங்கபுரத்தில் வீரமாகாளப் புலவர் என்றொரு கவிராயர் இருக்கிறார். அவர் இந்த நேரத்திலே தமது வீட்டுப் பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளுக்கும் தமிழில் செய்யுள் கட்டும் வழிகள் கற்றுக்

கொடுக்கிறார். எனக்கு மனித பாஷை பேசத் தெரியாதே யொழிய அவர்கள் பேசுவதெல்லாம் நன்றாக அர்த்தமாகு மென்ற விஷயம் உனக்கு நன்றாகத் தெரியும்.

ஆகவே, அவர் வீட்டுக் கூரை மேலே போய் ஏறி யிருந்து கொண்டு, அந்தக் கவிராயர்சொல்லும் விஷயங்களை யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டு, அப்பால், தமிழ் பாஷையில் இருப்பது போலவே நமது காகபாஷையில் கவிதை சமைப்பதற் குரிய விதிகள் ஏற்படுத்தி நமது பாஷையைக் காவியங்களும் பாட்டுக்களு முடையதாகச் செய்யப் போகிறேன். ஸ்வ தேசாபிமானமும் ஸ்வபாஷாபிமானமும் இல்லாத காகத்தை ஒரு காக மென்று சொல்லுதல் தகுமா? அதைப் பறந்து தினி தின்று திரியும் கருஞ் சிறு பிண மென்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் குற்றாலத்துக் காட்டைப்போல் பரிசுத்தமும், மேன்மையும், செழிப்பும், எக்காலமும் அழியாத தன்மையுமுடைய காடு இந்த உலகத்தில் வேறெங்கும் கிடையாது. நமது காக பாஷையைப் போல் மாண்புயர்ந்த பாஷையுங் கிடையாது. நான் பிறந்த அளவில் இந்தக் காட்டுக்கும் இந்த பாஷைக்கும் என்னால் இயன்ற உபகாரம் செய்யுமுன்பு உயிர் துறப்பேனானால் எனக்கு நெஞ்சு வேகாது. ஆதலால் இந்தக் காகபாஷையைக்கவிதை யுடைய தாகச் செய்யும் பெருங்கடமையை நான் நிர்வஹித் திருக்கிறேன்."என்றது.

இது கேட்ட பெண்காகம் ஒரு விநாடிக்கு முன்னே காக பாஷை ஒப்பில்லாத பாஷையென்று சொன்னாய். இப்போது தமிழைப் பார்த்துத் தமிழ் வழியைத் தழுவிச் செய்யுள் சேர்ப்பதாகிய சீர் திருத்தம் செய்யவேண்டு மென்கிறாயே. எனவே, தமிழைக் காட்டிலும் குறைந்த தென்று அங்கீகாரம் செய்கிறாயா?"என்றது.

இது கேட்ட ஆண்காகம்:—"தமிழ் மனுஷ்யபாஷை. அதற்கு ஸமானமாக நமது பாஷை ஏற்படுதல் ஸாத்யப் படுமா? இதர ஜந்து பாஷைகளெல்லாவற்றைக் காட்டிலும் நமது காக பாஷை சிறந்த தென்றன்றோ நான் சொன்னேன்? சரி. நேரமாய் விட்டது. நான் போக வேண்டும். நீ வீட்டுக்குப் போ" என்றது.

அப்போது பெண் காகம் சொல்லுகிறது:—"நீ இந்த விஷயத் துக்காக விக்ரமசிங்க புரத்துக்குப் போகவேண்டாம். என்னுடன் வீட்டுக்கு வா. நான் கற்றுக் கொடுக்கிறேன். எனக்குத் தெரியும்" என்றது.

"உனக்கென்ன தெரியும்?" என்று ஆண்காகம் சற்றே சினத்துடன் வினவிற்று. "கவி பாடுதற்குரிய விதிகள்" என்றது பேடு.

"அவற்றை நீ அறிந்த தெங்ஙனம்?" என்று ஆண் காகம் கேட்டது.

பெண் காகம் சொல்லுகிறது:—"உனக்குத் தோன்றிய விருப்பம் உனக்குத் தான் முதல் முதல் தோன்றிற்றென நீ கருதியிருக்கிறாய் போலும். ஆனால் உண்மை அப்படியில்லை. என்னுடைய பிதாவும் இதே விருப்ப முடையவராக இருந்தார். ஒரு மனுஷ்யக் கவிராயர் தம்முடைய சீடர்களுக்குக் கற்றுக் கொடுக்கையிலே அவர் வீட்டுக் கூரை மேலே போய் என் பிதா போய் தினந் தோறுங் கேட்டுப் படித்து வந்தார். இப்படி ஒரு நாள் தவறாமல் ஆறு மாஸம் சென்று வந்தார். கடைசியாக இவருக்குத் தமிழ்ச் செய்யுளிலக்கணம் பிடிபட்டுப் போய் விட்டது. அப்பால் என்பிதா தமிழ்ச் செய்யுள் முறைகளை யனுஸரித்துக் காக பாஷையிலே ஒரு செய்யுளிலக்கணம் கற்பித்தார். காக பாஷையில் பாட்டுக்கள் ஆயிரம் வகைகளிலே பாடுவதற்குரிய விதிகள் ஏற்படுத்தியிருந்தார். அதை யெல்லாம் நமது காகராஜன் ஸந்நதியில் அரங்கேற்று முன்னாகவே அவர் இறந்து போய் விட்டார். ஆதலால், புதிய சாஸ்த்ரம் எங்கள் வீட்டுக்குப் புறம்பே பரவ வழியில்லாமல் போய் விட்டது. என் பிதாவுக்கு நான் ஒரு மகள் தான் பிறந்தேன். என்னைத் தவிர வேறு பெண் குழந்தையேனும் ஆண் குழந்தை யேனும் ஜனிக்கவேயில்லை. நான் பெண் ஜன்மமாதலால், ராஜஸபையில் இந்தப் புதிய சாஸ்த்ரத்தைக் கொண்டு போய் அரங்கேற்றிக் காக பாஷைக் கொரு புதிய ஒளியும் எனக்குத் தீராத கீர்த்தியும் ஏற்படுத்திக் கொள்ள இடமில்லாமல் தடுக்கப் பட்டிருக்கிறேன். அதை நான் உனக்குக் கற்றுக் கொடுக்க மிகவும் ஸம்மத முடையவளாக இருக்கிறேன். நீ என்னிடம் கற்றுக் கொண்டு ராஜ ஸபையிலே போய் அரங்கேற்றலாம். அதனால் உனக்கு ராஜஸபையில் மிகுந்த ஸம்மான முண்டாகும். உலகத்திலும் பெரிய கீர்த்தி உண்டாகும். என்னுடன் வீட்டுக்குவா; இன்று முதல், உனக்கு தினந்தோறும் இரண்டு மணி நேரம் கற்றுக் கொடுக்கிறேன். இரண்டு மாஸங்களில், ராஜாவின் ஸபையில்

உனக்கு உயர்ந்த ஸம்மானங்கள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்துவிடுகிறேன்" என்றது.

இது கேட்டு ஆண்காகம்:—"நான் குடியரசுக் கக்ஷியைச் சேர்ந்தவன். ராஜ சபையில் வாங்கும் ஸம்மானங்கள் எனக் கவஸரமில்லை." என்றது.

"சரி. அது வேண்டா விட்டாலும், நீ ஆரம்பத்தில் சொல்லியபடி உன்னாலே காக பாஷைக்கு ஒரு புதிய மஹிமையும், உனக்கு என்றுமழியாத கீர்த்தியும் கிடைக்குமன்றோ? அதற்காக வேனும் என்னுடன்வா. நான் உனக்குக் கவிதைத் தொழில் கற்பித்துக் கொடுக்கிறேன்" என்றது.

ஆண் காகம் ஸம்மதப் பட்டது. அவ்விரண்டும் தமது வீட்டுக்கு, அதாவது, தமது கூட்டுக்குத் திரும்பச் சென்று கொண்டிருக்கையிலே, அவற்றின் தலைக்கு மேலே சிறிது தூரத்தில் மன்மதன் பறந்து சென்று கொண்டிருந்தான். ஆணும் பெண்ணும் கூடி யிருக்க விரும்புமாறு வற்புறுத்த விரும்பும் இயற்கையின் சட்டைப்படிகள் போலே மேற்கு மலைச்சாரலில் சாரல் மழை தூற்றும் பருவம் அப்போது நிகழ்ச்சி பெற்றுக்கொண்டிருந்தது. மன்மத தேவனுக்கு இப்படிப்பட்ட பருவங்களில், இப்படிப்பட்ட பிரதேசங்களில் வேலை மூச்சை முட்டுமாதலால், அன்று மாலை அவன் சீக்கிரமாகவே, தன் தூணியிலிருந்த அம்புகளில் பெரும்பகுதியைச் செலவிட்டு விட்டு, ஒன்றிரண்டு தவறுதலாக அவன் மேலேயே வீழ்ந்துவிட்ட காரணத்தாலோ, வேறெக் காரணத்தாலோ—அன்று மாலையில் அவன் தன் காதலியாகிய ரதி தேவியின் ஸல்லாபத்தை வேண்டித் தன் உலகத்துக்குச் சென்று கொண்டிருந்தான். இரண்டே இரண்டு கணைகள் மாத்திரமே அவனுடைய கூட்டில் மிஞ்சி யிருந்தன. அவற்றை லீலார்த்தமாக மேலே சொல்லப்பட்ட ஆண், பெண் காகங்களின் மீது தலைக்கொன்றாக அழுத்தி விட்டுப் போனான்.

கூட்டுக்குப் போகும் முன்னமேயே ஆண் காகமும் பேடும் ஒன்றை யொன்று முத்தமிட்டுக் கொஞ்சத் தொடங்கி விட்டன. கூட்டுக்குள் நுழைந்த மாத்திரத்திலே காதல் வெறி வரம்பு கடந்து போய் விட்டது.

கவிதைத் தொழில் படிக்க வேண்டுமே யென்ற ஞாபகமே, ஆண் காகத்தின் உள்ளத்தினின்றும் எடுபட்டுப் போய் விட்டது.

காலை, சூர்யோதயம் வரை அவையிரண்டும் மதன விலாஸங்களிலே பொழுது போக்கிக் கொண்டிருந்தன.

காலையில் இரண்டும் கோரமான நித்திரைக் குட்பட்டு, மறு நாள் மாலையிலே கண் விழித்தன. சற்றே இரை தேடுமுன், அன்றைக்கும் மன்மதன் அந்த வழியே போனான். அன்றைக் கதையும் முதல் நாள் போலவே ஆயிற்று.

இங்ஙனம் நெடுநாள் நடந்து வந்தது. ஆண் காகத்துக்குக் காக பாஷையில் யாப் பிலக்கணம் சேர்க்க வேண்டுமென்பதி லிருந்த ஆவல் இல்லாமலே ஒரே யடியாக மறந்து போய் விட்டது. காகம் கவிதைத் தொழில் படிக்கவே யில்லை. மதன சாஸ்த்ரம் படிக்கத் தொடங்கிவிட்டது.

(முற்றிற்று)

ஒரு பெரிய பீரங்கி

ஜெர்மனியாருடைய 42 சென்டிமீட்டர் ($16\frac{1}{2}$ அங்குல) அவிட்சர் பீரங்கியின் வேலை விபரம்.

பீரங்கியின் கனம்	$97\frac{1}{2}$ டன்
சுற்றுப் பாகங்கள்	$41\frac{1}{4}$ டன்
பீரங்கிக் குழாய்	நீளம் 16 அடி 5 அங்
ஷை குண்டு கனம்	885 ராத்தல்
குண்டின் நீளம்	4 அடி 2 அங்
பீரங்கியின் பாகங்கள்	172
ஏற்றும் ரெயில் வண்டிகள்	12
அஸ்திவாரம்	26 அடி

லீஜ்கோட்டையை 12 மைல் தூரத்திலிருந்து தகர்த்தது.

முதற் குண்டினால் சேதமான ஜனங்கள்	1,700
இரண்டாவது ஷை ஷை	2,300
நாமூருக்கும் மாபேஜுக்கும் போட்டகுண்டு	2
பீரங்கியை வேலைக்கு தயார் செய்ய 26 மணி நேரமாகும்	
அடுத்த குண்டு சுடுவதற்கு ஒழுங்கு செய்ய	6-மணி
ஒரு குண்டின் விலை ரூ	7860
பீரங்கிக்கு வேலை செய்பவர்கள்	200

இந்த பீரங்கி வெடிக்கும்போது பக்கமிருந்தால், காது செவிடாகும். கண் ஒளி மறையும். குடல் நடுங்கும். ஆகையால் கெடுதி நேரிடாமல் காப்பாற்றத்தக்க சில கருவிகளை வேலைக்காரர்கள் உபயோகிக்கிறார்கள்.

இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை

சுதேசமித்திரன் 24-6-20

பொட்டல் புதூரிலே (20-6-20) மாலையில் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி ஒரு முஸ்லிம் ஸபையின் முன்னே, ப்ரஸங்கிக்கும் போது பாடிய பாட்டு.

அல்லா

சங்கராபரண ராகம்; திஸ்ர ஏக தாளம்

ஸ்வர வரிசைகளின் மாதிரி பின் வருமாறு:—

பல்லவி

தக்கீ, நிக்கீ, ஸஸ்ஸா.

சரணங்கள்

பஸாநிநி, நீநிநி, தாததாத, பாமகா,
பஸாநிநி, நிநிநித, தாததாத, பாமகா,
பஸாநிநி, நிநிநித, தாததாத, பாமகா,
பஸாநிநி, நிநிநித, தாததாத, ஸஸாஸாஸ—
(தக்கீ, நிக்கீ, ஸஸ்ஸா)

பல்லவி

அல்லா, அல்லா, அல்லா!

சரணங்கள்.

(1) பல்லாயிரம் பல்லாயிரங் கோடி கோடி யண்டங்கள்
எல்லாத் திசையிலுமோர் எல்லையில்லா வெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய்த தோர் நாயகன்
சொல்லாலு மனத்தாலுந் தொடொணாத பரஞ்ஜோதி (அ)

(2) கல்லாதவ ராயினு முண்மை சொல்லாதவராயினும்
பொல்லாதவ ராயினுந்தவ மில்லாதவ ராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவ ராயினும
எல்லாரும்வந் தேத்துமளவில் யம பயங்கெடச் செய்பவன் (அ)

(3) ஏழைகட்குஞ் செல்வர்கட்கும் இரங்கியருளும் ஓர் பிதா
கோழைகட்கும் வீரருக்குங் குறை தவிர்த்திடு மோர் குரு
ஊழி, யூழி, அமரராயிவ் வுலகின் மீதி லின்புற்றே
வாழ்குவீர் பயத்தை நீக்கி வாழ்த்துவீர் அவன் பெயர் (அ)

பிருகு முனிவர்

கடற் கரையில் ஒரு காலட்சேஷபம்

வசந்த காலம் பகற்பொழுது கதிரவனுக்கே சொந்தம். அன்று ஆதிவாரம் விடுமுறை நாள். எப்பொழுது மாலைப்பொழுது வருமென்றே எதிர்பார்ப்பேன். பகலில் படுத்தால் எனக்கு எப்பொழுதுமே நித்திரை வருவதில்லை. இரவில்கூட, படுத்து ஒன்று அல்லது இரண்டு மணி நேரமாகும், மனமடங்கி நித்திரை வருவதற்கு. பகலில் எப்படி தூக்கம் வரும்? கானலின் கொடுமை தாங்கமுடியாமல் கட்டிலில் சற்றே சாய்ந்தேன். அடடா! அருவிபோல், ஒவ்வொரு ரோமக்காலிலிருந்தும் ஜலம் ஓடிய வண்ணமாயிருந்தது. தலையணையும் நனைந்தது. படுக்கையும் நனைந்தது. இவ்வளவுக்கும் கையில் ஈரத்துண்டு வைத்திருந்தேன். பிரயோசனப்படவில்லை. மணி எப்பொழுது நாலாகும் என்று எதிர்பார்த்திருந்தேன். நேரம் வேண்டும் என்போருக்கு கடியாரம் வேகமாய் ஓடுவதாய்த் தோன்றும் எனக்கு நேரம் சிக்கிரம் போகவில்லையே யென்ற எண்ணம். மணி 4-க்கு நெருங்கிவிட்டது. இன்னொரு கஷ்டம்; உடல் முழுதும் மூடிக்கொண்டு போனால் தான் கௌரவம். வியர்வையைத் தாங்க ஒரு வலைப் பனியன், ஷர்ட்டு, அதற்கு மேலே ஒரு கோட்டு, இவை போதாக்குறைக்கு அங்கவஸ்திரம், தலைக்குட்டை, இவ்வளவு பாரத்தையும் ஏற்றிக்கொண்டு மெதுவாக பிராட்வே நமது ஷாப்புக்கு வந்தேன். சிநேகிதர்கள் சிலர் வருவார்கள். முதலாவது சௌந்தரராஜனும் துரைசாமி முதலியாரும் வந்து சேர்ந்தார்கள். பிறகு காப்பி ஓட்டலுக்குப் போனோம். அங்கேயும் நான் எதிர்பார்த்த கிருஷ்ணராயரும் வந்து சேர்ந்தார். ரவுண்டு மேஜையைச் சுற்றி சொகுசாய்--கஷ்டந்தெரியாத செல்லக் குழந்தைகளாய்--நாற்காலிகளில் உட்கார்ந்தோம். இங்கே ஜாதிவித்தியாசம் கிடையாது. பல வருணத்தார்களும் வருவார்கள். இதர

மதத்தில் சேர்க்க இந்து மதஸ்தர்களுக்கு சடங்கு செய்விப்பது போல், வைதீகராயுள்ளவர்களை நாகரீகமாய்ச் செய்வதற்கு காப்பி ஓட்டல் தான் சரியான விடம். எல்லோரும் எச்சல் பண்ணித்தான் சாப்பிடுவார்கள். சிறு கரண்டியில் பதார்த்தத்தை யெடுத்து உதடு தாண்டிப்போய் வரும். ஜலம் அருந்தினாலும், காப்பி சாப்பிட்டாலும், வாய்க்குள் வைத்துத் தான் சாப்பிடுவது வழக்கம். இது தான் நவீன, நாகரீகம். சென்னை வாசிகளுக்கு இது சகஜம். தென் தேசத்தாருக்கு இது ஒரு விநோதமாயிருக்கும். ஏனென்றால் சமீபத்தில் திருச்சினாப்பள்ளிக்குப் போயிருந்தேன். மாலையில் வழக்கம்போல் ஒரு காப்பி ஓட்டலுக்குப் போனேன். கப், சாசர், கரண்டி யொன்றுமில்லை. காப்பி சாப்பிடும்போது டம்ளரை வாய்க்குள் வைத்துச் சாப்பிட்டேன். "ஐயா! இது பட்டணமல்ல டம்ளரைத் தூக்கிச் சாப்பிடுங்கள்" என்றார். உடனே தூக்கிச் சாப்பிட்டேன். எச்சல் பண்ணிச் சாப்பிடுவது குற்றமென்று எனக்குத் தானா தெரியும்? எல்லோருக்கும் தெரியும். இது தெரிந்து செய்கிற குற்றம். நிற்க, நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது இரண்டு சிநேகிதர்கள் எங்கள் பக்கத்தில் உட்கார்ந்தார்கள். உடனே உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்டான். இருவரில் ஒருவர் எனக்கு எல்லாம் இலையில் கொண்டுவா என்றார். ஓகோ! நீங்கள் வைதீகமோ என்று சிநேகிதர் சொல்லிக்கொண்டு, "காப்பிகூட அப்படியே" என்றார். எங்களுக்கு சிரிப்பு வந்துவிட்டது, எல்லோரும் சிரித்தோம். சாப்பிட்டு முடிந்தது. நாலுபேர்களும் சாப்பிட்ட செலவு 9 அணா என்று எழுதிக்கொடுத்தான். பணத்தைக்கொடுத்து வெளியே வந்தோம். மணி ஐந்தடித்தது. எல்லோரும் கடற்கரைக்குப் போனோம். மற்ற நாட்களைவிட ஞாயிறன்று கூட்டமதிகம். நாங்களும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்தோம். வெற்றிலைபாக்கு போட்டுக்கொண்டோம். இதமான தென்றலும், நறுமணங்கமழும் தாம்பூலமும் எங்களுக்குக் குதூகலத்தைத் தந்தன. சௌந்தரராஜன் உம்—என்று இழுத்தார். ஒருவர்—ஒரு பாடல்—என்றார்.

"இனியே தமக்கருள் வருமோ வெனக்கருதி
யேங்குதே நெஞ்சமையோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே

ஆனியாயமாயிந்த உடலையா னன்று வரு
மந்தகர்க் காளாகவோ
ஆடித்திரிந்து நான் கற்பதுங் கேட்டது
மவலமாய்ப் போவனன்றோ
கனியேனு மரிய செங்காயேனு முதிர்சருகு
கந்த மூலங்களேனும்
கனல்வாதை வந்தெய்தி அள்ளிப்புசித்து நான்
கண்மூடி மௌனியாகி
சும்மா யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமி நீ அறியாததோ
சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே."

"பேஷ்! பேஷ்!!" என்று சந்தோஷமாய் ஒருவர் ஆரவாரம் செய்தார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அழகான ஒரு சிறு பெண்ணும் சிரித்தாள். சிரித்தது மாத்திர மன்றி, எங்களை யெல்லோரையுமே பார்த்தாள். அக்கம்பக்கத்திலுள்ள அத்துணைபேரும் அப்பெண்மணியைப் பார்த்தார்கள். மேலும், அச்சிறுமி தனிமையாய் உட்கார்ந்திருந்தாள். எங்களுக்கு ஆச்சரியமா யிருந்தாலும், கவனியாதது போல கடல் முகம் பார்த்து வேறு விஷயமாய் பேச ஆரம்பித்தோம். ஒவ்வொருவர் மனதிலும் புதிய விஷயம் புகுந்திருக்கிறது. தெரிந்து கொள்வதற்கும் இது சமயமல்ல. ஆனால், சௌந்தரராஜன் மாத்திரம் கம்பீர புருஷன் போல ஜாடையாய்ப் பார்த்து புன்னகை கொண்டார். எங்களுக்குத் தெரிந்தவர்கள் ஐந்தாறு நபர்கள் எங்கள் பக்கத்தில் பாட்டைக் கேட்க வந்து உட்கார்ந்தார்கள். சௌந்தரராஜனுக்கு நல்ல சாரீரம். ஒருவன் "நல்ல பெண்தாண்டா" வென்றான். "அதற்கென்னடா!" வென்றான். இன்னொருவன் இப்படி அப்பெண்மணியைப் பற்றி விநோதமாகப் பேசினார்கள். "அடே உன்பாட்டுக்கு அந்தப்பெண் கூட சர்ட்டிபிகேட் கொடுத்து விட்டாள் இனி யொன்றும் தேவை யில்லை" என்றான். இப்படிப் பலரும் பலவிதமாய், வேடிக்கையாய் விநோதமாய், கடற்கரைக்கு வந்திருந்த ஸ்திரீ புருஷர்களைக் குறைத்தும் கூடுதலாகவும் பேசிப் பேசி

சந்தோஷித்தார்கள். எனக்கு மாத்திரம் ஒரு சந்தேகம். சௌந்தரராஜன் கொஞ்சங்கூட சிரிக்கவேயில்லை. இப்படியிருக்கும்போது "ராயர்வாள்! காலட்சேபம் நடக்கட்டுமே" யென்றார். அதற்கு நானும் "ஆமா சார்—ஒருகதைசொல்லுங்கள்" என்று தீர்மானத்தை ஆமோதிப்பது போல் சொன்னேன். "ஆகா! இப்பொழுது உங்களை யெல்லாம் பார்த்தவுடன் ஒரு கதை ஞாபகத்துக்கு வந்து விட்டது" என்றார். இராயர் கதை சொன்னால் சொல்லுக்குச் சொல் சிரிப்பை யுண்டாக்கும். சிறுகதை தான் சொல்லுவார். வாயும் வலிக்கும் வயிறும் புண்ணாகும். ஆகையால் "சார் நீங்கள் நீண்ட கதையாய்ச் சொல்லுங்கள்" என்று சொன்னேன். உடனே "நீங்கள் நீண்ட கதை வேண்டாம், கதை நீளமாயிருக் கட்டுமெ"ன்று சொற்களை சுத்தப்படுத்திப் பேசும் சுந்தரம் பிள்ளை சொன்னார். பேச்சு பெருகுமென்று நான் மௌனமாயிருந்தேன். இராயரும் கதையைச் சொல்ல ஆரம்பித்தார். எல்லோரும் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தோம். சௌந்தரராஜன் மாத்திரம் நாலு பக்கமும் பார்த்துக் கொண்டு கதையையுங் கேட்பது போலிருந்தார்.

"நான் சொல்லப் போகும் கதை எந்தக் காலத்திலோ நடந்தது. என்றாலும், நன்றாய்க் கேளுங்கள். கலியுக ஆரம்பமென்று சொல்லுவார்கள்" என்றார். எங்களில் ஒருவர் "எங்களுக்குக் காலத்தை யெல்லாம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டு மென்ற அவசியமில்லை. கதை தான் முக்கியம்" என்றார்.

"இந்தியாவில் ஹிமால்யத்திலே பிருகு முனிவர் வெகுகாலமாய் தபஸ் செய்துக் கொண்டிருந்தார். வருஷக்கணக்காய் கந்த மூலாதிகளைப் புசித்து வந்ததால், உடல் மெலிந்திருந்தாலும் ஊக்க முள்ளவர். பூவுலகிலுள்ள அநித்தியர்கள் அவத்திலே கழிக்குங் காலத்தை தவத்திலே கழிக்காமல், வாழ்நாளை வீணுக்குகின்றனரே, விஷயசுகமே பெரிதென நினைக்கின்றனரே, யென்று வெகுவாய் துக்கித்தார். தரணியில் தன்னை யறிந்தவரில்லையா? தவக் கோலங் கொண்டவரே பவக்கடலைத் தாண்டலாம். இப்படியும உலகம் இருக்குமா. ஒவ்வொரு புருஷனும் ஒரு ஸ்திரீயோடிருந்து காலங் கழிக்கிறதைப் பார்த்தும், விடபுருடர்கள் ஸ்திரீகளைப் பார்ப்பதிலும், அவர்களை வர்ணிப்பதிலும், இப்படியே காலத்தை வீணாய்க் கழிக்கின்றனரே யென்று துக்கங்கொண்டவராய் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவிடம் போய்ச் சொல்லியாவது, ஜனங்களை ஞான மார்க்கத்தில் திருப்ப வேண்டுமென்று எண்ணங் கொண்டவராய் பிரம்மலோகம் போய்ச் சேர்ந்தார்.

(இன்னும்வரும்)

தாஸியும் செட்டியும்

(ஒரு சிறு கதை).

ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி எழுதியது.

முதல் அத்தியாயம்.

கலிங்க ராஜ்யத்திலே

முன்னொரு காலத்தில், கலிங்க தேசத்து ராஜதானியாகிய கடக நகரத்தில் வல்லப ராஜன் என்ற வேந்த னொருவன் அரசு செலுத்தி வந்தான். அவன் தனக்கு வரும் அரசிறையில் ஒரு பகுதியை "தாஸீ நிதி" என்றொரு தனி நிதியாகப் பகுத்து வைத்தான். கோயில் நிதி, கல்வி நிதி, ராணுவ நிதி, விவசாய நிதி, தொழில் நிதி முதலிய மற்றெல்லா நிதிகளைக் காட்டிலும் அவ்வரசன் அந்த தாஸீ நிதிக்கு அதிகத் தொகை ஏற்படுத்தினான். அந்த நிதிக்குத் தான் செலவும் அதிகம். வருஷத்துக்கு சுமார் நூறு, நூற்றிருபது தாஸிகளுக்குக் குறையாமல் அந்த ராஜா விலைக்கு வாங்குவது வழக்கம். அவர்களுக்குத் தன் அந்தப்புரத்தில் தனித் தனி வஸதிகள் செய்து கொடுத்தான். அவன் பட்டத்துக்கு வந்து பதினாறு வருஷங்களாயின. இது வரை சுமார் ஆயிரத்தெண்ணூறு தாஸிகள் அவன் அந்தப்புரத்தில் சேர்த்து விட்டான்.

தசரதன் அறுபதினாயிரம் ஸ்திரீகளை மணம் புரிந்து கொண்டதாகவும், துருக்கி ஸுல்தான்களில் பலரும் இந்தியாவில் பல நவாபுகள், ராஜாக்கள், நிஜாம்கள், திவான்கள் முதலியோர்களும் ஆயிரக்கணக்கான பெண்களை அந்தப்புரங்களில் சேர்த்து வைத்திருந்ததாகவும், புராணங்களிலும், சரித்திரங்களிலும், நவீன நடைகளிலும் அறிகிறோம்.

இதென்னடா சுத்த மோசமான வேடிக்கை! ஆயிரம் பெண்டாட்டிகளை வைத்துக் கொண்டு ஒரு மனிதன் எப்படிக் குடித்தனம் பண்ணுவான் என்பதை நினைக்கும்போது, எனக்குப் பெரிய வியப்புண்டாகிறது.

ஒரு பெண்டாட்டியை வைத்துக்கொண்டு காலந் தள்ளுவது பெரும்பான்மையான ஜனங்களுக்குப் பெரிய கஷ்டமாக இருக்கிறது. அப்படியிருக்க நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் மனைவியரை ஒருவன் கட்டியாளத் துணிவு கொண்டதை என்னுமிடத்தே, எனக்கு நகைப்பும் துயரமும் கலந்து விளைகின்றன. இது நிற்க.

ஒருநாள், மேற்கூறிய வல்லபராஜன் கொலுவில் ஒரு கிழப் பிராமணன் இரண்டு அழகிய, இளமையுடைய தாஸிப் பெண்களை அழைத்துக் கொண்டு வந்தான். இது வரை அந்த ராஜா விலைக்கு வாங்கிய பெண்களை யெல்லாம் ஸாதாரண வயிரங்களுக்கும், மற்ற மணிகளுக்கும் ஒப்பிடலாமெனில், இவ்விரண்டு பெண்களையும் கீர்த்தி பெற்ற "கோஹினூர்" (ஒளிக்குன்று) என்ற ராஜ வயிரத்துக் கொப்பிடலாம். இவர்களை நோக்கி அவ்வரசன அளவில்லாத மகிழ்ச்சி படைத்தவனாய்:—"இவர்களுக்கு விலையென்ன சொல்லுகிறீர்?" என்று கிழ பிராமணனிடம் கேட்டான்.

"மூத்த பெண், மோஹனாங்கிக்கு விலை ஒன்பதினாயிரம் பொன். இளையவளாகிய வனிதாங்கிக்கு விலை பத்தாயிரம் பொன்." என்று பார்ப்பான் சொன்னான்.

இக்காலத்தில் சிலர் பல தேசத்துத் தபால் முத்திரைகள் சேகரித்து வைப்பது போல், அந்த ராஜா தாஸிகளைச் சேர்த்து வைத்துப் பழகி, அந்தத் தொழிலில் கை தேர்ந்தவனாய் விட்டபடியால் தாஸிகளுக்கு விலைநிர்ணயம் பண்ணுவதில் அவன் மஹாநிபுணனாயினான். ஆதலால், இப்பெண்களுடைய உண்மையான அருமை யுணராமல், அந்த நாட்டுப்புறத்து பார்ப்பான் இத்தனை ஸௌந்தரமான மாதருக்கு இத்தனை குறைந்த விலை சொல்வதைக் கேட்டுக் களிப் பெய்தியவனாய்த் தன் காரியஸ்த னொருவன் மூலமாகப் பொக்கிஷத்தினின்றும், அந்த க்ஷணமே இருபதினாயிரம் பொன் கொண்டு வரும்படி செய்து பிராமணன் கேட்டபடி விலை பத்தொன்பதினாயிரம் பொன்னும், அவனுக்கு இனாமாக ஆயிரம் பொன்னும் கொடுத்து, மேலே ஜரிகை சால்வை, வயிரக் கடுக்கன், வயிர மோதிரம் முதலிய வரிசைகளும் கொடுத்து, அந்த பிராமணனை மரியாதை பண்ணி அனுப்பிவிட்டு, தாஸிப்பெண்களிருவரையும் அந்தப்புரத்திலே சேர்ப்பித்து விட்டான்.

பிறகு, அந்தப் பார்ப்பான் அரசனிடமிருந்து வாங்கிய இருபதினாயிரம் பொன்னையுங் கொண்டு, தன் பிறப்பிடமாகிய—நாகபுரத்துக்கு ஸமீபத்திலுள்ள—கிராம மொன்றுக்குத் திரும்பிப் போய், அங்கு, மேற்கூறிய வேசைப் பெண்களை விலைப் படுத்தி வரும்படி தன்னிடம் ஒப்புவித்த தாய்க் கிழவியிடம்:—"உன் பெண்களைத்

தலைக்கு மூவாயிரம் பொன் விதம் விற்றேன். ஆறாயிரம் பொன் கிடைத்தது. அதில் ஆயிரம்பொன் எனக்குத் தர கெடுத்துக்கொண்டேன். மிச்சம் ஐயாயிரம் பொன்னை உனக்குக் கொடுக்கிறேன்.'' என்று பொய் சொல்லி அவளிடம் ஐயாயிரம் பொன்னைக்கொடுத்து, மிஞ்சிய பதினையாயிரம் பொன்னையும் தன் கையில் அழுத்திக்கொண்டான். கலிங்க நாட்டு நிலை யறியாதவளாகிய அந்தத் தாய்க் கிழவியும், தன் பெண்களுக்கு இத்தனை உயர்ந்த விலை கொண்டு வந்த பிராமணனிடம் மிக நன்றியுணர்வுடையவளாய், அவனுக்கு ஒரு பசு மாடும், இரண்டு பட்டுக்கரை வேஷ்டிகளும், ஒரு பொற் கிண்ணமும் தானம் பண்ணினாள். இது நிற்க.

கலிங்க தேசத்தில் வல்லப ராஜன் தன் அந்தப் புரத்திலுள்ள ஆயிரத் தெண்ணூறே சில்லரை மாதர்களைக் காட்டிலும் லளிதாங்கியிடம் அதிக மோஹப் பைத்தியங் கொண்டு விட்டான். அரசன் இங்ஙனம் லளிதாங்கிக்கு அடிமையாய் விட்டதினின்றும், ராஜ்யத்தில் லளிதாங்கி இட்டதே சட்டமாய் விட்டது. இதினின்றும் அந்த வேசைமகள் பொருள் சேர்ப்பதையே பெரிய வெறியாகக் கொண்டு ராஜ்யத்தைச் சூறைவளிக் கொள்ளை யிடத்தொடங்கி விட்டாள். மந்திரி உத்யோக முதல் வீதி பெருக்கும் சக்கிலி உத்யோகம் வரை, ராஜ்யம் முழுதிலும், யாருக்கு எந்த வேலை வேண்டுமானாலும், லளிதாங்கிக்கு லஞ்சம் கொடுக்காதவரை, அந்த வேலை கிடைக்காது. பாடகர், நாட்டியக்காரர், வாத்யகாரர், குஸ்தி செய்வோர், கவிராயர், நாடகக்காரர், மந்திரவாதிகள், வித்வான்கள், விகடகவிகள், கனபாடிகள், கூத்தாடிகள்,—ராஜாவிடம் ஸம்மானம் வாங்கும் பொருட்டு யார் வந்தாலும், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஸம்மானத் தொகைகளில் மூன்றி லொரு பங்கு லளிதாங்கிக்குக் கொடுப்பதாக முதலாவது ஒப்புக்கொண்டா லொழிய, அரண்மனையில் அவர்களுக்கு மூன்று காசுகூடக் கிடைக்க வழி யில்லாமல் போய்விட்டது.

வியாபாரிகளிடமும் தொழிலாளிகளிடமும் அவள் கொள்ளையிட்ட திரவியங்களுக்குக் கணக்கே யில்லை. மேலும், ராஜாங்கத்தின் ஸாமான்யத் தீர்வைப் பணத்திலும் பாதிக்குக் குறையாமல் அவள் தனக்குப் புதிய புதிய ஆபரணங்கள் பண்ணுவதில் செலவிட்டுக் கொண்டு வந்தாள். அந்த வல்லப ராஜனுக்கு நீதி சிகாமணி என்ற மந்திரி யொருவன் இருந்தான். அவன் அரசனுடைய நடைகளை யெல்லாம் கண்டு, மிகவும் மனம் நொந்து, பலமுறை கெஞ்சியும் இடித்துச் சொல்லியும் அரசனைச் சீர்திருத்த முயன்றான். ஆனால், மஹா மூடனாகிய வல்லப ராஜன் தன் மந்திரியின் உயர்ந்த சற்போதனைகளைச் செவி கொடுத்துக் கேட்கவே யில்லை. இதினின்

றும், அந்த மந்திரி நிராசை கொண்டவனாய்ப் பின் வருமாறு தன் மனதுக்குள்ளே யோசிக்கலானான்:—

"ஆஹா, இந்த அரசு நிச்சயமாகவே அழிந்து போய்விடும். அது உள்ளங்கை நெல்லிக்கனி போலவும், பசுமரத் தாணிபோலவும் விளங்குகிறது. மூடனாகிய வல்லபன் நாம் எவ்வளவோ இடித்திடித்துச் சொல்லியும் கேளாமல், லளிதாங்கியின் மோஹ வலையில் வீழ்ந்து நாட்டைப் பெரும் பாழாக்குகிறான். நாட்டிலே பஞ்சமும், பிணிகளும், கொள்ளைகளும் தலைவிரி கோலமாகக் கூத்தாடுகின்றன. எந்தத் திசையிலும் நமக்குக் கடன் கொடுப்பாரில்லை. நாட்டுப் பொக்கிஷத்திலே காசென்ற லேசமே கிடையாது. தேசத்தை லளிதாங்கி யொருத்தி யிருந்து அட்டை உறிஞ்சுவது போலே உறிஞ்சுகிறாள். ஜனங்களைப் பஞ்சத்தின் வாயினின்று மீட்க வழியே யில்லை. சோறில்லாதவர்கள் கலகந் தொடங்குவார்கள். சென்ற சில மாஸங்களாக உள் நாட்டுப் போர் தொடங்குவதற் குரிய சூழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிப்பட்டுக் கொண்டு வருகின்றன. இது வரை வெளிப்படாத சூழ்ச்சிகள் இன்னும் எத்தனை இருக்கின்றனவோ, கடவுளுக்குத் தான் தெரியும். இந்த ராஜ்யத்தைக் கவிழ்க்கும் பொருட்டாகச் செய்யப்படும் வேறு சில சூழ்ச்சிகளைப் பற்றி நமக்கு உளவுகள் தெரிந்தாலும், நம்மால் அடக்க முடியாதபடி அவை அத்தனை வலியவரால் நடத்தப்படுகின்றன. இந்த அரசனுடைய நெருங்கிய சுற்றத்தார்களிலேயே சிலர் இவனுக்கு நாசந் தேடுகிறார்கள். நாமென்ன செய்யலாம்? நாமே இந்த அரசனுக்கு முக்ய பலமாக இருப்பதை யுணர்ந்து இவனுடைய விரோதிகளிற் பலர் முதலாவது நம்முயிரைப் போக்கி விட ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இனி, இந்த நாட்டில் இருந்தால் நமதுயிருக்குச் சேதம் விளைவது திண்ணம். இந்த நாட்டின் பல திசைகளிலும் ஒன்று, பத்து, நூறு ஆயிரமாக நமக்குக் கிளைத்து வரும் சத்துருக்களனைவரிலும் அதி பயங்கரமான சத்துரு லளிதாங்கி. லளிதாங்கியின் பகை யென்றால் பிசாச லோகம் முழுதும் பகை யாவதற் கொப்பாகும். இவளுடைய கையாட்கள் எந்த இடத்தில் நம்முடைய விழிகளில் அக்னித் திராவகத்தை ஊற்றுவார்களோ? எந்த இடத்தில் நம்முடைய [illegible] விஷந் தோய்ந்த கத்தியால் அறுப்பார்களோ? எந்த நிமிஷத்தில், எங்கே, நம்முடைய சிரம் துண்டிக்கப்படுமோ? எங்கே, எந்த ஸபையில், எந்த விருந்தில், எந்த நேரத்தில் நம்மை விலங்கிட்டுக் கொண்டு போக ஏற்பாடு செய்வாளோ? எங்கே, நம்மைச் சித்திரவதை புரிய

ஏற்பாடு செய்வாளோ?'' என்று பலவிதமாக யோசனைபண்ணி, ஓரிரண்டு தினங்களுக்குள்ளே தனக்குறிமையான நகைகளையும்பணங்களையும் எடுத்துக்கொண்டு, ரஹஸ்யமாக இரவிலேயே புறப்பட்டுத் தன் குடும்பத்தாருடன் காசிக்குப்போய்விட்டான்.

காசிக்குப் போய்ச் சேர்ந்த பிறகு, தைர்ய மடைந்தவனாய்த் தான் புறப்பட்டு வந்ததற் குரிய காரணங்களை யெல்லாம் விஸ்தாரமாக எழுதி வல்லபராஜனுக் கோர் ஓலை விடுத்தான்.

வல்லப ராஜனுக்கு ஷை நீதி சிகாமணி யென்ற மந்திரி ஒருவனே முக்கிய பலமாக இருந்தான். அவனைத் தவிர ஒருயிர் கூட வல்லப ராஜன் மீது இரக்கஞ் செலுத்த வில்லை. நாட்டார் அனைவரும் அவனையும் லளிதாங்கியையும் ஒழித்து விட வேண்டு மென்ற எண்ணங் கொண்டிருந் தார்கள். எனவே மந்திரி நாட்டை விட்டோடிய பின் ஒரு வாரத்துக்குள் தேசத்தில் பெருங் கலகம் விளைந்தது. ஜனங்கள் வல்லப ராஜனை ராஜ்யத்தி னின்றும் நீக்கி அவனுடைய தாய பாகஸ்தனாகிய மற்றொருவனைப் பட்டத்துக்கு வைத்தார்கள். அப்போது வல்லப ராஜன் ஒரு வாளால் தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டு மாய்ந்தான்.

குலத் தொழிலிலே சித்தம் இயல்பாகப்பாயும். ஆதலால் வல்லப ராஜன் மடிந்த வுடன் மோஹனாங்கியும் லளிதாங்கியும் தத்தம்உடைமைகளை யெடுத்துக் கொண்டு கலிங்கராஜ்யத்தி னின்றும் தப்பியோடிப் போய் பிற நாடுகளுக்குச் சென்று, அங்கு தம்முடைய பரம்பரைத் தொழிலாகிய வேசைத் தொழிலையே நடத்த வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். மோஹனாங்கியிடம் லக்ஷகணக்காகவும், லளிதாங்கியிடம் கோடிக்கணக்காகவும் திரவியங்களிருந்தன. கலிங்கநாடு பஞ்சத்தினால் அழிய அதன் செல்வத்தின் பெரும் பகுதியை இவ்விரண்டு தாசிகளும் வாரிக்கொண்டு போயினர். மோஹனாங்கி காசிக்குப் போய் அங்கு ஹரிச்சந்திர மஹாராஜன் சந்திரமதியை விலை கூறிய கடைத்தெருவிலே ஒரு பெரிய மாளிகை கட்டிக் கொண்டு, அங்கு வேசைத் தொழில் புரிந்து வந்தாள்.

இளையவளாகிய லளிதாங்கியின் சரிதையை அடுத்த அத்யாயத்தில் விஸ்தாரமாகச் சொல்லுகிறோம்.

(இன்னும்வரும்)

இல்ட்சுமி காந்தன்

ரோச மென்னும் சக்தி யுதிக்க, வீர மென்னும் ஆடை யணிந்து, கம்பீர மென்னும் ஆயுதங்கொண்டு, எண்ணிய வண்ணம் வாழ்கின்ற ஒரு சீமானின் சரிதை.

கதாரத்னாகரம் பத்திராதிபர் எனது நேசர். நான் பட்ட பாட்டைச் சொன்னேன், உற்சாகமாய்க் கேட்டார். பத்திரிகையில் வெளியாக்க அனுமதி தர வேண்டும் என்றார். எனக் கது உசிதமாய்த் தோற்றவில்லை யாகையால் சிந்திக்கலானேன். முடிவில் வெளியிட வேண்டா மென்று சொல்லிவிட்டேன். அதற்கவர் சிரித்துக் கொண்டு "எனக்கு சாராம்சம் தான் வேண்டும், ஊரையும் பெயரையும் மாற்றி அழகு படுத்தி வெளியாக்கி விடுகிறேன்'' என்றார். நானும் அநேக நாவல் படித்திருக்கிறேன். பின்னும் யோசித்து, அப்படியானால் நானே எழுதித் தருகிறேனென்றேன். இப்படிச் சொல்லி ஒரு வருஷமாயிற்று. இப்பொழுது "கதாரத்னாகரம்'' பலத்த அஸ்திவாரத்தோடு ஸ்திரமாய் நடைபெற, வேண்டிய பொருப்பை, சமஸ்தானமாய் விளங்கும் 'சுதேசமித்திரன்' ஏற்றுக் கொண்டிருக்கிறபடியால், நானும் எழுதி அனுப்பியிருக்கிறேன். கஷ்டப்பட்டும் கடைசியில் சுகமாயிருக்கிறேன். அதைப்போல, நம் பாரத மக்கள் 'துணிவு' என்னும் தோணி பற்றி விடா முயற்சியெனும் சுக்கானைப் பிடித்து அக்கரையாய்ப் பாடுபட்டால் அக்கரை சேர்வது நிச்சயம். எல்லாம் வல்ல கடவுள் துணை செய்வாராக.

முதல் அதிகாரம்

திருச்சினாப்பள்ளியில் சுண்ணாம்புக்காரத் தெரு நவநீத கிருஷ்ண முதலியாருடைய புதல்வன் யான். எனது பிதாவுக்கு விசேஷ நில பலமும், ரொக்கமும் உண்டு. எனது சகோதரன் சந்தான கோபாலகிருஷ்ணன் எனது பிதாவின் தொழிலைக் கவனித்து வந்தார் எனக்கு இளமைப் பருவத்திலேயே விவாகம் நடந்தது 5வது பாரத்தில் படிக்கும்போது என் மனைவி புஷ்பவதியானாள். என்னை எல்லோரும் புத்திசாலி, நன்றாய்ப் படிக்கிறான் என்று புகழ்ந்

து பேசுவது வழக்கம். மறுவருடம் மெட்ரிகுலேஷன் வகுப்புக்கு மாற்றப்பட்டேன். உரவினர் சாந்தி முகூர்த்தம் நடத்திவிடவேண்டுமென்று என்பெற்றோரிடம் சொன்னார்கள். என்பிதா சம்மதிக்கவில்லை. மெட்ரிகுலேஷன் பாஸ் பண்ணிய பிறகு பார்த்துக் கொள்வோமென்று சொன்னார். அதற்கு" அவன் கெட்டிக்காரன் பரீக்ஷையில் தேறிவிடுவான் அதற்கு மிதற்கும் என்ன சம்பந்தம். என்று சொன்னார்கள், அப்படியல்ல படிப்பிலே ஊக்கம் குறையும் என்றார். கட்டாயம் நடத்தி விட வேண்டுமென வற்புறுத்திச் சொல்ல முகூர்த்தமும் நடந்தது. என்பிதா சொன்னது போலவே, பரீக்ஷையில் தவறிவிட்டேன். அசாத்யமான கோபம் எனது பிதாவுக்கு வந்துவிட்டது என்ன செய்வேன். ஒன்றும் பதில் சொல்லுவதற்கில்லையே' நானும் அப்படித்தான்—பாடமேது படிப்பேது என் மனைவியின் பெயர் லக்ஷ்மி. லக்ஷ்மி விலாஸத்தில் தங்கிவிட்டேன். மறுவருடம் கவலையாய், கவனமாய்ப் பாடங்களைப் படித்தேன் நான் வீட்டுக்குப் போனால் எனது பிதா தேள் கொட்டுவது போல் வெடுவெடு வென்று வெகு கோபங் காட்டி வெருத்துப் பேசுவார். பள்ளிக் கூட பரீக்ஷையில் முதலில் தேறினேன். சர்க்கார் பரீக்ஷைக்கு என்னையும் சேர்த்துக் கொண்டார்கள். பணங்கட்ட வேண்டும். நாலைந்து நாளில் செலுத்துவோ மென்றிருந் தேன் ஆனால் எங்கப் பாவுக்கு அளவுக்கு மிஞ்சின கோபம் கூடாது தான். இப்பொழுது அவர் பரம சாதுவாய் தங்கக் கம்பி போலாய்விட்டார். நான் ஒரு நாள் சந்திரோதயமான இரவில் நானும் லக்ஷ்மியும் பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுதுதான் எங்கப்பாவும் வீட்டுக்குள் வந்தார்கள். "தடிப்பயல் எங்கே? படிக்க வில்லையா?" என்று என் தாயைக் கேட்டார். அவள், "மெத்தையிலிருக்கிறான்" என்றாள். நாங்கள் பேசுங்குரலும் சற்றே கேட்டு விட்டது. "என்ன செய்யலாம். இந்தப் பயலை, படி படி என்றால், பெண்சாதிகூட பேச்சுப் படிப்புதானே அதிகமாய் விட்டது. சம்பாதிச்சு சம்பாதிச்சு சேர்த்து வைக்கிறேன், தடிப்பயலுக் கென்ன தெரியும். பணத்தை வாங்கி பள்ளிக்கூடத்துக்கும், பல செலவுக்கும் கொட்டிக் கொடுக்க வேண்டிய தாகிறது. நாளைக்கும் வீட்டிலிருந்து கொண்டு—குலாவிக் கொண்டு—செலவு செய்வான். எங்கே அவன்? என்றார். என் தாயார் பொறுமையில் பூமிதேவி. எங்கப்பாவுக்கு கோபம் வந்துவிட்டால் நடுங்கிப் போவாள். பயந்து பயந்து நடப்பாள். அவள் வாய்திறக்க வில்லை. ஓயாமல் என்னைக் காணும் போதெல்லாம் 'படி, படி' என்றால் என்ன செய்கிறது தினந்தோறும் தேள் கொட்டுவது போல என் மனதைக் குத்திக்கொண்டே யிருந்தால்,—புண்ணாய்விட்டது. சகிக்கமுடியவில்லை. என்மீது எள்ளளவு அன்பு கூட இராது.

(இன்னும்வரும்)

SEP MADRAS

லோகமான்ய பாலகங்காதர திலகர்

உ

கடவுள் துணை

14 SEP 1920

KATHA கதாரத்நாகரம் RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்

—ஔவை குறள்

Vol. 3. தொகுதி 3.	August, 1920 1920-ம் வருஷம் ஆகஸ்டுமீ	No. 3. பகுதி 3.

உ

திருச்சிற்றம்பலம்.

1. மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார்கழற் கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி யுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி
சயசயபோற்றி யென்னுங்,
கைதா னெகிழ விடேனுடையா யென்னைக்
கண்டு கொள்ளே.

2. கொள்ளேன் புரந்தான் மாலயன் வாழ்வு
குடிகெடினும்
நள்ளே னினதடி யாரொடல்
லால ரகம்புகினும்
என்றேன் றிருவரு ளாலே யிருக்கப்
பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல்
லாதெங்க ளுத்தமனே.

—திருவாசகம்.

11. ஞானம் என்றால் தெளிந்தபுத்தி—நுட்ப அறிவு, அன்பின் பெருக்கு.

12. மனிதனுக்கு ஆறு அறிவு. ஓரறிவுள்ள பிராணி, ஈரறிவுள்ள பிராணி, இவ்விதம் ஐவகையுண்டு.

13. மனிதருக்குள்ள ஆறாவது அறிவுதான் பகுத்தறிவு.

14. ஒன்றைப் பிறிதொன்றாய்க் காட்டும் மாய உலகம் இது. ஆகையால் விஷயசுகத்தில் துக்கம் உண்டாகவேண்டும்.

15. முந்திய ஜென்மங்களில் செய்த பாப புண்ணியமே இந்தப்பிறப்பில் நிகழ்வனவாகும்.

16. புண்ணியம் வளரவளர பாபம் தேயும். பிறவித்துன்பம் தோன்றும். துன்பந்தோன்ற துக்கம் உண்டாகும்.

17. துக்கம் உண்டாக விசாரணைக்கு ஏதுவாகும். நான் ஏன் பிறந்தேன், இப்பிறப்பு ஏன் வந்தது என்ற வினாக்கள் தோன்றும்.

18. அப்பொழுது கடவுளிடத்தில் மிக்க அன்பு உண்டாகும். அவரை காவாரத் துதி செய்ய எண்ணமுதிக்கும்.

19. முன்னோர் பாடிய அருட்கவிகளைப் படிக்கப்படிக்க இனிமையுண்டாகும். உள்ளூறும் பொருளினால் புத்திக்கூர்மையுண்டாகும். தன்னைப் பற்றிய விசாரணை அதிகரிக்கும்.

பிரபஞ்ச ரகஸ்யம்

1. சுற்றத்தவர்க்கு மத்தியிலே திரவியமில்லாதவனாய் வாசஞ்செய்தலினும் புலிகளும் பெரிய யானைகளும் சஞ்சரிக்கின்ற காட்டின் மரங்களே வீடாகவும், பழங்களும் தண்ணீருமே உணவாகவும், புல்லுகளே படுக்கையாகவும் மரவுரிகளே உடையாகவுங்கொண்டு வாசஞ்செய்தல் உத்தமம்.

2 காவியங்களிலுள்ள அமிர்தரசமும், நல்லவர்களோடு சகவாசஞ்செய்தலுமாகிய இரண்டுமே சஞ்சாரம் என்னும் நச்சுமரத்தினது மதுரமான பழங்களாம்.

சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:—நமது சுதாரத்னாகரம் பத்திரிகை பிரதிமாதம் 15உ தோறும் வெளிவரும்.

பிரபஞ்ச விலாசம்

1. உயர்ந்த உத்தியோகம் கிடைத்து விட்டால் சிலருக்கு கண்ணே பார்வையற்று விடுகிறது. செருக்கில் ஆழ்ந்து விடுகிறார்கள். நெருங்கிப் பழகினவர் போனாலும், 'நீங்கள் யார்?' என்று கேட்கிறார்கள்.

2. எண் சாண் உடலுக்கு ஒரே சாண் வயிறு. அது சமயத்தில் படுத்தும்பாடு போதும் போதும் என்றாய் விடுகிறது.

3. இப்பொழுது ஒரு ரூபாய்க்கு நல்ல அரிசி இரண்டு படி, முன் பஞ்ச காலத்தில் ஒரு ரூபாய்க்கு 5, 6-படி அரிசி கிடைத்ததாம்.

4. பிரபஞ்ச வாழ்க்கையே ஒரு சூதாயிருக்கிறது. வாதுக்கிழுத்தால் வழியைக் காட்டாது.

5. இந்து தேசத்தார்—ஒரு தாய்க்குழந்தைகள் பெரியவன் பெரியவன் தான். சிறியவன் சிறியவன் தான்.

6. பணத்துக்கும் நிலபலத்துக்கும், அண்ணன் தம்பி—பங்காளி—சச்சரவு உண்டு. சிலகாலம் நீண்டிருந்தாலும், நல்லது கெட்டதில் ஒன்றாய்க் கூடிக்கொள்வது வழக்கம்.

7. திலகருக்கு மகாராஜ் என்ற பட்டம் மகாராஷ்டரத்தில் வழங்க, ஒரு பத்திரிகை அவருக்கு லோகமான்யர் என்ற பட்டமளித்தது.

8. திலகர் இப்பொழுது எல்லோருள்ளத்திலும் தங்கியிருக்கிறார். ஆகையால்—பாரதமக்களில்—ஒற்றுமை பிறந்துவிடும்.

9, திலகர் மகாராஜ் பெயர் நீடூழி வழங்க சென்னையில் 5 ஆயிரம் ஜனங்கள் கூடத்தக்க மகத்தான சபா மண்டபத்தை ஞாபகார்த்தமாகக் கட்டப்போகிறார்கள்.

10. காப்பி ஓட்டலுக்கு வந்த ஒரு சீமானுக்கு ஒரு மேஜை போதாததாயிருந்தது. வைத்த பதார்த்தத்தை முற்றிலும் சாப்பிட்டு விட்டால், சாப்பாட்டு ராமன் என்பார்கள். கௌரவக் குறைவு. ஆகையால் அல்வாவில் கொஞ்சம், குலாப் ஜாம்புவில் கொஞ்சம், இப்படியாக பிளேட்டுகள் பெருத்தன. செலவு ரூ. 1—8.

அறிவுடைமை

1. சோர்வு வராதபடிக்கும், பகைவராற்றுன்பம் வராதபடிக்கும், காக்கின்றதற்கு அறிவே காரணமாதலால், அதனிடத்து எப்போதும் சிந்தை வைத்து நடக்கவேண்டும்.

2. மனம்போன வழியிற் புத்தியைப் போகவிடாமல் நன்மார்க்கத்திற் செலுத்துவது அறிவே யாதலால், அதைச் சிந்தித் திருக்கவேண்டும்.

3. மாறி மாறி வரும், (சாத்வீகம் இராசதம், தாமதம் எனும்; முக்குணங்களின் தன்மையால் நல்ல பொருளைத் தீயோரிடத்திலும், தீய பொருளை நல்லோரிடத்திலும் கேட்கினும், அவைகளின் தன்மைகளைப் பகுத்தறிந்து, உண்மை இஃதென்று கண்டறிவதே அறிவாம்.

4. அறிவில்லாத மனிதர் வறுமையிற்றுன்பப் படுவதற்குப் பல திருஷ்டாந்திரம் வேண்டுவதில்லை—ஏனெனில், அறிவுடையவன் பல ஹீனனாகவிருந்தாலும் இக்கட்டு வந்த விடத்துத் தப்பித்துக் கொள்வான்.

அறிவிலான் பலசாலியாக விருந்தாலும் ஒருவனால் உயிரிழக்கும்படி நேரிட்ட காலத்தில் தப்பித்துக் கொள்வது கடினமென்று முன்னோருரைத்த பிரமாணத்தால் தெரிந்துக் கொள்ளலாகும்.

6. பின் வரும் நன்மை தீமைகள் இவ்விதமாக வருமென்று புத்திக் கூர்மையால் முன்னறிந்து நடப்பவர்கள். அறிவுடையாரென்றும் அப்படிக்கறிந்து நடவாதவர்களறிவிலாரென்றும் பெரியோர் சொல்லி யிருப்பதை நாமும் அநுபவமாக அறியவில்லையோ!

7. இதற்கொரு கதை யுண்டு. எப்படி யெனில் ஓர் தடாகத்தில் மூன்று மீன்களுண்டு—அவைகளிலொன்று வரும் காரியமறிந்து தக்கபடி முயலுமறிவுடையது. மற்றொன்று ஓர் காரியம் நேர்ந்த பின் தகுதியான யுக்தி செய்து பலனடையத் தக்க அறிவுள்ளது. மூன்றாவது வருவது வராமற் போகாதென்று கருதி முயலாமலிருக்கும் புல்லறிவுளது.

8. இம்மூன்று மற்சியங்களும் நெடுங்காலமாய் அத் தடாகத்தில் வாசம் செய்து வருகையிலொரு நாள் ஓர் செம்படவன் மீன் பிடிக்க வந்தான் அவன் வந்த அரவங்கண்டு வருங்காரிய மறிந்து முயல்கின்ற மீன், தடாகத்தின் பாதாளத்தில மூழ்கி மண்ணைக் கடித்துக் கொண்டோரிடத்தில் அடங்கியிருந்தது. சமயோசித புத்தியுள்ள இரண்டாவது மீன் அப்படிக்குச் செய்யாமலிருந்த படியால் செம்படவன் எறிந்த வலைக்குள்ளே அகப்பட்டு வருந்தித் தப்பிப்போக வென்ன வழியென்றாலோசித்துப் பிராணனை யிழந்ததுபோற் கை கால்களை யசையாமல் அவன் போட்ட விடத்தில் கிடந்து சமயம் பார்த்துத் துள்ளித் தொப்பென்று தண்ணீரிற் குதித்தோடிப் போய் க்ஷேமமடைந்தது. வந்தது வராமற் போகாதென்கிற நினைப்புள்ள மீன் வலையிலகப் பட்டதுமன்றி செம்படவனாற் கரையிற் போடப் பட்டவுடனே துள்ளித் துள்ளி விழுந்தபடியால் இது தண்ணீரில் விழுந்து போகுமென்று நினைத்துச் செம்படவன் அதைக் காலால் மிதித்து கொன்று போட்டான். ஆதலால் வருங்காரிய மறிந்து நடப்பவன் உத்தம புத்திமானென்றும் சமயோசித புத்தியுள்ளவன் மத்திம னென்றும் வந்தது வரட்டுமென்றிருப்பன் அதமனென்றும், சொல்ல வேண்டும்.

11. பழிபாவங்களுக் கஞ்சாதிருப்பது மூடருடைய தன்மை. அஞ்சி நடப்பது அறிவுடையவர்களுடைய செய்கையாம். ஆதலால் அறிவு எல்லாவற்றிற்கும் சிறந்ததென நம்ப வேண்டும்.

12. எல்லாச் செல்வங்களுக்கும் அறிவே காரண மாதலால் அறிவுடையோர்க் கொன்று மில்லாவிடினு மெல்லா முண்டென்றும், அறிவிலார்க்கு எல்லா முளதாயினு மொன்றுமில்லை யென்றும் பல நூலிலுஞ் சொல்லி யிருக்கின்றது ஆதலால் அறிவை நோக்கி யுலகத் தோடொத்து வாழ வேண்டும்.

புல்லறி வாண்மை.

1. ஆழமறியாமற் காலை விடுகிறவன் தனக்குத்தானே யமனாவ னென்பதற்கு அவனது புல்லறிவாண்மையே காரணமாக விருக்கின்றது.

2. எதையும் விபரீதமாக நினைத்துத் திகைக்கின்றவன் மூடரில் தலைமையான வனெனக்கருத வேண்டும்.

3. நன்றியின்னதெனத் தெரிந்துக் கொள்ள மாட்டாதவன் மனிதனாக வுருக்கொண்டிருக்கினும் சூத்திரக் கயிற்றால் அசை வுரு மரப்பாவையின் தன்மையுடையவனென றெண்ணப்படுவான்.

4. மோக்ஷத்திற் குறுதியைத் தரும் நல்ல வசனங்களை விரும்பிக் கேளாதவர்கட்கு வலிவிற்போய் அவைகளை யெளிதிற் சொல்ல விரும்புகின்றவன் ஞானியாக விருந்தாலும் பேதை பேதையெனப் படுவான்.

5. எண்ணிக்கையில்லாமல் வைக்கப்படுகின்ற திரவியம் குறைவடையுமென்பதற்குச் சந்தேகம் வேண்டுவதில்லை. எப்படியெனில் அறிவில்லாதவன் கைப்பொருள் அவனையல்லாமலே அழிந்து விடுமென்பது போலே தான்,

6. அறிவேன்னுந் தீபமில்லாதவர்கள் வாருமிடம், அந்தகாரமான இருள் மூடிய காட்டுக் கொப்பாகும். ஆதலாலவர்களோடு நேசஞ் செய்வதில் ஒரு பலனுமில்லாமற் போகிறது மன்றி பற்பல கேடுகளும் நேரிடும்.

7. தம்மைத்தாமே புகழ்கின்றவர்கள் வித்வான்களாக விருக்கினும் அவிவேகிகளென விகழப்படுவார்கள்.

8. மதம் மொழிகின்றயானை முன்னிட்டவர்களைக் கொல்லுமென்றறினி திருந்தும், அதற்கு முன்னேகிறவன் பலாட்டியன்க விருக்கினு முயிரிழக்கும்படி நேரிடுமென்றறி யாதவன்:—அறிவிலானவான்.

9. ஆதலால் அறிவின்மையானது எல்லா நன்மைகளுக்கும் பங்கத்தை யுண்டாக்கின்றதால் அந்த மௌட்டியத்திற் கிடங்கொடாத நடத்தலே நன்மார்கத்திற் கோரேணயாக விருக்கும்.

துக்கடாக் கதைகள்.

நீளமான மல் பீஸ்.

ஒரு வீட்டில் விவாகம் நடந்து கொண்டிருக்கும்போது தானம் வாங்குவதற்கு அநேக பிராம்மணர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவரை அழைத்து ஒரு மல் பீசைக் கொடுத்து ஆறுவேஷ்டியாகக் கிழிக்கும்படி சொன்னார். வெகு சந்தோஷத்துடன் வாங்கி அவசரமாய்க் கிழித்தார். பேச்சுப் பிராக்கில், கிழிவு இழைமாறி நீட்டுவாட்டத்தில் போக, கிழித்துக் கொண்டே யிருந்தார். அப்பொழுது வீட்டுக்காரரைப் பார்த்து என்ன! அகலமான பீஸாக வாங்கி வந்தீர்களா? கிழிக்கக் கிழிக்கப் போய்க்கொண்டே இருக்கிறதே என்றார். மற்ற பிராமணர்கள் அவரது குற்றத்தைக் கண்டு நகைத்தார்கள்.

மோர்க் குழம்பு.

ஒரு மாப்பிள்ளை முதல் தடவையாக மனைவியுடன் மாமியார் வீட்டுக்குப் போயிருந்தார். மனைவி தன் காதலனைப்பார்த்து; உங்களுக்கிஷ்டமான பதார்த்தத்தைச் சொல்லுங்கள், செய்துபோடச் சொல்லுகிறேனென்றாள். அதற்கு அந்த புதுமாப்பிள்ளை 'எனக்கு தினந்தோறும் மோர்க்குழம்பு சப்ளை செய்தால் போதுமென்றார். அப்படியே யிரண்டு மூன்று நாள் கடந்தது. சிலர் 'ஏன் தினம். மோர்க்குழம்பு!—வேறு செய்யலாகாதா?" என்று கேட்டார்கள். அதற்கு வீட்டார் மாப்பிள்ளைக்கு மோர்க்குழம்பில் வெகு பிரியம் என்றார்கள். மைத்துனர், மாப்பிள்ளைக்கு மோர்க்குழம்பு—என்று சொல்ல, சொந்தப்பெயர் ஒரு புறமிருக்க மோர்க்குழம்பு பட்டம் பிரபலமாய் விட்டது. ஆனால் மோர்க்குழம்பு என்றால்—யார் சொல்லி விட்டாலும் பிரசண்ட கோபம் வந்துவிடும். என்ன செய்யலாம் ஆசையால் வந்த அழகுபெயர்.

வேடிக்கை மொழிகள்.

1. தலையணையு-பாயுமா—அதற்கு கொம்புமுண்டோ.
2. செங்கலும்-ஓடுமா—அதற்கு காலுமுண்டோ.
3. வெத்திலையும்-பாக்குமா—அதற்கு கண்ணுமுண்டோ.
4: சீத்தும்-கழியுமா—அதற்கு வயறுமுண்டோ.
5. சம்பாவும்- சாருமா—அதற்குத் தொண்டையுமுண்டோ.
6. பூவும்-முட்டுமா—அதற்கு கொம்புமுண்டோ.
7. கட்டையும்-வாருமா—(பாதரக்ஷை)—அதற்கு கையுமுண்டோ
8. மாடமும்- விளக்குமா—அதற்கு கையுமுண்டோ.
9. திடலும்-திட்டுமா—அதற்கு வாயுமுண்டோ.
10. காடுநீ-கறையுமா—அது காசமுமாகுமோ.

உலகில் பலமொழிகள் பலதிரிபுபட்டுலாவுவதை அடியிற் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பிழை—அறைப்படித்த மூஞ்சூரு கழனீப்பானையில் விழும்,

திருத்தம்:—அறைவடித்த முன்சோறு கழுநீர்ப்பானையில் வரும். (அதாவது பக்குவப்படாமல் அறைப்பதத்தில் வடித்த சோறு)

பிழை:—காக்காய் நீர்போல் என்று ஜலத்தை வர்ணிக்கிறது—உலக வழக்கம்:—

திருத்தம்:—கால்காய் நீர்போல்-என்று திருத்தவும் அதாவது (கால்வாய் என்பது முற்றாத—இளநீர் என்பது பொருள்—தென்னங் குரும்பைக்கு முதிர்ந்த வழுக்கையுமுடைய தேங்காய்.

பிழை:—அங்கு மிருப்பான்-இங்கு மிருப்பான் ஆக்கின சோருக்குப் பங்குமிருப்பான்

திருத்தம்,—அங்குமிருப்பான்-இங்குமிருப்பான் ஆக்கின சோர்வுக்குப் பங்குமிருப்பான்.

அதாவது—கிருஷ்ணன்— அங்கு மிருப்பான் பரலோகத்தில் (வைகுந்தத்தில்) சாக்ஷாத் கடவுளாகவு மிருப்பான்-இங்கு மிருப்பான் பூலோகத்தில் கிருஷ்ணனாக அவதரித்து மனுஷருடன் சஞ்சரிப்பன்.

ஆக்கின சோர்வுக்குப் பங்குமிருப்பன் அதாவது பாண்டவர்கள் அபிமன்யு முதலிய புத்திரர்களை இழந்து சோர்வுற்றகாலத்தில் அபிமன்யு முதலானோர் இறக்கக்காரணராயிருந்து பாண்டவர்கள் அபிமன்யு முதலானோர் இறந்ததைக் கண்டு பாண்டவர்கள் சோர்வுறும் காலையில் கிருஷ்ணனும் அச்சோர்வுக்கு தானும் சோர்வுருவான். அதனால்

ஆக்கினை-உண்டாக்கின—சோர்வுக்கு—அயர்தலுக்கு பங்கு மிருப்பான்—தானும் அயர்தலடைவான்-என்பது பொருள்.

இன்னும் இதைப்போல் பழமொழிகள்பல, அவைகள் சிறுகச்சிறுக அடுத்தடுத்து இதில் பிரசுரமாகும்.

விசித்திரக் கதை.

குழமந்தலமென்னும் ஒரு சிறு கிராமத்தில், கந்தன், முனியன், பொன்னன், என்னும் மூவரும் வசித்து கொண்டிருக்கையில் ஒருநாள் கந்தன் இருவரையும் பார்த்து முனியா? ஆங்கிலம் கற்றவற்கு சென்னையில், நல்ல சன்மானம் கிடைக்கிறது. நாமும் சென்னைக்குபோய் ஆங்கிலம் கற்றுக் கொண்டால் நல்ல ஊதியம் பெறலாம் என்று கந்தன் சொன்னான். அதற்கு இருவரும் சம்மதித்து மறுநாள் காலை மூவரும் சென்னைக்கு வந்து ஐகோர்ட்டுக்கெதிரில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது யாரோ மூன்று வக்கீல்கள் ஏதோ சில விஷயம் பேசிக்கொண்டிருக்கையில் ஒருவர் ஆங்கிலத்தில் வீ. திரி (We Three) என்று சொன்னார். அதைஅங்கு வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த கந்தன் அதைக் கற்றுக்கொண்டான். பிறகு அதை விட்டு மூவருமாய் சீனாக்கடையண்டை வந்து அங்குள்ள கடைகளின் விநோதங்களை பாரத்துக் கொண்டிருக்கையில் ஒரு கடையில் ஐரோப்பியரிடம் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தசெட்டியார் (Yes sir) எஸ் சார் என்று ஆங்கிலத்தில் சொன்னார். அதை முனியன் கற்றுக்கொண்டான். அதன் பிறகு அதைவிட்டு; மூவருமாய் M, V. கன்னைய செட்டியார் கடையண்டை வந்து நின்று அங்கு பார்த்துக் கொண்டிருக்கையில் ஷாப்பிலிருந்து ஐரோப்பியர் ஒருவர் வரும் போது ஆல்ரைட் (All right) என்று ஆங்கிலத்தில் சொன்னார். அதை பொன்னன் கற்றுக் கொண்டான். பிறகு மூவருமாய் மவுண்ட்ரோட்டிற்கு வழி யெப்படி என்று விசாரித்து டிராம் போகும் வழியாய் போய்க் கொண்டிருக்கையில் சிந்தாதிரிப் பேட்டை மார்க்கட்டுக் கெதிரில் யாரோ ஒரு மனிதன் இறந்து கிடந்தான். அவனை அநேகமான ஜனங்கள் கூடிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்கு இவர்கள் வந்து சேர்ந்ததும் போலீஸ் இன்ஸ் பெக்டரும் ஒரு எட் கான்ஸ்டேபிளும் ஒரு கான்ஸ்டேபிளும் வந்து பிரேதத்தைப் பார்த்துவிட்டு இவனை யார் கொலை செய்தது என்று ஆங்கிலத்தில் இன்ஸ்பெக்டர் கேட்டார். அதற்குக் கந்தன் நாம் தான் ஆங்கிலம் கற்றுக்கொண்டோமே நாம் ஆங்கிலம் பேசலாம் என்று அவர் கேட்ட கேள்விக்கு பதில் (We Three) வீ. திரி. என்று சொன்னான். அதற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் நீங்கள் மூவந்தானா என்று ஆங்கிலத்தில் கேட்டார். அதற்கு முனியன் (Yes Sir) எஸ் சார் என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னான். பிறகு

போலீஸ் இன்ஸ்பெக்டர் நீங்கள் மூவரும் போலீஸ்ஸ்டேஷனுக்கு வரவேண்டும் என்று ஆங்கிலத்தில் சொன்னார். அதற்கு பொன்னன் (All Right) ஆல்ரைட் என்று சொன்னான்.

உடனே மூவரையும் கான்ஸ்டேபில்கள் தள்ளிக் கொண்டு போய் கேஸ் எழுதி மறுநாள் மாஜிஸ்ரேட்டிடம் கொண்டு போய் விசாரணை செய்ததில் அவர்களுடைய மதியீனத்தனத்தை அறிந்து இவர்கள் கொலை செய்தவர்களல்லவென்று சொல்லி மூவரையும் விடுதலை செய்து விட்டார். ஆகையால் வார்த்தையின் அர்த்தம் தெரியாமல் உபயோகிக்கக் கூடாது என்பது தான் இதன் கருத்து.

விநோத விலாசம்.

ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்:—அடேபையா உன் பெயர் என்ன?

பையன்:—எங்க அம்மாவச்சபேரா, அப்பாவச்சபேரா, இல்லாட்டா பாட்டி வச்சபேரா?

ஸ. அ. இ.:—உன்னைப் பள்ளிக்கூடத்தில் எல்லாரும் கூப்பிடுகிற பெயர்

பையன்:—பதினெட்டாம் பேர்.

ஸ. அ. இ:—அப்படியா! பேஷ்! ஆனால் இந்தக் கணக்கைப் போடு பார்க்கலாம். கும்பகோணத்துக்கும் தஞ்சாவூருக்கும் 40 மைல் ஒருவன் சாயந்திரம் 5மணி சுமாருக்கு கும்பகோணத்திலிருந்து புறப்பட்டு மணிக்கு 5 மைல் வீதம் நடந்து தஞ்சாவூருக்குப் போகிறான். இருட்டிக்கொண்டு மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. பிறகு லாந்தர் ஒன்று ஏற்றிக்கொண்டு மணிக்கு 3மைல் வீதம் நடந்து செல்கிறான் அப்படியானால் தஞ்சாவூருக்கு எத்தனை மணிக்குப் போய்ச் சேர்வான்?

பையன்:—இவ்வளவு பெரிய கணக்கு எங்க வாத்தியார் எனக்கு சொல்லிக் கொடுத்ததே கிடையாது. கத்தாரிக்கா கணக்குதான் போடுகிற வழக்கம். இருந்தாலும் சொல்லுகிறேன் கும்பகோணத்துக்கும் தஞ்சாவூருக்கும் 25மைல்தான். குதிரையே மணிக்கு 5மைல் தான் போகும். மனிதன் எப்படி 5மைல் வீதம் நடக்க முடியும் அப்படியே நடந்தாலும், மழை பெய்யும்போது ஒருமடையனும், வெளியில் புறப்பட மாட்டான். தும்மலில் புறப்பட்டாலும் தாத்தலில் புறப்படக்கூடாது என்று பாட்டியம்மா எல்லாரும்சொல்லுவார்கள். அதுவுமில்லாமல் திடீரென்று விளக்கும், அகப்படாது

அப்படி அகப்பட்டாலும் அது அணைந்து விடும். அப்படியே போனாலும் கோணச் சாலையில் கள்ளன் பிடித்துக்கொண்டு உதைத்து ஊருக்குத் திருப்பிவிடுவான். ஆகையால் தஞ்சாவூருக்குப் போயிருக்கவே மாட்டான். கும்பகோணத்திலேயே தான் இருந்திருப்பான். ஆகையால் கணக்குத் தப்பு.

* * * * *

தமாஷ்

பிதா:—நான் குழந்தையாக விருந்தபோது பொய் சொன்னதே கிடையாது.

குழந்தை:— ஆனால், அப்பா நீ பொய் சொல்லத் தொடங்கியது எப்போது?

பண்டிதர்:—அடே, நீ நிரம்பப் படித்திருக்கிறாயே: நாலடியார் யாரால் செய்யப் பட்டது சொல்லு?

கிராமத்தான்:—வாஸ்தவமாகச் சொல்லுகிறேன் 'நாலடியார்' யாரால் செய்யப் பட்டதென்பது தெரியாது. "கம்பராமாயணம்" என்பதுகூட எவரால் செய்யப் பட்டதென்று எனக்குத் தெரியாது.

புருஷன்:—என்னிடம் ஒரு லக்ஷரூபாய் இருந்தால் நான் என்ன செய்வேன் தெரியுமா.

மனைவி:—தெரியாது. ஆனால் அது இரண்டு லக்ஷமாக இல்லையே யென்று துக்கப் பட்டுக் கொண்டிருப்பீர்களே ஒழிய நான் கெட்ட சீட்டிப் புடவையைக்கூட வாங்கித் தரமாட்டீர்கள்.

பையன்:—அப்பா! நம்மைக்காட்டிலும் வயதில் சிறியவர்களை ஒருபோதும் அடிக்கக்கூடாதென்று நீ சொல்லவில்லையா?

பிதா:—ஆமாம்.

பையன்:—அப்படி யானால் அந்தமாதிரி ஒரு கடிதாசியில் எழுதிக்கொடு. என் உபாத்தியாயருக்குக் கொண்டு கொடுக்கிறேன். அவருக்கு இந்த விஷயமே தெரியாது போலிருக்கிறது.

* * * * *

அர்த்த புஷ்டி

புதிதாகக் கட்டப்பட்ட சிறைச்சாலையைச் சுற்றிப்பார்த்துவந்த கலெக்டர் அதனுடைய அமைப்பைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். இரண்டொரு நாள்கழித்து கலெக்டர் தன் சிறுபையனுடன் ரயிலுக்குபோகும்போது அப்பையன் அங்கு ஒரு கட்டிடம் தெரிவதைச் சுட்டிக் காட்டி "அப்பா இது என்ன கட்டிடம்" என்றான். "இது தான் ஜெயில்" என்றார் கலெக்டர். "நீ போய் இருந்தாயே அந்த ஜெயிலா இது" என்று பையன் கேட்டான். கலெக்டர் திடுக்கிட்டுப்போனார்.

சீதாமன்.

செட்டியும் தாஸியும்

லலிதாங்கி அமிர்த நகரத்தில் குடியேறியது.

இரண்டாம் அத்தியாயம்.

தெற்குக் கடலினிடையே சந்திரோதயத் தீவு என்றொரு விடமிருக்கிறது. அதற்கு இக்காலத்தில் மலைய பாஷையில் "பூலோ பூலாங்" என்று பெயர்—சொல்லுகிறார்கள். அந்த தீவின் ராஜதானிக்கு அக்காலத்தில் அமிர்த நகரம் என்று பெயர். அங்கு நமது கதை நடைபெற்ற காலத்தில் சந்திர வர்மன் என்ற தமிழ் வேந்தன் அரசு செலுத்தி வந்தான். சுற்றி, ஆயிரந் தீவுகள் அவனுடைய ஆட்சியின் கீழே யிருந்தன. எல்லாப் பக்கத்து மன்னர்களிடமிருந்தும் அவனுக்குக் காணிக்கைகள் வந்தன. "தென் கடல் தலைவன்" என்ற விருதுடன் வாழ்ந்தான். பூமண்டலத்தில் வியாபாரக் கப்பல் வீதிக்கு அவனே தனிப் பெருங் காவலனாக விளங்கினான்.

அக்காலத்தில், கலிங்க ராஜ்யத்தினின்றும் கப்பலேறி, லலிதாங்கி நேரே சந்திரோதயத் தீவில் அமிர்த நகரத்தில் வந்திறங்கினாள். கப்பலை விட்டிறங்கி அந்நகரத்தில் ஒரு தர்மசாலைக்குப் போய், அங்கே தனக்கென்று சில அறைகள் வாங்கிக்கொண்டு குடி புகுந்தாள். நகரத்தின் விசேஷங்களையும் வியாபாரப் பாங்குகளையும், அங்குள்ள விசேஷச் செல்வர்களின் குணம், நடை முதலிய விவரங்களையும் பற்றி விசாரணை செய்துகொண்டு, அந்த தர்மசாலையிலேயே சிறிது காலந் தங்கியிருந்தாள். அப்பால், மாதம் முந்நூறு பொன் சம்பளம் கொடுத்து விதுரப்பிள்ளை யென்ற வேளாளன் ஒருவனைத் தனக்குக் கார்யஸ்தனாக நியமனம் செய்தாள். அப்பால் அவள் விதுரனைக் கொண்டு சில உயர்ந்த வியாபாரிகளைத் தருவித்துத் தன்னிடமிருந்த நகைகள், பொன், பணி, ரொக்க

நாணயம், எல்லாவற்றுக்கும் மொத்த மதிப்புப் போடுவித்தாள். கலிங்க நாட்டிலிருந்து அவள் கொள்ளை யிட்டுக்கொண்டு வந்த செல்வத்துக்கு மொத்த மதிப்பு முந்நூறு கோடிப் பொன் விழுந்தது.

முதலாவது, ஐந்து கோடிப் பொன் செலவிட்டு நகர் நடுவிலே அந்நாட்டரசனுடைய மாளிகையைக் காட்டிலும் மிகவும் அற்புதமான காட்சியுடைய பெரிய மாளிகையொன்று கூட கோபுரங்கள், ஏழு விஸ்தாரமான மாடிகள்—அதாவது, உபரிகைகளுடன் கட்டுவித்தாள். அந்த மாளிகை கட்டும் பொருட்டு, யவன தேசத்தினின்றும் கைதேர்ந்த சிற்ப சாஸ்திரி யொருவனை வரவழைத்தாள். மாளிகை முழுதும் பளிங்கு வேலை. உச்சத்திலே ஏழாம் உபரிகையிலிருந்த லீலா மண்டபத்தில் மாத்திரம் விதானத்திலும், தூண்களிலும், பொன்னும் விலை யுயர்ந்த ரத்தினங்களும் இழைக்கப்பட்டிருந்தன.

எல்லா உபரிகைகளிலும் பல லீலா மண்டபங்களும், விருந்துக் கூடங்களும், நாடகசாலைகளும் சித்திர சாலைகளும் மிகவும் அழகாக நிர்மிக்கப்பட்டிருந்தன. மாளிகையைச் சுற்றிச் சதுரமாக, மிக விஸ்தாரமானதொரு பூஞ்சோலை செய்வித்தாள். அதில் பல நீரோடைகளும், சுனைகளும், பளிங்குத் தடாகங்களும். அருவிகளும், புஷ்பமாரி போலே நீர் தூவும் பொறிகளும் சமைப்பித்தாள். உலக முழுதிலுமுள்ள பல பல தேசங்களினின்றும், இனிய கனி தரு மரங்களும், அருமையான 'மருந்துப் பூண்டுகளும், மூலிகைகளும், பூச்செடிகளும், கொடிகளும் வரவழைத்து அத்தோட்டத்தில் வைத்தாள். அது தேவேந்திரனுடைய நந்த வனத்தைப் போல் விளங்கிற்று. அதற்கு "நந்தனம்" என்றே பெயருமிட்டாள்.

அப்பால், லலிதாங்கி தன் கார்யஸ்தனாகிய விதுரனை அழைத்து:—"இந்தத் தீவு முழுமையிலும் தனக்கு நிகரில்லாத திறமை கொண்ட வைத்யன் ஒருவனை மாஸம் ஐந்நூறு பொன் சம்பளத்தில்

நம்மிடம் வேலை பார்க்கும்படி திட்டம் பண்ணிக் கொண்டுவா" என்றாள்.

விதுரனும், அங்ஙனமே ஸாக்ஷாத் தன்வந்திரி முனிவருக்கு நிகரான லங்காபுத்ரன் என்ற மருத்துவனைத் திட்டம் பண்ணிக் கொடுத்தான்.

பிறகு, லலிதாங்கி, விதுரனை நோக்கி:—"ஆளுக்குப் பதினறு பொன் மாஸச் சம்பளமாக, மாளிகை வாயில் காப்பதற்குப் பன்னிரண்டு வாட் சேவகரைத் திட்டம் பண்ணிக் கொடு" என்றாள்.

அவனும் அங்ஙனமே சுத்த வீரராகிய பன்னிரண்டு காவலாளர் திட்டம் பண்ணினான்.

அதன்பின் லலிதாங்கி, விதுரனை நோக்கி:—"இருபது தாஸிப் பெண்களைத் தயார் செய்து கொண்டுவா. எல்லாருக்கும் ஏறக்குறையப் பதினான்கு அல்லது பதினைந்து மட்டத்தில் ஸமவயதாக இருக்கவேண்டும். ஏறக்குறைய ஸமான உயரமும் அகலமும் உடையோராய், ஒரே சாயலுடையோராக, இருக்கவேண்டும். ஒவ்வொருத்தியும் அருமையான அழகுடையவளாகவும் ஸங்கீதம், பரதம், எழுத்துப் படிப்பு முதலியவற்றில் மிக்க தேர்ச்சி யுடையவளாகவும் இருக்கவேண்டும். தலைக்கு நூறு பொன் சம்பளங் கொடுப்போம்" என்றாள்.

இது கேட்டு விதுரனும் அவள் சொல்லிய லக்ஷணங்களெல்லாம் பொருந்திய இருபது தாஸிப் பெண்களைத் தயார் செய்து கொடுத்தான்.

அப்பால் லலிதாங்கி ஒரு பொற் பலகையில் வயிர எழுத்துக்களாலே பின்வருமாறு விளம்பரம் பெரிதாக எழுதுவித்து, வீதியிலே போவோருக் கெல்லாம் நன்றாகத் தெரியும்படி தன் மாளிகையின் வெளிப்புறத்திலே தொங்கவிட்டாள்.

"பூலோக ரம்பை"
வி ள ம் ப ர ம்

கலிங்க தேசத்து ராணியும், பூமண்டல முழுமையிலும் அழகிலே நிகரற்றவளுமாகிய ஸ்ரீமதி லலிதாங்கி தேவி இந்த மாளிகையில் வந்து தாஸியாக வசிக்கிறாள். இங்கே இந்திர போகங்களுக் கிணையான பலவகை இன்பங்கள் பெறலாம். இரவொன்றுக்குக் கூலி ஆயிரம் பொன்.

இங்ஙனம் விளம்பரம் காட்டித் தன் குலத்துக்குரிய வியாபாரந் தொடங்கினாள். அவளுடைய செல்வம் நாளுக்கு நாள் காட்டுத் தீயைப் போலே மிகுதிப்பட்டுக்கொண்டு வந்தது.

மூன்றாம் அத்தியாயம்.

சொக்கநாதன் செட்டி
தாஸி வீட்டிலே பட்டபாடு.

அப்போது, தமிழ் நாட்டிலிருந்து சந்திரோதயத் தீவுக்குப் போய் வியாபாரம் செய்துகொண்டிருந்த சொக்கநாதன் செட்டி என்ற தனவசிய னொருவன் லலிதாங்கியின் வீட்டுக்குப் போக வேண்டுமென்று நிச்சயித்து, ஒரு நாள் மாலையில், ஆயிரம் பொன் முடிப்புக் கட்டி யெடுத்துக்கொண்டு, மிகவும் டம்பமாக உடை உடுத்துக்கொண்டு, அதிக படாடோபமான குதிரை வண்டியி லேறிப் போய், அவள் மாளிகையின் வாயிலுக் கெதிரே இறங்கினான். அங்கே காவல் காத்துக் கொண்டு நின்ற வாட்சேவக னொருவனை நோக்கிச் சொக்கநாதன் செட்டி:— "ஆரங்கே? சேவகா, இப்படிவா. உள்ளே லலிதாங்கியிடம் போய்ச் சொக்கநாதன் செட்டியார் விஜயம் செய்திருப்பதாகத் தெரிவி" என்றான்.

சேவகன், உள்ளே போய், விதுரனிடந் தெரிவித்தான். உடனே காரியஸ்தனாகிய விதுரப் பிள்ளை வெளியே வந்து, செட்டியை மிக

வும் மரியாதையுடன் மாளிகைக்குள் அழைத்துச் சென்றான்; செட்டியிடம் ஆயிரம் பொன்னை வாங்கிப் பணம் பெட்டியில் வைத்துக் கொண்டான்; லலிதாங்கியின் உருவம் மிகவும் அழகாகவும், நுட்பமாகவும் வரையப் பட்டிருந்த மோதிர மொன்றைச் செட்டியிடம் கொடுத்தான்.

"இது எனக்கு இனாமா?" என்று செட்டி கேட்டான். அதற்கு விதுரன்:— "அப்படி யன்று; செட்டியாரே இந்த மோதிரம் தங்களிட மிருந்து நான் ஆயிரம் பொன் பெற்றுக் கொண்டதின் அடையாளம். இதை உள்ளே ஒவ்வொரு அறையிலும் காண்பிக்க வேண்டும்" என்று சொல்லி விட்டு ஒரு கைம்மணியைக் குலுக்கினான்.

அந்த வெள்ளி மணியின் ஒலி சன்னமாக இருந்தாலும், அந்த மாளிகை முற்றிலும் கேட்கும். அந்த ஒலியைக் கேட்ட மாத்திரத்திலே, லலிதாங்கியின் இருபது சேடியர்களில் ஒருத்தியாகிய ரமா என்பவள் வந்து தோன்றினாள். இவள் செம்பட்டுப் புடைவையும் செவந்த பட்டு ரவிக்கையும் மாணிக்க பூஷணங்களும், செந்நிற மலர்களும் அணிந்தவளாய், அக்கினிதேவனுடைய சக்தி போலே வந்து நின்றாள்.

அவளைக் கண்டவுடனே சொக்கநாதன் செட்டி இவள் தான் லலிதாங்கி யென்று தவறெண்ணத்தால் "ஆஹா, லலிதாங்கி" என்று பெருங் குரலிட்டுக் கூவி அவள் மேலே போய் விழுந்தான். விதுரன் "கூ, கூ," என்று கத்தினான். அந்தப் பெண் கலீரென்று நகைத்தாள். செட்டி ஆந்தையைப் போல் விழித்தான்.

அப்போது விதுரன் சொல்லுகிறான்:—"[illegible] டியாரே; பொறுத்திரும். இவள் லலிதாங்கி [illegible]. இவளுடைய பெயர் ரமா. இவள் சேடிகளில் ஒருத்தி. இவளுடன் உள்ளே போம். மேல் நடக்க வேண்டிய விஷயங்களை இவள் தெரிவிப்பாள்" என்றான்.

225574

இதைக் கேட்டுச்செட்டி:—"ஏன்? லலிதாங்கி இந்த ஊரில் இருக்கிறாளோ? இல்லையோ?" என்று வினவினான்.

ரமா மீண்டும் நகைத்தாள். அப்போது விதுரன்:— "பயப் படாதேயும் செட்டியாரே, லலிதாங்கி இங்கே தான் இருக்கிறாள் ஆனால் நீர் அவளைப் பார்க்கு முன்பு பல கார்யங்கள் நடந்தாக வேண்டும்; நேரத்தை வீண்போக்காதேயும். இவளுடனே போய் நடக்க வேண்டிய கார்யங்களை யெல்லாம் இவள் அறிவிப்பாள்" என்றான்.

நல்லதென்று சொல்லிச் சொக்கநாதன் செட்டி ரமாவுடன் உள்ளே சென்றான். ரமா இவனைப் பல அறைகளின் வழியே நடத்திச் சென்று கடைசியில் ஸ்நாந அறையிலே கொண்டு சேர்த்தாள். அங்கு பொன்னால் செய்த ஒரு பெரிய கைம்மணியை எடுத்துக் குலுக்கினாள்.

உடனே, இரண்டு புதிய பெண்கள் வந்தனர். இவ்விருவரும் பச்சைப் பட்டுடுத்து பச்சை ரவிக்கையும், பச்சை அணிகளும், பசுந்துழாய், மருக்கொழுந்தும் புனைந்திருந்தனர். இவர்களைப் பார்த்தவுடனே செட்டி இவ்விருவரில் யார் (லலிதாங்கி) என்று தெரிந்துகொள்ள முடியாதவனாய், ரமாவை நோக்கி:— "லலி—லலி —லலிதாங்கி யார்?" என்று கேட்டுப் பைத்தியம் பிடித்த ஆந்தையைப் போல் விழித்தான்- அப்போது ரமா:— "உளறாதேயும். இவ்விருவரும் என்னைப் போலே சேடிகள். விதுரன் கொடுத்த மோதிரத்தை இவர்களிடம் காண்பியும்" என்றாள். செட்டி மோதிரத்தைக் காண்பித்தான். அவ்விருவரும் அதைக் கண்டு ஸலாம் செய்து விட்டு "ஸ்நாநம் செய்ய வாருங்கள்" என்றனர். இதைக்கேட்டவுடன் செட்டி அவ்விருவரையும் நோக்கி:— "உங்கள் பெயரென்ன?"! என்று வினவினான். அவ்விருவரில் ஒருத்தி சொல்லுகிறாள்:— "என் பெயர் மரகதவல்லி; இவள் பெயர் மரகதமாலை" என்றாள். "அட! பெயருக்கேற்ற அலங்காரமா?" என்று சொல்லிச் செட்டி வியப்பெய்தினான். ரமா அந்த அறையினின்

றும் வெளியேறிச் சென்றாள். பச்சை மகளிர் இருவரும் மறுபடி செட்டியை நோக்கி "ஸ்நாநத்துக்கு வாரும்" என்று கூப் பிட்டார்கள்.

அப்போது செட்டி— "ரமா, மரகதவல்லி, மரகதமாலை, ரமா; மரகத வல்லி, மரகதமாலை......"என்று அந்தச் சேடிகளின் பெயரை யெல்லாம் உருப்போட்டுக் கொண்டிருந்தான். பின்னர் தன்னுடைய நண்பர்களிடம் தான் லலிதாங்கி வீட்டுக்குப், போன வைபவங்களைச் சொல்லும்படி நேர்ந்தால், அப்போது சேடிகளின் பெயர்கள் மறந்து போகாமலிருக்க வேண்டு மென்பதை உத்தேசித்துச் செட்டி அங்ஙனம் ஜபம் பண்ணினான்.

"ஸ்நானம் பண்ண வருவீரா மாட்டீரா?" என்று பச்சை மகளிர் செட்டியை மறுபடி கேட்டார்கள்.

அப்போது செட்டி மஹா கோபாவேசமெய்தியவனாய், "அவள் ஊரில் இருக்கிறாளா, இல்லையா, அந்த லலிதாங்கி? ஒரே வார்த்தையில் உண்மை சொல்லி விடுங்கள். நான் வந்த நோக்க மென்ன? எனக்காவது ஸ்நாநம் பண்ணி வைப்பதாவது? எங்கள் வீட்டிலே கிணறில்லையா? தொட்டி யில்லையா? எனக்கு வெந்நீர் போட்டுக் கொடுக்கப் பெண்டாட்டி யில்லையா?......என்றான்.

அந்தப் பச்சை மகளிர் இருவரும் கணீரென்று நகைத்தார்கள் "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று சொக்கநாதன் செட்டி வினவினான். அதற்கு மரகதவல்லி:— "வீட்டில் பெண்டாட்டிக்கு வெந்நீர் போட்டுக் கொடுக்கும் உத்யோகந் தான் வைத்திருக்கிறீர் போலும்! நீர் இப்படி எங்களிடம் வந்து சொல்வதை உம்முடைய மனைவி கேட்டால் உம்மை என்ன பாடு படுத்துவாளோ என்பதை யெண்ணிச் சிரிக்கிறோம்" என்று சொன்னாள்.

"சரி அதெல்லாம் போகட்டும் நான் இப்போ ஸ்நாநம் செய்ய மாட்டேன். என்னை நேரே லலிதாங்கி யிருக்கு மிடத்திலே

கொண்டு விடுங்கள்" என்றான் செட்டி. பச்சை முகனிருவரும் மறுபடி திசைகளி லெல்லாம் எதிரொலி யெழும்படி நகைத்தார்கள். செட்டி மஹா கோபத்துடன்:— "என்ன! நான் பேசுவது உங்களுக்கு கேலியாய் விட்டதா? என்னை யாரென்று நினைத்தீர்கள்? என்பெயர் சொக்கநாதன் செட்டியார். எங்கள் சிறிய தகப்பனுடைய மைத்துனராகிய பெரியண்ண செட்டியாருடைய மாமனுக்குத் தம்பி தான் கோடிக்க கரையில் கோடீச்வரராக இருக்கும் ஆநா, ஆவிந்நா ஆண்டியப்ப செட்டியார். என்னை இந்த அமிர்த நகரத்துக் கடைத் தெருவில் அறியாதார் யாருமில்லை. பணம் வட்டிக்குவிடுவது நம்முடைய வியாபாரம். அதிலே நமக்குகனலாபம். அப்படிப்பட்ட நானாகிய சொக்கநாதன் செட்டியார் பேசிக்கொண்டிருக்கையிலே நீங்கள் மூடத்தனமாக நகைக்கிறீர்களே நான்! பணங் கொடுக்க வில்லையா? இதோ, பாருங்கள், மோதிரம்—அடையாளம் என்னை லலிதாங்கி இருக்கு மிடத்தில் கொண்டு விடுங்கள். எனக்கு இப்போது ஸ்நாநம் அவசிய மில்லை' என்று செட்டி ஒரே வாதனையாக வாதித்தான். அந்தப் பெண்கள் மறுமொழி சொல்லாமல் நின்றார்கள். அப்போது செட்டி:— "என்ன, சும்மா, மறுமொழி சொல்லாமல் நிற்கிறீர்களே; இதெல்லாம் ஏதோ ஒரு மாயம் இருக்கத்தான் செய்கிறது. ஏதோ ஏமாற்று; ஏதோ சூது; ஏதோ வஞ்சனை யிருக்கிறது! லலிதாங்கியை உடனே எனக்குக் காட்டுங்கள். அல்லது மறுபடி விதுரப் பிள்ளை இருக்கு மிடத்திலே என்னைக்கொண்டு விடுங்கள். என்பணத்தைத் திரும்ப வாங்கிக் கொண்டு வீடு போய்ச் சேர்கிறேன். ஐயோ! அருமையான பணம்; மிகவும் கஷ்டப் பட்டு ஸம்பாதித்தது. ஆயிரம் பொன்; ஆயிரம் பொன்னென்றால் தெருவிலே கிடக்கிறதா? ஆயிரம் பொன்! ஆயிரம் பொன்! ஆயிரம் பொன்! ஆயிரம் பொன் கொடுத்து 'நான் இங்கு ஸ்நாநம் பண்ணவா வந்தேன்?'" என்று சொல்லிப் பெரு மூச்செறிந்தான்.

அப்போது மரகத மாலை சொல்லுகிறாள்:—"செட்டியாரே, காலத்தை வீணாகக் கழிக்கிறீர். இப்படி வீண் பேச்சில் நேரம் போக்கிக் கொண்டிருந்தால், கடைசியாக இன்றிரவு நீர் லலிதாங்கியைப் பார்ப்பதே துர்லப மாய் விடும். இங்குவந்தால், இவ்விடத்து விதிகளுக்கெல்லாம் உட்பட்டுத் தீரவேண்டும். இவ்விதிகள் எவர் பொருட்டாகவும் மாற்றப்பட மாட்டா. முதலாவது; இங்கே ஸ்நாநம் பண்ணவேண்டும். அப்பால் இரண்டாம் மாடிக்குப் போய் போஜனம் முடித்துக் கொள்ள வேண்டும். மூன்றாம் மாடியிலே புதிய வஸ்திரங்கள் காண்பிக்கப் படும், அவற்றுள் இஷ்ட மானதை தரித்துக் கொள்ள வேண்டும். நான்காம் மாடியில் சந்தனம், தாம்பூலம், ஸுகந்தங்கள் முதலிய உபசாரங்கள் நடக்கும். ஐந்தாம் உப்பரிகையில் நாட்டியம், ஸங்கீதம் இவற்றை ரமித் தின்புற வேண்டும். ஆறாம் உப்பரிகையில் அரமனை வைத்தியர் உம்முடைய தேகஸ்திதியைப் பரிசோதனை செய்து தக்க மருந்துகள் கொடுப்பார். ஏழாம் உபரிகையிலே லலிதாங்கியைக் காணலாம். இரவில் மூன்று ஜாமங்களையும் ஆறு உபரிகைகளில் கழித்துக் கொண்டு, நான்காம் ஜாமத் தொடக்கத்திலே தான் லலிதாங்கி யிருக்கு மிடம் போய்ச் சேரலாம். இவ்விடத்து விதிகளை ஹரிஹரப் ப்ரஹ்மாதிகளுக்காகக் கூட மாற்றுவதில்லை. வாயை மூடிக் கொண்டு நடப்பதை யெல்லாம் கண்டு ஸுகிக்க வேண்டும். ஸ்நாநம் பண்ணுவித்தால் பண்ண வேண்டும்" என்றாள் "தடியைக் கொண்டடித்தாலோ?" என்று செட்டி கேட்டான். "பட வேண்டும்" என்று மரகதவல்லி சொன்னாள்.

இத்தனைக்கப்பால் செட்டி ஸ்நாநம் பண்ணுவதாக ஒப்புக் கொண்டான். வேஷ்டியை அவிழ்த்து வைத்து, அறையில் ஒரு சிறு துணியைக் கட்டிக்கொண்டு, ஒரு பலகையின் மேல் உட்காரச் சொன்னார்கள் "முருகன் துணை" என்று சொல்லிச் செட்டி பலகை மீதேறியுட்கார்ந்து கொண்டான்.

மரகதவல்லி செட்டிதலையில் எண்ணெயைவைத்தாள் "எண்ணெய்க்குளியா?" என்று சொக்க நாதம் செட்டி கேட்டான். "ஆம்" என்றாள் மரகதவல்லி. செட்டி பெரு மூச்செறிந்தான். ஒரு மணி நேரம் பலவிதமான ஸம்பாஷணைகள் செய்து செட்டி ஸ்நாநம் பண்ணி முடித்தான். பிறகு போஜன சாலைக்குச் சென்றான்.

அங்கு நளபாக மென்றால் ஸாக்ஷாத் நள பாக மாக ஆறுவிதச் சுவை களிலும் சுமார் நூறு வகைப் பக்குவங்களும், பக்ஷணங்களும் செய்து வைக்கப் பட்டிருந்தன.

செட்டி இத்தனை ருசியான பக்குவங்களை இது வரை எப் போதும் உண்டது கிடையாது. கண்ணால் கண்ட தில்லை. காதால் கேட்ட தில்லை; கற்பனையால் எட்டியது மில்லை. எனவே இரண்டாம் உபரிகையிலும் நெடும் பொழுது கழித்து விட்டான். சமையலின் ருசியிலும், பரிமாற வந்த புதிய பெண்களாகிய நீல லோசனி என் பவளும், நீல மணி என்பவளும் நீலப் பட்டுடுத்து, நீல அணி தரித்து, நீலப் பொட்டிட்டு, நீல மலர் சூட்டி நின்ற அழகிலும் மயங்கிப்போய்ச் செட்டி பொழுது போவதைக் கூட கவனியாமல் இருந்து விட்டான். இவர்களுடைய பெயர்களையும் செட்டி விசாரித் துக்கொண்டான். போஜனம் முடிந்த வுடனே, வஜ்ர ரேகை, வஜ் ராங்கி, என்ற இரண்டு புதியமாதர் வந்து தோன்றினர். இவர்கள் முழுமையும் வெள்ளையிலே அலங்காரம் பண்ணிக் கொண்டு வந்த னர். செட்டி இவர்களுடைய பெயர்களையும் விசாரித்து வைத்துக் கொண்டான். இவர்கள் அவனை மூன்றாம் உபரிகைக்கு அழைத்துச் சென்றார்கள். போகும் வழியில் செட்டி:—“ரமா, மரகதவல்லி, மரகத மாலை, நீலலோசனி, நீலமணி, வஜ்ர ரேகை, வஜ்ராங்கி. வஜ்ராங்கி ரமா, ரமா, மரகதவல்லி, மரகதவல்லி, மரகத மாலை; மரகத மாலை; நீல லோசனி, நீல லோசனி; நீலமணி, நீலமணி; வஜ்ர ரேகை, வஜ்ர ரேகை; வஜ்ராங்கி, வஜ்ராங்கி; ரமா, ரமா, ரமா......„ என்று ஜபம் பண்ணிக் கொண்டே போனான்.

மூன்றாம்மாடியிலே பட்டுக்களிலும், ஜரிகைகளிலும், ரத்னங் களிழைத்தனவும், பூக்கள் சித்திரித்தனவுமான, வேஷ்டிகள், உத்தரீ யங்கள், பாகைகள், நிஜார்கள், சட்டைகள், துண்டுகள். பதினாயிரவித மென்றால் பதினாயிரம் விதம்-ஒன்றைக் காட்டிலும் ஒன்று, கண்ணைப் பறிக்கும்படியான அழகுடையனவாய், வரிசை வரிசையாக வெள்ளிக் கம்பிகளால் செய்த கொடிகளின் மீது தொங்க விட்டிருந்தன.

திரும்பிப் பார்த்த பக்க மெல்லாம் நிலைக் கண்ணாடி! அந்த நிலைக் கண்ணாடிகளை நிறுத்தி யிருந்த மாதிரியில் இந்த வஸ்த்ரங் களின் பிரதி பிம்பங்கள் ஒன்று, பத்து, நூறாகத் தெரிந்தன.

செட்டி போய் பார்த்தான். அவனுக்கு மூர்ச்சை போடத் தெரிந்தது. மயங்கிப் போய் விட்டான், மயங்கி! தேடித் தேடிப் பார்த்து, ஒரு பாகை மிகவும் அழகிய தென்று கருதித் தலையில் அணிவான். பிறகு அதோ, அந்த, மூலையில் மற்றொன்று இதைக் காட்டிலும் அழகாகத் தோன்றும். தூரத்துப் பார்வை கண்ணுக் கழகு அங்கே போய் அதை எடுத்து வைப்பான். பிறகு மற்றொன்று அதைக் காட்டிலும் அழகாகத் தென்படும். நிஜார், சட்டை, கைத் துண்டு, எல்லாம் இப்படியே. நெடுநேரம், நெடுநேரம், போட்டுப் போட்டு மாற்றியபின் கடைசியாகச் செட்டி ஒரு பால் வெளுத்த சரிகை வேஷ்டி, வஜ்ர மணிகளிழைத்த அங்கி, பொன்மலர்கள் உத்தரீயம், மாணிக்கச் சரங்கள் தொங்கவிட்ட மஸ்லின் தலைப்பாகை இத்தனையையும் தரித்துக் கொண்டான்.

“உடைகள் உடுத்தாய் விட்டதா? என்று வஜ்ரரேகை கேட் டாள். ஆயிற்று என்றான் செட்டி.

அப்பால், அங்கிருந்து, அவனை அடுத்த தாம்பூலாதிகள் வழங் கும் மாடிக்குக் கொண்டு செல்லும் பொருட்டாக ஸுவர்ணாம்பாள், ஸுவர்னமாலை என்ற புதிய சேடிகள் இருவர் வந்தனர். செட்டி, இவர்களுடைய பெயரையுங் கேட்டுத் தெரிந்து கொண்டு உருப் போட்டு உருப்போட்டு நன்றாக மனதில் பதித்துக் கொண்டான்.

இதற்குள்ளே பொழுது விடிந்து விட்டது. அவ்விரண்டு பெண்களும் செட்டியை நான்காம் உபரிகைக்குக் கொண்டு போகா மல் கீழே அழைத்துக் கொண்டு போய் விஸ்தாரப் பிள்ளை யிருந்த இடத்தில் கொண்டு விட்டார்கள். போகும் வழியில் செட்டி:—” ஏன் என்னை நான்காம் மாடிக்குக் கொண்டு போகாமல் கீழே அழை த்து செல்கிறீர்களே, விஷய மென்ன? என்று கேட்டான்.

"பொழுது விடிந்துவிட்டது. இனி இரவில் தான் வரலாம்" என்று ஸுவர்ணமாலை சொன்னாள்.

"இன்றிரவு நான் லலிதாங்கியைப் பார்க்க முடியாதோ? என்று செட்டி கேட்டான்.

"இன்றிரவு பொழுதுதான் விடிந்துவிட்டதே நேற்றிரவு என்று சொல்லும். இப்போது வீட்டுக்குப் போய் மறுபடி இன்றைக்கிரவில் வரலாம் என்றாள் ஸுவர்ணமாலை.

"பணம்' என்று செட்டி கேட்டான்.

"அதெல்லாம் விதுரப் பிள்ளையிடங் கேட்டுக் கொள்ளும் என்று ஸுவர்ணமாலை சொன்னார்.

விதுரனிடம் வந்தவுடன் புதிய உடைகளைக் களைந்து விட்டுச் செட்டிக்கு அவன் அணிந்து கொண்டு வந்த அவனுடைய சொந்த உடைகளைக் கொடுத்தனர். என் பணத்தைத் திரும்பக் கொடும் என்று செட்டி விதுரனிடம் கேட்டான். விதுரன் ஸுவர்ணமாலையை நோக்கி:— என்ன— விஷயம்? என்று விசாரித்தான். அவள் நடந்த வரலாற்றையெல்லாம் சொல்லச் செட்டி மண்டபத்திலும் போஜன சாலையிலும் வஸ்த்ர சாலையிலும் வீணாக நேரத்தைக் கடத்தி கொண்டிருந்தானென்றும், அதற்குள் பொழுது விடிந்து விட்டதென்றும், ஆதலால் அவன் லலிதாங்கியைப் பார்க்க இடமில்லாமல் போய் விட்டதென்றும், தெரிவித்தாள்.

இதைக்கேட்டு விதுரன்:—நேற்றிரவு உம்முடைய பிழையால் லலிதாங்கியைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. இன்று மறுபடி ஆயிரம் பொன் கொண்டு வாரும் என்றான்.

செட்டி பணம் வேண்டுமென்று கட்டாயப் படுத்திக் கூச்சல் போட தொடங்கினான். அப்போது விதுரன் வாட் சேவகரை அழைத்தான்.

ஆறு சேவகர் உருவிய கத்தியுடன் வந்து நின்றார்கள்; அவர்களைக் கண்டவுடன் செட்டி புத்தி தெளிந்து ஒருவார்த்தையும் பேசாமல் வீடு வந்து சேர்ந்தான்.

மறுநாள் செட்டி, மறுபடியும் ஆயிரம் பொன்னெடுத்துக் கொண்டு லலிதாங்கியின் வீட்டுக்குப் போனான். இன்றைக்கு நாம் யாரிடத்திலும் அநாவசிய வார்த்தை பேசவேகூடாது. மௌனமாக மூன்று ஜாமங்களையும் கழித்து, நான்காம் ஜாமத்தில் அவசியம் லலிதாங்கியைப் பார்த்தே தீரவேண்டும். என்று செட்டி. நிச்சயம் பண்ணிக் கொண்டு போனான்.

ஆனால் நேற்றைப் போலே, எண்ணெய் ஸ்நாந கட்டத்திற்குப் போனவுடன் கலகந் தொடங்கி விட்டது. " நேற்றுத்தான் எண்ணெய் ஸ்நாநம் பண்ணியாய் விட்டதே; இன்று வெறுமே குளித்தால் போதாதா? சேர்ந்த படியாக இரவு தோறும் எண்ணெய்க் குளித்தால் உடம்புக் காகுமா? என்று செட்டி வாதாடினான்.

அந்தப் பெண்கள் இணங்கவில்லை. செட்டிக்குக் கோபம் வந்தது. அவர்கள் சிரித்தார்கள். மற்றதெல்லாம் நேற்றைக் கதை மாதிரி தான். செட்டி போஜனாதிகளைக் கண்டவுடன், மயங்கிப் போய் பொழுது கழிவதுணராமல் தாமஸப் பட்டது முதல், விதுரனிடம் வந்து சண்டை போட்டது; விதுரன் வாட் சேவகரை யழைத்தது என்ற கட்டம் வரை முதல்நாள் மாதிரியாகவே ஆயிற்று. லலிதாங்கியின் தரிசனம் கிடைக்க வில்லை.

மூன்றாம் நாட்காலையில் சொக்கநாதன்செட்டி கடையில் மரதாந்தரக் கணக்கு வரவு சிலவு பார்த்தார்கள். பெட்டியில் இரண்டு ஆயிரம் பொன் குறைகிறதே அதை எந்தக்கணக்கில் எழுதுவது என்று செட்டியை நோக்கிக் குமாஸ்தா கேட்டான்.

இதைக் கேட்ட மாத்திரத்தில் செட்டியின் கண்ணிலிருந்து ஜலம் தாரை தாரையாகக் கொட்டத் தொடங்கிற்று. தன்னை

மறந்து வாய் விட்டு :—ஐயோ,' இரண்டாயிரம் பொன் தொலைந்து விட்டதே என்று சொக்கநாதசெட்டி விம்மி அழுதான்.

குமாஸ்தா இங்ஙனம் அபூர்வமாக செட்டி அழுவதைக் கண்டு வியப் பெய்தி:—என்ன செட்டியாரே, புத்தி ஸ்வாதீனமில்லையா? எவ்வளவோ போகிறது; எவ்வளவோ வருகிறது. இரண்டாயிரம் பொன்னுக்கு அழலாமோ பெரிய பெரிய நஷ்டங்கள் வந்தாலும் நீங்கள் அழமாட்டீர்களே? இந்த இரண்டாயிரம் பொன் மலையா? இதற்கேன் அழுகிறீர்கள்? என்று கேட்டான்.

செட்டி குமஸ்தாவிடம் கைதொகையை ஒரு ஸ்பயிலே கட்டித் தன் வீட்டுவாயில் திண்ணையில் பக்கத்திலே வைத்துக்கொண்டிருந்ததாகவும், வீட்டுக்குள் ஏதோ அவஸர நிமித்தமாகப் போக நேர்ந்ததில் மறதியினால் அதை வாயிலேயே வைத்துவிட்டுச் சென்றதாகவும் திரும்பிவந்து பார்க்கு முன்னே அந்தப் பணம் களவு போய் விட்டதாகவும் ஏதோ பொய் கதை சொல்லி விட்டு, அழுகையை நிறுத்திக் கொண்டான்.

அது முதல் லலிதாங்கியை மறந்துவிட்டது மட்டுமேயன்றி சொக்கநாதன் செட்டி எங்கேனும் தாஸி வீடென்று பெயர் கேட்ட அளவிலே உடம்பெல்லாம் நடுங்கலானான். வேசையர் யமனுடைய தூதரென்றும், அவர்களைக் கோயிற் பணி முதலியவற்றில் வைத்திருப்பதே குற்றமென்றும், கலியாண காலங்களில் தாஸிகளைஅழைத்து நாட்டியம்பார்ப்பது பெருந்தீமைக் கிடமென்றும், தன்னுடைய நண்பர்களுக் கெல்லாம் உபதேசஞ் செய்யத் தொடங்கினான். தாஸிகளைப் பழித்து யாரேனும் புலவர்கள் பாட்டுப் பாடிக் கொண்டு வந்தால் அவர்களுக்கு ஏராளமான ஸம்மானங்கள் செய்யத் தொடங்கினான். லலிதாங்கியிருந்த தெருவழியாகப் போவதையே நிறுத்தி விட்டான். அப்பால் அந்தச்செட்டி வியாபாரத்தில் ஏராளமான திரவியம் சேர்த்து ஏழைகளுக்குக் கோயில்களுக்கும் கொடுத்து பெரிய புண்யவா னென்றும், தர்மிஷ்டனென்றும் பெயர் பெற்று வாழ்ந்தான்.

முற்றிற்று

இலட்சுமி காந்தன்

தொடர்ச்சி.

கருணை யென்பது கடுகளவும் இல்லை. என் மனம், அப்பொழுது பட்டபாடும், பதைத்த பதைப்பும் என்னென்று சொல்வேன் ஆற்றில் குளத்தில் விழுந்து விடலாமா வென்ற எண்ணங்கூட உண்டாய் விட்டது. உடனே என் மனைவியின் முகத்தைப் பார்த்தேன். அவளுடைய மாமியார் படும் பாட்டுக்கு இவள் எந்த மூலை; நான் தொலைந்தால் தொல்லை யெல்லாம் இவளுக்கே தான். எனக்கோ புத்தி நிலை தடுமாறிவிட்டது. நானும் பல சாஸ்திரங்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். கடவுளிடத்தில் பக்தியுண்டு. இவ்வளவு மிருந்து என்ன பயன்.

நான்படும் பாடு சிவனே யுலகர் நவிலும் பஞ்சு,
தான்படுமோ சொல்லத்தான் படுமோ வெண்ணத்தான் படுமோ,
கான்படு கண்ணியின் மான்படுமோறு கலங்கி நின்றே,
னேன்படுகின் றனை யென் றிரங்கா யென்னிலென செய்வனே.

எந்தப் புராணத்தைப் பார்த்தாலும் புண்படாத சதையில்லை. விதிப்பயின் எப்படியேனு மிருக்கட்டும். முயற்சியில் திரும்பி விடுகிறேன் என்று எனக்குள்ளே சிந்திக்கலானேன். (கூவி) நான் படும் பாடு என் மனைவிக்கு நன்றாய்த் தெரியும். கொஞ்சம் படித்தவள் என்றாலும் ஆழ்ந்த அறிவுள்ளவள். " லட்சுமி, நான் சொல்லுகிறபடி நடப்பாயா? என்று கேட்டான். நீங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ அப்படியே நடக்க சித்தமாயிருக்கிறேன், என்றாள். எங்கள் வீட்டில் போட்ட நகைகளைக் கழற்றி வைத்துவிடு, நல்ல புடைவை வேண்டாம். உங்கள்தாயார் வீட்டிலிருந்து வந்தபுடவையைக்கட்டிக் கொள், விடியுமுன் நாமிருவரும் வெளியே போக வேண்டு மென்றேன். சொன்ன வண்ணம் நடக்கத் தயாரானாளே தவிர ஏன், எத

ற்கு, என்று கேட்டாளில்லை. ஏனென்றால் லட்சுமியால் தான் ஒவ்வொரு நாளும் புண்படுகிறேன் என்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும். பரிக்ஷை பக்கமாய் வந்து விட்டதென்று என் மனைவியோடு ஒரு மாதமாய்ப் பேச்சைச் சுருக்கி விட்டேன். அப்படிக்கெல்லாம் நடந்தும் வழக்கம் போல் தான் எனக்கு சொற்பூஜை நடந்தது. முன்கோபி— என்னைக்காணும் போதெல்லாம் கோபந்தான். ஆகையால் மனம் நொந்து வெந்து போனேன். நாங்கள் இருவரும் ஒருவருக்கும் சொல்லாமல் ஒரு வண்டியிலேறிக் கொண்டு உரையூருக்குப் புறப்பட்டோம். நானும் உடுத்திய வேஷ்டியும் மேலே அணிந்த சட்டையும் ஒரு துண்டைத்தவிர வேறொன்றும் எடுத்துக் கொள்ள வில்லை. ஆதிவாரம் தோறும் படிப்பதற்கு ஸ்ரீ ராமலிங்கஸ்வாமிகள் அருளிச் செய்த திரு அருட்பா எப்பொழுதும் என் கைவசமிருக்கும். எனக்கு தமிழிலே விருப்பமதிகம். பிரஜானுகூலன் பத்திராதிபர் ஸ்ரீ ராமானுஜலு நாயுடுவிடம் ரூ 25 வாங்கிக் கொண்டு போனேன்.

மாமியார் வீடு.

உரையூர் திருச்சிக்கு சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ளது. வண்டிக்காரத் தெருவிலுள்ள எனது மாமியார் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும் போது என் மனைவியைப் பார்த்து “கொஞ்சகாலம் உன்னை விட்டுப் பிரிந்திருக்குங் காலம் வந்து விட்டது. உன்னை தாயார் வீட்டில் விட்டு இன்றே புறப்பட்டுப் போகிறேன். நான் பிரிவதால் உனக்குக் கஷ்டங்கள் பல நேரிடலாம். நீ அவைகளை சகித்திருக்கவேண்டும். என்னுடைய க்ஷேம லாபத்தை மாத்திரம் ஸ்ரீ இராமானுஜலு நாயுடு உனது தம்பியிடம் தெரிவிப்பார். நீ தெரிந்து கொள்ளலாம் என்று சொன்னேன். மாமியார் வீடு போய்ச் சேர்ந்தோம். மாமனார் மகாலிங்க முதலியார் வாருங்கள் என்று சொல்லி உட்காரச் செய்தார். மறியாதைக்காக சற்று இருந்து விட்டு வெளியே புரப்பட்டேன். ஏன் அவசரம், காப்பி சாப்பிடுங்கள் தயார் விட்டது என்றார்கள். வருந்தியழைத்தாலும் வராத நான் வலுவில் வந்தேன் காரணம் புலப்படாதிருந்தது. என் பிதாவின் தொந்தரவால் வெளி வந்து விட்டேன் என்பதை மனைவியால் தெரிந்து கொண்டார்கள்.

‘மருந்தும் விருந்தும் மூன்று நாள்’ என்பதுபோல் இந்தக்காலத்தில் மாமியார் வீட்டில் ஒரு வேளைகூட தங்கிப்போக இஷ்டமில்லை. மாமியார், மாமனார், மைத்துனர் இவர்கள் முகமெல்லாம் ஒரு விதமாய் மாறி விட்டது. வெகு கஷ்டத்தோடு ஒரு வேளை சாப்பிட்டு விட்டேன். சற்றும் ரோசமின்றி மாதக்கணக்கிலிருந்து கொண்டு சர்வாதிகாரம் செய்யும் சில நண்பர்களைக் கண்டிருக்கிறேன். தெய்வலோகத்தை ஸ்வாதீனமாகக் கொடுத்தது போல மாமியார் வீட்டையும் நினைத்து விடுகிறார்கள். உரவு சற்று தூரத்திலிருப்பதே சிலாக்கியம். நான் ஒரு வேளை சாப்பிட்டதும் அவர்கள் செய்த ஒரு மாதிரியான மரியாதையையும் கண்டு திருச்சி ஜங்ஷனுக்கு நடந்து சென்றேன்.

மாலை வேளை, கூட்டமோ சொல்லத்தரமன்று. மூன்றாம் வகுப்பு ஜனங்கள் குடியிருக்குமிடம் சென்றேன். அவரவர் மனம் போல் கண்டகண்ட விடங்களிலெல்லாம் இருவர், மூவர், ஐவர் இவ்விதமாக உட்கார்ந்திருந்தார்கள். அங்கிருந்த ஒரு பெஞ்சில் நானும் உட்கார்ந்தேன். விதிவழியென்று துன்புறு வதைவிட, தீர யோசித்து மதிவழி சென்று, வருவன பெறுவது மனமறிந்த காரியமாகும். முற்றுந் துறந்தவன் போல்—உலகப்பற்றெலாம் ஒழித்தவன் போல் வந்து விட்டதை நினைக்க, எனக்கே ஒரு வித திகிலும், ஆச்சரியமுமாயிருந்தது. பிதாவே வரினும், மாதாவே வந்து தடுக்கினும் மர்க்கடம் போலான எனது எண்ணத்தை மாற்ற முடியாது. செல்வச் செருக்கிலாழ்ந்த எனது பிதாவாவது வரவாவது, ஒரு போதுமில்லை. இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கும்போது எனது முகமதிய நண்பர்—அப்துல் கபூர் என்பவர் வந்து சேர்ந்தார். மிகுந்த அன்புடையவர். தனித்திருப்பதற்கு காரணமென்னவென்று வினவினார். எனக்கு அன்னியோன்னியமான சிநேகிதராயிருந்தும் உண்மையைத் தெரிவிக்க இஷ்டமில்லை. தோழரோடும் ஏழைமை பேசேல் என்றபடி எந்தன் குறையை யெடுத்துக் கூற இஷ்டமில்லை; எங்கிருந்து வருகிறாயென்று கேட்க, மாமியார் வீட்டிலிருந்து என்றேன். எத்தனை நாளிருந்தாய் என்று கேட்டான். காலையிற் போய் மாலையில் வந்து விட்டேன் என்றேன். அதற்கு அவன் சொன்னதாவது:—

ஒருவன் மாமியார் வீட்டுக்குச் செல்வானேயாகில் அதைப் போலிழிவு அவனுக்குக் கிடையவே கிடையாது. மாமியார் வீட்டு விருந்து கார்த்திகைப் பிறை போலிருக்கவேண்டும்.' அவ்வாறின்றி மாமியார் வீட்டிலே சதா காலம் போக்குகிறவன் மிகுந்த அறிவிலி. மாமியார் வீட்டில் விருந்துக்குப் போகும் மாப்பிள்ளைகளில் சிலர் ஒரு வேளைச் சாப்பாடு மாத்திரம் வைத்துக் கொள்ளுகிறவர்கள். சிலர் ஒரு நாள் முழுதும் இருக்கிறவர்கள். சிலர் விருந்தும், மருந்தும், மூன்று நாளென்று சொல்லிப் போயிருக்கிறவர்கள். சிலர் மாதக் கணக்காயிருக்கிறவர்கள். சிலர் எப்பொழுதுமே மாமியார் வீடே கைலாயம், மனையாட்டி சொல்லே தேவாமிர்தமெனவும், நினைத்து இருக்கிறவர்கள். இவர்களில் முற்சொன்ன ஒருவேளை விருந்தும், மூன்று நாள் விருந்தும், சரியான விருந்துகள்.

அப்படிக்கின்றி தன் வீட்டு வேலையையுங் கெடுத்து, மாமியார் வீட்டுச் சோற்றுக்கும் கெடுதி வைத்து, ஊரார் பழிக்கும் அவர்கள் வாய்க்கும் வேலை வைத்து, அறநூல்களினது வரையறும்புகளையும் பொய்க்க வைத்து, மானங்கெட்டு, மதியிழந்து, மாமியார் வீடே கதியென்றிருப்போரை என்னென்று சொல்வது.

இப்படியிருக்கிறவர்களை மைத்துனர்கள் ஒரு பொருட்படுத்தாமல், ஏதாவது சொன்னாலும் அட போ! உம் வேலை தெரியும். என்று சொல்லுவார்கள். யாராவது மாமியாரிடம் போய் மாப்பிள்ளையைப்பற்றி சொல்லுவார்களேயாமாகில், என்ன நம்ம, மாப்பிள்ளையா, சரிதான் போங்களென்று சொல்லிவிடுவாள். வாழ்க்கை மனையாட்டியோ ஏதாவது சொன்னாலும் அசட்டை பண்ணிவிடுவாள். ஓர் துரும்பாக மதிப்பாள். இவ்வளவு மானக்கேடு வருமென்று தெரிந்த சில்லோர்களும் மாமியார் வீடே தஞ்சமென்று புகுகின்றனர். இதை ஒட்டிய குமரேச சதகத்தில் குருபாததாச பாடியதாவது

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவில்
 மேன்மேலு முபசரித்து
விருந்துகள் சமைத்துநெய் பாறயிர் பதார்த்தவகை
 வேண்டுவ வெல்லாமமைப் பார்
ஊட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் தைலமிட்
 டுறுதியாய் முழுகிவிப் பா

ரோயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவ
 ரீற்றநா ளலாகி லோ
நாட்டமொரு படியிரங் குவதுபோன் மரியாதை
 நாளுக்கு நாள்குறைவுறும்
நகைசெய்வர் மைத்துனர்க ளலுவல்பார் போவென்று
 நாணமன் மாமி சொல்வாள்
வாட்டமனையாளொரு துரும்பாய் மதிப்பளவள்
 மட்டியிலு மட்டியன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே
என்று சொல்லிச் சென்றனன்.

அதன் பிறகு ஞானக்கண் என்ற கிறிஸ்தவ நண்பர் வந்து சந்தித்தார். அவருக்கும் கைலாகு கொடுத்தனுப்பி விட்டேன். ஒரே விடத்திலிருந்தால் தெரிந்தவர்களுக்கெல்லாம் பதில் சொல்லிமுடியாதென்று, ஸ்டேஷனை சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தேன். பொழுதும் போயிற்று. மணி 8-க்கு பட்டணம் போகும் வண்டி வந்தது. மூன்றும் வகுப்புக்கு டிக்கட்டு வாங்கி ஸ்டேஷனுக்குள்ளே சென்றேன் ஒரு வண்டியாவது காலியில்லை. கூட்டமோ, சந்தமோ-மார்க்கட்டு மேலென்று சொல்லலாம். (போட்டர்) ரெயில்வே கூலி, இரண்டணா நாலணா வாங்கிக்கொண்டு, ஏதாவது ஒருவண்டியைத் திறந்து 'ஏறுங்கோ—ஏறுங்கோ' என்று சொன்னான். வண்டிக்குள் இருக்கிறவர்களில் ஒரு ஸ்திரீ—'என்னடா, நாங்க எட்டுப்பேர் இருக்கிறோமே, வெறுமே—இன்னம் எங்கடா இடம் இருக்கு'—என்று சொன்னாள். 3 குழந்தைகள் ஸ்திரீ புருஷர் இத்தனைபேர்களுக்கு இடம் வேண்டும். வேறிடம் பார்த்து ஓடினார்கள். நானோ தனி மனிதன், கார்டு வண்டிக்கு பக்க வண்டி அநேகமாய்க் காலியாயிருக்குமென்று யூகிப்பது வழக்கம். அப்படியே இடம் தாராளமாயிருக்க ஏறிக்கொண்டேன். அநேக ஸ்டேஷன்களில் ரெயில் வண்டி வந்து நின்றதும் ஜனங்கள் ஸ்டேஷன் வாசலுக் கெதிரே யிருக்கும் வண்டியில் ஏறிக்கொள்வார்கள். ரெயிலுக்குப் போகிற அவசரம் என்று சொல்வது வழக்கம். ஸ்டேஷனுக்குப் போய் ரெயிலில் ஏறும் வரை அவசரம் தான். இப்பொழுது தான் மறப்பென்னும் கள்வனுக்கு கொள்ளை போகும் நேரம். வண்டியிலேறியதும் அதை மறந்தேனே, இதை மறந்தேனே, அக்காளிடங் கூட சொல்லாமல் வந்தேனே, என்ன அவசரம், ஒரு ஊருக்குப்

புரப்பட்டால் இந்த அவசரம் தான். ரெயிலுக்கு நேரமாய் விட்டதென்று, எனக்கு சாப்பாடு கூடசெல்ல வில்லை. இப்படி அடுக்கடுக்காய் பேசுவார நேகர். நிதானம், பொறுமை, இவையிரண்டும் எவ்விடமாவது விலைக்குக் கிடைக்குமானால் வாங்கலாம் என்று அங்கிருந்தவர் இன்னொருவரிடம் சொன்னார். பிட்டில், தம்பூர், உயர்ந்த மேல் தட்டில் வைத்திருந்தார்கள் மொத்தம் அங்கிருந்தவர் ஐந்துபேர். ஒருவர் என்னைப்பார்த்து எந்த ஊருக்குப் போகிறீர் என்று கேட்டார். நான் பட்டணத்துக்குப் போகிறேன் என்று சொன்னேன். சற்று நேரத்திற் கெல்லாம் ரெயிலும் புறப்பட்டது. சென்னையில் சங்கீதக் கச்சேரி நடத்தச் செல்லுகிறார்களென்றறிந்து கொண்டேன். அவர்களில் மூவர் வெற்றிலைபாக்கு புகையிலை உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் ஊ-ஊ-ஊ-ஏ-ஏ என்று மெல்லிய தொனியால் பாடிக் கொண்டே யிருந்தார். நல்ல சாரீரம், செவிக்கு வெகு இனிமையாயிருந்தது. இன்னொருவர் தாளம் போட்டுக் கொண்டிருந்தார்.

"அடே கிட்டு! அருட்பாவில் ஏதாவது பாடு கேட்போம். இராப்பொழுது வெகு சுகமாயிருக்கும். தஞ்சாவூர் போகிற வரை" என்றார்.

பாட ஆரம்பித்தார்.

"மருந்தறியேன் மணியறியேன் மந்திர மொன்றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கை நிலையறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியே னறந்தான்
செய்தறியேன் மனமடங்குந் திறத்தினி லோரிடத்தே
யிருந்தறியே னறிந்தோரை யேத்திடவு மறியே
னெந்தை பிரான்மணி மன்ற மெய்தவறிவேனோ
விருந்திசை சொலவறியே னெங்ஙன நான்புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேது மறிந்திலனே"

இந்தப்பாகொத்த அருட்கவிகளை வெகு சீக்கிரம் படித்துவிடுவார்கள். ஆனால் அந்தக் கவிவாணர்க்கு அரைமணி நேரமாயிற்று. என் மனம் குதூகலத்தை யடைந்தது. ஆனந்த பரவசத்தை உண்டாக்கியது. எனக்கு அப்பொழுது ஒரு நினைவு (ஞாபகம்)

வந்தது. அதாவது ஆறுமுகக் கடவுள், கீதத்தாலும் ஒருவன் ஞானத்தை அடையலாம் என்று, சரஸ்வதியிடம் வர்தம் செய்தாரெனக் கேள்விப்பட்டேன். சங்கீதம், ஆஹா!! அந்த ரீங்கார—மெல்லிய—தொனி மனதை, விழுங்கி விட்டது. மெய்மறந்தேன், நித்திரை தான். செய்தேனோ வென்ற சந்தேகந் தோன்றிற்று. கண்மூடி, இருசெவி வாய்படுத்து உள்ளங்குளிரக் கேட்டேன். எல்லாம் மறந்த நிலையிலிருக்கக் கண்டேன். ரெயில்வண்டி ஒரே மூச்சாய் தஞ்சாவூர் வந்து நின்றது. முக்கியமாய் ஜங்ஷன் பார்க்க வெகு அழகென்று சொல்வார்கள். ஆனால் இத் தஞ்சைமா நகரைப் போல் எங்கும் அமைந்ததில்லை. ஸ்டேஷனுக்கு வருவோர்களுக்கு ஒரு மாதிரிபாதை வெளியே போகிறவர்களுக்கு சுரங்கம் போன்ற பாதை. வழக்கம்போல் வண்டியும் புறப்பட்டது. மறுநாள் காலை சென்னை வந்து சேர்ந்தேன். ஏற்கனவே கிடைத்துள்ள விலாசப்படி மண்ணடி நெ 43 மனகாவலப் பெருமாள் பிள்ளை அவர்களது † ஓட்டலில் தங்கினேன். திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து வருகிறவர்களுக்கு மிக்க வசதி. வியாபார விஷயமாய் வருகிறவர்களும், மாணவர்களும் விசேஷமாய்த் தங்குகிற வழக்கம். எனது தோழர் சீயாழி சம்பந்தஞ் செட்டியார் பச்சையப்பன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தார். அவருடன் ஒரு வாரமிருந்தேன். சென்னையில் வேலைக்காகப் பிரயாசைப்பட்டேன் "இனம் இனத்தோடே, வெள்ளாடு தன்னோடே, என்பது போல ஒரு ஆபீசில் முதலியார் தலைமை ஸ்தானத்தை வகித்திருந்தால், அந்த ஆபீஸில் சகல வேலைகளுக்கும் முதலியார் தான். அய்யராயிருந்தால் அய்யர், அய்யங்காராயிருந்தால் அய்யங்கார், இப்படியே நடைபெறுகிறது. நானும் முதலியார் வகையாயிருந்தாலும், முதலியார் என்ற பட்டமுள்ளோர் ஒன்றாக மாட்டார்கள். பிள்ளை முதலியார் பட்டம் தாராளமாய் வழங்குகிறது. சென்னை முதலியார் வகையிலேயே பலவிதம். சென்னையில் உத்தியோகமும் விநோதமாயிருக்கிறது. 25 ரூ. வேலைக்கு ஒருவர் ரூ 100 லஞ்சம் கேட்டார். என்ன செய்வேன். எந்த உத்தியோகத்திலும் பழகின

† இந்த ஓட்டல் 1920-ல் எடுபட்டுவிட்டது.

வனல்லன். பிரைவேட் வைத்திய சாலையிலுள்ள ஒருவர் அங்கிருந்தார். அவரும் அறிமுகமானார். தமது ஆபீஸில் வேலை காலியாயிருக்கிறதென்று சொன்னார். மறுநாள் அங்கு போய்ச்சேர்ந்தேன். என்னை உத்தியோகத்தில்—குமாஸ்தாவாக ஏற்றுக்கொண்டார்கள். ரூ. 20 சம்பளமெனத் தீர்மானிக்கப்பட்டது. மூன்று மாதமிருந்தேன். அவ்வேலையின் போக்கு எனக்கு அபிவிர்த்தி தரக்கூடியதாயில்லை. உடனே அந்த வேலையை விட்டு விட்டு கல்கத்தா போய்ச் சேர்ந்தேன். அங்கே எனது நண்பர வைத்தியநாத அய்யர் ஒரு கம்பெனியில் ரூ. 150 சம்பளத்தில் அமர்ந்திருக்கிறார். அவருக்கு நான் வருவதாக ஒரு கடிதம் எழுதியிருந்தேன். எதிர் பார்த்தபடி அவரும் வந்திருந்தார். ஹௌரா என்று கல்கத்தா ஸ்டேஷனுக்குப் பெயர். சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை விட 3, 4, பங்கு அகலமுள்ளது. இருவரும் ஒட்டலுக்குப் போய்ச் சேர்ந்தோம். இரண்டு நாட்களாய் ஊரெல்லாம் சுற்றிப்பார்த்தேன். டிராம் வண்டிகளுக்கு போல் மாற்றித்திரும்புகிறதில்லை. ஒவ்வொரு மூலைகளில் வண்டிகள் வட்டமாகச் சுற்றி வருகிறது. சைனாக்காரர்கள் வெகு அதிகம். எல்லோரும் மிக்க சுறு சுறுப்பாகவே யிருக்கிறார்கள். சோம்பல் என்பது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாதுபோலும் காலுக் கணியும் பூட்சுதான் விசேஷமாய்ச் செய்கிறார்கள். விக்டோரியா மிமோரியல் ஹால் வருஷக் கணக்காய் கட்டி வருகிறார். இந்தியாவில் இது தான் உன்னதமான பெரிய சபா மண்டபமாம். லட்சக் கணக்கான திரவியங்கள் செலவிடப்பட்டிருக்கின்றன. வேல்ஸ் இளவரசரால் 1921-ல் திறக்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது. வீதிகளெல்லாம் மைல் கணக்கான நீளத்தில் இருக்கிறது. 2, 3, மெத்தைக்குக் குறைந்த கட்டடங் கிடையாது.

பாஷாபிமானம் அதிகம் எம். ஏ. பட்டம் பெற்றிருந்தாலும் வங்காள பாஷையைத்தான் பேசுகிறார்கள். வங்க பாஷை, இந்துஸ்தானி இவ்விரண்டும் தெரியாவிடில் இங்கிலீஷில் பேசுவார்கள். இனத்தார் தவிர வேறு எவ்வருணத்தவரைக் கண்டாலும் இந்துஸ்தானியில் தான் பேச ஆரம்பிப்பார்கள். பி. ஏ., எம். ஏ. படிக்கும்

மாணவர்கள்கூட தாய் பாஷையுடன் இங்கிலீஷ் பதத்தை உபயோகிப்பதே கிடையாது.

கோஷாவென்றால் பிறர் தன்னைப் பார்க்கக்கூடாது. தான் எவரையும் பார்க்கலாமென்ற அருத்தமல்ல. ஸ்திரீகளின் முகத்தைப் பார்ப்பது பெரிய குற்றமெனச் சொல்லப்படுகிறது. சிரசு அக்னி அம்சமாம். மகா காளி தேவியின் பாதத்தையே தொழுவார்கள். குடும்ப ஸ்திரீகள் வெளியில் வரமாட்டார்கள். ஒரு வேளை போக நேரிடில் மூடு பல்லக்கில் போவார்கள். பல்லக்கைத் தூக்கிப்போகிறவன் குறித்தவிடம் போக வேண்டும். உள்ளே யிருக்கும்போது வெளியே பார்க்க மாட்டார்கள். முக்கியமாய் ஸ்திரீகள் கட்டுப்பாடாயிருக்கிறார்கள்.

கைத்தொழில் செய்யவும், யந்திரங்களைக் கொண்டு வேலை செய்யவும் முயற்சி செய்கிறார்கள். யந்திரங்களையும் தயார் செய்கிறார்கள். கடியாரங்கள் செய்கிறார்கள். கண்ணாடி புட்டி பலவிதம் செய்கிறார்கள்.

நமது நாட்டில் ரூ 1000, 2000 இருந்தால்கூட பெரிய பணக்காரனாய் நினைத்துக்கொள்கிறார்கள். கல்கத்தாவில் கோடீஸ்வரர்கள் அதிகம். லட்சக்கணக்கில் இருந்தாலும் செல்வவந்தராய்க் கருதிக் கொள்வதில்லை.

கல்கத்தாவில் தஞ்சை ஜில்லா பிராமணர்கள் அதிகம் அவர்களில் மாதம் ரூ 2000 சம்பளம் பெறுகிறவரும் இருக்கிறார்.

சோஷியல் என்று இங்கிலீஷில் சொல்வார்கள். சமபந்திபோஜனம் செய்வதும், ஜாதிபேதம் பாராட்டாதிருப்பதுமே அதன் தாத்பரியம். இதனையும் சிலர் அனுசரிக்கிறார்கள். ஆனால், இது ஆச்சரியமல்ல. சென்னையிலுள்ள காப்பி ஒட்டலில் பார்த்தால் நன்கு விளங்கும். ஒரு மேஜையைச் சுற்றி எட்டு பத்துபேர் உட்கார்ந்திருப்பார்கள். நாயுடு, முதலியார், பிள்ளை, நாடார், தேவர், செட்டி, அய்யர் இன்னும் பல வருணத்தார்களும் உண்டு. நல்ல உடை, தான் பிரதானம். ஜாதி வித்தியாசமே கிடையாது. ஊர்க்கதை இம்மட்டோடிருக்கட்டும் இனி சொந்தக் கதையை கவனிப்போம்.

தர்ம தொலாவீதியில் தங்கியிருந்தேன். ஆரிஸன் ரோட்டி லுள்ள ஆர். வி, சாட்டர்ஜி கம்பெனியில் குமாஸ்தாவாக ரூ. 60 சம்பளத்தில் அமர்ந்தேன்.. அவர்கள் ஜப்பான் சைனு தேசச் சரக்கு களை மொத்தமாய் தருவித்து வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறார் கள். சுமார் 50 லட்சத்துக்கு ஐவேஜ் உண்டு. எஜமானர் பெருந்தன் மையான நல்ல குணமுடையவர். சாந்தமாயுள்ளவர். மூன்று மாத மாய் வரும் சம்பளத்தில் ஓட்டல் செலவு நீக்கி பாக்கி பணத்தைக் கொண்டு காலத்துக்கேற்ற உடை தயாரிப்பதிலேயே செலவிட்டுக் கொண்டிருந்தேன். ஊர்க்கவலை யென்பது அடிக்கடி மனதில் பட் டாலும் பிதாவை நினைக்கும்போது பற்றுவிட்டு விடுகிறது.

நாலாவது மாதம் எனது ஆடம்பரமான செலவைக் கவனித்து என்னைப்பற்றி மானேஜர் மூலமாய் விசாரித்தார். உள்ளதை உள்ள படியே சொல்லி, கஷ்டப்பட்டு போதுமான திரவியம் சம்பாதித் துக் கொண்டே ஊருக்குத் திரும்புவதென்ற தீர்மானத்தோடு வந் திருக்கிறதாயும் சொன்னேன். மேலும் கம்பனி வேலைகளை யெல்லா வற்றையும் துரிதமாய்த் தெரிந்துகொள்ள ஆவலுடையவனயிருந் தேன். அவரவர் நோக்கமறிந்து நடந்துகொள்வேன். இதனல் அவ்விடத்தில் உத்தியோகத்திலுள்ள அனைவரிடத்திலும் மிக்க அன்பு உண்டாகும்படி நடந்து கொண்டேன், சரக்குகளை விற்பனை செய்வதற்கு என்னை உயர்த்தி ஆறும் மாதத்தில் ரூ. 75 சம்பளம் கொடுத்து வந்தார்கள். பொருள்களை சாமர்த்தியமாய் பருவமறிந்து விற்பனை செய்து வந்தேன். இதனல் அவ்விடத்திலுள்ள வியா பாரிகளெல்லாம் சிநேகிதமானர்கள். அவரவர் நோக்கமறிந்து நடந்து கொண்டாலும், 'ஆரியக்கூத்தாடினலும் காரியத்தில் கண்' என்பது போல அதிக ஜாக்கிரதையாயிருந்து கொள்வேன். காரியத்தில் கண்டிப்பும், நட்பில் அன்புமாய் காலங்கழித்து வரும்போது பம் பாய் போகும்படி நேர்ந்தது.

(தொடரும்)

பிருகு முனிவர்

கடற் கரையில் ஒரு காலக்ஷேபம்.

முன் தொடர்ச்சி.

பிருகு முனிவர் ககனமார்க்கமாய் சிருஷ்டி கர்த்தாவிருக்கும் படியான பிரம்மலோகம் போய்ப் பார்க்கும்போது அந்தப் பிரம்மா வானர் நாவினிடமாக சரஸ்வதியை வீற்றிருக்கச் செய்து சிருஷ்டி சக்கரத்தை இடைவிடாது சுற்றிக்கொண்டே யிருந்தார்.

பிருகு முனிவரைத் திரும்பிப் பார்க்கவேயில்லை, மிகுந்த கோபம் உண்டாய்விட்டது. ஆஹா! என்னே இவனுடைய செரு க்கு! கைலாசத்திலிருக்கும் சிவ பெருமானிடம் போகின்றேன் என் று அதிவேகமாய்ப் புறப்பட்டார். பிரம்மாவே இத்தகைய குற்றம் செய்வதாயின் உலகத்தார் என்ன செய்யார்? தொழிலில் தன்னைப் பரிகொடுத்து இப்படியும் இருப்பரோ! மிகுந்த துக்கங் கொண்ட வராய் கைலாசம் போய்ச் சேர்ந்தார்.

என்ன கொடுமை! இங்கும் இப்படித்தானு? என்று மூக்கின் மேல் கையைவைத்துப் பார்த்தார். சிவ பெருமானின் இடது பாகத்தை சொந்தமாய்க் கொண்டு பார்வதி தேவி யிருக்கிறதைக் கண்டு வியப்பெய்தினர். மெய் சிலிர்த்தனர், துடிக்கின்றனர்; இவர் படும் பாட்டை பார்வதி தேவியார் பார்த்து விட்டனர். நாங்கள் இருவரும் ஒன்று யிருக்கக்கண்டு சகியாத ஏ முனியே! தவஞ்செய் தாய், ஞானம் பெற்றுயில்லை, பூவுலகம் இப்பொழுதே போவாய், பிறப்பெடுப்பாய், வன்கண்கொண்டு பார்த்தாயன்றே? பிரியா விடை பெறுவாய், வருவாய்க்குத் துன்புறுவாய் வாய்ஞானம் பல பேசுவாய். இல்லானை விட்டகலாய். போய்வருவாய். இதுவே எனைப்பார்த்த பலனென அறிவாய் என்று சபித்தனள். தலை குனிந்து, வெட்கி

னாலும் உன் சாபம் விண்டேகாது ஆயினும் மகா விஷ்ணுவையான் பார்த்து வரும் வரை உன் சாபம் என்னைத்தீண்டாதிருக்க என்று சொல்லி வைகுண்டத்திற்குச் சென்றார்.

மகா விஷ்ணுவின் நிலையைக் கவனிக்கும் போது பிரம்மாவும் சிவனும் மேலெனத் தோன்றிற்று. பெருமாள் லக்ஷ்மியுடன் சேஷ சயனத்தில் பள்ளி கொண்ட வண்ணமாயிருக்கிறார். அடக்கமுடியாத பெருங் கோபங்கொண்ட பிருகு முனிவர், உடல் துடிக்க ஓடி விஷ்ணுவை ஒரு காலால் உதைத்து தள்ளினர். விஷ்ணுவானவர் கீழே பிரண்டு, விழுந்தனர். லக்ஷ்மிக்கு வந்த கோபத்துக்கே அளவேயில்லை. விஷம் உடலில் பரவியது போல் சபித்து விட யோசித்துக் கொண்டிருக்க, இதனைக்குறிப் பாலறிந்த மகா விஷ்ணு உடனே எழுந்து, லக்ஷ்மி இப்பொழுது வாய்திறக்காமல் வெந்நீர் கொண்டுவா என்றார். எதற்காக வெந்நீர் கேட்கிறார் என்பதை யறிந்து கொள்ள முடியாமல், அவர் ஆக்ஞைக்கு உட்பட்டவளாய் வெந்நீர் கொண்டு வந்து கொடுத்தாள். விஷ்ணு, முனிவர் பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்து, மன்னிக்க வேண்டும். தங்கள் தரிசனம் துர்லபம், பரா முகமாயிருந்து விட்டேன். க்ஷமிக்க வேண்டும். தங்கள் காலுக்கு நோவு உண்டாகும். இதோ வெந்நீரிட்டு ஒத்தடம் போடுகிறேன் என்றார். லக்ஷ்மி இதைப் பார்த்து ஆச்சரியப் பட்டு மௌன மாயிருந்தாள்.

எந்த விடத்தில் நோவு உண்டாகிறது சொல்லுங்கள், யான் செய்த தவப்பயனன்றோ, தங்கள் தரிசனம் கிடைக்கப் பெற்றேன் என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஸ்வாமி! தயவு செய்ய வேண்டும், அடியேனுக்கு பூஜை வேளையாய் விட்டது. போய் வருகிறேன் மன்னித்தருள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதற்கு அம்முனிவர். ஏ விஷ்ணு! உலகம் உன்னையே புகழுதே, உன்னையன்றி வேறுண்டோ, உனக்கு பூஜையுமுண்டோ. உனக்கு மேல்ஒரு கடவுளுமிருக்கிறாரா, என்ன விநோதமாய்ப் பேசுகின்றீர் என்றார். பூஜை செய்யாது புசிப்பது கிடையாது, அடியேன் தொண்டரடிப் பொடி என்று பணிவே தன் பாக்கியமெனப் பெற்றவர் போல் விடை பகர்ந்தார். அப்படியாயின் நினது பூஜையை

யானும் பார்க்கவேண்டு மென்றார். இதுவரை எவரும் என்னைப் பின் தொடர்ந்ததில்லை. நீங்கள் வரவேண்டுமென்று கேட்கிறீர்கள். தாங்களோ மகான்—தபோதனர் மறுக்க முடியவில்லை. தங்கள் மனம் போலே ஆகுகவென்றார். மகா விஷ்ணு ஸ்நானஞ் செய்து விட்டு பீதாம்பர மணிந்து மிக்க பயபக்தியுடன் பூஜை செய்யுமிடம் சென்றார். ஒரு செப்பு சம்படத்தைத் திறந்து புஷ்பங்களைப் போட்டுத் தியானித்துக் கொண்டிருந்தார். சம்படத்திலிருக்கும் பொட்லம் இன்னதென்றறிய முனிவர் ஆவலாயிருந்தார். பகவான் தியானம் செய்வதை நிறுத்தியவுடன் அந்த பொட்லத்தில் இருப்பதென்ன வென்று வினவினார். பரமதயாளுவே! தவமுனியே! நான் என்னென்று சொல்வேன். வாய்கொண்டு இன்னதெனச் சொல்லமுடியாத அரும்பொருள். எனக்கு அபூர்வமாய்க் கிடைத்தது. என் மனதுக்கே எட்டாத நிலையிலுள்ளது. சொல்லுக் கடங்காத வஸ்து ஐயனே! யான் என்னென் றுரைப்பேன். மன்னிக்க வேண்டும் என்றார். ஒரு பொட்லமாக கட்டி வைத்துக் கொண்டிருப்பது இன்னதென நீயே தெரிந்துகொள்ள முடியவில்லையென்றால் யான் எங்ஙனம் தெரிந்துகொள்வது. அந்தப் பொட்டலத்தைப் பிரித்துஇன்னதென்றாவது காட்டிவிடு என்றார். அதற்கு மஹா விஷ்ணுசொல்லையே சுகமாய்க்கொண்ட மகா முனியே அநேக யுகங்களாக தேடிய பரம்பொருளை வைத்திருக்க அதனை கண்மூடிமௌனியாய், பஞ்சேந்திரியங்களை அடக்கியும், பஞ்சகோசங்களைக் கடந்தும் இருளிலே கிடந்து ஒன்றுமறியாத நிலையில் நிஷ்காமிய பலத்தால் இங்குவந்த பெரியோய் எவருமே இதுவரை இங்ஙனம் கேட்டதில்லையே. யான் பூஜிக்கத் தக்கவனே யன்றி பிரித்துப் பார்க்க யோக்கிய மற்றவன். என்செய்வேன் என்றார். ஏ மகாவிஷ்ணுவே எது எப்படி யானாலும் எனக்கு இன்னதெனக் காட்டியே தீரவேண்டும் என்றார். வெகுஜாக்கிறதையாக மெதுவாக அவிழ்த்துக் காட்டினார். அந்ததொண்டருக்குள் அடங்கிய மகாவிஷ்ணு ஒன்றும் தெரியவில்லையே யென்றார். அய்யனே இதுவே யான் பெற்ற பாக்கியம் இதற்கேயான் படும்பாடு எனக்கு இதுவே கதி. யான் இதற்குள்தான் அடக்கம். தொண்டர்களின் பாததூசி, என்றார்.

அம்முனிவர் அளவற்ற ஆச்சரியமடைந்து, அவர் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்து யான் நினைத்துவந்த விஷயங்களுக்கு விடை

வேண்டும் என்று பணிந்து கேட்டார். மகாவிஷ்ணு சொல்லுகிறார் பிரவிர்த்தி மார்கத்திலிருப்போருக்கு சக்தி வேண்டும். அந்தசக்தியே எங்களைப் பிரியாத ஸ்திரீ ரூபமாயிருக்கிறது. தங்களைப்போலுள்ள ஞானசிகாமணிக்கு தவஞ்செய்து தனிப்பெருங் கருணையால் தன்னை யறிந்து பின்னர் அத்தலைவனையும் தானையறிந்து வேதப்பொருளின் லக்ஷியத்தை உணர்ந்திருக்க வேண்டும். இதைவிட்டு பிரவிர்த்தியை விசாரித்து அறியக்கூடுமா? மாயா விலாசத்தில் மயங்கிய உலகம் அது விசாரணைக்குள் அடங்காது. தன்னை விசாரிப்பதே விசாரணை என்றார். பார்வதியின் சாபம் முன்வினைக்கீடாக லபித்தது என்றார். உடனே அம்முனிவர் விடை பெற்றுப் போக, பார்வதி தேவியின் சாபந்தடுக்க இப்பூவுலகில் மனிதவடி வெடுத்தனர்.

இவ்விதம் சொல்லிவிட்டு இராயர் சற்று மௌனமா யிருந்தார். ஒருவர், இவ்வளவுதானா வென்றார். இன்னொருவர் அவசரப்படேல் என்றார். மற்று மொருவர்— என்னடா, ஒரே மூச்சாய் தொரு மெயில் போலவந்து ஜங்ஷனில் நிற்பதுபோல் களைப்பாறுகிறார் என்றார். தமிழ் தெரியாதராயரும் நன்றாய் சொன்னார்என்றார் ஒருவர். இது ஒரு காலக்ஷேபம் என்றார் ஒருவர். கேட்போர் மனதைக் கவர்ந்து கதையைச் சொன்னார் என்றார் ஒருவர். அடே; ஒரு பாட்டு தான் ஜோர், ராஜம் உம். உம்—என்றார்.

சௌந்தர ராஜனிடம் பாடு என்று சொன்னால் கொஞ்சமும் பின் வாங்குவதில்லை. உடனே பாட ஆரம்பித்தார்.

"காமவுட்பகைவனுங் கோபவெங் கொடியனுங்
கனலோபமுழுமூடனுங்
கடுமோக வீணனுங் கொடுமதமெனுங் துட்ட
கண்கெட்டவாங்காரியும்,
ஏமமறு மாச்சரிய விழலனுங் கொலையென்
றியம்புபாத கனுமாமிவ்,
வெழுவருமிவர்க்குற்றவுற வானபேர்களு
மெனைப்பற்றிடாமலருள்வாய்,
சேமமிகுமாமறையிறே மெனுமருட்பதத்
திறனருளி மலயமுனிவன்,
சிந்தனையின் வந்தனையு வந்த மெய்ஞ்ஞான
சிவ தேசிகசிகாரத்னமே,
தாமமொளிர் சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண் முகத்துய்ய மணியுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

என்னமாதிரியிருக்கு — உள்ளமுருகுது — அப்படி யல்லவா யிருக்கவேண்டும்,

இன்னும் ஒரு பாட்டு —

"ஒருமையுடனினது திருமலரடி நினைக்கின்ற
வுத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவா
ருறவு கலவாமை வேண்டும்,
பெருமைபெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்,
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியா திருக்க வேண்டும்,
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டு
முனை மறவாதிருக்க வேண்டும்,
மதி வேண்டும் நின்கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வினால் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே,
தண்முகத்துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே"

இன்னும் வரும்

வேதபுரத்தின் இரகஸ்யம்

[ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதி எழுதியது.]

இந்த விஷயம் 1909-ஆம் வருஷத்தில் நடந்தது; தொண்டை மண்டலத்தில் கடற்கரை யோரத்திலுள்ள வேதபுரம் என்ற துறைமுகப் பட்டிணத்தில் நடந்தது. மருதப்பிள்ளை அல்லது மருதப்ப பிள்ளை என்பவர் அந்த ஊரில் பிறந்து வளர்ந்தவரல்லர். வடக்கே சென்னப்பட்டணத்தில் பிறந்து வளர்ந்தவர். ஜாதியிலே யாதவர்—அதாவது, இடையவர் குலத்தைச் சேர்ந்தவர். சில வருஷங்களுக்கு முன்னே 1904-அல்லது 1905-ஆம் வருஷத்திலே தான் அவர் வேதபுரத்தில் வந்து குடியேறினார்.

அவர், அவருடைய மனைவி, இரண்டு குழந்தைகள்—இத்தனை பேருமாக வேதபுரத்தில் மாரியம்மன் கோயில் தெருவில், மாஸம் நான்கு ரூபாய் வாடகை கொடுத்து ஒரு சிறிய வீட்டில் குடியிருந்தார்கள். 1909-ஆம் வருஷத்திலே மருதப் பிள்ளைக்கு வயது முப்பத்தாறு யிருந்தது. செவப்பு நிறம்; உறுதியும், பலமும், அழகுமுடைய அங்கங்கள்; மூக்கும், விழியும் மிகவும் அழகாக, மாசு மறு, தழும்பு—ஒன்றுமில்லாமல் பள பள வென்று சந்திரன் மாசின்றி யிருந்தாற் போன்ற முகம்; அதிலே பட்டை நாமம்; கண்ணங்கரேலென்று, அம்பட்டன் கத்தியே படாமல், செழிப்புற வளர்ந்து கிடந்த மீசை, தாடிகள்; தலையிலே, ஜரிகைக் கரை போட்ட செம்பட்டு லேஞ்சி; டாஸர் பட்டுக்கோட்; அரையிலே கிளாஸ்கோமல் வேஷ்டி;—இத்தனையும் சேர்ந்து மருதப் பிள்ளையின் பொதுத் தோற்றம் மிகவும் வீரமுடையதாகவும் கண்ணுக் கினிதாகவும் விளங்கிற்று.

இவரைத் தெருவிலே பார்த்தால், யாரோ ஜமீன்தாரென்று நினைக்கும்படியாக இருக்கும். ஆனால், இவருடைய வீட்டிற்குள்ளே போய்ப் பார்த்தால் மூதேவி "ததிக்கிடத்தோம்" என்று நர்த்தனம் செய்து கொண்டிருப்பாள். இவருடைய பெண்டாட்டி கரிநிறமும், அம்மைத் தழும்பு மூஞ்சியும்; எண்ணெய் பார்த்தறியாதது போன்ற பரட்டைத் தலையும், தண்ணீர் கண்டறியாதது போன்ற அழுக்குடம்பும், கந்தைச் சேலையும், தன் யதார்த்த வயதுக்கு மேலே முப்பது பிராயம் அதிக மாகத் தோன்றும் மேனிக் கோலமும்;———கழுதை வாகனமொன்று தான் குறை; மற்றப்படி இவளை வர்ணிப்பதைக் காட்டிலும், ஸாக்ஷாத் மூதேவியையே வர்ணித்தால், அந்த வர்ணனை இவளுக்கும் பொருந்தும். குழந்தைக ளிரண்டும் ஆண், ஒன்றுக்கு ஐந்துவயது மற்றொன்றுக்கு மூன்று வயது. தாரித்திரியத்தின் சித்திரப் பதுமைகளே இவ்விரண்டு பிள்ளைகள். வீட்டில் ஒரு நாற்காலி, மேஜை, ஒரு பெரிய வஸ்த்ரப் பெட்டி— (மருதப் பிள்ளையின் துணிகளடங்கியது); இவருடைய கைப்பெட்டி;— சில ஓட்டைப் பானைகள், இவ்வளவு தான் ஸாமான். பெண்டாட்டிக்குத் துணி யிருந்தாலன்றோ பெட்டி வேண்டும்? வீட்டை இத்தனை அலங்கோலமாக வைத்திருந்தாலும், மருதப் பிள்ளை ஊரில் வெகு டாம்பீகமாகவே சுற்றிக்கொண் டிருந்தார். இவருக்குச் சென்னப்பட்டணத்தில் சில அச்சுக்கூட வியாபாரிகள் ஸ்நேஹ மென்றும், அவர்களுக்கு உதவி யாகத் தாம் வேதபுரத்தில் ஏதோ கார்யங்கள் செய்வதாகவும் சொல்லிக் கொள்வார். வேதபுரத்திலுள்ள சில அச்சுக்கூடங்களுக்குச் சென்னையி லிருந்து யந்திரங்கள், எழுத்துக்கள், காயிதங்கள் முதலியன தருவித்துக் கொடுப்பார்; ஆனால், இந்த உத்யோகங்களி லிருந்து வரும் பணம் அவருக்கு மூக்குப் பொடிச் செலவுக்குக் கூடக் காணாது. எனவே, வாரக் கணக்காக மாஸக்கணக்காக, வருஷக் கணக்காக, மேன்மேலும் வாய்த் தந்திரத்தினால் கடன்கள் வாங்கியே ஜீவனம் பண்ணிக் கொண்டு வந்தார்.

வாங்கின கடன் திரும்பக் கொடுக்கும் வழக்கமே அவரிடம் கிடையாதாகையால், அவருக்கு ஒரு முறை கடன் கொடுத்தவன்

இரண்டாந்தரம் கொடுக்க மாட்டான். ஆகையால், ஒவ்வொரு தரமும் புதிய, புதிய மனிதரைக் கண்டு பிடித்துக் கடன் வாங்கவேண்டும். ஒரே, ஊருக்குள் அப்படி ஓயாமல் புது ஆட்கள் கண்டுபிடிப்பது ஸாமான்ய வித்தை யன்று. இந்தியா முழுதிலும் இவ்விதமான ஜீவனம் பண்ணுவோர் ஒவ்வோரூரிலும் மலிந்து கிடக்கிறார்கள். துரதிர்ஷ்ட தேசம்! இது நிற்க,

இங்ஙனம் குடித்தனம் பண்ணிக்கொண்டு வந்த மருதப்பிள்ளைக்குஷ்டை 1909-ஆம் வருஷம், ஜூன்மாஸம் முதல்தேதி யன்று, திடீரென்று நல்ல காலம் பிறந்தது. வேத புரத்தில் வில்ஸன் துரை என்ற யூரோப்பியர் ஒருவர் புதிதாகப் பெரிய அச்சுக்கூட மொன்று திறந்தார். அந்த அச்சுக்கூடத்து வேலையாட்களுக்குத் தலைவராக மருதப்பிள்ளை மாஸம் 60 ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப்பட்டார். அதிலிருந்து அவருக்குக் கடன் வாங்கும் உபத்திரவம் கொஞ்சம் குறையலாயிற்று. அவருடைய மனைவியும் புதிய மதுரைச் சுங்கடிச் சேலை யுடுத்துப் புது மண் குடங்கொண்டு தண்ணீரெடுத்து வரத் தலைப்பட்டாள்.

இங்ஙனம் இரண்டு மாஸங்கள் கழிந்தன. ஸெப்டம்பர் மாஸம் முதல் தேதி காலை ஊர் முழுதும் பயங்கரமான வதந்தி உலாவிற்று. ஊருக்கு மேற்கே, ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஸமீபத்திலுள்ள முஜாபர் சாஹ்; என்ற பிரயாணிகளின் சாவடியிலே மருதப்பிள்ளை கொலையுண்டு கிடப்பதாகச் செய்தி பரவலாயிற்று. ஜனங்கள் ஆயிரக் கணக்காகத் திரண்டு பிரேதத்தைப் பார்க்கப் போனார்கள். மருதப் பிள்ளை தன் முறைப்படி டாஸூர் பட்டுக்கோட், ஜரிகைக்கரை போட்ட செம்பட்டு லேஞ்ஜி, கிளாஸ்கோ மல் வேஷ்டியுடன் கிடக்கிறார். துணி முழுதும் இரத்தத்தில் ஊறி யிருந்தது. பக்கத்திலெல்லாம் இரத்தம் சிந்திக் கிடந்தன. பார்ப்பதற்கே முடியவில்லை. அத்தனை கொடூரமான காட்சி! தொடையில் இரண்டு வெட்டு; மார்பில் வெட்டு; தோளில் வெட்டு; கழுத்து இலேசாக ஒட்டிக் கொண்டிருந்தது. அத்தனை கோரமான வெட்டு கழுத்திலே! மண்டையில் இரண்டு மூன்று வெட்டுக்கள்; பொருளாசையால் அவரைக் கள்வர் வெட்டிக் கொன்றிருக்கலாமென்று நினைக்க ஹேது வில்லை!

(இன்னும்வரும்)

OFFICE OF ... MADRAS
8 DEC 1920

“கதாரத்நாகரம்.”

கடற்கரை காலக்ஷேபம்.

“அடீ! உன் பாட்டுக்கு அந்தப் பெண்கூட சாட்டிபிகொட கொடுத்துவிட்டாள்” (பக்கம் 80.)

கடவுள் துணை

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்

—ஔவை குறள்

Vol. 3.	September, 1920	No. 4.
தொகுதி 3.	1920-ம்௵ செப்டம்பர் ௴	பகுதி 4.

உ

திருச்சிற்றம்பலம்.

எல்லா வுலகமுமானாய் நீயே
யேகம்பமேவி யிருந்தாய் நீயே
நல்லாளர் நன்மையறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய நீயே
பொல்லாவினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய் செல்வம் தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதீ.

ஆமாறுன் திருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

பிரபஞ்ச ரகஸ்யம்.

3. எவன் தன் சௌக்கியத்துக்கு விரோதமாகத் திரவியத்தைச் சம்பாதிக்க விரும்புகிறானோ அவன் பிறனுக்குப் பாரஞ்சுமக்கிறவனைப் போலாவான்.

4. கொடாமலும் அநுபவியாமலும் இருக்கும் திரவியங்களினால் நாம் செல்வந்தர்கள் எனப்படுவோமாயின், பூமியின் குகையினுள்ளே வைக்கப்பட்டிருக்கும் திரவியங்களினாலும் நாம் செல்வவான்கள் எனப்படுவோமன்றோ!

5. கொடாமலும், உண்ணாமலும் இருக்கும் திரவியத்தினால் பிரயோசனம் யாது? சத்துருக்களை வெல்லாமலிருக்கும் வலிமையினால் பயன்யாது? தருமத்தை அநுசரியாத கல்வியினால் பிரயோசனம் யாது? இந்திரியங்களை அடக்காத மனத்தினால் பிரயோசனம் யாது?

6. அநுபவியாத உலோபியின் திரவியம் அவனுக்கும் பிறருக்கும் பொதுவாக இருக்கின்றது. இது அவனுடையது என்னுஞ் சம்பந்தம் அழியும்போது துக்கமடைதலே அவனுடையது என்பதனை உணர்த்துகின்றது.

7. உலோபியின் திரவியம் தர்மத்துக் காவது, சுற்றத்தார்களுக் காவது போய்ச் சேரமாட்டாது. அக்னி, திருடர், அரசர் என்னும் இவர்களிடத்திற் போய்ச் சேர்கின்றது.

8. திரவியத்துக்குக் கொடுத்தல், அநுபவித்தல், அழித்தல் என மூன்று கதிகள் உண்டு. கொடாமலும் அநுபவியாமலும் இருப்பவனுடைய திரவியம் மூன்றாங் கதியாகிய அழிதலை அடைகின்றது.

9. பிரிய வசனத்தோடு கூடிய கொடை, கர்வமில்லாத ஞானம், பொறுமையோடு கூடிய வீரம், கொடையோடு கூடியமனம் என்னும் நன்மைகள் நான்கினையும் காண்டலரிது.

10. நேசமுள்ள பெண்களின் காதளவோடிநீண்ட நீல இறகுள்ள புருவம் என்னும் வில்லினின்று எய்யப்படுகிற இந்தக்கண் என்னும் கதியுடைய அம்புகள் ஒருவனுடைய இருதயத்திலே எவ்வளவுக் குத்தையாமல் இருக்கின்றனவோ அவ்வளவுக்கு அவன் சன்யார்க்கனும் இந்திரியங்களை அடக்குபவனும் வெட்கத்தைத் தாங்குபவனும், மரியாதையுள்ளவனுமாயிருப்பான்.

DEC 1920

பிரபஞ்ச விலாசம்

வியாபாரத்துறைக்கு

1. தொழில் செய்வோன், காரியஸ்தன்—அதிகாரி—எஜமானன் முதலானவர்களுக்கு வாய்ப் பேச்சு சுருங்க வேண்டும்.

2. அதிகமாய்ப் பேசக்கூடாதென்றே வாய்க்கு இரண்டு கதவுகளை அமைத்து, திறக்கவும் அடைக்கவுமான அதிகாரத்தை மனதுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

3. திறந்த செவிகள் இரண்டு. நல்லன தீயன எல்லாவற்றையும் கேட்கட்டும். நல்லவை மனதில் பதியட்டும். தீயன ஒரு காதால் கேட்கப்பட்டு மறு செவியால் செல்லட்டும்.

4. மனம் ஓடுங்குரங்கு. அதனை சிந்தனையால் தேக்கி யுக்தியில் கட்டிவிடு.

5. காலமறிந்து—மற்றவர் நோக்கமறிந்து நடப்பது சாலச் சிறப்புடையதாகும்.

6. வேலைக்காரன் நல்ல உடுப்பு அணிந்தால் ஆடம்பரக்காரன்—நடபுடல் பேர்வழி அவனுக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும் கட்டாதென்கிறார் ஒரு எஜமானன்.

7. சுத்தமான உடையும் நல்லநடையுமே அவனுடைய புத்தி நைபுண்யத்தையும் மேன்மையையும் காட்டுகிறது என்கிறார் இன்னொரு எஜமானன்.

8. அழுக்கு சட்டையையும் கிழிந்த வஸ்திரத்தையும் வேலைக்காரன் அணிந்திருந்தால் பரம சந்தோஷம் மற்றொரு எஜமானனுக்கும்.

9. அகவிலை ஆகாசத்தைப் பார்க்கிறது. மூன்று மாதத்துக்கொரு முறை சம்பளங்கூடினாலும் திருப்தி வெகு தூரத்திலிருக்கிறது. வறுமையால் வந்த கொடுமை! எப்பொழுது வருமோ நன்மை?

நீதி வாக்கியம்.

"நட்பு"

(1) அன்பை விருத்தி செய்கின்ற நட்பாளரை யெக்காலத்தும் கைவிடாது நேசித்திருப்பதே சிநேகத்திற் கழகு.

(2) அன்புடன் சிநேகிப்பவர்களை யெப்பொழுதுங் கைவிடாமல் அவர்கள் விருத்தி யாகும்படிக்குத் தன்னாற் கூடிய வுதவிசெய்து புகழடைவதே பெருமையாம்.

(3) நெடுங்காலமாய்ப் பழகி வருந்தொடர்ச்சியை யுடைய நல்லோர்களை நன்கு மதித்துக் காக்க வேண்டும்.

(4) சுற்றத்தார் மகிழ்ச்சி யடையும்படி யவர்களைத் தழுவி வாழ்தலால்—அவர்கள் செய்யு முரிமை—கொண்டு பெருமை யடையலாகும்.

(5) இனிய செய்கையுடைய நல்ல விவேகிகளின் நட்பைக்கொண்டு அவர்களோடு கூடி வாழ்வதை விடச்சுகம் வேறொன்றில்லை.

(6) நட்பின் முறைமையில் 'நீரும் பாலும் போல்', வென ஒர் உவமையுண்டு. எப்படி யெனில், பாலானது காய்ச்சப்படும் போது, தண்ணீரானது தான் பிரவேசித்து அக்காய்ச்சல் வருத்தத்தை மேற்கொண்டு மித்திரனைக் காக்க விரும்பிச் சுண்டிப் போகின்றது—அது கண்டு பாலானது பொங்கி நெருப்பில் விழுந்தெரிந்து போக முயல்கின்றது—அதைக் கண்டு பொறுக்காமற் றண்ணீர், மறுபடி மேல் விழுந்து பாலை, நெருப்பில் விழவொட்டாமல் காக்கின்றது. இதுவே சுபிரோதக நியாய மெனப்படும். பால் காய்ச்சப்படும் போது தண்ணீர் கலக்கப்படுவதும் அது சுண்டினவுடனே பால் பொங்குவதும் பின்பு தண்ணீர் கலக்கப்படுமாகில் பொங்காமலடங்குவதுந் தான்.

(7) சனரோடு கூடி துன்மார்க்கங்களை யனுசரித்துப் பாபத்துக்கேதுவான காரியங்களைச் செய்கின்றவன் நல்லகுடியிற் பிறந்தவனாக விருந்

தாலும் அவிவேகி யெனப் பெயர் பெறுவது மல்லாமல் குலகினனென்றும் பெயர் பெறுவான் ஆதலால் மேன் மக்களோடு நட்பு செய்யவேண்டும்.

(8) செல்வம் வந்த காலத்திலும் சிநேகத்தை மறவாமலதிகமான அன்பைச் செலுத்தித் தகுந்தவுதவி செய்கின்றவர்களைச் சிநேகர்க்குள் தலைமையானவர்களாக வெண்ண வேண்டும்.

(9) சுற்றத்தாரை விட்டு நீங்கத் தாம் விரும்பியவைகளைத் தம் மனதின் படிச் செய்து நடக்கின்ற அறிவீனர்களோடுறவு செய்யலாகாது. அதனால் தீங்கு நேரிடுவது மன்றிக் கீர்த்திக்குங் கேடுவரும்.

(10) நம்மிடத்தில் யதார்த்தமாக நம்பிக்கை வைத்திருக்கின்ற சிநேகரிடத்துப் பொய் சொல்ல, வொருபோதும் விருப்பங் கொள்ளலாகாது. அப்படி விரும்பினால் வஞ்சகனென்கிற பெயருண்டாவதோடு சிநேக பங்கமும் நேரிடும்.

(11) உரிமையாக நினைத்துச் சொல்லப்படும் யதார்த்தத்தைப் பொய்மையாக வெண்ணி மெய்யான சிநேகரை விரோதிக்கின்றவன் புத்திசாலியல்ல வென்பதற்குச் சந்தேகமில்லை; ஏனெனில் அதனால் அவனுடைய வேண்டிய வெல்லா பயன்களையு மிழந்து விடுவானென்பதினாலே தான்.

(12) விவேக மில்லாதவனுடைய நட்பைக் காட்டிலும் விவேகியினுடைய பகைமையினாற் பயனுன்டென்று, பெரியோர் கூறியதற்குப்பொருளென்னவெனில் புத்திமான்களுடைய சிநேகத்தை விரும்பித் தேட வேண்டுமென்பது தான்.

(13) மெய்யான நட்பாளருடைய வொருமை வியோக, முதலான காரணங்களாற் கெடமாட்டாது. எப்படி யெனில் சந்திரன் மேகத்தினாற் சூழப்பட்டு நெடுந்தூரத்திலிருந்தாலும் ஆம்பல்களை மலர்ப்பித்து வாசிக்கும்படிச் செய்யவில்லையோ.

(14) அதிக சிநேகத்தினால் அவிவேகிகள் சிநேகருடைய பெருமையையுங் குணங்களையு மறியாமற் போகிறது மல்லாமல் அவர்களை அலக்ஷியஞ் செய்கிறார்கள். அதெப்படி யெனில் சந்தன விருக்ஷங்கள் அதிகமாயிருக்குங் காட்டிற் கருகிக்குள்ள மூடர்கள் அதைப் பசிகரும்பாக வழங்குந் தன்மைபோலே தான்.

(15) சம்பத்துண்டானால் சிநேகர்கள் அதிகமாய்க் கூடுவார்கள்—ஆனால், அவர்கள் மெய்யான சிநேகிதரோ அல்லவோ வென்று அறிவதற்கு தரித்திரம் உரை கல்லாயிருக்கும்.

(16) ஆதலால் மேன்மைபொருந்தியவர்களுடைய நட்புக் கிடைக்கொட்டாதிருப்பது வறுமையினுங் கொடியதென்றுணர வேண்டும்.

"பகை"

(1) எந்தக் காரணத்தாலாவது நேரிடும் விரோதத்தைத் தீர்க்கமாய் மனதில் வைக்கின்றவர்கள் மூர்க்கரென்கிற பெயரை யடைவார்கள்.

(2) எப்பொழுதும், மனதில் பகையை யுடையவன் எவ்வளவு மேன்மையுடையவனாக விருந்தாலும்—அதனால் பிரயோசன முண்டாயிருக்கினும், அவனோடு கூட்டுறவு செய்வதை விட்டு வேறுமையாக விருப்பது நன்று.

(3) தனது யசமானனிடத்தில் குற்றத்தைப் பாராட்டிப் பகைத்துக் கொள்கின்ற ஊழியன் தனக்குத் தானே சத்துருவாவானென நம்ப வேண்டும்.

(4) தீர்க்க வைரம் வைக்கின்றவன் தனக்குச் சுற்றத்தாராக விருக்கினும் அவனை யந்நியனாகவே நினைக்க— வேண்டும்.

(5) எல்லாவுயிர்களுக்கும் கெடுதியைத் தருகின்ற தீயகுணமாகிய பகைமை ஒருவன் தன் மனதினிடத் திருந்து பற்றவொழிப்பானாகில் அது தருமங்களுக்குள் சிறந்த தருமமாகப் பிரகாசிக்கும்.

(6) ஒருவருடனொருவர் நட்பு பெற்றிருப்பதைப் பார்த்துச் சகியாமல் பகையை விளைவித்துத் துன்பஞ் செய்கின்றவர்கள் யாவரிலும் தாழ்ந்தவர்களென்றும் அப்படிக் கல்லாதவர்கள், உயர்ந்தவர்களென்றும் பெரியோருரைத் திருக்கிறார்கள்.

(7) பலவித துன்பங்களையும் விளைவிக்கும் பகையாகிய துற்குணத்தை மனதிலிருந்து நீங்கும்படி செய்கின்ற ஒருவனுக்கு எல்லாரும் நட்பினராவதுமன்றி புகழுங் கீர்த்தியும் மேன்மேலும் வளர்ந்து வரும்.

(8) எல்லா வீணபத்திற்கும் காரணமாகிய நற்குணத்தைக் கெடுப்பதற்கேதுவாகிய பகையென்னுந் துர்க்குணத்தைச் சொற்பனத்திலுஞ் சிந்தியாதிருப்பார்களாகில் அவர்களுக்குச் சகல நன்மையுந் தானே வந்து கைகூடும்.

(9) பகையானது தோன்றியவப் பொழுதே யதை மனதினின்றகற்றிருந்து நீக்க வல்லவர்களுக்கு உலகத்திலுள்ள யாவரும் அன்பினர்களாதலால் அவர்களை யார் சாதிக்க நினைக்கின்றவர்கள்.

(10) பகை, தனக்கினிய தென்றதை மேற்கொண்டு விரோதத்தைப் பாராட்டுகிறவன் மேன்மை யடைந்திருந்தாலும் உடனே தனக்குள்ள மேன்மையையும் பொருளையு மிழந்து விடுவதுமன்றி உயிரையு மிழப்பான்.

ஸ்ரீ ஆயுர்வேத வைத்தியப்பகுதி

குடும்ப வைத்தியம்

உலகத்திலுள்ள பலதேசங்களைவிட, இந்தியாவில், அதிலும் சென்னை ராஜதானியில், சிசுமரணம் அதிகமென்பது வெளிப்படை. இச்சென்னை ராஜதானியிலும் தமிழ் நாடுகளில் உள்ளார் ஜீவனோபாயத்தைக் கருதி தங்கள் ஜெனனபூமியாகிய கிராம வாசத்தை விட்டு அடுத்துள்ள நகரங்களில், வியாபாரம், கைத்தொழில்; உத்தியோகம், முதலியவற்றை நாடி புதிதாய்க்குடியேறி தனிக்குடித்தனம் செய்யவேண்டியவகையில்; தங்களுக்குக் கிடைக்கும் குறைந்த வரும்படியில் குடும்பத்தை நிர்வகிப்பதே கஷ்டமாயிருக்கிறதென்பது அநுபவ சாலிகள் மறுக்கொணா விஷயம். இந்நிலையில் கடவுள் கிருபையால் தங்களது இளமைப்பருவத்தில் புத்திரோத்பத்தியுண்டாகிவிட்டால், உலகியலுணராத பால்யவயதில் தங்களையும் தங்கள்செல்வச் சிறுமகவுகளையும் பாதுகாத்துக் கொள்ளும் அநுபவமறியாமல், ஆகார ஆசார, நித்திய கடமைகளின் தவறாமல் சிறுகச்சிறுக தங்களுக்குந் தெரியாமலே நோய்களை விருத்தி செய்து கொள்வதும், அவைமுற்றி அபாய நிலைக்குவந்தபின் (ஏழைகுடும்பம் இராஜவைத்தியம்) என்றபடி தங்கள் வருவாய்க்குமேற் கொண்ட செலவில் வைத்தியம் செய்ய நேருவதும்; இதனால்

---

(11) பகைமை மனதினிடத்துக் குடியாகவுடைய அறிவீனர், வெற்றி பெறுதற்குக் காரணமாகிய நீதி நூலினிடத்துண்டாகிய பொருளை யுணர்ந்து கொள்ளமாட்டார்கள்.

(12) பகை அல்லது, வைரம் எனும் களை முளைக்கும்பொழுதே யதை விவேகமெனுங் கருவியால் களைந்தெறிந்து விடுவானாகில் அவனுக்குப் புகழும் பெருமையு முண்டாகு மென்பது எப்படியோ, அப்படியே அதனுக்கிடங்கொடுத் தெருவூட்டி வளர்ப்பவனுக்கும் பழியும் பாவமும் வளர்ந்தேறுமென்று சான்றோரைத்திருக்கிறார்கள்.

(13) ஆதலால் யாவரும் பகை யென்னுந் துற்குணத் திற்கிடங்கொடாமல் அதை நீக்கி நற்குணத்தைக் கைப்பற்றி நடக்கவேண்டும்.

வப்போதுண்டாம் கஷ்ட நஷ்டங்களும் எண்ணிறந்தன வென்பது சொல்லாதமையும்.

சிலசமையம், தொழில் முறையை நாடி வீட்டைவிட்டு நாயகன் வெளியில் சென்றிருக்கையில், குழந்தைக்கு ஏதேனும ஆகாரபேதத்தாலோ, பிறவற்றாலோ, பேதி, வாந்தி, வயிற்றுப்பல், இழுப்பு (இசிவு) முதலிய கண்டு விட்டால், நாயகனுக்கு சொல்லியனுப்பவும், வைத்தியரைத் தருவிக்கவும் முடியாமல் நாயகி மனம் உடைந்து இன்ன செய்வதென்று தோன்றாமல் திகைக்க வேண்டியதாகிறது. நாயகன் வீட்டிலிருந்தாலும் தங்களுக்கு அநுபவப்பட்ட வைத்தியரைத் தேடி அழைத்து வருவதற்குள் வியாதி விஷமித்து கஷ்டத்தையும் சிலசமையம் ஆபத்தையும் உண்டாக்குகின்றது பிரசித்தம்.

இப்படிப்பட்ட அவஸ்தைகளை நிவர்த்தி செய்யவும், வியாதிவாராமல் தடுத்துக் கொள்ளவும், வந்தவியாதிகளை அதிக செலவும், மிக்க அலைச்சலுமின்றி வீட்டின் உபயோகத்திலுள்ள சாதாரண கடை சரக்குகள், எல்லோர்க்கும் தெரிந்ததும், எங்கும் கிடைக்கக் கூடியதும், எப்போதும் அகப்படக் கூடியதுமான மூலிகைகள் இவற்றைக் கொண்டே பிறருடைய உதவியின்றி தானே சிகிச்சை செய்து கொள்ளவுங் கூடியவாறாக "வீட்டு வைத்தியம்" என்னும் ஔவையார் வைத்திய முறைகளைச் சிறிது சிறிதாக தொடர்ந்து வெளிப்படுத்தி வருவதால் பல குடும்பங்கள் பாலாரிஷ்ட ரோகங்களினின்றும் தங்கள் அருமை மக்களை பாதுகாக்கக்கூடு மென்று சில பெருங் குடும்பஸ்தர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இக்கருத்தை யொட்டியே இம்முறை, சில முன்னுரைகளாக முக்கிய விஷயங்களை சுருக்கக்கூறி பிறகு தொடர்ச்சியாய் எழுதிவருவாம்.

காரணம்

குழந்தைகள் பிறந்த நாள் முதலே பல பாலரோகங்களுக்கு உட்படுவதற்குக் காரணம். பெற்றோரின் தேக உஷ்ணத்தாலும், அசத்தத்தாலும், தாயின் ஆகாரபேதத்தாலும், தாய்ப்பாலும்; குழந்தைகளின் ஆகாரத்தாலும், பிறவற்றாலும், உண்டாகும் ஆரம்பங்களே!

குழந்தைகளுக்கு, கிரந்தி, தோஷம், மாந்தம், கணம், கரப்பான், சுரம் சன்னி, வலிப்பு, கழிச்சல், அச்சரம், சோகை, காமாலை முதலிய பல ரோகங்களும், இவற்றின் கிளைரோகங்களும், ஒவ்வொன்றின்தொந்த ரோகங்களுமாக அநேக வியாதிகள் ஒன்றன்பின் ஒன்றாய்க்கண்டு தொந்தரை செய்வதற் கெல்லாம், புருஷன் தேகச் சூடும் பெண்சாதியின் கெற்பச்சூடு ஆகாரமுமே வித்தாயிருப்பது தேர்ந்த சாஸ்திர அநுபவமாயிருக்கிறது.

8 - DEC 1920
MADRAS

செய்யுள்

சேங்கிரந்தி கருங்கிரந்தி செவ்வாப்புத்தான்
தீயான் கரப்பானும் அறையிற் காணும்
அங்கமெல்லாம் செவ்வாப்புச் சிவந்து காணும்
அதுவன்றி கருங்கிரந்தி தொண்டைகட்டும்
பிங்கிரசம் போய்த் தோஷம் பக்ஷிதோஷம்
பின்னும் வெகு ரோகங்கள் பிரித்துச் சொல்ல
அங்கிரீது குழந்தைபிணி யறிந்து தீர்க்க
ஆராலு மாகாதென் றரன் சொன்னாரே!

(2)

சொல்லுகின்ற குழவிக்குக் கரப்பானேது?
தோஷமென்ற வினையேது? மாந்தமேது?
கொல்லுகின்ற கணமேது? அக்கரங்களேது?
கூறும் வைசூரி யென்ற குளறலேது?
புல்லுகின்ற தாயாலே தந்தையாலே
புனைந்து கொடி படர்ந்தது போல் படர்ந்ததிப்பால்
கொல்லுகின்ற கரப்பானுங் கெர்ப்பமேகம்
கோதுஷ்ட தோஷமெல்லாம் முலைப் பால் சூடே
சூடான மாந்தமெல்லாம் தாய்ப்பால் மந்தம்
தொகையான கணங்களெல்லாம் கெர்ப்பச்சூடு
பீடான அக்கரங்களெல்லாம் தாயும்
பிதாவிருவர் சேர்க்கையினால் எழுந்த சூடு
பாடான, வைசூரி யெல்லாம் அநுபோகத்தால்
படர்ந்த திந்த வினையெல்லாம் கர்மத்தாலே
காடான வகைபோலே சொன்னதற்குக்
கண்டுவரும் தோற்றமினிக் கழறுவேனே.

இச்செய்யுள்கள் கவனிப்பிற் குறியவை யென்பது சொல்லாதமையும் இவற்றுள் செங்கிரந்தி கருங்கிரந்தி போன்ற கிரந்திரோகங்கள் குழந்தை பிறந்தது முதல் மூன்று மாத வரையிலும்; அதிலிருந்து ஒரு வருஷமட்டும் தோஷமும், அதிலிருந்து மூன்று வருஷமட்டும் மாந்தமும், அதிலிருந்து ஏழு வருஷமட்டும் கணமும், அதிலிருந்து முப்பது வருஷம் வரையில் அக்கரங்களும், பிறந்தது முதல் இறக்கும் வரையில் வைசூரியும், தொடர்ந்து தொந்தரை செய்யும் இயல்புடையது. குழந்தை பிறந்தது முதல்

சற்றேறக்குறைய 12 வயது வரையில் பாலாரிஷ்ட ரோகங்கள் பீடிக்குமாகையால் அது வரையில் குழந்தைகளுக்கு ஆகாரத்தை முக்கியமாய் கவனித்தும்; மண், சாம்பல், கரி முதலியவற்றைத் தின்ன விடாமலும், அடிக்கடி உரை மருந்துகள் (கார உருண்டைகள், மாந்தப் பொடிகள் கிரணைகாரிகள்) பேதி மருந்துகள் இவற்றைப் பரமப்படி கொடுத்தும், சுத்தமான எண்ணெய், ஆமணக்கெண்ணெய், நெய், இவற்றால் ஸ்நானம் செய்வித்தும், அஜீர்ன பதார்த்தங்கள் பேதியையுண்டாக்கும் மந்த வஸ்துக்கள் கிழங்கு வகைகள் முதலியவைகளைச் சேர்க்காமலும் பார்த்துவர வேண்டியது முக்கியமாய் தாயின் அல்லது தாதியின் கடமையாகும்.

"குடும்ப வைத்திய" மென்பது பெரும்பாலாய் குடும்பத்தலைவியை (குழந்தையின் தாயையே பொருத்து நிற்பதாலும், அதிலும் இளங்குழந்தைகளுக்கு அவற்றின் தேகசுகம் தாய்ப்பாலின் குணமாகவே இருப்பதாலும்; தாயின்பால் எவ்வளவிற் கெவ்வளவு சுத்தமாகவும், தெளிவாகவும் நன்மணத்தோடும், தக்க சுவையோடும் இருக்கின்றதோ அதற்கேற்றவாறே குழந்தைகளின் தேகமும், அறிவும் விருத்தியாகுமாகையாலும்; முதல் முதலாக குடும்பத் தலைவிகளின், தேகம், உடை, ஆகாரம், ஜீரண சக்தி, குணம் முதலியவற்றைப் பற்றி ஒரு சிறிது கூற வேண்டியது அவசியமாகிறது.

(இன்னும் வரும்)

வேடிக்கை மொழிகள்.

11. குச்சியும்-கோலுமா—அதற்கு நடையுமுண்டோ.
12. புளியும்-உப்புமா—அது கரைதலன்றி உப்பா.
13. பூவும்-நாருமா—வாசனையே யன்றி துர்க்கந்தமுண்டாகாது.
14. கோழியும்-ஆடுமா—அது மயிலும் ஆகுமோ.
15. காடும் நாடுமா—அதற்கு நோகாலுமுண்டோ.
16. பாலும்-மோருமா (மூகருமா-திரிபு) அதற்கு நாசியுமுண்டோ.
17. நூலும்-துணியுமா—அதற்கு நெஞ்சுறமுண்டோ.
18. கொசுவும்-ஈயுமோ—அதற்கு ஈகை சக்தியுமுண்டோ.
19. வீடும்—தரையுமோ—அதற்கு அறையக்கையு முண்டோ.
20. தட்டும்-முட்டுமோ—அதற்கு கொம்பு முண்டோ.

விகடன்.

வேதபுரத்தின் இரகஸ்யம்

ஸ்ரீமான் ஸி. சுப்ரமண்ய பாரதி எழுதியது.

(முன்தொடர்ச்சி)

இத்தனை பரம ஏழையைக்கொன்று பொருள் பறிப்ப தெப்படி? விரோதத்தினாலே தான் யாரோ அவரைக் கொலை செய்திருக்க வேண்டு மென்று ஜனங்கள் உடனே நிச்சயித்து விட்டார்கள். அப்பால் அவருக்கு யார், யார் விரோதிகளென்பதைப்பற்றிய ஆராய்ச்சி நடந்தது. ஜனங்கள் இந்தமாதிரி ஸமயங்களில்வெகு ஸாலபமாகக் கட்டுக்கதைகள் கட்டிவிடுவார்கள். இலேசான துப்புத் தெரிந்தால் போதும்; அதற்குக் கால், கை, கொம்பு வைத்துக் கதை கட்டுவதில் பாமர ஜனங்களைப் போன்ற திறமையுடையோர் என்போலே கதை கட்டுவதையே தொழிலாக உடைய ஆசிரியர்களிடையே கூட அகப்படுவது துர்லபம். ஆனால் இந்த ஸந்தர்ப்பத்தில் அங்ஙனம் கதை கட்டுதல் பொது ஜனங்களுக்குக்கூட மிகவும் சிரமமாய் விட்டது. ஏனென்றால், மருதப்பிள்ளைக்கு விரோதிகள் இன்னாரென்பது யாருக்குந் தெரியாது. அவருக்கு விரோதிகளே கிடையாதென்று ஊரார் நினைத்திருந்தார்கள். வாங்கின கடன் அதாவது 5 ரூபாய்; 10 ரூபாய்; ஒரு ரூபாய்; 2 ரூபாய்; திரும்பக் கொடுப்பதில்லையென்ற ஒரு துர்க்குணத்தைத் தவிர மருதப்பிள்ளையிடம் வேறு துர்க்குணமே கிடையாது. எல்லாரிடமும் குளிர்ந்த முகத்துடனும், புன் சிரிப்புடனும் இனிய வசனங்கள் பேசுவதும் கூழைக் கும்பிடு போடுவதும் வழக்கமாகக் கொண்ட மருதப்பிள்ளையிடம் யாருக்கும்

நல்லெண்ணமுண்டே யன்றி விரோதம் ஏற்பட நியாயமில்லை. சில்லரைக் கடன்காரருக்கு இவர் உயிரோடிருந்தால் தாங்கள் கொடுத்த சொற்பத் தொகைகள் திரும்பக் கிடைக்கலாமென்று நம்பவேனும் வழியுண்டு. ஆதலால் அவர் மேற்படி சில்லரைக் கடன்காரர்களால் கொலை யுண்டிருப்பாரென்று நினைக்க ஹேது வில்லை. தவிரவும் சில்லரைக் கடன்களுக்காக ஒருவனைக் கடன்காரர் கொலைசெய்யும் வழக்கம் எங்கேனுமுண்டா? எனவே ஜனங்கள் கொலையாளி விஷயமாக இலேசில் கூடத் துப்புக் கண்டுபிடிக்க வழியில்லாமல் திகைப் பெய்தி நின்றார்கள்.

போலீஸ் கூட்டம் கூடிவிட்டது. பெரிய துரை, நடுத்துரை, சின்னத்துரை மாஜிஸ்ட்ரேட் முதல் சேவகர்வரை, சுமார் இருபது முப்பது நகரக் காவலர்வந்து சூழ்ந்து நின்றார்கள். ஜனங்கள் பிரேதத்தை நெருங்கி வந்து விடாமல் தடுப்பதே போலீஸாருடைய முக்ய வேலையாக இருந்தது. அங்கு பலரிடம் போலீஸ் அதிகாரிகள் ஏதேதோ விசாரணை செய்து பார்த்தார்கள் ஒன்றும் துலங்கவில்லை. இப்படியிருக்கையிலே ஒரு போலீஸ் சேவகன் ஒரு பறையனைப்பிடித்து அவ்விடத்திற்குக் கொணர்ந்தான். அந்தப்பறையனுடைய வேஷ்டியில் இரத்தக் காயம் பட்டிருந்தது. அவன் மேலேசொல்லப்பட்ட அச்சுக் கூடத்தின் அதிபதியாகிய வில்ஸன்துரை வீட்டில் சமையல் வேலை செய்பவன். அவனிடம் போலீஸ் அதிகாரிகள் ஏதெல்லாமோ கேட்டார்கள். அவன் மறுமொழி சொல்லியதினின்றும், அவன் மீது ஸம்சயமேற்பட்டு அவனைச் சிறைச்சாலைக்குக் கொண்டு போய் விட்டார்கள். பிறகு கூட்டங்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் கலைந்தன. பிரேதத்தையும் அதிகாரிகள் தூக்கிக்கொண்டுபோய் ஒருநாள் வைத்திருந்து மறுநாள் தகனம் பண்ணிவிட்டார்கள். மறுநாளே வில்ஸன் துரை வீட்டுப் பறையனையும் சிறைச்சாலையிலிருந்து விடுவித்து விட்டார்கள். அந்தப் பறையன் முதல் நாள் கோழியறுத்தபோது கைதவறி இரத்தம் அவனுடைய வேஷ்டியில் பட்டு விட்டதாகவும், ஆதலால், அவன் வேஷ்டியிலே யிருந்த கறை கோழி யிரத்தத்தால் நேர்ந்ததேயன்றி, மனுஷ்ய ரத்தத்தால் நேர்ந்ததில்லை யென்றும், அவனுடைய பந்துக்களும், துரை வீட்டு வேலையாட்களிலே சிலரும் ஸாக்ஷி சொன்னதினின்றும், அந்தப் பறையன் மீது குற்றமில்லை

யென்று தெளிந்து, அவனுக்கு விடுதலை கொடுத்து விட்டார்கள். பிறகு வேறு குற்றவாளி அகப்படவுமில்லை. ஓரிரண்டு மாஸங்களுக்குள் ஜனங்கள் இந்த ஸம்பவ முழுதையும் ஏறக்குறைய மறந்து போய்விட்டார்கள்.

இப்படி யிருக்கையில், 1910-ஆம் வருஷம் ஜனவரி மாஸத்தில் வேதபுரத்துக்கு ஒரு புதிய ஸப்-இன்ஸ்பெக்டர் வந்தார். இவர் பெரிய கைக்காரர்; மஹா தந்திரசாலி இவருடைய பெயர் ராஜகோபாலய்யங்கார். மருதப் பிள்ளையின் கொலை நடந்து நான்கு மாஸங்களாய் விட்டன. எனினும், இவர் வந்தவுடனே மேற்படி கொலையைப் பற்றிய செய்திகள் இவருக்குத் தெரிந்தன. அதன் விஷயமான பழைய பதிவுகளை யெல்லாம் படித்துப் பார்த்தார். இந்த மருதப் பிள்ளையைக் கொலை செய்த ஆட்களை நான் கண்டு பிடித்தே தீர்ப்பேன், வாஸுதேவன் துணை'' என்று இவர் தம் மனதுக்குள்ளே பிரமாணம் பண்ணிக் கொண்டார். இது நிற்க.

மேலே கூறப்பட்ட அச்சுக் கூடத்தலைவராகிய வில்ஸன் துரைக்கு ஒரு தங்கையுண்டு. அவள் பெயர் இஸபெல்லா. அவளுக்கு சுமார் 30 வயதிருக்கும். ஆனால் விவாக மில்லை. போர்த்துகேசிய ஐரோப்பிய னொருவனுக்கும் தமிழ் நாட்டுப் பறைச்சியொருத்திக்கும் பிறந்த வம்சத்தாராதலால், மேற்படி வில்ஸன் குடும்பத்தார் தாங்கள் எப்படி யேனும் ஐரோப்பியருடன் ஸம்பந்தம் பண்ணிக்கொண்டு ஐரோப்பியராய் விடவேண்டு மென்ற நோக்கத்தோ டிருந்தார்கள். வியாபாரத்தாலும், கொடுக்கல் வாங்கல் மூலமாகவும் அந்தக் குடும்பத்தாருக்கு ஏராளமான சொத்து சேர்ந்திருந்தது. பூர்வம் வில்ஸன் துரை ஒருவர்; அவருடைய தம்பி ஜோஸப் வில்ஸன் ஒருவர்; தங்கை இஸபெல்லா ஒருத்தி— இத்தனை பேர் தான் அந்தக் குடும்பத்தி லிருந்தார்கள். பின் ஐரோப்பியப் பட்டாளத்தில் வேலை செய்து பென்ஷன் பெற்று வந்த ரிச்சார்ட்ஸன் என்ற ஒரு கிழவன் மிகவும் ஏழையாய் அந்த ஊரில் வந்து குடியிருந்து கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அந்த ரிச்சார்ட்ஸன் பரம ஏழையானாலும் சுத்தமான ஐரோப்பிய ஸந்ததியிலே பிறந்தவனென்று தெரிந்தபடியால், வில்ஸன் துரை

அவனுடைய மகளை விவாகம் செய்து கொள்ள முயன்றார். அந்த மகள் கண்ணுக்கு மிகவும் விகாரமாய்ச் சுருங்கிய மூஞ்சியும், வற்ற இடம்பும் உடையவளாய்த் தன்னை மணம் செய்து கொள்ள யாரு மகப்படாமல் பிதாவுடன் குடியிருந்தாள். அவள் நமது வில்ஸன் துரையைக் காட்டிலும் ஏழு வயதுக்கு மூத்தவள். எப்படியிருந்த போதிலும் சுத்தமான ஐரோப்பிய குலத்து ஸம்பந்தம் கிடைப்பதையே மோக்ஷமாகக் கருதித் தவஞ்செய்து கொண்டிருந்த வில்ஸன் துரை அவளை மணம் புரிந்து கொள்ள விரும்புவதாகத் தெரிந்தவுடனே அவளும், அவளுடைய பிதாவும் மிக ஸந்தோஷமாக உடன்பட்டு விட்டனர். இங்ஙனம் தமக்கோர் ஐரோப்பிய ஸ்திரீ மனைவியாகக் கிடைத்ததிலிருந்து வில்ஸன் துரை அங்ஙனமே தம்முடைய தங்கைக்கும் தம்பிக்கும் சுத்தமான ஐரோப்பிய ஸம்பந்தம் பண்ண வேண்டுமென்று கருதி பகீரதப் பிரயத்தனங்கள் செய்து கொண்டு வந்தார். ஹிந்துக்களுக்குள்ளே ஜாதி பேதத்தைப் பற்றிய கஷ்டங்கள் அதிகமென்று பலர் தவறாக நினைக்கிறார்கள்.

ஆனால் ஐரோப்பியருக்கும் நீகிரோல ஜாதியாருக்கும் ஸம்பந்த மேற்பட்ட அமெரிக்கா முதலிய இடங்களிலும், ஐரோப்பியருக்கும் கீழ் ஜாதி ஹிந்துக்களுக்கும் கலப்பேற்பட்ட—இந்தியாவில் சில பகுதியிலும், ஷை கலப்பு ஜாதியார்கள் தமக்குள்ளே மாற்று வித்யாஸங்களைக் கவனிப்பதை ஒப்பிடும் போது, ஹிந்துக்கள் பாராட்டும் ஜாதி பேதங்கள் மிகவும் இலேசாகத் தோன்றும். சுத்தமான ஐரோப்பியனுக்கும், சுதேச ஸ்த்ரீக்கும் பிறந்தவன் ஒரு ஜாதி; அப்படி ஒரு ஐரோப்பிய ஸ்திரீயை மணம் புரிந்து கொண்டால் அந்த ஸந்ததியார் வேறு ஜாதி; அவனே மீளவும் ஒரு சுதேச ஸ்திரீயை மணம் புரிந்து கொண்டால் அந்த ஸந்ததியார் மற்றொரு ஜாதி; இப்படி இரண்டு மூன்று தலை முறைகளிலே யேற்படும் பல்விதக் கலப்புகளில் சுமார் நூறு அல்லது நூற்றைம்பது ஜாதிகள் கிளைத்து விடுகின்றன. இந்த நூற்றைம்பது பிரிவுகளும் ஒன்றுக் கொன்று விரலாலே கூடத்தீண்டுவது கிடையாது. இவையெல்லாம் தனக்குத் தனக்கு வெவ்வேறான முத்திரைகள் போட்டுக்கொண்டு பிரிந்து வாழ்கின்றன. இது நிற்க.

நம்முடைய வில்ஸன் துரையும் அவருடைய தங்கையும், எத்தனை ஏழையானாலும் எத்தனை குரூபியானாலும், வேறு எவ்விதமான குறைவுகளுடையோனாயினும், ஒரு சுத்தமான ஐரோப்பியனை மாப்பிள்ளையாக அடைய வேண்டுமென்று செய்த முயற்சிகளுக்குக் கணக்கேயில்லை. இந்த விஷயத்தில் அவர்கள் விரயப்படுத்தின பணத்துக்கும் கணக்கில்லை, ஐரோப்பிய வாலிபன்—சிப்பாயோ, போலீஸ்காரனோ, குமாஸ்தாவோ—எவனாவது விவாகமாகாத நிலையில் வேதபுரத்துக்கு வந்தால் உடனே அவனை வில்ஸன் துரை எப்படியாவது அறிமுகப்படுத்திக் கொண்டு தன் வீட்டில் அவனுக்கு யதேஷ்டமான விருந்துகள் நடத்துவார். அவன் கேட்டகைக்கெல்லாம் பணங் கொடுத்துதவி செய்வார். கடிகாரம் வாங்கிக் கொடுப்பார், பைசிகள் வண்டி வாங்கிக் கொடுப்பார். ஆனால் இம்முயற்சிகளெல்லாம் விழலுக்கிறைத்த நீராய் விட்டன. யாதொரு பயனுந்தரவில்லை. உள்ளூரில் எத்தனையோ எளிய யூரேஷியப்பிள்ளைகள் வில்ஸன் துரை வீட்டு சொத்துக் காசைப்பட்டு இஸபெல்லாவை, மணஞ் செய்துகொள்ள ஆவலோடிருந்தனர். ஆனால் இஸபெல்லா இந்த யூரேஷ்யப் பிள்ளைகளைத் தன் பாத விரலால் கூடத் தீண்டமாட்டேனென்று சொல்லி விட்டாள். எனவே, முப்பது வயதாகித் தன் யௌவனமும் அதற்குரிய சௌந்தர்யங்களும் பெரும்பாலும் நீங்கி விட்ட பின்னரும் நமது இஸபெல்லா விவாகமாகாமல் கன்னிப் பெண்ணாகவே விளங்கினாள்.

இவளுக்கும் நம்முடைய ஸப் இன்ஸ்பெக்டர் ராஜகோபாலய்யங்காருக்கும் பின்வருமாறு ஸ்நேஹ முண்டாயிற்று. ராஜகோபாலய்யங்கார் விவாகமாய் மனைவியை இழந்தவர். இவருக்கு வயது முப்பத்திரண்டிருக்கும். கிருதா மீசை; ஆறரை அடி உயரம்; ஆஜானுபாஹு; ஸாண்டோ குண்டுகள் பழகு வதிலே ஸாண்டோவைக் காட்டிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்; வீராதிவீரர்; பேய் பிசாசுக்கு பயப்படமாட்டார்; பாம்பு புலி கரடிகளுக்கு பயப்படமாட்டார்; கள்வருக்கும் கொலைஞருக்கும் அஞ்ச மாட்டார்; பகைவருக் கஞ்ச மாட்டார்; பொய் சொல்லமாட்டார்; களவு செய்ய மாட்டார்; லஞ்சம் வாங்க மாட்டார்; மஹா தீரர்; மஹா வீரபுருஷர்; மஹா யோக்யர் அதி ஸுந்தர புருஷருங் கூட.

அவர் ஷை மருதப் பிள்ளையின்கொலை ஸம்பந்தமான விசாரணைகளடங்கிய பழைய புஸ்தகங்களையும், பதிவுகளையும் சோதனை செய்து பார்த்தவுடனே; அதில் அடிக்கடி வில்ஸன் துரையின் விஷயம் முக்யமாக வந்தபடியால், அந்த வில்ஸன் துரையைப் போய்ப் பார்த்து அவருடைய சமையற்காரப் பறையனையும் கண்டு பேசி வரவேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டார். ஆனால், புத்திமானாகையால், இந்தக் கொலை ஸம்பந்தமான விசாரணைக்குத் தாம் வந்ததாகத் தெரிவித்துக் கொண்டார். அதினின்றும் வில்ஸன் துரை ஷை கொலையில் தாம் எவ்விதத்திலும் ஸம்பந்தப்படாதவராக இருந்தபோதிலும், அவருக்குத் தம்மிடம் விரயம் ஏற்படுதல் திண்ணமென்று நிச்சயித்து ஆரம்பித்திலேயே அந்தக்கொலைப்பேச்சையெடுக்காமல், வேறேதேனும் முகாந்தரத்தை வைத்துக்கொண்டு போய் அவரை ஸந்தித்து, அப்பால் ஸம்பாஷணைக்கிடையே, வெறுமே யதிர்ச்சையாக நேர்ந்தமாதிரியாக இந்த மருதப்பிள்ளை விஷயத்தை யெடுத்து அப்போது வில்ஸன்துரை சொல்லும் வார்த்தைகளிலிருந்து அவருடைய மன இயல்பை அறிந்துகொள்ள வேண்டுமென்று ராஜகோபாலய்யங்கார் தீர்மானித்தார்.

அன்று ஸாயங்காலம் ஐந்துமணியானவுடன் பைஸிகிள் போட்டுக்கொண்டு, வில்ஸன்துரை வீட்டுவாயிலிலே போலீஸ் உடுப்புடன் இறங்கி அங்கிருந்த வாயில்காப்போனிடம் "உள்ளே துரை இருக்கிறாரா?" என்றுகேட்டார்.

"இரிக்காங்கோ" என்று வாயில்காப்போன் சொன்னான். அவன் சென்னப்பட்டணத்து மஹமதியன் இருக்கிறார்கள் என்பதை "இரிக்காங்கோ" என்று சிதைத்துச் சொன்னான்.

"என்ன செய்கிறார்?" என்று அய்யங்கார் கேட்டார்.

ஸும்மா இரிக்காங்கோ பேபர் படிக்கிறாங்கோ என்று வாயில் காப்போன் சொன்னான்.

சரி; அப்படியானால் இந்தச் சீட்டை அவரிடம் கொண்டுகொடு என்று சொல்லித் தமது பெயரும் உத்தியோகமும் குறிக்கப்பட்டிருந்த சீட்டை நீட்டினார். அய்யங்கார் ஸலாம் போட்டு அந்த சீட்டை வாங்கிக்கொண்டு வாயில்காப்போன் உள்ளேசென்று வில்ஸன் துரையிடம் சீட்டைக் கொடுத்தான். அவர் "வரச்சொல்லு" என்று கட்டளையிட்டார். ஸப் இனிஸ்பெக்டர் உள்ளே போய் நாற்காலியில் இருந்து க்ஷேமவிசாரணைகள் செய்து முடிந்தவுடனே வில்ஸன் துரை ஸப் இனிஸ்பெக்டரை நோக்கித் தாங்கள் இங்கு வந்ததன் நோக்கமென்ன என்று கேட்டார்.

"ஊரெல்லாம் தொழிலாளிகளின் சச்சரவு மிகுதிப்பட்டு வருகிறதென்று கேள்வியுற்றேன். அச்சுக்கூடத்தொழிலாளிகளே விசேஷமாக முதலாளிகளை அல்லற்படுத்துவதாகவும் அறிந்தேன். இது விஷயமான விசாரணைகள் செய்யும்படி எனக்கு மேலதிகாரிகள் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். நான் தங்கள் மூலமாக இதன் விவரங்களேதேனும் எழுதிக்கொண்டு போகலாமென்று வந்தேன். தங்களைப்போல் முக்கியமான வியாபாரிகளின் எண்ணங்களைத் தெரிந்தெழுதும்படி எனக்கு அதிகாரிகள் உத்திரவு கொடுத்திருக்கிறார்கள்; ஏதேனும் தகவல்கள் கொடுக்க சௌகர்யப் பட்டால் அங்ஙனமே தயவுசெய்ய வேண்டும். என்று ராஜகோபாலய்யங்கார் மிக வினயத்தோடு சொன்னார்.

ராஜகோபாலய்யங்கார் இங்கிலீஷ் பாஷை பேசுவதிலே மஹா ஸமர்த்தர். அவர் இங்கிலீஷ் பாஷையில் எண்ணிறந்த புஸ்தகங்களும், மதிப் பிறந்த காவியங்களும் படித்துத்தேர்ந்தவர். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் அத்தனையும் அவருக்குக் கரதல பாடம். பைரனுடைய பாட்டுக்களைப் பாராமல் சொல்லுவார். ஷெல்லி பாட்டுக்கள் குட்டியுரு. எனவே அந்தபாஷையில் அவருக்குச்சிறந்த வாக்குண்டாய் விட்டது. இவர் பேசிய நேர்த்தியையும், மேனியழகையுங் கண்டு பூரித்து வில்ஸன் துரை:— "நீங்கள் தானா இந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் ஸப்-இன்ஸ்பெக்டர்?" என்று கேட்டார்.

"ஆம்" என்றார் அய்யங்கார்.

வில்ஸன் துரை பெரிய வாயாடி. வந்தவர்களிடம் தொளைத்துத் தொளைத்து மாரிக் காலத்து மழை போல் இடைவிடாமல் பேசிக்கொண்டிருப்பதும், அல்லது கேள்விகள் பல, ஓயாமல் கேட்

டுக்கொண்டிருப்பதும் அவருடைய வழக்கம். அதிலும் கவர்ன்மெண்டாருக்குத் தம்முடைய அபிப்ராயங்களை மதிப்புடையனவாகத் தெரிந்தனுப்ப வந்திருக்கும் அய்யங்காரிடம் அவருக்கு அதிகமாக மன மிளகி நாவு பொழியலாயிற்று.

"உங்களுக்கு வயதென்ன?" என்று துரை கெட்டார்.

"முப்பத்திரண்டு வருஷம் மூன்று மாஸம்" என்றார் அய்யங்கார். "பெண்டாட்டி இருக்கிறாளா?" என்று துரை கேட்டார்.

"இல்லை" என்றார் அய்யங்கார்.

துரை கேட்டார்:—"இன்னும் விவாகமே நடக்கவில்லையா?" என "ஒரு மனைவி கட்டி, அவள் இறந்து போய் இரண்டு வருஷங்களாயின. பிறகு இரண்டாந்தாரம் கட்டவில்லை" என்றார் ஐயங்கார்.

"என்? முதல் தாரத்துக் குழந்தைகள் அதிகமோ?;' என்றார் துரை.

"இறந்த மனைவிக்குக் குழந்தையில்லை" என்றார் அய்யங்கார். "தொழிலாளிகளின் விஷயம் பிறகு பேசிக்கொள்வோம். நடைப்பக்கத்துக்குப் போய்க் கொஞ்சம் பிஸ்கோட், டீ, சாப்பிடலாமா?" என்று துரை அழைத்தார். ஐயங்கார் சாப்பிட உடன்பட்டார். தங்கையாகிய இஸபெல்லாவைக் கூப்பிட்டுத் தம் மிருவருக்கும் "டிபன்" தயார் பண்ணச் சொன்னார். அவள் சிறிது நேரம் கழித்து மீண்டு வந்து, மேஜைமேலே பழம் பலகாரம், டீ தயார்செய்து வைத்தாய் விட்டதென்று சொன்னாள். இதனிடையே அய்யங்கார் வில்ஸனை நோக்கி "எனக்கு ஷை தொழிலாளிகளுள் சச்சரவு ஸம்பந்தமான விவரங்களைத் தாங்கள் மிகவும் விரைவாகக் கோர்வைப்படுத்தித் தெரிவிக்க எத்தனை தினங்களுக்குள்ளே முடியும்? ஏனென்றால், கவர்ன்மெண்டார் என்னிடம் மிகவும் அவஸரமான அறிக்கையை எதிர்பார்க்கிறார்களென்று தோன்றுகிறது. என்று ராஜ கோபாலய்யங்கார் கேட்டார்.

"ஓ, நாளைக் காலை பத்துமணிக்குள் எழுதி ஒரு வேலையாள் மூலமாக உங்கள் கச்சேரிக்கனுப்பி விடுகிறேன்" என்று வில்ஸன் துரை வாக்களித்தார்.

ஐயங்காரும், வில்ஸன் துரையும், இஸபெல்லாவும் உட்கார்ந்து சிற்றுண்டி புசித்தனர். சமையற்காரப் பறையன் பரிமாறிக் கொண்டிருந்தான்.

"இந்த ஐயங்காரைப் பார்த்தால் மருதப் பிள்ளை முகச் சாயை கொஞ்சம் தென்படுகிறது" என்று இஸபெல்லா சொன்னாள்.

'ஊளுறுதே! அவனுடைய மூஞ்சி, சூனியக்காரனுடைய மூஞ்சியைப் போலிருக்கும். இவரைப் பார்த்தால் ராஜாவைப் போல் இருக்கிறார். இவரோடு அவனை ஒப்பிடுகிறாயே?" என்றார் வில்ஸன் துரை.

சமையற்காரனைப் பார்த்து, இஸபெல்லா:—"ஏனடா ஜான்? இந்த ஸப்-இன்ஸ்பெக்டர் ஸாமி முகமும் அந்த மருதப் பிள்ளையின் முகமும் இலேசாக ஒரு விதச் சாயலொற்றுமை உடையன அல்லவா?" என்று வினவினாள்.

"எனக்குத் தெரியாது; மிஸ்ஸம்மா! நான் அந்த மருதப்பிள்ளையென்ற மனிதனைப் பார்த்ததே கிடையாது." என்றான் சமையற்காரன்.

இதனுடன் அந்த ஸம்பாஷணையை நிறுத்திவிட்டார்கள். இதற்கிடையே ஷை மருதப்பிள்ளையின் பேச்சு நடக்கையிலே எவரெவர் என்ன குரலில் பேசினார்கள், எவரெவருடைய முகப்பார்வை என்னென்ன நிலைமையிலிருந்தது என்ற செய்தியை யெல்லாம் கவனித்து வந்த ராஜகோபாலய்யங்கார்—போடகிராப்—நிழற்படம்—பிடிக்கும் கருவிபோலே தமது சித்தத்தை நிறுத்திக் கொண்டு அவர்களுடைய சொற்கிரியைகளையும் தோற்றங்களையும் அப்படியே தமக்குள் சித்திரப்படுத்தி வைத்துக் கொண்டார். இவர் அந்த ஸம்பாஷணையை இத்தனை கவனத்துடன் கவனித்தாரென்பதை இஸபெல்லா உணர்ந்து கொண்டாள். பிறகு வேறு பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். சிற்றுண்டி முடிவு பெற்றது. ஐயங்கார் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போய் விட்டார். அவர் வெளியே போனவுடன், சமையற்காரனும் போய் விட்ட பின்பு, வில்ஸன் துரை:—"உனக்கு அந்த இடைப்பயல்

மேலிருந்த மோஹம் இன்னும் தீரவில்லையோ?" என்று இஸபெல்லாவை நோக்கிக் கேட்டார்.

"என்னை வையாதே, உன் நாக்கு அழுகிப் போகப்போகிறது" என்றாள் இஸபெல்லா "அப்படியானால், இன்று மாலை அவனைப் பற்றிய வார்த்தையை நீ யேன் எடுத்தாய்? அவன் பெயரை ஏன் உச்சரித்தாய்?" என்று துரை கேட்டார்.

"மருதப் பிள்ளை என்ற பெயர் சொன்னால் தோஷமா? அவனுடைய மூஞ்சியும் அந்த ஸப் இன்ஸ்பெக்டர் மூஞ்சியும் ஒரே சாயலுடையன போலே தோன்றிற்று. அதற்காகக் கேட்டேன். கேட்டதில் என்ன குற்றம்? கேட்டது குற்றமென்றெனக்குத் தோன்றி அதனால் நீ என்னை மிருகத்தனமாக இழித்துப் பேசக் கூடுமென்பதை இப்போ தறிந்தேன். இனிமேல், அவனுடைய பெயரை உச்சரிக்கமாட்டேன்.

நீ கஷ்டப்படாதே, போ" என்றாள் இஸபெல்லா.

"வந்தவர் போலீஸ் இன்ஸ்பெக்டரென்பதை மறந்தாயோ?" என்று வில்ஸன் துரை கேட்டார்.

அதற்கு இஸபெல்லா:—"அது எனக்கு நன்றாகத் தெரியும். அவன் வாயிலில் வந்திறங்கும் போதே, என் பக்கத்திலிருந்த தையற்காரனிடம் இந்தப் போலீஸ் உத்யோகஸ்தர் யாரென்று விசாரித்தேன். இவர் தான் இந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் ஸப்—இன்ஸ்பெக்டர் என்றும், இவருடைய பெயர் ராஜகோபாலய்யங்காரென்றும், இவர் ரஹஸ்யப் போலீஸ் தந்திரங்களிலே மிகவும் கீர்த்தி பெற்று ராஜாங்கத்தாரிடம் பல மெடல்கள் வாங்கியிருப்பதாகவும் தையற்காரன் சொன்னான்" என்றாள்.

"அப்படித் தெரிந்திருந்துமா, அவனிருக்கும் போது அந்தப் பாழ்த்த படுபாவியின் நாமத்தை உச்சரித்தாய்? அடி, போ, மூடமே!" என்று சொல்லி வில்ஸன் துரை பெரு மூச்செறிந்தார். அப்போது, அந்த வார்த்தை கேட்டு, இஸபெல்லா:—"நீ மூடனா, நான் மூடையா என்பது பின்னிட்டுத் தெரியும். இந்த ஸப்—இன்ஸ்பெக்டர் ராஜகோபாலய்யங்கார் ஷை மருதப்பிள்ளையின் கொலை

விஷயமாக நம்மிடமிருந்து ஏதேனும் துப்புக்கள் தெரிந்துகொண்டு போகவேண்டுமென்ற நோக்கத்துடனேயே நம்முடைய வீட்டுக்கு வந்தார். அந்த மர்மத்தை அறிந்தே நான் பேசினேன். பேசும்போது அவருடைய முகக் குறிப்பிருந்த நிலைமையை உத்தேசிக்குமிடத்தே இவர் நம்மீது பரிபூர்ண ஸந்தேஹ முடையவராகவே தெரிந்தது. நான் சொல்லுகிறேன்; கேட்கிறாயா? இந்த அய்யங்கார் இங்கு வந்தவுடனேயே இவர் ஷை மருதப் பிள்ளையின் கொலையைப்பற்றி அவரிடம் அவசியம் பேசி யிருப்பார்கள். அவர் ஷை கொலையின் ஸம்பந்தமாகவுள்ள பழைய காகிதங்களையும் பார்வையிட் டிருப்பார். அதினின்றும் தாம் ரஹஸ்ய ஆராய்ச்சிகளில் கீர்த்திபெற்றிருக்கும் ஸம்ஸ்காரத்தால் இந்த அதிமர்மமான கொலையின் உளவைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நிச்சயத்துடன் முதலாவது நம்மீதேற்பட்ட ஸம்சயத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாமென்று இங்கு வந்தார். அன்னா இந்தச் சலசலப்புக்கெல்லாம் நீ ஏன் ஓயாமல் பயப்படுகிறாய்? நாம் குற்றவாளிகளல்லவென்பதை நாம் அறிவோம். தெய்வம் அறியும். நமக்கேது பயம்? நம்மை தெய்வம் காப்பாற்றும்." என்றாள்.

இது கேட்டு வில்ஸன் துரை சொல்லுகிறார்:—"நீ கேவலம் பெண் பிள்ளையாதலால் இங்ஙனம் பிதற்றுகிறாய்? முதலாவது விஷயம் கடவுளும் கிடையாது, கிடவுளும் கிடையாது. அதெல்லாம் பழங் காலத்துப் புரளி. இந்த உலகம் இயற்கையால் உண்டானது. இதை அறிவுடைய ஆத்மா ஒன்று யோசனை செய்து படைத்ததென்று தீர்மானிக்க ஒரு லவலேசம்; துண்டு. துணுக்கு, அணு, கூட ருஜு கிடையாது." என்றார்.

இந்தப் பேச்சை இடையே நிறுத்தி இஸ்பெல்லா "நாம் தான் மருதப் பிள்ளையைக் கொன்றோமென்பதற்கு ருஜு இருக்கிறதா? இப்போது அதைக் குறித்துப் பேசுவோம். நான் பெண் பிள்ளை எனக்குப் புத்தி கிடையாது, விவகாரம் ஞானம் சிறிதேனும் கிடையாது. மூடத்தனமாகக் கடவுளை நம்புகிறேன். ஆனால், யதார்த்தத்திலே கடவுளும் கிடையாது; கிடவுளும் கிடையாது. அந்த விஷயம் உனக்கு நன்றாக ருஜுக்களுடன் நிச்சயப்பட் டிருக்கிறது.

நீ ஆண் பிள்ளை; படித்தவன், மேதாவி, விவகார ஞானத்திலே சிறந்தவன். இதெல்லாம் வாஸ்தவந்தான். எனினும் இப்போது விவகாரத்திலிருப்பது மருதப் பிள்ளையின் கொலையைப்பற்றிய விஷயமே யாதலாலும் கடவுளின் கொலையைப்பற்றிய விஷயமில்லை யாதலாலும், நாம் கடவுளை நிந்திப்பதைக் கொஞ்சம் நிறுத்தி விட்டு, மருதப் பிள்ளையின் விஷயத்தைக் குறித்துப் பேசுதல் அதிகப் பொருத்தமுடையதாகுமென்று அபிப்ராயப் படுகிறேன்'' என்றாள்.

வில்ஸன் துரை மீட்டும் சொன்னார்:—"நீ பெண் பிள்ளை ஆதலால் உனக்கு லௌகீக ஞானம் குறைவு. ஆதலால், நாம் ஒரு கொலை உண்மையிலே செய்திருந்தாலொழிய அதற்குரிய தண்டனையைக் குறித்து நாம் அஞ்ச வேண்டுவதில்லை யென்று நினைக்கிறாய். உலகத்திலே ஒருவன் மீது தகுந்த ஸாக்ஷிகளுடன் பொய்க் குற்றம் ஜோடிப்பது எத்தனை ஸுலப மென்பதை நீ அறியவில்லை. கோயில் பாதிரியார் உனக்கு இந்த விஷயம் கற்றுக்கொடுக்கவில்லை. நாம் கொல்லவில்லை யென்பது வாஸ்தவந்தான். இருந்தாலும் இது நமக்கு மிகவும் பயந்தரக்கூடிய விஷயம்'' என்றார்.

இதைக் கேட்டவுடன் இஸபெல்லா:—"எனக்கு வேலை யிருக்கிறது. நான் போகிறேன். எதற்கும் நான் பயப்படுவதாக உத்தேசம் கிடையாது'' என்று சொல்லிப் போய்விட்டாள்.

ஊரில் தொழிலாளர் சச்சரவு அதிகப்பட்டது. பிரமாண்டமான, மஹாமேருகிரியின் உச்சிக்கு மேலேயுள்ள ஒரு கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர் நேரே வில்ஸன் துரையைக்கண்டு பேசி அந்தச் சச்சரவு சம்பந்தமான வாக்கு மூலம் வாங்கிக்கொண்டு போனார். இந்த மஹிமை வில்ஸன் துரைக்கு எற்படுத்திக் கொடுப்பதில் ஸப் இன்ஸ் பெக்டர் ராஜகோபாலய்யங்காரே விசேஷ காரணபூதராக இருந்தார். அதினின்றும் அய்யங்காருக்கும் வில்ஸன் துரைக்கும் ஸ்நேகம் அதிகப்பட்டது. அய்யங்கார் மாலைதோறும் வில்ஸன் துரையின் வீட்டுக்கு வருவதை ஒரு விரதம்போலே நடத்தி வந்தார். இதினின்றும் அய்யங்காரும் துரையினுடைய தங்கை இஸபெல்லாவுக்கும் அடிக்கடி ஸந்தித்துப் பழக இடமுண்டாயிற்று. அந்த வழக்கம் சிலவாரங்களில் ஸ்நேகமாக மாறிற்று. அந்த ஸ்நேகம் சில மாஸங்களில் காதலாகப் பரிணமித்தது. வில்ஸன் துரையிடம் விவாகத்தைக் குறித்து ஸம்மதம் கேட்டார்கள். அவர் கூடாதென்று சொல்லி விட்டார். அதினின்றும் இஸபெல்லா தன் தமயனுடைய வீட்டை விட்டுப் போலீஸ்டேஷனுக்கருகே ஸப் இனிஸ்பெக்டர் வாஸம் செய்துகொண்டிருந்த பங்களாவுக்கு வந்து விட்டாள். அங்கு ஸர்க்கார் பதிவுச் சட்டப்படிக்கும், கிறிஸ்தவ மாதாகோயில் சடங்குகளின் படிக்கும் ஸப் இனிஸ்பெக்டர் ராஜகோபாலய்யங்காருக்கும் இஸபெல்லாவுக்கும் விவாகம் நடந்தேறிற்று. இஸபெல்லாவுடைய இளமையும் வனப்பும் சற்றே மங்கத் தொடங்கின பிராயத்திலிருந்தார்களென்று மேலே குறிப்பிட்டிருக்கிறோம். இந்த விவாகம் நடந்த ஸந்தோஷத்திலே அவள் இளமையிலிருந்த அழகையும் கவர்ச்சியையும் காட்டிலும் நூறு மடங்கு அதிகமான புதிய வனப்பையும் கவர்ச்சியும் பெற்றுத் தேறி விட்டாள்.

பின்னிட்டு வில்ஸன் துரையும் ஸமாதானத்துக்கு வந்து விட்டார். "ஒரு கேடுகெட்ட வெள்ளைக் காரனுக்கு என் தங்கையை மணம் புரிவதைக் காட்டிலும் சுத்தமான பிராமணனுக்குக் கொடுத்தது, எனக்கு நூறுமடங்கு மேன்மையாயிற்று. ஸர்க்கார் உத்தியோகஸ்தர் ஐரோப்பிய மேலதிகாரிகளுக்குக் கண்மணி போலே இருக்கிறார். மாப்பிள்ளையின் அழகுக்கே கொடுக்கலாமே ஆயிரத் தெட்டு ராஜ குமாரத்திகளை'' என்று வில்ஸன் துரையே தம்முடைய ஸ்நேகிதர்களிடம் சொல்லத் தொடங்கி விட்டார்.

ஒரு நாள் மாலை இஸபெல்லாவும் அவளுடைய கணவனாகிய ராஜகோபாலய்யங்காரும் தனியிடத்திருந்து ஸம்பாஷணை செய்துக் கொண்டிருக்கையில் அய்யங்கார் தன் காதலியை நோக்கி:—இஸபெல்லா என் காதலி, மருதப் பிள்ளையை யார் கொன்றார்கள். உனக்குத் தெரியுமா என்று கேட்டார்.

அவருடைய மனைவி கொன்றாள் என்றாள் இஸபெல்லா.

ஏன் என்று அய்யங்கார் கேட்டார்.

அவளை மற்றொருவனுக்கு பெண்டிருக்கும்படி வற்புறுத்தினார். அதற்காகக் கொன்றாள் என்றாள் இஸபெல்லா.

பறையன்மீதிருந்த கோழிரத்தக் கறையின் செய்தி என்ன? என்று அய்யங்கார் கேட்டார். அது கோழிரத்தந்தான் கொலைநடந்த போது மருதப்பிள்ளையும் அவனுடைய மனைவியைச் சில இடங்களில் காயப்படுத்தி விட்டான். அவன்தான் முதலாவது குத்தினான். எனவே அவள் குற்றுயிரோடிருந்தாள். அவள்மீது ஸம்சயந் தோன்றாமல் மாற்றும் பொருட்டு நான் அவளை பத்திரமாக மறைத்து வைத்து முதல் ஸம்சயத்தை வீணுக்காவது பறையன்மேலே திருப்பி விட்டுப்பின் அவளை வேறுபாயங்களால் மீட்டுக் கொள்ளலா மென்று கருதி நான்தான் அவனுடைய துணியில் கோழியிரத்தம் பூசுவித்தேன் என்றாள் இஸபெல்லா.

அப்பால் ஷை மருதப்பிள்ளையின் கொலை சம்பந்தமான பதிவுகளை அய்யங்கார் மீட்டும் கட்டி வைத்து விட்டார். அந்த விவகாரத்தை மறந்து போய் விட்டார்.

முற்றும்.

ஓர் தாயின் பிரார்த்தனை

மகாகவி ரவீந்திரநாத தாகூரவர்களால்

(ஓர் சிறுநாடகம்)

நாடக பாத்திரங்கள்:— (1) திருதராஷ்டிரன் (2) துரியோதனன் (3) காந்தாரி (துரியோதனன் தாய்)

சந்தர்ப்பம்:— பாண்டவர்கள் சூதாடி, துரியோதனனது வஞ்சனையால் ராஜ்யமிழந்து வனவாசஞ் செய்யப் புறப்படுங்காலம்.

திரு:— நீ தேடியதை யடைந்துவிட்டாயல்லவா?

துரி:— யான் வெற்றி யடைந்தேன்.

திரு:— அதனால் நீ சந்தோஷ மடைகின்றனையா?

துரி:— நான் பெற்றது ஜயமே

திரு:— அவிபக்த ராஜ்யத்தை நீ அபகரித்ததனால் நீ அடையும் சந்தோஷம் யாது? மறு முறையும் கேட்கிறேன். பதில்சொல்.

துரி:— ஐயனே க்ஷத்திரியர்கள் வேட்கை கொள்வது சந்தோஷம் என்பது அன்று. அது வெற்றி யென்பதே யாகும். அதுவும் பொங்கி யெழும் பொறாமையினின்று காய்ச்சி வடிக்கட்டி யெடுக்கப்பட்டு தீப்போல் தகிக்கின்ற வியல்புடைய வெற்றி யாகும். அஃதுகள் போன்ற வேகமுடையது. நமது தாயாதிகள் நம்மிடம் பிரியங்காட்டி, நம்மை யடக்கி யாண்டபோது சந்திரனுடலத்தில் சோம்பிக்கிடக்கும் சிறற்கலைகள் போல், அற்பவானந்தம் பெற்றுச் சிறு வாழ்வு வாழ்ந்து வந்தோம். அக்காலத்தில் பாண்டவர்கள் இப்புவியென்னும் பசுவைக் கறந்து பாலெனும் அதன் ஐசுவரியத்தையுண்டு, நாம் அவர்கட்குச் சகோதரராச் சகித்தமையுடன் யென்ற வெண்ணத்தால் நாமும் அவர்களுடன் அதனை யனுபவிக்குமாறு விடச் சகித்தனர், ஆனால் அவர்கள் தம் தோல்வியை யேற்றுக்கொண்டு தேசப் பிரஷ்டமாகத் தயாராயிருக்கும் தற்போழ்தோ நான்அடைவது சந்தோஷ மன்று அஃது வெற்றியாலுண்டாகும் பெருமையே.

திரு:— அடே துஷ்டா! பாண்டவர்களும் கௌரவர்களும் ஒரே பெரியோர் மரபிற்றோன்றியவர்களாச்சுதே இதை நீ மறந்து விடுகின்றனையே!

துரி:— அதை மறப்பது கடினமாயிருந்தலாற்றான் எங்களுக்குள்ள ஏற்றத்தாழ்வுகளனைத்தும் என் மனத்தைத் துன்புறுத்துகின்றன. ககன வட்டத்தில் பகற்பொழுது சூரியன் பிரகாசிப்பதைப்பார்த்து இரவினுக்கரசியாகிய மதி ஒரு காலும் பொறாமை கொள்ளான். ஆனால் எக்காலத்தில் இருவருமே வானாட்சி செய்யவேண்டுமென்று யுத்தம் தொடங்குமேல் எந்நாளுமே அச்சண்டை நடை பெறுது. அச்சண்டை தற்போது ஒழிந்ததே யென நான் கடவுளைத் துதிக்கின்றேன். தன்னந் தனியே இருந்து நாட்டை ஆட்சி செய்யும் மாட்சிமையை நாம் இப்பொழுது பெற்றுவிட்டோம்.

திரு:— என்ன அற்பத்தனமான பொறாமை யிது?

துரி:— ஐயனே! பொறாமையென்பது ஒரு போதும் அற்பத்தனமுடையதாகாது; அஃது பெரியாரின் இயற்கையிலேயே அமைந்து கிடப்பதொன்று. புல்லினம் மாத்திரமே ஒன்றோடொன்று நெருங்கித் தழுவித் தோழ்மை பாராட்டி வளருமேயன்றி நீண்டுயர்ந்த தருவர்க்கங்கள் அவ்வண்ணம் வளரா. நக்ஷத்திரங்கள் மாத்திரம் கூட்டங் கூட்டமாய் கூடி யிருக்குமே யன்றி சந்திரனும் சூரியனும அவ்வண்ணமிரா. அவை தனிமையிற்றான் அரசாட்சிசெய்வன. பாண்டவர்களென்ற சந்திரன் பாண்டு பிடித்தாற்போல் வெளுத்த கிரஹணங்களுடன் வனத்தின் சாயையில் அஸ்தமனமாகவும், நூதனமாய் இதோ கௌரவ சூரியன் உதயமாகப்போகின்றான் ஐயனே!

திரு:—ஆயினும் நியாயம் என்பது தோல்வியடைந்து விட்டதே?

துரி:—அரசனுக்கு எது நியாயமாகுமோ அது அவனது பிரஜைகட்கும் நியாயமாகாது. ஜனங்கள் அபிவிருத்தியடைவது ஒருமையாற்றான் (ஐக்கியத்தினால் என்றபடி) ஆனால் அரசனென்பானுக்கோ தனக்கு நிகரானவர்கள் எவரோ அவரே சத்துருவாவர். அவர்களை அவன் ஜெயிக்காதிருப்பின், அவர்கள் இவனுக்கு இடர் செய்வர் ஜெயித்தபின்னும் பயத்திற்குக்காரணமாவர். அரசனென்பானுடைய தந்திர சாஸ்திரத்தில் சகோதரர் சிநேகிதர் என்பவர்கட்கிடமில்லை. அதற்குப் பலமான அஸ்திவாரம் ஜயம் எனப்படுவதே.

திரு:—வஞ்சனையால் சூதாட்டத்தில் ஒருவரைச் ஜெயிப்பது, ஜெயமாகாது, அதையான் வெற்றியென்று கூறமாட்டேன்.

துரி:—ஐயனே! ஒரு மனிதன் சிங்கத்தோடு ஆயுதம் யாதுமின்றி தன் நகங்களைக் கொண்டும், தன் பற்களைக் கொண்டும் மாத்திரம் போராடிச் சண்டையிற் ஜெயிக்கமுடியாவிடின் அது அவனுக்கு அவமானமாகுமோ? நமக்கு வெற்றியைக் கொடுப்பது எதுவோ அதுவே நமக்கு ஆயுதமாகும். நமக்கு நாசத்தைத் தருவதை நாம் நமது ஆயுதமெனலாமோ? நாம் நாடிய பொருள் கைகூடியென யான் பெருமை யடைகின்றேன். ஆனால் நான் அதனைப்பெற்ற உபாயம் அல்லது வழியைக் குறித்து விசனப்படுவதை நிந்தையுடன் வெறுக்கின்றேன்.

திரு:—ஆனால், நியாயம், நீதியென்பது.

துரி:—மூடர்கள் தாம் காரியசித்தியாகு முன்னரே "இது நீதி இது நியாயம்" என்று கனவு காண்பார்கள். ஆனால் அரசு செய்தற்கு உரியவர் என பிறப்பு முதலே குறிக்கப்பட்டுள்ளவர்கள் நீதி, அநீதி, இரக்கம் தாக்ஷிண்யம் என்ற இத்தகைய வெண்ணங்களுக்குக்கட்டுப் பட்டுநில்லாது, தம் சொந்த ஆற்றலையே நம்பியிருப்பர்.

திரு:—உனது ஜயமே உன் பிரஜைகளின் கோபத்திற்கும் பழி வார்த்தைக்கும் நிந்தைக்கும் உன்னை இலக்காக்கிவிட்டது,

துரி:—அப்படியா? அவ்விதமாயின் (வணங்காமுடியான) துரியோதனன் அவர்கட்கு அரசனென்றும் அவன் அத்தகைய பழி வார்த்தைகளைத் தன்பாதத்தின் கீழ் வைத்து நசுக்கி விடவல்லவனென்றும் அதிசீக்கிரம் அவர்களையறிவார்கள்.

திரு:—ஜனங்கள் உன்னைத் தூற்றினால் அவ்வசைச் சொற்கள் அவர்தம் நாவிலேயே உயிரின்றி (பயனின்றி) மாண்டு விழட்டும்; ஆனால் உன் நடத்தையால் அவர்கள் மனத்தே அப்புண் ஆழ்ந்து சென்று அங்கு பலப்பட்டு வளருமாறு செய்து கொள்ளாதே.

துரி:—ஜனங்கள் வாயாற் பிதற்றுதிருப்பின் அஃது அரசன் கௌரவத்தைக் கெடுக்காது. என்னிடம் அவர்கள் அன்பு பாராட்டாவிடின் அதை நான் சிறிதும் சட்டை செய்யேன். ஆனால் அவர்களுடைய போக்கிரித்தனமான (குறும்பான) நிந்தை மொழிகளை மாத்திரம் நான் ஒரு போதும் பொறுக்கமாட்டேன் அன்பு செய்வது என்பது செய்வானது விருப்பத்தைப் பொருத்ததாகும். இத்தருமத்தை வழியில் வறியரும் கட்டிக் கொள்ளலாம்.

அன்னோர், தமது வீட்டுப் பூனைகளிடத்தும், வளர்ப்பு நாய்களிடத்தும் நமது தாயாதிகளான பாண்டவர்களிடத்தும் வேண்டிய வளவு அந்தப் பிரியத்தைச் செலவு செய்யட்டும். அதைப் பார்த்து நான் பொறாமைப் படேன். ஆனால் பிரஜைகளிடமிருந்து அரசனாகிய நான் பெற விரும்பும் கப்பணம் யாதெனின்

பீதி பயம் என்பதே ஐயனே உமது மக்களை நிந்திக்கின்ற ஜனங்களை நீர்மட்டுக்கு மிஞ்சிய தாக்ஷிண்யத்தோடு உம்மிடம் வந்து முறையிடுமாறு விடுகின்றீர். ஆதலால் தெய்வ பக்தியுள்ள இச்சிநேகிதர்களை எனக்கிடையூறு உண்டாகுமாறு உமது செவியில் கூகூவென்று சப்த மிட்டு என்னையவர்கள் திட்டுமாறு இனி நீர் விடுவீராயின் நாங்கள் நாடாளுவதை விட்டுக் காடாள (எங்கள் தாயாதிகட்கு பதிலாய்ச்) சென்று விடுவோம். வனத்தில் காட்டிலேனும் சிநேகிதர்கள் மலிவாய்க்கிடைக்க மாட்டார்களல்லவா? ஐயனே!

திரு:—அடடா கடவுளுக்குப் பயந்து நடக்கும் எனது சிநேகிதர்களது எச்சரிக்கையால் என் மகனிடம் நான் வைத்திருக்கும் பிரீதிகுறையுமாயின் நாமெல்லோரும் க்ஷேமப்பட்டு விடலாமே ஆனால் நானோ அவ்விதமின்றி உனது அவமானமென்ற சேற்றின் கண் என் கண்ணைத் துவைத்து நீதி அநீதி என்ற பகுத்தறிவையு மிழந்து விட்டேன். உன் பொருட்டே நான் நமது ராஜவம்சமென்ற பழைய ஆரண்யத்திற்குச் சிறிதும் சிந்தனையின்றியே தீவைத்து விட்டேன். உன்பால் எனதன்பு அத்துமீறி பயங்கரமான விதமாய்ப் பெருகுகின்றதே உன்னை என்னுடனுடன் சேர்த்து இறுகப் பற்றிக்கொண்டு இரண்டு வால் நக்ஷத்திரங்கள் போல் நீயும் நானும் அந்தகாரமிகுந்த படுகுழியில் விழப்போகின்றோம். ஆதலால் உன்னிடம் நான் பிரியம் வைக்கவில்லை யென்று நினையாதே நாம் இருவருமே நாசமடையும் பரியந்தம் என்னை விடாப்பிடியாய் நீ கட்டிக்கொள். உனது ஜயபேரிகையை முழக்கஞ்செய் உனது வெற்றிக் கொடியை உயர்தூக்கு தீமையே மேன்மைப்பட்டு வாழும் என்ற வெண்ணத்தோடு கொட்டமடிக்கும் இப்பித்தர் கொண்டாட்டத்தில் (கூத்தில்) சகோதரர் சிநேகர் என்பார் அனைவரும் பிரிந்து கலைந்து போய்ச் சபிக்கப் பெற்ற துர்ப்பாக்கிய ஜனபிதாவாகிய நானும் துர்ப்பாக்கிய மகனாகிய நீயும் கடவுளுடைய சாபமும் மாத்திரமுமே மிஞ்சுமப்பா

காந்தாரி மகாராணியார் வருகை.

[சேவகன் உள் நுழைந்து அரசனிடம் கூறுவன்]

சேவ:—மகாராஜா! நமது ராணியம்மாள் தங்களை தரிசிக்க விரும்புகின்றனர்.

திரு:—உள்ளே வரட்டும்.

சே:—நான் விடைபெற்றுச் செல்கின்றேன் ஐயனே.

திரு,—ஆம், நீ ஓடிவிடு, இன்றேல் அவள் சன்னிதானத்தாலுண்டாகும் அக்கினியை நீ தாங்க முடியாது.

[வெளியே செல்கின்றான்.]

(மகாராணி காந்தாரி உள் நுழைகின்றனள்)

விளங்கி வந்தது. அது காணாவிட்டால் ராஜ்யத்திற்கு ஏதோ பெருங் கெடுதி விளையுமென்று பெரியோர் சொல்வதுண்டு. அதற்கு அபூர்வ சக்திகள் உண்டு. அவைகளை அறிந்து சரியாய் உபயோகித்தால் ஒருவன் தேவர்களை வென்று தேவேந்திரனுக்கு நிகராய் விளங்குவான். ஆனால் அந்த ரஹஸ்யம் ஒருவருக்கும் தெரியவில்லை. பொதுவாய் அது ஏதோ அபூர்வமான ரத்னமென்றும், சிறந்த குணங்களை யுடையதென்றும், ராஜ்யத்தின் க்ஷேமமே அதைப் பொறுத்ததென்றும், யாவரும் நம்பியிருந்தார்கள்.

ஆகையால் ஸபாமண்டபத்திற்கும் அந்தப் புரத்திற்கும் நடுவிலுள்ள ஓர் அறையில் அது வைக்கப்பட்டிருந்தது. அரசன் சபைக்குப் போகும் பொழுதும் அந்தப்புரத்திற்குத் திரும்பும் பொழுதும் அதின் வழியாய்ப்போய் அந்த மாணிக்கத்தை ஆஜர் பார்க்க வேண்டுமென்பதே அதன் கருத்து.

ஓர் பெரிய இரும்புப் பெட்டிக்குள் ஒரு தங்கச்சிமிழில் பட்டு மெத்தையின்மேல் அந்த ரத்னம் வைக்கப்பட்டிருந்தது. சிமிழ் எப்பொழுதும் திறந்திருக்கும். இரும்புப் பெட்டியின்மேல்மூடிக்கு பதிலாய் இரும்புச் சட்டங்கள் போட்டிருந்தன. அதற்கடியில் ஸன்னமான இரும்பு வலை விரிக்கப்பட்டிருந்தது. ஆகையால் மாணிக்கம் சிமிழாலும், சிமிழ் எஃகுவலையாலும், வலை எஃகுக் கம்பிகளாலும், இரும்புப்பெட்டி ஹரிநாம் லிங்காலும், எப்பொழுதும் காக்கப்பட்டிருந்தன.

இவ்வளவு விலையுயர்ந்த ரத்னத்தைத் திறந்த பெட்டியில் வைத்ததேன்? அரசனும் மற்றவர்களும், அதை எப்பொழுதும் ஆஜர் பார்த்துக் கொண்டிருப்பது ஓர் காரணமாகும். சூர்ய வெளிச்சமும், காற்றும்; ரத்னத்தின் மேல் படாவிட்டால் அது மங்கி, வீர்யம் குறைந்து, ஒன்றுக்கு முதவாமற் போம். ஜீவஜந்துவைப்போல் வெளிச்சமும் காற்றுமே அதற்கு உயிர்நிலை. முன்னொரு தடவை அதைப் பெட்டியில் வைத்து மூடிவிட்டார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு அதைத் திறந்து பார்க்கையில் அது காந்தியற்று, பலம் குன்றி, கூழாங் கல்லைப்போல் விளங்கிற்று. சில காலம் நல்ல காற்றும் வெளிச்சமும், அதின்மேல் தாக்கின பிறகே வரவர உயிரும், ஒளியும் வந்தன.

பொழுது போனவுடன் அரண்மனையில் எங்கும் கற்பூரம், சாம்பிராணி அகில், சந்தனம், முதலிய நறுமணங்கள் கூட போடப்படும் காலத்தில் ஸபா மண்டபத்திற் கப்பால் ஒருவரும் போக முடியாது. அது முதல் இரண்டு அந்தப் புரக்காவலர்களான நபும்ஸகர்கள் உருவின கத்தியுடன் அந்த மாணிக்கத்தைக் காத்து நிற்பார்கள். அவர்களை அடிக்கடி மாற்றுவதுண்டு. ஆனால் அரசன் அவ்வழியாய் போகும் பொழுதெல்லாம் ஹரிநாம்

தானே பாரா கொடுப்பான். அவ்வரைக்குப் பக்கத்தில் ஓர் முற்றமும், அதில் மூன்று சலவைக் கல் ஊற்றுக் கண்களும், இருந்தன. மாலையில் சூர்யன் கோட்டைச் சுவர்களின் பின் புரத்தில் மறைந்தபொழுது அந்தப்புரத்துப் பெண்கள் வெள்ளிக் குடங்களை இடுப்பிலும் தலையிலும் அழகாய் வைத்துக் கொண்டு, வேடிக்கையாய் பேசிக்கொண்டும், மனம் போனபடி பாடிக் கொண்டும், விளையாடிக் கொண்டும், ஜலமெடுக்க அங்கே வருவார்கள். ஸுவர்ண குமாரியின் அன்பிற்கும் கருணைக்கும், பாத்திரமான அவர்களுக்குக் கவலை யேன்? விசாரமேன்?

தாராகணங்களில் சந்த்ரனைப்போல் விளங்கும் கமலமென்பவள் மாத்ரம் குனிந்த தலையுடனும், பூமியில் நாடின பார்வையுடனும், நாணத்தால் ஒடுங்கின தேகத்துடனும்; மற்றவர்களுடன் சேராது சற்று ஒதுங்கிப் போவாள். ஹரி நாமன் அவளுடைய காதலன். அவள் அவனுடைய கண்மணி. எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையில் அவனைத் தாண்டிப் போவது அவளுக்கு ஒவ்வொரு நாளும் பெறும் கஷ்டமாயிருந்தது. மற்றப் பெண்கள் அவளைப் பார்த்து அவளுடைய காதில் ஏதோ ரஹஸ்யமாய்ச் சொல்வார்கள்; கை கொட்டிச் சிறிப்பார்கள்; திடீரென்று அவளுடைய கையிலிருந்த தோண்டியை பிடுங்கிக் கொண்டு, அவளை ஹரி நாம் இருக்கும் அரையில் தள்ளிவிட்டு, ஓடிப்போய் அங்கே அவ்விருவரும் பேசும் வார்த்தைகள் வெளியில் கேட்காதபடி, அவர்கள் கைகொட்டிச் சிறித்து, கூச்சலிட்டுக் கொண்டிருப்பார்கள். அப்பொழுது ஹரி நாம் கமலத்தின் கைகளைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டு, "என் அன்பிற்கரசியே! நான் இனி எவ்வளவு காலம் பொருத்திருப்பதோ வென்பான். அவள் தன் முகத்தை வலையால் மூடிக்கொண்டு, வெட்கத்தால் தலை குனிந்து, என் தந்தையைக் கேளுங்கள்; அவரிடத்தில் தங்களுடைய தூதர்களை அனுப்புங்கள்; இவ்வளவென்ன என்உள்ளமும், உயிரும், தங்களுடைய வசத்திலிருக்கிறதென்று அறியீர்களா? ஆனால் என் பிதாவிற்கு இது தெரியாது; தானே இந்த விவாஹத்தை முடித்துவைத்தாரென்று அவர் மகிழ்வதில் நமக்கு ஆக்ஷேபமென்ன" வென்பாள். "ஒரு வேளை அவர் இணங்கா விட்டாலோ?" "மஹாராஜாவைக் கேளுங்கள். தங்களுக்கில்லை யென்று அவர் சொல்வதுமுண்டோ. அவர், மஹாராணியை அடைந்த விதத்தை நினைக்கும் போதல்லாம், அதே கஷ்டத்தை யனுபவிக்கும் மற்ற மனிதரிடத்தில் அவருக்கு எல்லை யற்ற இரக்கமுண்டாவதில் தடை யென்ன? அவர்களை எப்படியாவது அந்தத் துயரத்திலிருந்து தப்பி விப்பார்" "என் கட்டழகி! உன் வார்த்தையால் தைர்யமடைந்தேன். நாளைக்குள் என் நண்பர் உன் பிதாவை எனக்காக வேண்டு வார்கள். என் அதிருஷ்டம் கை கூடி

னால் இன்னும் ஒரு மாதத்திற்குள் உன்னை விவாஹஞ் செய்து என் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்வேன்"

இதற்குள் திடீரென்று ஒரு மெதுவான சத்தம் காதில் விழுந்தது யாரோ வாய்க்குள் அடங்காக் கோபத்துடன் திட்டினதுபோல் கேட்கப்பட்டது. மூர்க்கமுள்ள காட்டுமிருகம் தன் இரையைக் குறி வைத்துப் பாய்ந்து குறி தவறி கீழே விழுந்து சீறுவது போல் ஒரு சத்தம் உண்டாயிற்று. ஹரி நாமன் உடனே திரும்பிப் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. ஸபா மண்டபத்தில் பிரவேசிக்கும் கதவுமாத்திரம் ஓர் பெரிய காற்றில் அடிபட்டு ஆடுவது போல் காணப்பட்டது. ஒரு வேளை உலர்ந்த சந்தனக் கட்டை ஒன்றோடொன்று உரைந்து கொண்ட சத்தமாயிருக்கலாம். ஆயினும் ஹரி நாமனுடைய மனதில் உண்டான புதிய ஆனந்தக் களிப்பென்ற சந்திரனை விழுங்க வந்த ராஹுவைப் போல், ஏதோஓர் கவலை அவனுடைய உள்ளத்தில் பரவிற்று.

அதற்குள் மஹாராஜா ஸபாமண்டபத்திலிருந்து, அந்தப் புறத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அவருடைய வலது பக்கத்தில் யாரோ ஓர் பெரியவர் கால் முதல் தலை வரையில் மஞ்சள் நிறமுள்ள உடுப்பைத் தரித்துக்கொண்டு, சிறிய குடுமியுடன் பருந்தைப் போல், நான்கு புறங்களிலும் கடைக்கண் பார்வையால் யாவற்றையும் கவனித்துக்கொண்டு வந்தார். அரசனுடைய இடதுபக்கத்தில் சற்றுப்பின் தங்கி, ஸமஸ்தானத்து வக்கீல்வந்தார். பால்யம் தாண்டி சற்று நடுவயதுவாய்ந்தவர். அரசன் இரும்புப் பெட்டிக்கு அருகில் வந்த பொழுது, தன்பக்கத்திலிருக்கும் வயதுசென்றவருக்கு வணங்கி, ஹரிநாமைப்பார்த்து, "காசிக்ஷேத்திரத்தில் வஸிக்கும் யோகீஸ்வரர். இவருடைய கல்வித்திறமையையும், உபதேசவன்மையையும், நிகரற்றயோக மஹிமையையும், கேள்வியுற்று நமது ஸபைக்குத்தருவித்தோம். இவருக்குத்தெரியாத விஷயமில்லை. இந்த மாணிக்கத்தின் பூர்வோத்திரம் இவருக்கு நன்றாய்த் தெரியுமாம். சற்று அவகாசம் கிடைத்தபொழுது இதை பரிக்ஷித்துப்பார்ப்பதாய்ச் சொல்லியிருக்கிறார். இப்பொழுது ஒரு கார்யமாய்ப் போகவேண்டிய" தென்றார்.

ஸுவர்ணகுமாரி ஏதோ மனதில் அலுப்படைந்து தனக்கு ஆறுதல் சொல்வதற்காக இந்தப்பெரியவரை அழைப்பித்ததே உண்மையாகும்.

அதுவரையில் அங்கம் தளர்ந்து கூனிக்குருகித்தள்ளாடிச் சென்று கொண்டிருந்த அந்தப்பெரியவர் அரசனுடைய மொழிகளைக்கேட்டதும், மாணிக்கத்தை கண்ணுற்றதும் மாயையால் மாறினது போல் திடீரென்று மாறிவிட்டார். முகத்தில் ஒளி ஜ்வலித்தது; கண்களிலிருந்து நெருப்புப்

பொறிகளைப்போல், பார்வைரத்னத்தையும் ஹரிநாமனையும் ஊடுருவிச்சென்றது. ஆச்சாமரம் போல் நிமிர்ந்து யௌவனத்தாலும் பலத்தாலும் தைரியத்தாலும் இறுமாப்பாலும் விளங்கினான். பிறந்ததுமுதல் ஒருபொருளை எங்கெங்கும் தேடித்திரிந்து, தன்காலத்தையும் புத்தியையும் கவலையையும் அதற்கே தாரைவார்த்துக் கனவிலும் நனவிலும் அதே ஞாபகமாயிருப்பவன், பலவருஷங்களாய் அலைந்து, ஆசை யொழிந்து, மனம் குன்றி, வாடியிருக்கையில், திடீரென்று அவன் தேடாமல், அவனுக் கெதிரே அப்பொருள் விளங்கி, என்னைக் கைப்பற்றென்று சொன்னாலெப்படியோ, அப்படி அந்த நிமிஷத்தில் அவன் தன் முதிர்ந்தவயதையும், பலஹீனத்தையும் படிப்பையும், நிலைமையையும், முற்றிலும் மறந்து, மனதிலுள்ள ஆசைமேலிட்டு, அதற்கடிமையானான். உடனே ஞாபகப்படுத்திக்கொண்டு எச்சரிக்கையாய் முன்போல் கண்ணொளி மழுங்கி, கை கால் நடுங்கி, கூனிக் குறுகித், தள்ளாடிக் கொண்டு அரசனைப்பின்தொடர்ந்தான்.

அந்தப்புரத்தின்வாயிலில் வக்கீல் தங்கி, அரசனைவணங்கி, உத்திரவுபெற்றுக்கொண்டான். வழியில் மாணிக்கத்தைக்கண்டு, அரசன் சற்றுத்தங்கி, முன்பு பால்கடலைக்கடையும் பொழுது அஸுரர்கள் அமிருதத்தைப்பார்ப்பது போல், அடங்காஆவலுடன் அதைக்கண்கொட்டாமல்பார்த்தான். அதை யறிந்த ஹரிநாமன் திடீரென்று திரும்பினான். இருப்புப் பெட்டியின் இருபுரத்திலிருந்து அவ்விருவரும் ஒருவரையொருவர் உற்றுப்பார்த்தார்கள். என்றும் தீராதபகையும் கோபமும் அந்தப்பார்வையில் விளங்கின. பாம்பும் கீரியும், புலியும் பசுவும், சிங்கமும் யானையும் போல், அவர்கள் ஜன்மசத்ருக்களென்று புலப்பட்டது. வக்கீல் ஒன்றும் பேசாமல் ஸபாமண்டபத்தை நோக்கிச்சென்றான்.

இரண்டாம் பாகம்.

மறு நாள் ஹரி நாமன் தன்தந்தையினிடத்தில் தன் விருப்பத்தை வணக்கமாய்த்தெரிவிக்க, அவர் குலாசாரப்படி தனது நண்பர்களையழைத்து, கமலத்தின் தகப்பனான ராமானந்தரிடத்தில அனுப்பி, "யசோ வந்த ஸிம்ஹமன் ராமானந்தருக்கு அனந்தகோடி நமஸ்கார. பூர்வகமாய்த் தெரிவித்துக் கொள்வதென்ன வென்றால், அழகில் பூர்ணசந்திரனையும் கல்வியில் ஸரஸ்வதியையும், குணத்தில் மஹாலக்ஷ்மியையும், ஒழுக்கத்தில். அருந்ததியையும், ஒத்த ஒரு கன்யாரத்னம் தங்களுக்கிருக்கிறதென்று கேள்வியுற்றேன்; எனக்கும் ஒரு புத்ரனுண்டு. பலத்தில் பீமனையும், ஆயுதப்பயிற்சியில் அர்ஜுனனையும், குணத்தில் லக்ஷ்மணனையும், போன்றவன். தங்களுடைய கன்யகையை என் குமாரனுக்கு மனைவியாய்க்

கொடுப்பீர்களா? என் வேண்டுகோளுக்கடையாளமாய் ஐந்து மணங்கு ருசிகரமான தின்பண்டங்களையும், 10 தோலா தங்கத்தையும், 11 நவரத்னங்களையும், நடுப்பகலில் விளங்கும் ஸூர்யனைப்போல் ஜ்வலிக்கும் ஓர் சிவப்புமாணிக்கத்தையும், அனுப்பியிருக்கிறேன். ஓ ராமானந்தரே! தாங்கள் என்ன சொல்லுகிறீர்க" ளென்று சமாசாரம் சொல்லியனுப்பினார்.

ராமானந்தர் அன்று ராத்திரி கமலா அரண்மனையிலிருந்து வீட்டிற்கு வந்தபொழுது, அவளை அருகில் உட்காரவித்து, "என் கண்மணியே! என்ன சொல்லுகிறாய். ராஜமாணிக்க காவலனுக்கு மனைவியா யிருக்க உனக்கு இஷ்டமுண்டோ" வென்றான். அதைக் கேட்டவுடன் கமலம் பரமானந்தத்தால் மெய் மறந்து, "அப்பா! யசோவந்த ஸிம்ஹனுடைய புத்ரனான ஹரிநாமஸிங்கென்ற காரணத்தால் அவருக்கு என்னைக் கொடுக்கிறீரா? அல்லது மாணிக்கத்தின் காவலென்ற பெரும் பதவிக்காகவா?" வென்றாள். அப்பொழுதே ஏதோ சந்தேஹமும், இன்னதென்று சொல்ல முடியாத ஓர் பயமும், அவளுடைய மனதில் தோன்றின. அதற்கு ராமானந்தர் அதென்ன அப்படிக் கேட்கிறாய்? நீ சொன்ன இரண்டும் காரணங்களே. ஆயினும் அவன் நல்ல பையன், உத்தமமான வம்சம், நிகரற்ற கீர்த்தி மாணிக்கக் காவலனாய் இராவிட்டாலும் நான் செய்த பிரதிக்ஞை தவறாதென்றார். அப்படியும் கமலா பயந்தெளியாமல் தகப்பனிடத்தில் ஒண்டிக்கொண்டு, "அப்பா! என்னை ஏனென்று கேட்க வேண்டாம். இந்த விவாஹத்தை கூடிய சீக்கிரத்தில் முடித்து விடவேண்டு" மென்று பரிதபிக்கும்படி கெஞ்சினாள். ராமானந்தர் அவளைக் கட்டி அணைத்து, இன்னும் ஒரு வாரத்திற்குள் என்னை விட நூறு மடங்கு வல்லவன் உன் பயத்தைத் தீர்ப்பான் அவனுடைய அமிருதம் போன்ற வார்த்தைகளால் உன் மனக்கவலை தீருமென்றார்.

அப்படியே விவாஹ ஸம்பந்தம் பேசி முடிவாயிற்று. மஹாராஜாவிற்கும் மஹாராணிக்கும் கண்ணுக்குக் கண்ணாயும், ஸகலப் பிரஜைகளுக்கும் உயிருக்குயிராயுமிருக்கும் ஹரி நாமஸிங்குக்கும் கமலத்திற்கும் நடக்கப் போகும் விவாஹம் ஸ்வப்னத்திலும் நினைக்காத விமரிசையுடன் நடக்குமென்று எண்ணி வெகு தூரத்திலிருந்து பல்லாயிரம் ஜனங்கள் டில்லி மாநகரில் கூடினார். மூன்று ராத்திரிப் பகல்களில் தேவேந்திர ஸபையைப் பழிக்கும் ஓர் அரண்மனை 40000 வேலைக்காரர்கள் ஓயாமல் வேலைசெய்து கட்டி முடிந்தது. மஹாராஜா ஹரி நாம னிடத்தில் வைத்த விசேஷ அன்பால் அந்தவிவாஹத்துக்குத் தானும் மஹாராணியும் வருவதாய் வாக்களித்தார். மேலும் காசியிலிருந்து எழுந்தருளியிருக்கும் குருவே விவாஹ ஆசீர்வாதம் செய்து, முடிவில் நல்லுபதேசம் செய்வதாய் கிருபை கூர்ந்தருளினார்.

இது மாத்ரமல்ல. விவாஹ ஸம்பந்த நஸ்தா வேஜில் ராஜ சாஸனங்களைப் போல் ராஜ மாணிக்கத்தால் முத்ரையிடப்படுமாம். அந்த நியாயப்படி ஸமஸ்தானத்து வக்கீல் அதற்கு சாக்ஷியாய் கையெழுத்துப் போடுவாராம்.

இதைக் கேட்டயாவரும் ஆச்சர்யத்தால் திகைத்தார்கள். ஆனால் ஸமஸ்தான வக்கீல் மாத்ரம் தனக்கு அதிருஷ்டம் இப்படி வாய்க்குமென்று கனவிலும் நினைக்கவில்லை. வெகு நாளாய் இராப்பகலாய் அவன் தேடித்திரிந்த பொருள் தானே வலுவில் அவனுடைய கையில் வந்து விழுந்ததே; அதைப்பற்றித் தான் தனியே உட்கார்ந்து ஆழ்ந்து யோசிக்கையில், ஏதோ ஒரு உபாயம் அவனுக்குத் தோன்றிற்று. தானே கைக்கொட்டிச் சிரித்து. 'அடே! என்ன ஆச்சர்யம்! என் எண்ணங்களெல்லாம் நான் நினைத்ததற்கு கோடி மடங்கு அதிகமாய் எனக்கு சற்றேனும் சிரமமில்லாமல் முடிவதற்கு நான் எந்த தெய்வத்தை பூசனைசெய்தேனோ? வலுவில் வந்த ஸ்ரீ தேவியை உதைத்துத் தள்ளுவாருண்டா" வென்று அன்றிரவில் காலோடுதலை மூடிக்கொண்டு மாறுவேடம் பூண்டு, அரண்மனையிலிருந்து வெளிப்பட்டு வேலைக்காரர்கள் தங்கும் வழியாய் நடந்து, சந்து பொந்துகளில் விழுந்து, யமுனைக்கரையில் கொண்டு வந்து விடும் சந்துகளில் ஒன்றில் புகுந்தான். அங்கே ஜனக்கூட்டம் அதிகம். ஒருவரை யொருவர் கவனிக்காமலிருப்பதற்கு அதே ஒரு நல்ல காரணம். ஓர்தாழ்ந்த வீட்டின் வாசலில் நுழைந்து, வாசக் கதவைத் தட்டுவதற்குப் பதிலாக கதவுநிலையின் வலது பக்கத்திலிருந்த ஒரு மரப்பூவின் நடுவில் விரலால் அழுத்தினான். உடனே வாசக்கதவு சற்றும் ஓசையில்லாமல் திறந்தது. வக்கீல் உள்ளே நுழைந்து, கதவை ஜாக்ரதையாய்ச் சாத்தினான். அப்பால் ஒரு பெரிய திரை போடப்பட்டிருந்தது. உடனே வெகுதூரத்திலிருந்து, "யார் அங்கே"யென்று ஒரு சத்தம் மெதுவாய்க் கேட்டது. வக்கில் ஒரு வார்த்தையும் பதில் சொல்லாமல் அந்த இருட்டில் தடவிக்கொண்டு, திரைக்கு அப்பால்போனான். அங்கும் ஓர்கருப்புத்திரை போடப்பட்டிருந்தது, "யார் அங்கே"யென்று மறுபடியும் அதேசப்தமுண்டாயிற்று. ஒன்றும் பதில் சொல்லாமல் அவன் அதைத்தாண்டி, அப்புறம் சென்றான். அங்கேயும் ஓர் கருப்புத்திரை போடப்பட்டிருந்து. அதற்கப்பாலிருந்து ஒரு தீபத்தின் வெளிச்சம் திரையை ஊடுருவி விளங்கிற்று. மறுபடியும் "யார் அங்கே?"யென்ற சத்தமுண்டாயிற்று. உடனே அந்தத்திரைக்கு முன்னாலுள்ள கதவுநிலையில்வைக்கப்பட்டிருந்த ஓர் சிலையின் கையிலுள்ள வில்லில் தொடுத்திருந்த அம்பை சாதுர்யமாய்க்கழற்றி, உன் வலது கையென்று மெதுவாய்ப்பதில் சொன்னான். இதற்குமுன் ஏற்படுத்திக்கொண்ட ஸங்கேதங்களைச்செய்யத்தவறினால் அந்த அம்பு இவனுடைய மார்பில்பாய்ந்து

ஊடுருவியிருக்கும். அந்தத்திரையையும் தாண்டி, ஓர் அறையில் நுழைந்தான். அங்கே கஸ்தூரி, அகில், சாம்பிராணி, முதலியவைகளின்மணம் மயக்கமுண்டாக்கிற்று. ஓர் சிறிய வெள்ளித்தீபத்தில் சம்பகத்தைலம் ஊற்றி, பட்டுத்திரி எறிந்து கொண்டிருந்தது. அதற்கப்பால் கோடியில் ஒருவன் திவாசியின்மேல் உட்கார்ந்திருந்தான். அவனுக்கெதிரிலும், பக்கங்களிலும், ஏழுமுக்காலிகளில் ஏழு பாத்திரங்களிலிருந்து நீலம், சிகப்பு, காவி, ஊதா, பச்சை முதலியவர்ணமுள்ள நெருப்புக் கொழுந்துகள் எரிந்து கொண்டிருந்தன. இவைகளின் வெளிச்சத்தில் அந்த மனிதனைப்பார்த்தால் இவ்வுலகத்திலுள்ள பிராணியாய்த்தோன்றவில்லை. மீசை தாடியில்லாமல் முகம் சுத்தமாய் க்ஷவரம் பண்ணப்பட்டிருந்தது. தலையில் ஓர் சிறு பாகை வைக்கப்பட்டிருந்தது. அதிகாரமும் மனோ வலிமையும் அவனுடைய முகத்தில் விளங்கின. நீல வெளிச்சத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து, தலையை தூக்காமல், அவன் "ஐயா! உம்முடைய ஏற்பாடுகளைத் துரிதப்படுத்தவேண்டும். இன்னும் ஒருவாரம் சென்றால் என்னாலும் உம்மாலும் இன்னும் யாராலும் ஒன்றும் முடியா" தென்றான். வக்கீல் மெதுவாய்ச் சிரித்து, "இன்னும் ஒருவாரத்தில் இந்த விவாஹம் நடக்கும். உம்முடைய ஏற்பாடுகள் முடிந்ததா?" வென்றான். அதற்கு மற்றொருவன் மற்றமுக்காலிகளுக்கு சற்று தூரத்தில் தனியாய் வைக்கப்பட்டிருந்த ஓர் மூடி போட்ட முக்காலியை நோக்கி, "மூன்று தினங்களில் அது ஆறி கெட்டியாகும். சாம்பிராணி புகை அதன் மேல் பட்டால் அது வரவரக் காற்றில் கரைந்து சற்று நேரத்தில் இருந்த விடம் தெரியாமல் போய்விடும். மற்ற வர்ணமுள்ள கொழுந்துகள் இதற்கு மேல் பூச்சென்றான். வக்கில் "ஏதோ ஒரு அபாயம் நேரிடக் கூடுமென்று நீ சொன்னாயே" "ஆமாம். காசியிலிருந்து குரு வந்து கொண்டிருக்கிறார்."

இதைக் கேட்டவுடன் வக்கில் திடுக்கிட்டான். ரஸவாதி சற்று திறந்த கண்கள் வழியாய் அவனைப் பார்த்து, "மூன்று நாட்களுக்கு முன்னமே அவர் காசியை விட்டுப் புறப்பட்டார். பெரியவரானதால் ஸாவகாசமாய்ப் பிரயாணஞ் செய்கிறார். நாளைக்கு எட்டாவது தினத்தில் இங்கே வருவா ரென்றான். வக்கீல்- "அப்படியானால் இன்றைக்கு ஏழாவது நாள். விவாஹ தினத்தில் நாம் வேலை செய்ய வேண்டும்" வேறு பேச்சில்லை. ஒருவரை யொருவர் உற்றுப் பார்த்தார்கள். வார்த்தையால் சொல்லாமல் மனதில் உடன்படிக்கையைச் செய்து கொண்டார்கள். பிறகு ஏதோ அவநம்பிக்கை இருவருடைய மனதிலும் தோன்றிற்று. வக்கீல் சற்றுக் கவனித்துக் கொண்டு, "எதற்காக நீ இதில் ஸம்பந்தப்பட்டு வேலை செய்கிறாய். நான் உன்னுடன் சேர்ந்து வேலை செய்ய ஏற்பட்டதுமுதல் மனிதத் தன்மையை

விலக்கி, மஹா பாபத்திற்கு ஆளாய், என்றுமழியாத நரகத்தை ஸம்பாதித்தேன். என்னைப்போல் நீயும் ராமத்ரோஹியோ அல்லது பாப புண்யத்திற்கு அஞ்சாத மந்திரவாதியோ சொல்லென்றான்.

திவாசின்மேல் உட்கார்ந்திருந்த மனிதன் கையிலிருந்த சியாமணத்தை வைத்து விட்டு, "அப்படியுமல்ல, என் வித்தையை நீ மந்திரமென்று நினைத்தால் மந்திரவாதி யென்று வைத்துக்கொள். ஆனால் நான் துரோகியல்ல, கான்யகுப்ஜ தேசத்தரசனான ஆநந்தபால மஹா ராஜாவின் அடிமைக் கடிமை. டில்லி நகரத்தைத் தரைமட்டமாக்கி, அரசனைக்கைப் பிடியாகக் கொண்டுவருவேனென்று அவர் சபதம் செய்திருக்கிறார். நான் அவருக்கு எவ்விதத்திலும் ஒத்தாசை செய்வதாய் வாக்குக் கொடுத்திருக்கிறேன். ஸோமநாதஸ்வாமியின் ஆலயத்தில் குறி கேட்டபொழுது, ராஜ மாணிக்கத்தைக் கைப்பற்றினவன் ஒருவராலும் தோல்வியடையானென்று அர்ச்சக முகமாய் திருவாக்குப் பிறந்தது. ஆகையால் என் கார்யத்தை முடிப்பதற்காக எவ்விதத்திலும் துரோஹியான உன்னுடன் கலந்து வேலை செய்யும்படி நேர்ந்த"தென்றான். அதற்கு வக்கீல் "அப்படியல்ல. நாமிருவரும் ஒன்றே" யென்று ஸமாதானஞ் செய்தான். ரஸவாதி சற்றுத் தணிந்து, "ஆம். நாமிருவரும் ஒன்றே. பெண் உனக்கு, மாணிக்கம் எனக்கு உலகத்தில் பெண்ணும் பொன்னும் மனிதனைக் கெடுப்பதற்குப் போதுமே. நம்மிருவருடைய கதியும் ஒன்றே. இப்பொழுதுபோ. சற்றுத் தூங்க வேண்டும். பொழுது விடியுமுன் அரண்மனையில் எனக்கு விட்டிருக்கும் விடுதிக்குப்போயிருக்க வேண்டும். நான் இந்தபுண்ய நதியில் ஸ்நானஞ்செய்து, ஜபதபங்களை முடித்துக்கொண்டிருக்கிறேனென்று காவல்காரர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்களெ"ன்றான்.

மூன்றாவது பாகம்

மஹாராஜா புதிய தம்பதிகளுக்கு யமுனைக் கோட்டைவாயிலுக்கருகிலுள்ள ஓர் அழகான அரண்மனையைக் கொடுத்தார். பிரியம்வதையென்ற தோழி படுக்கையறையை அலங்கரித்தாள். மஹா ராஜா விவாஹ தினத்தன்று காலையில் ஸபாமண்டபத்தில் ரத்னஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து விவாஹப் பத்திரத்தில் கையொப்பமிட்டார். ராமானந்தரும், காசியிலிருந்து வந்த குருவும் அவருக்கு எதிரிலிருந்தார்கள். பிறகு மாணிக்கமென்ற ராஜா முத்திரையை தனக்கு வலது புரத்திலிருந்த ஹரிநாமனிடத்திலிருந்து வாங்கித்தனக்கு இடது புரத்திலிருந்த வக்கீலிடத்திலிருந்து விவாஹ பத்திரத்தை பெற்று, சூர்யவம்சத்து ராஜாக்களின் அடையாள

மான ராஜ மாணிக்கத்தை தன் கையெழுத்திற்கு அடியில் முத்திரை செய்தார். அந்த மாணிக்கத்தை மறுபடியும் ஹரிநாமனுடைய கையில் கொடுத்து, அவனைப் பார்த்து "உன்னை வாழ்த்துகிறவன் என்னாளும் வாழி"யென்று வக்கீலைப் பார்த்துத் திரும்பி, "உன்னைச் சபிக்கிறவன் என்னாளும் வருந்துட்டு"மென்று அவனிடத்தில் பத்திரத்தை சாக்ஷி போடுவதற்காகக் கொடுத்தார்.

இதற்கு முன் ஒரு நாள் தானும், அந்த குருவும், ஸபாமண்டபத்திலிருந்து வெளியில் போய்க் கொண்டிருக்கையில் வக்கீல் வாசல்படியில் அவர்களுக்காகக்காத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது எங்கிருந்தோ ஓர் சத்தம் அரசனுடைய காதில் விழுந்தது. வெகு நாளாய் ஒருவன் கோரி வந்த எண்ணங்கள் நிறைவேறாமல், தடைபட்டு மனம் புண்ணாய், தன் எதிரியைக் கொடுமையாய்ச் சபிக்கும் வன்மொழியைப் போலும், தனக்கு இரையான ஓர் மிருகத்தை வெகுதூரத்திலிருந்து துரத்திக்கொண்டு போய், இனி தப்பமுடியாதென்று நிச்சயித்து, அதன் மேல் பாய்ந்தபொழுது, அது இலகுவாய்த் தப்பியோடினதைக் கண்ட காட்டு மிருகம் சீறுவது போலும், அவன் காதில் தோன்றிற்று. "குருமஹாராஜ், தாங்களும் கையெழுத்திட்டு அதற்கடியில் முத்ரை செய்யுங்கள். விவாஹத்திற்கு மனிதஸம்மத மாத்ரமல்ல. தேவதைகளின் ஸம்மதமும் ஆசீர்வாதமும், வேண்டுமென்று தாங்கள் சொன்னீர்களல்லவா?" வென்றான்.

திவாசியில் குரு வீற்றிருந்தார்; கண்கள் மூடியிருந்தன; ஆழ்ந்த தியானத்திலிருந்ததாய்த் தோன்றிற்று; வலதுகை காஷாயத்தால் மறைக்கப்பட்டிருந்தது; ஜபமாலையை வைத்துக்கொண்டு ஏதோ மஹா மந்திரத்தை ஜபித்துக் கொண்டிருந்ததுபோலும், அரசனுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கண்களைத்திறந்து பார்த்தார். இடதுகையால் வக்கீலிடத்திலிருந்த விவாஹப் பத்திரத்தை வாங்கினார்; வலதுகையால் ஹரி நாமனிடத்திலிருந்து மஹம்மல் மெத்தையின்மேல் வைக்கப்பட்டிருந்த மாணிக்கத்தை காஷாயத்துக்குள்ளிருந்த வலது கையால் எடுத்து, அந்தப் பத்திரத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே "ஆசீர்வாதங்களும், சாபங்களும் ஒன்றே. பாபிகளின் சாபங்கள் ஆசீர்வாதங்களாய் முடியு"மென்றார். சுற்றியிருந்தவர்கள் இந்த வார்த்தைகளின் தாத்பர்யத்தை அறிய முடியாமல், திகைத்த பொழுது, குருபத்திரத்தில் கையெழுத்திட்டு, முத்ரைவைத்து, ராமானந்தரிடத்தில் கொடுத்து, மறுபடியும் வலது கையை காஷாயத்தில் மறைத்துக் கண்மூடித் தியானத்தில் ஆழ்ந்தார்.

ஆனால் அந்தக்கையை வெளியில் எடுத்த பொழுதாவது, மறுபடியும் வைத்த பொழுதாவது, அதில் என்ன இருந்ததென்று கவனித்தவர் ஒருவருமில்லை.

மஹாராஜா ஹரிநாமனைப்பார்த்துத், "தோழா! இன்று முதல் ஒரு மாதம் வரையில் மாணிக்கத்தை நானே காப்பாற்றுகிறேன்; நீ அதுவரையில் விசாரமற்று இல்லாளுடன் ஆனந்தமாய் காலங்கழிக்கக்கடவா" யென்று மொழிந்து தங்கச்சிமிழைக் கையில் எடுத்துக் கொண்டு, அந்தப்புரத்திற்குச் சென்றார். சற்றுப் பிரகாசம் மங்கினது போல் தோன்றிற்று. மனிதர்களுடைய கையால் தொடப்பட்டுக் கடிதத்தில் வைக்கப்பட்டபடியால் அசுத்தமடைந்திருக்கலாம், "சூர்ய வெளிச்சமும் பரிசுத்தமான காற்றும் பட்டால், முன்போலாகு" மென்று தன்னை ஸமாதானஞ் செய்து கொண்டார்.

நான்காவது பாகம்

ஹரிநாமவிங்கிற்கும் கமலாவிற்கும் நடந்த விவாஹ மஹோத்ஸவத்தின் ஸம்ப்ரமத்தையும் ஆடம்பரத்தையும் விமரிசையையும், வர்ணிக்கப் புகுவது ஸாத்யமல்ல. மஹாராஜாவின் பரிவாரங்கள் யாவும் கோலாஹலத்துடன் அதைச் சிறப்பித்தன. தன் புது அரண்மனையின் வாயிலில் ஹரிநாமன் தன் பார்வையின் வரவை தன் உயிரை யெல்லாம் கண்ணில் வைத்துக் கொண்டு, எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். வெகு குதூஹலத்துடன் கமலா ஊர்வலம் வந்து, அரண்மனைவாயிலில் இறங்கி, அங்கே போடப்பட்டிருந்த ஓர் மகம்மல் மெத்தையின் மேல் வீற்றிருந்த குருவின் பாதத்தில் ஹரிநாமனுடன் நமஸ்கரித்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றாள். பிறகு அந்தப் பெரியவரின் நல்லுபதேசத்தைக் கேட்பதற்காக அவளைச் சற்றுத் தனியே விட்டு, ஹரிநாமன் முன்னுக்கு வந்து, தன்னை ஆவலுடன் கூவியழைத்துக் கொண்டிருந்த நண்பர்களையும், மற்ற முள்ளோரையும் கண்டு பேசிக்கொண்டிருந்தான். திடீரென்று அவன் மனஸ் கலங்கிற்று; ரக்தம் ஓடாமல் நின்றது. புத்திமயங்கிற்று; அவன் செவியில் ஓர் அழுகைச் சத்தம் மற்ற இரைச்சலுக்கு மேலாய் விழுந்தது: "ஹரிநாம் ஓடிவா என்னைக் காப்பாற்று, காப்பாற்று, ஹரிநாம்—" மின்னலைப் போல் பாய்ந்து அவளைத் தாங்கி, மெத்தையில் விடுத்து, தன்னருகில் நின்று கொண்டிருந்த சந்திரனைப் பார்த்து, "அண்ணா! அதோ அவனை விடாதே" யென்று கூவினான்.

(இன்னும் வரும்.)

கடற்கரை காலக்ஷேபம்.

(முன் தொடர்ச்சி.)

பெண்கள் எப்பொழுதுமே தனித்திருப்பது நியாயமன்று என்பது அங்கு பர்டுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்த இராஜேஸ்வரியும் அறிவாள். என்றாலும், இனிய குரலோசை அப்பெண்மணியைப் பற்றியிழுக்க, குழந்தையை எடுத்துக்கொண்டு தாயைவிட்டு சற்று தூரத்தில் உட்கார்ந்தாள். குழந்தை பாட்டியினிடமாக ஓடிவிட்டது. இப்பொழுது அப்பெண்மணி தனித்திருக்கிறதாகத்தோற்றம். இதனால் விடபுருடர் விகல்பமாய்ப் பேசத்தொடங்கினர். சிலருக்கு முன்பின் யோசனையே உண்டாவதில்லை. சட்டென்று வாயில்வந்த வார்த்தைகளைக் கொட்டி விட்டுப் பிறகு ஆந்தைபோல் விழித்துக் கொண்டிருக்கிறது. மேலும் ஸ்திரீகளைக்குறித்துப் பேசுவது பெருந் தவறு. கதையும் கவியும் கந்தசாமிக்குக் கருத்தில் படட்டும் என்றே சொல்லப்பட்டன. கதை மாத்திரம் அந்தப் பெண்ணின் செவியில் விழுந்திருக்காது.

கந்தசாமிபிள்ளை சொல்லுகிறார்:—காலத்தை அனுசரித்தவள். நாகரீக உடைதரித்தவள். மெல்லிய நல்லாள். சந்திரபிம்பம்போன்ற முகமுடையாள்.

நைடதம் எழுதிய அதிவீரராமபாண்டியனுக்குக் கொஞ்சமுஞ் சளைக்காதவர். அந்த ஸ்திரீயை வர்ணித்துக்கொண்டிருக்கும் போது ஒரு குழந்தை ஓடிவந்து—

"அப்பா அப்பா! நானும் அம்மா—பாட்டி—கூட வந்தேன்" என்று சௌந்தரராஜன் கழுத்தைக்கட்டிக்கொண்டு சொல்லிற்று. இதைப்பார்த்த கந்தசாமிக்கு மனம் புழுங்கிப்போய் விட்டது வாய் திறக்க வழியில்லை. எழுந்துபோகத்திடனில்லை. சிந்தைநொந்தனன். வெட்கித் தலை குனிந்தனன்.

இராயர் "இது யார் குழந்தை?" என்றுகேட்டார். அதற்கு சௌந்தரராஜன் "நமது பையன்தான்" என்றார்.

இராயர்—குழந்தை உன்பெயரென்ன?

குழந்தை—என் பேரா—சீனு.*

"சீனுவா—சீனியா? இங்கே வா—என்று கையைபிடித்திழுத்தார்." அந்தப்பையன் தாயினிடம் ஓடிவிட்டான். எல்லோரும் சற்றுநேரம் மௌனமாயிருந்தார்கள். கைரேகைமறையும் நேரம் கந்தசாமி சௌந்தரராஜனைப்பார்த்து என்னை எக்ஸியூஸ் (மன்னிப்பு) பண்ணவேண்டுமென்றும், தான் தெரியாமல் ஏதோ வாயில் வந்ததைச் சொல்லிவிட்டேன்" என்றார்.

"தாங்கள் குற்றமொன்றும் செய்யவில்லையே, ஏன் மன்னிக்க வேண்டும். குணத்தைப்புகழ்ந்தீர்கள்.

இராயர்—ஒருவரை இன்னாரென்று தெரிந்து கொள்ளாமல்—அதிலும் ஒரு ஸ்திரீயை—வர்ணித்தல் கூடாதுதான். மன்னிப்பு அவசிய" மென்றார்.

"அவருடைய சுபாவம், இன்னாரென்று தெரிந்திருந்தால் சொல்லுவாரா? போனது போகட்டும். நான் சிநேகிதன், வேறு மனிதனாயிருந்தால் கஷ்டம் தான்.

ஆரம்பமுதல் சௌந்தரராஜன் உம் என்று ஒரு மாதிரியாயிருக்கும் போதே ஏதோ இதில் ஒரு ரகஸ்யம் இருக்கிறதென்று நினைத்தேன். அப்படியே முடிந்தது. பேசப்போகிறாயா சாகப்போகிறாயா என்று சொல்லுவதுண்டு. ஆகையால் சிந்தித்து—சற்று யோசித்துப்பேசுவதே சிலாக்கியமானது. முடிவில் என்னை ஒரு சிறு கதை சொல்லும்படி வற்புறுத்தினார்கள். காலணா கதை வேண்டுமா, ஐந்து ரூபாய் கதைவேண்டுமா?" வென்று கேட்டேன்.

ஏதாவது ஒரு கதை சொல்லுங்கள் என்று கேட்டார்கள். நானும் சொல்ல ஆரம்பித்தேன்.

"மதுரை மேலமாசி வீதியில் சுந்தரம் பிள்ளையென்றொருவர் இருந்தார். அவர் தம் வறுமையை நிவர்த்திசெய்யும் வண்ணம் ஒரு சிநேகிதரைத் துணைக்கொண்டு இரங்கோனில் புல்லக் பிரதரஸ் என்ற கம்பெனியில் நான்கு வருஷம் வேலை பார்த்து வந்தார். இவருக்குக் கிடைத்தது மிகச்சொற்ப சம்பளமானாலும், செட்டாய்ச்செலவு செய்து கொண்டு மாதாமாதம் ரூ. 15 பெற்றோர்க்கு அனுப்பிவந்தார். சுந்தரம் பிள்ளைக்கு தமிழ் பாஷையில் வெகுபிரியம். சகல பாஷையுமே தமிழிலிருந்து பிறந்ததென்பார். அவர் பாராத தமிழ் நூல் கிடையாது. இலக்கணமுங் கற்றுக்கொண்டார். யாராவது பேசிக்கொண்டிருக்கும்போது, க்கன்னா, ம்மன்னா விட்டு விட்டார். பெயருரிச் சொல்லுக்கு வினையுரிச் சொல்லைப் பிரயோகித்தார். இவ்வித குற்றமே காண்பார். இரங்கோனில் தர்க்க-தர்மலிங்கம் பிள்ளை சிநேகமானார். இருவரும் பேச ஆரம்பித்தால் தர்க்கம்போய் குதர்க்கம் உண்டாய்விடும். இருவரும் நல்லகுண முள்ளவர்கள். சுந்தரம் பிள்ளைக்கு இங்கிலீஷ் என்றால் கசப்பு. ஏதோ கொஞ்சம் வயிற்றுப் பிழைப்புக்குக் கற்றுக் கொண்டேன் என்பார். தமிழ்ப் பாஷையில் உள்ள அவாவால், ஒரு சபையை ஏற்படுத்தினார். அது ஒருகால் மனிதனைப்போல் நடந்து வந்தது. தகப்பனாருக்கு கடுமையான வியாதி. உடனே வரவேண்டுமென்று தந்திவந்தது. திடீரென மதுரை வந்து சேர்ந்தார். பிதா தீரா நோயால் உயிர்துறந்தனர். தாயாரும் பிணிபட்டு சின்னாட் சென்று மாண்டனர். தனிமனிதனாய்—ஒண்டியாய் இருந்தார்.

அடுத்த வீட்டில் இவர் இனத்தாரும், மிக்க செல்வவந்தருமான பாலகிருஷ்ணம் பிள்ளை யிருந்து வந்தார். அவருக்கு ஒரே அருமைப்பெண் உண்டு. அப்பெண் நன்றாய்ப் படித்தவள். இங்கிலீஷிலும் தாராளமாய்ப் பேசத்தெரியும். அவள் பெயர் கோமதி. தக்க வரனைத் தேடிக்கொண்டிருந்தார்கள். யார்போய்ப் பெண் கேட்டாலும், இன்னும் கொஞ்சகாலம் போகட்டுமென்று சொல்லி வந்தார்.

சுந்தரம் பிள்ளை பக்கத்து வீட்டிலிருந்தும் பாலகிருஷ்ணம் பிள்ளை கவனிக்கவே யில்லை. மாதா பிதாக்களுக்கு சகல கிரியைகளையும் செய்து முடிந்த பின், ஐந்து ரூபாய்கள் மிச்சமிருந்தன. அன்றிரவு மேலக்கோபுரவாயிலில், பாட்டியம்மா ஓட்டலில் சாப்பிட்டு விட்டு வீடுவந்து சேர்ந்தார். இரவெல்லாம் தூக்கம் வரவேயில்லை. ஏனென்றால் "தந்தையும் போயினர், தாயாரும் போயினர்"என் கதி

* கிருஷ்ணனை—கிட்டு என்று சொல்வதைப்போல் ஸ்ரீனிவாசனை—சீனு என்று சொல்வது வழக்கம்.

யென்னவென்று நினைக்க உள்ளமுருகி விட்டது. உடன்பிறந்தாரொருவருமில்லை. பணமிருந்தால் தானே சுற்றத்தார். கையில் ஐந்து ரூபாய் மிச்சமானதைப் பார்த்து, "ஏ ஐந்து ரூபாயே! இனி உன்னாலல்லவா விர்த்தியாக வேண்டும். நான் நற்கதியை யடையவேண்டும்" என்று இப்படியே சிந்தித்துக் கொண்டிருக்கும் போது, தூக்கமும் வரவில்லையே, சரி இந்த ஐந்து ரூபாய்களை ஒன்றின்பின் ஒன்றாய்த் தட்டிக்கொண்டிருப்போமென்று, தீபமும் வைத்துக்கொண்டு ரூபாயைத் தட்டிக் கொண்டிருந்தார். பக்கத்து வீட்டுக்காரர் இந்தப் பண ஓசையைக் கேட்டு ஆச்சரியப்பட்டுவிட்டார். "இரங்கூனிலிருந்து அளவற்ற பணம் சம்பாதித்து வந்திருக்கிறான் போலும். எல்லாம் ரூபாயாகவே வைத்திருக்கிறான். வெளிக்கு ஒன்று மற்றவன் போல் நடிக்கிறான். இவன் தான் சரியான பிள்ளை. நமது பெண்ணுக்கு தக்க மாப்பிள்ளை. இவனைத்தவிர வேறில்லை" என்று நினைக்க, நினைக்க உள்ளம் பூரித்து மகிழ்ந்திருந்தார். பொழுது விடிந்தது.

சுந்தரம் பிள்ளை வைகை நதிக்குப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தார். பாலகிருஷ்ணம் பிள்ளை தம்பி சுந்தரம்பிள்ளை, இங்கே வரவேண்டும் என்று கூப்பிட்டார். சுந்தரம் பிள்ளைக்கு மிகவும் ஆச்சரியமாய் விட்டது. ஒரு நாளும் நம்மை லக்ஷியம் செய்யாத இவர் இன்று கூப்பிட்ட காரணம் தெரியவில்லை. ஆயினும் போவோம் என்று மிக்க மரியாதையாய்போய் நின்றார். "எதிர்பாராத கஷ்டங்கள் சம்பவித்தன. எல்லாம் ஈஸ்வர சங்கல்பம். நம்மால் என்ன இருக்கிறதென்று" பரிதாபங் காட்டி துக்க விசாரணை செய்தார். இன்று இங்கு தானே—நமது வீட்டில்—காப்பி சாப்பிடும் என்றார். 'பரவாயில்லை'—என்றார் சுந்தரம்பிள்ளை. வேறு எங்கே போய் சாப்பிடப் போகிறாய், தினம் ஓட்டலுக்குப் போனால் ஒத்துக் கொள்ளுமா, இன்றைக்கு இங்கேதான் சாப்பிடவேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார். வெகு கஷ்டத்தோடு ஒப்புக்கொண்டு சென்றார். சற்றுநேரங் கழித்து வந்து சேர்ந்தார். பலகாரம் காபி சாப்பிட்டார். மத்தியான சாப்பாட்டுக்கும் வரவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். அதற்கும் சம்மதித்தார். எதனால் இவர் இவ்வளவு உபசாரம் அவர் செய்கிறார் என்பது சுந்தரம் பிள்ளைக்கு விளங்கவேயில்லை. பாலகிருஷ்ணம் பிள்ளையின்

சொத்தென்ன, செல்வாக்கென்ன, கௌரவமென்ன, எந்த வகையில் சுந்தரம் பிள்ளை தன்னை சமத்துவமென்றெண்ணினார் என்பது பெரிய ரகஸ்யமாயிருக்கிறதென சிந்திக்கலானார். பாலகிருஷ்ணம் பிள்ளை தன் மனைவியிடம் சுந்தரம் பிள்ளையைப்பற்றி பெருமையாய்ச் சொல்லிக்கொண்டு வந்தார். அவரிடம் எவ்வளவு ரூபாய் இருக்கிறதென்று எவராலும் கண்டுகொள்ள முடியாது. மகா சாமார்த்தியசாலி, தமிழில் வித்வத்வமுள்ளவர். தன்னடக்கமுள்ளவர். சாந்தமான புருஷன். இப்படி அடிக்கடி சொல்லி, தன் புத்திரியை சுந்தரம் பிள்ளைக்கு விவாகம் செய்து கொடுக்க உத்தேசித்திருக்கிறதாய்த் தெரிவித்து, சம்மதிக்கும்படி செய்து கொண்டார்.

பாலகிருஷ்ணம்பிள்ளை தமதபிப்பிராயத்தை சுந்தரம் பிள்ளைக்கு எவ்விதம் தெரிவிக்கிறதென்று தனக்குள் யோசிக்கலானார் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார். தனக்கு அன்னியோன்னியமான அருணாசலம் பிள்ளையினிடம் சொல்லி சுந்தரம் பிள்ளைக்குத் தெரிவிக்கச் சொன்னார். அதற்கென்ன, அப்படியே செய்து விடலாமென்று ஒப்புக்கொண்டார்.

சுந்தரம் பிள்ளை ஒவ்வொரு நாளும் இரவு மீனாக்ஷியம்மனையும் சோமசுந்தரக் கடவுளையும் தரிசிக்காமல் இராப்போஜனம் செய்வதில்லை. இருட்டானாலும் மழையானாலும் கோவிலுக்குப் போகாதிருக்க மாட்டார். அதைப்போலவே அருணாசலம் பிள்ளையும். ஒரு நாள் மாலை சுந்தரம் பிள்ளையைக் கண்டு, இன்று சுக்கிரவாரம், கோவிலுக்குப் போகும்போது, நமது வீட்டுக்கு வாருங்கள், நானும் வருகிறேன் என்றார்.

இரவு சுந்தரம் பிள்ளை அருணாசலம் பிள்ளை வீட்டுக்குச் சென்று அவரையும் அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றார். வீட்டுக்குத் திரும்பும் போது அருணாசலம் பிள்ளை கலியாண விஷயமாய்ப் பேச ஆரம்பித்தார்.

"கலியாணத்துக்கு ஏதாவது முயற்சி செய்ய வேண்டாமா இனி சும்மாயிருக்கலாமா வென்று கேட்டார்.

(இன்னும் வரும்.)

பிரபஞ்ச வர்த்தமானம்.

என்னையும்—மற்றவர்களைப்போல் நினைக்கக்கூடாது, ஊர் போய்ச் சேர்ந்தவுடன் தினமொரு கார்டு எழுதுகிறேன், என்று விடை பெற்றுப் போவார். ரயிலேறியவுடன் என்ன சொன்னாலும் ஆகட்டும், சரி என்று அவசரமாய்ச் சொல்லுவார். ஊர் போய்ச் சேர்ந்தவுடன் எல்லாம் மறந்துபோம். போய்ச் சேர்ந்த பிறகு ஒரு கார்டு கூடவராது. இது அநேகர் வழக்கம்.

முனிசிபல்—ஓட் ஒரு கணக்குக்குள் திட்டமாயிருந்தது. சட்டசபை ஓட் ஒரு திட்டத்துக்குள் இல்லை. ஓட் சுதந்தரம் எல்லையற்று பரவுகிறது. மெம்பர்களாவதற்கு அதிகமாய்க் கஷ்டப்பட வேண்டும். ஆஸ்தியும் கரையும். காலத்தின் இயல்பு.

திண்ணை—தூங்கியாய் இருந்து உண்பார்க்கு அதிகாரம் அதிகம். உப்பில்லை, உரைப்பில்லை என்பார்கள். உழைத்துப் பாடு பாடுகிறவன் ஒரு சொல்லுமின்றி புசித்துச் செல்லுகிறான்.

சிலர்—பேச ஆரம்பிக்கும் விஷயம் ஒன்று. சம்பந்தமற்ற பல சங்கதிகளைப் பேசி, ஆரம்பித்ததை முடிக்க வழி தெரியாமல் விழிக்கிறதுண்டு.

குட்டி வேதாந்தம்—பத்து பாட்டுகளை உரு போட்டுக்கொண்டு பண்டிதன் என்பதுபோல, சில வேதாந்த நூல்களை படித்துவிட்டு, அதில் என்ன இருக்கிறது, உற்றுப்பார்க்கில் ஒன்றுமில்லை, இதினால் என்ன பிரயோசனம்என்று வாய் ஞானம் பேசுவதில் என்னபயனோ?

டாடா இரும்புக் தொழிற்சாலைக் கம்பெனிக்கு 11531,361 ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது.

திருப்பூந்துருத்தி யென்னும் தேவாலயத்தின் மீதிருந்த ஸ்தூபியை 2 பிராமணர்கள் திருடினரென்று தஞ்சை அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜிமுன் குற்றம் சாற்றப் பட்டனர். ஜட்ஜி ஒருவனுக்கு 6 வருஷமும், மற்றவனுக்கு 3 வருஷமும், தண்டனை விதித்தார்.

பர்மாவைச் சார்ந்த மாகோ வென்னும் இடத்தில் ஒரு பர்மாக்காரனால் எட்டு அங்குலம் நீளமும் 5 பவுண்டு பளுவுள்ளதுமான ஒரு பெரிய நீலக்கல் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றது; அது 5 லக்ஷம் ரூபாய் வரையில் மதிப்பிடப்படுகின்றது.

சீனாவில் பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெ யெடுக்கும் தொழிலும், பருத்திப் பயிரிடுதலும் விருத்தியாகி வருகின்றன. தற்காலம் ஷாங்காயில் மாத்ரம் 22 பருத்தி யந்திர சாலைகளும், அதைச்சுற்றி 13 சிறிய யந்திரசாலைகளும் இருக்கின்றனவாம்.

அமெரிக்காவில் 131 வயதுள்ள ஒருவன் இருக்கின்றான். அவனது தற்கால பத்னிக்கு வயது 35 ஆம்; அவனது கடைசிக் குமாரனுக்கு வயது 5 ஆம்.

துக்கடாக்கதைகள்

சில வருஷங்களுக்கு முன் திருநெல்வேலி வாகையடித் தெருவில் காந்திமதிநாத பிள்ளை எனும் ஒரு சீமானிருந்தார். இவருடைய கஞ்சத்தனத்துக்கு நிகராக எதை ஒப்பிடலாம். வடிகட்டி பன்னாடைக்குமேல், என்று சொல்லலாம். என்றாலும் இனத்தாருடன் கண்ணியமாய் வாழ்ந்து வந்தார். இவரிடம் திரவியம் யென்பவன் சமையற்காரனாக இருந்து வந்தான். இவனுக்குதைமாதச் சம்பளத்தை (ஆனி) ஆறும் மாதக் கடைசியில் கொடுத்துவிடுவார். எஜமானனிடம் இவன் சம்பளம் கேட்காத நாளே கிடையாது. ஆனால் இல்லை யென்று சொல்லுகிற வழக்கம் இவரிடமும் கிடையாது. திரவியம் சம்பளம் கேட்டுக் கேட்டு சலித்துப் போனான். காந்திமதிநாத பிள்ளையின் பிதாவுக்கு ஒரு நாள் திதி ஏற்பட இனத்தார்களை விருந்துக் கழைக்காமல் தன் வீட்டார்களுக்குத்தக்கவாறு அறுசுவையுடன் அழகாய் சமைத்து வைக்கப்பட்டது. அன்று திரவியத்துக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. இன்றுடன் நமக்கு வேலை வேண்டாம் என்று தீர்மானித்து, எஜமானன் திதி கொடுத்து சாப்பிடப் போகும் போது அவருடைய இனத்தார்கள் வீடெல்லாம் (காலையில் ஒரு முறை சொல்லி) எஜமான் காத்துக் கொண்டிருக்கிறார், இலை போட்டு படைத்தாய் விட்டது, என்று அவசரப்படுத்த, பந்துக்கள் ஒவ்வொருவராய் வந்து சேர்ந்தனர். வீட்டுக்கு வந்தவர்களை வாருங்களென மரியாதை செய்தார். என்னவிசேஷம் என்று எஜமானன் கேட்க, நீங்கள் சாப்பிடக் காத்துக் கொண்டிருக்கிறதாகவும், இலைபோட்டு தயாராயிருக்கின்றதென்றும், உடனே அழைத்துவரச் சொன்னார்களென திரவியம் கூப்பிட்டு வந்தான் என்று சிலர் சொன்னார்கள்.

வெளியே போன திரவியம் திரும்பவேயில்லை. காந்தி மதிநாத பிள்ளை திகைத்துப் போய்விட்டார். வீட்டில் விருந்தென்று பந்துக்கள் நிறைந்து விட்டார்கள். வந்தவர்கள் திரவியம் செய்த சூதைத் தெரிந்து கொண்டார்கள். சம்பளம் ஒழுங்காய்க் கொடுக்காததால் திரவியம் இப்படிச்செய்தான் என்று எஜமானனும் தெரிந்து கொண்டார். இதைப் படிப்பவர்களே இக்கதையை பூர்த்தி செய்ய வேண்டும்.

எப்போது கரை ஏறுவாய்?

எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்நியாசி ஒரு ஏரிகரை மேலே போனான். போகும்போது ஒரு செம்படவன் அந்த ஏரியிலே மீன் பிடித்தான். சந்நியாசி செம்படவனைப்பார்த்து "ஐயோ! நீ எப்போது கரை ஏறுவாய்?" என்றான். "ஐயா! என் கூடை நிறைந்தால் கரை யேறுவேன்" என்றான்.

நல்ல குழந்தை

ஒரு அரசனிடம் அன்புள்ள சேவகனொருவனிருந்தான். அவன் தினந்தோறும் அதிகாலையில் ஆறு மணிக்கெல்லாம் அரண்மனை வாசலில் தயாராயிருக்க வேண்டும். வெகுநாட் கழித்து அந்த சேவகனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தையை மிக்க அன்பாய் வளர்த்து வந்தான். தினந்தோறும் காலையில் குழந்தையை யெடுத்து, மார்போடணைத்து முத்தமிட்டு, உனக்கென்ன வேண்டு மென்று கேட்டான். அதற்கு இன்பமானவைகளைக் கொடுத்துவிட்டு அரண்மனைக்குப்போவது வழக்கம். ஒருநாள் அந்த சேவகன் வர அதிக நேரமாய்விட்டது. காரணத்தை அறிய சேவகனை அழைத்து விசாரித்தான். தன் குழந்தையை திருப்தி செய்து வரமுடியவில்லை. அதனால் நேரமாய் விட்டது என்றான். ஒரு குழந்தையை நீ திருப்தி செய்ய முடியவில்லையா என்ன ஆச்சரியம்! உன் குழந்தைக்கு என்ன வேண்டுமென்று அரசன் கேட்டான். குழந்தைக்கு உயிருள்ள யானை வேண்டுமாம் என்றான். சரி, உன் குழந்தையை அழைத்துவா வென்றான். அவ்விதமே அழைத்துவர, குழந்தை கேட்ட விளையாட்டுப் பொருள்களை யெல்லாம் கொடுத்தான். அரசனால் முடியாதது வேறு யாரால் முடியும். ஒரு சிறு செம்பு வேண்டுமென்றது. அதற்கு ஒரு வெள்ளிச் செம்பைக் கொடுத்தார்கள். ஒரு யானை வேண்டுமென்று கேட்டது. ஒரு யானையைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அந்த யானையை வெள்ளிச் செம்புக்குள் போட்டுக் கொடுக்கும்படி தொந்தரவு செய்ய ஆரம்பித்தது. அப்புலி வேண்டிய இராஜனுக்கு மேலாயிருக்கிறதே சேவகா! நீ சொன்னது சரியே, குழந்தையைத் திருப்தி செய்வது கடினம் தான் என்று சொன்னான்.

OFFICE OF ... 8 DEC 1920 MADRAS



8 DEC 1920

உ
கடவுள் துணை

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்

Vol. 3.	October, 1920	No. 5.
தொகுதி 3.	1920-ம் ௵ அக்டோபர் ௴	பகுதி 5.

உ

திருச்சிற்றம்பலம்.

தவமே புரிந்திலன் றண்மலரிட்டு
முட்டா திறைஞ்சேன்
அவமே பிறந்த வருவினையே
னுனக் கன்பருள்ளாந்
சிவமே பெறுந்திரு வெய்திற்றிலே
னின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி
யேற்கெம் பரம்பரனே.

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட்
டாதடி யேயிறைஞ்சி
இரந்தவெ லாமெமக் கேபெற
லாமென்னு மன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாருளாய் நின்னை
யேத்த முழுவதுமே

திருவாசகம்.

கதாரத்னகாரம்

புதிய ஊக்கம்.

நீ உலகத்திலே பிறந்து விட்டாய். மறுபடியும் திரும்பிப்போவது உன் ஸக்தியிலில்லை. அது உன் இஷ்டப்படி நடக்கிற காரியமுமல்ல. கடைசிகாலச் சீட்டு எப்போது வருமோ தெரியாது. மானுஷ்ய சரீரத்திலே இப்போது உன் ஆத்மா நிற்கிறது. எப்படியோ வளர்த்து உன்னை வாலிபம் செய்து விட்டார்கள். நீயும் ஒரு உருவாகிவிட்டாய். ஸம்பாத்திய பக்குவதிசைக்கும் நெருங்கி விட்டாய். சோதனை காலத் துவக்கம் இதோ தொடங்கிக் கொண்டது. இனி உனக்கு நீயே உழைத்துப் பிழைத்து உயிர்வாழ வேண்டும். நாலுபேருக்கு நடுவில் நீயும் ஒரு மனிதனாகவேண்டியிருக்கிறது. உன் ஜீவயாத்திரையில் முதல் அத்தியாயம் முடிந்து விட்டது.

* * *

இது வரையில் கழிந்த காலம் உன்னைத் "தயார்" செய்வதற்காகச் செலவழிந்தது. உன்னைத் தயார் செய்தது உன் தாயார்; அல்லது உன் தாயின் மற்றொரு பாதி அம்ஸமான உன் தந்தை. அல்லது அவர்களுக்கு வேண்டிய உறவின் முறையார்—நண்பர், சுற்றம் தினைவர்கள். பாடசாலையினின்று திரும்பியதும் வீடு உன் வரவுக்கு எதிர்பார்த்து நின்றது. யாவும் நின் பிரியத்திற்கேற்பச் சித்தமாயிருந்தது. கவலையற்று உண்டு சென்றாய். அந்தக் காலம் இப்போது மலையேறிவிட்டது. நீ வெளியிற் செல்வதற்குமுன் வீட்டிற்கு வேண்டிய யாவும் சித்தம் செய்து விட்டு, பிறகே நீ புறப்பட வேண்டியிருக்கிறது. நீ சித்தம் செய்யத் தவறினால் அன்னப் பிடி வெல்லப்பிடி!

நீ யாவும் "தயார்" செய்துவிட்டு வெளிப்பட்டால் தான் மீண்டும் இல்லிற்குள் புகுகையில் அனைத்தும் "தயார்" ஆக இருக்கும். அத்தகைய மாறுதல் நிகழ்ச்சி—நூதன வேறுபாடு—உன் வாழ்வில் இப்பொழுது பிராப்தமாயுளது. உன் ஸம்பாத்யத்தை ஒரு குடும்பம் எதிர்பார்த்து நிற்கிறது. இன்னும் அது பெருகி விரியும். அதற்கெல்லாம் நீ "சமாதானம்" செய்யவேண்டிய நிலைக்கு உன்னைப் பிரகிருதி அழைத்துக் கொண்டு வந்து விட்டது. இதுவே உன் வாழ்வில் இரண்டாம் அத்தியாயத்தின் ஆரம்பம்.

இங்குதான் நீ புதியஜீவன் பெறவேண்டும். நவஸக்தி உன்னில் உதயமாக வேண்டும். உன் ஜீவிய இன்பம் திருப்தியுள்ளதாக அமைக்கப்படல் வேண்டும். ஆரம்பத்திலேயே பலமான அஸ்திவாரம் போடு. "புதிய ஊக்கம்" கொள். பின்னொரு காலத்தில் ஹாயியாக இளைப்பாறுதற்கான மார்க்கம் கண்டு நல்ல இடத்தில் விதைகளை விதை. உயர்ந்த லக்ஷியங்களையே உன் நெஞ்சில் நிறைவித்துக்கொள். புதிய ஊக்கம் பெறு. எப்பொழுதும் ஊக்கமுள்ளவனாயிரு. ஒரு வேந்தனாக இருக்க வேண்டுமென்று சிந்தனை கொள்ளாவிடினும் அதற்கு அடுத்தபடியில் உன்னை ஏன் வைத்துக் கொள்ளக்கூடாது? கிடைத்தற்கரிய மானிட சரீரத்தை நீ பெற்றுவிட்டதற்குப் பிறகு—உன்னால் எந்தக் காரியம் தான் ஆகாது? எது தான் நடவாது? முயற்சியுள்ளவனுக்கு எதுதான் ஸித்திக்காது? புதிய ஊக்கம் உள்ளத்திலே நிறைந்து ததும்பப் பெற்றவனுக்கு புது நிலைகள், பதவிகள் உண்டாவதும் ஒரு புதுமையா?

* * *

ஒரு பெரிய ராஜ்யத்தின் பிரதம மந்திரியாக நீ ஏன் வரக் கூடாது? புதிய ஊக்கம் கொண்டால் அந்தப் பதவியும் உன்னை ஸமீபிக்கும். ஜப்பான் நாட்டின் தலைமை அமைச்சர் லண்டன்மா நகர வீதிகளில் ஒரு பரதேசியாய் அலைந்த காலமும் ஒன்றுண்டு. அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ் ஒரு எளிய குடும்பத்தில் தோன்றியவர். தற்போது உலகமெங்கனும் பரவி நிற்கும் சகாயமான தபாற் கூலியுள்ள அமைப்புத் திட்டத்தை ஆதியில் நிர்மாணித்த மகா புருஷனும் ஒரு ஏழையே. அவருக்கு "ரோலாந்துஹில்" என்று பெயர். 1795-ம் வருஷம் பிறந்தவர். அவர் குடும்பத்திற்கு ஒரு காலணாகூடக் கிடைப்பது அருமையாயிருந்தது. நீராவியின் ஸக்தியை முதலிற் கண்டு பிடித்த ஜேம்ஸ்வாட் என்பவரும் ஸ்காத்லாந்தில் ஒரு அற்ப வியாபாரியின் குமாரர் தான். அவர் 1736ம் வருஷத்தில் பிறந்தவராவார். நீராவியானது பழமையான இவ்வுலகத்தை இப்பொழுது புதிய உலகமாக மாற்றியிருக்கின்றதன்றோ? அது மனிதனுக்கு எந்தக் காரியந்தான் செய்யவில்லை?

* * *

"ஜார்ஜ் ஸ்டீவின்ஸன்" என்பவரைப் பற்றி உனக்குத் தெரியுமா? அவர் தான் ஆதியில் இருப்புப்பாதை (Railway)யைத் தன் யுக்தியில் கண்டு பிடித்தவர். அவர் பணக்காரரா? ஒரு ஜமீன்தாரா? ஒரு லார்ட் பிரபுவா? ஐயோ! இல்லை இல்லை. நிலக்கரி வியாபாரியான ஒரு எளிய மனிதனுடைய மகன்! வறுமையினாலல்லது—புதிய ஊக்கம் கொண்டாலன்றி—எவ்விஷயத்திலும் வெற்றி பெற முடியாது. "முயற்சி திருவினையாக்கும்" இவ்விந்திய நாட்டை ஆங்கிலேயர்கட்கு வசப்படுத்திக் கொடுத்த லார்ட் கிளைவ் என்பவரும் ஒரு ஏழையே. ஸாமான்யனாக ராணுவத்தில் ஆதியில் சேர்ந்த

வனை முதலாவது நெபம்போலியனும் ஒரு ஏழையே. ஒரு சிறு போர் வீரனே. தன் முயற்சியால், புது ஊக்கத்தால் பிரான்சு தேசத்திற்கு ஒரு சக்கரவர்த்தியாயினன். ஐரோப்பிய பூமியே அவனுக்குக் கிடுகிடுவென்று நடுங்கியது. புதிய ஊக்கம் உள்ளவனின் அகராதியிலே கஷ்டம். அசாத்தியம்— முடியாது—என்ற பதங்களே இல்லை. அதிர்ஷ்டம் இருக்கவேண்டு மென்பாயோ? அதிர்ஷ்டம் என்பது சோம்பேரியின் வார்த்தை. மோசடி!

* * *

அந்நிய நாட்டு உதாரணங்கள் எதற்காக? நமது பக்கத்திலேயே பார்ப்போம். மகாராஷ்டிரத்தை நிர்மாணித்த மகா புருஷனை சிவாஜி எத்தகையவர்? திடீரென்று அவர் உயர்ந்து விட்டார்? லாட்டரிச் சீட்டு அவருக்கு விழுந்ததா? அவருக்கு "மலை எலி" என்று கேவலமான ஒரு பெயர்கூட இருந்தது. அவர் எப்படி வீர புருஷரானார்? புதிய ஊக்கத்தினால் தான். தொடக்கத்தின் ஆரம்பத்திலேயே அவர் உயர்ந்த லக்ஷியங்களைக் கொண்டார். தன்னால் ஸாதிக்க முடியாத பெரிய காரியங்களிலே தமது மனத்தை நாட்டினார். தமக்குள் புதிய ஊக்கத்தைக் கிளப்பிக் கொண்டு தமது லக்ஷியங்களை நிறைவேற்றத் தீர்மானித்து விட்டார். அப்படியே நிறைவேறி விட்டது.

* * *

உன் ஜீவியத்தின் முதல்படியிலேயே ஒப்பற்ற தீர்மானங்களைக் கொள். பெரிய ஸ்தானத்திற்கு வரக்கூடிய புதிய அவாக்களை உன் நெஞ்சிலே நிறைவித்துக்கொள். அதனைக் காரியப்படுத்துதற்கு புதிய ஊக்கத்தைத் தருவித்துக்கொள். அது உன்னைத் திடப்படுத்தும். அதுதான் மேலானபதவிக்கு வரும் மார்க்கம். எடுத்த எடுப்பிலேயே நீ ஒரு கூலிக்காரனாக, குமாஸ்தாவாக, அற்ப வியாபாரியாக, சாமான்ய உத்தியோகஸ்தனாக, சிறு ஜனத்தலைவனாக, உன் வாழ்நாள் முழுதுக்கும் இருந்து விடுகிறதென்று நீ தீர்மானித்து விடாதே. அந்தத் தப்பிதத்தை எப்போதும் செய்யாதே. செய்தாயோ உன் ஸக்தி அத்துடன் தொலைந்த மாதிரி தான். உன் புதிய ஜீவன் ஒடுங்கிவிடும். வாழ்க்கை தளர்ந்து போம். தரித்திரம், ஹீன திசை உன்னைப் பலமாகப் பற்றிக்கொள்ளும். நீ எந்தக் காலத்துக்கும் தலையெடுக்கமாட்டாய். சீரோங்கி வாழமாட்டாய். புதிய ஊக்கம் தோன்றவே தோன்றாது. ஆகவே, குமாரா! அல்ப சிந்தனைகளை விலக்கு. புதிய உயிர் பெறு. மேல் நோக்கி நட. தைரியம் கொண்டு நில். துணிவு கொள். எழுந்திரு; புதிய ஊக்கத்தை உன்னிலே தருவித்துக் கொள். கடவுளை நம்பிக் காரியம் நடத்து. உன் காரியம் ஆகும் வரையில் உழைத்துக் கொண்டிரு; வெற்றி உனக்கு உறுதி—நிச்சயம்.

* * *

ஹைகோர்ட் ஜட்ஜியான ஸர் முத்துஸாமி ஐயரவர்களும் ஒரு பரம ஏழையே. புதிய ஊக்கமே அவரை உன்னதத்தி லிருத்தியது. ஜகத் பிரஸித்தியான "ஹிந்து" பத்திரிகை ஆதியிலே தபாற் செலவுக்கின்றி ஒரு 12-அணா கடன் வாங்கியிருக்கிறது. இப்போது அதன் பிரபலம்—வியாபகம எப்படி? புதிய ஊக்கமே அதை உயர்வித்தது. "காங்கிரஸ்" மகா சபையின் ஆரம்பம் எப்படி? அவ்விதமாக ஒரு சபை கூட்டுவிக்க வேண்டுமென்று பம்பாயில் சிலரே சேர்ந்து ஒரு சிறு சபை கூட்டினர். அது போட்ட ஒரு சிறு விதைதான் இப்போது தேச வியாபகமான ராஷ்டீரிய சபையாகப் பரிணமித்தது. இவ்வளவுக்கும் காரணம் புதிய ஊக்கமன்றோ?

* * *

பிரபஞ்ச வாழ்வில் சோதனைகள் அநந்தம்—எல்லையற்றன. ஒவ்வொரு சோதனையும் உன்னைப் பாதாளத்தில் அமிழ்த்திக் கொல்வதாக இருக்கும். ஆழ்ந்த பள்ளத்தாக்குகளிலே உன்னை தள்ளிவிடும். மீண்டும் எழுந்திருக்கமுடியாத குழிகளிலே உன்னை வீழ்த்திவிடும். நீ கரையேற முடியாமலே போய்விடும். ஆயினும் நீ சித்தம் சலித்து விட்டுவிடாதே. அடிக்க அடிக்கப் பந்து விசை கொண்டு எழுவது போல, தவறிப்போன ஒவ்வொரு தடவையிலும் உடனே புதிய ஊக்கத்தைக் கிளப்பிக்கொள். மறுபடியும் உன் வேலையைத் தொடங்கு. கடவுளே மனமிரங்கி உனக்கு அருள் செய்வார்--வழி விடுவார்.

* * *

புதிய ஊக்கம் திடீரென்று பிறக்கும்—உதிக்கும். உடனே அதை நீ கைப்பற்றிக்கொள். ஏதோ ஒரு காரியத்தில் நீ யோசனையாக இருக்கும்போது—திடீரென்று வேறொரு நூதன யோசனை உனக்குத் தென்பட்டு, என்றும் காணாத ஒரு புதிய ஊக்கத்தை உன்னிலே தோற்றுவிக்கும். உடனே நீ புதிய மனிதனாகி விடுவாய். அந்த நிமிஷ முதல் நீ புதிய உருவமே. புதிய ஊக்கத்தின் ஜோதியே யாவாய். அன்று தொட்டு உன் வாழ்வுக்கு ஒரு நற்காலமே.

* * *

ஐந்நூறு ஐந்நூற்றெழுபது வருஷங்களுக்குமுன் இங்கிலாந்தின் வேந்தனொருவன் ஸ்காத்திலாந்து நாட்டை எதிர்த்தான். ஸ்காத்திலாந்தின் சேனாதிபதியான ப்ரூஸ் தளபதி ஆறு யுத்தங்களிலும் தோல்வியுற்று ஜீவனத்திற்கே வழியின்றி ஒரு குடிசையில் அவன் இருந்தான். அவன் எதிரில் ஒரு சிலந்திப் பூச்சி தன் வலை நெய்யும்படி நூலின் ஒரு முனையை ஒரு உத்திரத்திற் கட்டி, மற்றொரு,

உத்திரத்தைத் தாவிப் பிடித்து மறு முனையைத் தொடுக்க ஆறு தடவைகளில் முயன்றும் வீணாயது. இது ப்ரூஸ் தளபதிக்குத் தான் ஆறு தடவைகளில் தோல்வி யடைந்ததை நினைப்பூட்டிற்று. செய்த முயற்சியைச் சிலந்திப்பூச்சி மனம் சலித்து விட்டு விடவில்லை. ஏழாவது முறை அதிவேகத்துடன் முயன்று நினைத்தபடி உத்திரத்திற் சேர்ந்து தன் மற்றொரு முனையைக் கட்டிற்று. இதைப் பார்க்கவே ப்ரூஸ் தளபதிக்குத் தீரம் பிறந்தது. புது ஊக்கம் உண்டாயிற்று. உடனே, எழுந்து மீண்டும் படைகூட்டி "பன்னொக்பர்ன்" என்ற இடத்தில் தன் எதிரியை முறியடித்து வெற்றி சிறந்து இறுதியில் ஸ்காத்துலாந்து தேசத்திற்குச் சுவாதீனம் உண்டாக்கினான். இது ஒரு சிலந்திப் பூச்சி கற்பித்த புது ஊக்கம்—பாடம்.

ஆகவே, குமாரா, பாரத புத்திரா! உன் நெஞ்சிலே புது ஊக்கம் கொள். சலியாது முயற்சி செய். நீ சிந்தித்தது உன் நாளில் ஓர் காலத்தில் சித்தித்து விடுமென்று நம்பு. தீரம் வகி. ஊக்க முள்ளவனாயிரு, நீ ஒரு பெரிய ஜனத்தலைவராகக் கூடாதா? ஒரு பிரபல சிறந்த கர்த்தாவாக விளங்க முடியாதா? கீர்த்தி சிறந்த உத்தியோக புருஷனாகக்கூடாதா? பிரவலித்த பத்திராதிபராக நீ ஏன் தயாராக முடியாது? பிரவலித்த வியாபாரியாகிப் புகழ் ஓங்கக் கூடாதா? டாடா கம்பெனியைப்போல் நீயும் ஒன்று நடத்த ஏன் கூடாது? அரசனுக்கு அடுத்த ஸ்தானத்திற்கும் வரலாம். பெரிய ராஜ தந்திரியாகலாம். ஒரு தேசாதிபதியாகலாம். சிறந்த யுத்த வீரனாக ஜ்வலிக்கலாம். உன் நெஞ்சிலே புதிய ஊக்கம் பிரவேசித்து ஓடுமாகில் எது தான் உனக்குக் கஷ்டமானது? எது தான் உனக்கு சித்திக்காதது? உன்னில் தெய்வகதியாய்த் தோன்றிய அந்தப் புதிய ஊக்கம் உனக்குப் புதிய உயிரைக் கொடுக்கும். நவசக்தியை உண்டு பண்ணும், உலகத்தையே உனக்கு வசப்படுத்தி விடும், புதிய ஊக்கமே மனோ ஸக்தி—மெஸ்மரிசம்.

உலகத்திலே பல சிறந்த காரியங்கள் செய்து தமது பெயர் என்றும் விளங்குமாறு புகழ் பெற்றவர்கள் அனைவரும், இளமையிலேயே தமக்குத்தாமே புதிய ஊக்கத்துடன் விஷயங்களை ஆலோசிக்கப் பழகியவர்களே யன்றி—அதனால் தான் பெரும் பயன்பெற்றவர்களேயன்றி வேறல்லர்.

நீ இப்பொழுது தான் ஸம்பாத்திய உலகத்தில் பிரவேசித்திருக்கிறாய். உன்னை ஒரு குடும்பம் நம்பி எதிர்பார்க்கிறது. நீ பிறந்த நாடும் உன்னை நம்பி எதிர்பார்க்கிறது. உன் முயற்சிகள் எவ்விதம் இருக்கிறதென்று கடவுளும் கடைக்கண்ணோக்கிப் புன்னகையுடன் உன்னைக் கவனித்து வருகிறார். யுவகுமாரா! இனிமேல் தான் உனக்குக் கஷ்டங்கள்—சோதனைகள்—வாழ்வின் ஸஞ்சலங்கள்—விபத்து

கள்! இவற்றிலெல்லாம் தேறித் திடம் பெறு. தவறி விழுகிற் ஒவ்வொரு தடவையிலும் சிலந்திப் பூச்சியைப் போல் புதிய ஊக்கம் கொள். என் வீரக்குழந்தாய்! நீ வீணுக்குப் பிறக்கவில்லை, விருதாவில் சாவாதே. உன் ஜீவியத்தை வியர்த்தமாக்காதே. உன்னால் ஒரு பெருங் காரியம் ஆகவேண்டி யிருக்கிறது. அதற்காகவே கடவுள் உன்னை இங்கு அனுப்பியிருக்கிறார். அதை நீ உணர்ந்து கொள். நெஞ்சிலே வாங்கிக் கொள். உயர்ந்த லக்ஷியங்களிலேயே உன் சிந்தையைச் செலுத்து அது நிறைவேறுவதும் நிறைவேறாததும் கடவுள் இஷ்டப்படி நடக்கட்டும். அதை அவருக்கு ஒப்புவித்து விடு. நீ புதிய ஊக்கத்துடன் இருந்து சலியாமல் காரியம் மட்டும் நடத்து. உன் குடும்பமும் உயர்நிலையுறும். ஏராளமான ஐச்வரியங்கட்கும் நீ அதிபதியாவாய். கீர்த்திவந்தனாய் தேசோபகாரியாய் ஜ்வலிப்பாய். இப்படிக் காரியம் நடத்துகிற மார்க்கத்தில் நீ இறங்கி விட்டபிறகு எல்லாம் உனக்கு ஸர்வசித்தி தான். அன்று தொட்டு நீ ஒரு புதிய மனிதனே. உன் கைதான் எல்லோருக்கும் மேலாயிருக்கும். எவரும் உன் வார்த்தையை மதிப்பார்கள். எந்த கஷ்டமும் உன்னைக் கலங்க வைக்காது. எவ்வளவு கடன் இருப்பினும் நீ சோர்ந்து விடமாட்டாய். புதிய ஊக்கத்தின் வழியிலேயே செலவிட்ட பணத்தை ஒரு கடன் என்று சொல்வதே தப்பு. அது தான் நீ போட்ட ஆரம்ப முதல்—மூலதிரவியம். உன் புதிய ஊக்கம் அந்தக்கடனையெல்லாம் தீர்த்துவிடும். உன்னை ஸுதந்தரமுள்ள மனிதனாக்கிவிடும். நீ பிறந்தது பிறந்துவிட்டாய். மானிட ஜன்மம் பெற்று விட்டாய். நீ மறுபடியும் கடவுளிடத்திற்குப் போகு முன்னதாக உன்னால் செய்யவேண்டிய காரியங்கள் யாவற்றையும் புதிய ஊக்கம் கொண்டு செய்—இவ்வுலகத்திய வேலைகள் உனக்கு முடிந்த பின்பு—அவற்றை ஒரு ஒழுங்கான முடிவுக்குக் கொண்டு வந்த பின்பு—நீ மனோ சாந்தி பெற்று கடவுளிடம் செல்லலாம். அவரும் உன்னைப் பிரியத்தோடும் அப்போது வரவேற்பார். இவ்வுலகமும்—பாரத நாடும் உன்னை மறவாமல் உன் பரவிய புகழ் துதித்து வணங்கிக் கொண்டாடும். அந்தக் காலம் வரும் வரையில் நீ புதிய ஊக்கத்துடன் உழைத்துக்கொண்டிரு. மனிதன் வேலை செய்யப் பிறந்தான். உன் வேலையையும் நீ செய்துவிடு. அதுவே உய்யும்வழி. 'ஊக்கமது கைவிடேல்' Try Try Try Again. உன் புதிய ஊக்கம் ஓங்குக. வளர்க. விசாலிப்பதாக.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

பிரபஞ்ச ரகஸ்யம்

11. எவ்விடத்தில் வித்வான் இல்லையோ அவ்விடத்தில் அற்ப புத்திமானும் புகழப்படத்தக்கவன். மரமில்லாத தேசத்திலே ஆமணக்கே மரமாகின்றது.

12. இவன் நம்மவனே பிறனே என்றெண்ணுதல் அற்ப புத்திமானுடைய எண்ணமாகும். உதார நடையுடையவர்களுக்கு இப்பிரபஞ்ச முழுவதுங் குடும்பமாயிருக்கின்றது.

13. ஒருவன் எவனுக்காயினும் சத்துருவுமல்லன் மித்ரனுமல்லன். சத்துருக்களும் மித்துருக்களும் வியவகாரத்தினால் உண்டாகிறார்கள்.

14 சிநேகிதனை ஆபத்திலும், வீரனைப்போரிலும், சுத்த— நற்குணமுடையவனைக் கடனிலும் மனைவியை திரவியக்குறைவிலும், உறவினரை விசனத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

15. மதுரவசன மித்திரோப சாரங்களினால் வசப்பட்டவர்களும் விசுவாசமுடையவர்களும், உலகத்தில் வஞ்சகமென்னும் வலையில் சிக்குவதுமுண்டு.

16. துர்ச்சனனோடு சிநேகமும் பிரீதியும் செய்யலாகாது. கரி உஷ்ணமாயிருந்தால் கையைச்சுடும்; குளிர்ந்திருந்தால் கையைக் கருமையாக்கும்.

17. துர்ச்சனன் இனிமையாய்ப் பேசுகிறவனாயிருந்தாலும், அவனை நம்பலாகாது; ஏனெனில் அவனுடைய நாக்கின் நுனியில் தேன் இருக்கின்றது இருதயத்தில் விஷமிருக்கிறது.

18. சுத்தம், கொடை, வீரம், சுகதுக்கங்களிற் சமமாயிருத்தல், இரக்கம், பிரியாதிருத்தல், சத்தியம் என்னும் இவைகளே சிநேகிதனுடைய குணங்களாகும்.

19. ரகஸ்யத்தை வெளிப்படுத்துதல், யாசித்தல், நிட்டூரம், கோபம், பொய், சூது இவைகள் மித்திரனிடம் இல்லாதிருக்க வேண்டும்.

20. வாக்கு வல்லமையும், மெய்வார்த்தையும் பேச்சினால் அறியப்படுகின்றன. நேர்மையும், நிலைமையும் பார்த்த மாத்திரத்தில் அறியப்படுகின்றன.

கமலா

(முன் தொடர்ச்சி)

இதற்குள் அந்த ராவண ஸந்நியாஸியைப் போன்ற கபட குரு அரண்மனை வாயிற்படியிலிருந்து புலியைப்போலப் பாய்ந்து, வெகு தூரத்திற்கப்பால் குதித்தான். சந்திரனுடைய கத்தியின் முனை அவனுக்கு நாலங்குல தூரத்தில் தோன்றி, ராமபாணம் போல், துரத்திற்று. ஒரு நிமிஷத்தில் கூட்டத்தைத் தாண்டி, அரண்மனையின் பின்புறத்தில் ஓர் மூலையில் திரும்பி மறைந்து, பகலைப் போல் வெளிச்சம் கொடுக்கும் எண்ணிறந்த தீவட்டிகளின் பிரகாசத்திலிருந்து தப்பினான். "வயது சென்ற குருவா"? இல்லை நல்ல யௌவனமும், தேஹபலமும், லாகவமும் பொருந்தின யுத்த வீரன். அந்தக்கூட்டத்தில் யாரோ ஒருவன் தலைவிரிகோலமாய் ஓடும் குருவைக் கண்டு, வியப்படைந்து, அவர் மேல் பாய்ந்து காஷாயத்தைப் பிடித்திழுத்தான். கழன்று கையில் வந்துவிட்டது. அரையில் கௌபீனத்தைத் தவிர வேறில்லை. மற்றொருவன் அவனுடைய கையைப் பிடித்துத் தடுத்தான். ஆனால் நன்றாய் எண்ணெய் தடவப்பட்டிருந்த அந்தக் கை லாலவமாய் வழுக்கிக் கொண்டு பிடித்தவனை முகத்தில் ஓங்கிக் குத்திவிட்டு, மறைந்தது. உடனே கூட்டங்கள் ஊர் வலத்தைவிட்டு, ஓடுகிறவனைத் துரத்திக்கொண்டு, "ஓடு, பிடி, அடி, கொல், விடாதே, அதோ பா"ரென்று கூவிக்கொண்டு, பின் தொடர்ந்தன. ஒவ்வொரு தெருவிலும் சந்திலும் கூட்டம் புகுந்து வீடு வீடாய்த் தேடிற்று, சிலர் யமுனைக் கரையில்போய்ப் பார்த்தார்கள். ஜலம் கலங்கவில்லை; கரையில் ஒருவருமில்லை; நூறு முழத்துக்கப்பால் ஓர் உயர்ந்த மணல்திட்டுண்டு; அங்கே சந்திரனுடைய வெளிச்சம்பட்டு பகலைப்போல் பிரகாசிக்கச் செய்தது. ஆனால் மணல் திட்டிற்கு அடியில் படுத்துக் கொண்டிருந்த ஒருவனைக் கண்டது யார்? இரண்டு மூக்குத் துவாரங்கள் மாத்ரம் ஜலத்திற்கு மேல் காணப்பட்டன. மற்ற தேஹம் முழுவதும் ஜலத்தால் மறைக்கப்பட்டிருந்தது.

இதற்குள் பல தோழிகள் கமலாவைத் தாங்கியெடுத்து, உள்ளே கொண்டுபோய், கட்டிலில் படுக்கவைத்து, ஆடையைக் கழற்றிச், சைத்யோ

பசாரம் செய்து, மூர்ச்சையைமாற்ற முயன்றார்கள். முகத்தில் குளிர்ந்த ஜலத்தைத் தெளித்தார்கள். கை கால்களிலும் மார்பிலும், நெத்தியிலும் பலமான தைலங்களைத் தேய்த்தார்கள். அதற்குள் அரண்மனை வைத்யர்கள் ஓடோடியும் வந்து தங்களாலியன்ற பிரயத்னத்தைச் செய்தார்கள். என்ன பயன்? கண்ணாடியை மூக்கில் வைத்துப் பார்த்தபொழுது, சற்றும் மங்கவில்லை. ஹ்ருதயம் அடிக்கவில்லை. கையில் நாடியின் ஓட்டம் முற்றிலும் நின்றுவிட்டது. ஹரிநாம் என்ன செய்வான் வேரற்ற மரம்போல் அவளுடைய பக்கத்தில் விழுந்து, வெகு நேரம் பிரக்ஞையற்றுக்கிடந்தான். சற்றுத் தெளிந்து வாயைவிட்டலறினான். மௌனமாய்க் கண்ணீர் உதித்தான். பித்துப் பிடித்தவன்போல் எதையோ வெறிக்கப் பார்த்தான்; சுற்றியிருந்தவர்களைக் கெஞ்சினான்; ஒவ்வொரு தெய்வத்தையும் வாயாரத்திட்டினான். கமலத்தைப்பல விதமாய்க் கூவி யழைத்தான். ஆனால் அவன் மணக்கோலம் பிணக்கோலமாய், ஹரிநாமனுடைய இல்லத்திற்கேகுவதற்குப் பதிலாய் யமனை மணமகனாய்க் கோரி, அவனுடைய வீட்டிற்குப்போய்ச் சேர்ந்தாள்.

மறுநாள் டில்லிமாநகரெங்கும் அழுகையும் கூக்குரலும் திகிலுமாய், யாருக்கு என்ன வருமோவென்று நடுங்கிக்கொண்டிருந்தது. நேற்று ஊர்வலம் போன வழியாகவே கமலத்தின் பிரேதம் மயானத்திற்கு ஊர்வலம் சென்றது. நகரத்திற்கருகில் சற்றுதூரத்தில் ஓர் விஸ்தாரமான மேடுண்டு. அதற்குப்போகும் வழியில் இருபக்கத்திலும் வேப்பைமரமும் ஆலமரமும் அடர்த்தியாய் வளர்ந்தோங்கின. அந்தத்திடலுக்கெதிரில் மிருதுவான இளம்புல்லால் மூடப்பட்ட ஓர் ஸமபூமியும், அதற்கு பக்கங்களில் நெருக்கமாய் வளர்ந்த காட்டுமரங்களும் அதற்கப்பால் புதர்களும் செடிகளும் காணப்பட்டன. இருபுரத்திலுமுள்ள உயர்ந்த மரங்கள் கைகளைக்கோர்த்துக்கொண்டு நடுவிலுள்ள வழியை மறைத்தன. எட்டுமுழநீளமும், நாலுமுழ அகலமுமுள்ள சிதைசந்தனக்கட்டைகளால் அடுக்கப்படிருந்தது. அதன் மேல் விலையுயர்ந்த மிருதுவான மெத்தைகள் விரிக்கப்பட்டிருந்தன.

இப்படியிருக்கையில் சில அரண்மனைவேலைக்காரர்கள் தாமதித்துஅங்கே விஜயஞ் செய்யவந்து அக்கப்போர் பேசிக்கொண்டிருந்தார்கள். "அரண்மனையில் எல்லாம் ஒரே திகிலும் கூக்குரலுமாயிருக்கிறது. விலையேற்றமாணிக்கம் காணாமல் போய்விட்டது."

"அதெப்படி? மகாராஜாவே அதை ஜாக்கிரதையாய்க் காக்கவில்லையா?

ஆம். தன் அறைக்குள் வெகு பந்தோபஸ்தாய்த் தன்பார்வையிலேயே பெட்டியை வைத்துக்கொண்டிருந்தார். அவருக்காக அவ்வறையை வாசனையேற்றித் தூபதீபங்கள் போட்டிருந்தார்கள். ஊர்வலத்தைப் பார்ப்பதற்காக

மஹாராஜர்வெளியில் வந்தபொழுது, மாணிக்கத்தைக்கண்டார். பாதி ராத்திரியில் விழித்துக்கொண்டு பார்த்தபொழுதும் அது அங்கேயே யிருந்ததாம். மறுநாள் காலையிலோ மாணிக்கம் மாயமாய் மறைந்தது."

அப்பொழுது அடுத்த கிராமத்திலிருந்து வந்த ஓர் சேணியன் குறுக்கிட்டு, "ஏனய்யா! காசியிலிருந்து எழுந்தருளின குருவின் சங்கதி என்ன?" வென்றான். "அதையேன் கேட்கிறாய்? இன்று காலையில் வந்து சேர்ந்தார். வழியில் ஓர் சத்திரத்தில் தங்கின பொழுது, யாரோ அவரை மயக்கி ஓர் அறையில் போட்டுப் பூட்டி விட்டானாம். எப்படியோ தப்பியடித்துச், சோறு தண்ணீரில்லாமல், ஒரே ஓட்டமாய் வந்து விழுந்தாராம். அவர் நினைத்தபடியே இங்கே ஒரு பிரமாதம் நடந்துவிட்டது. மாணிக்யத்தைப் போல் மாய குருவும் மறைந்தார்."

"மறையவாவது? யமுனையில் மூழ்கி இறந்தான். அடிச்சுவடுகள் ஜலம் வரையில் காணப்பட்டன. இங்கிருந்து ஒரே பாய்ச்சலாய் ஆற்றில் குதித்திருக்கிறான். ஆனால் அக்கரையில் அடிச்சுவடுகளைக்காணோம். ஆகையால் அவன் மூழ்கிப்போய் விட்டான்".

"ஆம். ஆனால் வக்கீல் வேறுவிதமாய் நினைக்கிறார்.

"இந்தத் திருடனை எப்படியாவது பிடிக்காமல் விடுகிறதில்லை யென்று சபதம் செய்திருக்கிறார். அவனை நம்பக் கூடாதென்று பல தடவை அரசனிடத்தில் சொல்ல நினைத்தார். யாராவது சத்துருவின் தூதன் வேஷம் பூண்டு, டில்லிக்கு வந்திருக்கிறானோ தெரியவில்லை."

"வக்கீலின் அபிப்பிராயமென்ன?

"ஆற்றிலுள்ள மணல் திட்டில் அவனுக்காக ஓர் படகு தயாராய் இருந்தது. அதிலேறிச், சற்று தூரம் போய்ப், பிறகு கரையில் சேர்ந்திருக்கவேண்டும். ஆகையால் அரசனிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு, திருடனைப் பிடிக்கப் போயிருக்கிறார்".

"விஷத்திற்கு விஷமே ஔஷதம். பாம்பின் கால் பாம்பிற் கல்லவா தெரியும்? திருடனுக்குத் திருடனே ஜோடி" யென்று ஓர் வயசு சென்ற யுத்தவீரன், வெறுப்புடன் தன் மனதிலுள்ள ஸந்தேகத்தைப் பயமின்றித் தெரிவித்தான். எல்லோரும் அவனை ஏற இறங்கப் பார்த்து, "உனக்கென்ன தெரியும்? நீ ரொம்ப கண்டு விட்டாயோ" வென்றார்கள்.

"ஆம் எனக்கென்ன தெரியும்? எல்லாம் உங்களுக்கே தெரியுமெ"ன்று அவர்களை லக்ஷ்யஞ் செய்யாமல் திரும்பினான். அவன் யசோவந்த ஸிம்ஹனுடைய பட்டாளத்தில் வெகு காலமாய் ஸேவகஞ் செய்தவன்; பென்ஷன் பெற்று, யமுனைக்கடுத்த கிராமத்தில் குடியானவனாயிருந்தான். வக்கீலின் ஸ்வபாவம் அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஓர் வயலின் பாதியைப் பற்றி மூன்று வருஷங்களுக்கு முன்பு அரசனிடத்தில் மனுக் கொடுத்தான்.

அதை அவருக்கு எட்டும்படி செய்வதற்காக, மிகுந்த பாதி வயலை விற்று, ஸம்ஸ்தான வக்கீலுக்கு லஞ்சம் கொடுக்கும்படியாயிற்று. திருடனைப் பிடிக்கத் தன் கிராமத்தை நோக்கிப் போனானென்று கேட்டவுடன், அந்த வீரன் அங்கே நில்லாமல் வேகமாய்ப் புறப்பட்டுப் போனான். போகுமுன், அங்கே கூடியிருந்தவர்களை நோக்கி; "மடையர்களே! இன்று ராத்திரி வரையில் உங்களுடைய மேன்மையான புத்தியைச் செலவழிக்காமல் வாயை மூடிக்கொண்டிருங்கள். எல்லாம் வெளியாகு"மென்றான்.

ஐந்தாம் பாகம்

முதல் நாள் இரவில் ஊர்வலம் புறப்பட்ட வேளையிலேயே கமலாவின் பிரேதக் கோலமும் புறப்பட்டு மயானத்திற்கு வந்தது. அங்கிருந்த புரோஹிதர்கள் சுமக்கிறவர்களிடத்திலிருந்து பாடையை வாங்கி மெத்தையின் மேல்வைத்து, அதைச்சுற்றி இடையொளி யில்லாமல் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றிப் பிரேதவாத்யக்காரர்கள், மனதை வெறுக்கும் பாடல்களை மெதுவாய் வாசித்துக் கொண்டிருந்தார்கள். மற்ற ஜனங்கள் அதற்கப்பாலிருந்து சிதையைப் பார்த்த வண்ணம் நின்றார்கள்.

ஹரிநாமன் எங்கே? மயானம் வரையில் கமலாவின் தேஹத்தை விட்டு அவனைப் பிரிக்க முடியவில்லை. பிறகு புரோஹிதர்கள் அவனைத் தடுத்தார்கள். தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட மாணிக்யம் மறைந்தது. என் உயிருக்குயிரா யிருந்த கமலா மாயமாய் மடிந்தாள். இனி எனக்கென்ன வேலை? பதிவ்ரதையான இல்லாள் தன்கணவனை விட்டு, இகத்திலும் பரத்திலும் அவனுடைய பாதமே கதியென்று தீயில் குதிப்பதுபோல், நானும் கமலாவை விட்டுப் பிரியாமல் அவளுடன் வானுலகம் செல்வேன். மூட்டின தீயில் குதிப்பேனென்று வரவர அதிகரிக்கும் இருட்டில், ஒருவருக்கும் தெரியாமல், பக்கத்திலுள்ள காட்டின் வழியாய்ச் சிதைக்கருகில் பதுங்கி நின்றான்.

புரோஹிதர்கள் மந்த்ரங்களைச் சொல்லி முடித்துச் சந்தனக் கட்டைகளுக் கடியில் தீமூட்டுவார்கள். ஒரு நிமிஷத்தில் நெருப்புப் பிடித்து ஆகாசத்தை யளாவும். அப்பொழுது தான் போர்க்கோலத்துடன், உருவின கத்தியும் கையுமாய்ப் பாய்ந்து, கமலாவைச் சேருவான்.

இதற்குள் அவன் நின்று கொண்டிருந்த வடமேற்கு மூலைக்கு எதிரில் வடகிழக்கிலிருந்து வேறொருவன் அடி மேலடி வைத்துக்கொண்டு, ஓசைப் படாமல், உருவின கத்தியுடன், அடிக்கடி இருபுறமும் பார்த்துக் கொண்டு, சிதையை நோக்கி வந்தான். இவ்விருவரும் ஒருவரை யொருவர் பார்க்க வில்லை.

தீமூட்டினார்கள். பிடிக்கவில்லை. ஒருவருக்கொருவர் கசகச வென்று பேசிக்கொண்டார்கள். "கட்டைகள் நனைந்திருக்கின்றன; வேறு தீவட்டிகளைக் கொண்டுவா." 'புதிய கட்டைகளை அடுக்கு" "மழையா? இல்லை. யாரோ வேண்டுமென்றே ஜலத்தைக் கொட்டியிருக்கிறார்கள்" "ஜலமல்ல. வேறு எதோ திராவகம். வாஸனை அடிப்பது தெரியவில்லையா?" வென்று புரோஹிதர்கள் சொல்லிக்கொண்டு வேறு சந்தனக்கட்டைகளைக் கொண்டு வந்து அடுக்கினார்கள்.

அதற்குள் இரண்டாவது மனிதன் நெருங்கி வந்து, மேற்போர்வையைக் கழற்றி எறிந்து, தேஹத்துடன் ஒட்டின சட்டையும் நிஜாருமாய்ப் பதுங்கிப் பாய்வதற்கு எத்தனித்தான்.

திடீரென்று, அவனுக்குப் பின்னால் சற்று தூரத்தில், வேறொருவன், கையில் புலிநகத்தைப் போன்ற பிச்சுவாவை ஓங்கிக்கொண்டு, தொடர்ந்து வந்தான்.

அதற்குள் நெருப்புப் பிடித்து ஓர் கொழுந்து மேலே கிளம்பிற்று. ஹரிநாமன் புதரிலிருந்து வேகமாய் ஓடிவந்து ஒரே பாய்ச்சலாய்ச் சிதையின் அடியில் குதித்தான். உடனே அவனுடைய நிழலைப் போல் இரண்டாவது மனிதனும், நிமிர்ந்து, சிதையின் வட கிழக்கு மூலையில் வந்து குதித்தான். ஒருவரை யொருவர் ஏற இறங்க வெறித்துப் பார்த்தார்கள். கோபமும் ஆச்சர்யமும் பொங்கின. "அடே துரோஹி" "அடே மடையா!" உடனே இருவரும் கைகலந்து வீராவேசத்துடன் சண்டையிட்டார்கள். வேறு எண்ணங்களால் சற்றுக்கலங்கியிருந்த ஹரிநாமன், தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, எதிரியின் வெட்டுகளையும் குத்துகளையும் லாகவமாய்த் தட்டிவிட்டு, ஏமாற்றி, அவனுடைய மார்பைத்தன் கத்திக்கு உறையாகச் செய்யக் கையை ஓங்கினான்.

அந்த நிமிஷத்தில், மூன்றாவது மனிதன், அவனுக்குப் பின்னால் சுற்றி வந்து, தன் பிச்சுவாவை ஓங்கி ஹரிநாமனை விலாப்பக்கத்தில் குத்தப் போனான்.

இதற்குள் நான்காவது மனிதன் நடுவிலிருந்த புதரிலிருந்து திடீரென்று வெளிப்பட்டு, ஈட்டியும் கையுமாய்ப் பாய்ந்தான். ஐயோ! மூன்று சத்ருக்களுடன் ஒருவன் எப்படிப் போர் செய்வான்?

மூச்சை யடக்கிக்கொண்டு, ஹரிநாமன் மின்னலைப்போல் சுழன்று, பிச்சுவாவை ஓங்கின கையைத் துளைத்தான். கத்தியைப் பிடுங்கி, முதலாவது எதிரியை வேலை முடிக்கத் திரும்புமுன், அவனுக்குச் சற்று அவகாசம் கிடைத்தபடியால் சத்ரு நெருங்கி வந்து, கத்தியை ஓங்கி, ஹரிநாமனுடைய தலையில் வெட்டினான். ஹரிநாமன் திடீரென்று

முழந்தாளிட்டுக் குனிந்து, ஒதுங்கினான். எதிரியின் கத்தி அவனுடைய தலைப்பாகையை தடவிக்கொண்டே பூமியில் பதிந்தது. "துரோஹீ! தொலைந்து போவெ"ன்று சொல்லிக்கொண்டே, ஹரிநாமன் சத்துருவைக் குத்தினான். அதற்குள் மூன்றாவது மனிதன் பிச்சுவாவை வேறொரு கையில் மாற்றிக்கொண்டு, முதுகில் குத்த வந்தான். ஹரிநாமன் என்ன செய்வான்? ஒருவனைக் கொன்றாலும் வேறொருவன் தன்னைக் கொல்லாமல் விடான். அதற்குள் நான்காவது மனிதன் ஈட்டியை ஓங்கிக்கொண்டு, ஹரிநாமன் மேல் பாய்ந்தான். ஈஸ்வரா? ஒருவனுக்கு நாலு பேரா?

திடீரென்று அந்த ஈட்டி மேலே பாய்ந்து, இரண்டாவது மனிதனுடைய கழுத்தில் பதிந்து, ஊடுருவிச் சென்றது. கருணாநிதியான கடவுள் அவனுக்குதவிபுரிய ஓர் புண்யவானை அனுப்பினார்போலும். பிறகு ஹரிநாமன் தன் குறியை மாற்றி, பிச்சுவாவைத் தட்டிவிட்டு, மூன்றாவது எதிரியின் கழுத்தில் கத்தியைப் பதித்தான். ஆனால் அந்தப் பகைவன் திடீரென்று தலையை ஓர்புறமாய்த்திருப்பிச், சிதையை நோக்கிப் பாய்ந்து, காயம் படாத கையால் சிதையைப் பிடித்து ஏறப்பார்த்தான். உடனே குறிதவறாத ஈட்டி அவனுக்குப்பின்னால்வந்து, அந்தக்கையையும் கட்டையையும் சேர்த்துத், துளைத்துக் கோர்த்து விட்டது.

அடே! இதென்ன விந்தை! யாரோ ஐந்தாவது மனிதன், வெள்ளையுடையைத் தரித்துக் கொண்டு, விலையுயர்ந்த ஆடையாபரணங்களுடன், எங்கேயிருந்தோவந்து, ஒரே பாய்ச்சலாய்ச் சிதையின்மேல் பாய்ந்து, கமலாவின் தேஹத்தைத் தூக்கியெடுத்தான்.

அக்னிஜ்வாலைகளுக்கு நடுவில், சற்றும் பயமில்லாமல் எல்லோரையும், எதிர்த்து நிற்பவனைக்கண்டு, "ஆச்சர்யம்! ஆச்சர்யம்! தெய்வானுக்ரஹம்! அக்னிபகவானே! தேவேந்த்ரனே!" யென்று புரோஹிதர்களும், மற்றவர்களும் பூமியில் விழுந்து, பயபக்தியுடன் விளங்கினார்கள்.

ஹரி நாமன் சிதையின்மேல் பாய்ந்து, கமலாவைக் காக்க ஓடினான். உடனே "தம்பீ! திரும்பிப்போ. திரும்பிப்போ, நானே" யென்று, தன் சால்வை நெருப்புப் பிடித்ததைக் கண்டு, அதைக்கழற்றி எறிந்து, கமலாவுடன் சிதையிலிருந்து கீழே குதித்துச், சற்றுத் தள்ளாடி, எழுந்து, ஹரிநாமனுடையகையில் கமலாவை ஒப்புவித்து, "உன் மனைவியை ஒப்புக்கொள். கவலைப்படாதே" யென்றான்.

ஹரிநாமன் அவளை இளம்புல்த் தரையில் கொண்டுபோய் வைத்து, மூர்ச்சையைத் தீர்க்கப் பலவிதமாய்ச் சிகித்ஸை செய்தான். அதற்குள் சந்தான் அருகில் வந்து; "வாயைப் பாரென்று கூவி, ஈட்டியால் துளைக்கப்

பட்ட மனிதனுடைய வயிற்றிலும் அரைக்கச்சையிலும் உடுப்பிலும் எதையோ தேடினான்.

ஹரி நாமன் கமலாவின் வாயைத் தடவிப் பார்க்கையில், ஏதோ ஒரு கடினமான பதார்த்தம் கையில் பட்டது. அதை விரலைவிட்டு எடுத்து வெளிச்சத்தில் பார்க்கையில்—————மாயமாய் மறைந்த மாணிக்யம்! "ஹரி நாமா! ஒன்றும் தெரியாமல் மயக்கம் வருகிறதே. என்னைக் காப்பாற்று." இருபத்திநாலு மணி நேரத்திற்குமுன் அந்த மாணிக்யம் அவளுடைய தொண்டையில் வைத்து அழுத்தப் படும்பொழுது ஆரம்பித்த வார்த்தைகள் பாதியில் முடிவு பெறாமல் நின்று, இப்பொழுது அந்தமாணிக்யம் எடுக்கப்பட்டவுடன் முடிவு பெற்றன. 24 மணி நேரம் அவளுக்கு ஓர் நிமிஷம்போல் கழிந்தது. அதற்குள் அவள் கண்களை விழித்தாள். சுற்றிலும் பார்த்தாள். உடனே சந்த்ரன் அவர்களுக்கருகில் வந்து ஓர் சிறிய வில்லாவிலிருந்த திராவகத்தை அவளுடைய மூக்கில்பிடித்தான். முகம்தெளிந்து நான்இதற்குமுன் வரமுடியவில்லை. தம்பீ இந்த மருந்தை என்னிடத்திலிருந்துஒளிப்பதற்காக இந்தக் கொடியவன் என்னுடன் இதுவரையில் போராடினானென்றான். சந்த்ரன் கமலா யமனுடைய வீட்டிலிருந்து திரும்பி வரும் நாசிகேதஸைப்போல் பதின்மடங்கு ஒளியுடன் உயிர் பிழைத்துத் தன் காதலனைஇருக்கத்தழுவிச் சிறிப்பும் அழுகையுமாய் மெய் மறந்திருந்தாள்.

இதற்குள் புரோஹிதர்களும் மற்றுமுள்ளோரும் அவர்களைச் சூழ்ந்துகொண்டு, என்ன என்னவென்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது முன்பு போர்வீரனாயிருந்த குடியானவன், தன் ஈட்டியை மரத்திலிருந்து பிடுங்கி யெடுத்து அதில் கோர்த்திருந்த கையை விடுவித்துச், சந்த்ரனைப்பார்த்து " இந்த கான்யகுப்ஜ தேசத்துத் துரோஹியை என்ன செய்யலா மென்றான். அதற்குச் சந்த்ரன் அவனை விட்டுத்தொலை. அவனுக்கு இரண்டு கைகளும் இனிமேல் உதவாது. சுற்றியிருக்கும் ஜனங்கள் அவனைக் கண்டுபிடித்தால், சிதல்சிதலாய் பெயர்த்தெறிந்து விடுவார்களென்றான். அப்படியே செய்யக் காசிக்ஷேத்திரத்திலிருந்து வந்த குருவாய்ச்சில தினங்கள் விளங்கின அந்தத் தூதன், காயம்பட்ட கைகளைப் போர்வையில் மறைத்துக்கொண்டு இருந்த விடம் தெரியாமல் ஓடிப்போனான். படுபாவியான வக்கிலுடைய பிணத்தைக் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் தூக்கிவிட்டெறிந்தார்கள். பிறகு ஹரிநாமனையும் கமலாவையும் சந்த்ரனையும் தோளிலெடுத்துக் கொண்டு, ஜனங்கள் பெருங்கூச்சலுடன் ஆரவாரித்து ஊர்வலம் வந்து அரண்மனையில் கொண்டுபோய் விட்டார்கள். மஹாராஜாவும் மஹாராணியும் ராமானந்தரும் யசோவந்த ஸிங்கும் தாங்கள் செத்துப் பிழைத்தவர்களைப் போல் எண்ணி வெகு தினங்கள் வரையில் மஹோத்ஸவம் கொண்டாடினார்கள்.

ஆனால் ஒரு ஸந்தேகம். விவாஹ பத்திரத்தில் கையெழுத்திட்ட பொழுது, மாயகுருவான தூதன் மாணிக்யத்தை மறைத்துவிட்டு அதற்கு பதிலாய் வேறொன்றை வைத்தும், டில்லியை விட்டு ஓடிப்போகாமல் தங்கினதற்குக் காரணமென்ன?

அவனுடைய கூட்டாளியான வக்கீல் அவனைக்காட்டிக் கொடுத்திருப்பான். கமலாவை அவன் அடைய விரும்பி, மாயகுருவின் உதவியைப் பெற்று, அதற்குப் பதிலாக அவனுக்கு மாணிக்யத்தைத் திருடும்படியான சௌகரியங்களைச் செய்தான். ஆகையால், கமலாவை அவன் கொண்டு போகும் வரையில் அங்கே இருக்கவேண்டி வந்தது. உபதேசம் செய்யும் பாவனை கொண்டு, அவளை மூர்ச்சை யடையும்படி ஏதோ சில தந்த்ரங்களைச் செய்தான். அவன் அதற்குட்படாமல் திமிறிக்கொண்டு கூவினபொழுது, மாணிக்யத்தைத் தொண்டையிலடைத்து, அதனால் மூச்சை அடக்கிப், பிணம் போலாக்கினான். மாணிக்யத்தின் அபூர்வ சக்திகளில் இதுவுமொன்று. அந்தப் பெண்ணை இறந்தாளென்று எண்ணி மயானத்தில் கொளுத்தி விடுவார்களென்ற நம்பிக்கையால், அங்கே சென்று வக்கீலுடைய உதவியால் கமலாவைத் தூக்கிக் கொண்டுபோய், அவளுடைய வாயிலிருந்த மாணிக்யத்தைத் தான் எடுத்துக்கொண்டு தன் ஔஷதங்களால் அவளுடையமூர்ச்சையைத்தெளிவித்து, வக்கீலிடத்தில் ஒப்புவிக்க நினைத்தான்.

அவ்விதமான வித்தைகளில் பயிற்சியுள்ள சந்த்ரன், மாயமான மாணிக்யம் புகையாய் மறைந்ததென்று கேள்வியுற்றது முதல், ஏதோ விஷமம் நடந்திருக்குமென்று ஊகித்து மாணிக்யம் வைத்திருந்த சிமிழைத் திறந்து பார்க்கையில், அதில் வெண்மையான சில தூள்கள் கிடக்கக் கண்டான். அதைத் த்ராவகங்களால் பரீக்ஷித்துப் பார்க்கையில், கபடம் முழுவதையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்தான். அப்பொழுது ஸாயங்காலமானபடியாமல் வேறொன்றும் செய்யமுடியாமல் ஓடோடியும் வந்து கமலாவைச் சிதையில் வைத்துத் தீ மூட்டும் ஸமயத்தில் அங்கே சேர்ந்ததோ பெரிய காரியம். அப்படியும், முன்பு தன் தகப்பனிடத்தில் போர் வீரனாயிருந்த குடியானவன் ஸமயத்தில் வந்து வக்கீலை வேலை முடித்துக் கபடகுருவை ஆணியடிக்காவிட்டால் காரியம்மிஞ்சிப் போயிருக்கும். வக்கீலின் ஸ்வபாவத்தை நன்றாயறிந்தவனாகையால் அவன் கபடகுருவைத் துரத்திக்கொண்டுபோகவில்லை யென்று முடிவுசெய்து, அவ்விருவரும்சேர்ந்தே இந்த யுக்தியைச் செய்திருப்பார்களென்று நம்பி, யமுனைக் கரையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். வக்கீலும் குருவும், ஒருவரை யொருவர் பின் தொடரவிட்டுத், தான் அவர்களைக் கண்பார்வையில் வைத்துக் கொண்டே யிருந்து, அந்தப் போர்வீரன் நல்ல தருணத்தில் ஹரி நாமனுடைய உயிரைக் காப்பாற்றி அந்த மஹா பாபிகளுக்குத் தகுந்த சிக்ஷையைச் செய்தான்.

(முற்றிற்று)

கடற்கரை காலக்ஷேபம்

(முன் தொடர்ச்சி.)

"அவசரமில்லை, மெதுவாய்ப் பார்க்க வேண்டும். மேலும் எனது பெரிய தாயார் மேலைச் செவலில் இருக்கிறார்கள். அது விஷயமாய் அவர்கள் யோசித்துச்செய்வார்கள் என்றார்.

"உம்முடைய பக்கத்து வீட்டுப் பெண்ணைக் கேட்டு முடிவு செய்யலாமே என்றார்.

"நன்றாய்ச் சொன்னீர்கள்!— நானெங்கே, அவர்களெங்கே. எட்டாத நிலையாச்சே, கேலி செய்கிறீர்களா? என்றார்.

"உங்கள் பந்துதானே, குலம் கோத்திரம் விசாரிக்க வேண்டுமா எட்டிய நிலையாயிருந்தால் சம்மதிக்கலாமல்லவா வென்றார்.

"பொருத்தமில்லாத விஷயமாய்ப் பேசுகிறீர்கள். அவர்கள் கௌரவமென்ன! என்னுடைய— தட்டுக் கெட்டு தனித்த— யோக்கியதை யென்ன, அவர்களுக்குத்தக்க விடமில்லையா என்றும் சொன்னார்.

"நானே முன் நின்று பூர்த்தி செய்கிறதாயிருந்தால்—

"என் தங்களுக்கு இவ்வளவு சிரமம்.

கலியாணமென்றால் சந்தோஷமாய் நினைக்கக்கூடியதா யில்லை. மேலும் யோசித்து நிதானமாய் நடக்கவேண்டிய காரியம். முன் பின் பேச்சின்றி திடீரென, விவாக விஷயமாய்ப் பேசி நினைக்கவும் யோக்கியமற்ற யான் அவர்கள் வீட்டுப் பெண்ணை விரும்புவது எவ்வளவு மதியீனம் என்று தனக்குள் நினைத்து யோசிக்கலானார்.

"எனக்கென்ன சிரமம் நீங்கள் சந்தோஷமா யிருந்தால் எனக்குத் திருப்தி. பாலகிருஷ்ணம் பிள்ளை யவர்கள் தன் பெண்ணைத் தங்களுக்குக் கொடுக்கலாமென்ற அபிப்பிராயம் இருக்கும்போல் தோன்றுகிறதென்றார்.

சுந்தரம் பிள்ளை அருணாசலம் பிள்ளையின் வார்த்தையை யேற்றுக்கொள்ளவில்லை. மேலும் இம்மாதிரியான பேச்சுக்கு என்ன காரணமென்பது விளங்காதிருக்கிறது. இவர் ஒழிந்த நேரத்தில் அங்கயற் கண்ணு முதலியார் வீட்டில் தான் இருப்பார். அவர் வீட்டுக்கு 'இரட்டைக் கதவு' வீடு என்று பெயர். விசாலமான விடம். அங்கயற் கண்ணு முதலியார் மாத்திரமன்று அவர் குடும்பத்தார் அனைவரும் அன்புடையவர்கள்.

சுந்தரம் பிள்ளையைப்பற்றி என்ன சொல்லுகிறது; அவரை சரியென்று சொல்லும்படி செய்து பாலகிருஷ்ணம் பிள்ளையிடம் பதில் சொல்வதே தகுதியெனத் தீர்மானம் செய்தார். சுந்தரம் பிள்ளைக்கு குருத்துவமா யுள்ளவர் யாரெனப் பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு மேல மாசி வீதியிலிருக்கும் அங்கயற்கண்ணு முதலியார் சொற்படி நடக்கக்கூடியவர் என்று தெரியவந்தது. அன்றிரவு அவர் வீட்டுக்கு சுமார் 9-மணிக்குப் போய்ச் சேர்ந்தார். அப்பொழுது பழனியப்ப முதலியாரும் செவந்திநாத பிள்ளையும் பேசிக் கொண்டிருந்தார்கள். நமது செவந்திநாத பிள்ளையை படிப்போர் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். வெளி வேஷக்காரர் தான் காரியக்கட்டி. சொல்லுக்குச் சொல் சிரித்துப் பேசுவார். சூது வாதறியாத மனிதர்களை மயக்கி விடுவார். வெற்றிலைபாக்கு புகையிலை இவைதான் பக்கத்துணை. உற்சாகமாய்ப் பேசுவார். பம்பாய் கல்பாதேவி ரஸ்தாவில் 5, 6 வீதிகள் சந்திக்கிற விடமிருக்கிறது. அதற்கு பைதூனி என்று பெயர். வண்டிகளும் ஜனங்களும் குவிந்திருப்பதாகவே தோற்றும். ஒருநாள் இருவர் அகப்பட்டுக் கொண்டார் மோட்டார் வண்டி சாய்ந்து விட்டது. தாயுங் குழந்தையும்—என்று சொல்லிவிட்டு புகையிலை எச்சிலைத் துப்புவதற்குப்போவார். திரும்புவதற்கு பத்து நிமிஷம் செல்லும். அதுவரை வெகு ஆவலோடு அவரை எதிர்பார்த்திருக்கும்படி செய்துவிடுவார். போதுமான செல்

வமிருக்கிறது. இளம்பிராயம். தெரிந்தவரைக்கண்டால் குனிந்து தான் கும்பிடுவார். கொஞ்சம் பல்லையுங் காட்டிக் கொள்வார். க்ஷேமங்களைவிசாரித்து அன்புபாராட்டுவதில் மகாதீரர். சொல்லில் தேனொழுகப்பேசிக் கொண்டிருந்தார். அருணாசலம் பிள்ளை உருவத்தில் கனத்து பார்க்க யோக்கியமாய்த் தோற்றியதினால் செவந்திநாத பிள்ளை பேச்சை நிறுத்தி விட்டார். வந்தவருக்கு எல்லோரும் கை கூப்ப அவரும் நமஸ்கரிக்க உட்காருங்கள் என்றார் முதலியார். ஒரு விஷயம் தனித்துப் பேசவேண்டும் என்று சொல்ல முதலியாரும் பிள்ளையும் மெத்தைக்குச் சென்றார்கள். செவந்திநாத பிள்ளை சபை கலைந்து விட்டதென்று சொல்லத் தேவையில்லை.

அருணாசலம்பிள்ளை விவாகவிஷயமாய்ப் பேசினார். இருவர் பேச்சுக்கும் தாரதம்மிய முண்டு. பாலகிருஷ்ணம் பிள்ளை எந்த வகையில் விரும்பி தன் புத்திரியை சுந்தரத்துக்குக் கொடுக்க யோசித்திருக்கிறார் என்று முதலியார் கேட்டார். இது சரியான கேள்வி. கேட்க வேண்டியதும் அவசியம்தானே. பிள்ளையவர்கள் திகைத்துப் போனார். என்றாலும் அவர் சொல்லுகிறார்:— சுந்தரம் பிள்ளை ஏழை யென்பது தெரியும். புத்திசாலி, நற்காலம் வந்துவிட்டது. நமது எண்ணத்திலென்ன இருக்கிறது. கடவுளின் சங்கல்பம் உன்னத நிலைக்கும் கொண்டு போகும், அவர்கள் வீட்டில் எல்லோருக்கும் சம்மதமே. அதற்கு முதலியார் சொல்லுகிறார், அவர் குடும்பத்தைப் பற்றி எனக்கும் தெரியும்; ஆனால் பெரிய பணக்கார மாப்பிள்ளையாகத் தேடிக் கொண்டிருந்தவர் திடீரென்று பரம ஏழையான சுந்தரத்தை விரும்புவது ஆச்சரியமா யிருக்கிறதென்றார்.

அது விஷயம் எனக்கும் விளங்கவில்லையானாலும், சுந்தரத்துக்கு தமது பெண்ணைக் கொடுத்துவிட உறுதியா யிருக்கிறார் என்றார் அருணாசலம் பிள்ளை. அதற்கு முதலியார் சொல்லுகிறார்— அப்படிச் செய்வதைப்பற்றி எனக்கு மிகுந்த சந்தோஷமே என்றார்.

தாங்கள் சுந்தரம் பிள்ளைக்குச் சொல்லி சம்மதிக்கச் செய்ய வேண்டியது தங்கள் கடமை யென்றார் அருணாசலம் பிள்ளை.

வனுவில் கிடைப்பதை வேண்டாமென்று சொல்லுவானு—சம்மதிப்பான். சாப்பிடப் போயிருக்கிறான். சற்று நேரத்துக்கெல்லாம் இங்கே வருவான். நான் சொல்லுகிறேன் என்று முதலியார் சொன்னார்.

நான் நேரில் சொன்னதற்கு, ஜாடையாய்த் தள்ளிவிட்டார். ஆகையால் தாங்கள் சொல்லி சம்மதிக்கச் செய்யுங்கள். நான் நாளை காலை வருகிறேன் என்று விடைபெற்றுச் சென்றார்.

அருணாசலம் பிள்ளை வெளியே சென்றதும் முதலியார் சாப்பிடச் சென்றார். ஒரு பக்கத்தில் சோமசுந்தரமும், மறுபக்கம் அகிலாண்டமும், ஆக இவ்விரு குழந்தைகளும் எதிரில் பழனியப்ப முதலியாரும் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

சுந்தரத்தின் எதிர்பாராத அதிர்ஷ்டத்தை என்னென்று சொல்ல. பாவம்! கஷ்டப்பட்டாலும் சுகமானவிடம், நல்ல பெண் என்றார். இப்படிச் சொல்லும்போது அகிலாண்டம், என்ன அப்பா! அண்ணாச்சிக்குக் கலியாணமா? என்று கேட்டது. ஆமா! கோமதியைக் கொடுக்கிறேன் என்று தகப்பனார் சொல்லியனுப்பியிருக்கிறார். என்றார்.

இதைக் கேட்டதும் அகிலாண்டத்துக்குண்டான சந்தோஷத்துக்கு ஒரு எல்லையேயில்லை. அப்பா அண்ணாச்சிக்கு கலியாணமா! கலியாணமா! என்று சொல்லிச் சொல்லி உடல் பூரித்தது. என்னடி, அண்ணாச்சிக்குக்கலியாண மென்றால் உனக்கேன் இவ்வளவு சந்தோஷம். அந்தக் குழந்தை அகிலாண்டம் சொல்லுகிறது. இன்று மத்தியானம் பொம்மைக் கலியாணம் நடத்தினேன். அப்போ எதற்காகப் பொம்மைக் கலியாணமென்று விளையாடுகிறாய் என்று அண்ணாச்சி கேட்டது—அதற்கு நான் சொன்னேன் எட்டு நாளைக்குள் உனக்கு கலியாணம் நடக்கப்போகிறது. அதற்காக விளையாடுகிறேன் என்று சொல்லிப்போட்டு, உன் கலியாணத்தில் எனக்கு ஒரு பட்டணம் பயிண்டு பாவாடை வாங்கித் தருவாயாவென்றேன். அதற்கு அண்ணாச்சி, பட்டணத்துக்கு இன்று பழனி போகிறான் அவனிடம் சொல்லிவிடுகிறேன் என்று சொல்லி யிருக்குது என்றாள். இப்படிச்

சொல்லி முடிந்ததும், தாயார் சொல்லுகிறாள்—இந்தப் பெண் திடுக்குண்ணு ஏதாவது சொன்னால் பலிக்கும், எனக்குத் தெரியும் என்றாள்.

உடனே பழனியப்ப முதலியார் சொல்லுகிறார்--அப்படித்தான் அப்படித்தான் அதிர்ஷ்டம் வரும். அவர் நல்லகுணம், அவருக்கு நல்ல இடம் வாய்க்கும், கஷ்டம் பறந்துவிட்டது. இனி அண்ணாச்சிபாடு யோகந்தான் என்று வெகு உற்சாகமாய்ச் சிரித்துக்கொண்டு சொன்னார். இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும்போதே சுந்தரம் பிள்ளையும் வந்து சேர்ந்தார். வாசற்படிக்கருகில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள். பல்லெல்லாம் போய்விட்டது. மருந்துக்கும் ஒரு கருப்பு ரோமங்கூடக் கிடையாது. பாட்டி சொல்லுகிறாள். வந்தியா-சுந்தரம், உனக்கு ஆயிசு நூறு. ஒஞ்சங்கதிதான் பேசுதாவ என்றாள். அகிலாண்டம், அண்ணாச்சியா வென்று நகைத்தாள். எல்லோருமே அவரைப் பார்க்க, சந்தோஷ முண்டாயிற்று. சுந்தரம் பிள்ளை சொல்லுகிறார்—என்ன இன்றைக்கு எல்லோரும் குதூகலமாயிருக்கிறீர்கள். என்ன விசேஷமென்றார்; அவசரப்பட்ட பழனியப்ப முதலியார், 'உங்களுக்கு அதில் முழுப்பங்கு' என்றார். அகிலாண்டம்—அண்ணாச்சி—பயிண்டு பாவாடை என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். இவர்களின் குதூகலத்துக்குக் காரணம் சற்றே விளங்கிற்று.

அங்கயற்கண்ணு முதலியார் வார்த்தைகள் நிதானித்து திருத்திவருவது போலிருக்கும். பேசுவதில் அனாவசியமான வார்த்தையிராது. கேலிப்பேச்சு அவரிடம் கிடையாது. வார்த்தையெப்படியோ அப்படியே நேரத்துக்கும் விலைமதிப்புண்டு. அதாவது காலத்தை வீண் போக்குவது கிடையாது. சாப்பிடும் போது மற்றவர் பேச்சு அதிகப்பட்டு விட்டதால் அவர் அதைக்கேட்டுக் கொண்டிருந்தார். சாப்பாடாயிற்று. எல்லோரும் நீண்ட முன் ஆலில் பாய் விரித்து உட்கார்ந்தார்கள். முதலியார் சாய்மான நாற்காலியிலிருந்தார். முதலியார் வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டே சொல்லுகிறார்:—சுந்தரம் உனக்கு கலியாணம் சமீபிக்கிறது போலிருக்கிறது. பாலகிருஷ்ணம் பிள்ளை தமது பெண்ணைக்

கொடுக்க எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாராம் என்றார். அதற்கு சுந்தரம்பிள்ளை சொல்லுகிறார்,—அருணாசலம் பிள்ளை யவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். எனக்கே ஆச்சரியமா யிருந்ததால் கேலிக்கு சொல்லுகிறார் என்றெண்ணினே னென்றார்.

எனக்கும் அவர்தான் சொன்னார். ஆனால் அவர் கேலி பேசுகிறவரல்ல என்றாலும் உனக்கு அவர் பெண் கொடுக்கிறேனென்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். சென்ற மாதம் சிதம்பரத்திலிருந்து தாசில்தார் குஞ்சிதபாதம்பிள்ளை வந்து பெண் கேட்டார். இல்லையென்று பெரிய இடம் பார்க்கிறாரென்று கேள்விப் பட்டேன். உன்னுடைய பூர்வ புண்ணியம் அவரை மயக்கிவிட்டது போலிருக்கிறது. உனக்கு ஏதாவது தடையுண்டோ என்று கேட்டார் முதலியார். அதற்கு சுந்தரம் பிள்ளை சொல்லுகிறார்:—எனக்கென்ன தடையிருக்கிறது. அப்பேர்ப்பட்ட இடம் கிடைத்தால் தவப்பயன் தான் என்றார். இவ்வளவு தான் பேச்சு நடந்தது. சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு எல்லோரும் நித்திரைக்குச் சென்றார்கள். மறு நாட்காலையில் அருணாசலம் பிள்ளை வந்து விசாரித்தார். சுந்தரத்துக்குச் சம்மதம் தான் என்றார். அருணாசலம் பிள்ளைக்குச் சந்தோஷமாயிற்று. முதலியாரிடம் விடை பெற்றுக் கொண்டு பாலகிருஷ்ணம் பிள்ளை வீட்டுக்குச் சென்றார். அப்பொழுது தான் அவர் பெரிய ஆலிலுள்ள ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு உப்புமாவு சாப்பிட்டுவிட்டு இரண்டு வெள்ளி டம்ளரில் காப்பியை ஆற்றிக்கொண்டிருந்தார். வாருங்கள் வாருங்கள் தங்களுக்காகத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். பழமா காயா சொல்லுங்கள் என்றார். பழுத்துவிட்டது என்று புன்னகையுடன் அருணாசலம் பிள்ளை சொன்னார். பழுத்துவிட்டதென்றால் பழுக்கக் கஷ்டமாயிருந்ததோ வென்றார். ஆஹா அதையென்னென்று சொல்வேன் என்றார் பிள்ளை. அதற்கு பாலகிருஷ்ணம் பிள்ளை சொல்லுகிறார்- 'எனக்குத் தெரியுமே அவர் லேசில் சம்மதிக்கமாட்டார். நீங்கள் கஷ்டப்பட்டுத் தான் அவர் ஒப்புக் கொண்டிருக்க வேண்டும். சரி சந்தோஷம் பலகாரம் சாப்பிடுங்கள் என்று உபசரித்தார். அவரும் சாப்பிட்டார். முகூர்த்தத்துக்கு ஏற்பாடாக வேண்டும் என்று அருணாசலம் பிள்ளை சொன்னார்.

இவ்விடம் விவாகத்தைப் பற்றி விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை ஏனெனில் பாலகிருஷ்ணம் பிள்ளை மிகுந்த செல்வாக்குடையவர். விவாகம் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

சௌந்தரராஜன் குறுக்கிட்டுச் சொல்லுகிறார்:—என்ன ஸார் கல்யாணத்தைச் சுருக்கி விட்டீர்களே என்றார். அதற்கு நான் சொன்னேன்— பணக்காரர் வீட்டு விவாக மஹோத்ஸவத்தைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? என்று கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தேன்.

விவாகம் முடிந்தது. சுந்தரம் பிள்ளை மாப்பிள்ளையாய் விட்டார். இரண்டு மாதங்கழித்து அவசரமாய் ரூ 500 வேண்டியதாயிருக்க புத்திரி கோமதியையழைத்து மாப்பிள்ளையிடம் ரூ 500 கேள், மத்தியானம் மதராஸ் பாங்கிலிருந்து பிறகு கொடுத்துவிடலாம் என்றார். அந்தப்பெண்ணும் தனது கணவனிடம் கேட்க அதற்கவர் என்னிடம் பணமேது—காசேது என்றார். இதை பிதாவிடம் தெரிவித்தாள். பாலகிருஷ்ணம் பிள்ளை சொல்லுகிறார்—அவர் வீட்டில் ஒருநாள் இரவெல்லாம் ரூபாயைத் தட்டித் தட்டி எண்ணி வைத்துக் கொண்டிருந்தார் எனக்குத் தெரியும் என்று சொல்லு பாங்குக்குப் போய் பிறகு கொண்டுவந்து கொடுத்து விடுகிறேன் என்றார். இதையும் தெரிவித்தாள். இப்பொழுது தான் சுந்தரம் பிள்ளைக்கு உண்மை விளங்கியது ஆச்சரியப்பட்டு விட்டார். திடீரெனக் கேட்டால் எப்படி கொடுக்க முடியுமென்று பதிலளித்துவிட்டார். ரகஸ்யத்தை வெளி விடாமல் கௌரவமாய் நடந்து கொண்டார் கதையும் முடிந்தது.

உடனே ஒருவர் நேரமாய் விட்டது என்றார். மற்றொருவர் போகலாமென எழுந்தார். கடைசியாக எல்லோரும் வீட்டுக்குச் சென்றோம். நாளைக்கு 5 மணிக்கு கடற்கரை என்றார் ஒருவர்.

(முற்றும்)

தமிழ் பாஷையில் ஒரு ஆயுதம்.

இஃது ஓர் அருந்தமிழ் மொழியின் அற்புத வெழுத்து. உச்சி மேற் புகழும் நச்சினர்க்கினியர் முதலிய சங்கப் புலவர்களால் புகழ்ந்து கையாளப் பட்ட தொல் காப்பியத்தின் ஆசிரியராகிய தொல் காப்பியராலேயும் எடுத்துரைக்கமுடியாததை யானெடுத்துரைப்பது பற்றி பிழை மன்னிப் பாம்.

இவ்வெழுத்தைப் பற்றி திருவாளர் மாணிக்க நாயக்கரவர்கள் நம் சைவ சித்தாந்த சாத்திரத்தின்படியும், தொன்மை இலக்கண நூல் வழிப் படியும் இதன் பெருமையை ஓதியுள்ளார். இது யாவரு மறிந்தது தானே.

இவ்வெழுத்து இம்மூப்புள்ளி காற்றோடு இயைந்து நிற்கும். அது சுவா சம் வெளி வருங்கால் நீரிலிருந்து கொப்பளம் வருவது போல் மூன்று இடங் களிலிருந்துப் புறப்பட்டு சுவாசக் காற்றுப்போயடிக்கும் இடத்தில் ஒன்றுசேர் கிறது. அப்பொழுது அது முப்புள்ளி யுடைத்து. அது உச்சரிக் கற்பாலதெ ன்று வெளியாகி யெங்கும் நிறைந்து இருக்கின்ற எம் பெருமானிடம் மும் மூர்த்திகள் தோன்றி எப்படி படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத் தொழில்களும் நடைபெறுகின்றனவோ அவ்விதமே இம் முப்புள்ளிகளும் தோன்றி, ஓர் கருவியாகி, எல்லா மொழிகளையும் உண்டு பண்ணுவதற்கு உதவுகின்றன. இத்துணைச் சிறப்பு உச்சிமேற் புகழும் நச்சினார்க்கினியர் முதலியசங்கப் புலவர்களாலும் முருகக் கடவுள், அகத்திமார் முதலியவர் களாலும் முக்கண்ணுடைய பெருமானாலும் மாசறவோதி வளர்த்து வந்த உயர்தனிச் செம்மொழியாம் எம் தமிழுக்கே உரித்தன்றி யேனைய வற்றிற்கு உரிதல்ல. தமிழ் மணங் கமழ்க. அங்கிலம் வடமொழி, மற்றும் சில, கற் றோர் சிறியர் பலர் (ஃதெ) (Father) இன்னும் தமிழில் வரி வடிவமில்லாததை சுளுக்கு என் செய்வது. அதனல் அது குறைவு படற்பாலது என்பார். அப் படியாயின் ஷ பிறந்தவிடம் யாங்கே. யூகரம் அன்றி ஷகரம் உதித்தது. (Father) என்பதற்குத் தமிழில் வேறு சொற்கள் உளவென்றும் அம்மாதிரி சப்தம் இல்லையே யென்பார்.

ஃ வாதர் இதை உச்சரித்தால் தெளிவுக்கும், ஹ தமிழில் இல்லை யென்றதை அறஞ் சண்முகனர் அவர்கள் முகம் என்பது தென்மொழியே வடமொழியல்ல வென்று நாட்டினர். அக்பர் அரசாட்சியில் ஏற்படுத்திய மொழிக்கு ஃ இவ் வெழுத்தே கருவி யென்பாருமுளர். அஃது, எஃகு முத லியவைகளில் தானே பிறப்பிடல் காண்க. சோ. சங்கரலிங்க முதலியார்.

225564

இல்ட்சுமி காந்தன்

(முன் தொடர்ச்சி)

இரண்டாம் அதிகாரம்.

பம்பாய்க்குப் புறப்பட்டேன். பம்பாய் என்பது பொதுப் படையான பெயர். மெட்ராஸ்—சென்னை—பட்டணம்—என்பது போல சென்னையில், மதராஸ் பீச்சு, மதராஸ்போர்ட், மதராஸ் பார்க்கு, எக்மோர் என்ற தென் இந்தியா ரெயில்வே கம்பெனியின் ஸ்டேஷன்கள். இதைப்போல பம்பாயிலும் பல ஸ்டேஷன்கள். பம்பாயில் ஒவ்வொரு ரெயில்வே கம்பெனிக்கும் எல்லை ஸ்டேஷன் உண்டு. அந்த விடத்துக்குத்தான் டிக்கட்டும் கிடைக்கும். ஜி. ஐ. பி கம்பெனி ஒன்று, பி. பி. அண்டு ஸி. ஐ ரெயில்வே கம்பெனிக ளிரண்டும் ஊருக்குள் பல ஸ்டேஷன்களைவைத்து இரண்டு மூன்று நிமிஷத்துக்கொரு முறை வண்டி வந்து கொண்டும் போய்க்கொண்டு மிருக்கும். பட்டணத்தில் டிராம் வண்டிக்குக் காத்திருப்பதுபோல் காத்திருக்க வேண்டியதில்லை. ரெயில்போக ஒரு வழி, வர ஒருவழி, இரண்டும் அடுத்தடுத்தே இருக்கின்றன. ஸ்டேஷன் இருபக்க மும் கட்டப்பட்டிருக்கிறது. நான் கிராண்ட் ரோட் என்ற ஸ்டேஷ னில் வந்திறங்கினேன். ஒரு நண்பருக்கு நான் பம்பாய் வருவதாய் எழுதியிருந்தேன். அவர் பெயர் ராஜா ஹரிச்சந்திர உதய சங்கர். ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் "பார்வதி மேன்ஷன்' என்றதோர் பெரிய கட்டடமிருக்கிறது. அதில் சுமார் 150-க்கு மேலான குடி கள்—குடும்பங்கள் ,வாசஞ்செய்கிறார்கள். இரண்டு அறைகள் உள்ள விடத்துக்கு ரூ 12 வாடகை. என்னை அழைத்துக்கொண்டு சென்றார். இரண்டு நிமிஷத்தில் வீடு வந்து சேர்ந்தோம். அவர் 4-வது மெத்தையில் குடியிருக்கிறார். அவர்களுடைய ஆகாரம்

அநேகமாய் சென்னை வாசிகளுக்குப் பொருந்தாது. பதார்த்தங்கள் தயார் செய்வதில் புளிப்பே இராது. விசேஷமாய் தித்திப்பு பதார்த்தம் தான் அதிகம். அங்குள்ளவர்கள் விருந்து செய்வதென்றால் லட்டு, பூரி, ஹல்வா இவைகள் தான் பிரதானம். கல்பாதேவி ரோட்டிலிருக்கும் பிராஞ்சு கம்பெனிக்குப் போய்ச் சேர்ந்தேன். எனக்கிட்ட வேலையை செவ்வனே செய்து வந்தேன். பிறர் நோக்க மகிழ்ந்து நலம் செய்வதே எனது கொள்கை. பாலக்காட்டு புலராமய்யர் ஓட்டலில் தங்கி வந்தேன். இந்த ஓட்டல் பம்பாய் கோட்டையில் இருக்கிறது. முதலாவது போகும்போது அநேகர் வெள்ளைக்காரர் தொப்பியை அணிந்துகொண்டிருந்தனர். இங்கே இதர ஜனங்களுக்கும் வசதியுண்டோவென சந்தேகம் உண்டாயிற்று. என்னை அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுபோன மிஸ்டர் மகாலிங்கய்யரிடம் கேட்டேன். பிறகு சொல்லுகிறேன் என்றார். ஒரு சிறிய மேஜையின்மேல் மெழுகு துணியைப்போட்டு அதில் அன்னம், காய்பதார்த்தம் வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அந்த ஓட்டலில் எல்லாம் புதுமாதிரியான காட்சியாய் நாகரீகமாயிருந்தது. வைதீகம் தலைகாட்ட வழியில்லை. நாங்களும் ஆகாரம் செய்து கொண்டு வெளி வந்தோம்.

மிஸ்டர் மகாலிங்கய்யர் சொல்லுகிறார்—நம்மவூர்க்காரர் சிலர் பம்பாய் கல்கத்தா வந்து ஆறுமாதம் ஒருவருஷமிருந்து விட்டால் எல்லாம் புது மாதிரியாய், வெள்ளைக்காரர்போல மாறிவிடுகிறார்கள். புதிதாய்ப் பார்க்கிறவர்களுக்கு ஆச்சரியம் தான் என்றார்.

நானும் புது மனிதனாயிருப்பதை நினைக்கவில்லை. சைனா சில்க் கோட், கால் சட்டை அணிந்திருக்கிறேன். தலை ரோமத்தை கிராப் செய்து நாகரீகமாய் வைத்துக் கொண்டேன். உடைக்கே—சுத்தமான நாகரீக தடபுடலுக்கே—மரியாதை, எவ்வளவு என்று கவனித்து வருகிறேன். நடைக்குத் தகுந்த உடை. உடைக்குத் தகுந்த பாவனை. பாவனைக்குத்தக்க நறுக்கான பேச்சு. பேச்சுக்குத் தகுந்த உத்தியோகம். பம்பாயில் எனக்கென்ன வேலை கொடுக்கப் போகிறார்கள் என்பது தெரியாது. ஆனால் கம்பனியில் எந்த வேலை செய்யச்சொன்னாலும் தயார். மானேஜருக்கு உதவியாயிருந்தேன்.

எல்லா வேலைகளையும் மேல்பார்த்துக்கொண்டு வந்தேன், பம்பாய் நகரைப்பற்றி யெழுதுவதாயின் அதிக விரிவாகும். சந்தர்ப்பம் வரும்போது தெரிவிக்கிறேன்.

ஜப்பான் சரக்குகளுக்கு ஆர்டர் வாங்க என்னை ஏற்படுத்தினார்கள்.

இந்த வகையில், முற்போக்கான அனுபவம் ஏற்பட்டது. எங்களுக்கு ஏற்பட்ட லாபம் ஒரு புறமிருக்க, வியாபாரிகளுக்கு தக்க நயம் கிடைக்கும் விதம் யோசித்து கால அளவு முதலானவைகளையும் கவனித்துச் சொல்லி விசேஷமான ஆர்டர்கள் வாங்கி அனுப்பி வந்தேன். சம்பளம் ரூ 100 கொடுத்து வந்தார்கள். இவ்விதம் ஆறுமாதங்கள் சென்றன. என்றாலும் நகரை முற்றிலும் பார்த்ததாகச் சொல்லமுடியாது. நானும் பம்பாய் பார்த்தேன் என்பது சமுத்திரத்தின் ஒரு கரையில் ஸ்நானம் செய்துவிட்டு சமுத்திர ஸ்நானம் செய்தேன் என்பதொக்கும். பம்பாய் இப்பிரபஞ்சத்தில் வர்த்தகத்தில் முதன்மையானதென்று சொல்லப்படுகிறது.

எனக்கு வீட்டுக் கவலையே கிடையாது. அவ்விடத்து சங்கதியும் தெரியாது. நான் அதைப்பற்றி சிந்திப்பதும் கிடையாது. நினைத்தால் கலக்கமும் துக்கமும் என்ற இருள்மேகம் மூடிக்கொள்ளும். துக்கம் வந்தால் ஊக்கம் கொலையும். நிரந்தர வாழ்வை விரும்புவதைத் தவிர, மாறிக் கொண்டிருக்கும் இவ்வுலக சுகதுக்கத்தை விரும்புவதில்லை. என்றாலும் வருவது வந்தே தீரும். ஆனால் முயற்சியில் பின் வாங்குவதில்லை. எனது எஜமானன் என்னை தன் பிள்ளை போல் பாவித்து அன்பு செலுத்தினார். என் உள்ளத்தில் உள்ளதை கொட்டிவிட்டேன். எஜமானன் கல்கத்தாவுக்கு வரும்படி எழுதிவிட்டார். மறுநாளே கல்கத்தாவுக்கு திரும்பி விட்டேன்.

நான் வேலைக்கு அமர்ந்த பிறகு அவருக்கு பலவிதமாக செல்வம் அதிரித்தது. மூன்று மாதம் கல்கத்தாவிலிருந்தேன். சம்பளம் ரூ. 125 கொடுத்து வந்தார்கள். மாதம் எனக்கு செலவானது போக பாக்கி கணக்கில் வரவு வைத்து விட்டேன்.

எஜமானன் ஒருநாள் என்னை அவருடைய பங்களாவுக்கு அழைத்துக்கொண்டு போனார். எதற்காக வென்று எனக்குத் தெரியவில்லை. என்னிடத்தில் ஒரு புதிய சக்தி—ஊக்கம் வளர்ந்து கொண்டிருக்கிறது. வியாபாரத்தில் எனது எண்ணம் பரவியிருக்கிறது. எஜமானருடைய பங்களாவுக்குப் போய்ச்சேர்ந்தோம். வியாபாரத்தைப் பற்றி பலவாறாகப் பேசிக்கொண்டிருந்தோம். பிறகு எனது குடும்பவிஷயத்தைப்பற்றிக் கேட்டார். முற்றிலும் சொன்னேன். கடைசியாக எனது உள்ளக்கருத்தையும் வெளியிட்டேன்.

அதாவது எனது பிதாவைப்போல், அதே தெருவில் அழகான வீடு கட்டி, தக்க திரவியத்தோடும் அந்தஸ்தோடும் இருக்கவேண்டும். அவ்விதம் அனுகூலப்படும்வரை எவ்வளவு காலமானாலும் ஊருக்குத் திரும்புவதில்லை என்ற தீர்மானத்தோடு வந்திருக்கிறேன் என்று சொன்னேன். பிறகு எனது பிதாவின் விலாசத்தையும், அவர் செய்யும் தொழில் முதலான விபரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். அதன் பிறகு ஜப்பானுக்குப் போகிறாயா, நமது கம்பெனியில் ஒருவர் தேவையாயிருக்கிறது என்று கேட்டார். தங்கள் மனம்போல் நடக்க சித்தமாயிருக்கிறேன் என்றேன். அவருடைய குமாரனையும் என்னையும் அனுப்ப, ஜப்பானிலுள்ள யோக்கோஹாமா என்ற நகர்போய்ச் சேர்ந்தோம். வங்காளிகளை சாதாரணமாய் பாபு என்று சொல்லி அழைக்கிற வழக்கம். எஜமானனுடைய புத்திரனை குமார் என்று கல்கத்தாவில் கூப்பிடுகிறவழக்கம். நாங்கள் சமத்துவ வயதுடையவரானதாலும், செல்வச் செருக்கில்லாததாலும், என்னை பிரதர் என்று கூப்பிடுவார். நானும் அவரை பிரதர் என்று கூப்பிடுவேன். எங்களுக்குள் அன்னியோன்னியமான சிநேகமுண்டாயிற்று. நாங்கள் இருவரும் ஒற்றுமையாய்த் தொழிலை நடத்த ஆரம்பித்தோம். அவ்விடத்திய ஏஜண்டுக்கு எங்களிடத்திலிருந்த அன்பு உண்டாயிற்று. பம்பாய், கல்கத்தா சென்னை முதலான இடங்களில் விற்பனையாகக் கூடிய சாமான்களுக்கு மாதிரி சாமான்கள் அனுப்பியும், மேலும் ஜப்பான் நூல் ரகங்களை பம்பாய், கல்கத்தா முதலான இடங்களில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தோம். மற்ற வியாபாரங்களைவிட,

நாங்கள் புதிதாய் ஆரம்பம் செய்த நூல் வியாபாரத்தில் வாங்குவதிலும் விற்பதிலும் விசேஷ லாபம் வரத்தலைப்பட்டது. ஜப்பானில் மூன்று வருஷமிருக்கிறதாக ஒப்பந்தம் செய்து வந்தேன். முதல் வருஷக் கணக்கில் இரண்டு லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது. இரண்டாம் வருஷ முதலிலிருந்து எனக்கு மாதம் ரூ 250 சம்பளமென்று தீர்மானிக்கப்பட்டது.

எனது நண்பர் ஸ்ரீராமாநுஜலு நாயுடுகாருக்கு அவ்வப்போது நிகழ்ந்தவற்றை எழுதி வந்தேன்.

மூன்றாம் அதிகாரம்.

ஸ்ரீராமாநுஜலு நாயுடு எனது நண்பர் என்றும் அவரிடமிருந்துதான் எனக்குக் கடிதம் கிடைக்குமென்றும் எனது எஜமானனுக்குத் தெரியும். அவர் காசி ராமேஸ்வர யாத்திரையாகச் சென்றாரென்று தெரியவந்தது. திருச்சிராப்பள்ளி, ஸ்ரீ ரங்கஸ்தலத்தைப்பற்றி சிலாக்கியமாய்ச் சொல்லியிருக்கிறேன். ஒருவேளை அங்கேயும் போய் வருவாரென் றெண்ணினேன். அப்படியே போய் ஒருவாரமிருந்து, எனது பிதா வீட்டுக்கெதிரில் உள்ள இரண்டு வீடுகளை ரூ 13,000க்கு வாங்கினார். அவ்வூரில் அநேக பெரி வீடுகளைப் பார்வையிட்டு, புது மாதிரியாக மெத்தை வைத்துக் கட்டினார். சுமார் ஆறு மாதமாக வேலை நடந்துவந்தது. சிலர் பங்களாவென்றும் சத்திரம் என்றும், சேட்டுகள் வியாபாரிகள் இப்படித்தான் கட்டுகிற வழக்கமென்றும் பல மாதிரியாகப் பேசிக்கொண்டார்கள். வீட்டைக்கட்டி முடித்து அதற்கான தட்டுமுட்டு சாமான்களையும் வாங்கி வைத்து அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தது. இந்த விஷயம் எனக்கு யாதொன்றும் தெரியவே தெரியாது. எனது நண்பருக்கும் தெரிய நியாயமில்லை. திருச்சியில் அந்த வீடு அற்புதக் காட்சியாய்த் தானிருந்தது. வீட்டைக் கட்டுவதில் சுமார் அறுபதாயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார் என்றும் தெரியவந்தது.

(இன்னும் வரும்)

பிரபஞ்ச வர்த்தமானம்

ஒரு மாசச் சரக்கு.

லீடர் பத்திரிகையின் ஆசிரியரும் சென்னை மாகாண வாசியுமான மிஸ்டர் ஸி. ஓய். சிந்தாமணி, இந்தியா மந்திரி சபையின் அங்கத்தினர் பதவியை ஏற்றுக் கொள்ள இஷ்டமுண்டாவென்று கேட்கப்பட்டிருக்கின்றாரென அலகபாத்தில் வெளியாகும் டெமொகிராட் பத்திரிகை கூறுகின்றது.

பம்பாய் செப்டம்பர் 27 லார்டு ஸின்ஹா பம்பாய்க்கு வந்து சேர்ந்தவுடன் அவர் பீஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களின் கவர்னராக நியமிக்கப்பட்டிருப்பதால் குண்டு மரியாதைகள் செய்யப்பட்டன. பம்பாயில் அவர் தங்கியிருந்தது சொற்ப நேரமாயினும் ஸர். டின்ஷா வாச்சாவைக் கண்டு பேசினார்.

நாகபுரி காங்கிரஸுக்கு அக்கிராசனரை நியமிக்கும் விஷயத்தைப்பற்றி வங்காளக் காங்கிரஸ் கமிட்டியார் 25-ந் தேதி ஒரு கூட்டம் கூடியோசித்தனர். அதில் மெஸர்ஸ். பி. சக்கிரவர்த்தி, காந்தி, விஜயராகவாச்சாரி, அரவிந்தகோஷ், ஸி. ஆர். தாஸ் ஆகிய இவர்களின் பெயர்கள் அக்கிராஸனப்பதவிக்குக் குறிப்பிடப்பட்டன.

அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டியாரின் கூட்டம் நடைபெற்று முடிந்த பின் ஒத்துழையாமையைப்பற்றி யோசிக்கலாமென்றும் முடிவு செய்யப்பட்டது.

லண்டன், செப்டம்பர் 22—ஓல்ட்ஹாம் நெசவுச் சாலையிலுள்ள தொழிலாளர்கள் திடீரென்று வேலை நிறுத்தம் செய்தனர்; அதனால் 200 நெசவுச்சாலைகள் மூடப்பட்டன; 4000 பேர்கள் வேலையில்லாமல் சோம்பேறிகளாகத் திரிகிறார்கள்.

ஜெர்மனியிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்டு, 25 வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகளெல்லாம் கட்டாய ஊழியம் செய்தல் வேண்டுமென்ற ஓர் உத்திரவை ஜெர்மன் கவர்ன்மெண்டார் செய்திருக்கிறார்கள்.

ஸர் ரவீந்திரநாத் டாகூர் ஹாலந்து தேசத்தில் பொருளாதார விஷயங்களைப்பற்றிப் பல உபன்யாசங்களைச் செய்து வருகிறார். ஹேக் என்னுமிடத்தில் "கிழக்கும் மேற்கும் சந்திப்பதால் ஏற்படும் பலன்" என்பதுபற்றியும், ராட்டர்டாம் என்னுமிடத்தில் "எனது கல்வியைப்பற்றிய கொள்கைகள்" என்பதுபற்றியும் பிரசங்கித்தார்.

பிரஞ்சுக் குடியரசு தலைவராக மிஸ்டர் மில்லராண்டு தெரிந்தெடுக்கப்பட்டார்; அவர் அப்பதவியை ஏற்றுக் கொண்டார்.

ஸ்ரீ திலகரின் புத்திரர் ஸ்ரீதர பாலதிலகர் புனா காலேஜியில் பி. ஏ. வகுப்பில் வாசித்து வருகின்றார்; இக்காலேஜ் கவர்ன்மெண்டாரின் உதவியைப் பெறுகின்றமையின், விசேஷ காங்கிரஸில் தேசத்தினர் செய்த முடிவின்படி தாம் அக்கலாசாலையில் வாசித்தல் கூடாதாகையால் தமது பெயரை எடுத்துவிடும்படி காலேஜித் தலைவருக்கு எழுதிவிட்டார்.

லண்டன்-செப்டம்பர்-21—லார்டு ஸின்ஹாவை இந்தியா கவர்னராக நியமித்ததினால் காலியாகவிருக்கும் இந்திய உதவி மந்திரிஸ்தானத்திற்கு லார்டு லிட்டனென்பவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

22-ந் தேதி நடந்த பஞ்சாப் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் நாகபுரியில் நடக்கவிருக்கும் காங்கிரஸின் அக்கிராஸனப் பதவிக்கு ஸ்ரீ அரவிந்தகோஷின் பெயர் குறிப்பிடப்பட்டது. அவர் அக்கிராஸனம் வகிக்கச் சம்மதிக்காவிடின், பிரஹ்மஸ்ரீ ஸி. விஜயராகவாச்சாரியாவது, மிஸ்டர் ஸி. ஆர். தாஸாவது அக்கிராஸனம் வகிக்கவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

பாரிஸ்நகரில் எலியின் உபத்திரவம் மிகவும் அதிகமாயிருக்கின்றது; அதனால் பொருந்த நஷ்டங்கள் ஏற்படுகின்றன; ஆகையால் அவைகளை அழிக்கக் கவர்ன்மெண்டார் பல ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இவ்விஷயத்தில் ஜனங்களை உதவி செய்யவேண்டுமென்றும், எலியைக் கொல்பவர்கட்கு ஒரு எலிக்கு $2\frac{1}{2}$ பென்சு வீதம் பரிசு கொடுபடுமென்றும் கவர்ன்மெண்டார் அறிவித்திருக்கின்றார்கள்.

அமெரிக்காவிலுள்ள சுமார் 2 ஆயிரம் இந்தியத் தொழிலாளரைக் கைது செய்து இந்தியாவுக்கு அனுப்பிவிடப் போவதாக கிரானிகிள்" பத்திரிகைக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. ஜனநாயக ஆட்சி வன்மை பெற்றிருக்கும் அமெரிக்காவிலும் இம்மாதிரி நடப்பது துரதிர்ஷ்டமேயாகுமென்று அப்பத்திரிகை வருந்துகின்றது.

விருந்து.

1. பகைவராயிருப்பினும் விருந்தினர் வீட்டுக்கு வந்தால் அவரை மரியாதை செய்வது அத்தியாவசியமாகும், மரம் தன்னை வெட்டுகின்றவனுக்கும் நிழலைக் கொடுக்கின்றதே யன்றிக் குறுக்குவதில்லை.

2. வீட்டிற்கு வந்தவர் குழந்தையா யிருப்பினும், காளையா யிருப்பினும், கிழவராயிருப்பினும் அவர்க்கு மரியாதை செய்வது அவசியமாம்; ஏனெனின், யாவர்க்கும் விருந்தினர் குருவாவார்.

2. எந்த அதிதி எவனுடைய வீட்டிற்குள் நுழைந்து தனது விருப்பம் நிறைவேறாது திரும்பிச் செல்லுகின்றானோ அவன் வீட்டுக்காரனுடைய புண்ணியத்தைப் பெற்றுக் கொண்டு தன் பாவத்தை அவனுக்குக் கொடுத்து விட்டுப் போகின்றான்.

4. தாம் உயர்குலத் தோராகவும் வீட்டிற்கு வந்த அதிதியர் கீழ்க்குலத் தோ[illegible] மிருப்பினும், அதிதிக்குத் தகுந்தபடி மரியாதை செய்தல் வேண்டும்; ஏனெனின், அதிதிகள் ஸர்வ தேவ ஸ்வரூபிகளா யிருக்கின்றார்கள்.

5. அதிதி-அபவாதங் கூறுபவன் ஆகிய இருவரும் பந்துக்களாவர்; ஏனெனின், அபவாதங் கூறுகின்றவன் பாபத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றான்; அதிதியோ சுவர்க்கத்தை யளிக்கின்றான்.

5. மகாபலி மிகுதியாகக் கொடுத்தமையாலும்' துரியோதனன் அதிகக் கர்வத்தினாலும், இராவணன் அதிகக் கொண்டாட்டத்தாலும் துன்பத்தை யடைந்தனர். ஆதலின், எதிலும் மிதமாயிருத்தல் வேண்டும்.

7. அதிகப்பரியத்தினால் அவமானமும்,' அடிக்கடி பழகுவதால் அநாதரவும், ஏற்படுகின்றன. ஹிமாலய பருவதத்தில் வேட ஸ்திரீகள் சந்தனக் கட்டைகளை விறகுகளாக உபயோகிக்கின்றார்களல்லோ—நீ. நீதி.

விநோதச் செய்திகள்.

(சக்தி தாஸன் எழுதுகிறார்)

(1) மாயையைக் கொன்ற தாத்தா.

ஒரு கிழவர் மிகவும் வயதாய்ப் படுக்கையை விட்டு நகரக் கூட முடியாமற் கிடந்த சமயத்தில் தன்னுடைய பேரனைப் பார்த்துச் சொல்லுகிறார்:—"கேட்டாயா, குழந்தாய்? நான் பெரிய வேதாந்தி; சிவ பக்தன். மாயையை எரித்து விட்டேன். உலக பாசத்தைச் சுட்டுச் சாம்பராக்கி விட்டேன். எனக்கு எவ்வித பந்தமும் கிடையாது, எல்லா ஆசைகளையும் வெறுத்து விட்டேன். ஆனால் இந்த ஸ்திரீ ஆசை ஒன்றை மாத்திரம் வெறுக்க முடிய வில்லை; இழவு, சனியன்! என்று சொன்னார். இதைக் கேட்டு அவருடைய பேரன்:- "சரி; சரி; அடக்கும் பெண்ணாசை தீரவில்லை யென்றால் உமக்கு எந்த ஆசையுந் தீரவில்லை யென்று அர்த்தம். பெண்ணாசையொன்று மாத்திரம் இருந்தால் போதும். அதிலிருந்து மற்ற பந்தங்களத்தனையும் தவிர்க்க முடியாத வாறு தாமே விளையும்" என்று சொன்னான்.

(2) பட்டிக்காட்டு வர்த்தமானங்கள்.

ஒரு கிராமத்தான் மற்றொருவனிடம்:—"ஏனையா ஜெர்மனிக்கு எகிப்து தேசத்தார் ஸ்வராஜ்யம் கொடுத்து விட்டார்களாமே? மெய்தானா?" என்று கேட்டான். அதற்கு மற்றவன்:—"அட, போடா, மூடா, எகிப்துக்கு ஜர்மானிய தேசத்தார் ஸ்வராஜ்யம் கொடுத்தார்களாம். இந்தச் செய்தி சென்ற வாரம் பத்திரிகைகளில் கிடைத்தது. அதை உன்னிடம் யாரோ புரட்டிச் சொல்லி யிருக்கிறார்கள்." என்று திருத்திக் கொடுத்தான்.

ஆங்கிலேயர் எகிப்துக்கு ஸ்வராஜ்யம் கொடுத்துவிட்டதாகப் பத்திரிகைகளில் வந்த செய்தியை கிராமத்து ஜனங்கள் மேற்கண்டபடியெல்லாம் மாற்றிப் பேசிக் கொள்ளுகிறார்கள்!

(3) குறி கேட்கப்போன விவசாயி.

பட்டிக் காட்டு விவசாயி ஒருவன் பூசாரியிடம் போய் மழை எப்போது பெய்யுமென்று குறி சொல்லும்படி கேட்டான். அந்தப் பூசாரி தட தட வென்று மும்முரமாக உடுக்கை தட்டிக்கொண்டு பின்வருமாறு பாடத் தொடங்கினான்:—

“கேளப்பா, தம்பி, நொண்டி மாடனும் வீரனுந் துணையாகக் கேளப்பா, தம்பி, மழைக் குறி சொல்லக்கேள்.

அட, இன்றைக் காணாலும்,
நாளைக் காணாலும்,
நாளன்றைக் காணாலும்,
ஒரு—மாஸஞ் சென்றேனும்,
ஒரு—வருஷஞ் சென்றேனும்—தம்பி
என்றைக் காணாலும் மழை பெய்து தீருமடா!”

பூசாரி! உடல் வெயர்க்க இங்ஙனம் பாடி முடித்தவுடனே, அவன் இத்தனை சிரமப்பட்டுக் குறி சொல்லியதற்கு மிகவும் நன்றியுடையவனாய், அந்த மூட விவசாயி பூசாரிக்கு இரண்டு தேங்காய்களும் வெற்றிலை பாக்கும் கால் ரூபாயும் காணிக்கை செலுத்திவிட்டு மிகவும் பூரிப்புடன் வீடு போய்ச் சேர்ந்தான். வீட்டுக்குப் போனவுடன் அவன் மனைவி அவனை நோக்கி:—

“மழை விஷயமாகக் குறி கேட்கப் போனீரே? என்ன தெரிந்து கொண்டு வந்தீர்?” என்று கேட்டாள். விவசாயி பித்தனைப் போலே விழிக்கலானான். நெடுநேரம் யோசித்துப், யோசித்துப் பார்த்தான். கடைசியாகத் தான் புத்தி ஹீனத்தால் பூசாரியுடைய பாட்டிலும் குடு குடுப்பைச் சத்தத்திலும் மயங்கிப் போயி விஷயமொன்றுந் தெரிந்து கொள்ளாமலே மீண்டு வந்த செய்தி அவன் புத்திக் கெட்டிற்று. மனைவியிடம் ஒன்றும் மறுமொழி சொல்லாமல் உடனே எழுந்து போய்ப்பூசாரியிடம் கால் ரூபாயையும் தேங்காய்களையும் திருப்பிக் கொடுத்து விடும்படி கேட்டான்.

பூசாரியோ குறி சொன்ன கூலியைத் திரும்பக் கொடுக்க முடியாதென்றும், அது சாஸ்திரத்துக்கும் நெடுங்கால வழக்கத்துக்கும் ஒருங்கே விரோத மென்றும், இன்னும் தெளிவாகக் கேட்க இஷ்டமுண்டானால் மறுபடி கால்ரூபாயும் இரண்டு தேங்காய்களும் கொண்டு கொடுக்கும் பக்ஷத்தில் தான் நொண்டி ராமசாமியையும் வீரனையுங் கலந்து கொண்டு தெளிவாகக் குறி சொல்லக் கூடுமென்றும் தெரிவித்தான். அவன் வீட்டு வாயிலிலே நின்று விவசாயி மண்ணை வாரித் தூற்றி விட்டுத் தனதில்லம் போய்ச் சேர்ந்தான். அதுமுதல் அந்த விவசாயி எந்த விஷயத்தைக் குறித்தும் யாரிடத்தும் குறி கேட்பதாகிய வழக்கத்தை அறவே விட்டு விட்டான்.

(4) நரபலி விஷயம்.

அலஹாபத் என்று சொல்லப்படும் பிரயாக க்ஷேத்ரத்தில் ஒரு பெரிய செல்வனாகிய மஹாராஷ்ட்ர பிராமணப் பிரபு இருந்தான். அவன் வீட்டில் ஒரு கல்யாணம் நடந்தது. அதையொட்டி பிரமாண்டமான பிராமணஸந்தர்ப்பணை அதாவது பிராமண போஜனமொன்று நடத்தினான். மொத்தம் ஆயிரம் பிராமணருக்கு விருந்து. இலை யொன்றுக்கு இரண்டு ரூபாய் விழும்படி இரண்டாயிரம் ரூபாய் மிட்டாய் முதலிய போஜனச் செலவு. தலைக்கு ஒரு ரூபாய் தக்ஷிணை. இப்படி போஜனம் நடக்கையிலே பிரயாகைக்குப் புதிதாக வந்தோறும் அவ்விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தோருமாகிய தமிழ்ப் பிராமணர்களின் இனத்தில் ஒருவன் தனக்கடுத்த இலையில் புசித்துக் கொண்டிருந்த மற்றொரு தடியனிடம் இப்படிப்பட்ட பெரிய விருந்துகள் செய்வித்து முடிந்த பிறகு விருந்தினரில் ஒருவரை நரபலியிடும் பொருட்டாகப் பிடித்து வைத்துக் கொள்ளும் வழக்கம் வடதேசத்தில் உண்டென்று தான் கேள்விப் பட்டிருப்பதாகவும் தன்னுடைய சொந்தப்பாட்டனார் காசியாத்திரை செய்த காலத்தில் அவருக்கே இவ்வித ஆபத்து நேர்ந்ததாகவும் அப்பால் அந்தப்பாட்டனாரை அடைத்துவைத்திருந்த வீட்டு ஸ்திரீகளுக்கு அவர்மீது கருணைபிறந்து அவரை ஒரு சாக்கிடைவழியாக இரவு நேரத்தில் தப்புவித்து விட்டதாகவும் சொன்னார். போஜனம் முடிந்தது. தாம்பூலம் சந்தனம் தக்ஷிணை,

கொடுக்கும் பொருட்டாக பிராமணர்களெல்லாரையும் ஒரு விஸ்தாரமான கூட்டத்தில் உட்கார்த்தினார்கள்.

தமிழப் பிராமணர் சுமார் நூறுபேர் இருக்கலாம். இவர்கள் பிரத்யேகமாக ஒரு வரிசையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். பொழுது போக்குக்காக அவரவர் விருந்தின் பெருமையைப் பற்றியும், விருந்தளித்த பிரபுவின் உதார குணத்தைப் பற்றியும் பலவாறு வியந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்கையில், போஜனத்தின் போது நரபலிக் கதை கேட்ட தமிழன் தன்னைச் சூழ்ந்திருந்த வேறு சில தமிழரிடம் அந்தக் கதைக்கு வால் வைத்துக் கொம்பு வைத்து மிக விஸ்தாரமாகச் சொல்லி ஒரு முறை முடித்த பின்னும் இக்கதை கேட்போர் வியப்பெய்துங் கோலங்களைக் கண்டு மனங் கவரப் பெற்ற புதியோர் சிலருடைய வேண்டுகோளுக் கிணங்கி இரண்டாமுறை சிறந்த கற்பனைகளுடன் சொல்லிக் கொண்டு வருகையிலே, சிங்கத்தின் குரல் போல் மிகவும் உரத்த குரலிலே வீட்டுத் தலைவனாகிய மஹாராஷ்டரப் பிரபு தன் மகனை நோக்கி "பிராமணாலா விடாதே" என்று கூவினான். "விடா" என்றால் வடதேசத்து பாஷைகளில் வெற்றிலைச் சுருளுக்குப் பெயர். "தே" என்றால் "கொடு" என்றர்த்தம். இங்ஙனம் அந்த மஹாராஷ்டரப் பிரபு கூவினதின் கருத்து யாதென்றால், "பிராமணருக்கு வெற்றிலைச் சுருள் கொடு" என்பதேயாம். அதை ஷை நரபலிக் கச்சேரி நடத்திக் கொண்டிருந்த தமிழக் கூட்டத்தார் கேட்டனர். "பிராமணாலா விடாதே" என்று அந்தப் பிரபு சொன்ன வார்த்தை மஹாராஷ்டர பாஷையுணராத அந்தத் தமிழப் பிராமணர்களின் காதில்:—"ப்ராமணாளை (பிராமணர்களை) விடாதே" என்று விழுந்தது. எடு ஓட்டம்! ஒரே பாய்ச்சல்! அந்தக் கச்சேரியி லிருந்த தமிழர் அத்தனை பேரும் சடேலென்றெழுந்து வீட்டுக்கு வெளியே தாவி வந்து தெருவழியாக ஓடத் தலைப்பட்டனர். "பிராமணர்களை விடாதே!" பிடித்துக் கட்டிவை—என்று பிரபு கட்டளை கொடுத்ததாக அந்த நரபலிக் கதை சொல்லியவனும் கேட்டார்களும் நினைத்துத் தத்தம் உயிரைக் காத்துக் கொள்ளும் பொருட்டு இங்ஙனம் ஓடினார்கள். இந்த மாதிரி ஸமயங்களில் மனிதக் கூட்டம் ஆட்டு

மந்தை போல் நடந்து கொள்வது வழக்கமாதலால் அவர்கள் ஓடியதைக் கண்டு, வேறு பல தமிழப் பிராமணர்களும் மற்ற மாகாணத்து பிராமணர்களில் பலரும் எழுந்து விரைந்தோடலாயினர்.

இந்தக் கோலத்தைக் கண்டவுடன் பிரபு தான் விருந்தளித்த வகையில் தனக்குத் தெரியாதபடி ஏதோ அபசாரம் நேர்ந்துவிட்டது கொண்டே பிராமணர்கள் ஓடுகிறார்களென்று கருதி அவர்களை மீட்டும் அழைத்து எங்ஙனமேனும் தாம்பூலம் தக்ஷிணை பெற்றுக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்று தீர்மானித்துத் தன் வீட்டு வாயிற் காவலாளரை அழைத்து ஓடிப்போகிற பிராமணர்களை எப்படியேனும் கூட்டிக் கொண்டு வாருங்கள் என்று கட்டளையிட்டான். ஓடிப்போன பிராமணர்கள் ஏதேனும் தவறு செய்திருக்கக் கூடுமென்றெண்ணி அக்காவலாளர் தம்முடன் வேறுசில ஆட்களையும் உதவிக்குக்கொண்டு போய் வழியிலே போலீஸ் துணையையும் சேர்த்துக் கொண்டு ஓடுவோரில் ஒருவன் தவறாமல் எல்லாரையும் பிடித்து அவர்களுடைய உத்திரீயங்களாலேயே நந் நான்கு பேராகக் கைகளைக் கட்டி அத்தனை பேரையும் இழுத்துக் கொணர்ந்து பிரபுவின் முன்னே விட்டனர்.

பிரபு காவலாளரைச் சினந்து அந்தணர்களை கட்டவிழ்த்து விடும்படி செய்தான்.

"எங்களைக் கொல்லக்கூடாது கும்பிடுகிறோம். எங்களைக் கொல்லலாகாது. உங்களுக்குக் கோடி புண்ணிய முண்டு, என்று அந்தப் பிராமணர்கள் தனித்தனியே பலவாறாகக் கெஞ்சிக் கண்ணீர் பொழியக் கோவென்றழுதார்கள். அப்போது அங்கிருந்தோர்களிலே தமிழ் மஹாராஷ்டிரம் இரண்டு பாஷைகளுந்தெரிந்தவொருவன் மூலமாக அவர்கள் ஓடிய காரணத்தை விசாரிக்கும்படி பிரபு நியமித்தான். நரபலியைப் பற்றிய பயந்தெளியாதபடியால் அவர்கள் கேட்ட கேள்விக்கு நேரே மறுமொழி சொல்லாமல் ஏதெல்லாமோ பிதற்றினார்கள். கடைசியாக அவர்களில் ஒருவன் ஷை மத்யஸ்தனை நோக்கி—அண்ணா நான் பிள்ளைக்குட்டிகளுடையவன். என்னை நீங்கள் தான் எப்படியாவது சிபாரிசு பண்ணிக் காப்பாற்றவேண்டும். என் கையிலுள்ள பணத்தையெல்லாம் கொடுத்து விடுகிறேன். காளியம்மனுக்கு என்னை நரபலி போடாதபடி நீங்களே ரக்ஷிக்க வேண்டுமென்று சொல்லி விம்மினான்.

இதைக்கேட்ட துவிபாஷி (மத்யஸ்தன்):—நரபலியாவது வெங்காயமாவது காணும்! நரபலியைக்குறித்த யோசனை உங்களுக்கேற்பட்ட முகாந்திரமென்ன? என்று வினவினான். "பிராமணனை விடாதே என்று இந்தப்பிரபு கத்தினது 'உங்கள் காதில் விழவில்லையா? இந்தமாதிரி ஸமயங்களில் பிராமணரை நரபலிக்காகப் பிடித்து வைக்கக்கூடுமென்ற ஸம்சயம் எங்களுக்கு முந்தியே கொஞ்சமுண்டு. இவர் பிராமணனை விடாதே என்று கத்தியதைக் கேட்டவுடன் அந்த ஸம்சயம் உறுதிப்பட்டதென்று ஓடிப்போன இனத்தில் ஒருவன் சொன்னான்.

அப்போதுதான் துவிபாஷியின் மனதில் அவர்களுடைய தவறின்னதென்று துலங்கலாயிற்று. அவன் ஐந்து நிமிஷம்வரை இடைவிடாமல் கடகடவென்று நகைத்து விட்டு அப்பால் பிரபுவினிடம் விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைத்தான் பிராமணலா விடாதே என்ற வாக்கியத்தின் உண்மைப் பொருளின்னதென்பதை தமிழர்களுக்கும் விளக்கிச் சொன்னான்.

விஷயந் தெரிந்தவுடன் மஹாராஷ்டரர் தமிழர் எல்லாரும் ஒன்று கூடிப் பெருநகைநகைத்தனர். அப்பால் பிரபு எல்லா பிராமணர்களுக்கும் தகுந்த தக்ஷிணை முதலியன கொடுத்துத் திருப்திபடுத்தி யனுப்பினான்.

விநோதங்கள்

மொராக்கோ சுல்தானிடத்து 7 சிங்கங் களிருக்கின்றனவாம். அவை சுல்தானால் அன்போடு வளர்க்கப்பட்டு, அரண்மனை வாயில்களை நாய்போல் காத்து வருகின்றனவாம்.

பூமண்டலத்திலிருந்து 240000 மைல்தூரத்திலிருக்கும் சந்திரமண்டலத்தை யெட்டும்படியான பாணமொன்றை அமெரிக்கா, உரிஸ்டர் என்னுமிடத்திலிருக்கும் கிளார்க் பாடசாலையின் போதகாசிரியரான ராபர்ட் காடார்ட் என்பவர் கண்டு பிடித்திருக் கின்றாராம். இந்தப் பாணம் ஒரு நிமிடத்திற்கு 35 மைல் செல்லக் கூடியதாம்; 302 பவுண்ட் நிறையுள்ளதாம். இந்தப்பாணம் சந்திரமண்டலத்தைக் கிட்டியதென்று பூமண்டலத்தார்க்குப் புலப்படும் வண்ணம் அதன் கதியில் 2½ மைல் தோறும் ஒரு வெளிச்சம் தோன்றக்கூடிய விதமான சில சரக்குகள் பாணத்தில் சேர்க்கப் பட்டிருக்கின்றனவாம். இந்தப் பாணத்தில் 17 டன் நிறையுள்ள வெடி மருந்துகள் சேர்த்திருக்கின்றனவாம். —லோகோபகாரி.

வாந்திபேதியும் அதன் சிகித்சையும்.

திருவண்ணாமலை ஆயுர்வேத வைத்தியர்,

ஸ்ரீமான், அ. வெங்கடாசல முதலியார் எழுதியது.

உலக க்ஷேமத்தை நாடி, மகிமை வாய்ந்த தனவந்திரியாதி அவதார சிரேஷ்டர்கள் இவ்வியாதிக்கு, விஷூசி, ஊழிக்காற்று, விஷபேதி, வாந்திபேதி, சாமனை, எனப்பல பெயர் சூட்டி, உற்பத்தி, குணம், செய்கை சாத்தியா சாத்தியம், சிகித்சை, முதலியவற்றை வகை விபரமாய் நூல்கள் தோறும் விளக்கியுள்ளார்களென்பது கற்றுணர்ந்ததே!

முன்னுரை.

இதன் உற்பத்திக்கும் பல காரணங்கள் கூறப்படினும் பொதுவாய் தெய்வபக்தியும், தேகம், உடை, ஊண் இவற்றில் சுத்தமும்; ஆகாராதிகளில் சீரண சக்திக்குத் தக்கவாறு புதியதாக அளவறிந்துண்ணலும்; அஜீர்ண வஸ்துக்களையும் அசுத்த பதார்த்தங்களையும், நீக்கலும்; "முதல் நாளிற் சமைத்த கறி அமுதெனினும் அருந்தோம்" என்ற தேரைய மாமுனிவர் வாக்குப்படி எவ்வளவு உயர்ந்த வஸ்துவாயினும் பழைமையான பின்பு புசியா தொழித்தலும்; மாப்பண்டங்கள், கிழங்கு வகைகள், பயறு தினுசுகள், கெட்டுப்போன கனிவர்க்கங்கள், மச்ச மாம்சாதிகள், இவைகளை அறவே நீக்குதலும், ஆகிய இவையுள்ளாரிடம் இவ்வியாதி அணுகாதென்பது ஆயுர்வேத நூற்கொள்கையும், தேர்ந்த அநுபவமுமாம்.

முக்கியமாக, தெய்வ பக்தியும், தேகம், ஆகாரம், ஆடை, வசிப்பிடம் இவற்றில் சுத்தமாயிருக்க வேண்டியதே இன்றியமையாதது "பாழ்ப்பா பண்ணிவிடும் உலகமெல்லாம் பரிசுத்தமாயிருந்தால் பறக்கும் பாரே" என்பது அகஸ்திய முனிவர் வாக்கு!

பிரிவு.

இது, கொம்பன, குடற்படுவன், அக்கரன் ஆக மூன்று பிரிவுகளாய்த் தோற்றுமென்று சில நூற்களும், இம்மூன்றனுடன் அதிசாரன், என

நான்கு பிரிவுகளாகவே தோற்றுமென சில நூற்களும் ஜரா நிற்கும். இவை முறையே, 1, 3, 6, 12, நாட்கள் வரையில் தேகத்தில் பற்றி நின்று க்ஷணத்திற்கு க்ஷணம் குண வேறு பாடுகளையுண்டாக்கி, வெகு விரைவில் மோசஞ் செய்யக்கூடிய தென்றும், இவற்றுள் கொம்பன்" என்பதே மிக்க கொடியதும் சிகித்ஸைக்கு வசப்படாததும், சில சமயம் ஆரம்பித்த ஒரே மணி நேரத்திலும் ஆபத்தை உண்டாக்கக் கூடியதுமான துஷ்ட ரோக மென்றும், மற்ற மூன்று ரோகங்களைவிட இது நம்பக்கூடாத கஷ்டமான நமனை யொத்ததென்றும் இது கண்டவுடன்,

"—————————முந்நாள் வேதன்
விதிப்படியா மென்றிவரத்தெரிந்து கொண்டு
சொல்லிவிடு அசாத்தியமாய் கொம்பனென்று
தோகையர்க்கு மாடவர்க்குந் தொகுத்துத்தானே"
என்று அகஸ்திய முனிவரரே ஆணையிருக்கிறார்.

உத்பத்தி

"பிரமாணத்திற்குக் குறைந்த அற்ப போஜனமானது சரீர புஷ்டியையும் பலத்தையும், அழகையும் குறைப்பது மல்லாமல் வாதத்தையும் அதிகரிக்கச் செய்யும். பிரமாணத்திற்கு அதிகரித்த போஜனமானது சகல தோஷங்களையும் சீக்கிறத்தில் அதிகரிக்கச் செய்யும். அபக்குவமாகவும் கெடுதியாகவும் இருக்கிற அன்னமானது வாதபித்த சிலேஷ்மங்களை விகாரப்படுத்தும். இம்மூன்று விதத்தில் அபக்குவமென்ற அன்னத்தை அடிக்கடி புசிக்கில் அதிக துர்ப்பலனுக்கும். மந்தாக்னியனுக்கும், ஆமாசயஸ்தானத்தில் அவ்வன்னத்தால் அதிகரித்த திரி தோஷங்கள் அவ்வன்னத்தோடு கலந்து கொள்ளும்; அப்போது அந்த அசன காதனுக்கு, அந்த அன்னம் பித்தத்தை ஒடுக்கிய சிலேஷ்மத்தால் மறிபட்டு, வாயுவாலலைக்கப்பட்டு அவ்விடத்தில் பிரடை போட்டது போலும், ஆப்படித்தது போலுமிருந்து, வாந்தியுமில்லாமல், பேதியுமில்லாமல், சீரணமு மில்லாமல் ஸ்தம்பித்து அநந்தம் சங்கடத்தோடு சூலை முதலிய உபத்திரவங்களை யுண்டாக்கும். இதுவே அலசரோகமாம். இது ஆமாலசகம், தண்டாலசகம், விஷாலசகம் என மூன்று விதப்படும்; (அப்படி ஸ்தம்பித்த அன்னத்தை அவ்வாதபித்தங்கள் சீக்கிரத்தில் வாயினாலேனும் அபானத்தினாலேனும், வெளிப்படுத்துமாகில் இதற்கு விஷூசி (வாந்திபேதி) ரோகமெனப் பெயருண்டாகும். இது மிகக் கொடியது இதில் விஷால சகரோகத்திற்கு ஆமதோஷம் எனவும் பெயருண்டு.

(இன்னும்வரும்)

OFFICE OF ... 8 - DEC 1920 MADRAS

லாலா லஜபதிராய்

உ

கடவுள் துணை

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்

—ஔவை குறள்

Vol. 3.	November, 1920	No. 6.
தொகுதி 3.	1920-ம் வருஷம் நவம்பர்மீ	பகுதி 6.

உ

திருச்சிற்றம்பலம்

முழுவதுங் கண்டவனைப் படைத்தான்
முடிசாய்த்து முன்னாட்,
செழுமலர் கொண்டெங்குந் தேடவப்
பாலனிப் பாலெம்பிரான்,
கழுதோடு காட்டிடை நாடக மாடிக்
கதியிலியாய்,
உழுவையின் றோலுடுத் தன்மத்தமேல்
கொண்டுழி தருமே.

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலமெக்காலம் வருவது வந்ததற்பின்,
உழிதரு காலத்த வுன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே.

—திருவாசகம்

வெற்றி மேல் வெற்றி.

எடுத்தகாரியம் யாவற்றிலும் வெற்றி. எண்ணிய சிந்தனைகள் அனைத்தும் வெற்றி. செய்யும் முயற்சிகள் எதிலும் வெற்றி. நினைக்கும் நிமிஷத்தில் தானே யோசனை உபகரணங்கள் பொருத்தமாய்க் கூடிவந்து அப்பொழுதே வெற்றி. தொட்ட தனைத்தும் வெற்றி. பட்ட மரமும் தன் கை பட்டதும் துளிர்க்கும்படி வெற்றி. நித்த நித்தமே தோல்விகண்ட போதிலும் முயன்று முயன்று அதிலும் வெற்றி. நண்பர் கூட்டத்திடை வெற்றி. நேச மொழிகளில் வெற்றி. உறவினருள் வெற்றி. இல்லற ஆவல்களில் வெற்றி. தன் கற்பில் வெற்றி. தன் கிருகிணியின் பாதி விர்த்தியத்துள் வெற்றி. வாழ்க்கையில் வெற்றி. ஏகபத்னிவிரதத்துள் வெற்றி. புத்திரலாபப் பேறுகளுள் வெற்றி. ஆரோக்ய பாக்யத்தில் வெற்றி. பகைஞர் சிரந்தாழ வெற்றி. எதிர்படுவன யாவும் வெற்றி. என்றுமே வெற்றி. நித்தமும் வெற்றி திருநாள். வீரநாள், தீரநாள் ஆகிநின்வாணாள் விளங்கி யொளிர்வதாக. வெற்றிமேல் வெற்றி நினக்கு சித்திப்பதாக.

வெற்றிச் சிந்தனை கொண்டார்க்கு முடிவில் வெற்றியே யுற்றிடும். தோல்வியிலிருந்து தான் வெற்றித் துவக்கம். விழுந்து விழுந்து தான் குழந்தை எழுந்து நிற்கக் கற்றுக்கொள்ளும். உட்கார்ந்து தான் படுக்கவேண்டும். பொறுமையின்மேல் எதுவும் ஆகவேண்டும். சலியாமுயற்சி நாடவேண்டும். தன் சக்தியை நம்பவேண்டும். நம்பித் துணியவேண்டும். எதிலும் தானே தலையிடவேண்டும். தலைமை வகிக்கவேண்டும். இரவுபகல் உழைக்கவேண்டும். உய்யும் வழிவகைகளை ஓயாது உன்னுதல்வேண்டும். உற்றுணர்தல் வேண்டும். வெற்றியையே நீ பெறுவாய்—ஏன் பெறலாகாது? வெற்றியே நின் பங்கு.

எதிலும் முதலில் நீ துணிந்து விடு. மற்றவர்கள் உனக்கு அதைரியத்தையே கொடுப்பார்கள். அதுவே அவர்கள் செய்யும் உதவி. எதையும் உன் கை[illegible]டச் செய்து பார். செய்து பார்த்துப் பிறகு நீ தெளிந்து கொ[illegible] பிறருடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு உன் முயற்சியை[illegible]க்தாதே. உன்னையே உனக்கு மந்திரியாகக் கொள். உன்னைத்[illegible]நுவோர்க்கெல்லாம் வெற்றி வாசகங்களையே எப்போதும் [illegible] மங்கள[illegible]ன அவர்கள் கண்டதும் ஒரு துள்ளு துள்ளி உற்சாகத்[illegible] வெற்[illegible]கும்படி செய்து விடு. அவர்களைப் புது மனிதனாகத் தயார் செய. அந்த முயற்சியினூடே உன்னையும் புதுப்பித்துக் கொள்ளலாம். நீயும் புது மனிதனாக உயரலாம்.

எந்த இடத்தில் எந்த சந்துவழி கிடைக்குமோ வென்று வெற்றிக் கண்களுடனேயே உற்றுப் பார்த்துக் கொண்டிரு; கொஞ்சம் வழி அகப்பட்டதும் அதில் நீ புகுந்துகொள். பிறகு வளையைப் பெரிதாக்கிக் கோட்டைக்குள் நுழைந்து அந்த ஊரையே உன் கை வசப்படுத்திக்கொள்ளவும் வசதி கிடைத்துப் போம். இன்னொருவரின் கீழ் வேலைக்கு அமர்ந்திருப்பினும் உன் வெற்றிச் சிந்தனையின் வீரம், உனக்குமேலிருப்பவர்களைக்கூட உனக்குக் கைப் பொம்மைளாகச் செய்து வைத்து விடும்.

எப்போதும் கம்பீர புருஷனாயிரு. சொன்ன சொல்லில், நில்—நட. உன் பார்வை வெற்றியுடன் செல்லட்டும். அந்தப் பார்வையில் பிறரை யடக்கி யாளப்பழகிக்கொள். உனக்கு யோசனை சொல்லப் பிறர்வராமல், நீ மற்றவருக்கு யோசனை கூறத்தக்கபடி இரு. உன்கையாளிடம் ஒரு புத்திமதி பெறும்படி நீ வைத்துக் கொள்ளாதே. அவன் சொன்னது தக்க யோசனையாயிருப்பினும் அதை அவன் எதிரில் காண்பித்துக் கொள்ளாதே. 'சரி சரி— உன் வேலையைப்பார் என்று அவனை அனுப்பிவிடு. பிறகு நீ அந்தரங்கத்தில் அதைப்பற்றிச் சிந்தித்துக் கொள். ஒரு குழந்தையின் வார்த்தையையும் உற்றுக் கவனி. அங்கும் ஒரு சரக்கு அகப்படும். உன்வாழ்வின் வெற்றிக்கு அக் குழந்தையும் ஒரு யோசனை சொல்லக்கூடும். குழந்தை கிருஷ்ண மூர்த்தியின் வடிவமென்பதை மறவாதே. கிருஷ்ணப் பிரபாவத்

தின்—அந்த அவதாரத்தின் போதனை யாது? எடுத்த காரியம் யாவற்றிலும் வெற்றி என்பதே.

கிருஷ்ணவதாரம் என்ன கற்பிக்கிறது? வெற்றி பெறும் வழியைக் கற்பிக்கிறது. பகவத்கீதை [illegible] திப்பதென்ன? உன் வாழ்வில் நீ துணிந்து நில்—வீரமு[illegible]யிரு—வெற்றி உனக்கு நிச்சயம் என்கிறது. சோர்ந்[illegible] அர்ச்சுனனையும் கீதை தட்டி எழுப்பிற்றன்ரோ? அர்ச்சு[illegible]ம் என்ன கற்பிக்கிறது. வெற்றியைக் கற்பிக்கிறது. பீம, நகுல ஸகாதேவர்கள் என்ன தெரிவிக்கிறார்கள்? வெற்றியையே தெரிவிக்கிறார்கள். தமது வாழ்க்கைத் துணைவியான பாஞ்சாலியை துரியோதனன் மானபங்கப் படுத்த முயல, உலகத்தையே ஒருவிநாடியில் ஹதம் செய்துவிடத் தக்க தம்பிமார் தமது அருகே யிருந்தும், தமது வாயின் ஒரு வார்த்தை அந்த நிமிஷமே நிறைவேறி விடுமெனத் தெரிந்திருந்தும் மௌனமுற்றிருந்த தர்ம புத்திரரிடமிருந்து அறிந்து கொள்ளும் பாடம் என்ன? தர்மத்தின் வெற்றியே. கடவுளில் வைத்துள்ள நம்பிக்கையின் வெற்றியே. கர்னன் எத்தகையோன்? கொடையில் வெற்றிகொண்டவன் அரிச்சந்திரன்எப்படி? சத்தியத்தில் வெற்றி கொண்டவன். சத்தியகீர்த்தி எப்படி? இராஜபக்தியில் வெற்றி கொண்டவன். சந்திரமதி, தமயந்தி, ஜானகி, மண்டோதரி இவர்கள் எப்படி? கற்பில் வெற்றி கொண்டவர்கள். பரதன் எப்படி? சகோதர வாஞ்சையில் வெற்றி கொண்டவன், தசரதர் எப்படி? புத்திர சோகத்தில் வெற்றி கொண்டவர். விஸ்வாமித்திரர் எப்படி? தவத்தில் வெற்றிகொண்டவர். அநுமார் எப்படி? ராமத்தியானத்தில் வெற்றி ருசித்தவர். கோபிகைகள் எப்படி? காதலில் வெற்றி கண்டவர்கள். நளன், நல்லதங்காளின் கணவன் இவர்கள் எப்படி? புக்ககம் புகாதுமான லக்ஷயத்தில் வெற்றி சிறந்தவர்கள். ஜடாயு எப்படி? நட்பில் வெற்றி பெற்றவர். இராவணேஸ்வரன் எப்படி? மார்பில் காயமேற்று மடிந்ததீரன் வெற்றிக் கையினன். அதிதி உபசாரத்தில் வெற்றிகொண்ட ஒருவரைச் சொல். சிறுத் தொண்டர்.

புராணங்களைப் பார், இதிகாசங்களைச் சோதி. வேதங்களை ஆராய்ந்திடு எங்கும் வெற்றி வீரர்களின் முழக்கமே காண்பாய்

இராமாநுஜர், சங்கரர்; புத்தர், கிறிஸ்து, மகம்மது நபி—இவர்கள் எல்லாம் யார். வெற்றியின் கண்மணிகள். வெற்றிச் சிந்தனையார்க்கே ஆசார்ய ஸ்தானம் கிடைக்கிறது. அவர்கள்தான் ஜகத் குருவாக விளங்குவார்கள்— விளங்குகிறார்கள். அநுமக் கொடி, கருடக் கொடி, நாகக் கொடி, மீனக்கொடி—இவைகளெல்லாம் வெற்றியின் கொடிகளாம். பிரிட்டிஷ் கொடி யூனியன்ஜாக் என்ன சொல்லுகிறது? பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் வெற்றியைக் கர்வத்துடன் குறிப்பிடுகிறது. மங்கள வாத்தியங்கள் ஜயபேரிகை எதைக் குறிப்பிடுகின்றன, வெற்றியையோ குறிப்பிடுகின்றது. அஞ்சினஉன்கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் அவனுக்கு தான் தோல்வி. துணிந்தவனுக்கோ எங்கு நோக்கினும் வெற்றியே. வெற்றிச் சிந்தனையாளனுக்குக் காண்பனயாவும் வெற்றியே. எதிர்ப்படுவன வெல்லாம் வெற்றியின் முழக்கமே. வெற்றிச் சிந்தனையாளர்க்கு எங்கணும் வெற்றியே.

நீ இப்போது தாழ்ந்த பதவியில் இருக்கிறாய். மேல் எழ எத்தனையோ அவா. அதற்கும் நீ பாத்திரனே, ஆசை யிருக்கிறது தாசில் பண்ண. அதிர்ஷ்டம் இருக்கிறது கழுதை மேய்க்க. அப்படி இருந்தாலும் உன் உள்ளத்தில் வெற்றி எண்ணம் உதித்திடுமாயின் பிறகு உனக்கு க்ஷேம காலமே. மேன்மேலும் பதவி உயர்வு காண்பாய், ஓங்கி நின்று உலகம் தாங்குவாய். வணங்காமுடி மன்னனாகவே துரியோதனன் ஆவியை நீத்தான். அதுவும் ஒரு வெற்றியே. உன் குடும்பத்தையே வெற்றி கொள்ளும் குடும்பமாக்கிவிடு.

ஒரு விவாகம் பிரயத்தனத்தில் தலையிடுக் கொள்கிறாய். எத்தனை இடர்கள் உற்றினும் வெற்றியுடனே அதை முடித்துவிடு. ஒரு வீடு கட்டத்தொடங்குகிறாய், அல்லது தனக்கு ஒரு வீடு கட்ட ஒருவன் உன்னைத் துணை கொள்கிறான். வெற்றியுடன் அப்படியே கட்டி முடித்துக் கிரகப் பிரவேசமும் செய்—செய்ய வை.

ஒரு விருந்து:—பல பேர்கள் கூடி விட்டார்களெனத் தயங்காதே. எப்படிச் செய்தால் நன்றாய் இருக்குமோ அப்படியே ஸம்பிரமமாக நிறைவேற்றி வைத்து வெற்றி கொள், வெற்றியின் இலையான வெற்றிலையைக் கடைசியில் போட்டுக்கொள்.

ஒரு காரியத்துக்குப் போதல்:—எந்தக் காரியத்திற்குச் சென்றாயோ அதை வெற்றியுடன் முடித்துக் கொண்டு வா.

ஒரு கலகம்:—உன்னை ஒரு கலகத்தின் இடையே மத்தியஸ்தம் கோரினால் எவ்விதத்திலும் ஸமரஸப்படுத்தி வைத்து வெற்றி கொள்.

ஒரு வியாபாரம்:—ஒரு தொழிலைத் தொட்டால் கடைசி வரைக்கும் அதை நிலைக்க வைத்து, உனக்கு நஷ்டத்தைக் கொடுத்த அந்த வியாபாரமே உன் செல்வத்திற் கெல்லாம் காரணமாகும்படி சரியான முயற்சி நாடி வெற்றியில் ஓங்கிவிடு.

ஒரு மத்தியஸ்தம்:—பஞ்சாயத்து, மத்தியஸ்தத்தில் நடு நிலைமையிலேயே நின்று ஏழைகளுக்கு நியாயம் வழங்க எவ்விதத்திலும் பாடுபட்டு வெற்றி கொள்.

கடன்:—உன் வகையில் ஒரு கடன் ஏற்பட்டாலும், பெரியோர்கள் கடன் வைத்துச் சென்றிருந்தாலும் தீர்த்துடனேயே நில், என் நீண்டவாழ்நாளில் இந்தக் கடன் எனக்கு எந்த மூலை என்று துணிந்துகொள். கடனை—இதோ உன்னைத் தீர்த்து விடுகிறேனென்று எதிர்த்துக் கொள். உன் கடனை வெளிக்கு வராதபடியே வைத்து அக்கடனை யடைத்துத் தொலைத்து வெற்றி சிறந்திடு.

குழந்தைகள்:—உன் குழந்தைகளை வெற்றிக் கனிகளாக்கு. அவர்களை எவ்வெவ் வழியில் முன்னுக்குக் கொண்டு வர ஆதியில் நினைத்தனையோ அந்த எண்ணத்தைக் கடைசி வரையும் நிறைவேற்றிவிடு. சோர்ந்து விடாதே. அந்த வெற்றி உனது அந்திய காலத்தில் அதிக நிம்மதியை—த் திருப்தியை—க் கொடுக்கும்.

உன் சத்துருக்கள்:—அவர்களை முழுதுக்கும் அலக்ஷியம் செய். வாயைத் திறவாதே. உன் மவுனத்தாலேயே அவர்களை யடக்கிவிடு, கேவலமான பார்வையில் அவர்களை நோக்கு, ஒரு சிறு துரும்பு போல மதி, வலிய அவர்கள் வரினும் லக்ஷியம் செய்யாதே. அவர்களைக் காலின் கீழ் மிதித்து அடக்கியாண்டு வெற்றிச் சிங்கம் எனப் பெயர் வகி.

தீவினை ஆழ்வோர்:—உனக்குப் பிறர் இழைக்கும் கெடுதிக்கு நல்லதே செய்து அவர்களை நாண வைத்து, அன்னோரையும் நல்வழிப்படுத்தி அவ்வகையில் நீ வெற்றி கொள். தீமைக்குத் தீமை செய்வது மிருககுணம். நன்மைக்கு நன்மை செய்வது மனித குணம்

தீமைக்கு நன்மை செய்வது தேவகுணம். தெய்வீகச் சாயலான வெற்றியிலேயே நின் சித்தம் நிரம்பட்டும்.

வியாதி:—தைரியத்தை விடாதே. குணப்படாதென்று நினையாதே. கடைசி வரையில் பிழைப்பிக்க முடியுமென்றே நீ எதிர்பார். வைத்திய உதவிகள் ஆனவரையில் செய், உனக்கு வெற்றி வழங்கும்படிக் கடவுளை வேண்டி எவ்விதத்திலும் வெற்றி பெற்றுக் கொள்.

ஒரு பிரயாணம்:—ஒரு பிரயாணம் துணிந்தால் புறப்படுகிற தினத்தைத் தூரத்தூரத் தள்ளி வைக்கவேண்டிவரும். தடைகள் அநேகம் பிறக்கிடும். நினைத்தபோதே செய்யக்கூடிய வெற்றியில் நீ பழகிவிட்டால் இந்தத்தடைகள் யாவும் பஞ்சாய்ப்பறந்துவிடும். உன் பிரயாணமும் வெற்றியுடன் உன்னைத் திரும்பவும் வீடுகொண்டுவந்து சேர்க்கும்.

நட்பு:ஒருவரிடம் மனம் வைத்து நெஞ்சம்கலந்து பழகியபிறகு எத்தனை மனஸ்தாபங்கள் வரினும்; எவ்வளவு கஷ்டநஷ்டம் உறினும் பிரிவினைக்கு ஆளாகாது பின்னும் அந்த நட்பை இழுத்து இழுத்துப் பிடித்து அதில் வெற்றி கொள். நட்பையும் அறிமுகத்தையும் பகுத்தறிந்து வெற்றிகொள்.

கோடை, தயை:—கொடையிலும்தயையிலும் நிர்ப்பாக்கியமுள்ளவனாயிரு. அதில் நீ வெற்றிமேற் கொண்டால் கடவுளும் உனக்கு மேன்மேலும் அருளுவார். உன் சித்தமும் புனிதமுற்று தூய்மை மிகும்.

கோபம்:—கோபத்தின்மீதே வெற்றிகொள். அக்கோபம் உன் மீது வெற்றி கொள்ள விடாதே. வெளிக்குக் கோபாக்னி ஜ்வலிக்கட்டும். உள்ளுக்கோ அக்கோபத்துடன் எவ்வித பற்றுதலுமற்றவனாய் குளிர்ந்த மனதோடு இரு இதுவே வெற்றி.

அன்பு:—அன்பில் வெற்றிபெறு அன்புமயமாக நில் அன்புருவாக ஆகிவிடும். அன்பே சிவம் சிவமே அன்பு. அன்பே பிரதானம் அதுவே வெகுமானம். உன்ஜீவிதகாலம் அன்பின்வழியில் செல்லட்டும். அதுவே உன் வாழ்நாளில் நீ பெறவேண்டிய வெற்றி.

காதல்:—தெய்வீகக் காதலிலே வெற்றிபெறு. எவ்விதத்தும் முனைந்து நில். நீ கோரிய பெண்மணியையே உன் வாழ்நாள்யாத்திரைக்கு கண்மணி யாக்கு. காதலில் வெற்றிகொண்டு களித்திடு.

பேச்சில் வெற்றி:—எப்பொழுதும் உன் வார்த்தைக்கும் பேச்சுக்கும்—அதைப்பிறர் மறுக்காத நிலையில் வெற்றி பெறப்பார். உன் வாக்கில் வெற்றித் தேவி தாண்டவமாடட்டும். உன்பேச்சுக்குப் பதில்பேச்சு இல்லாமல் அப்படியே நடந்து விடும்படி வெற்றி பெற நில்.

உன் கைப்பட்டது வெற்றி:—நீ தொட்டதனைத்தும் வெற்றியில் விளங்கும்படி வெற்றிவேலனைச் சிந்தனை செய். வெற்றியிலேயே நீ பழகு. ஒருநாட் பொழுதும் வெற்றியிலே பொருந்தி ஒளிரும்படி செய்து விடு. வெற்றித்துவஜம் தாங்கு. உன் உள்ளத்திலே ஸதாகாலமும் வெற்றிச்சிந்தனைகளே மேலாடிப்பரவி நிற்கட்டும். வர்த்தகத்தில் வெற்றி. வியாபாரத்தில் வெற்றி உன் காரியங்களெல்லாம் வெற்றி ததும்பி நிற்கட்டும்.

பக்திமுக்தி:—பக்தியில்வெற்றிகொள் முக்தியில் வெற்றிகொள் வணக்கத்தில் வெற்றிகொள். தெய்வநம்பிக்கையில் வெற்றி கொள்.

இவ்விதமே நெடுக நின் ஜீவிய முழுதுக்கும் வெற்றியின் உருவமாக நீ விளங்கிடு. ஒரு உயில் பத்திரம் எழுதப்புகும்போது ஆயிரம் தடைகள் நேரிடும். அவற்றைத் திரணமாக மதித்து உன்பிரியத்தின்படி எழுதி முடிக்க வெற்றிச்சித்தம் வலி.

ஐரோப்பிய யுத்தம் ஆரம்பத்தில் எப்படித் தோன்றிற்று? ஜெர்மனிக்கே ஜெயம் எனத்தோன்றிற்று. ருஷிய ஜப்பானியயுத்தத்தின் ஆரம்பத்தோற்றம் எப்படி? ஜப்பான் ஜெயிக்குமா வென்று ஐயப்பட நேர்ந்தது. தேசபக்தியும் ஆரம்பத்தில தோல்விபெறும்போல் காணப்பட்டது இவைகளெல்லாம் முடிவில் வெற்றியையே கொண்டன. சித்தஞ்சலித்து விட்டுவிடாது வசித்திரமே வெற்றிக்கு இடமாயிற்று தோல்வியின்றி வெற்றியில்லை நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு புல்லிதழ்பூவிற்கு முண்டு அதுபோல் வெற்றிச்சிந்தனையிலே தோல்வியும் உண்டு; எனினும் சித்தத்தைச் சோரவிடலாகாது; தீரம் வகிக்கவேண்டும்; வீரவுள்ளம் வேண்டும். ஆணித்தரமான உறுதி வேண்டும். ஓரே தீர்மான நிச்சயம் வேண்டும். ஓயாத முயற்சிவேண்டுமே. முடிவில் உனக்கு வெற்றி சித்தித்துவிடும். வெற்றித்தேவி உன் வசமாகி விடுவள். உன் வாணாள் வெற்றியுடன் ஓங்குக, சிறந்திடுக, ஒளி வீசிடுக வெற்றிக்கு மங்களம் உண்டாவதாக, வெற்றியில் சித்தி பெற்றார் கூறும்பாடல் எது? "சிந்தித்ததெல்லாம் அறிந்து உதவவந்த கருணைமழையே பராபரமே" என்பதாம்.

இரத்தின மாளிகை.

(All Rights Reserved.)

முதல் அத்தியாயம்.

ஒரு போலீஸ் வீரன் பயங்கரமான நள்ளிருளில் கைவிளக்கை இங்குமங்கும் திருப்பினான். தென் இந்தியாவில் பிரதானமான சென்னப்பட்டணத்தில் மார்கழி மாதம் பனியும் குளிரும் ஒருங்கே அடர்ந்து, காரிருள் சூழ்ந்த ஓரிரவை நினைத்துப் பாருங்கள். கோவிந்தப்ப நாய்க்கன் வீதி மிக்க விசாலமானது. செல்வம் படைத்த சீமான்களும், சிறந்த வர்த்தகர்களும் வசிக்குமிடம். இரவு சுமார் இரண்டு மணியிருக்கும். விழித்திருப்பேன் என்று வீண்வார்த்தை பேசுவோர் மயங்குங்காலம். சிற்சில விடங்களில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் மின்சார விளக்கும், கருமேகத்தினிடையே தோன்றும் மின்னல் ஒளிபோல் விளங்குகிறது.

குளிர்ந்த காற்று சில்லென்று வீசுகிறது. அப்பொழுது ஒரு கடியாரம் டிங் டிங் என்று இரண்டடித்தது. முதல் தொனி சற்றே கேட்டது. இரண்டாம் தொனி காற்றால் பரவியது. தன் உடலும் தெரியாத அந்த நள்ளிருளில் ஒரு சிறு உருவம் கையில் ஒரு சிறு மூட்டையை வைத்துக்கொண்டு சௌந்தர்ய மகாலுக்கருகில் காத்துக் கொண்டிருந்தது. கழுத்து முதல் கரண்டை வரை கருத்துக் கனத்த அங்கியைத் தரித்திருந்தது. தலையையும் மூடி ஒரு

பனிக்குல்லாவை நாடிவரை பணிந்து பொத்தான் போட்டிருந்தது. அந்த மூட்டையில் ஒரு குழந்தையிருந்ததால் அதி ஜாக்கிரதையாய் அடிமேல் அடி வைத்து சற்றும் அரவமின்றி நடந்து சென்றது. இந்த உருவத்தினிடத்தில் ஒரு பாக்கெட் காந்த விளக்கு இருந்தது. ஒரு வீட்டின் நம்பரை பார்த்துவிட்டுத் தான் எதிர் பார்த்திருக்கும் வீடு, இவ்வளவு தூரம் இருக்கலாம் என்ற நிதானங் கொண்டு மெல்லச் சென்றான். அச்சிறு மனிதன், குறித்த விடம் வந்ததும், குழந்தையை, பெற்ற தாயைப்போல் கருணையோடு பார்த்து விசித்திரமான சில வார்த்தைகளைச் சொன்னான்.

''எனது சிங்கக் குட்டியே, நான் பிரிகிறேன்'' என்று சொன்னான். இப்படி எனது என்று சொன்னதால் சம்பந்த மிருக்க வேண்டுமென்று நினைத்தாலும், மீண்டும் நினைக்கவும் கூடாத நிலையில் அவன் சொல் நழுவியது. இன்னும் ஒரே வேலை செய்ய வேண்டிய திருக்கிறது. அந்த வேலை செய்த பிறகு அரைக்கணமும் தங்க முடியாது. ஆகையால் அக்குழந்தையைப் பார்த்து அவ்விதம் சொன்னான். அந்த வீடு மூன்று மெத்தையுள்ளது. இரண்டாவது மெத்தைக்கும், மூன்றாவது மெத்தைக்கும் 'காலிங் பெல்' (Calling bell) வெளியே அமைக்கப்பட்டிருந்தது.

அந்த மூட்டையில் குழந்தைக்கான சில ஆகாரமும் வேறு சில பொருள்களும் இருந்தன. அந்தக் குழந்தையின் வாயில் சிறு பிஸ்கோத்துக் துண்டை வைத்து ருசி பார் —சாப்பிடு நீ சிங்கக்குட்டி, நீ உன்னைப்போல் அநேகச் சிங்கக்குட்டிகளைத் தயார் செய்யவேண்டும். உன் வாழ்வில் எல்லாம் ஜெயமே; ஜெயவீரனாய் விளங்குவாய். உனக்கு வேண்டிய வெகுமதிகள் காத்துக்கொண்டிருக்கின்றன; இதுவே உன் வாழ்வுக்கு முதற்படி. உன்னதமாய் உயர்வாய் வர வேண்டியது உனது வேலை. இதோ என் பிரிவு'' என்று சொல்லிவிட்டு, அக் குழந்தையை அந்த வீட்டின் வாசற்படிக்கருகில் வைத்துவிட்டு, எலக்டிரிக் பொத்தான்களையெல்லாம் அமிழ்த்தினான். பிறகு கதவையும் தடார் தடார் என சத்தம் ஒங்கத் தட்டினான். இனித் திரும்பாத விதமாய் மறைந்து போனான்.

பிள்ளைகளைப் பக்கத்தில் வைத்துத் நித்திரை செய்யும் தாயானவள் திடுக்கிட்டு மற்றவர்களை எழுந்திருக்கும்படி செய்தாள். மின்சார

விளக்கை பிரகாசிக்கும்படி செய்தார்கள். ஜன்னல் கதவைத் திறந்து 'யார் யார்' என்று கேட்டுவிட்டு, ஒரு ஸ்திரீ ஜன்னலை மூடிவிட்டாள்.

தெருக்கதவு திறக்கப்பட்டது. தூக்கக் கலக்கத்தோடு, கண்ணைக் கசக்கிக்கொண்டு ஒரு கனத்த மனிதரும், ஒரு வேலைக்காரனும் வேலைக்காரியும் பின்தொடர வந்தார். வேலைக்காரி வெளியே வந்து அந்த மூட்டையைப் பார்த்து, இது ஒரு குழந்தை, என்று எஜமானனை நோக்கிச் சொன்னாள். குழந்தைக்குப் பக்கத்திலுள்ள மூட்டையைப் பிரித்துப் பார்த்தாள். இப்படி யிருக்கும்போது லோந்து சுற்றி ஒரு போலீஸ்காரன் வந்து சேர்ந்தான். எஜமானன் சொல்லுகிறார்—இந்த சிறு குழந்தையை நமது வாசற்படிக்கருகில், ஒருவரோ பலரோ இவ்விடம் விட்டுப் போயிருக்கிறதாய்த் தெரிகிறது.

இரண்டு மணிக்குப் பிறகு நடந்த விஷயமா யிருக்கிறது. டயரியில் குறித்துக்கொள். இன்று செவ்வாய்—டிசம்பர்—24 தேதி. எழுதிக் கொண்டாயா? " ஆம், எழுதிக்கொண்டேன்.

" சரி, நல்லதோ, கெட்டதோ. கருப்பாயி, என்ன குழந்தை?''

" பையனுங்க, ஆண் குழந்தை, பிஞ்சுங்க.''

" இதை விசாரிக்காமல் விடக்கூடாது;'' என்று தூக்கத்தோடு தூக்கமாய், குழந்தையைக் கொடுக்கப்படாது என்றார்.

" ஆறுமாசக் குழந்தை கூடவுமிருக்காது. குறையாகவு மிருக்காது, பார்ப்பதற்கும் அழகாயிருக்கிறது. என்று வெகு ரவணிப்பாய்ச் சொன்னாள்.

" அப்படியானால் (—கொட்டாவி விட்டு) குழந்தையை பத்திரமாய்ப் பார்த்துக்கொள்.

போலீஸ்காரரே, இதர பொருள்களை யெடுத்துக் கொண்டு போய் துப்பு விசாரித்து, இரக்கமற்ற தாயை அழைத்து வருவாயானால், குழந்தையையும் இதைக் காப்பாற்ற வேண்டிய பணமும் கொடுக்கிறேன் என்று சொல்லி அனுப்பினார்.

இரண்டாம் அத்தியாயம்

நெருங்கிய பழக்கம்.

ஒரு சிறு அறை, அதில் ஜன்னல் பக்கமாக ஒரு நீண்ட சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்ட மிஸ்டர் ரங்கநாத முதலியார், மனதில் ஏதோ சந்தேகத்தோடு ஒரு சுருட்டை வைத்துக்கொண்டு சிந்தையால் தேக்கிய நிலையில் இருந்தார். எல்லாம் அந்தரங்கத்தைப் பற்றிய சந்தேகமே. அவர் வயது, தீர்ந்த எண்ணம், எதிர் நோக்கம், பழக்கம் நேர்மை இவையெல்லாம் தர்க்கத்துக்கு ஏதுவாய் சேகரப்பட்டிருந்தன. இவைகளில் முதன்மையான வயதைக் கவனிக்கும் போது சற்றேறக்குறைய 30 என மதிக்கலாகும். இரண்டாவதான அவர் திரத்தைக் கவனிக்கில், அவ்வளவும் பாஷையை அபிமானித்ததாக விருந்தது. அவர் வாழ்விலடைந்தது என்னவென்று கவனிப்போமானால், அவர் தனித்தேனும், இல்லற வாழ்விலேனும் ஒரு சுகத்தையும் வல்லமைக் கேற்றவிதம் அனுபவித்தவராகத் தோன்றவேயில்லை. திர்ஷ்டமோ அதிர்ஷ்டமோ, நமது சக்தியைக் கொண்டே தீர்மானிக்க வேண்டிய பாகமென வித்வத் தன்மையில் தங்கியது.

இரங்கநாதம் மனது அந்தரங்க மற்றது. கள்ளங் கபடில்லாதது. அவர் தமது எண்ணங்களைத் தாமே முடிவுக்குக் கொண்டு வருபவர். அதாவது இன்னொருவரிடம் சொல்லி யோசித்துச் செய்வதென்பதில்லை. ஆகையால் எந்த வேலையும் முற்றுப் பெறுவதில்லை. எல்லாம் அரை குறையாகவே இருக்கும். இதுவரை எந்த வேலையும் திருப்திகரமான நிலைமைக்கு வந்தது கிடையாது. கைத்தொழில்; ஊக்கம்; பொறுமையின் தன்மை இவைகளில் ஒன்றும் அவரைச் சந்தித்ததில்லை. அவர் வாழ்வில் வந்த தடுமாற்றங்கள் நிலை தடுமாறி—கீழானஸ்திதிக்குச் கொண்டு வந்து விட்டது. அவருடைய குணத்தைக் கொண்டு எவ்வித சாதகத்தையும் அடைய முடியாது. சுமார் இருபது வருஷம், அவர் ஒரு நடைப்பிணம் போல்; ஒன்றுக்கும் உதவாத நிலையில், தன்னடக்கம் இன்றி,

சுகத்துக்கும் துக்கத்துக்கும் தாக்கற்றவராய், பார்த்தோர் எவரும் இச்சகப்படும் விதமாயிருந்தார். "நான் யாருக்கும் பிரயோசனமாயில்லையே' என்று அவர் அடிக்கடி வெகு கஷ்டத்தோடு சொல்லிக் கொள்வதுண்டு.

அவரை நேரில் பார்த்தாலோ—நெட்டையாயும் அதற்குத்தக்க கனமும், உற்று நோக்கும் கண்களும், மயக்கம் போன்ற கலங்கப் பார்வையும், ஆழ்ந்த கருத்தும் பொதுவாய் சொல்லு மிடத்து மனோவியாதி கொண்டவராகவும் தோற்றும். அவர் முகம் ஆண் சிங்கம் போல அகண்டது, ஆனால் துக்கக் குறியோடுங் கூடியது. கருத்த ரோமங்கள் அடர்ந்த தாடி. அதற்கேற்ற மீசை, அவர் கண்கள் கண்ணாடிக்குள்ளிருக்கும் உருவம் போல், நீர் ததும்பியும் இல்லாமலும் இருக்கும். அவர் அனுபவம், புண்பட்டு பண்பட்ட மேதாவியா யிருக்கும், அவருடைய தரித்திரம் ஆடைவரை போய் தன்னைக் காட்டி நின்றது.

அஸ்தமனமாய்க் கொண்டிருக்கும் அவருடைய பாஷாபிமானம் இளமையில் பாலபாஸ்கரனைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவர் முதலாவது வெளியிட்ட காவியம் பக்ஷியாய்ப் பறந்து பதினையாயிர ரூபாய் பலவிதமாய் வந்து சேர்ந்தது. தென் தேசத்தில் தமிழ்பாஷையை விர்த்தி செய்ய வேண்டுமென்ற இராமநாதபுரத்தரசர் அவர்—அக்கவீந்திரன்— எழுதும் நூல்களை யெல்லாம் தமக்குக் கொடுக்க வேண்டுமென்றும், தாம் இருக்கும் வரை வருஷத்துக்குப் பதினாயிர ரூபாய் தருகிறேனென்றும், தமிழ்பாஷையில் அவர் தமக்குள்ள திறமையைக் காட்டவேண்டு மென்றும் ஏற்பாடு செய்தார். தேன் இனிக்கும், பால் இனிக்கும் அது சாப்பிட்டவரைக்கும். ஆனால் தனித்தமிழோ தன்னில் நினைக்க நினைக்க இனிக்கும்; சிந்திக்க சிந்திக்கச் சுவைததும்பும் என்று பறையடித்துப் பெரும் புகழ் அடைந்தார். அவர் ஒவ்வொரு நூலையும் வெளியிட்டு விட்டு, இதை நானா எழுதினேன் என்று சந்தேகிப்பார். இல்லை இல்லை என்னில் மறைந்து நிற்கும் ஒரு சக்தி செய்த வேலை; அதற்கும் எனக்கும் சம்மந்த முண்டோ வென ஐயுறுவர், இவருக்குப்பகலே இரவு; இரவே பகல். எழுதுவதும் படிப்பதும் இரவிலேயே தான். அவர் நித்

திரை செய்வது பகலில், இவருக்கு உறவாகும் நண்பர்கள் பலர், இவர் வரும்படி பதினாயிரமும் நண்பர் வாய்க்கே, பலர் கூடி பத்திரிகை வெளியாக்கலாமென, அவர் பணத்தைக் கொண்டு முயற்சி செய்தார்கள். சங்கப்பத்திரிகை வெளியாக்கினார்கள். பத்திரிகை சிலகால மிருந்து மாண்டது. அவர் பணத்தைப்பல வழியில் பறி முதல் செய்தார்கள்.

அவருடைய அபார அதிர்ஷ்டம் குருட்டுத் தன்மையைக் கொடுத்தது. அவரது ராசி மாறிவிட்டது. பனி மூடுவது போல் அவரை சனி திசை மூடியது, தரித்திரத்தின் அடிமட்டம் கண்டவர் இக்கவி வாணர் ஒருவரே.

இப்பொழுது அவர் தனிமனிதன், நாடக சாலைக்கு நாலு நற்கவி பாடிக் கொடுத்து நாலணா கேட்போமா, காலக்ஷேபம் செய்வோருக்கு சில கதை தயார் செய்து கொடுத்து சில்லரை பெறலாமா வென எண்ணுவார்.

நமது வாழ்வு நம்பிக்கை யென்னும் கரையைத் தாண்டி தோல்வி யென்னும் சுழலுக்குள் உரைந்து போகிறதோ வென்பார். ஒருவர் என்ன லக்ஷண மென்றார். அதற்கு அவர் புன்னகையுடன் அவள் லக்ஷணம் கோண்டேன் என்றார். (நான்—அவள் லக்ஷணம். (தன்மை லக்ஷ்மி நீ— (முன்னிலை—சரஸ்வதி) அவள்—(படர்க்கை —மூதேவி) இவ்வித அபிப்பிராயத்தைத் தழுவிச் சொன்னார்.

இரங்கநாதம் கையில் சுருட்டும் வாயில் புகை போகவும், அதனையே பார்த்துக் கொண்டு —என்ன கந்த—மென்று நினைத்த வண்ணமாயிருந்தார். அதன் பிறகு மனிதன் மரண மடைவதில்லை என்ற சிந்தனை யுண்டாயிற்று. இப்படியே பலபல பயாஸ்கோப் படங்களைப்போல் தடைபடும் காக்ஷிகள் தோன்றிக்கொண்டே யிருந்தது. இது நீடிக்குமானால் முடிவில் என்ன ஆகுமோ வெனப் பயமுண்டாக நிதானிக்கலானார்.

இவருடைய தாய் மாமன் தனபதி முதலியார் மைலாப்பூரில் தனித்த இரத்தின மாளிகையெனும் ஒரு பெரிய பங்களாவில் வசித்து வருகிறார். இரங்கநாத முதலியாரின் அதிர்ஷ்டமே

அவர் பங்கில் சம்பந்தப்பட்டதெனச் சொல்லலாம். அவர் தம் மகனுக்கு ஒரு நாள் தங்கிப் போகவே—ஒரு வேளை ஆகாரத்துக்கே—தாராளமாய் உபசரிப்பார். அம்மான் தயாளத்துவம் அதற்கு மேல் எவ்வாறு? இரங்கநாதம் கவீந்திரனாய் ஜொலிக்கும் போதே அவ்வித உபசாரமென்றால், இப்பொழுது மாறுபட்ட நிலையில் என்ன உபசாரம் நடக்கும். தங்குமிடம் பழைய வண்ணாரப் பேட்டையில் பாழ்பட்ட ஒரு குடிசை. அங்கே தான் சந்தேகத்தோடு சுருட்டைப் பிடிப்பது. மைலாப்பூருக்கு வருகிறேன் என்று எழுதிய கடிதம் அநேக நாட்கள் கடந்தும் முற்றுப் பெறவில்லை. மைலாப்பூருக்குப் போனால் 'மனோ சாந்தி அடையலா' மென்பதே. சென்னையில் வசிப்போரைப் பார்க்க வேண்டுமாயின் முன்னதாக ஒரு கடிதம் போட்டுப் பதில் தெரிந்து செய்வதே சிரேஷ்டமாகும். மேலும் தனபதி முதலியார் மகா சமர்த்தர். வடிகட்டின கஞ்சன். காட்சிச் சாலையில் இவரையே முதன்மையாக வைக்கலாம். இவருக்காக எழுதப்பட்ட கடிதம் மேஜையின்மேல் அப்படியே யிருக்கிறது. வேறு என்னமோ எழுத வேண்டுமென்ற எண்ணம். தன் பழைய வீட்டுப் புராதனக் கட்டுக் கடிதங்களில் கிடைத்த பரம ரகஸ்யம். தனபதி முதலியார் கஞ்சனாயிருந்தாலும் மற்றவர்களுக்கு யோசனை சொல்லுவதில் அவருடைய புத்தி, கூர்மையான கத்தியே. ஆகையால் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள அபிப்பிராயம். இவருக்கு இப்பொழுது ஒரு சிநேகிதருண்டு. அவர் பெயர் கர்ப்பநாயகர். நாகரீக உடை தரிக்கவும் ரோமங்களைக் கத்தரித்துப் புதுமாதிரி சீவி அதற்கோர் பெயரிட்டு வருவதையும் இவரிடம் தான் கற்றுக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் வியாபாரத்திலேயே ஊக்கம். இராமாயணத்தையும் பாரதத்தையும் ஓரிரவில் நாடகமாய்க் காட்டிவிடுவது போல் அவர் பல வியாபாரங்களையும் பேசி வாயாலேயே பூர்த்தி செய்வார். ஒரு நாள் விட்டு ஒரு நாள் முக க்ஷவரம் செய்து கொள்வார். அகண்ட நெற்றி, முகம் புத்திசாலித்தனத்தைக் காட்டும். வக்கீல் வேலைக்குப் படித்தவர். சொலிஸிட்டர்களின் ஆபீஸ் மானேஜர் உத்தியோகம். பணத்தை எவ்விதத்திலாவது சம்பாதிக்கப் பேராசை கொண்டவர். எவரையும் அதி சீக்கிரம் கட்டாக்கிக் கொள்பவர்.

இவர் தான் ஆப்த நண்பராயிருக்கிறார். எப்படி சிநேகமானார் என்றால் ஆனந்தபவன் ஓட்டலில் ஒரு நாள் மாலை காப்பி சாப்பிடும் போது சந்தித்தார். அப்பொழுது ரங்கநாத முதலியார் உன்னத ஸ்திதியிலிருந்தார். பின்னுமிருமொறை ஓட்டலில் சந்திக்க நேர்ந்து நெருங்கிய பழக்கமாய் விட்டது. அவர் வீடு வந்து சேர்ந்தார். ரங்கநாத முதலியார் சுருட்டைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பது ஞாபகத்திலிருக்கும். இவர் அவருடைய தரித்திர நிலையைக் கண்டு செலவுக்குக் கொடுத்து வந்தார். கர்ப்பநாயகம் காரணமின்றி இவரை நட்பாக்கவில்லை. ரங்கநாத முதலியாருக்கு திருமயிலை தனபதி முதலியாருக்கு கிட்டிய பந்து வென்றும் அவர் சிநேகம் பெற வேண்டுமென்ற எண்ணமே தவிர வேறில்லை.

நிஸ்ஸப்தமான இடத்தில் காலடி சப்தம் கேட்டது. கர்ப்ப நாயகம் உள்ளே சென்றார். ரங்கநாதம் உடல் அசைவற்றிருக்கிறது. கண் இமையும் ஆடவில்லை. ஞானஞ்ஞான பூமிகளைக் கடந்த பரம ஞானியைப் போலிருக்கிறார். மிஸ்டர்! மிஸ்டர்!! என்று கூப்பிட்டார், சற்று நிதானித்து, உற்றுப் பார்த்து, வாருங்கள், வாருங்கள் என்று சொல்லிக்கொண்டே இரு கைகளையும் கூப்பினார். பக்கத்தில் ஒரு நாற்காலி யிருந்தது; ஆனால் ஒரு கால் இல்லை. என்றாலும் கால் உயரத்துக்கு ஒரு மரப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த நாற்காலியில் இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தினந்தோறும் நண்பரைச் சந்தித்துக் கொண்டிருந்தும், ஒவ்வொரு நாளும் அன்பின் பெருக்கால் உள்ளம் மகிழ்ந்து உபசரிப்பார்.

கர்ப்ப நாயகமும் நமஸ்காரம் என்று சொல்லிக்கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார். ரங்கநாதம் பிடித்த சுருட்டின் நாற்றம் துர்க்கந்தமாயிருந்ததால் தனது சட்டைப்பையிலிருந்து ஒரு கோல்டு மோகர்' சுருட்டைக் கொடுத்தார்.

ரங்—என்னிடமும் இருக்கிறது.

கர்—எறிந்து விடுங்கள்—இதோ உயர்ந்தது. நறுமணமுள்ளது. சரி, யென்று கவிவாணரும் வாங்கிக் கொண்டார். இருவரும் கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தார்கள்.

கர்ப்பநாயகம் இருவர் நன்மையையும் நாடி சிந்தித்த வண்ணமாயிருக்கிறார். கவி வாணர் தரித்திர நிலையில் இருப்பது நன்கு விளங்குகிறது, ஆனால் கர்ப்பநாயகத்தின் தரித்திரம் உடையாலும் வாக்கு சாமர்த்தியத்தாலும் தெரியாதிருந்தது. கர்ப்பநாயகம் முதலில் பேச ஆரம்பித்தார்.

"ஏதாவது விசேஷமுண்டா?

"ஒன்றுமில்லை.

"மிஸ்டர் எனக்கு அடிக்கடி மனோ ஆயாசம் உண்டாகிறது.

"ஆ கடவுளே! அப்படியினால் என் கதி எப்படி", என்று மெது வாய்ச் சொன்னார்.

"மனதில் மாறுதலிருந்தால் தேக சுகத்துக்குக் பழுது நேரிடாதோ?

"மனிதனுடைய கருங்கல் மனமே தேகரோக்கியம்! சிந்தை நொந்தால் தேக பலமுமில்லை. என்னைவிட காம்பீரமாயிருக்கிறாயே!

"ஆனால் நீங்கள் வாலிப நிலையில் இருக்கிறீர்கள் போலும்.

"அதுவும் மனதின் வல்லமை தான். உன் மனதை நல்ல மாதிரியில் அமைத்து வைத்திருந்தால் எல்லாம் சித்தியே—சுகமே. இதைக் கேட்டதும் லாயர் சிரித்து விட்டுச் சொல்லுகிறார்—"என்னுடைய அந்தஸ்துகளெல்லாம் உங்களுக்குப் படிப்படியாய்த் தெரிந்திருக்கலாம். அவைகளை அடுக்கித் தான் உன்னத பதவியை அடையவேண்டும். என் தொழிலை இப்பிரபஞ்சமறியச், செய்கிறேன். என்னுடைய புத்திக் கூர்மையைப் பற்றி நான் வீணாகப் புகழவேண்டியதாகிறது, ஆனால்—

"உன் பெருமை உனக்கு—என் ஸ்திதியை மறந்து விட்டாய்" என்று அந்தக் கலாவல்லபர் சொன்னார்.

"எனக்குக் கொஞ்சம் டயம் (காலம்) கொடுங்கள். எனது நட்பின் உரிமை முற்றிலும் உங்களிடமே யிருக்கிறது. ஆகையால் நீங்கள் அதி சீக்கிரம் செல்வவானாய்—குபேர சம்பத்துடையவர்களாயிருப்பீர்கள். ஒரு காலத்தில் உங்களுடைய வித்வத் தன்மைக்காக உங்களை விரும்பினேன். இப்பொழுது உங்களுக்காக உங்களையே விரும்புகிறேன்; நீங்கள் எனக்குகந்த நிலையில் இருக்கிறீர்கள். ஆனால் மனோ தர்மம் வேறு. நான் எப்பொழுதும் உற்

சாகமாயும் சந்தோஷமாயு மிருக்கிறேன்; மற்றவர்கள் சுகத்துக்காக நான் பாடுபடுகிறவன். ஒரு மனிதனுக்கு எத்தனைவித நற்குணங்கள் உண்டோ அவ்வளவும் பிறர்கண்டு மெச்சக்கூடிய விதமாய் என்னிடத்தில் அமைந்திருக்கிறது. இவைகளுக்கு விரோதமானவை தான் தங்களிடம்.

“எனக்குக் கடவுள் அமைத்தபடி” என்று ரங்கநாதம் சொன்னார்.

“இன்னும் கேளுங்கள், எனது குணத்துக்கு உங்கள் குணம் எதிரிடையானது. நீங்கள் நினைத்தபடி நடக்கிறதில்லை. முடிவில் இருவர் அதிர்ஷ்டமும் ஒன்று. ஆகையால் நாம் ஒத்துழைக்க வேண்டும்.

“எவ்விதமாக?

“முன்னோக்கியே தான் ஸார். இவ்வுலகில் ஒருவன் தன் ஜீவிய காலமாகிய கடலில் அலையாகிய அல்லல்களை விலக்கிக் கொண்டு போவதென்றால் யுத்தகளத்தில் போர் புரிவதை யொக்கும். அப்படிக் கஷ்டப்பட்டாலொழிய மேன்மையை அடையமுடியாது. நானே எனது இராஜ்யம், நானே எனது சைனியம், நானே எனக்கு அரசன். எனது இராஜ்யத்தின் எல்லையைக் கடந்து போக வேண்டும். அடிக்கணக்காக வல்ல, கஜக்கணக்காக வல்ல. ஆனால் மைல் கணக்காய்ச் செல்ல வேண்டும். அப்படிச் செய்தால் தான் இவ்வுலகக்கொள்கைகளை ஜெயங்கொள்ளலாம். நமக்குள் ஒரு தீர்மானம் முடிவுக்கு வருமாயின், நமது மனதுக்கு எது தூரம் எது சமீபம். யோசனை செய்து ஒருவித அபிப்பிராயம் தீர்மானத்துக்கு வந்து விடுமாயின் அக்காரியத்தை நடத்தகால அளவை அமைக்க வேண்டிய அவசிய மில்லை. சரேலென்று செல்ல குறுக்குப் பாதையே தோன்றும். நீங்கள் மாத்திரம் என்னைப் பின்பற்றி வாருங்கள்” என்று சொன்னார்.

“நீங்கள் சொல்வது ஒன்றாவது விளங்க வில்லையே—என்று ரங்கநாதம் சொல்லியும் கர்ப்பநாயகம் அவரைச்சற்றே கூர்ந்து பார்த்து பின்னும் சொல்லுகிறார்.—இப்பொழுது கொஞ்சம் கௌரவமான உத்தியோகத்திலிருக்கிறேன். அதற்குத்தக்க அதிகாரமுமிருக்கிறது. என்னிடம் விசேஷ நம்பிக்கையுமுண்டு. எனக்குப் பேராசையென்பதில்லை. எனது எண்ணம்—விருப்பம்—ஓரளவுக்குட் பட்

டது. இதை என் எஜமானர் அறியமாட்டார்கள். என்னுடைய சாமார்த்தியமெல்லாம் எனது புத்தியில் அமைந்திருக்கிறது. எனது விருப்பத்தின் எல்லையை எந்தச் சட்டதிட்டமும் எட்டிப்பார்க்க முடியாது. எல்லாம் பணத்தில் தானிருக்கிறது. அந்தப் பணம் தான் இப்பொழுது எனக்கு வேண்டும். அதுவே தேவை—மிகுதியாகவே வேண்டும்—

“பணத்தை யார்தான் விரும்புகிறதில்லை? என்று கேட்டார்.

“ஒவ்வொருவருக்கும் வேண்டியது தான். ஆனால் மனோவல்லமைக்கு—யுக்திக்கு—த்தக்கபடி தான் கிடைக்கும். என்றாலும் எவ்வித கஷ்டமுமில்லாமல் ஏராளமாய் திடீரென சம்பாதித்து விட வேண்டும். அமோகமான செல்வம் வேண்டில் வரப்பிரசாத மிருக்க வேண்டும். நியாயமாயும் ஒழுங்காயும் சம்பாதிப்பதென்றால் கிணற்றுத்தவளை போல் கிணற்றின் அடியிலிருக்க வேண்டும். குறுக்கான பாதையிலென்றால் என்னால் நடக்கக்கூடியது. (இப்பொழுது வெகு உற்சாகமாயும் மீசையைத் தடவிக் கொண்டு காம்பீரமாயும் பேச ஆரம்பித்தார். அஞ்சாநெஞ்சு படைத்தவர் என்று எவரும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய விதமாயிருந்தது. ரங்கநாதம் மிகக்கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்.) ஆனால் சமயம் வரும்போது என்னைப் பற்றி நிதானமாய்ப் புகழ்ந்து பேச வேண்டும். அந்தந்தக் காலங்களில் நான் சொல்லுகிறபடி நடக்க வேண்டும். எதை எதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படியே செய்து கொண்டிருக்கும்போது நீங்களும் தங்கு தடையின்றி பின்பற்ற வேண்டும்.

“சரி, அப்படித்தான் செய்ய வேண்டும். உங்களுக்கு நல்ல காலம்—நல்லதிர்ஷ்டம் வந்து விடுமானால் நீங்கள் ஏகபோகமான நன்மையை யடையலாம். ஆனால் நீங்கள் வாயாலயே ஆகாசக்கோட்டை கட்டி விடுவீர்கள். உங்களுக்கு அதிர்ஷ்டமும் கடவுள் கடாக்ஷமும் இன்னமுமா இருந்து கொண்டிருக்கின்றன. வருங்காலத்தில் வந்து போங்காலத்தில் போகும். ஆனால் நீங்கள் கல்நெஞ்சமுடையவர் என்று ரங்கனாதம் சொன்னார்.

“என் விருப்பம் விசாலமானது. எண்ணம் திடமானது” என்றார்.

“ஆனால் காலம் என்பது நாளை நாளையென்று இழுத்துக் கொண்டேபோய் விடும் என்றார் கவிவாணர்.

"அதி சீக்கிரம் என்ற கருவியை என் முயற்சிக்கு முன்னதாக வைத்திருக்கிறேன். நாமிருவரும் ஒரு முடிவான தீர்மானத்துக்கு வருவோம். இனி சோம்பலை அடியோடு நீக்கி விட வேண்டும். பேச்சு காரியம் சமமாக விருக்க வேண்டும். ஒரு விஷயம் வாக்கில் உதயமாய் விட்டால் அது எப்படியும் நடவாமல் போகாது. என்னுடைய கேள்விகள் சரியான பாதையைக் காட்டிக்கொண்டு போகும். சாதாரணமாய்—ஒரு மதிப்பு ரத்னமாளிகை எவ்வளவுக்கு இருக்கும் சொல்லுங்கள்.

"எப்படி மதிப்பிட்டாலும் எட்டு லட்சத்துக்குக் குறைவில்லை. என்றார் ரங்கநாதம்.

அதில் எவ்வளவு, ரத்னமாளிகையிலுள்ள நவரத்னங்களுக்குடையதாகும்.

"மூன்று அல்லது மூன்றரை லட்சம் இருக்கு மென ஒரு திடவை அவர் சொன்ன ஞாபகமிருக்கிறது.

"அப்படியானல் முதலியார் அந்தத்தொகை நம்போன்ற இருவர் வாழ்க்கைக்குப் போதுமான தென்று நினைக்கிறேன். புத்திசாலித்தனமாய் கையாடி வந்தால் விர்த்தியுமாகலாம்.

கனவான், சொத்து எனக்கா "முடிகிற காரியமா அடாதவேலை.

"சந்தேகமே வேண்டாம் முடியாதென்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டாம். ஆனல் என்றவார்த்தையும் வேண்டாம்; நான் நினைத்தபடி செய்கிறதே என்னுடைய வழக்கம். நீங்கள் சற்று வழி காட்டுங்கள் நான் விடாமுயற்சி செய்கிறேன்.

"இதுவரை என்னை தங்கை பிள்ளை யென்று சொல்லிக்கொண்டிருந்தார். சில காலமாக அப்படியல்ல வென்று வெளிப்பட்டது.

"எப்படி யிருந்தாலும் சரி நான் விடப்போவதில்லை, வழிகாட்டி விடுங்கள். நீங்கள் என்னைப் பற்றாது நடுவழியில் விலகி விட்டாலும் சரியே பலவானை யெதிர்ப்பதே எனது சுபாவம். அதுதான் எனது வேலை முன்னலேயே ஆரம்பம் செய்திருப்பேன்; நன்றாய்த் தெரியும் வரை பொறுமையா யிருக்கிறேன்.

ரங்கநாத முதலியாருக்கு மனம் கலங்கிய நிலையில் அருவருப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அதிக ஆசை அதிக நஷ்டம் ஏன் அப்படி பாடுபட வேண்டும்.

"என்ன! என்று ரங்கநாத முதலியாரைப் பார்த்துக் கேட்டார்.

உங்களுக்கு நஷ்டமில்லை சூதானவேலை, ஆபத்தான மார்க்கம். நான் சம்பந்தப்படவே மாட்டேன்.

"தங்கள் மாமனருக்கு சுமார் 60 வயதிருக்கலாம், தேகக்கட்டைக் கவனிக்கும் பட்சத்தில் இன்னும் பதினைந்து அல்லது இருபது வருஷமிருக்கக்கூடும்.

"முரட்டுத்தனமான வேலைகள் நமக்கு வேண்டாம். வீண் யோசனைசெய்யாதேயுங்கள்.

"சரியான அஸ்திவாரத்தோடு வேலைசெய்கிறவன். தோல்வி என்பது என்னிடம் கிடையாது. எந்தவேலைசெய்தாலும் பரிசுத்த மனிதனுகவே தோற்றுவேன்; அது எனது சக்தியின் வல்லமை.

"அது திருட்டுத் தொழிலல்லவா, நியாயமற்ற தல்லவா.

"நான் சொல்லுவதை யெல்லாம் நன்றாய் கிரகிக்கிறீர்களே!

ரங்கனத முதலியார் தன் பார்வையை மாற்றி தலையை அசைத்தார்.

"இவ்வுலகில் நிகரற்ற வைர, வைடூரியங்களை நிறைத்து, ரத்ன மாளிகையாய் வைத்திருக்கிறார். இராஜ செல்வமாய் விளங்குவதை அபகரிக்க நினைக்கலாமா?" என்றார்.

"நான் செய்கிற வேலை எப்பேர்ப்பட்ட தென்று உங்களுக்குத் தெரியாது. சிநேகித பூர்வமாய் அவரை அனுசரித்து அவர் சொத்தை சம்பாதிப்பேன் என்று மெதுவாய்ச் சொன்னர்.

ரங்கனத முதலியாருக்கு யோசனை நின்றுவிட்டது. ஏதோ, துக்கங் கொண்டவர் போலிருந்தார்.

"உங்களுடைய சிநேகிதர் என்று அவர் தெரிந்து கொண்டால் போதும். அவர் சிநேகம் எனக்கு முண்டாய்விடும்."

"நீங்கள் என்ன, தோற்றத்தில் குறைவா, அவர் ஒரு அதிசயமான புருஷர்தான். உங்கள் பரிச்சயம் கிடைக்கும் வரை இவ்வுலகில் அவர் குணம் ஒரு அபூர்வக் காட்சியாய்த் தானிருந்தது.

"நீங்கள் தமாஷாய்ப் பேசுகிறீர்கள்.

"என் மாமனர் வடிகட்டின கஞ்சன். அவர் ரத்தினமே கதி. ரத்தினங்களில் ஒன்பது வகைதானுண்டா, அதற்கு மேலுமுண்

டோ வென்ற சிந்தனையைத் தவிர வேறில்லை. உலகவிவகாரத்தில் எவ்வித கவலையுங் கிடையாது. எல்லாம் அந்த விவித ரத்தினங்களைப் பற்றிய கவலைதான். அங்கு மிங்குமாய் வைத்திருந்த ரத்தினங்களை ஒன்றாய்ச் சேர்த்து, ரத்தினமாளிகை யென்ற புதிய கட்டடத்தை அமைத்து, வெல்வட்டு பட்டுகளில், இஷ்டம் போல் அலங்கரித்து வைத்திருக்கிறார். இந்திர நீலம் மரகதம், வைரமுதலிய ரத்தினங்களுக்கு ஒளியுண்டாகும்படி விசித்திரமான ஜன்னல்கள். அவைகளைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது அவருக்குப் பசியுந் தோன்றாது. அதுவும் ஒரு கண்காக்ஷி சாலை போலிருக்கிறது. சிலர் உபயோகித்த பழய முத்திரை (ஸ்டாம்பு)களை சேகரிக்கவில்லையா. சிலர் பண்டைய பானைகளையும் சட்டிகளையும் சேர்த்து வைக்கிறார்கள். பட்சிகள் கூடுகட்டி ஆகாராதிகளைச் சேர்ப்பதுபோலிருக்கிறது. எப்பேர்ப்பட்ட விலையுயர்ந்த வஸ்துக்களும் ஒவ்வொரு சமயத்தில் அலக்ஷியப்படத் தக்கதாயும், துரும்புக்குச்சமானமாயும் இருக்க வேண்டியதாயிருக்கிறது என்று சொன்னார்.

அதற்கு கர்ப்பநாயகம் சொல்லுகிறார்—உங்களுக்கு ரத்தினம் இன்னதென்று தெரியாது போலும். இவ்வுலகில் பெரிய பொக்கிஷம் அதுவே. அந்த ரத்தினங்களை மதிக்கும் போது இப்பிரபஞ்சமும் ஈடுபடுத்த முடியாது போகும். ரத்தின வியாபாரிகள் அனுபவ எல்லைக்குட்பட்ட விதமாக மதிப்பிடுவார்கள். அதற்கு மேற்பட்டதைக் கொடுத்தால் திகைத்து விடுவார்கள். எனக்குக்கூட அவைகளில் மிக்க பிரியம். நல்ல ரத்தினங்கள் ஒருவனிடம் இருக்குமானால் அதுவே பெரிய அதிர்ஷ்டம். அவனே பாக்கியசாலி. சகல இகபோகங்களையும் அனுபவிக்க வல்லவன். ஒருவனுக்குப் பார்க்கக் கிடைத்தாலும் அது பெரும்பாக்கியம். நேத்திரங்களுக்கு நல்ல விருந்து.

இப்படியே பேச்சு வளர்ந்து கொண்டிருந்தது. இவ்விதம் நல்லவர்களும் மதிமயங்கி தீயநடத்தைக் குட்படுகிறார்கள். இவர்கள் போகும் வழி துன்மார்க்கம் என்பது நன்கு விளங்கும். கர்ப்பநாயகத்தின் மனோ ஆழத்தை எவரும் கண்டு கொள்ள முடியாது. ஒரு நாடகசாலையில் தோட்டி முதல் தொண்டைமான் வேலை வரை வேஷம் போட்டாலும் தகுந்தபடி நடந்து கொள்வான்

கபட நாடகத்தலைவன். ஒவ்வொரு மனிதரின் அறிவும் பகலில் உலக விவகாரம், சொப்பனத்தில் மனோராஜ்ய—கனவூர்க் காட்சி; அதன் பிறகு இவ்விரண்டும். இல்லாத இருண்ட நல்ல தூக்கத்தில் ஒளிந்துக் கொள்கிறது. அதைப்போல இவனுடைய மூர்க்கத்தனம் முரட்டுக் குணம் முதலானவைகள் சமயத்தில் மறைந்திருக்கும். குழந்தையைப் போல் ஒன்று மறியா பேதை யெனப் பசப்புவான். வாழைப் பழத்தில் ஊசியை யேற்றுவது போல பேச்சில் மனிதரை மயக்கி, அவருக்கான அற்ப உதவிகளைச் செய்து தன் காரியத்தில் கருத்துடையவனாயிருப்பான். இதைப் படிக்கும் எனதன்பர்களே! இம்மாதிரியான வஞ்சகம் இவ்வுலகில் அதிகம். உதவி வேண்டாதவன் எவனுமிரான். ஒருகப் காப்பியை அல்லது ஒரு சோடாவை அருந்தச் சொல்லி எட்டணா வேலை வாங்கிக்கொள்வார்கள். ஒருகப் காப்பியைக்கொடுக்கிறாரே என்று விஸ்வாசமாய் நினைக்க அது மிகுந்த உழைப்பில் வைத்து விடுகிறது. இப்படித்தான் பெரிய லாபத்தை விரும்பி கர்ப்பநாயகம் சிநேகம் செய்திருக்கிறார்.

“நீங்கள் வேண்டுமானால் ஒரு நாள் என் கூடவே வந்து பாருங்கள். என் விஷயத்தில் ஒருவித திருப்தியுண்டு. போகும்போதெல்லாம் இரவுதங்கிப் போக வேண்டுமெனச் கட்டாயப்படுத்துவார். ஆனால் எனது நிலைமையைப்பற்றி ஒருபோதும் விசாரித்ததில்லை. “பணம் தேவையானால் புஸ்தகம் எழுதுவாய்” என்று சொல்லுவார். புஸ்தகம்விற்று என்ன கிடைத்துவிடப் போகிறது என்று தமாஷாயும் பேசுவார் என்று சொன்னார்.

“அப்படியானால் அவசியம் நான் பார்க்க வேண்டும் என்று கர்ப்ப நாயகம் சொல்லவும் ரங்கனாதம் லாயரைப்பார்த்த வண்ணமாயிருந்தார். அப்பொழுது ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. காட்டில் ஒரு சிங்கம் வேட்டைக்குப் போகும்போது சில மிருகங்களையும் அழைத்துச் சென்றதாம். கனவு போல் நினைவு மாறி விட்டது.

விசேஷமான நூல்களை ஆராய்ச்சி செய்தவர்களுக்கு எந்த விஷயம் விவகாரத்துக்கு வந்தாலும் அதற்கு சமத்துவமான, கதையோ விஷயமோ நினைவில் தோன்றும்.

“அவர் மனம் ஒரு மாதிரியாயிருந்தாலும் ஆடையலங்காரம் பார்க்கத் தக்கதாயிருக்கும்.

அதுதான்வேண்டும்,வேஷம்இக்காலத்துக்குப்பொருத்தமாய்த் தானிருக்கிறது. ஆள் பார்வையும் அதற்குத்தகுந்த உடையும இருந்தால் என்ன நன்மையைக் கொடுக்கப்போகிறது? என்றார்.

" நீ எந்த விதத்தில் குறைவாயிருக்கிறாய் உன் முகமும் வசிகரமாய்த்தானிருக்கிறது என்றார்.

" அப்படியா, எங்கே நான் பார்க்கட்டும் என்று எழுந்து சென்று ஒரு கண்ணாடியில் தன் முகத்தைப்பார்த்தார். இங்கும் ஒரு சக்தி இருக்கிறதென்று சொல்லிக்கொண்டு மெதுவாய் நடந்துவந்து தமதாசனத்திலமர்ந்தார். என் மனதிலுள்ள விஷயங்களுக்கு என் முகமே அதற்கு அட்டவணை. அதனால்தான் எனக்கு இக்கதி நேர்ந்தது. என்று சொன்னார்.

" ஏன், உன்முகம் அவ்வளவு கெடுதலுடையதா? என்று கேட்டார்.

" என்ன செய்யலாம் எனக்கு அப்படித்தானிருக்கிறது பாழ் பட்ட ஜென்மம் கடவுளோடு சண்டைதொடுத்து நன்மையைத்தொலைப்பவன் என்று லாயர் கர்ப்பநாயகம் சொன்னார்.

இவ்விதமாக அநேகர் பலவிஷயங்களைப் பேசிக்கொண்டே தங்கள் மனதில் அந்தரங்கமாயுள்ள விஷயங்களை எடுத்துக்கொட்டி விடுவார்கள். இது சிற்சிலர் வழக்கம்.

"நீங்கள் ஒரு நூதன புருஷர் அபூர்வ சக்தி வாய்ந்தவர். இதுவரையில் தங்களைப்போல் பார்த்ததில்லை. நீங்கள் உங்களை இப்போர் பட்டவர் என்பதாகத் தெரிந்திருக்கிறீர்கள் இது ஆச்சரியமே என்று பண்டிதர் சொன்னார்.

" நீங்களும் அப்படியேதானிருக்க வேண்டும் என் விஷயத்தை தெரிவிக்குமுன், உங்கள் குணத்தை விசேஷமாய் அறிந்திருப்பீர்கள். எந்த நண்பர் பயப்படாமல் தைரியத்தோடு இன்னொருவரிடம் பழக்கம் செய்து வைக்கிறவரே சிறந்த சிநேகிதராவர் என்று கர்ப்பநாயகம் சொன்னார். இவ்விதம் பேச்சுகள் படிப்படியாய் மாறி பழய கதைக்குத் திரும்பி விட்டது.

"உங்களை தனபதி முதலியாரிடம் என்னவென்று சொல்லி [illegible] என்று கேட்டார்.

" சட்டவிஷயங்களில் தேறினவர், ரத்தினப்பரிக்ஷையில் தேர்ந்தவர், இன்னும் ரத்தின விஷயமாய் மிக்க அனுபவமுள்ளவர் எனச் சொல்ல வேண்டும்.

" எல்லாம்தெரிந்ததாக நீங்கள் பாவனை பண்ணவேண்டாம் அவர் மகாமேதாவி மிக்க அனுபவமுள்ளவர். ஒரு குழந்தையைப் போல் நினைத்து நீங்கள் வஞ்சிக்க முடியாது.

" அந்த விஷயம் என்னைச்சேர்ந்தது நீங்கள் கவலைப்படவேண்டாம் மற்றவர்கள் ஆழ்ந்த தன்மையை நீங்கள், தீர்மானிக்கிறீர்கள். இன்று என் விஷயமாக எனக்கே ஒன்றும் தெரியாது. மூன்று நாட்கள் சென்றபிறகு அவ்விஷயத்தில் ஆழ்ந்த கருத்தை யூன்றி சிந்திப்பேன். உங்கள் யோசனை அபிப்பிராயம் தீர்மானம் எல்லாம் ஒரு தலைப்பட்டது. எவ்வளவுதான் உலகறிந்த கஞ்சனாயிருந்தாலும் ரத்தினத்தில் பேராசை கொண்டவரா யிருந்தாலும் ஒவ்வோரிடத்தில் மயங்குவார்கள்.

"உங்களுக்கு அவரைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர் எவ்விதத்தும் மயங்கக் கூடியவரென்று நினைக்க வேண்டாம். வீணாக நாம் ஏன் சண்டை போட வேண்டும். அது இருக்கட்டும் இப்பொழுது எனக்கு ஒரு முப்பது ரூபாய் தேவை. என் கையில் இரண்டு ரூபாய் தான் இருக்கிறது.

"இப்பொழுது பணம் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும். பணத்துக்கென்ன குறை. இதோ எடுத்துக் கொள்ளுங்கள்" என்று மூன்று பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார்.

ரங்கநாத முதலியாருக்குக் கையில் பணம் வந்ததும் திருப்தியுண்டாய் விட்டது. என்னென்னமோ வாய்க்கு வந்தபடி பேசி விட்டுப் போகிறான். எப்படியானாலும் நம் காரியம் பலித்தது. கஷ்டம் குறைந்தது. "ஒவ்வொரு விஷயமும் கடைசியாக மேல் நோக்கிச் செல்லும்" என்று கர்ப்ப நாயகம் வெளியே போனதும் தனக்குள் சொல்லிக்கொண்டார். தனக்கும் மற்றவர்களுக்கும் அவர் ஐந்து வருஷமாய் இப்படியேதான் சொல்லி வருகிறார்.

ஒரு மணி நேரம் சென்ற பிறகு பிரசித்தியாயுள்ள 'ஆநந்த பவன்' ஓட்டலுக்குச் சென்று இஷ்டம்போல் புசித்தார். கையில் பணம் தாராளமாயிருந்து விட்டால் ஆகாரத்துக்கு அங்கேதான் போகிற வழக்கம்.

மூன்றாம் அத்தியாயம்.

உலோபி—ரத்தினம்.

இரத்தின மாளிகையைக் கண்ணுறுவோர்களெல்லாம் இந்திர லோகமோ! கைலாசமோ! வைகுண்டமோ! என்று காணாத விடங்களை கற்பனையாக நினைத்து மகிழ்வார்கள். புஷ்பவனம் ஒருபக்கம், சோலைகள் ஒருபக்கம், அரசன் தன் பரிவாரங்களோடு தங்கியிருக்கத்தக்க பெரிய ஆல விருக்ஷங்களும் வரிசை வரிசையாகப் பார்ப்பதற்கு மனோகரமாயிருந்தது. இரத்தினமாளிகை தற்போதுள்ள டாக்கர்ஸ் கார்டனைவிட வெகு விசித்திரமாகவே அமைக்கப்பட்டிருந்தது.

தைமாதம் ஒரு நாள் பிற்பகல், சூரியன் அஸ்தமன காலத்தில் இரத்தின மாளிகையைச் சுற்றிலுமுள்ள பூஞ்சோலைகளைப் பார்த்தால் நேத்திரங்களுக்கு விருந்தளித்ததுபோலாகும். அடர்ந்த விருக்ஷங்களில், பல பக்ஷிகள் இங்குமங்கும் உலாவுவதும், அவைகள் கூவுவதும், பார்க்கவும் கேட்கவும் இனிமைதரும்.

இரத்தின மாளிகையைச் சுற்றிலுமுள்ள கம்பிவேலியில் நெருங்கியபச்சிலைக்கொடிகள் நிறைந்திருக்கும். வேலியோ சுவரோ வெனக் கண்டு கொள்ள முடியாது. மாளிகையின் தெருவாசலில் இருவர் வெகு சாவதானமாய்ப் பேசிக்கொடிருந்தனர்.

"நீங்கள் அவர்களுக்காக பயப்படுகிறீர்கள், நன்றாய்த் தெரிகிறதே, என்று ஒருவர் சொன்னார்.

அப்படிச் சொன்னது சந்திர பிம்பத்தை யொத்த ஒரு நாரி—பெண்மணி படித்த பெண்களையும் அவர் இவர் என்று நாகரீகமாய்ப் பேசுங்காலம், ஆகையால் சற்றே மேற்கண்டபடி எழுத நேர்ந்தது. ஒரு ஏழைப் பெண்ணாயினும், தனவந்தன் பெண்ணாயினும் பருவ காலத்தில் மிகச் சோபிதமாக விளங்குவது இயற்கை. கஷ்டம், கவலை, துயரம் என்பது ஒரு சிறிது மணுகாத ஒரு பெண்ணின்முக விலாசத்தைப்பற்றிச் சொல்லவும வேண்டுமா? நல்ல குணமும் அதற்குத் தகுந்த அழகும் ஒருங்கே அமையப் பெற்ற அந்தப் பெண் கல்வியில் சரஸ்வதியோ வென்றெண்ணத் தக்கவளாய் விளங்கினள். எப்பொழுதும் அவள் பார்வைபுன்னகை கொண்டதாயிருக்கும். சிவந்த நிறமுடைய வளாகையால் கன்னங்கரேலென்ற கூந்தலும் ரவிவர்மா எழுதிய சித்திரப்பதுமை யெல்லாம் இப்பெண்ணைப் பார்த்தே தான் தயார் செய்தனரோ வென்றெண்ணும்படியிருந்தது. அவள் நோக்கமெல்லாம் களங்கமற்றது.

" தர்மு! வாஸ்தவமாய் எனக்கு பயமுண்டாயிற்று, உனக்கெப்படித் தெரிந்தது? நான் பிரிந்துபோக உனக்கு சம்மதமில்லை போலும்.

" அப்படியானால் உங்கள்கால்கள் ஏன் பின்வாங்க வேண்டும்.

" எனக்கு தனபதி முதலியாரைத் தெரியாது. கண்டால் சற்று தயங்கி நிற்க நேரிடும்,

" இப்பொழுதே சந்திக்கநேர்ந்தால், இருவருக்கும் கலக்க முண்டாகும்; ஆனால் அவர்கள் உங்களை இன்னாரென்று கண்டுகொண்டால் சந்தோஷமாய் முடியும். நல்லது போய்வருகிறேன். என்று சொல்லி உள்ளே சென்றாள்.

" தர்மு! ஒருவார்த்தை—கவியை விரும்புகிறாயா? கவீந்திரனை விரும்புகிறாயா? என்று ரஞ்சிதத்தைக் கேள்.

" நல்ல கேள்விகளைக் கேட்டீர்கள் கேட்டு நாளைக்குத் தெரிவிக்கிறேன் என்று சொல்லி மாளிகைக்குட் சென்றாள்.

மாலை வேளையானதால் தர்மாம்பாள் வழக்கம்போல் ஒரு வெள்ளிக்கோப்பையில் (டீ) தேத்தண்ணீர் ஊற்றிக்கொடுத்து சிற்றப்பனாகிய தனபதி முதலியாரை அருந்தச்செய்து தானுமருந்தி உலாத்துவதற்காக புஷ்பவனத்தை நோக்கிச் சென்றார்கள்.

அவருடைய குடும்ப விஷயமாய் விபரம் தெரிந்து கொள்வோம்.

ஒரு குடும்பத்தில் மூவர் பிறந்தனர். அதில் இரண்டு ஆண் ஒரு பெண். முதலாவது பிறந்த சுப்பராய முதலியார் திருச்சினாப்பள்ளி

கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தாவாயிருந்து இப்பொழுது சப்மாஜிஸ்ட்ரேட்டாயிருந்து வருகிறார். அவருடைய தம்பி தனபதி முதலியார் சென்னை பச்சையப்பன் கலாசாலையில் வாசித்துக் கொண்டிருந்தார். மெட்ரிகுலேஷன் வகுப்பில் ஆறுவருஷம் படித்தார். 5 வருஷம் பரிக்ஷையில் தேறாதிருந்தாலும் இங்கிலீஷ் எழுதுவதிலும் பிரசங்கம் செய்வதிலும் நார்ட்டனாவது மிஸ்ஸஸ் அன்னிபெஸண்டாவது நிகராகமாட்டார்கள்; ஆனால் அடுத்த வருஷம் பரிக்ஷையில் தேறினார். மகாயுக்தி படைத்தவர். இங்கிலீஷ்காரர் அமெரிக்காதேசத்தார் வெளியிடும் பத்திரிகைகளையெல்லாம் ஆராய்ச்சி செய்வது வழக்கம். இவருடைய தங்கை *கமலத்தம்மாள் வைதவ்யத்தை யடைந்து ஸ்ரீரங்கத்தில் வசித்து வருகிறாள். அவளுக்கு இரண்டு பெண்களும் ஒரு ஆண் குழந்தையும் இருக்கின்றன. அதில் ஒரு பெண் மனோரஞ்சிதத்தையும், தமயன் பெண் தர்மாம்பாளையும், தனபதி முதலியார் வளர்த்து வந்தார்.

தனபதி முதலியார் ஆங்கிலத்தில் வல்லவராயிருந்தும் உத்தியோகத்தை நாடவில்லை. வியாபாரம் செய்வதில் மிகப்பிரீதிகொண்டவராயிருந்தார். பலகாலம் பம்பாய் ராபர்ட் கம்பனியில் தரகு வியாபாரம் செய்துகொண்டிருந்தார். அந்தக்கம்பனியில் பஞ்சுவியாபாரம் மான்செஸ்டருக்கு விசேஷமாய் ஏற்றுமதிசெய்து வந்தார்கள். சிலகாலம் சென்றபிறகு தனபதிமுதலியார் சொந்தமாகவே பஞ்சை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தார். இதனால் திரண்டசெல்வம் அருவிபோல் பெருக ஆரம்பித்தது. கைவைத்தவிடமெல்லாம் பொன்விளையத்தக்கதாய் விட்டது. சீமையைப்பார்க்க வேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. அநேக இங்கிலீஷ் வியாபாரிகள் சீமைக்குப்போனபோது இவரும் கூடவே சென்றார்.

தனபதி முதலியாருக்கு சந்தேகமென்பதே கிடையாது. இந்த வியாபாரம் நடக்குமோ இதில் லாபம் கிடைக்குமாவென்ற குறுகிய நோக்கமே கிடையாது. பாடசாலையில் மாணவர்கள் ஒருபோதும், கழிக்கும்போது எப்படி அவர்களுக்குக் மொத்ததொகை கூடியதை பற்றியேனும் குறைந்ததைப்பற்றியேனும் விசாரம் கவலை எண்ணம் வருவதில்லையோ, அதைப்போல வியாபாரம் விர்த்திக்கானதால் கவலை அனாவசியம்என்று சொல்லுவார். சீமையிலிருக்கும்போது சுதேசமித்திரனுக்கும் ஹிந்துப்பத்திரிகைக்கும் விஷயதானம் செய்து வந்தார்.

அதிர்ஷ்டம் என்பது தோழன்போல் பக்கத்திலேயே அமர்ந்து ஒன்றுக்குப்பத்தாய், நூறாய்க் கொடுக்க சித்தமாய் இருந்தது போலும். இவரை எவரும் லகுவில் வஞ்சிக்க முடியாது. இவரிடத்தில் அருங்குண மொன்றுண்டு. ஒருவரை முதல்தடவை பார்த்த மாத்திரத்தில், இன்ன குணமுடையவர், இவ்வித நோக்கமுள்ளவர் என்று அறிந்து கொள்ளுவார். நண்பர்களிடத்தில் மற்றவர்களின் குணங்களைப் பற்றி சொல்லுவார். அவை மிகப்பொருத்தமாயிருப்பதுபற்றி அவரது வாக்குத் திறமையைப் பற்றி ஆச்சரியப்படுவார்கள். அஞ்சாத நெஞ்சும் குன்றாத பலமும் அளவற்ற தைரியமுமே இவருடைய அபிவிருத்திக்குக் காரணமாயிருந்தன. அவர் எண்ணம் எப்பொழுதும் முன்னேற்றத்துக்கான வழியிலேயே வேலை செய்து கொண்டிருக்கும். பத்திரிகைக்கு விஷயம் எழுதுவதில் மகாநிபுணர். சிலகாலம் சென்னையில் பிரசுரமாய்க் கொண்டிருந்த, 'ஸ்டாண்டர்டு' என்னும் இங்கிலீஷ் பத்திரிகைக்கு பத்திராசிரியராயிருந்தார். இவ்விதமாக அவர் ஊக்கம் அறுபது வயது வரை பலவழியிலும் சென்று பிரபலமான வேலை செய்தது. இப்பொழுது அவருக்கு வயது அறுபதாய் விட்டதால் நவரத்னங்களைச் சேர்த்து வைத்து பார்த்து மகிழ்ந்திருக்க எண்ணமுண்டாயிற்று. அபூர்வரத்தினங்களை கொஞ்சங்கொஞ்சமாய் வாங்கிவந்தார்.

வயது முதிரமுதிர தான் தன் பெயருக்கேற்ப அளவற்ற செல்வத்தையடைந்தும், நடையுடையால் காட்டிக் கொள்ளவில்லை. அவருக்குள்ள அபார சொத்தைக்கொண்டு மதிக்க வேண்டுமேயன்றி, அவருடைய உடையால் மதிக்க முடியாது. சென்னையிலுள்ள ஒவ்வொரு பாங்கிலும் இவர் பணம்போட்டிருந்தார். எவ்வளவுக்கு செல்வத்தைச் சேகரித்தாரோ, அவ்வளவுக்கு அனுபவமும் பெற்றிருந்தார், உலகெலாம் சுற்றி வந்தவர். ஒவ்வொரு தேசத்தாரையும் நன்கறிந்திருந்தார். இருமுறை அமெரிக்காவிலுள்ள நியூயார்க் சிக்காகோ முதலிய பெரிய பட்டணங்களில் மாதக் கணக்காய் வாசஞ் செய்திருந்தார். *கிணற்றுத் தவளை போல் இந்தியாவில் அநேகர் பழங்கதை பேசிக்கொண்டு அயல்தேசம் போவது பெருந்தவறென்றெண்ணும் பிரபுக்கள் இருக்கிறார்களே என்று வருந்து

* இந்த ஜாதிக்கட்டு, புரோகிதக் கட்டு சாஸ்திரக்கட்டு, புராணக்கட்டு இவைகளெல்லாம் 1919-ம் வருஷத்தில் கட்டவிழ்ந்து விட்டது.

வார். சுதேசமித்திரன், இந்து முதலிய பத்திரிகைகளை ஸ்தாபித்த மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய அய்யர் இவருக்கு ஆப்த நண்பர்.

சுமார் பன்னிரண்டு வருடம் ரத்தினங்களைச் சேகரித்து வந்தார். மைலாப்பூரில் மரங்களும், செடி கொடிகளும் அடர்ந்த ஒரு பெரிய தோப்பை வாங்கி சீர்திருத்தி அரசர் வாழத்தக்க அரண்மனையைப்போல் கட்டி, அதற்கு இரத்தின மாளிகை யெனப் பெயரிட்டார். இரத்தினங்களுக்குப் பிரத்தியேகமாய், வெகு பந்தோபஸ்தான கட்டடம் தயார் செய்யப்பட்டிருந்தது. வயது அதிகமாய் விட்டதால், சுகவாசியா யிருக்க நினைத்த தனபதி முதலியாருக்கு இப்பொழுது இரத்தின விஷயமாய் உலகெலாம் கடிதப் போக்குவரத்து ஏற்பட்டது. சுருங்கச் சொல்லவேண்டுமானால் அவர் உயிர் அந்த ரத்தினங்களுக்குள் தான் இருந்தது. அவர் ஒருவழிப்பட்ட விருப்பத் தோடிருந்தாராதலால், பந்துக்களைப் பற்றியாவது, நண்பர்களைப் பற்றியாவது நினைப்பதே கிடையாது. கடன் கைம்மாற்று கொடுப்பதும் கிடையாது, வாங்குவதுங் கிடையாது. ஹைகோர்ட்டு வக்கீல் முத்தையா முதலியாரைத் தவிர வேறு எவருடனும் தாராளமாய்ப் பேசமாட்டார். தர்மாம்பாள் முத்தையா முதலியார் வீட்டுக்குத் தான் போவது வழக்கம்.

எதனை மறந்தாலும், தான் தாயையும், தான் பிறந்த ஊரையும் மறக்க முடியுமா? முடியாது. தன் தங்கையின் குழந்தைகளில் மனோரஞ்சிதத்தையும், தமயன் குழந்தைகளில் தர்மாம்பாளையும் அழைத்து வந்து வளர்த்து வந்தார். தனபதி முதலியாருக்கு சம்பந்த முதலியாரின் பழக்கமுண்டு. அந்த ரத்தினங்களை விலைக்குக் கொடுத்தால் வாங்கிக்கொள்ளலாமே யென்ற எண்ணங்கொண்டவர். ஒரு நாள் தனது பந்துக்களில் ஒருவரும் வக்கீல் வேலைக்குப் படித்து வருபவருமான நவனீதக் கிருஷ்ண முதலியாரையும் அழைத்துக் கொண்டு போயிருந்தார். தனபதி முதலியார் இவரை யாரென வினவினார். மதுரை டிப்டிக் கலெக்டர் சுப்பையா முதலியாருடைய குமாரன் லா காலேஜில் படிக்கிறார் என்றார். இந்த நவனீதக் கிருஷ்ண முதலியார் தான் மாளிகைக்கு வெளியே தர்மாம்பாளுடன் பேசிக் கொண்டிருந்தது. தனபதி முதலியாரிடத்தில் ஒரு விசேஷமான குணமுண்டு. அதாவது தமது பங்களாவுக்கு எவ

ரேனும் புதிதாய் வந்தால் ஒரு வேளை சாப்பிட்டு விட்டுப் போகும்படி உபசரிப்பார். தர்மாம்பாள் சுமார் ஆறு மாதமாய் நவநீத கிருஷ்ண முதலியாரைத் தெரிந்து வைத்திருக்கிறாள். இவர் தனக்கு தாய் மாமன் பிள்ளை யென்றே முறையில் காதல் கொண்டவராயிருந்தார். தர்மாம்பாளுக்கு மனதில் ஒருவித பயமுண்டு. அவர் தனக்குத் தகுந்தவரன் என்று நினைப்பதே. இருவர் நெருங்கிய பழக்கத்துடனிருந்தும் தனபதி முதலியார் எவ்விதமான கேள்வியையும் கேட்டாரில்லை.

தனபதி முதலியார் சிறு அறைகளிலிருந்தால் குருகிய நோக்கமுண்டாகு மென்றெண்ணி விசாலமான விடங்களிலிருப்பது வழக்கம். பங்களாவில் பெரிய ஆலில் இருந்து வருபவர்களிடம் பேசுவார். ஆள் ஆறடி உயரமும் அதற்குத் தகுந்த உடலும், பார்க்கிறதற்கு கம்பீரமாகவே, தோற்றுவார். அவர் தலையோ மிகப் பெரிது. வாக்கும் காரியமும் வீரத்தன்மை யோடிருக்கும். நினைத்த எண்ணத்தை மாற்றி நினைப்பதே கிடையாது. அதாவது சந்தேகமே கிடையாது.

தனபதி—"நீ யாருடன் பேசிவிட்டு, மிகக் குதூகலத்தோடு வந்தாய்" என்று தர்மாம்பாளைப் பார்த்துக் கேட்டார்.

தர்மு—மதுரையிலிருந்து வக்கீலுக்காக படிக்க வந்திருக்கிறார்களல்லவா—

தன—ஓ! டிப்டி கலெக்டர் மகனா? அன்று இங்கு வந்திருந்தாரே அவர் தானே—நவனீதம்.

தர்மு—ஆமா, அவர்கள் தான்.

தன—உனக்கு நன்றாய்த் தெரியுமா?

தர்மு—உங்களுக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவு தான் எனக்குத் தெரியும்—என்று புன்னகையுடன் சொன்னாள்.

தன—ஒரு நாள் மாலை கண்டது தான். அவரைப்பற்றி எனக்கு அதிகமாய்த் தெரியாதே, என்று சொல்லிக் கொண்டே இரத்தின மாளிகையை நோக்கினார். அதைப்பற்றி பிறகு—அந்த விஷயம் என்னிடம் வரும் போது அபிப்பிராயம் தருவேன் என்று சொல்லிவிட்டு, தான் இரத்தின மாளிகைக்குச் சென்றார்.

*இரத்தின மாளிகையின் பிரதான கட்டடம் மிகச் சிறிதாயினும் உறுதியானது. 15 சதுர அடி உள்ளது. சுமார் ஆறு ஜன்னல்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. தனபதி முதலியார் தமது அரையிலிருந்து பார்த்தால் இரத்தின மாளிகை நன்றாய்த் தெரியும். சுவர்கள் கனத்த இரும்பு கம்பிகளை நட்டு கட்டப்பட்டிருந்தன. அஸ்திவாரத்தில் கற்பாறை யுளதால் பந்தோபஸ்தாயுமிருந்தது. வாசற்கதவுகளும், இரும்புப் பெட்டிக்குள்ளது போலவே யிருந்தது. இரத்தின மாளிகைக்குட் சென்றதும் ஒரு பொத்தானைத் தட்டினார். ஒரு ஜன்னலில் கதவுகள் திறக்கப்பட்டன. அதன் வழியாய் வந்த ஒளியானது, ஒரு *(ரிபிளக்டர்) கண்ணாடியில் பட்டதும் எட்டுக் கண்ணாடியில் பிரதிபலித்தது. இதனால் அங்குள்ள ரத்தினங்களிலும் படிந்து ஒரே பிரகாசமாயிருந்தது. என்றாலும் எலக்ட்ரிக் விளக்குகளை அமைத்தால் அற்புதமாயிருக்கும், என்று தனக்குள் நினைக்க, சந்தோஷமுண்டாய் விட்டது. அந்த இரத்தினமாளிகையின் மத்தியில் வைரங்கள் பதித்த நாற்காலியும் இருந்தது. தனபதி முதலியார் தான் இருந்து பார்க்க பெரிய நாற்காலியுமிருந்தது. இலங்கை அனுராதபுரத்து நீலரத்தின வகைகள், பர்மாதேசத்து பச்சை ரத்தினங்கள் இப்படி தேசவாரியாய், அதற்குத் தகுந்த கண்ணாடி யமைத்த மேஜைப் பெட்டிகளில் விநோதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆவர் நகரின் மரகதங்கள் மாதிரிக்காக வைக்கப் பட்டிருந்தன. முத்துச் சலாவம் நடக்கும் போதெல்லாம் இலங்கை மார்க்கமாய்ச் சென்று, சிப்பிகளை வாங்கி தன் அதிர்ஷ்டத்தின் மதிப்பைப் பார்க்காமல், விற்கப்படும் முத்துகளைப் பார்த்து வாங்கி வந்தார்.

இரத்தினங்களைச் சேகரித்தது பெரிதன்று; ஆனால் பார்வைக்கு இங்கிதமாய்—மனோகரமாய் அழகு படுத்தியிருப்பது தான் விநோதக் காட்சி.

ஒரு லட்சத்துக்கு வாங்கின ரத்தினங்களை பார்க்கும் ரத்தின வியாபாரிகள் பத்துலட்சத்துக்கு மதித்தார்கள். உயர்ந்த வெல்வெட்டுகள் எத்தனையுண்டோ, அத்தனையும் அங்கே காணலாம். ஒவ்வொரு பெட்டிக்கு மேலும், வெல்வெட்டில் வைரங்களைக் கொண்டே மாணிக்கம், மரகதம், வைரம், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம், இந்திர நீலம், *முத்து, பவளம் இவ்வித வார்த்தைகள் பதிக்கப்பட்டிருந்தன.

ஒரு விநோதக் கதை

பீமசேனனுக்கு ஒரு உத்தியோகம்

புராணங்களைப் படித்தவர்களுக்கும், கேட்டவர்களுக்கும், தூருவாச முனிவரைப்பற்றி ஞாபகமிருக்கும். இவர் மகா முன்கோபி. காட்டில் தவம் செய்பவர். தனக்கு வேலை செய்யத்தக்க ஒரு வேலைக்காரனை நியமித்துக் கொள்வது நலமென்று சித்தம் பிறந்தது. இவர் துறவறம் பூண்டவராதலால், தம்மெண்ணத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்; அல்லது அதனை நிக்ரகம் செய்யவேண்டும்; ஆனால் இம்முனிவருக்கு பூர்த்தி செய்வதென்ற ஆவல் உண்டாயிற்று.

பஞ்சபாண்டவர்களிருக்கு மிடம் சென்றார். தர்மர் இவருக்கு வேண்டிய மரியாதை செய்து உபசரித்தார். பிறகு வந்த காரணத்தை வினவ, தமக்கொரு வேலைக்காரன் வேண்டும்; வனத்திலிருந்து யோகம் செய்கிறேன். யோக நித்திரை தெளிந்தவுடன், பல்துலக்கவும் ஜலத்தைத் தேடவும், ஆகாராதிகளைத் தயாரிக்கவும் வெகு கஷ்டமாயிருக்கிறது. இதற்குள் பசிப்பிணி பற்றிக்கொள்கிறது. இந்தக் கஷ்ட நிவர்த்திக்காக ஒரு வேலைக்காரன் தேவையென்று கேட்டார் அதற்கு தர்மர்,

மகாமுனிவரே! தவச் சிரேஷ்டரே! தங்கள் உத்திரவுக்குக் காத்துக் கொண்டிருக்கிறேன். எங்கள் ஐவரில் தங்களுக்கு இஷ்டப்பட்டவரை அழைத்துக் சொல்லலாம். யாதொரு ஆக்ஷேபனையுமில்லை" யென்று சொன்னார்.

திடசரீரமும், பலமும் உள்ள பீமசேனன்தான் தகுந்தவனெனத் தீர்மானித்துக் கேட்டார். தர்மராஜனும் தடையின்றி அழைத்து செல்லுங்கள் என்றார்.

மனமானது, இப்பொருளை ஒருவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று நினைத்து விடுமானால், எதிரேயிருக்கிற பொருளை எடுத்துக் கொடுக்க மாட்டேனென்றும் கை சொல்லுமோ. சர்வாதிகாரமும் அந்த மனதுக்கே தான்.

அதைப்போல பீமன் தன் தமயன் உத்திரவு செய்தவுடன் கைகூப்பி நமஸ்கரித்து முனிவர் பின் சென்றான். அன்றிரவு வனத்திலுள்ள ஆஸ்ரமம் போய்ச் சேர்ந்தனர்.

மறுநாள் அதிகாலையில் முனிவர் எழுந்ததும், ஹேபீமா என்றழைத்தார். உடனே எதிர்வந்து நின்று தலைவணங்கி, கைகூப்பி, வாய் பொத்தி, "உத்திரவுக்குக் காத்திருக்கிறேன்" என்றனன். நல்லது பீமா, பல் துலக்கவேண்டும, கருவேலங்குச்சி கொண்டுவாவென்றார். 'ஸ்வாமி அப்படியே' என்று சொல்லி விடைபெற்று, காட்டிற்குள் சென்று நாலைந்து கருவேல் மரங்களை வேரோடு பிடுங்கிக்கொண்டு வந்து ஆஸ்ரமத்தின் முன்போட்டு விட்டு மறுபடியும கைகூப்பி தலைவணங்கி ஸ்வாமி இனி பல்துலக்கக்குச்சி வேண்டுமென்று கேட்கக்கூடாது; வேண்டும் போதெல்லாம் இவைகளிலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள் என்றனன். இவன் வேலையையும் அவன் மொழியையுங் கேட்டு, சற்றே திகைத்துப்போனர்; ஆனாலும் பரவாயில்லை இன்னும் பார்ப்போமென்று பீமா வென்றழைத்தார். 'ஸ்வாமி சித்தம்' என்று எதிரே வணங்கி நின்றனன். நல்லது, பல் துலக்கியாய் விட்டது, ஜலம் கொண்டு வா வென்றார். 'அப்படியே' என்று சொல்லி விடை பெற்று, வனத்தின் நாலு பக்கங்களையும் பார்த்தனன். எங்கேயோ நதிபோவதாயறிந்து, ஓடோடிச் சென்று, பெரிய காட்டாறு போகக் கண்டு, அதிலிருந்து ஒரு கால்வாய் பறித்து ஆஸ்ரமம் வழியாய்ப் போகும்படி செய்து விட்டான். இனி ஜலம் வேண்டுமென்று உத்திர விடக்கூடாது, என்றனன். பார்த்தார் முனி புங்கவர். இவன் பீமன் தானோ அல்லவோவெனச் சந்தேக முண்டாயிற்று. மூன்றும் முறை வேலையேவ பயந்து விட்டார். ஒருவாறு விசாரிப்போமென்று தனக்குள் தீர்மானித்தார்.

"பீமா! என்ன எதைக் கேட்டாலும் வேரோடு பிடுங்கிக் கொண்டு வந்து, அபாரமான வேலையைச் செய்து, 'இனி கேட்காதே' என்றும் சொல்லிவிடுகிறாயே யென்று கேட்டார்.

"ஸ்வாமி! அடியேனுடைய வேலை அப்படித்தான். எதாவது வேலை செய்யும்படி ஏவினால் திரும்ப மறுமுறை அவ்விதக் கேள்வி பிறவாதிருக்கும்படி செய்து விடுவேன். மேலும் தாங்கள் முன் கோபி. அதற்குத் தகுந்தபடி நடக்க வேண்டியதென் கடமை என்றான் பீமன்.

"போதும், போதும்! பீமா எனக்கு இனி வேலை செய்ய வேண்டாம், நீ போகலாம் என்றார்.

"அண்ணா கோபித்துக் கொள்வார், தேவையில்லையானால் அண்ணாவிடம் நேரில் சொல்லி விட வேண்டும்" என்று பீமன் சொன்னான்.

தூருவர்சமுனிவருக்கு கோபம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்தது. வேலையிடுவதில் திகில் உண்டாய்விட்டது அந்த பயத்தையொழிக்கவே, பீமனை வேலையைவிட்டு நீக்குகிறார். அம்மட்டோடல்ல, தர்மிரிடம்கொண்டு போய் விட்டுவிட வேண்டுமென்றும் சொல்லுகிறான். பெரிய தர்மசங்கடமாயிருக்கிறதே என்று சிந்தை நொந்தார்.

வேறு விதியின்றி பீமனை அழைத்துக் கொண்டு போய் தர்மரிடம் விடுத்து ஏ தர்ம நந்தரே! போதும் பீமன் எனக்கு சிஷ்ருசை செய்தது. வேலைக்கு ஆள் வேண்டாமென்றார்.

"ஸ்வாமி! யாது காரணம் பற்றி வருந்திச் சொல்லுகிறீர்களோ தெரியவில்லையே என்று கேட்டார்.

"பீமனுக்கு ஒரு வேலை யேவினேன், அவன் அதை வேரோடு பிடுங்கி வந்தான். அவனுக்கான வேலையும், அதற்குத் தக்கபடி ஆகாரங் கொடுக்கவும் என்னால் முடியாது. நான் முன்போலவே இருந்து கொள்வேன், என்றார்.

"தங்கள் சித்தம் எப்படியோ அப்படி, என்றார் தர்மர்.

தப்பித்தது தம்பிரான் புண்ணியமென்று தூருவாசமுனிவர் யதாப்பிரகாரமிருந்தார்.

சிலருக்கு வேலை யேவினால் பீமனைப்போலும் அதற்கு மேலும் செய்வார்கள். கட்டிக்கொண்டு வாவென்றால் வெட்டிக்கொண்டு வருவார். ஒரு படி உப்பு வாங்கி வாவென்றால் பத்துப்படி வாங்கிவருவார். 5 பலம் கடுகுக்கு ஒரு வீசை கடுகு வாங்கி வருவார். இப்படிச் செய்தால் பீமனுக்கு உத்தியோகம் கொடுத்தது போல் என்று வழங்கச் சொல்லாய்விட்டது.

பிரபஞ்ச விலாஸம்

1. எத்தனை தான் வேலைக்காரர்களை செளகரியத்துக்காக வைத்துக் கொண்டாலும் சமயத்திலே நல்ல நாளிலே நால்வர் வந்திருக்கும் போது உதவுவதும் அபூர்வம். காரியத்தையும் கெடுத்து விடுகிறார்கள். வெற்றிலை வாங்கிவர அனுப்பினால் நம்மைக் காணவந்தவர்கள் புறப்பட்டுப் போனபிறகு வெற்றிலையுடன் வீடு திரும்புகிறான். இவனைத் தேடிக்கொண்டு ஓடவும் வேண்டியிருக்கிறது. நமது கண்பார்வை யில்லாமல் எதுவும் சரிவர ஆவதில்லை.

2. தீபாவளி வரும்போதெல்லாம் கடனும் கூடவே தொடருகிறது. பலகாரம் சாப்பிட்டானதும் தீபாவளி முடிந்து விடுகிறது. இந்த சொற்ப நேரமுடிவுக்காக ஏழைவீட்டு துரும்பு முதற்கொண்டு பணக்காரர் வீட்டு இரும்புப் பெட்டி வரை ஆட்டம் கொடுத்து விடுகிற ஆரவாரம் சொல்லொணாது.

3. நல்ல பொருளை வாங்கி வந்தாலும் உனக்குக் காசுத்திமிர்—கண்மண் தெரியவில்லை, அதனால் இப்படி அதிகம் போட்டு வாங்குகிறாய் என்கிறார்கள். எதிர் வீட்டுக்காரனைக் குறிப்பிட்டு—அந்த எதிராளி சொற்பத்தொகை போட்டாலும் தங்கப் பிரகாசம் போல் வாங்கி வந்திருக்கிறான் என்கிறார்கள். விலைநயம் கருதி வாங்கி வரினோ—அது என்னத்துக்கு—குப்பையில் போடு என்கிறார்கள். என்ன செய்வது?

4. வீட்டுத்தலைவன் தீபாவளிக்காகத் தன்னைப் பணத்துடனும் கடனும்பட்டு எவ்வளவோ பொறுமையுடனும் செலவிடுகிறான். இவ்வளவு பாடும் தன் வீட்டார் சந்தோஷமுகமாய்த் தன் முன் நிற்பார்களென்றும், திருப்தி யுள்ளத்தோடும் அவர்கள் உற்சாகமாய் இருப்பதைப் பார்த்து ஆனந்திக்கலா மென்றும் எண்ணித்தான். இந்தத் திருப்தி ஸந்தோஷ ஆனந்தத்துக்கு வீட்டுத் தலைவனுக்கு மட்டும் இவ்வளவுவிலை மற்றவர்களுக்கோ கிரயமில்லை இனாம்.

5. காலத்தில் செய்கிற ஒரு காரியம் என்றும் மறக்க முடியாத பெரும்மாளிகையாகி விடுகிறது. முத்துச் சிப்பியில் விழுந்த ஒரு மழைத்துளி முத்தாய்விடுகிறது. காலமறிந்து நண்பர்களுக்கும் பந்துக்களுக்கும் பிறர்க்கும் செய்கிற உதவியும் அப்படியே; ஆனால் இதற்குப் பிறவிக் குணத்தில் அமைந்த கொடையும் தயையும் இருந்தால்தான் முடியும்.

6. குழந்தையை ஜவுளிக்கடைக்கு அழைத்துச் சென்று ஏது வேண்டுமென்று கேட்டால் அப்பா எனக்குப் பட்டாசுகட்டு முதலில் வாங்கிக் கொடுத்துவிடு. அப்பால் வேண்டிய த கட்டும் என்கிறான். கவலையற்ற குழந்தைக்கு முதலில் வேண்டிய பக்ஷணம் விளையாட்டு, பிறகே மற்றது.

7. தான் உடுத்து மகிழ்வதற்காகத் தன் தந்தை ஆடையாபரணங்கள் வாங்கவில்லையென்றும், தனக்கு அணிவித்துப் பார்த்துத் தாம் மகிழ்வதற்காகவே தன் தந்தை இவ்வளவும் வாங்கினாரென்று சிறுவர்கள் எவரும் அறிவதில்லை. உண்மை விளக்கம் பெறுதற்கின்றி இளமையிலிருந்தே அவர்கள் மாய்கை வசப்பட்டுப் போகிறார்கள்: வயது முதிர்ந்த பின் கேட்பானேன்?

8. திருப்தி என்பது சில சமயங்களில் மூவருக்கும் ஒன்றாகவே முடிகிறது. செலவு செய்பவன் இஷ்டப்பட்ட பொருளை வாங்கி வீட்டிற் கொடுத்துத் திருப்தி யடைகிறான். வீட்டிலுள்ளோர் அதை மகிழ்ந்து பெற்று ருசித்துத் திருப்தி யடைகிறார்கள். பணத்தைச் செலவிடாத லோபியோ ஏதுமே வாங்காமல் தன் பணம் வீண் விரயமின்றி மிச்சமானதற்குப் பெரிதும் திருப்தி பூரிக்கின்றான். மொத்தத்துக்கு எல்லாம் திருப்தியினுடையவும் முடிவு சுகம் ஒன்றே.

9. வெளியூரிலிருந்து வந்த நண்பரை அவரது நேயர் "தீபாவளிக்கும் இங்கு தானே"—என்று வினவினர். அப்பொழுது அந்த நண்பருக்கு அதன் பொருள் விளங்கவில்லை. தீபாவளியும் வந்தது. நண்பருக்கு அவரது நேயர் என்றுமில்லா விதமாய் பட்டுப்பட்டாவளிகள் வாங்கி இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றார். அப்

வாந்திபேதியும் அதன் சிகித்சையும்

திருவண்ணமலை ஆயுர்வேத வைத்தியர்,
ஸ்ரீமான், அ். வெங்கடாசல முதலியார் எழுதியது.

அலசரோகத்தை யுண்டாக்கி அடங்கியிருந்த ஆமதோஷமானது அதி கரித்து வெளிப்படுவதினாலும், அதற்கு உபபலமாகச் சூரிய வெப்பம் அதி கரிப்பதாலும். விஷூசிவி (வாந்தி பேதி) ரோகம் பிறக்கும் உதி, பேதி, வாந்தி முதலிய பலபல உபத்திரவங்களைக் கொண்டும் திரிதோஷ மிகுதி யைக் கொண்டும், சரீரம் முற்றிலும் ஊசியாற் குத்துவது போற்குத் துவ தால் விஷூசிவி ரோகம் எனப்பெயர் பெற்றது. இது சீதாங்கஜன்னி பாகத்தை யொத்ததால் உடனே வைத்தியம் செய்ய வேண்டும்"

செய்யுள்

"கேளப்பா ஊழியென்ற காற்றைச் சொல்வேன்
கொடியான சாமனா தேவியாலே
காளப்பாமயம் போல கறுத்துநிற்கும்
கண்ணுக்குத்தோன்றாது கடினமெத்த

போது தான் நண்பருக்கு—"தீபாவளிக்கு இங்கு தானே"—என்று கூறிய முன் வாசகத்தின் பொருள் விளங்கிற்று. தமக்குத் தீபாவளி வேண்டாமென்று எதுவும் வாங்காதிருந்த நண்பர் தன் நேயரின் திருப்திக்காக அவர் அளித்த ஆடைகள் அணிந்து தீபாவளியில் கலந்தார்.

10. முதலாளி அல்லது எஜமான் தலைவன் என்ற உயர்பதவி களும் கௌரவமும் இருப்பினும் சிலசமயங்களில் அவரே நேரட்டி செய்ய வேண்டிய காரியம் முதல் தொண்டரான் செய்யவேண்டிய வேலைகள் வரையும் செய்து தீர்க்கும்படியாக நேர்ந்து விடுகிறது. அப்போது தமது கௌரவதையின் நிலையை நோக்கி தமக்குள் அவர் சிரித்துக் கொள்ள வேண்டியதே.

வானப்பா காற்றினிட விபரமெல்லாம்
மைந்தனே சொல்லுகிறேன் வகையாய்க் கேளு
பானப்பா பண்ணிவிடு மல ; மெல்லாம்
பரிசுத்தமா யிருந்தால் பறக்கும்பாரே. (1)

பறக்கு மென்று சொல்லுவது தானுருக்கென்றல்
பாராளு நீதிமன்னர் சில்யோகிக்கும்
இறக்கமொன்று மில்லையப்பா யெதிராளி பேரில்
என்ன சொல்வேன் ஊழியிடவேகந்தன்னை
சிறக்குமென்று நினையாதே ரோகந்தன்னை
க்ஷணத்திலே யொழிந்துவிடும் தெளிவாய் நில்லு
உறுத்தவிதி யுள்ளவர்க்கு தேகம் போகா
உத்தமனே யிதையறிந்து பாரு பாரே. (2)

பாரு நீ புலஸ்தியனே ஐயா கேளு
பரிவாக மேலிருந்து யிறங்குமப்பா
ஊரிலே ஜனங்களிட சிர சிற்பட்டால்
உற்றதொரு ரத்த மெல்லா முறிந்து நீராம்
காருநீ கக்கலுடன் பேதிகாணும்,
கண்மூடி தீரக்குழன்னே களைத்துப்போகும்
ஆரு நீ யானாலும் தேகமெல்லாம் ஆச்சரிய மாச்சரியம்
பிசின்போலாமே. (3)

பிசின்போலே வேர்வையது பெருகி நிற்கும்
பேரான கண்டமது வரட்சிகாணும்
கசிந்துருகி தேகமெல்லாம் கடின வேதை
கக்கல் கண்ட நாழிகைக்குக் கடுப்புங்காணும்
விசிதமாய் வயிறு வலி காணுமப்பா
வெகு சுருக்காய் ஜன்னியது பிரவேசந்தான்
நிச்சயமாயிருந்தாக்கால் தேகம் போகும்
நிமிஷத்தில் ஔஷதத்தை நினைவாய்ப் போடே. (4)

என்பன ஆயுர்வேத துணிபும், அநுபவசித்தமுமாம். நமது ஜனங்க ளின் பெரும்பாலார் இதை ஆரம்பத்திலேயே தடுக்க முயலாமல், ஆகார பேதம், அஜீரணம், சுரம், மந்தம், செரியாமை, அடுத்து அடுத்துண்டாகும், வழக்கம், என எண்ணிக் கொண்டு வாந்தியோ, பேதியோ, வாந்தியும் பேதி யும் கலந்தோ பலமுறை ஆனபின், அபாய நிலையில் வந்து விட்டதாக தங் களுக்கும்மட்டு, பிறரும் பலவாறு சொல்லி வற்புறுத்தப்பட்டதின்மேல்,

வெகு சுருக்காய் பலவித வைத்தியம் பரபரப்புடன் செய்தும் பயன்படாமல் மோசம் போவது சர்வ சாதாரணமாயிருக்கிறது.

"கதக்கு மென்று நினையாதே தேகந்தன்னை, கணத்திலே யொழித்துவிடும் தெளிவாய் நில்லு." என்றும் "கண்மூடித்திறக்கு முன்னே களைத்துப்போகும்" என்றும், "வெகு சுருக்காய் ஜன்னியதும் பிரவேசந்தான். நிசிதமாய் இருந்தாக்கால் தேகம் போகும், நிமிஷத்தில்விஷத்தை நினைவாய்ப்போடே" என்றும், கருணையுடன் எச்சரிக்கை செய்கின்றார் கலசமுனிவரர். தெய்வாம்ஸமாகிய அகஸ்திய முனிவரே இவ்வளவு அழுத்தமாய் எச்சரிக்கை செய்யும்போது இது எவ்வளவு துரிதமாயும், ஜாக்கிறதையுடனும், கவனித்து அதி தீவிரமாய் சிகிச்சை செய்ய வேண்டிய அபாயகரமான வியாதியென்பது தெளிதிற் புலனாகும்.

ஆகையால், வாந்தியோ, பேதியோ, வாந்தியும் பேதியும் கலந்தோ, ஒருமுறை ஆனவுடனே மேல்காட்டியபடி மந்தம் அஜீரணம் என யோசனை செய்து கொண்டு மோசம் போகாமல் அந்த க்ஷணத்திலேயே இதன் கீழ் வரும் சிகிச்சா முறைகளில் அவரவர்களுக்கு (சுலபமாய்) கிடைக்கக் கூடியவற்றைக் கொண்டு (காலதாமதம் செய்யாமல்) அப்போதே சித்தப்படுத்தி சிறுகச் சிறுக கொடுத்துவர வேண்டியது. இப்படிக் கொடுத்து வருவதால் கடவுள் கிருபையால் பெரும்பாலும் சுகமடையலாம். மேற்படி அபாய வியாதியில்லாமல் சாதாரண அஜீரண ரோகமா யிருந்தபோதிலும் இந்த சிகிச்சைகளால் நன்மையேயன்றி எவ்வித கெடுதியும் உண்டாகாது. காரணத்தைக் கொண்டாயினும் மீறவிடாமல் சிகிச்சை செய்து தடுக்க வேண்டியதே மிக்க அவசரமும் அவசியமுமானது. வியாதிமுற்றியபின் எவ்வித சிகிச்சையும் பயன் தரா வென்பதை கவனித்து முன்ஜாக்கிரதையுடன் தக்க பரிகாரந் தேடவேண்டியதே முக்கிய கடமையாம்.

குறிப்பு

நகரவாசிகளுக்கு. மூலிகை தினுசுகள் கிடைப்பதருமையா யிருக்கும் கிராம வாசிகட்கு கடை சரக்குகள் அகப்படுவது கஷ்டமாயிருக்கும். நகர்வாசிகளுக்கு மருந்து கடைகளில் கடை சரக்குகளும், கிராமவாசிகளுக்கு தோட்டங்களிலும் வயல்புறங்களிலும் மூலிகை தினுசுகளும் சுலபமாய்க் கிடைக்குமாகையால், அவர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடியதும், அவசரத்திற்கு உதவக் கூடியதுமான முறைகளில் சிகிச்சை செய்து கொள்ளுமாறு தேர்ந்தெடுக்கப்பட்ட, அநுபவமான, கைவல்ல முறைகளையே இங்கெடுத்துக் காட்டுவதால், இவற்றை சாதாரண தினுசுகள்தானே யென்று நினையாமல், தெய்வ பக்தியுடன், நம்பிக்கையோடு செய்தால் பூர்ண சுகம் உண்டாகும்.

BOOKS
5- APR 1921
MADRAS.

கதாரத்நாகரம் அனுபந்தம்

எச். ஆர். எச். கானாட்டு கோமகன்.

புதிய சென்னை சட்ட சபையைத் திறந்துவைக்க

1921-ம் வருஷம் ஜனவரி மீ 10உ விஜயம் செய்வார்.

கடவுள் துணை

KATHA கதாரத்நாகரம் RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்

—ஔ[illegible]

Vol. 3. | December, 1920 | No. 7.
தொகுதி 3. | 1920-ம் வருஷம் டிஸம்பர்மீ | பகுதி 7.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்டநெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னையாண்டாய்க்
குள்ளந்தா னின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையினேற்கே.

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய்போல
இனையனா னென்றுன்னை யறிவித்தென்னை
யாட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின்பாவை
அனையநான் பாடேனின் றாடே னந்தோ
அலறிடே னுலறிடே னாவிசோரேன்
முனைவனே முறையோநா னானவாறு
முடிவறியேன் முதலந்த மாயினானே.

அதிசய ஞானம்

ஷண்முக சுந்தரம்.

"கடவுள் எங்கும் இருக்கிறாராம். அவர் இல்லாதவிடமில்லையாம். இப்பிரபஞ்சத்தில் நிறைந்த வஸ்து அவர்தானாம்"— என்று இன்று தினம் உபாத்தியாயர் சொன்னார். அது எப்படியப்பா விளங்கச் சொல்ல வேண்டுமென்று ஒரு சிறுவன் தன் பிதாவைப் பார்த்துக் கேட்டான்.

எப்பொழுதுமே கேள்வி கேட்பது சுலபம். விடையளிப்பது வெகு கஷ்டம். இம்மாதிரி அச்சிறுவன் தன் தாயினிடம் ஒரு தடவை "அம்மா எனக்கு தினந்தோறும் பசிக்கிறதே எப்படி பசிக்கிறது, என்று கேட்டான். "குழந்தே! நல்ல கேள்வி கேட்டாய், இது தெரியாதா— சாப்பிட்டது ஜீரணமாய் விட்டால் பசியுண்டாகும்" என்றாள். "ஆமா அம்மா! எப்படி ஜீரணமாகிறது? " என்றான். "சரீரத்தில் உதராக்கினி என்ற உஷ்ணமிருக்கிறது அது ஜீரணமாக்குகிறது," என்றாள். "அந்த உதராக்கினி எப்படி உண்டாகிறது?" என்றான் பதில் சொல்ல முடியாதிருந்ததால் "அதென்னமோ— எனக்குத் தெரியாது உங்கப்பாவைக் கேட்டுக்கோ" என்று சொல்லி அனுப்பி விட்டாள். அந்தப் பையன்—ஷண்முக சுந்தரம் தன் பிதாவைக் கேட்டான். பிதாவானவர் வெகு நேரம் யோசித்தார். இம்மாதிரி கேள்வி கேட்க அவனுக்கு புத்தி கொடுத்ததே யென்று அளவற்ற ஆனந்த மடைந்தார்.

"உன்னையும் என்னையும் உண்டாக்கியவன் ஒருவனிருக்க வேண்டுமல்லவா, அவனைத் தான் கடவுள் என்று சகல மனிதர்களும் சொல்லுகிற வழக்கம்". ஷண்முக சுந்தரம் நாலாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கேள்விகளுக்கு சரியானதாய்—திருப்தியானதாய்—நன்றாய் விளங்கும் படியாய் சின்னஞ் சிறு சொற்களால் புத்திக்குப் பொருந்தும்படியல்லவா சொல்ல வேண்டுமென்று வெகு நேரம் சிந்தனை செய்து சொன்னார். பிதாவோ வென்றால் சகல சாஸ்திர சம்பன்னர். தன்னை யறிந்த பரம ஞானி. பிறர் பார்வைக்கு பைத்தியக்காரன் போலும், எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாதவர் போல் இருந்துவந்தார்.

"அது உண்மை தான். கடவுள் என்றால் [illegible] கென்ன அர்த்தம்"

"கடவுள் என்பது இருபதம் கொண்டது. ச[illegible] றும் கடவுள் என்றும் சொல்லுவார்கள். [illegible] கட என்பது அர்த்தமாகும்"

சிறுவன் சற்று யோசித்தான். என்றாலும் அவன் கேள்வி கேட்கிற ஸ்தானத்தில் இருப்பதால், வழக்கம் போல்,

"உள்ளம் என்றால் என்ன?"

"மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இந்நான்கையும் அடங்கியுள்ளது உள்ளம்."

"அப்பா நீ சொல்வது எனக்கொன்றும் விளங்கவில்லை. கடவுள் எங்கும் இருக்கிறாராமே அதைச் சொல்—நான் கேட்கட்டும்"

"கடவுள் எங்கும் இருக்கிறார். அது உண்மை அவர் இல்லாத விடமில்லை."

"அது தான் தெரியவில்லை. நன்றாய்ச் சொல்லு?"

"அது விளங்கும் படியாய் ஒரு கதை சொல்லுகிறேன் கேட்கிறாயா?"

"எனக்குக் கதை யென்றால் தான் பிரிய மாச்சே சொல்லு."

"சமுத்திரம் பார்த்திருக்கிறாயா?

"பார்த்திருக்கிறேன்.

"சமுத்திரத்திலே மீன்கள் மிகுதி. எப்படி இங்கே மனிதர்களோ அப்படி அங்கே மீன்களிலும் பல ஜாதிகளிருக்கின்றன. ஜலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதில் திமிங்கலம் மிகப்பெரிது. அது தன் வாலைப் பிரட்டினால் ஒரு பெரிய கப்பல் கூடக் கவிழ்ந்து விடும். அங்கே நல்ல ஜாதி மீன்கள் உண்டு. ஒரு நாள் ஒரு சிறு மீன் ஒரு கிழட்டு மீனிடம் சென்று, பெரியவரே, மகானுபாவரே, எனக்கு ஒருசந்தேகம், தயவு செய்து நிவர்த்தி செய்யவேண்டும்என்று கேட்டது. அதற்கு அந்தப் பெரிய மீன் சொல்லுகிறது. "குழந்தாய், நீ வேண்டியதைக்கேள். பதில் சொல்லக் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிற்று. சிறு மீன் சொல்லுகிறது நான் எத்தனையோ புராணங்களைப் படித்தேன். பல சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்தேன். எனக்கு சமாதானம் ஏற்படவில்லை. அதாவது—ஜலம் எங்கும் இருக்கிறதாம். அது இல்லாதவிடம்

...என்ன! இது கண் கட்டு வித்தையாயிருக்கிறதே என்று அதற்குப் பெரிய மீன் சொல்லுகிறது—ஜலம் இல்லா ...வசிக்கிற இடத்துக்கு சமுத்திரம் என்ற பெயர் ஏற்படா...

"கடவுள் ... என்னிலும், நம்மிருவர் மத்தியிலும், இடைவெளியின்றி யிருப்ப... அந்த ஜலம் ஒன்றே. அதை மறந்ததால் தான், நான் நீ என்று ஏற்பட்டது. அப்படி மறக்காமல் இருந்தால் சர்வம் ஜலமயம் என்பதாகும். நீ கேட்டதால் சொன்னேன், இல்லையென்றால் அந்த சொல்லுக்கும் இடமில்லையென்று அந்த பெரிய மீன் சொல்லிற்று. சிறு மீன் வெகு நேரம் மௌனமாயிருந்தது. எப்படி யிருக்கிறது இந்தக் கதை?

"நமக்கு எல்லாம் ஜலமாகவே தோன்றுகிறது. அந்தச் சிறு மீனுக்குத் தோன்றவில்லையே?"

"அதைப் போல, பெரியவாளுக்கு--ஞானிக்கு கடவுள் எங்கும் இருக்கிறார் என்பது நன்கு விளங்கும்.

ஒரு விநோதம்

மாப்பிள்ளையைப் பார்க்க வந்தார்கள்.

ஒரு பெரிய தனவந்தனுக்கு முழுமூட சிகாமணியாய் ஒரு பிள்ளை யிருந்தான். அவனுக்கு படிப்பென்றால் நஞ்சாயிருந்தது. விவாககாலம் கிட்டிற்று. மாப்பிள்ளைக்கு விசேஷ செல்வ மிருந்து படிப்பில்லை யென்று பெண் கொடுப்போர் கேள்விப்பட்டார்கள். ஆகையால் நேரில் பார்த்து வருவோமென்று மாப்பிள்ளை வீட்டுக்கு வந்தார்கள். தன் மகன் மகாசமர்த்தனென்றும், கணக்கில் வல்லவனென்றும் சொன்னார். தன் மகனை யழைத்து கணக்கர்களிருக்குமிடத்தில் இருக்கச் செய்து மேஜையின் மேல் ஒரு பெரிய கணக்குப் புஸ்தகத்தை வைத்து ஒவ்வொரு ஏடாய்ப் பார்த்துத்தள்ளிக் கொண்டிருக்கும்படி சொன்னார். பெண் கொடுக்கப் போகிறவர் மாப்பிள்ளை வேலை செய்கிறதைப் பார்க்க வந்தார். மாப்பிள்ளை புஸ்தகத்தின் ஒவ்வொரு ஏடாய்த் தள்ளிக்கொண்டிருந்தான். அதிக நேரம் மாமனார் பேசிக்கொண்டே யிருந்து விட்டார். அதற்குள் புஸ்தகத்திலுள்ள ஏடுகளும் தீர்ந்தது. தன் பிதாவிடம் வந்து, நீங்கள் சொன்னபடியே ஏடுகளை யெல்லாம் ஒவ்வொன்றாய்த் தள்ளி விட்டேன். இன்னும் என்ன செய்யவேண்டுமென்று கேட்டான். பிதாவானவன் வெட்கி மௌனம் சாதித்தார். பெண்கொடுக்க வந்தவரும் மாப்பிள்ளை மக்கு என்று நன்றாய்த் தெரிந்து கொண்டு கௌரவமாய் விடை பெற்றுச் சென்றார்.

ஓம் சக்தி

வேடிக்கைத் துண்டுகள்

(ஸ்ரீராமதாஸர் திரட்டியன.)

1. கடிகாரம் எதன் பொருட்டு வைத்திய ஆஸ்பத்திரிக்கு வந்தது?

ஓரூரில் ஒரு வைத்தியக்கார ஆஸ்பத்திரி யிருந்தது. அங்கு, புதிதாக ஒரு பித்தனைக் கொண்டு சேர்த்தார்கள். அந்த இடத்தில் ஒரு பெரிய கடிகாரம் சுவர்மீது மாட்டப்பட்டிருப்பது கண்ட பித்தன் தன் அருகே நின்ற காவலாளை நோக்கிக் கேட்கிறான்:— "ஏனையா, இந்தக் கடிகாரம் சரியாக நடக்கிறதோ? இல்லையோ?" என்றான்.

அதற்குக் காவலாள் "க்ரமமாகவே ஓடுகிறது" என்று விடைகூறினான்.

"அப்படியானால், அதை இந்த ஆஸ்பத்திரிக்கு ஏன் கொண்டு வந்து அடைத்தார்கள்? இது அநியாய மன்றோ?" என்று சொல்லிப் பித்தன் ஆச்சர்யப்படலானான். அருகிலிருந்தோர் நகைத்தனர்.

2. கிழவனும் குமரனும்—ட்ராம்வண்டி ஸம்பாஷணை.

ஒரு "ட்ராம் வண்டியில் ஒரு ஸமயம் கூட்டம் வரம்புக்கு மிஞ்சி நிரம்பிக் கிடந்தது. பலர் வீற்றிருக்க இடமின்றி நின்றார்கள். அவர்களிடையே மேற் குலத்தினராகத் தோன்றிய இரண்டு ஸ்த்ரீகளும் நின்று கொண்டிருந்தனர். அங்கே உட்கார்ந்திருந்த கிழவனொருவன், தான் வயதில் மூத்தோனாதலால், அந்த மாதரின் பொருட்டுத் தான் இடத்தை விட்டெழுந்து நிற்றல் அவசிய மில்லை யென்று தீர்மானித்துக் கொண்டானாயினும், தன் எதிரே உட்கார்ந்திருந்த சிறுவனொருவன் அந்த மாதருக்குக் காண்பிக்க வேண்டிய மதிப்பை மறந்து, அவர்களை கவனியாதவன் போலே இருப்பது கண்டு சினமெய்தித் தான் மிகவும் களைத்த சரீரமும் சிறுமூச்சு முடையவனாதலால்; முக்கி, முக்கி, சிரமப்பட்டு, அச்சிறுவனை நோக்கிப் பின்வருமாறு உபந்யாஸம் செய்ய லாயினன்,— "அடே, சிறுவா, எழுந்து நில் உடனே எழுந்து நில். கண் தெரியவில்லையா? மாடுபோல், மரம்போல் உட்கார்ந்

திருக்கிறாயே? மாதர்—மேற் குலத்து மாதர் நிற்கையிலே, அவர்கள் உட்கார இடங்கொடாமல் நாம் உட்கார்ந் திருப்பது தவறென்று உங்கள் வீட்டில் உனக்கு யாரும் போதிக்க வில்லையா? உட்கார்ந்திருக்கும் இடத்தில் அவ்விருவரில் ஒருவர் வீற்றிருக்கலாமன்றோ எழுந்து நில்லடா நில் என்று உறுமினான்.

இந்த உறுமுதலைக் கேட்டுச் சிறுவன் சொல்லுகிறான்:— "கிழவா நீ கொழுத்த யானை போலிருக்கிறாய். நான் இருக்கு மிடத்தில், இவ்விருவரில் ஒருவர் தானுட்காரலாம். நீ எழுந்தால், உன் இடத்தில் இவ்விருவரையும் உட்கார்த்தி; இன்னும் சிலரையும் இருக்கச் செய்யலாம். ஆதலால், எனக்கு தர்மோபதேசம் செய்வதை நிறுத்தி; தயவு செய்து நீயே எழுந்து நின்றால் நல்லது" என்றான். இதைக் கேட்க, மேற் கூறிய மாதரிருவருட்பட, அந்த ட்ராம் வண்டியி லிருந்தோர் அனைவரும் கலீரென்று நகைத்தனர். அந்தக் கிழவனும் கூடிச் சிரித்தான். அப்பால் கிழவன் எழுந்து நின்றான். மாதரிருவரும் உட்கார்ந் திருந்தனர்.

(3) இரண்டு கீழ்ப் படிதலுள்ள மனைவிமார்!

ஜானகி சொல்லுகிறாள்: "கேளடி, ராதே, நான் உனக்கொரு நல்ல யுக்தி சொல்லிக் கொடுக்கிறேன். உன் கணவன் உன்னை யடித்தால், நீ உடனே போலிஸாரிடம் போய்த் தெரிவித்து விடு. அவனைச் சிறையில் அடைத்து விடலாம்" என்றாள்:

ராதை சொல்லுகிறாள்:—"ஆமாம், ஜானகி; நீ சொல்வது நியாயந் தான். ஆனால், என் கணவன் என்னை அடித்தால், அவரைப் போலீஸார் சிறைச் சாலைக்குக் கொண்டு போகுமுன்னர், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விடுவார்கள். ஆஸ்பத்திரியில் அவருடைய காயங்களெல்லாம் ஆறிய பிறகு தானே சிறைச்சாலைக் கனுப்பமுடியும்?" என்றாள்.

அதற்கு ஜானகி:—"உன் கணவன் உன்னை யடித்தால், நீ உடனே அவர் மண்டையை உடைத்து மயானத்துக் கனுப்பாமல், காயப்படுத்தி ஆஸ்பத்திரிக் கனுப்புவேனென்று சொன்னாயே! உன் பொறுமையை மெச்சுகிறேன். இத்தனை உயர்ந்த மருந்து வைத்திருக்கும் உன்னிடம் நான் சிறைச்சாலையாகிய ஸாதாரண மருந்தைக் குறித்துச் சொல்லியதற்காக நீ என்னை க்ஷமித்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்" என்று கூறினாள்.

(4) குடிப்பதில் அபிப்பிராய பேதம்.

ஒரு செல்வ மிகுந்த செட்டிச்சி விதவை வீட்டில் ஒருவன் தனக்குத் தோட்டக் காவல் வேலை கொடுக்கும்படி விண்ணப்பம் கொண்டு வந்தான். "கொஞ்சமாவது குடிக்கமாட்டாயே?" என்று செட்டிச்சி கேட்டாள்.

"காசில்லாத ஸமயங்களில் ஒரு துளி கூடக்குடிக்கமாட்டேன்" என்று சொல்லி வேலையாள் புன்னகை செய்தான்.

(5) பௌதிக சாஸ்த்ர பண்டிதன்!

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு சிறுவன் பௌதிக சாஸ்த்ரம் படித்ததில் உஷ்ணத்தால் பதார்த்தங்கள் நெகிழ்ந்து வடிவ மிகுதி யடைகின்றனவென்றும், குளிரால் சுருங்கி உருவக் குறை வெய்துகின்றன என்றும் தெரிந்து கொண்டான். ஒரு நாள் அவனிடம் உபாத்யாயர்:—"கோடைப் பருவத்தில் பகல் நேரம் அதிகமாகவும் குளிர் காலத்தில் குறைவாகவும் இருப்பதேன்?" என்று கேட்டார்.

வஸ்துக்கள் உஷ்ணத்தால் உருவ மிகுதியும், குளிரால் உருவக் குறையும் பெறுமாதலால்." என்று சிறுவன் மறுமொழி யுரைத்தான்.

கல், மண், உலோஹம், நீர் முதலிய ஜட பதார்த்தங்களுக்காகச் சொல்லப்பட்ட விதியை இவன் பகல், இரவு விஷயத்தில் உபயோகிப்பது கண்டு உபாத்யாயரும் மற்றப் பிள்ளைகளும் மீட்டு மீட்டும் பெருங் குரலிட்டு நகைக்கலாயினர்.

(6) நாவிதத் தொழிற் பயின்ற வழி.

இந்திய வேலையில் பண்டசாலைத் தலைவனாக இருந்த ஒரு ஐரோப்பிய உத்யோகஸ்தனிடம், முன்பு சுமை தூக்கும் கோவேறு கழுதைப் படையில் "நாயக்" வேலை பார்த்துப் பென்ஷன் வாங்கி வரும் கிழவனொருவன் வேலையாளாக இருந்தான். ஒரு நாள் அந்த உத்யோகஸ்தன் அவ் வேலையாளை நோக்கி,—"நம்முடைய மயிரைக் கத்தரிப்பதற்கு ஓராள் கொண்டு வா" என்றான்.

அதற்கு வேலையாள்.—"துரை யவர்களுடைய ரோமத்தை அடியேன் கத்தரிக்கும்படி உத்தரவு செய்யக் கூடாதா?" என்றான்.

"ஆ! உனக்கே மயிர் கத்தரிக்கத் தெரியுமா? இந்தத் தொழில் எங்கே பயின்றாய்?" என்று ஐரோப்பிய உத்யோகஸ்தன் பூரிப்புடன் வினவினான்.

அதற்கு வேலையாள் சொல்லுகிறான்:—"மாதா பிதாக்களைப் போன்றவரே! அடியேன் முன்பு சுமை தூக்கும் இலாகாவில் "நாயக் வேலை பார்க்கையிலே, எத்தனையோ கோவேறு கழுதைகளுக்கு மயிர் கத்தரித்துத் தேர்ச்சி யடைந் திருக்கிறேன் எனவே தங்களுக்கும் செய்ய மாட்டேனோ" என்றான்.

"அடே, என்னையும் கோவேறு கழுதையாகச் சேர்த்து விட்டாயா?" என்று சொல்லி அந்த உத்யோகஸ்தன் கட கட வென்று நகைத்தான்.

7. என்மீது குற்றமில்லை

ப்ரஜீல் மத்திய ரெயில்வேயில் ஒரு முதல் வகுப்பு வண்டியில் வெடி குண்டு வெடித்து, 21 பேர் மரண மடைந்தார்கள். குற்றவாளி ரெயில்வே கம்பெனியாருக்குக் கடிதமெழுதி யிருப்பதில், தான் முதல் வகுப்பு வண்டியில் அந்த குண்டை வைத்தது பற்றி வருத்தப் படுவதாகவும், ஆனால் மூன்றாம் வகுப்பு வண்டியில் இடமில்லாதது பற்றியே தான் அங்ஙனம் செய்ய நேர்ந்து விட்டதாகவும் தெரிவித்ததாகக் கேள்விப் படுகிறோ மென்று ஓர் ஆங்கிலேய விகடப் பத்திரிகை சொல்லுகிறது.

பிரபஞ்ச ரகஸ்யம்

1. மனிதன் வறுமையினால் வெட்க முடையவனாகின்றான்; வெட்க முடையவன் மகிமை யில்லாதவனாகின்றான். மகிமையில்லாதவன் நிந்தை யுடையவனாகின்றான். நிந்தையுடையவன் மனஸ்தாப முடையவனாகின்றான். மனஸ்தாப முள்ளவன் சோகமுடையவனாகின்றான். சோகமுடையவன் புத்தி யில்லாதவனாகின்றான். புத்தி யில்லாதவன் அழிவடைகின்றான். திரவிய மில்லாமையே ஆபத்துக்களெல்லா வற்றிற்கும் இடமாகும்.

2. பொய் வார்த்தை பேசுதலினும் மௌனமா யிருத்தல் உத்தமம். பரமாதர்களை இச்சிப்பதைவிட ஆடவர்களுக்கு அலித்தன்மை உத்தமம்.

3. கோள் வார்த்தையைப் பிரீதியாய்க் கேட்டுக்கொண் டிருத்தலினும் பிராணத்தியாகம் உத்தமம். பிறனுடைய செல்வத்தை அனுபவித்தலினும் இரந்துண்ணல் உத்தமம்.

4 சேவை—சேவகம் செய்தல் தானே மானங்களெல்லாவற்றையும் அழிக்கின்றது. புத்தியை மழுங்கச் செய்கிறது. அடிமைத்தனத்தை விர்த்தி செய்கிறது. இன்னும் யாசித்தல் நூறுகுணங்களைத் தானும் அழிக்கின்றது.

5. துன்பமுடையவனும் நெடுங்காலம் பிறவூரில் வசிப்பவனும், பிறரன்னத்தை வெட்கமின்றிப் புசிப்பவனும், பிறர்வீட்டில் நித்திரை செய்பவனும் எவனோ அவனுக்கு சீவன் மரணவேதனையாம்.

6. உலோபத்தினால் புத்தி நீங்குகின்றது. உலோபம் பொருளாசையை உண்டாக்குகின்றது; பொருளாசையால் வருந்தும் மனிதன் இம்மை மறுமை இரண்டினிலும் துக்கத்தை யடைகின்றான்.

7. பொருளாசையுள்ளவன் சந்தோஷ மில்லாதவனேயாம். அடக்கமான மனமுடையவன் இந்திரியங்களை வென்றவனேயாம். மனமகிழ்ச்சி யில்லாதவனுக்கு எல்லாம் ஆபத்தேயாம்.

8. சந்தோஷமான மனமுடையவனுக்கு சகல சம்பத்து மிருக்கிறது.

9. மகாத்மாக்கள் மரணகாலம் வரைக்கும் பிரீதி உள்ளவர்களும்; க்ஷணத்தில் அழியுங்கோபமுள்ளவர்களும், எல்லாவற்றையும் விட்டவர்களும், ஒன்றிலேனும் பற்றற்றவர்களு மாயிருக்கிறார்கள்.

தனபதிமுதலியார் ஒரு குழந்தையைப்போல் அந்த இரத்தினங்களை வைத்து விளையாடுவார். அவைகளை இடம் விட்டு மாற்றி மாற்றி வைத்து மதிப்பிட்டுப் பார்ப்பார்.

ஒவ்வொரு ரத்தினத்தையும் பரிக்ஷை செய்து பார்ப்பார். நீரோட்டம், ஒளி, ஜாதி, குணம் இவைகளைப் பற்றிக் கவனித்துப் பார்ப்பார். தங்கத்தில் பதித்து வைக்கப்பட்டவை வேறு. ஆனால் தங்கத்தில் கட்டப்பட்டவை அவ்வளவு உற்சாகத்தைக் கொடுப்பதில்லை. சுத்தப்படுத்தி பட்டை தீர்க்காத இரத்தினங்கள் ஒரு பெட்டியிலிட்டுக் குவிக்கப்பட்டிருந்தன. இப்படி அநேக பெட்டிகளிருந்தன. ஒவ்வொரு பெட்டியிலும் அந்தந்த ஊரின் பெயர் குறிக்கப்பட்டிருந்தது. கோல்கொண்டா, பந்தல்கண்டு, போர்னியோ, ருஷியா அமெரிக்கா முதலான பெயர்களாகும்.

இந்த இரத்தின வகையில் அவர் என்ன அதிசயம், அல்லது ஆச்சரியத்தைக் கண்டுளார் என்பது படிப்போர் மனதில் ஓர் சந்தேகம் உண்டாகலாம். இரத்தினங்களில் முதன்மையானதும் பார்ப்போர் கருத்தைக் கவரத்தக்க சிறந்த மாணிக்கம் ஒன்றே மேன்மையானது. இரத்தின மாளிகைக்குச் செல்வோர் யாரும், சொல்லாமலே அந்த மாணிக்கத்தைக் கண்டு கொள்ளுவார்கள். அந்த மாணிக்கத்தை வைரமிழைத்த சிறு நாற்காலியின் மத்தியில் வெண்பட்டு மெத்தைபோட்டு அதில் வைக்கப்பட்டிருந்தது. இது நம் இந்து தேசத்தியதாகும். அதற்கு மஹாராஜா என்று பெயரிடப்பட்டிருந்தது. அதைச் சுற்றி அநேக சிறந்த ரத்தினங்களை வைத்து அலங்கரிக்கப்பட் டிருந்தது.

இப்பொழுது தனபதி முதலியாருக்கு திடீரென ஒருபயம் தோன்றிற்று. ஏனென்றால் இவ்வளவு பெரிய மகத்தான மாணிக்கத்தை வைத்திருப்பதால் எவரும் அபகரிக்க வழி தேடலாம். இதற்கென்ன செய்யலாமென்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனால் திருடுகிறதற்கு என்று எவனும் இரத்தினமாளிகையில் புகுவானானால் மாளிகையிலிருப்போர் அனைவரும் ஏககாலத்தில், விழித்துக் கொள்ளும்படி சுமார் அரைமணி நேரம் இடைவிடாமல் கணகண

வென்று மணியோசை உண்டாகும்படி வாசற்படிக் கருகில் ஒரு (எலக்ட்ரிக்) மின்சார மணியொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி மணி அடிக்கும்போதே ஒரு ஜன்னல் கதவு தானே திறந்து கொள்ளும். ஒரு தீப ஒளி உண்டாகும். அவ்வொளி தனபதி முதலியார் படுக்கையறையில் பிரகாசிக்கும். மாளிகையின் கதவு தானே மூடிக் கொள்ளும். இன்னொரு வாசல் தாண்டியே இரத்தினங்களுள்ள விடத்திற்கு போகும் வழி. திருடப்போகிறவன் முன் கதவை திறக்க முடியாது. திறந்தாலும், உட்புகுந்ததும் மணியடிக்கும். வாசற்கதவு தானே மூடிக் கொள்ளும். அவன் எவ்வித உபாயத்தைக் கொண்டும் வெளியேற சாத்தியப்படாது. இவ்வளவு பந்தோபஸ்திருந்தும் சந்தேகம் வருவானேன், என்றால் எவரும் தன்னை நட்பாக்கி நயவஞ்சகமாய்க் கைப்பற்றிவிட்டால் என்ன செய்வதென்ற எண்ணம். வயது அதிகம் ஆக ஆக சந்தேகத்துக்கு இடமுண்டாகி விட்டது.

வைரத்தைவிடக் கெட்டியான பொருள் இவ்வுலகில் இல்லையெனச் சொல்லப்படுகிறது. மரத்திலும் வைரம் பாய்ந்ததென்று சொல்வதும் அனுபவம். இதனால் கெட்டிப்பட்ட பொருளுக்கு வைரம் பாய்ந்ததென்று சொல்வது போல, அந்த இரத்தின மாளிகையையும் வைரக்கோட்டை யென்றே சொல்லலாம். தனபதி முதலியார் மாளிகையைவிட்டு வெளியே போவதில்லை. பல தேசத்து இரத்தின வியாபாரிகளும் வந்து கொண்டிருந்தார்கள். இரத்தின வியாபாரத்தில் தனபதி முதலியாரை விட அனுபவம் பெற்றவர் வேறு எவரும் இருக்கமாட்டார்கள். ஆகையால் ஆசை அவரை நன்றாய்க் கவர்ந்து கொண்டது, நாளுக்கு நாள் அதிகப்பட்டதேயன்றி குறையவில்லை.

இரத்தினமாளிகையில் கவலையற்று தர்மாம்பாளும், மனோரஞ்சிதமும் வளர்ந்து வந்தார்கள். ரங்கனாத முதலியார் அடிக்கடி வந்து போவார், நவனீதமும் தர்மாம்பாளை உத்தேசித்து வருவது வழக்கம். டிப்டி கலெக்டர் சுப்பையா முதலியார் விவாகத்துக்கு ஏற்பாடு செய்து மதுரையில் தர்மாம்பாளுக்கும் நவநீதக் கிருஷ்ண முதலியாருக்கும் விவாகம் நடந்தேறியது.

மனோரஞ்சிதம் தனிமையாயிருந்தாள் உதவிக்கு வேறு வேலைக்காரர்கள் இருந்தார்கள். இப்பெண்மணியின் எண்ண மெல்லாம் கவீந்திரன் ரங்கனாத முதலியாரைப் பற்றியதாயிருந்தது. மற்றவர் பார்ப்பதற்கு ஏற்றவராயிராததால் தனது அபிப்பிராயம் வெளிவருவதற்கில்லாதிருந்தது.

தனபதி முதலியார் தேச சஞ்சாரம் செய்த காலத்தில், தான் கண்ட காக்ஷிகளையும் விநோதங்களையும் நேரம் வாய்த்த போதெல்லாம் சொல்லி வந்தார். தனபதி முதலியார் தன் குமாரியைப் போலெண்ணி நல்ல ஆடை ஆபரணாதிகளை அணியும்படி கொடுத்து வந்தார்.

மனோரஞ்சிதத்துக்கு கவிந்திரன் வந்து விட்டால் அளவற்ற சந்தோஷம். தனபதி முதலியார் இதை நன்கறிந்து வந்தார். ஆனால் அவர் பரம ஏழை யென்பதே தடைபடுத்திக் கொண்டிருந்தது. இல்லையெனில் சில மாதங்களுக்கு முன் விவாகமாகியிருக்கும். மனோரஞ்சிதத்தின் விவாக விஷயமாய் யாதொரு பேச்சும் நாளது வரை நிகழவில்லை. தனபதி முதலியார் மிக்க அன்போடு ஆதரித்து வந்தார். ஒருநாள் இரவு சுமார் ஒன்பது மணிக்கு தனபதி முதலியாரும் மனோரஞ்சிதமும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ரங்கனாத முதலியார் தான் ஒரு நண்பரோடு வருவதாய்க் கடிதம் எழுதியிருக்கிறார் என்று சொன்னார்.

ஒரு நண்பரோடு வருவதால் நாம் சேர்த்து வைத்திருக்கும் இரத்தினங்களைப் பார்ப்பதாயிருக்கும் என்று சந்தேகித்தார்.

அவருடைய நண்பர் எப்படியோ, கவீந்திரர் வருவதைப்பற்றி தங்களுக்கு என்ன ஆக்ஷேபணை யிருக்கிறதென்று மனோரஞ்சிதம் பரிந்து பேசினாள்.

அவன் வருவதைப்பற்றி என்ன! குழந்தை மனமுள்ளவன். அவனால் நமக்கு ஒரு தீங்கும் உண்டாகாது. ஆனால் இவனை — இவனுடைய கோழை மனக்குணத்தை யறிந்து அயோக்கியர்கள் பின்பற்றி வந்தால் என் செய்வது; சுபாவ குணமுள்ளவர்களை போக்கிரி

கள் ஒரு ஆயுதம் போல் உபயோகித்து விடுவார்கள் என்றாலும் இரத்தினமாளிகைக்கு என்னையன்றி போகமுடியாது.

அம்மான்! உங்களுக்கு எப்பொழுதும் சந்தேகந்தான்; "அவருடைய நண்பன் மகாதீரன்"—அவரிடமிருந்து தாங்கள் புதிதாய்—ஏதாவது தெரிந்து கொள்ளலாம். உங்களுக்கு என்ன, பிறர் சொல்வதைக் கேட்கக்கூடாத அவ்வளவு விருத்தாப்பியம் வந்து விடவில்லையே என்று மனோரஞ்சிதம் சொன்னாள்.

"ரஞ்சிதம்...தீரனு—எதில் அவர் தீரன்? இரத்தினங்களைப் பற்றிப் பாடம் சொல்ல எனக்கு ஒரு குருவும் இருக்கிறாரா? அப்பேர்ப்பட்ட மனிதன் நமது ரங்கநாதனுக்கு சிநேகமா? சரி வரட்டும் பார்த்துக் கொள்வோம் என்று தனபதி முதலியார் சொன்னார்.

"வாலிபர்கள் சமர்த்தனாய்—கெட்டிக்காரனாயிருந்தால் நீங்கள் அவர்களை தடைபடுத்துகிறீர்கள். நான் வேண்டுமானால் பார்க்க வருவோர் திருடாதபடி கவனித்துக் கொள்ளுகிறேன் என்று ரஞ்சிதம் சொன்னாள்.

தனபதி முதலியாருடன் நெடுநாளிருந்து வந்த பழக்கத்தால், மனோரஞ்சிதத்துக்கும் இரத்தினப் பரிச்சய முண்டு. அதனால் இரத்தினங்களின் ஏற்றக்குறைச்சலையும், வித்தியாசத்தையும் சொல்லி விடுவாள்.

"—ம்—உம்! கெட்டிக்காரனு—வாலிபனு? ரத்தினங்களில் முதன்மையானதைத் தேடிவிட்டேன். மனிதரிலும் சிலாக்கியமானவரைக் கண்டதில்லை என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

"நீங்கள் ஆச்சரியமான வஸ்துக்களைத் தேடுகிறீர்கள். உங்களுக்கு—நீங்களே அதிசயம் தான். வரும்படி பதில் எழுதிப்போடுங்கள் பார்க்கலாமே என்றாள்.

மனோரஞ்சிதத்தின் மனோபீஷ்டப்படியே நடந்தது. சிநேகிதரோடு சனிக்கிழமை மாலை வந்தால் இரண்டு மணிநேரம் அவகாசம்

இருக்கும். ஆகையால் அப்படியே வந்து சேர வேண்டியதென்று ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்.

நான்காம் அத்தியாயம்.

"இரத்தின மாளிகையில் இருவர் நோக்கம்."

சனிக்கிழமை பகல் 12 மணிக்கெல்லாம் ரங்கநாதமும் கர்ப்பநாயகமும் தனபதி முதலியாருடைய பங்களாவுக்கு வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். கர்ப்ப நாயகத்தின் வாக்கில் எவ்வித உற்சாகமும் சந்தோஷமும் புலப்படவில்லை; அவர் வரவால் எவ்வித நன்மையுமில்லை என்று மனதிற்பட்டது. இருந்தாலும் விசாரிப்போம் என்று நினைத்தார்.

"மிஸ்டர் 'நாயகம்' என்பது தாங்கள் தானே?" "தங்கள் பெயரைத் தவிர மற்றவர்கள் பெயரை நான் அதிகமாய் விரும்புவேன்" என்று சொன்னார்.

"ஒரு மனிதரை அவர் பெயரைக் கொண்டு நல்லவன் கெட்டவன் என்று நீங்கள் அறிந்து கொள்ள முடியாது" என்று கர்ப்ப நாயகம் மெதுவாயச் சொன்னார்.

அதன் பிறகு பற்பல விஷயங்களைப் பேசி விட்டு தனபதி முதலியர் செருக்குடன் அவர்களைப் பார்த்து விட்டு, ரத்தின மாளிகைக்கு வாருங்கள் என்று அழைத்தார், இவருடைய பழக்கம் சீக்கிரம் ஒழிந்து போக வேண்டுமென்று நினைத்தார்.

கர்ப்ப நாயகம் தன்னைப் பற்றி அளவுக்கு மிஞ்சி தனது அனுபவத்தை புகழ்ந்து கொண்டான். இரத்தினங்கள் வெட்டியெடுக்கப்படுகிற சுரங்கங்களில் வேலை செய்திருப்பதாயும், ரத்தினங்களின் ஒளியை அதிகப் படுத்தக்கூடிய தன்மை தன்னிடத்தில் உண்டென்றும் சொல்லிக் கொண்டார். தன்னை

இரத்தினமாளிகைக்கு அழைத்துக் கொண்டு போகிறதாகச் சொன்னதும் மிக ஜாக்கிரதையாக இருந்தார். இரத்தினங்கள் விஷயமாய் யாதேனும் வினவுவார். பின் வாங்காமல்—திருப்திகரமான பதிலளிப்பதோடு, மேற் கொண்டு புதிய வழியையும் சொல்லவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார். தனபதி முதலியார் என்ன கேட்கப் போகிறாரென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இவர் உண்மையில் ரத்தினங்களின் வித்தியாசத்தை அறிந்தவர். "தாங்கள் மகா சமர்த்தர் என்று ரங்கநாதம் சொல்லிக் கேட்டேன்" என்று புன்னகையோடு சொன்னார்.

முதலாவது தனபதி முதலியாரும், அவர் பின் கர்ப்ப நாயகமும், இவர் பின் ரங்கநாதமும் மனோரஞ்சிதமுமாக மாளிகைக்குச் சென்று கொண்டிருக்கும் போது மேற்கண்ட கேள்வியைக் கேட்டார்.

கர்ப்ப நாயகம் சற்றும் பின் வாங்காமல், ஒரு மாதிரி சிரித்துக் கொண்டு—

"நான் அவருக்கு அப்படித் தோற்றினேன் போலும். தெரியாமல் தான் சொல்லியிருக்க வேண்டும். தங்களுடைய அனுபவத்தைக் கவனிக்கில் நான் எம்மாத்திரம் என்று சொன்னார்.

அந்த விருத்தர் யாதொரு பதிலும் கொடுக்க வில்லை. எதற்குமே சிந்தனை செய்யாமல், வாயைத்திறக்க மாட்டாரென்று கர்ப்பநாயகம் எண்ணினார்.

லாயர் (கர்ப்பநாயகம்) கருடனைப்போல் கூர்மையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். இன்னும் யாதேனும் கேட்கமாட்டாரா, நம்முடன் நன்றாய்ப் பேசமாட்டாரா என்று நினைத்தார். தனபதி முதலியார் முகத்தைப் பார்த்தும் இத்தகைய குணமுடையவரென்று கண்டு பிடிப்பது வெகு கஷ்டமாயிருந்தது.

கர்ப்ப நாயகம் எப்படி நடந்து கொள்ளுகிறார் என்பதை ரங்கநாதம் வெகு கவனமாய்ப் பார்த்து கொண்டு வந்தார்.

இரத்தினங்களை அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஓரிடத்தில் மலையருவி விழுவதுபோல் வைரங்கள் அலங்கரிக்கப்பட்டு, அதற்குத் தக்கவாறு தீபஒளி வைக்கப்பட்டிருந்தது. இந்தக்காட்சியைப் பார்த்த கர்ப்பநாயகம், ஆஹா நாமென்ன; யானைக்குமுன் பூனைபோலவேயிருக்கிறோம். தனபதி முதலியார் அபார அனுபவ முடையவர் தான் என்று சற்றே திகைத்தார். தனக்கு விசேஷமாய்த் தெரியாதென்று சொல்லிப்போக வேண்டு மென்ற எண்ணங் கொண்டிருந்தார். என்றாலும் கர்ப்பநாயகம் நிதானித்துக் கொண்டு பாரிஸ் நகரத்தில் வைரத்தில் பஞ்சவர்ணங்கள் உண்டாகும்படி செய்து விடுகிறார்கள். நான் நேரில் பார்த்திரா திருந்தாலும் கேள்விப் பட்டிருப்பதோடு ரத்னப் பரிக்ஷையில் மகா மேதாவியொருவர் எழுதிய நூலையும் பார்த்திருக்கிறேன், என்றார்.

தனபதி முதலியார் அப்பொழுதும் தன் தலையை அசைத்துக் கொண்டு சிரித்துக் கொண்டாரே யொழிய வாய்திறந்து ஒரு வார்த்தையும் சொன்னாரில்லை. இவரை யெப்படியாவது பேசும்படி செய்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு— "தாங்கள் (இலக்ட்ரிஸ்ட்டி) மின்சாரத்தைக் கொண்டு பரிக்ஷை செய்ததுண்டோ. புஷ்பராக (Topaz, Tourmaline) முதலானவைகளில் விசேஷமாய் மின்சார முண்டு" என்று சொன்னார்.

இதைக் கேட்ட தனபதி முதலியார், "அவைகளில் இருக்கிறது என்க்குத் தெரியும். ஆனால் ரத்தின விநோதங்களை மூடத்தனமாய் வைத்து விளையாடுவதில்லை. என்னிடம் இவ்வளவு இரத்தினங்கள் இருக்கிறதென்று மற்றவர்கள் அறிந்து கொள்ளும்படி செய்வதில்லை. ஆனால் இவ்வுலகில் இது ஒன்றே சிறந்த ரத்தினக் காட்சி' என்று சொன்னார்.

அவர்கள் ஒரு நேர்த்தியான மாணிக்கத்தைப் பரிக்ஷை செய்து கொண்டிருந்தார்கள்,

"இது பண்டைகாலத்து மகிழம்பூ நிறத்திலுள்ள ரத்தினங்கள் சைபேரியாவிலும் இலங்கையிலும் மிகுதியாய்க் கிடைக்கும்" என்று தனபதி முதலியார் சொன்னார்.

ஆச்சரியப்படத்தக்க சில உயர்ந்த முத்துக்களை யெல்லாம் எடுத்துக் காட்டினார். முத்துக்களிலும் வெண்மை கலந்த சிகப்பு, மஞ்சள், கருப்பு, சாம்பல் நிறமுள்ளவைகளாயு மிருக்கின்றன. ஹங்கேரியிலிருந்து வந்த ஒளி வீசுகின்ற முத்துக்களைக் காட்டினார். ஒவ்வொன்று நெருப்புக் கங்கைபோல் பிரகாசிக்கிறது என்று சொன்னார். இன்னும் பலதேசத்து இரத்தினங்களை யெல்லாம் எடுத்துக் காட்டினார்.

மற்றோர் பக்கமாய்ச் சென்று, இதைப்பார்த்தீர்களா, இதைப் பற்றிக் கேள்விப் பட்டதண்டா— இதுதான் "மகாராஜா என்று சொல்லப்படும் ரத்தினம். 1665-ம் வருஷத்திலிருந்து, அநேக அரசர்களால் பார்க்கப்பட்டு விலையாடி வந்தது. 32 காரட்டுள்ளது நான் இதை மதிக்கும் விலை 3-லட்சம், என்று சொன்னார்.

கர்ப்பநாயகம் அந்த மகாராஜா வென்னும் மாணிக்கத்தைக் கையிலெடுத்துப் பார்த்து விட்டு, அதனை தலைவணங்கி நமஸ்கரித்து "இது இவ்வுலகில் மிகப்பெரிதே, பார்க்கத்தக்க அபூர்வக் காட்சி," என்று சொன்னார்.

இப்படி இவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டு சந்தோஷப் படுவது போல் காட்டிக் கொண்டார். அவரை ஒருவிதமாய் பரீக்ஷித்து வந்தார். மகாராஜா வென்ற ரத்தினத்தை மிகப் பெரிதாய் நினைப்பது தவறு என்றும் சாமானிய ஜனங்கள் தான் அப்படிக் கருதுவார்கள் என்றும் சொன்னார்.

இனி தங்கத்தில் பதிப்பித்த ரத்தினங்களைக் காட்ட ஆரம்பித்து ரோமாபுரியிலிருந்து வந்த அற்புத ரத்தினங்களால் ஆக்கப் பெற்ற பதக்கம் தோடா பழையகாலத்திய நகைகளும் நாகரீக காலத்து நவீன நகைகள் வரிசையாக அலங்கரிக்கப் பட்டிருந்தன.

கிரீக் தேசத்திலிருந்து செய்யப்பட்டு வந்த மயில்கள், சர்பபங்கள், பட்சிகள் சிரிக்கும்படியான பொம்மைகளையும் பார்க்கும் படி செய்தார்,

"இவை இதர தேசங்களில் செய்யப்பட்டு கிரீக்தேசம் போகிறது. கிரீக்தேசத்தில் யாதொன்றும் செய்கிறதில்லை" என்று கர்ப்ப நாயகம் சொன்னார்.

"உண்மை தான், அவ்விடம் செய்யப்படுவதில்லை" என்று தனபதி முதலியார் ஒப்புக் கொண்டார்.

"இம்மாதிரி ரத்தினங்களைச் சேர்த்து வைத்தும் விற்பனை செய்து வருவதுமாய் இப்பொழுது இவ்வுலகில் இருவர் தான் இருக்கிறார்கள். உயர்ந்த ரத்தினங்களெல்லாம் இவ்விருவரிடமிருந்து தான் வர வேண்டும். ஒருவர் பாரிஸ் நகரிலும், மற்றொருவர் நியூயார்க் நகரிலும் இருக்கிறார்கள் என்றார் கர்ப்ப நாயகம். "அது சரி, ஆனால் அவர்களிடமிருந்து நான் இது வரை வாங்கினதில்லை. அவர்களிடம் எப்பொழுதும் விலை அதிகம் அவ்விருவர் ரத்தினங்களையும் நன்றாய்ப் பார்த்திருக்கிறேன்" என்று தனபதி முதலியார் சொன்னார்.

கர்ப்பநாயகம் இனி தான் பேசக்கூடா தென்றும் பேசினால் விஷயம் எப்படித் திரும்புமோ என்று உதட்டையும் அசையாதிருந்தார்.

கடைசியாக காட்சியில் வைக்கப்படா திருந்த அநேக ரத்தினக் களங்களையும் காட்டினார். ரத்தினத்தில் செதுக்கப்பட்ட உருவங்களும், தந்தங்களும் ஒரு ஜோடி சிங்கங்களும் அவைகளோடிருந்தன.

இரத்தினங்களைப் பற்றி கர்ப்பநாயகம் நன்றாய் அறிந்திருக்கிறார் என்பதை தனபதி முதலியார் தெரிந்து கொண்டார்.

கர்ப்பநாயகம் விசேஷமாய் ரத்தினங்களைப் பார்த்திராவிட்டாலும் அது விஷயமாய் பத்துவருஷம் கஷ்டப்பட்டு லக்ஷணங்களையும் குணங்களையும் பற்றி படித்திருக்கிறேன் என்று சொன்னார்.

"படிப்புக்குத்தக்க யுக்தி தங்களிடத்தில் இருப்பதால், லக்ஷணங்களின் ஞாபகத்தைக் கொண்டு இன்னது இன்ன ஜாதி யென்றும் சொல்லும் திறமை வாய்ந்திருப்பது பற்றி சந்தோஷப்படுகிறேன் என்று தனபதி முதலியார் சொன்னார்.

கர்ப்ப நாயகம் சாமர்த்தியமாய்ப் பேசி தனபதி முதலியாரை தன் வசப்படுத்தி விட்டார். அவருக்கு எந்த விதமாகப் பேசினால் தன்னை விரும்புவார் என்பதைத் தெரிந்து கொண்டு விநோதமாகவும் வேடிக்கையாகவும் பேசினார். இரத்தின வியாபாரத்தில் கள்ளங்கபடு கொண்டு அற்ப அனுபவமுற்ற ஒரு அயோக்யனுக்கு இணங்கி விட்டார். ஆனால் கல்விக் கடலை வாரியுண்ட கவி வாணரின் அற்புத மொழிகள் செவியில் ஏறவில்லை.

எல்லோரும ஒரே பந்தியாயிருந்து புசித்தார்கள். ஆனால் கர்ப்பநாயகத்தை ரஞ்சிதம் ஒரு சிறிதும் கவனிக்கவில்லை. அவர் நல்ல மனிதரல்ல என்று அவள் மனதில் பட்டது. அவரைப் பார்க்கவும் அருவருப்புக் கொண்டாள். அவருடைய நடையும் பேச்சும் ஒரு மாதிரியாய் இருந்தது. கௌரவமாகத் தோற்றவில்லை. அவர் பார்வை யெல்லாம் திருட்டுத்தனமா யிருந்ததே தவிர புத்தி தீக்ஷணியத்தைக் காட்டவில்லை. ரங்கநாத முதலியார் ஞானியைப் போல் மௌனமாயிருக்கிறார்; இன்று வந்தவர் நெடுநாள் பழகியவரைப் போல் பேசுகிறார். இந்த புதிய சிநேகத்தால் யார் என்ன பலனை அடையப்போகிறாரோ தெரியவில்லை, என்று எண்ணினாள். சாப்பிடும் போது தனபதி முதலியாருக்கு உற்சாகம் உண்டாய், சந்தோஷிக்கும்படி டாமோ சில விஷயங்களைக் குறித்துப் பேசினார்.

எலக்ட்ரிக் விளக்குகளை அமைத்து விட்டால் அப்பொழுது காட்சியே புது மாதிரியாய் மாறிவிடும். எப்படி யென்றால் யான் சில காலம் எலக்ட்ரிக் இஞ்சினீராக வேலை பார்த்தேன். இரத்தினப் பிரகாசங்களுக்குத் தக்கவாறு மின்சார விளக்குகளை அமைக்க வேண்டும். இவ்விதம் அடிக்கடி சமயோர்ச்சிதமாய்ச் சொல்லச் சொல்ல, தனபதி முதலியாருக்கு அன்பு உண்டாய் விட்டது.

எலக்ட்ரிக் விளக்கு விஷயமாய் இன்னொருமுறை பேசிக் கொள்ளலாம். மேலும் அதற்கு என்ன செலவாகும், எவ்விதம் ஏற்பாடு செய்யவேண்டு மென்பதைப்பற்றி விபரமாய் எழுதி அனுப்புகிறேன்; என்று சொன்னார்.

"ரெம்ப சந்தோஷம், சௌகரியப்படும் போது எழுதி அனுப்புங்கள்" என்று விருத்த தனபதி முதலியார் விடை பகன்றார்.

இருவரும் வந்து வெகு நேரமாய் விட்டபடியால் விடைபெற்று வீட்டுக்குத் திரும்பினர். கர்ப்ப நாயகத்தை அனுப்பும்போது மிக்க அன்பாய் உபசரித்தார். ரங்கநாத முதலியார் வழக்கம்போல்சென்றார்.

மற்றோர் சமயம் தனபதி முதலியார் ரஞ்சிதத்தோடு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது சொல்லுகிறார்:—

"லாயர் நமது ரத்தினங்களைப் பார்ப்பதில் ஆசையில்லாதிருக்கவில்லை.

"நீங்கள் ஒருவரிடமும் அதிகமாய்ப் பேசமாட்டீர்களே மேலும் சிறுவர்கள் பேச இடங்கொடுக்க மாட்டீர்கள், என்றாள் ரஞ்சிதம்.

"அவருக்குள்ள வயதைக் கவனிக்கும்போது அனுபவமும் பேச்சும்முதிர்ந்ததாகவே தெரிகிறது. இவர் ஒரு நாள் என்னை ஏமாற்றினாலும் ஏமாற்றலாம் என்று சந்தேக முண்டாகிறது. இதுவரை எவரும் என்னிடம் பேச்சில் ஜெயித்ததில்லை. நான் நாயகம் சொல்லுக்கு உடன்பட நேர்ந்துவிட்டது. ஆனால் அவரை யாராரென்று கேட்க மறந்து போனேன்.

இதைக்கேட்ட மனோரஞ்சிதம் சிரித்தாள். கர்ப்பநாயகத்தைப் பற்றிய சந்தேகம் ஏற்கனவே அவள் மனதில் உண்டாயிருந்தது.

"நாயகம் என்ற பெயர்—அந்த சொல்லே தங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுத்து விட்டது. நாயகம் என்று இவ்வுலகில் எத்தனை பேர் வைத்திருக்கிறார்களோ, அந்தப் பெயரை விலைக்கு வாங்கப் போகிறார்களா அல்லது தன்னைத் தவிர வேறு எவரும் அப்பெயரை சூட்டிக் கொள்ளக் கூடாதென்று ரிஜிஸ்டர் செய்யப் போகிறார்களா, ஒன்றுமில்லை. முன் சொன்னத்தபடி உங்களுடைய நாயகம் அவ்வளவு கெட்டிக்காரரல்ல" என்று சொன்னாள்.

"என்னுடைய நாயகம் என்று சொன்னாய், ரொம்ப சந்தோஷம் —நாயகம் மூடனல்ல; திறமை யுள்ளவர் தான். உற்சாக முள்ளவன். ஆகையால் தான் விரும்பி மனம் விட்டுப் பேசினேன்.

"விரும்பினீர்களா! நீங்கள் இதுவரை எவரையும் விரும்பினீர்கள் என்று நான் கேட்டதே யில்லை" என்றாள்.

தனபதி முதலியார் ஒரு மாதிரியாய்ப் பார்த்து விட்டு உறுமிக் கொண்டார்.

"என்னமோ. பார்ப்போம் கூட்டிப் பேசுவதிலும் குறைத்துப் பேசுவதிலும் என்ன இருக்கிறது. இன்று பதார்த்தங்கள் வெகு ருசி, நான் அதிகமாகவே சாப்பிடுகிறேன் என்று சொல்லி விஷயத்தை மாற்ற ஆரம்பித்தார். அங்கு மிங்கும் பார்த்து சிரித்துக் கொண்டார்.

"நான் அவரை வெறுத்தேன். ரங்கநாதமும் அப்படியே தான் என்று ரஞ்சிதம் சொன்னாள்.

"இருக்கலாம்; ஆனால் ரங்கனாதனுக்கு ஆப்த நண்பனென்று நினைக்கிறேன்.

மனோரஞ்சிதம் கர்ப்பநாயகத்தைப்பற்றி அதிகமாய்ப் பேச இடம்கொடுக்காமல் "அப்படியானால் ரங்கனாத முதலியாருக்கு அவர் சரியான சிநேகிதரென்று நான் நினைக்க வில்லை, என்றாள்.

"ரங்கனாதன் என்ன, சிறு பிள்ளையா? பார்த்துத்தான் சிநேகம் செய்திருப்பான். அவன் வீண் பொழுது போக்குகிறவனல்ல, நாயகம் என்ற பெபரைப்பற்றி யோசிக்கிறாய். தெரிகிறது. நாயகம் என்ற சொல்லுக்குமுன் ஏதாவது ஒருபெயர் இருக்கும் விசாரித்து விட்டால் தெரிந்துவிடும், என்று சொன்னார்.

தனபதி முதலியார் அடிக்கடி ரங்கனாதத்தைப் பற்றி குறை கூறி வந்தாராதலால், இப்பொழுது சற்று புகழ்ந்துபேசுகிறாரென்று சிபார்சு செய்ய ஆரம்பித்தாள்.

"தாங்கள் ஏழை ரங்கனாத முதலியாருக்கு எவ்வித உதவியும் செய்வதில்லை. பாவம்-அவர் வாய் திறந்து உங்களிடம் ஒன்றும கேட்பதே கிடையாது, என்று பரிந்து பேசினாள்.

"அவசியம் நேர்ந்து விட்டால், என்னாலான உதவிசெய்யத்தயாராயிருக்கிறேன். அவனைப்பற்றிய அன்பு என் உள்ளத்திலிருக்கிறது.

"நோய் கொண்டவர்போல் ஒரு மாதிரியாயிருக்கிறார்."

"ஓயாத சுருட்டும் சிகரட்டுமாயிருந்தால்-எங்கே இப்படிப் பழகிக் கொண்டானோ."

"இன்று அவரைப்பார்க்கும்போது உற்சாகமாயில்லை. நன்றாய்ப் பேசவுமில்லை. ஆகாரத்துக்கே வெகு கஷ்டமாயிருக்கிறதென்று என்னிடம் சொன்னார்"

"இஷ்டம்போல் நன்றாய்ச் சாப்பிடக் கூடியவன்."

"இன்று சாப்பிட்டாரே இங்கே. நான் கவனித்தேன். ஆகாரம் குறைந்து விட்டது.

"ஆமா ஆமா நானும் பார்த்தேன். 4 பிளேட் உப்புமாவும், 8 டம்ளர் காப்பி மாத்திரம் தான்—பார்க்க அதிசயமா யிருந்தது."

இப்படிச் சொன்னதும் மனோரஞ்சிதத்துக்குக் கோபம் வந்து விட்டது.

"அவர் விஷயத்தில் நீங்கள் சிலநாளாக, அபகாரம் செய்கிறீர்கள். காரணம் தெரியவில்லை. அவரைச் சொன்னது போல என்னை மாத்திரம் நீங்கள் சொன்னால் சும்மா விட மாட்டேன். உங்கள்கொடூரத்தையும் அநியாயத்தையும் பத்திரிகைக்கு எழுதி உலகறியும்படி செய்து விடுவேன்"

இதைக்கேட்ட தனபதி முதலியார் கடகட வென்று சிரித்தார்.

" நீ அவ்வளவு கெட்டிக்காரியா, பெரியதலையா, உனக்கு அவ்வளவு அஞ்ஞானமா? ஒருவரி எழுதினால் தயாராகிற பட்டுப் புடவையும் ரவிக்கையும் பரந்து போய்விடும்"

" இப்பொழுதே செய்து விடுங்கள். இப்பிரபஞ்ச மெல்லாம் பணமல்ல."

" இதை யார் உனக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். கையில் பணமில்லாதவர்கள் சொல்லியிருக்க வேண்டும். அந்த ரங்கனாதன், சொல்லியிருக்கலா மென்று நினைக்கிறேன். என் குழந்தாய்—அவன்

சொன்னது தப்பென்று அவனுக்குச் சொல்லு. இக்காலத்தில் பணமின்றி எவ்வேலையும் நடவாது. இந்தப் பணந்தான் 'வித்தியாசத்தைக் காட்டிக் கொடுக்கிறது''

"இவ்வுலகில் பணமே இல்லாது போய்விட்டால் தரித்திர உலகம் வித்தியாசத்தைக் காட்டாது'' என்று வீரத்தோடு ரஞ்சிதம் புகன்றாள்.

"நீ சொன்னது சரி, அப்படியிருந்தால் ஒரே மாதிரியா யிருக்கும். இதைவிட நீ வேறென்ன பேச முடியும்—ம் நான் கூடத்துக்குப் போகிறேன் என்று தனபதி முதலியார் எழுந்து சென்றார்.

இம்மாதிரி செய்வது இவருக்கு வழக்கம். ஒரு விஷயத்தை வேடிக்கையாகப் பேசி, பேச்சை விநோதமாக வளரும்படி செய்து விடுவார்.

மனோரஞ்சிதமும் சாப்பிட்டு விட்டு ஒரு தட்டில் கிச்சிலிப் பழமும் பாலையும் மற்றதட்டில் வெற்றிலை பாக்கையும் கொண்டு போய்க் கொடுத்தாள். இங்கு இப்படியிருக்க.

மாலை ஐந்து மணிக்கு கர்ப்பநாயகமும் ரங்கநாதமும் ஆனந்த பவன் ஓட்டலில் ஆளுக்கொரு சூரத்காரியை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள்,

"எல்லாம் ஒரு கதையைப்போல் நடந்தது. ஆனால் கஷ்டத்தில் ஆரம்பமாகி சுலபமான முடிவுக்கு வந்து சேர்ந்தது. என்னை நீங்கள் அவ்விடம் அழைத்து அறிமுகமாக்கி வைத்ததுக்காக தங்களுக்கு வந்தனம் செலுத்துகிறேன்'' என்று சொன்னார்.

"அங்கே போனதினால் தங்களுக்கென்ன பிரயோசனம் ஏதாவது அனுகூலமுண்டா? என்று ரங்கநாதம் கேட்டார்.

நாயகம் சிரித்தார்.

,, நீங்கள் ஏன் நன்றாய்ச் சாப்பிடுகிறதில்லை?

"மனதைக் கவலை மூடிக்கொண்டால், நெஞ்சு பஞ்சு மாதிரி தான்.

'நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை.

"புயல்காற்றில் அகப்பட்ட மனிதன் எப்படியோ அப்படி மனம் கவலையென்னும் காற்றில் படும் பாட்டை சொல்ல முடியாது.

"நான் வேறு நீங்கள் வேறு அல்ல. கொஞ்சம் பொறுங்கள். எல்லாக் கவலையும் நீங்கிவிடும்.

"நீங்கள் கொடுத்து என் கவலை தீராது. தானே நீங்க வேண்டும்.

"தனபதி முதலியாரிடம் ஒரு புதிய ஏற்பாடு செய்திருக்கிறேன். அதாவது ரத்தின மாளிகையில் எலக்ட்ரிக் விளக்குகள் போடுவதாக அவரும் ஒப்புக்கொண்டுவிட்டார். அதற்காக அங்குள்ள ரத்தினங்களை யெல்லாம் பந்தோபஸ்தாயுள்ள விடத்துக்கு மாற்ற வேண்டும். கொள்ளையடிக்க அநேகர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் அதைப் பாதுகாக்க வேண்டும் எவ்விதமும் பட்டணத்துக்குத் தான் கொண்டுவர வேண்டும்.

ரங்கநாதம் இருமிக் கொண்டார்.

"உங்கள் வார்த்தைக்கு உட்பட்டாரா? ஆச்சரியம் நீங்கள் பேச்சில் சாமர்த்தியவானாச்சே. இருந்தாலும் உங்களுக்கென்ன லாபம் கிடைத்து விடப் போகிறது. தங்கள் யுக்தி பொன்றும் பலிக்க வில்லையோ?

"இரத்தின மாளிகை விசேஷமான பாடங்களைச் சொல்லிக் கொடுத்தது. நீங்கள் நினைத்திருப்பதை விட அவர் எத்தனையோ மடங்கு மேலானவர். அவருக்கு மரணம் கிட்டிவிட்டால் உங்களுக்கு ஏராளமான சொத்து கிடைக்கும்.

இப்படிச் சொல்லக்கேட்ட ரங்கநாதத்துக்கு சந்தோஷமும் உற்சாகமும் உண்டாய் விட்டது.

"என்னைப்பற்றி ஏதாவது கேட்டாரா?, சொன்னாரா என்று பிக்க அவலோடு கேட்டார்.

"குறிப்பிட்டு ஒன்றும் சொல்லவில்லை; ஆனால் அவர் பேச்சிலிருந்து இவ்வித முடிவுக்குத்தான் வருவார் என்பது எனக்குத் திட்டமாய் அதிசீக்கிரம் தெரிந்து விட்டது. நான் கொண்ட முடிவுக்கு யாதொரு குற்றமுமிராது. உங்களைப் பற்றி மறைத்து வைத்திருந்த அன்பை யெடுத்துச் சொல்லும் படிச் செய்தேன். அவரும் அப்படியே சொன்னார்.

கர்ப்பநாயகம் விபரமற்ற விஷயமாய்ச் சொல்வதைக் கேட்கக் கொஞ்சமும் பிரியப்பட வில்லை. ரங்கநாத முதலியாருக்கு கோபம் ஒரு பக்கம். வருத்தம் ஒரு பக்கம்.

"அவருடைய அபிப்பிராயம் எனக்குப் பத்துவயது உள்ள போதிலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறேன்.

நீங்கள் சொல்வதில் நூதனமொன்றுமில்லையே. உங்களை நம்பிவிட்டதாக நீங்கள் நினைக்க வேண்டாம். அவர்கள் கொஞ்சம் பேசினாலும் அவ்வளவும், தங்கக்கட்டி மதிப்பும் வெல்லக்கட்டி ருசியுமிருக்கும். நான் வருஷக்கணக்காய் பழகி வருகிறேன். நீங்கள் ஒரேவேளையில் அவர்கள் குணத்தை யென்னென்று எண்ணிவிட்டீர்கள் என்றாலும் உங்களிடம் சற்றே விஸ்வாசமிருக்கலாம்.

"அவசரப்பட வேண்டாம். பொறுங்கள் வீணாக என்னுடன் வாதம் செய்யவேண்டாம் இந்த உலகத்தில் அவர் ஒருவர் தான். உங்களுக்கு வேண்டியவர். அவர் குணத்தையுமறிந்தேன் பணத்தையும் அறிந்தேன். அவர் தன் மட்டில் வெகு சாமர்த்திய சாலி தான். என்னை விட யுக்தி படித்தவர். நான் அவருக்கு வலது கையைப் போல் கலந்திராமலிருந்தால் ஒரு பிரயோசனமுமில்லை.

"தாராளமோ, இல்லையோ உங்களால் ஒரு காரியமும் நடவாது. அவரை ஜெயிப்பதற்கு இவ்வுலகில் ஒருவருமில்லை" என்று ரங்கநாத முதலியார் திட்டமாய்ச் சொன்னார்.

"வைரத்தை வைரத்தைக் கொண்டு தான் வெட்டவேண்டும்" என்று காம்பீரமாய்ப் பதிலளித்தார்.

ரங்கநாத முதலியாருக்கு, சமீபத்தில் இவர் நடந்து கொண்டதிலிருந்து சாமர்த்திய சாலி என்று நினைத்துக் கொண்டார்.

இந்திரஜித்

ஓர் துப்பறியும் நாவல்.

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதியது.

செட்டியாருக்கு எவ்வளவு வரையில் கையைப் பிடித்ததென்று ஈஸ்வரனுக்குத்தான் தெரியும். அது ஸாமான்யமன்று. வெகுநாள்வரையில் ஏங்கி மனந்தளர்ந்து ஒன்றிலும் புத்தி செல்லாமல் தப்பித்ததைக் கொண்டு அப்படி யிருக்கலாமென்று தோன்றிற்று.

"அடே ராமா! இதென்னவேலை. இவன் தலையில் இடிவிழ! பூமிதேவியின் பொறுமையைக்கூட இது பறக்கவடித்துவிடும். ராவண கும்பகர்ணன்களைப்போல் இந்த ராக்ஷசன் என்னுயிரை வாங்க எங்கிருந்து வந்தானோ. இவனை நாசஞ் செய்வதற்கு யாராவது ஒரு ராமச்சந்திர மூர்த்தி வரமாட்டாரா? என்ன கொள்ளை. நான் எதிர்பார்க்கும் வழிகள் எல்லாவற்றையும் விட்டு எங்கேயோ காற்றுப் போகாத விடங்களிலெல்லாம் நுழைந்து வேலை செய்கிறான். எந்த வேஷம் போட்டாலும் தபிக்கிறதே"

சின்னவர் "அதுதான் மெத்த ஆச்சர்யம். அவனை யாரென்று சொல்ல முடியும். காலனைப்போல் எங்கிருந்தோ எப்படியோ எப்பொழுதோ வருகிறான். கார்யம் முடிந்தபிறகே நமக்கு இன்னாரென்று தெரிகிறது. இன்னுமொருவிந்தை; அவனாக நம்மைத் தேடி வருவதில்லை. நாமே அவனிடத்தில் போய் வலுவில் மாட்டிக்கொள்ளும்படி தந்திரஞ் செய்கிறான்".

பெரியவர் "ஆம். எப்பொழுதும் ஒரே தினுசாயிருந்தால் அதிலென்ன வேலைத்தனம். ஒரு நிமிஷத்தில் கண்டுபிடித்து விடலாம். தடவைக்குத் தடவை புது வேஷம் நடை உடை பேச்சுகல்பனை எல்லாம் தகுந்த புது அந்தஸ்துள்ள கனவான்கள் மூலமாய் தன்னை இன்னாரென்று தெரிவித்துக் கொள்ளுகிறான். காற்றை காகதத்தில் அடைக்கலாம். மணலை கயிறாகத் திரிக்கலாம். ஆகாசத்தை அள்ளிக் குடிக்கலாம். இந்த மஹா மாயாவியைக் கண்டு பிடிப்பது அரிது"

சின்னவர் "ஸந்தேஹமென்ன! மரக்காயரின் கூட்டாளியான காசிநாத ராயரைக் காட்டிலும் வேறொருவன் தகுந்த சிபார்சுக்கடிதம் கொண்டு வரப் போகிறானே"

“அதே சரி நானே அவனைத் தேடி வலுவில் அழைத்தேன். எனக்கு அவனால் பெரிய லாபங் கிடைக்கு மென்று ஆசைப்பட்டேன். யாரைக் குற்றஞ் சொல்ல முடியும். லோகப் பிரவலித்தியுள்ள மரக்காயரின் கூட்டாளி யென்று வருகிறவனை எப்படி ஸந்தேஹிக்கலாம்?”

“அதிருக்கட்டும். நேற்று வந்த பண்டித ரென்ன ஸாமான்யமா? பால்யம் முதல் நமக்கு நண்பரும் தலைகீழாய்ப் படித்துக் கரைத்துக் குடித்தவரும் தாதுவர்க்க சாஸ்திர நிபுணரென்று பல தேசங்களில் கௌரவப்பட்டம் பெற்றவருமான கங்காதர சாஸ்திரியே அவனைத் தலையில் வைத்துக் கொண்டு கூத்தாடினார்”

இதைச் சொன்னவுடன் பெரியவருக்கு ஏதோ சுருக்கென்று பட்டது. உடனே பேச்சை மாற்றி விட்டார்.

அது போகட்டும்! அவனுக்கு உதவியாய் வேலைசெய்யும் பெண் பிள்ளையைப்பற்றிச் சொல். நான் பழகுமிடங்களில அனேக சீமாட்டிகளைக் கண்டு பேசவேண்டி யிருக்கிறது. எப்பொழுதும் எங்கேயும் எல்லோரிடத்திலும் ஸந்தேஹப்பட்டுக்கொண்டு கண்ணில் எண்ணெயைக் குத்திக்கொண்டு உஷாரா யிருக்க முடியுமா? எல்லோரும் போக்கிரிகளென்றும் என்னை ஏமாற்ற வந்திருக்கிறார்களென்றும் எண்ணிக் கொண்டிருந்தால் அப்புறம் மூச்சுவிடுவ தெப்படி? யாருடன் பேசிப் பழகமுடியும். ஆனால் ஒருக்ஷணம் நான் அசந்து மறந்திருந்தால் போதும் ஏன் நான் ஸர்வ சாக்கிரதையாய் இருக்கும்பொழுது தான் என்ன வாழ்ந்தது. ஏதோ ஒரு பெயர் எப்படியோ என்னை மயக்கி, அவளுடைய இஷ்டப்படி யெல்லாம் ஆட்டிவைத்து என்னை எல்லோரும் கேலி செய்யும்படி தெருவில் நிறுத்தி விடுகிறாள். மற்றதெல்லாம் போகட்டும். அவளைப் போல் புத்திசாலியும் தந்திரமும் தெரிந்தவள் இந்தப் பதினான்கு லோகங்களிலும் கிடைப்பதரிது. ஒவ்வொரு தடவையும் அவள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் நான் வருகிறது. எதைச் சொன்னாலும் வேதவாக்கியமாய்க் கேட்டுத் தலையால் நடக்கிறது. பிறந்தது முதல் பெண்ணையே கண்ணால் கண்டிராமல் பெண் காற்றுக்கூட அடிக்காமல் காட்டிலிருந்து அப்போது தான் பிடித்துக் கொண்டு வந்த மிருகத்தைப் போல் பல்லை இளித்துக்கொண்டு அவளைப் பார்த்த வண்ணமே கண் கொட்டாமல் திகைத்து நிற்கிறதே தொழிலாயிற்று. ஆசையென்றால் ஒருவரிடத்தில் உண்டாகும். இந்தச் சிறுக்கி எவ்வளவு ஆசாமியாய் வேஷம் போட்டாலும் அவ்வளவ பேர்களிடத்திலும் ஆசையா? இதென்ன விபரீதம்”

செட்டியார் தன்மனைவி எங்கேயாவது ஸமீபத்திலிருந்து கேட்டுவிட்டாளோ வென்று திடுக்கிட்டு நாற்புறத்திலும் பார்த்தார்.

“இப்படியெல்லாம் முடியாது. நாம் என்னமோ நம்மையே பிருஹஸ்பதி யென்று எண்ணிக்கொண்டு அந்தக் கைகாரனுடைய வேலைத்தனத்தைக் கண்டுபிடித்து, அவனை மாட்டிவிடுகிறதென்ற ஜம்பம் பலிக்காது. ஆயிரக் கணக்காய் நஷ்டமும் அஸஹ்யமான கஷ்டமும் எளித்த வாய்ப்பட்டமுமே இதுவரையில் கைகண்ட பலன். இம்மாதிரி அசாமிகளைக் கண்டு பிடித்து தண்டிப்பதே வேலையாய் வருஷக் கணக்காய் அனுபவம் முதிர்ந்திருக்கும் தொழிலாளிகளை இந்த விஷயத்தில் நியமித்தா லொழிய நமக்கு வேறு கதியில்லை. பாம்பின் கால் பாம்பிற்கே தெரியும். யானையைக் கொண்டே யானையையும் பிடிக்க வேண்டும். முள்ளை முள்ளாலேயே எடுக்க வேண்டும். வஜ்ரத்தை வஜ்ரத்தாலேயே வெட்ட வேண்டும். திருடனைக் கொண்டே திருடனைப் பிடிக்கவேண்டும். இன்றைக்கே சேஷாசாரியாரிடத்திற்குப் போய் வடிகட்டி யெடுத்த மணிப்பயலாய் வில்லாதி வில்லனாய் குழிநரியாய் எமனையும் வாயில் போட்டுக் கொள்ளக் கூடியவனாய் அவனிடத்திலுள்ள துப்பறியும் அசாமிகளுக்குள் முதல்தரமான பேர்வழியை அனுப்பச் சொல்லவேண்டும். அவன் 60 நாழிகையும் நமது வீட்டிலேயே இருக்க வேண்டும். இங்கே வருகிற ஒவ்வொருவனையும் ஒவ்வொருத்தியையும் கண் குத்திப் பாம்புபோல் கவனிக்க வேண்டும். தலைமயிர் கண் மூக்கு கன்னம் உயரம் பருமன் நடை பேச்சு ஒன்றும் விடாமல் யாரிடத்திலும் ஸந்தேஹமுள்ளவனாய் எவரிடத்திலும் நம்பிக்கை இல்லாதவனாய் எங்கேயும் இந்திரஜித்தாயும் அவனுடைய கூட்டாளியாயும் பார்ப்பவனாயிருக்க வேண்டும். நானே அவன் அவனே நான் என்னிடத்திலுள்ள புத்திக் கூர்மையும் முன்யோசனையும் சாக்கிரதையையும் உருவமெடுத்து வந்ததென்றே அவனைச் சொல்லும்படி இருக்கவேண்டும். ஈஸ்வரன் மாணிடவேடம் கொண்டு வந்தாலும் அவரைச் சோதிக்க வேண்டும். வஸிஷ்ட மஹரிஷி வந்தாலும் அவரைத் திருடனென்றே நினைக்கவேண்டும். நமது மஹாராணியைக்கண்டாலும் என்னை ஏமாற்றுவதற்கு வந்தவளென்றே தீர்மானித்து, அவளைக் குறுக்கு விசாரணை செய்யவேண்டும். இவ்வளவென்ன, உன்னையும் என்னையும் நமது பெண்டுகளையும் போல் மாறு வேஷம் பூண்டு ஏன் வரக்கூடாது. ஆகையால் முதலில் நம்மையே ஸந்தேஹிக்கவேண்டும். கடவுளைப் போல் இந்திரஜித்தும் அவனுடைய கூட்டாளியும் ஸர்வ வ்யாபியாய் எங்கேயும் இருப்பார்களென்றும் எந்த ரூபத்தையும் தரிப்பார்களென்றும் ரயில்வே கார்டு டிரைவர் முதல் புரோஹிதன் சங்கராசாரியர் வரையில் ஒருவரையும் நம்பக் கூடாது. சேஷாசாரியினிடத்தில் தான் அவ்விதமான பொறுக்கு அசாமிகள் கிடைக்கும்”

ராணியம்மாள் வாசப்படியிலிருந்த திரையை நீக்கி “இன்று ராத்திரி அம்மாள் தங்களுடன் ஸினிமாவில் புதிதாய்ப் போடும் கிருஷ்ண லீலை

யைப் பார்ப்பதற்குப் போவதாய்த் தங்களிடத்தில் சொல்லியிருப்பதை ஞாபகப்படுத்தச் சொன்னாளெ"ன்றாள்.

செட்டியார் "மறந்தே தொலைந்து போய் விட்டது. ஏதாவது வந்து குறுக்கே விழுந்து நமது பிராணனை வாங்குகிறது. ஸினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போகாவிட்டால் அப்புறம் நாம் இங்கே தலைவைத்துப் படுக்க வேண்டியதில்லை. இன்னும் 10 நிமிஷத்தில் வண்டி தயாராய் வந்து நிற்கும். ஒரு நிமிஷம் தாமதித்தால் தலை போய்விடும். சேஷாசாரி இன்றைக்கு முடியாது."

மறு நாட்காலையில் செட்டியார் ஞாபகமாய் சேஷாசாரியின் ஆபீஸிற்குப் போய் இந்திரஜித்தின் வீரகிருத்யங்களை ஆதியோடந்தமாய் சொல்லி முடித்தார். அந்தத் துப்பறியும் நிபுணன் அதை வெகு கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்து கைமேல் கையெழுத்து, பலே நல்ல தமாஷ்! இந்திரஜித்தா? பிடிப்பதற்கு நல்ல ஆசாமி பார்த்தீரே. வேறொருவரும் உமக்கு அகப்படவில்லையோ. தேசா தேசங்களின் போலீஸ்காரரெல்லாம் பகவானைப் போல் அவனை இன்னும் தேடிக் கண்டு பிடிக்கமுடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவனுடைய வேஷங்களையும் வேலைகளையும் ஒப்பற்ற புத்தியையும் கவனித்தால் இந்திரஜித் தென்று யாராவது ஒரு பேர்வழி உண்டா? அல்லது பல கொள்ளைக்காரர்கள் கூடி ஏற்பாடாய் வேலை செய்து கொண்டிருந்து அவர்களை இன்னாரென்று போலீஸார் கண்டுபிடிக்க முடியாமல் சௌகரியத்திற்காக இந்தப் பெயரை வைத்திருக்கிறார்களா வென்று எனக்கு இன்னும்தெரியவில்லை. அன்று எப்படிவேண்டுமானாலும் போகட்டும் ஏதோ என்னால் வஞ்சனையில்லாமல் கூடிய வரையில் உங்களுடைய காரியத்தைக் கவனிக்கிறேன். அதிகத் தாமதமின்றி என்னிடத்திலுள்ளவர்களில் எவ்விதத்திலும் முதல் தரமானவனை உங்களுக்கனுப்புகிறேன்.

செட்டியார் "அவ்வளவு செய்தால் எனக்குப் போதும். அப்படிப்பட்ட அசாமியே எனக்கு வேண்டும். பெயரென்ன? சேஷாசாரி பெயரைப் பற்றி விசாரணை யேன்? நீங்கள் எதை வைத்தாலும் சரி வீட்டில் அவனுக்கு கோவிந்தனென்று பெயராம். இங்கே அவனை மணியென்று நாங்கள் கூப்பிடுகிற வழக்கம். மத்தியானம் நாலு மணிக்குள் அவனை எப்படியாவது உங்களிடத்தில் ஆஜர் செய்விக்கிறேன். நம்புங்கள் செட்டியார் "அதெல்லாம் முடியாது நீரும் அனுப்பமாட்டீர். அப்படி அனுப்பினாலும் இதை எப்படியாவது தெரிந்து அந்தக் கைகாரன் உம்மையும் ஏமாற்றி, நீர் குறிப்பிட்ட அசாமியைப் போலவே வேடந்தரித்து, வந்து விடுவான். இது

வரையில் நான் மோசம் போய் தண்டம் கொடுத்தது போதும். வேற்று அசாமி என்னிடத்தில் இனிமேல் வரக்கூடாது. அவன் வருகிற வரையில் இங்கிருந்து கைப்பிடியாய் அழைத்துக் கொண்டு போகாமல் விடேன்.

அவன் எப்பொழுது வருவானோவென்று சேஷாசாரி ஆக்ஷேபித்தார். செட்டியார் அதெற்கெல்லாம் அசைகிறவரா "ஆளை அனுப்பி, அவனை எங்கே யிருந்தாலும் கொண்டு வரச்சொல்லு."

அரை மணி நேரத்திற்குள் சொல்லி வைத்தது போல் அந்தப் பேர்வழி வந்து சேர்ந்தான். பார்வைக்கு வெகு விசித்திரமானவன்; குட்டை, தலைமயிர் ஒட்டக் கத்திரித்து விட்டு சிவப்பு கிரணங்கள் போல் நேராய் நின்றன; கூர்மையான பார்வை, சற்று சப்பை மூக்கு மெல்லிய வெளுத்த உதடுகள். வலது கன்னத்தில் ஓர் கத்தி வெட்டுக் காயத்தின் வடு, போலீஸ் இன்ஸ்பெக்டரைப் போல் வேஷம் பூண்டு ஒரு டாணாவில் புகுந்து, அங்கிருந்த கஜானா பணப்பைகளை அப்புறப்படுத்தும் பொழுது அவனைத் தடுத்துப்பிடித்துக் கட்டினதில் உண்டானகாயமாம். தீரமும் ஆழ்ந்தயோசனையும் பரபரப்பின்மையும் முகத்தில் விளங்கின. வெகு திட்டமாய் உள்ளே வந்து எல்லோரையும் ஒரு பார்வையில் அடக்கி, செட்டியாரை ஏற இறங்கப்பார்த்து, உபசாரமில்லாமல் "என்னைத் தருவித்த காரணமென்ன?" வென்று சேஷாசாரியரைக் கேட்டான்.

"இதோ இருப்பவர் மகா ராஜ ராஜ ஸ்ரீ வெள்ளையன் செட்டியார். அவர்கள் பூலோக குபேரன், நவநிதியும் இவரை அண்டி யிருக்கின்றன."

அப்படியா வென்று ஸாதாரணமாய் அந்த மனிதன் பதில் சொன்னான்.

"என்னை உனக்கு ஏற்கனவே தெரியுமென்று தோன்றுகின்றது.

"என்ன ஸ்வாமி! தங்களைப் போலொத்தவர்களைத் தெரிந்துகொள்ளாவிட்டால் என் தொழிலில் ஒரு நாய்கூட என்னைப் பார்த்துக் குரைக்காது. உங்களை இன்னாரென்று தெரிந்து கொள்வது கஷ்டமல்ல; நேற்றுப்பிறந்த குழந்தையைக் கேட்டாலும் சொல்லுமே."

"கபடமில்லாமல் உள்ளது உள்ளபடிபேசுகிறா"னென்றார் செட்டியார்.

"எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். என் நடை உடை பாவனைகளை என் யஜமானனுடைய நோக்கத்திற்குத் தகுந்தபடி வைத்துக் கொள்வதிலேயே கவலையாயிருப்பே"னென்று அவன் மரியாதையுடன் பதிலளித்தான்.

"உன் பெயரென்னவென்று செட்டியார் புன்சிரிப்புடன் கேட்டார்.

"கோவிந்தய்யர். தங்களுடைய ஊழியம் செய்ய வேண்டிய வேலையென்ன? வயிரம் திருட்டுப் போயிற்றா? திருட்டுத்தனமாய் யாராவது வயிரங்களை வாங்கி விற்கிறாரா?"

"இல்லை வேறுவிதமான வேலை. ராவ்பகதூர் இந்திரஜித்தைப்பற்றி கேள்வியுண்டா" வென்று செட்டியார் அவனை வெறிக்கப் பார்த்தார்.

அவன் தலையசைத்து, "தெரியாதா என்ன அவனைப்பற்றித் தெரிந்து கொள்வது என் தொழிலல்லவா"

"சரி. அவனை எப்படியாவது பிடித்துத் தரவேண்டு" மென்றார் செட்டியார்.

கோவிந்தய்யர் சற்று யோசித்து, "இது ஸாமான்ய கார்ய மென்று உங்களுக்குத் தோன்றுகிறதோ" வென்றார்.

செட்டியார் அவன் செய்ய வேண்டிய வேலையை விரித்துரைத்தார். ஐயர் அதற்கு ஒப்புக்கொண்டு, "அந்தப்பேர்வழி உங்களுடைய ஸமீபத்தில் வந்தால் அவனைக் கட்டாயம் பிடித்துத் தருகிறேன். எந்த வேஷம் போட்டாலும் என்னிடத்தில் பலிக்காது. அவ்வளவு வரைக்கும் நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். அவன் மாறுவேடம் பூண்டிருக்கிறானா இல்லையா வென்று ஒரு நொடியில் சொல்லுவேன்; பொய்மயிர் மீசை தாடி நிறம் உயரம் இவற்றைக் கண்டு பிடிப்பதில் எனக்கிணையில்லை யென்று நான் சொல்லிக் கொள்வது நன்றாயிராது. அவனைக்கண்டால் குழி வெட்டிப் புதைத்து விடுவேனென்பதில் தடையில்லை. அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் உங்களிடத்தில் இருக்கும் வரையில் எனக்குத் தெரியாமல் என்னிடத்தில் அகப்பட்டுக் கொள்ளாமல் இந்திரஜித் ஒன்றும் செய்ய முடியாதென்று நீங்கள் நம்பலாம்"

"சேஷாசாரியார் குறுக்கிட்டு அவன் செய்கிறேனென்று ஒப்புக்கொண்டால் செய்தேதீருவான். அதில் கொஞ்சமேனும் தடையில்லை. என்னிடத்தில் உள்ளவர்களில் இவனே நிபுணன். எப்பேர்ப்பட்ட வேஷமாயிருந்தாலும் அதைக்கண்டு பிடித்து பேர்வழியைக் கரையேற்றுவதில் இவனுக்கு ஈஸ்வரன் தனியாய் ஒரு சக்தி கொடுத்திருக்கிறார்.

செட்டியார் அப்படியானால் அந்த அசாமியே எனக்கு வேண்டும். வேஷங்களைப் போடுவதிலும் அதற்குத் தகுந்தபடி நடப்பதிலும் பிறரால்

கடைசி வரையில் கண்டு பிடிக்கப் படாமலிருப்பதிலும் கடவுள் இந்திரஜித்திற்குத் தனியாய் ஏதோ ஒரு சக்தி கொடுத்திருக்கிறாரென்று எனக்குத் தெரியு" மென்றார்.

ஐயா செட்டியாருடைய பங்களாவில் தற்பொழுது ஜாகை வைத்துக் கொள்ளவேண்டிய தென்றும் சின்னச் செட்டியாருக்கு அவர் உதவி யென்றும் எல்லோருக்கும் வெளிப்படையாய்ச் சொல்லப்பட்டது. அன்று சாயங்காலத்திலேயே அவர் வந்து சேர்ந்தார்; அதிக சாமானில்லை. ஆனால் ஒரு ஆச்சரியம், அவர் வந்த நிமிஷம் முதல் ராணிக்கு அவரிடத்தில் ஏதோ ஒரு வெறுப்புண்டாயிற்று.

அவர் வேலையில் நிபுணனென்று தடையில்லாமல் சொல்லலாம். இந்திரஜித்தும் அவனுடைய கூட்டாளியும் அதுவரையில் எடுத்த பலவேஷங்களையும் கொள்ளையடித்த விதத்தையும் செட்டியார்கள் அவனுக்கு விவரித்துரைத்தார்கள். "எல்லாம் சரிதானய்யா காசி நாதராயர் வேஷதாரியென்று உங்களுக்குத் தோன்றினவுடன் ஏதோ அஜாக்கிரதையாய் நேர்ந்தது போல் அவருடைய பொய்த்தலைமயிரை ஏன் தட்டி விட்டிருக்கக்கூடாது. வாத்தியார் வேஷத்துடன் உங்களிடத்தில் வயிரப் பொத்தானைப் பற்றிப் பேசினவுடன் பாக்கியத்தம்மாளின் வயிர உருப்படிகள் சரியாயிருக்கின்றனவா வென்று ஏன் பார்க்க வில்லை. பண்டிதராய் வேஷம் போட்டு வயிரங்களைச் செய்து காட்டினபொழுது கங்காதர சாஸ்திரி முதலிய பண்டிதர்களுக்கு அவன் எவ்விதமாய்ப் பரிசயமானனென்று ஏன் தீர விசாரிக்கவில்லை. உருக்கிக்காட்டின சாமானை அவன் கையில் மறுபடியும் கொடுக்காமல் நீங்களே கொண்டுபோய் ஏன் வைக்கவில்லை. அவனைப்போன்ற பண்டிதர்கள் அங்கிருக்க அவர்களால் அந்த வேலையைச் செய்வித்து அவன் ஸமீபத்தில் வராமல் எட்டவிருந்து வேண்டிய எச்சரிக்கைகளையும் முறைகளையும் சொல்லிக் கொண்டிருக்கும்படி ஏன் செய்யக்கூடாது. மேலும் தலைமயிர் மீசை தாடி உயரம் பருமன் முதலியவைகளை மாற்றும் விதங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். இதுவரையில் வந்த மனிதன் குட்டை. ஆனால் பண்டிதன் நெட்டையாயும் வயதால் சற்று கூனினவனும் காட்டுவது எப்படித் தெரியுமா? முதுகில் ஒருவளைவை உண்டு பண்ணி பஞ்சுவைத்தடைத்து கூனல்போல் சாய்ந்து நடந்தால் பார்க்கிறவர்களுக்கு அப்படித் தோன்றும்; காலில் தரித்திருக்கும் ஜோடு மிதியடி முதலியவைகளின் உயரத்தையும் பொறுத்திருக்கிறது. மூக்கின் நுனியில் வெள்ளை மெழுகால் தந்திரமாய் வேலை செய்தால் சற்றுத் தூக்கிக்காட்டி சாஸ்திர விசாரத்தால் கூர்மையான பார்வை அமைந்திருப்பது போல் காட்டும் உங்களைப் போன்ற புத்திசாலிகள் வியாபாரத்தில் மற்ற எல்லோரையும் மிஞ்சி கோடிக் கணக்காய்

தனக்கு குவித்தது போல் இந்த விஷயத்திலும் ஏன் அந்த புத்தியை உபயோகிக்கக் கூடாதென்று நினைக்க எனக்கு வெட்கமாயிருக்கிறது. படிப்பில்லாத நானும் ஏதோ இதைப்பற்றி இரண்டொன்று தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறேனே" யென்றான்.

இதற்கு ருஜுவாய்த்தது போல் கோவிந்தய்யர் பங்களாவில் இருக்கும் வரையில் இந்திரஜித்தின் காற்றுகூட அங்கே அடிக்கவில்லை. அவனுடைய ஸாமார்த்தியத்திற்கும் செட்டியார்களின் மந்த புத்திக்கும் இதுவே போதுமான ருஜுவாகும். அவன் அதைச் சொல்லிச் சொல்லிக் காட்டுவதையும் அதனால் செட்டியார்கள் தலைவெட்கி நிற்பதையும்விட ஒருதரமாவது இந்திரஜித் முன்போல் அங்கே வந்து ஒரு வேலைத்தனம் செய்து வீண் பெருமை பாராட்டும் கோவிந்தையரைப் பறக்கவிட்டு அவருடைய கர்வத்தை குறைத்தால் போதுமென்றாயிற்று. அதனால் பணநஷ்டம் நேர்ந்தாலும் பாதகமில்லை. அடிக்கடி ஐயர் அவனையும் இவனையும் கண்டு ஸந்தேஹப் பட்டார். சற்றுத்தீர விசாரித்தபிறகு அவன் தாங்கள் தேடும் பெயர்வழி யல்லவென்றும் யாரோ குற்றமற்ற ஸாதுவென்றும் வெளிப்படுத்தினான். பிறரைஸந்தேஹிப்பதில் அவனைப் போன்றவர்களில்லை. யாராயிருந்தாலும் சரி. வியாபார விஷயமாய் வெகு நாளாய்ப் பழகின நண்பர் செட்டியாரை பார்க்க வந்தால், கோவிந்தய்யர் அவ்விடத்தில் ஓர் திரைமறைவில் பதுங்கியிருந்து அவர்கள் பேசிக் கொண்டிருந்த விஷயத்தை ஒன்று விடாமல் குறித்துக்கொண்டு தன்னுடைய படமெடுக்கும் யந்திரத்தால் அவரைப் பல தடவை படம் பிடித்ததாய்த் தெரிந்தது. பாக்கியத் தம்மாளைப் பார்ப்பதற்கு யாராவது ஓர் கிழவி வந்து பேசிக் கொண்டிருந்தால் ஐயர் அந்த அறையில் சோபாவின் கீழ் பதுங்கியிருந்து, வந்தவள் ஒருவேளை மோசக்காரியாய் ஏன் இருக்கக் கூடாதென்று கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் மோஹனாங்கியென்ற சீமாட்டி தன் நாலு பெண்களுடன் பிற்பகலில் காபி குடிக்க வந்த பொழுது ஐயர் பரிசாரகனைப் போல் வேஷம் பூண்டு, அவர்களைச் சுற்றிச் சுற்றிக் கொண்டு அவர்கள் மோசக்காரர்களா, பௌடர் தடவிக் கொண்டிருக்கிறார்களா, பஞ்சு வைத்துக் கட்டிக் கொண்டிருக்கிறார்களா" வென்று கவனித்துக் கொண்டிருந்தார். செட்டியாருடைய தவசிப் பிள்ளையை ஒருவேளை இவன் இந்திரஜித்தாய் ஏன் இருக்கக்கூடாது. இல்லாவிட்டால் குடும்பத்தின் அந்தரங்க சங்கதிகள் எப்படி வெளிப்பட முடியுமென்றார். ராணியம்மாளும் தப்பிக்கவில்லை. அவளே பலவிதமாய் வேஷம் பூண்டு மாயாவியுடன் சேர்ந்து வேலை செய்து செட்டியாரை ஏன் ஏமாற்றியிருக்கக்கூடாது? இவ்விதமாய் எப்பொழுதும் இங்கேயே இருக்கிறார். அந்தப் போக்கிரியும் அவனுடைய கூட்டாளியும் இங்கிருந்த பொழுது

இலட்சுமி காந்தன்

முன் தொடர்ச்சி.

உண்மையில் என்னையும் அவர்கள் பிள்ளைகளில் ஒருவனைப் பாவித்து விட்டபடியால், அவரது கருணைப் பிரவாகத்தை என்னென்று சொல்லுவேன். எப்பொழுதும் என் நன்மையை நாடியவரா யிருந்தார்.

என் வேலை யெல்லாம் முன்னேக்கி லாபகரமாய்ச் சென்று கொண்டிருந்தது. என் வேலையைப் பற்றி புகழ்வாரே யன்றி எவரும் பொறாமை கொள்ளார்.

பம்பாயிலிருந்து பஞ்சு அனுப்பச் செய்து ஜப்பான் மார்க்கட்டில் நல்ல லாபத்துக்கு விற்பனை செய்து வந்தேன்.

ஐரோப்பிய மகா யுத்தம் நடக்க நடக்க ஜப்பான் வியாபாரம் வெள்ளப் பெருக்கெடுத்து இந்தியாவில் புகுந்தது போலாய் விட்டது.

ஆதியில் ஜப்பான் தேசவாசிகளுக்கு தேசாபிமானம் சற்று மில்லாமலிருந்தது. ருஷியா சண்டை யேற்பட்ட போது ஜனங்களின் ஒற்றுமைப்பட்ட உதவி அவசியமென பெரிய மேதாவிகளெல்லாம் அறிந்து கொண்டனர். நான் மேல்ஜாதி, நீ கீழ்ஜாதி என்ற குழப்பங்கள் அடிக்கடி யுண்டாயிற்று.

இந்தியாவில் ஒரு ஜாதியான் மற்றொரு சாதிப் பெண்ணை விவாகம் செய்ய இஷ்டப்பட்டால் ஆரிய சமாஜமோ, அல்லது கிறிஸ்து மார்க்கத்திலோ கலந்து கொள்கிறார்கள்.

இதனால் அவர்கள் இஷ்டத்துக்கு விரோதமாய் நிர்ப்பந்தம் செய்துவந்த ஜாதிக்கட்டுப் பாட்டை நீக்கிவிட்டதாய் எண்ணிக் கொள்ளுகிறார்களல்லவா? இம்மாதிரி ஜப்பானிலும், நடந்து வந்தது.

ஜாப்பான் கவர்ன்மெண்டார் சட்டமூலமாக ஜாதிக்கட்டை நீக்கி விட்டார்கள். இப்பொழுது கீழ்ஜாதி மேல்ஜாதி யென்ற விகற்பமின்றி, நாகரீகமாய் நடக்க ஆரம்பித்து விட்டார்கள். தேசாபிமானம் அதிகப்பட்டு விட்டது. ஒற்றுமையாய், சர்க்காரின் ஆதரவில் அநேக தொழில்களை நடத்துகிறார்கள். சோம்பேரித்தனம் என்பது சிறிதளவுங் கிடையாது. யாரைப்பார்த்தாலும் ஊக்கங்கொண்டவர்களாகவே யிருக்கிறார்கள்.

பம்பாயிலிருந்து ஒரு பெரிய பிரபல வர்த்தகர் அங்கு வந்து ஜப்பானியர் தொழிலைக் கவனித்து வந்தார். இந்தியாவுக்குத் திரும்பும் போது ஊசி செய்கிற யந்திர மொன்றை விலை பேசித் தீர்மானித்துத் தன்னுடன் கொண்டு போக எண்ணினார். இந்தியாவுக்குக் கொண்டு போகிறவர் என்றறிந்து யந்திரத்தை விற்க மறுத்து விட்டான்.

பார்த்தீர்களா! தேசாபிமானத்தை இந்தியாவில் அந்த யந்திரத்தைப் பிரித்து பல யந்திரங்கள் செய்யப் பார்ப்பார்களாம். ஆகையால் கொடுக்கவில்லை. அவ்வளவு கட்டுப்பாடாக அவர்கள் கைத்தொழில் செய்கிறார்கள்.

ஜாதி அபிமானம் சற்று குறைந்ததும் தேசாபிமானம் வளர ஆரம்பித்தது. நிரந்தரமான சுகவாழ்வுக்கு அஸ்திவாரம் பலப்பட்டு விட்டது. ஜனங்களுக்கு தங்கள் அரசனிடத்தில் அத்யந்த விஸ்வாசம். எந்த வகையிலும்—கைத்தொழில் அபிவிருத்தியிலும் அரசனுடைய ஆதரவு அதிகம்.

நாமெல்லோரும் அவர்களைப்பார்த்து நமது பூர்வீக கொள்கைகளை ஞாபகத்துக்குக் கொண்டு வந்து அதன்படி நடக்க சித்தமாக வேண்டும்.

நமது தேசத்தில் அன்பு எந்த வகையில் புகுந்தாலும், அணை கடந்து போய் விடுகிறது. அதற்கு எல்லையில்லை. ஒருவன் தர்மம் செய்யப் புகுந்தால், தன் உடைமுதல் சகல சம்பத்தையும் புண்ணியம் என்ற சொல்லுக்காக வாரிக் கொடுத்துத் தரித்திர நிலையை அடைவான்.

கடவுளிடத்தில் பக்தியா யிருக்க வேண்டு மென்று உபதேசம் செய்தால், குடும்பத்தைக் கவனிக்காமல் தன்னை அந்த பக்திக்கே ஒப்புக் கொடுத்து விடுவான். இதற்கு சாஸ்திரமும் புராணமும் தாளம் போடுகிறது. இப்பிரபஞ்சம் எப்படி மாறிக் கொண்டிருந்தாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் பிரத்தியேகமாய் புத்தி ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டுதான் நிர்வகிக்க வேண்டும்.

ஜப்பானிலிருக்கும் போது தேசாபிமானம் என் மனதைக் கவர்ந்து கொண்டது, நமது 'இந்தியா ஜப்பானை விட இளைத்ததா? ஏன் முன்னுக்கு வரக்கூடாது என்ற எண்ணம் அடிக்கடி உண்டாகும். இந்தியாவின் தரித்திர நிலையைக் கவனிக்கும் போது எனக்கு மிகக் கவலையாய்த் தோன்றும். என்னைப்போல, பாரத மக்களனைவர்க்கும் உதயமாகி விடுமானால், தரித்திரம் தலைகாட்டுமா? ஒற்றுமை முற்றுப் பெறாமல் போகுமா'! எடுத்த காரியம் கைகூடாமல் தடைபடுமா!

எனக்கு ஒழிவான நேரத்திலெல்லாம் இந்தியா—என் பாரத மாதாவின் இருள்—கவலை—என் மனதை மூடிக்கொண்டது.

இன்னுமொரு ஆச்சரியத்தைக்கேளுங்கள், என் பிதா செய்ததையெல்லாம் மறந்து விட்டேன். பெற்றோர் இன்னும் என்னைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்களோவென எண்ணுவேன்.

எப்படியோ பல சங்கதிகளும் வந்து என் மனதில் குவிந்தன. என் மனதில் மாத்திரமா இந்தப்பத்திரிகைக்கும்கூட விஷயம் வந்து விட்டது.

இந்தியாவுக்குப் போக வேண்டு மென்ற ஆவல் உண்டாய் விட்டது. எப்பொழுதும் ஜப்பானியர் முகத்தையே

பார்க்க நேர்ந்ததால் என் முகமும் ஒரு சிறிது மாறி விட்டதோ என்ற எண்ணம் உண்மையில் விட்டுக்கவலை யில்லாதிருந்ததால் உடல் பூரித்திருந்தது. எல்லோரும் என்னைப் புது மனிதனாகப் பார்க்க வேண்டும். கல்கத்தாவிலெடுத்த போட்டோ படத்திற்கும் ஜப்பானில் எடுத்த படத்துக்கும் விசேஷ வித்தியாச மிருந்தது.

எஜமானனுடைய புத்திரன் ஒரு வருஷ மிருந்து திரும்பி விட்டான். எனக்கும் கணக்குப்படி மூன்று வருஷமான படியால் திரும்பும்படி உத்திரவு கிடைத்தது.

எனது நண்பர்கள் அவ்விடத்தில் அநேகர் எனது பிரிவுக்காக வருந்தினார்கள். சிலர் சன்மானமாக பட்டுகளையும், சைனாதேயிலை காப்பிக் கொட்டையையும் கொடுத்தார்கள். குதூகலமாய் அனுப்பப் பட்டேன்.

சில நாட்களில் கல்கத்தா வந்து சேர்ந்தேன். எஜமானனுடைய குமாரனும் சில குமாஸ்தாக்களும் என்னை எதிர் கொண்டழைத் தார்கள். சுமார் பத்து நாள் தங்கியிருந்தேன். ஆயிர ரூபாய்க்கு உண்டியல் வாங்கிக்கொண்டு சென்னை வந்து சேர்ந்தேன். எனது நண்பர்களைக் கண்டு ஆனந்தித்தேன்

பிறகு ஸ்ரீரங்கம் சென்று எனது உயர்ந்த ஆடைகளை வைத்து விட்டு சாதாரண உடுப்புகளை அணிந்து எனது மாமனார் வீடு சென்றேன். மாப்பிள்ளை தடபுடலாக வந்திறங்கினால் விசேஷ மரியாதை சொத்துள்ளவனுக்கு உடை பகட்டு வேண்டியதில்லை யென்றாலும் நான் பிதாவை விரோதித்து வந்து விட்டேனாதலால், என்னை ஏன் கவனிக்க வேண்டும். மேலும், சோற்றுக்கில்லாமல் வருஷக் கணக்காய் என் மனைவியும் தாய் வீட்டோடிருக்கிறாள்.

"எங்கெங்கேயோ சுற்றி விட்டு, (மாமனார் தன் மனைவியைப் பார்த்து) இதோ உன் மருமகன் வந்திருக்கிறான் பார்' என்றார், என் மனைவி என்னைக் கண்டு முதலில் சந்தோஷப் பட்டாலும், பிறகு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

எத்தனை தான் கெட்டு வாழ்ந்தாலும் அவரவர் இருக்கு மிடத்திலிருந்தால் சுகம், மேலும் தரித்திர நிலையோ; கெட்ட காலமோ வந்து விட்டால் பந்துக்கள் வீட்டில் ஒரு வேளை ஆகாரத்துக்கும் தங்கக் கூடாது.

மனைவிக்கு தேறுதல் சொல்லி, கஷ்டம் நீங்கி விட்டது. இனி சுகப்படுங்காலம் வந்து விட்டதென்று சொல்லி காலையில் அலங்கோலப் பலகாரம் சாப்பிட்டு விட்டு, மைத்துனனை ஒரு வண்டி பிடிக்கச் சொன்னேன். பதில் சொல்லவில்லை. இருந்த இடத்தை விட்டு அசையவு மில்லை. வண்டி அமர்த்திவர நான் ஒரு ஆளா, என்று தன் தாயிடம் சொன்னான். எனக்கு மாமியார் வீட்டில் வரவர மரியாதை அதிகமாய் விட்டது. நானே சென்று ஒரு வண்டியைக் கொண்டு வந்து மனைவியுடன் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தேன்.

என் மனைவி வழியில் தான் அதுவரை பட்ட துயரத்தையும், ஏச்சுகளையும் சொல்லி வந்தாள். எல்லாவற்றையும் உலக வாழ்க்கையில் எதிர்பார்த்தவன் கேட்டு பரிதாபப் பட்டேன்; வருவன வந்தே தீரும். மனைவி சொல்லுகிறதைப் பார்த்தால் அதையே—மனைவியின் துயரம்—என்று ஒரு பெரிய நாவல் தயார் செய்து விடலாம் போலிருக்கிறது.

கல்கத்தா விலிருந்து எனது எஜமானனும் வந்து சேர்ந்து, ஒரு நாளிரவு விசாலமான வீட்டைக் காட்டினார். எல்லாம் நாகரீகமாய்—புதுமாதிரியாய்—இருந்தது. பார்க்க ரமணீகரமாயிருந்தது. மறுநாள் அந்த வீடு தோட்ட முதலானவைகளை என்பெயருக்கு—(இனமாய் கிரய சாசனம் செய்து கொடுத்தார். இதற்கு மத்தியில் நமது ஸ்ரீ ராமானுஜலு நாயுடு காரு ஆடம்பரமாய் கிரகப் பிரவேசம் செய்ய வேண்டு மென்றார். அதுவரை எஜமானனையும் தங்கிப்போகும்படி செய்தேன். பத்திரிகை அச்சிட்டு வேண்டியவர்களுக்கும், பிதா சகோதரன் மாமனார் முதலான எல்லோருக்கும் அனுப்பப்பட்டது;

காலையில் புண்ணிய தீர்த்தம் பூஜை செய்யப்பட்டு எங்கும் தெளிக்கப்பட்டது. எட்டு மணிக்கு சிற்றுண்டி—காப்பி பலகாரம்

பத்து மணிக்கு வீணைக்கச்சேரி. மாலை 3 மணிக்கு ருக்மணி கலியாணம்—காலக்ஷேபம். இதைத்தவிர 12 மணிக்கு ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம்.

பத்திரிகைளெல்லாம் பிரசுரம் செய்தேன். நானும் தடபுடல் ஆசாமிதானே. சற்று புகழை விரும்பு கின்றேன். ஆர். சந்திர ஷட்டர்ஜி என்ற ஒரு பெரிய வங்கதேசத்து சீமானின் ஆதரவில் சகல வைபமும் நடைபெறு மென வெளியிட்டிருந்தேன். இந்த சந்தோஷத்தில் என் உடம்பு இரண்டத்தனையாகப் பூரித்திருந்தது.

ஆனல் என் பிதா முதலானவர்கள் வந்திருந்தார்கள். என் மனைவியை அனுப்பி தாயார் முதலானவர்களை அழைத்து வரச் செய்தேன். என் தாயாருக்கு என்னைக் கண்டதும் மிகுந்த சந்தோஷம், எப்படியும் பெற்றதாயல்லவா! சொல்லவும் வேண்டுமா.

வெண்பட்டு சிவப்பு கரையுள்ள பத்தாறு, சுமார் ரூ 60 விலையுள்ளது. கோட் தலை நட்டை சுமார் ரூ 100 பெறுமானது மனைவிக்கு ரூ 100 பெறுமான புடவை இவைகளை சபையில் எனது எஜமானன் சன்மானமாகக் கொடுத்தார்.

குடும்பத்தில் சமாதானம் ஏற்பட்டாலும் இன்னும் பிதாவைக் கண்டால் பயம் தான். என் எண்ணம் பிடிவாதமாக முன் நோக்கிச் செல்வதாயிருக்கிறது. இப்பொழுது சுகமாயிருந்து வருவதோடு அடிக்கடி கல்கத்தாவுக்கும் நன்றிமறவாது போய் வருகிறேன். எமக்கு இடைவிடாது ஊக்கமளித்த நண்பர் ஸ்ரீ ராமானுஜலு நாயுடு காரு எழுதிய புது ஊக்கம்வெற்றிமேல் வெற்றி என்பதை ஊன் படிக்கக் கோருகிறேன்.

கந்தஸ்வாமி.

(லக்ஷ்மிகாந்தன் முற்றும்.)

ஸ்ரீமத் பகவத் கீதா வாசகம்

முதல் அத்தியாயம்.

அர்ஜுன விஷாதயோக.

1. ஸஞ்சய! போர் செய்ய ஸன்னத்தராய் குருக்ஷேத்திர மென்னும் தரும பூமியிலே ஒருங்குகூடிய நம்மவரும் பாண்டவரும் என்ன செய்தார்கள்?

ஸஞ்ஜயன் சொல்லலுற்றான் :

2. துர்யோதன ராஜன், பாண்டவர்களின் படை அணிவகுக்கப்பட்டு நிற்பதைக் கண்டு, அப்பொழுது ஆசார்யருகிற் சென்று இவ்வார்த்தையைப் பேசலாயினன்.

3. ஆசார்யரே! பாண்டவருடைய இப் பெரிய சேனையானது உமது புத்தி சாலி சிஷ்யனை துருபதராஜ குமாரனாலே அணிவகுக்கப்பட்டு நிற்பதைப் பார்ப்பீராக.

4. இங்கே மகா வில்லாளரான சூரரும், போரில் வீமனுக்கும் அர்ஜுனனுக்கும் சமானருமான யுயாதானன், விராடன், மகாரதனை துருபதன்,

5. த்ருஷ்ட கேது, சேகிதானன். வீர்ய சாலியான காசிராஜன், புருஜித், குந்திபோஜன், மனிதரிற் சிறந்தவனை சைப்யன்,

6. பராக்கிரமசாலியான யுதாமந்யு, வீர்யசாலியான உத்த மௌஜஸ், சுபத்ராகுமாரன், திரௌபதி குமாரர், எல்லோருமே மகாரதர்கள்.

7. ஆனல், பிராமணோத்தமரே! நம்மில் சிறந்தவரான என் சேனைத் தலைவர்கள் எவரோ, அவர்களைத் தெரிந்து கொள். தங்களுக்கு ஒரு குறிப்புக்காக அவர்களைக் கூறுகின்றேன்.

5- APR 1921. MADRAS.

8. தாங்களும், பீஷ்மரும், கர்ணனும், போரில் வெற்றிபெறும் கிருபரும், அசுவத்தாமனும், விகர்ணனும், சோமதத்தன் குமாரனும், ஜயத்ரதனும்.

9. மற்றும் அநேக சூரரும் எனக்காக உயிரை விடத்துணிந்தவர். போர் செய்யக் கருவியான பலபல ஆயுதங்களுடையவர். போர் புரிதலில் சகலரும் தேர்ந்தவர்.

10. பீஷ்மரால் பாதுகாக்கப்பட்டதான நம்முடைய இச்சேனை அபரிமிதமாயிருக்கின்றது. வீமனாற் காக்கப்பட்டதான இவர்களுடைய இச்சேனையோ மிதமாயிருக்கின்றது.

11. ஆகவே, நீங்களெல்லாருமே எல்லாப் படை வகுப்புக்களிலும் தம் தம் நிலைகளினின்று பீஷ்மரையே எல்லாப் புறங்களிலும் காத்தல் வேண்டும்.

12. கௌரவர்களில் பெரியவரும் பிரதாப சாலியுமான பாட்டனார் (பீஷ்மர்), அவனுக்கு (துரியோதனனுக்கு) உற்சாகமுண்டாக்குபவராய், உரக்க சிப்ஹனாதம் செய்து சங்கை ஊதினார்.

13. பின்பு சங்குகளும், பேரிகளும், தம்பட்டங்களும், பறைகளும், ஊது கொம்புகளும் உடனே சடக்கென்று முழக்கப்பட்டன; அவ்வொலி நிரம்பி நின்றது.

14. அப்பால், மாதவனும் பாண்டவனும் வெண் குதிரைகள் பூட்டிய தோர் பெரிய தேரினுள் இருந்தே தமது திவ்வியமான சங்குகளை ஊதினார்கள்.

15. இருஷிகேசன் பாஞ்சஜன்யத்தையும், அர்ஜுனன் தேவதத்தத்தையும், பயங்கரத் தொழிலனான வீமன் பௌண்ட்ர மென்னும் பெரிய சங்கையும் முழக்கினார்கள்.

16. குந்திகுமாரன் யுதிஷ்டிர ராஜன் அநந்த விஜயத்தையும், நகுலன் சுகோஷத்தையும், சகதேவன் மணிபுஷ்பகத்தையும் ஊதினார்கள்.

கதாரத்நாகரம் அநுபந்தம்



காஞ்சீபுரம் ஏகாம்பரேசுவரர் கோவில் கோபுரம்

உ

கடவுள் துணை

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்

Vol. 3. } January, 1921 { No. 8.
தொகுதி 3. } 1921-ம் வருஷம் ஜனவரிமீ { பகுதி 8.

உ

"இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றிலேன் கிற்ப னுண்ணவே.

உண்டொ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே.

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோலமே யெனையாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோங்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே."

—மாணிக்கவாசகர்

அன்பின் வழியது

"என்" வாழ்நாள்.

ஆஹா! சந்தோஷம்! அன்பின் வழியதா உன் வாழ் நாள்! அப்பாடியா! மிகு பரவசம். அங்ஙனமே ஆகக்கடவது. நீ அன்பின் களஞ்சியமாகவே இரு. அன்பின் ஊற்றாகவே இலங்கிடு. அன்புக்கு ஓர் திலகமெனவே உன்னை உலகத்தார் கருதிக் கொள்ளட்டும். அன்பு என்பது இன்னவிதம் என்பதை மற்றவர்கள் உன்னிடமிருந்து தெரிந்து கொள்ளட்டும். அன்புக்கு நீ வழி காட்டியாயிரு. நீ அன்பை வாழ்த்து. உன்னை அன்பு வாழ்த்தட்டும். நீ அன்பை வணங்கு. உன்னை அன்பு வணங்கட்டும். நீ அன்பைத் துதி செய். உன்னை அன்பு துதி புரிந்திடும். தினமும் அன்பை நீ போற்றி வாழ். அன்பும் உன்னைப் பிறர் போற்ற வைக்கும். உன் ஜீவியமே அன்பு மயமாவதாக.

முதலில் "புதிய ஊக்கம்" புகன்றேன். அதன் பின்னர் பெற்றிட வேண்டிய "வெற்றி மேல் வெற்றி" யை வேண்டிய வரை எடுத்து நவின்றேன். புதிய ஊக்கம் என்று 'வெற்றி மேல் வெற்றி!' கொண்டு விட்டதின் பின்னர், அப்பால் நீ எய்திட வேண்டிய உயர் நலஞ் சார்ந்த நிலையாது? அஃதே அன்பு. அன்பின் வழியது உலகம். அன்புக்கே உலகம் ஏவல் பணி புரிகின்றது. இப் பிரபஞ்சமே அன்புக் கயிற்றால் கட்டுண்டுளது. அன்பு தான் இவ்வுலகத்தை ஒன்றாகப் பிணித்துளது. அகில லோக நாயகனின் படைப்பு முழுமையும் அன்பு ரஸம் தான். அன்பு தான் அருள். அருளே அன்பு. அன்பு தான் பக்தி. பக்தியே அன்பு. அன்பின் முடிவே முக்தி மோக்ஷ நிலை.

பகவான் உன்னிடமிருந்து எதிர்பார்ப்பது அந்த அன்பு தான். தேவர்கள் உன்னிடம் யாசிப்பதும் அந்த அன்பு தான். உலகத்தார் உன்னை விரும்புவதும் அந்த அன்பினால் தான். உன்னை நம்பிய குடும்பம் உன்னுடைய அந்த அன்புக்கே எதிர்பார்க்கிறது. உன் வாழ்க்கையை இன்பம் ததும்பும் ஊற்றாக்கி அலங்கரிக்க வந்த உனது உத்தம மனையாள் உன்னிடமிருந்து எதிர் பார்ப்பது எது? அந்த ஒரு அன்பையே தான். தன் பிராண பதியான அரிச்சந்திர

பூபாலன் தன்னை வெட்ட வாளோங்கிய காலத்தும் அந்த பதிவிரதா நாயகம்—சந்திரமதி தன் நாதனிடத்திலிருந்து பெற விரும்பியது எது? ஆ! அந்த அன்பு ஒன்றினையே! அந்த தருணம் தன் காதலனை நோக்கிச் சந்திரமதி கூறுகிறாள்:—

"படிமிசை முன்னாளாண்ட பண்புள வேந்தரெலாம் முடிபுனைந் தரசியற்றி மொழிபொருளைப் பெருமை பூண்டு, மிடியது தொடரப் போந்து, மீண்டு, பின்கீர்த்திபெற்றார். 'மடிந்திடவந் தேனும்மால், மாய்ந்திட விதிதோன் வாழி"

என்கிறாள் 'ஆஹா என்ன அன்பு' அன்பின் ஊற்றை இங்கே ஆழச் சிந்தனை செய்து பார்.

தன் பிராணப் பிரியை—தன் காந்தாமணி—தன் வாழ்வுக்கோர் திலகம்—ஆன அந்த ஒரு தமயந்தி மறு விவாகம் புரிவதான மணவோலையொன்றி என, நளன்—நளசக்கரவர்த்தி—தன் ஸகல ஐஸ்வரியராசிகளை இழந்தபோழ்தினும் தன் கண்ணாட்டியான தமயந்தியின் அன்பு ஒன்றினையே ஒரு பெரிய ராஜ்யமாகப் பாவித்து நின்ற பெருந்தகையாளன் பார்க்கின்றார். ஆ! அத்தருணம் அவரது சித்தம் எவ்விதம் குழம்பிற்றோ! நெஞ்சகத்தே அடக்கி வைத்திருந்த அன்பையெல்லாம் எதிரில் வாரிக் கொட்டிக் கொண்டு யோசிக்க வேண்டியதாய் விட்டது. அவரது நிலைமை!

அந்த சமயத்தில் தான் தமயந்தியினிடத்திருந்த முழு அன்பும் வெளிப்பட்டது. திகைக்கின்றார்! சிந்திக்கின்றார்! கலங்கின்றார்.

முன் ஜன்மத்தில் புரிந்த தீவினை தான் இப்படி முடிந்ததுவோ—அந்த தமயந்தியை இன்னொருவன் மணப்பதற்கு? "முற்பிறப்பிற் செய்த வினை முடிந்ததுவேயோ—மெம்குழலாடனையே துய்க்க? ஆ! என் செய்வது?

நல்ல குலத்தில் உதித்த நல்ல பான்மையையும் சிந்தியாது எங்ஙனே மறு மணம் புரிதற்கு ஒப்பி வாய் திறந்து கூறினாள்? "நற்குடியிற் பிறந்த வொரு நலத்தையுமே நாடாது நவின்றாள் என்னோ?"

அவள் பதிவிரதையல்லவோ! "கற்பினுக்கரசியவளோ?"

என்ன இவ்விதம் எண்ணுகின்றேன்? என் அரசு கெட்டு விட்டால் என் மதி கூடவா கெட்டுவிட்டது? தமயந்தியின் கற்பைப் பற்றி நானா ஐயுறுவது? அவளிடத்து அன்புருவாயது என் மனம். அக்கண்மணி என்றும் என் பெண்மணியே. அவளுக்குப் பாதகமாகவே இவ்வளவு நேரமும் நினைத்தேனே! என்ன பிழை செய்து

விட்டேன். அவளுக்கு சாதகமாக இம்மண வோலையை ஏன் வைத்துப் பார்க்கக்கூடாது? என்னைக் காண வேண்டுமென்ற அன்பால், இவ்விதம் கற்பனையாக—பொய்யாக இந்த மண வோலையை யனுப்பியிருக்கலாகாதா? "அக்காரிகையுங் காதலினு லென்னையே காணக் கற்பனையாய் விடுத்தனளோ—கடிமணத்திருலை ?"

ஒன்றுமே தெரிகிலேனே! "இதைக் கண்டிலேனே!"

"முற்பிறப்பிற் செய்தவினை முடிந்ததுவேயோ?
மெய் குழலாடனையே துய்க்க!
நற்குடியிற் பிறந்தவொரு நலத்தையுமே
நாடாது நவின்றுளென்னே!
கற்பினுக்கரசியலளோ அக்காரிகையும்
காதலினு லென்னையே காணக்
கற்பனையாய் விடுத்தனளோ கடி மணத்தி
ருலை! யிதைக் கண்டிலேனே!"

என்று தத்தளிக்கின்றார். இவ்வளவு தவிப்பும் துடி துடிப்பும் பதட்டமும் எதனால்? அந்த அன்பினால்!

ஜலத்தின் மீதெழும்பி மறைந்திடும் குமிழ்களை யொத்த இந்த சரீரத்தை நான் விட்டு விடுவேனே யல்லாமல் சீதையை நான் விடேன். அவளை விடுவதும் உண்டா? உண்டாயின் எனக்கு இருபது தோள்களும் உண்டா? அந்த தோள்கள் இருபதும் எனக்கு இருந்து என்ன பிரயோஜனம்?

"மீதெழும் மொக்குளயென்ன வாழ்க்கையை விடுவதல்லால், சீதையை விடுவதுண்டோ? இருபது திண் தோள் உண்டா?

என்று வீரவசனம் பேசி, இறுதியில் மார்பில் காயத்துடன் அந்த இராவணேஸ்வரன் மடிந்ததும், தக்ஷணமே அவன் மேல் வீழ்ந்து புரண்டு அவன் பிரிவாற்றாது அக்கணமே அவ மனைவி மண்டோதரி ஆவி நீத்தாள். இது எதனால்? அன்பினால்.

கோபிகைகள் பிருந்தாவனத்திடையே ஸ்ரீ கண்ணன் அந்தர்த்தானமாய் விட--மறைய--அவரைக் காணாது தவித்தனர். உயிர் ஊசலாடியது. இது அளவு கடந்த அன்பினாலன்றோ? தமது புத்திர சோகம் சகிக்கலாற்றாது தசரதர் உயிர் பிரிந்தார். இதுவும் அன்பால் ஜடாயு நட்பிற் கோர் திலகம்—சான்று. தன் மருமகளாம் ஜானகியின் விடுதலை விரும்பி இலங்காதிபனுடன் சமர்புரிந்து ஆவி நீத்தது. அதுவும் அளப்பரிய அன்பால், கண்ணுவர் முற்றும் துறந்த முனிவர் பிரான். தாம் வளர்த்த சகுந்தலை கணவனகம்

ஏகிய ஞான்று அவள் பிரிவாற்றாது அவர் படும் சோகம்—இவரையும் புத்திரிபா வாத்ஸல்யம் பாந்தவ்யப் படுத்தியதோ வென மயங்கும் வாறு மிகு பரிதாபம் தந்திடுகின்றது. தமது சேனைகளையும், உயிர்த் தம்பிமார்களையும் ஸர்வநாசம் செய்து நிற்கும் லவகுச பாலர்களை ராமபிரான்கண்ணுறுங் காலையில் தம்சாயல் அவர்களிடத்துப் பிரதிபலித்தல் நோக்கி மயங்கி அப்படியே நின்று விடுகின்றார்: யுத்தம் புரிந்தாரில்லை. இது தனக்கே தெரியாத இயற்கையின் அன்பால்.

கர்னன் துரியோதனன் இவ்விருவரும் ஒருவரிடத்தொருவர் வைத்த அணைகடந்த அன்பின் பெருக்கை யாரே யறியார்? தர்மனுதியர் தன் ஸகோதரர்கள் என்று கண்டு விட்ட பின்னரும் துரியோதனன் பால் தனக்குள்ள அன்பால அவன் சார்பினனாகவே இறுதிவரையும் நின்று போர் முழக்குகின்றான் கர்னன். கடைசியில் கர்னனும் பாண்டவர்களின் ஸகோதரன் என்றறிந்திடுங்காலை துரியோதனம் சித்தம் குழம்பி—"நாடாண்டதும் பாண்டவர்கள் என்கிறார்கள். காடாண்டதும் பாண்டவர்கள்" என்கிறார்கள். சகுனி மாமா நாம் என்னத்தை யாண்டோம். என்கிறான். தான் அரசாளவில்லை யென்றும் கர்னனே இராஜ்ய பாரம் தாங்கினனென்றும் துரியோதனனின் மனோராஜ்யம் உண்மையில் அவ்விதமே அவன் நடந்து வந்தான். இதுவும் அன்புக்கோர் சாசனமே.

பேச்சின் பராக்கிலே விதுரர் கிருஷ்ணபகவானுக்கு வாழைப் பழத்தின் தோலையே கொடுக்கின்றார். உள்ளிருக்கும் பழத்தைக் கீழே போட்டு விடுகிறார். பின்பு தன் தவறு கண்டு மனம் துடித்திட பகவான் பழத்தில் சுவையில்லை யென்றும் பழத்தோலில் தான் அத்தனை ருசியும் பொருந்தியிருந்ததென்றும் கூறி கீழே கிடந்துள்ள பழத்தை யுண்டு தெளியுமாறு நவில்கின்றார். விதுரர் பழத்தைச் சுவைத்து அதில் ஏதும் மதுரம் காணாது மயங்கினார். உப்பில்லாக்கூழும் அன்புள்ள இடத்து அமிர்தமாமென்க.

காளிதாஸன் கம்பர் இவர்களிடத்துக் கலைமகள் கொண்ட அன்பும் அரவணைப்பும் ஒரு அற்புதமன்றோ? சேரநாட்டரசன் தனக்குத் தாம்பூலம் மடித்துத்தருவோனாய் சோழராச சபையில் அமர்ந்திருக்க அவன் ஈந்த தாம்பூலத்தைக் கம்பர் தரித்துக் கொள்ளாது விரல்களில் அடுக்கி வைத்துக் கொண்டதும் அவ்வரசனைத்தான் கௌரவிக்க வேண்டுமென்ற அன்பினால் தாம். பிள்ளைக்கறி சமைத்துப் பெருந் தொண்டு புரிந்த சிறுத்தொண்டரின் அன்பின் வாரிதியை வரையறுப்பார்ரோ? "மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப்போகின்றதையே"—என்று நந்தனார் சிதம்பர ஜோதியிடத்துச் செலுத்திய அன்பு பிரவாகம். இங்ஙனமே எடுத்துக் காட்டுதல் நிகழ்ந்திடலாம்.

225574

அன்பற்ற பாமிக்குக் கும்பிட்டாலும் குற்றமென்பார். அன்பில்லையாகில் அகிலப்படைப்பரிதாம். காதலும் இல்லையாம். பிரபஞ்ச விருத்தியும் ஓய்வு தான். ஞாலமும் முடிவு காலங் பெற்றிடுமால், அன்பிராயினோர் பிரியுமிடத்தே படுந்துயர்—தாபம் எவரே விரித்துரைக் கற்பாலர். பிரிவாற்றாமையின் கொடுமை அறியும் நல்ல தருணம் அப்போது தான்.

குமாரா பாரத புத்திரா! இந்த ஆரியா வர்த்தம் அன்பின் கோட்டையாலாயது. உன் ஜீவிய காலம் அன்பு ததும்பி வேறிடத்தும் ஆதரவு பூரலித்து அருள் மயமாவதாக. நின் உத்தியோகசாலையிலும் அன்பையே நீ வளர்த்திடு. வேற்றூருக்கு நீ பிரிந்து சென்றிடு போழ்தில் யாவரும் தாங்கொணாப் பிரேமை பெற்றுத் தத்தளித்திடுமாறு தயாராயிரு. நீ, உன் சொந்தவர்த்தக காரியஸ்தலத்துள்ளும் அன்புப் பயிர் நன்கு செழித்து வளரட்டும்; அன்பே வியாபார விருத்திக்கு ஆதாரம். அன்புள்ள வியாபாரிக்கு தான் வர்த்தகலாபயோகம். எழுதும் கடிதங்களும் அன்பின் வெள்ளமாகில் அதுவும் ஒரு வர்த்தக மர்மமே.

நின் கீழ் குற்றேவல் புரிந்திடும் சிறுமையாளரிடத்தும் சீற்றம் மறந்து அன்புக் கொடியை நன்கு படர வைத்திடுக. கிழோராயினுந் தாளவுரை. யாசகரிடத்தும், ஜீவப் பிராணிகளிடத்தும் அன்பு கொண்டு வாழ்.

சுயநலம் ஒரு பைசாசம்—பெரிய சாத்தான். அன்பின் கோடரிகொண்டு அதனை வெட்டி எறிக பரோபகார ஸம்பன்னனாய் அன்பின் ஊற்றாகநில். "தாயோடறுசுவைபோம்" "என்பதும் அன்னையின் அன்பு மாட்சியை நோக்கியே. 'அறுசுவையுண்டிய மர்ந்தூட்ட' என்னும் சிறப்பிலக்கணம் தர்மபத்தினியின் தகைமை சால அன்பின் சீர் நோக்கியே யென்க.

"அன்பிலாளிட்ட அமுது" என்று ஔவை பாடினர். நேசம் காதல், பக்தி, முக்தி, குடும்ப ஒற்றுமை இன்னோரென்ன யாவும் அன்பின் அருளே! பிரபஞ்சம் சோதனைகூடம். நாம் அன்பு தழுவச் சென்றிடில் அனைத்துமே சித்தி அன்பின் ரகசியம் அதுவே அன்புள்ளவனாயிடு, அன்பின் வழியது உலகம், அந்த அன்பின் வழியதாக உன் வாழ்நாள் பரிமளம் பெறுக. அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் ? அன்புதுணை. அது வாழ்க. அன்பின் வழியது என் வாழ்நாள் என்று நித்தமும் நீ சொல்.

ஸ்ரீமத் பகவத்கீதா வாசகம்

முன் தொடர்ச்சி.

17. சிறந்த வில்லாளனான காசிராஜனும், மகாரதனான சிகண்டியும், திருஷ்டத்யும்னனும், விராடனும் பகைவரால் ஜயிக்கப்படாத ஸாத்யகியும்.

18. துருபதனும், திரௌபதி குமாரர்களும், உயர் தோழனான சுபத்ரா குமாரனும் ஆகிய சகலரும், பூபதியே! தனித்தனியாய் தம்தம் சங்குகளை முழக்கினார்கள்.

19. ஆரவாரித்த அவ்வொலியானது பூமியையும் ஆகாசத்தையும் எதிரொலிக்கும்படி செய்வதாய் திருதராஷ்டிரனைச் சேர்ந்தவர்களின் நெஞ்சுகளைப் பிளந்தது.

20. 22- வேந்தே! பின்பு போர்வீரர் ஆயுதங்களை வழங்கத் தலைப்பட்டவுடன், குரங்குக் கொடியோன் பாண்டவன், ஒழுங்காக அணி வகுக்கப்பட்டு நிற்கும் திருதராஷ்டிர ஜனத்தாரைப்பார்த்து, கையில் வில் ஏந்தி அப்பொழுது இருஷிகேசனிடத்து இவ்வார்த்தையைக் கூறலாயினன்.

அர்ஜுனன் சொல்லலுற்றான்:

போர் செய்யக்கருதி இங்கு நிற்கின்ற இவர்களையான் பார்க்கக்கூடிய இடத்திலே, இருசேனைக்கும் நடுவிலே அச்யுதா எனது தேரை நிறுத்துக. இப்போர் முகத்திலே யான எவருடன் போர் செய்யவேண்டுமோ, அவரைத் தெரிந்து வைத்துக்கொள்ளுகிறேன்,

23. எந்த இவர்கள் திருதராஷ்டிர புத்திரனான கெடுபுத்தி யானுக்கு—துர்யோதனனுக்கு—ப் போரிலே உதவி புரியக் கருதி பற்பல தேசங்களிலிருந்து இங்கு வந்துள்ளாரோ, அவர்கள் சமாதானத்தை விரும்புவதாகக் காணப்படவில்லை; ஆனால் அவர்களை போர் செய்யப் போகிறவராகக் காண்கின்றேன்.

சஞ்சயன் சொல்லலுற்றான்:

24-25. பாரத! இவ்வாறு குடாகேசனால் கூறப்பெற்ற இருஷீகேசன், இருசேனைக்கும் நடுவிலே பீஷ்மருக்கும் துரோணருக்கும் மற்றுமுள்ள சகல அரசருக்கும் எதிரிலே சிறந்த தேரை நிறுத்தி" பார்த்த! இங்கு கூடிய இக் கௌரவர்களைப்பார்" என மொழிந்தனர்.

26-27. தந்தையரும், பாட்டனாரும், ஆசாரியரும், அம்மான்களும், பிராதாக்களும், புத்திரரும், பேரன்மார்களும், தோழர்களும், மாமனாரும், மித்திரரும் அங்கு இருசேனையிலும் நிற்கக்கண்டான்.

27-28. அக்குந்தி குமாரன் அவ்வுறவினரனைவரும் அங்கு நிற்கக் கண்டு, மிக்க இரக்கம் மேலிடப் பெற்று, மனத்திடனழிந்து கலங்கி (பின் வருமாறு) சொல்லலாயினன்.

அர்ச்சுனன் சொல்லலுற்றான்:

28. 29. போர் புரிய எண்ணங் கொண்டு போர்க்களத்தில் போந்துள்ள இந்த ஸ்வஜனத்தைப் பார்த்ததும் கிருஷ்ணா! என் அவயவங்கள் சோர்கின்றன. வாயும் உலர்கின்றது: என்னுடம்பில் நடுக்கமும் மயிர்க் கூச்சமும் உண்டாகின்றன.

30. காண்டீவமும் கையினின்று நழுவுகின்றது. உடம்பு முழுவதும் எரிச்சலும் காண்கிறது. என்னால் நிற்கவும் முடியவில்லை. என் மனமும் மயங்கிச் சுழல்கின்றது போலும்.

31. கேசவா! தீய சகுனங்களும் காண்கின்றேன். அன்றியும், போரில் ஸ்வஜனங்களைக் கொன்று, பின்பு அதனாலாகும் நன்மையுங் காணேன்.

32. கிருஷ்ணா! எனக்கு வெற்றியும் வேண்டாம், ராஜ்யமும் வேண்டாம், சுகமும் வேண்டாம். கோவிந்தா! நமக்கு ராஜ்யத்தால் தான் என்ன! போகங்களால் தான் என்ன! உயிர் வாழ்க்கையினால் தான் என்ன!

33. 34. எவர் பொருட்டு நமக்கு ராஜ்யமும், போகங்களும் சுகங்களும் வேண்டுமோ, அந்த ஆசாரியரும், தந்தையரும், புத்திரரும், பாட்டனாரும், அம்மான்களும், மாமனார்களும், பேரன்மார்களும், மைத்துனர்களும், சம்மந்திகளுமாகிய இவர்களே உயிரையும் பொருளையும் விடத்துணிந்து போருக்கு வந்து நின்று கொண்டிருக்கிறார்கள்.

இந்திரஜித்

ஓர் துப்பறியும் நாவல்

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதியது.

(முன் தொடர்ச்சி)

இவர்களே பரிசாரகம் செய்தார்களென்று செட்டியார் ஆக்ஷேபிக்க ஐயர் அதெல்லாம் உங்களுக்கென்ன தெரியும். தவசிப் பிள்ளையை போலும் ராணியம்மாளைப் போலும் எவ்வளவோ ஆசாமிகளைத் தயார் படுத்தி, வைத்துத். தாங்கள் வேறு வேஷமெடுப்பது அவர்களுக்கு ஜலப்பிரளய"மென்றார்.

எப்படியோ அவருடைய அபாரமான சாக்கிரதையாலோ அல்லது வேறிடத்தில் வேலை இருந்தோ வாரக் கணக்காய் இந்திரஜித் கண்ணில் படவில்லை. செட்டியாருக்கு ஒரு காரணம் தோன்றிற்று. சேஷாசாரியிடத்திலிருந்து நாம் ஒரு ஆசாமியை வீட்டில் வைத்துக்கொண்டிருக்கிறோமென்று அவன் எப்படியோ அறிந்து அந்தத் தொழிலாளியுடன் கைகலக்க இஷ்டமில்லாமல் துலைந்து போயிருக்கலாம். அப்படியானால் ஒருவருக்கும் தெரியாமல் செய்த வியவஹாரம் அவன் வலையில் எப்படி எட்டிற்று? ராமன் செட்டியாருக்கு ஓர் யுக்தி தோன்றிற்று. ஆயினும் அதைப்பெரியவரிடத்தில் சொல்லவேயில்லை. தன் மனதில் அதைப்போட்டுப் போட்டு வருத்துக் கொண்டே இருந்தார்.

ஐயர் வீட்டில் வந்ததுமுதல் அவரைக் கண்டாவது ராணி அம்மாளுக்கு விஷம்போலிருந்தது. அவர் நிற்கிற விடத்தில் நிற்பதில்லை; அவரைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. நேராதபொழுது அவரிடத்தில் கடுகடுவென்று முசுடுபோல் பேசுவதும் சிள்ளென்று விழுவதும் அவரைஎப்படியாவது அவமானம் செய்துபுண்படுத்தி அங்கில்லாமல் துலைக்க வேணுமென்று அவள் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாய் எல்லோருக்குந்தெரிந்தது. அந்தப்பயலென்று அவரைச் சொல்வதே யொழியகொஞ்சமேனும் மட்டுமரியாதைவைத்துப்பேசுவதில்லை. வேலைக்காரர்கள் ஒருவருக்கும் தெரியாத ரஹஸ்யமான சங்கதி அவளுக்கு மாத்திரம் எப்படித் தெரிந்தது. இந்திரஜித்தைக் கண்டுபிடிப்பதற்காக வருவிக்கப் பட்ட அசாமியென்று அவளுக்குச் சொன்னது

யார்? இரண்டு செட்டியார்களில் ஒருவர் மூலமாய் வெளிவந்திருக்க வேண்டும். அதற்கோ இடமில்லை, முன்நடந்த சங்கதிகளை யோசித்தால் இந்த ஸந்தேஹம் பலப்படுகிறது. ஆதியில் சாமியாருடைய குணாதிசயங்களைப்பற்றி பாக்கியத்தம்மாளிடத்தில் ஏகத்தாராய்க் கொண்டாடினவர்களுக்குள் இவளே முக்கியம். பிறகு வயிரப்பொத்தான் விஷயத்தில் அவைகளைப்பற்றின வியவஹாரம் முழுவதும் அவளுக்கே முன்னாடி தெரியுமென்று வெளிக்கு வந்தது. பாக்கியத்தம்மாளின் நகைப்பெட்டிகள் வைத்திருக்கு மிடத்திற்கு வேறொருவருக்கும் போக்குவரத்தில்லை. அவைகளை அடிக்கடி ஆஜர்ப்பார்ப்பது அவளுடைய வேலைகளில் ஒன்று. வயிர அட்டிகையை அவள் அடிக்கடி கவனித்துக் கொண்டிருந்தால் அதிலிருந்து கல்லுகள் எடுக்கப்பட்டது அவளுக்குத் தெரியாமற் போயிருக்குமா? மைசூர் ஜமீன் விஷயத்தில் செட்டியார்களை அழைத்துப்போய் பலான விஷயத்தில் தங்குவதென்று முதல் முதல் சொன்னவள் ராணியே. கோட்டையைப்பார்க்கப் போகும்பொழுது அவள் கூட வந்தாள். காவற்காரன் சொன்ன விஷயங்களை அவளே அறிந்து அந்தப்பாஷையில் பதில் சொன்னாள். செட்டியார்களுக்கு அவள் சொன்ன விஷயத்தைத் தவிர உண்மையாய் நடந்தபேச்சும்இன்னதென்று சுத்தமாய்த் தெரியாது. காசிநாத ராயரின் விஷயத்தில் மரக்காயருக்கு செட்டியார் அனுப்பின கடிதத்தில் தபாலில் போட்டு, ரிஜிஸ்தர் செய்வதாய் அவளே ஒப்புக்கொண்டு, அந்த ஸமயத்தில் ஏதோ காரியமாய் தான் இந்தப்பக்கம் போவதாய் சொன்னாள். பிறகு செட்டியார் ஸந்தேஹம் கொண்டு தந்தியடித்ததை அவளே அறிந்து வீட்டிலிருந்த இந்திரஜித்திற்கும் அவனுடைய கூட்டாளிகளுக்கும் சொல்லியிருக்க வேண்டும். மேலும் செட்டியாரின் பிறப்புவளர்ப்பு, முதலிய தகவல்களும் வியாபார ரஹஸ்யங்களும் சிட்டசபையிலிருந்த கடிதங்களும் சாமியாருக்கு எப்படித் தெரிய முடியும். ஆப்பிரிக்காவில் செட்டியாருக்குள்ள வியவஹாரங்களும் புதிதாக எடுத்த தர்காஸ்தும் அதில் தங்கமிருப்பதால் இஞ்சினிர் எழுதின ரஹஸ்ய ரிப்போர்டும் காசிநாதராயரைப் போல் வேஷம் பூண்ட இந்திரஜித்திற்கு யார் மூலமாய்த் தெரிந்திருக்கும்.

இதைப்போன்ற பல காரணங்களால் இந்திரஜித்திற்கு ராணியம்மாள் உட்கையென்றும் செட்டியாருடைய வீட்டிலிருந்து எல்லா உளவுகளையும் சொல்லிக் கொடுக்கிறவளென்றும் அவளுடைய தகவலும் உதவியுமில்லாமல் ஒன்றும் நடக்க முடியாதென்றும் வெட்ட வெளிச்சமாயிற்று. இந்திரஜித்தைக் கண்டு பிடிப்பதற்கு ஓர் தொழிலாளியை வீட்டில் தருவித்து, வைத்துக் கொண்டது அவளுக்கு ஏப்படி இஷ்டமாயிருக்கும்? அவனிடத்தில் அவளுக்குக் கோபமும் ஆத்திரமும் வெறுப்பு முண்டாவது ஆச்சர்யமா? ஆனால் அவளுக்கு இந்த சமாசாரம்

எப்படித் தெரிந்தது. சற்று ஆழ்ந்து யோசித்த பிறகு வெளிச்சமுண்டாயிற்று. ஓகோ! செட்டியார்கள் சேஷாசாரியரைக் கண்டு பேசவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது அவள் திடீரென்று தலையை நீட்டி, ஏதோ வேறு சமாசாரத்தைச் சொல்லி, அன்று வேறிடத்திற்குப் போகும்படியாய் செட்டியாரைச் செய்தாளல்லவா? எங்கேயோ மறைந்திருந்து அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்து, தன் கூட்டாளிக்கு அதைச்சொல்லி அனுப்பி எச்சரிக்கை செய்வதற்காக அன்று அவகாசம் ஸம்பாதித்துக்கொண்டாள். இந்திரஜித் கண்ணில் படாமலிருந்ததற்குக் காரணம் இப்பொழுது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது. அந்த மாயாவின் கையாள்களில் முக்கியமான ஒரு பேர் வழியைக் கண்டு பிடித்ததே. அவ்வளைக் கண்டு பிடிப்பதில் பாதி வேலையாயிற்றென்று நினைக்கலாம். முன் போல் இனி மோசம் போகவேண்டியதில்லை.

ஆனால் பாக்கியத்தம்மாளுக்கு இதை இப்படிச் சொல்லி நம்பிக்கையுண்டாக்கமுடியும். அவளுக்கோ இந்த வேலைக் காரியில்லாவிட்டால் ஒன்றும் நடவாது. இருப்பதற்கும்படுப்பதற்கும்நடப்பதற்கும் உண்பதற்கும்உடைதரிப்பதற்கும் யோசனை கேட்பதற்கும் இவளை விட்டால் யஜமானிக்கு வேறு அசாமி சரிப்படாது. செட்டியாருடைய குடி முழுகிப் போனாலும் அவளைக் கைவிட மனம் வராது. ஆகையால் அவள் பேரில் குற்றஞ்சாட்டினால் வீண் பொல்லாப்பு ஏற்படுமே தவிர கார்யம் ஒன்றும் ஆவதில்லை. மேலும் தான் ஜமீன் விஷயத்தில் நவாபிடத்தில் சின்னச் செட்டியார் கமிஷன் வாங்கி மாட்டிக் கொண்டிருப்பது அவருக்கு மறக்குமா? அவர் மூலமாய் ஏதாவது சங்கதி வெளிக்கு வந்தால் தன்னைப் பெரிய செட்டியாரிடத்தில் காட்டிக் கொடுத்துத் தன் பிழைப்பில் மண்ணைப் போட்டு விடுவான். அல்லது பாக்கியத்தினிடத்தில் ராணி கொஞ்சம் வத்தி வைத்தால் போதும். பிறகு அந்தத் திக்கிலே தலை காட்ட வேண்டியதில்லை. இதையெல்லாம் நன்றாய் ஆலோசித்து ராமன் செட்டியார் தன் மனதில் தோன்றின ஸந்தேஹத்தைப் பெரியவரிடத்திலும் சொல்லாமல், ஊமையன் கண்ட கனவைப் போல் தன் மனதிலேயே வைத்துக் கொண்டிருந்தார்.

நடக்கிறது நடக்கட்டுமென்று அவர் பார்த்துக் கொண்டிருக்கையில் கோவிந்தய்யருடைய தொந்திரவு ஸஹிக்கமுடியவில்லை. அடிக்கடி ரிப்போர்ட்டுகளும் குறிப்புகளும் புகைப்படங்களும் குவிந்தன? செட்டியாருக்கு வெகு அந்தரங்கமானவர்களையே ஐயர் ஸந்தேஹித்து, குற்றஞ்சாட்ட ஆரம்பித்தார். “பெரியவர் இதென்னதொல்லை. நமது ஆணிவேர் சல்லிவேர் முதற்கொண்டு இந்த ஐயர் நோண்டிக் கண்டு பிடிக்கிறார். இது பிராணாவஸ்தையாயிருக்கிறது. முந்தாநாள் நானும்

கறுப்பன் செட்டியாரும் அந்தப் புதிய கம்பெனி விஷயமாய் சில ரஹஸ்ய சங்கதிகளைப் பேசிக்கொண்டிருந்தோம். அவர் வெளியில் போன பிறகு இந்த ஐயர் நான் உட்கார்ந்திருந்த சாய்வு நாற்காலியின் கீழிருந்து திடீரென்று கிளம்பி, தன்னை முன்னாலேயே எச்சரிக்கை செய்யாததைப் பற்றி என்னைக் குற்றம் சாட்டினார். நாங்கள் பேசிக்கொண்டிருந்த அந்தரங்க விஷயங்களை ஒன்றுவிடாமல் குறிப்பெடுத்து வைத்தார். முடிவில் இந்திரஜித்தைக் காட்டிலும் கறுப்பன் செட்டியார் ஆறு அங்குலம் உயரத்தில் அதிகமென்றும் அதனாலேயே அவரைப் பிடிக்காமல் விட்டு விடும்படியாயிற்றென்றும் சொல்லுகிறார். அதற்கு முன் நான் அறையில் ஒருவரும் இருக்கக் கூடாதென்று தேடிப்பார்த்துக் கதவைப் பூட்டி விட்டேன். இப்படி நாற்காலியின் கீழ் பதுங்கியிருப்பானென்று யாராவது நினைப்பார்களா? பாலியம் முதல் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளாய்ப் பழகின என் அத்தை மகனை இந்திரஜித்தென்று ஸாதிக்கும் இவனுடைய சாக்கிரதை வெகு அனர்த்தமாயிருக்கிற"தென்றார்.

திடீரென்று கோவிந்தய்யர் பீரோவின் மறைவிலிருந்து கிளம்பி, ஆயுர் முழுவதும் ஒருவனுடன் பழகினோமென்ற காரணத்தால் மாத்திரம் ஒருவனை ஸந்தேஹிக்கக் கூடாதென்று எப்படி நீ சொல்லலாம். எந்த வேஷம் போட்டுக் கொண்டு எப்பொழுது எவ்விடத்தில் இந்திரஜித் வருவானென்று உமக்கு முன்னமேயே சொல்லியனுப்புவானோ. இதை வெகு நாளாய் அவன் யோசித்து ஏற்பாடு செய்துவருவதாய் நினைக்கவேண்டியிருக்கிறது. எனக்கு இவ்வளவு தெரிந்த விதம் என்னவென்றால் நான் யாரிடத்தில் வேலை செய்கிறேனோ அவருடைய குடும்பத்தைப் பற்றின சங்கதிகள் யாவும் எனக்குத் தெரியாவிட்டால் எனக்கும் மற்றவருக்கும் என்ன விசேஷம் எனக்குத் தெரியாதென்று பிறர் நம்பியிருக்கும் சங்கதிகளையே நான் தெரிந்து கொள்ளவேண்டும். ஆனால் வைத்தியர்களும் ஜ்யோதிஷர்களும் வக்கீல்களும் தங்களுடைய கக்ஷிக்காரர்கள் சொல்லும் விஷயங்களைப் பரம ரஹஸ்யமாய்வைத்துக்கொண்டிருப்பது தருமமென்று சொல்வதுபோல் நாங்களும் இப்படிப்பட்ட குடும்ப ரஹஸ்யங்களை வெளிவிட மாட்டோம். அப்படியில்லாவிட்டால் எங்களை யாராவது நம்புவார்களா? என்னைப் பற்றி அந்த ஸந்தேஹம் உங்களுக்கு வேண்டவே வேண்டாம்"

செட்டியார் திகில் அடைந்து, அவனைப் பார்த்த வண்ணமே நின்றார். "நானும் என் மைத்துனனும் அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டிருந்த விஷயத்தை நீ ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாயா? என்ன நெஞ்சழுத்தம்!"

"ஆக்ஷேபமென்ன; யாராயிருந்தால் எனக்கென்ன, எல்லோரையும் ஸந்தேஹிக்க வேண்டும். அந்தப்பேச்சையும் கவனிக்க வேண்டும். வார்த்தைக் காதகச் சொல்லுகிறேன். இதோவிருக்கும் உங்களுடைய மைத்துனர் ஏன் அந்த மாயாவியாய் இருக்கக்கூடாது. உண்மையான செட்டியார் அவர்களை ஏதோ மாயஞ் செய்து மறைத்து பெரிய செட்டியாரைப் போல் வேஷம் தரித்து, இங்கே வந்தவனாய் நீங்கள் ஏன் இருக்கக் கூடாது—"

பெரியவர் அவனை ஒருபார்வையால் அடக்கினார்.

"நான் சொல்வதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும். எனக்குத் தெரியாமல் என் உத்திரவில்லாமல் நானிருக்கும் இடத்திற்கு வந்து, இனி ஒளிந்து கொள்ளக் கூடாது, தெரியுமா" வென்றார்.

ஐயர் தலைவணங்கி, "உங்களிஷ்டம் செட்டியார் வாள் எனக்கென்ன, சொன்னபடி நடக்க வேண்டியது என் கடமை, லாபநஷ்டம் உங்களுடையது. என்னை இப்படிக் கையும் காலும் கட்டி உருட்டிவிட்டால் நான் இங்கேயிருந்து வேலை செய்வது எப்படி? நான் நல்ல பெயர் வாங்குவது எப்படி? சேஷாசாரியார் இதை யெல்லாம் எனக்கு அப்பொழுதே சொல்லியிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும். அதற்குத் தகுந்தபடி நடந்து கொண்டிருப்பேன். என்னத்திற்கு அதிக பிரயாஸமும் விசாரமும் படவேண்டாம். உங்களுக்கில்லாத அக்கறை எனக்கென்ன?" வென்றார்.

அதற்குப் பிறகு அவர் கொஞ்சமேனும் தளர்வடையாமல் இரவு பகல் அதே ஞாபகமாய் வேலை செய்து கொண்டிருந்தார்; ஒரு நாள் அவர் சின்னவரிடத்தில் நானென்ன செய்வேன். நான் இங்கேயிருக்கிற வரையில் அந்த கையாலாகாத பயல் இங்கே வரமாட்டேனென்கிறான். என் பெயரைக் கேட்டால் அவ்வளவு கிலிபிடிக்கிறது. அவன் வந்தாலல்லவா பிடித்துக் கொடுப்பேன். அவனை இங்கே வரச்செய்வது கூட என் காரியமா? வீணாய் என் காலம் இங்கே கழியாது. இதுதானா எனக்கு வேலை. நான் வீடு காக்கிறவனா? வேறு வேலையில்லையா" வென்று வருந்தினான்.

பிறகு ஒருநாள் அவன் சில படங்களைக் கொண்டு வந்து, அவைகளில் ஒன்றை எடுத்துக் காட்டி, இது யாரைப்போலிருக்கிற தென்று வெகு

முறுக்காய்ச் சொன்னான். இரண்டு செட்டியார்களும் திறந்த வாயில் ஈ புகுந்தது தெரியாமல் அதையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்து, பிறகு திடீரென்று, "அடே! வாத்தியா" ரென்று கூச்சலிட்டார்கள்.

உடனே ஐயர் வேறொரு படத்தைக் காட்டி "இந்த வேலைத்தனம் எப்படி?" யென்றார். உடனே அவர்கள் இருவரும் ஓகோ நவாபல்லவா வென்றார்கள்.

"இந்தப்பேர் வழி யார் தெரியுமா" வென்று வேறொரு படத்தைக் காட்டினார். இவர்கள் உடனே காசிநாதராயரின் மனைவி விளக்குப் பார்வையுள்ள கண்ணை கொண்டே அறியலாமே". யென்றார்.

அவைகளைத் தன் பையில் பத்திரப்படுத்தி, துடைதட்டிக் கொண்டு ஏதோ மஹாயுத்தத்தில் ஒருவனாய் நின்று சத்துருக்களுடன் கடும்போர் புரிந்து, ஜயலக்ஷ்மியால் சூட்டப்பட்ட மாலையுடன் விளங்கும் சுத்த வீரனைப்போல் நாற்புறத்திலும் இறுமாந்து பார்த்தான்.

"இவை உனக்குக் கிடைத்த விதமென்ன" வென்று கேட்டார் பெரிய செட்டியார்.

உடனே ஐயர் "செட்டியார் வாள்! இப்படிப் பறந்தால் காரியம் ஒன்றுமாகாது. இதுவரையிலும் என்னை நம்பி, பொறுத்துக் கொண்டிருந்தது போல் இன்னும் கொஞ்ச காலம் பொறுத்துக் கொண்டிருங்கள். நீங்கள் ஸந்தேஹப் படாமல் முழுமோசம் போகும் பேர்வழிகள் உண்டு. உங்களைப் போன்ற குபேரன்களுக்கு அவர்களாலேயே ஆபத்து நேருமென்று எனக்குத் தெரியும். இப்பொழுது அவர்களின் பெயர்களை நான் சொன்னால் நீங்கள் நம்பப்போகிறீர்களா? ஆகையால் சமயம் வரும் வரையில் அவைகளை என் மனதில் வைத்துக் கொண்டிருப்பேன். ஒன்று மாத்திரம் சொல்லுகிறேன். இந்திரஜித் இந்த ஸமயத்தில் எங்கு இருக்கிறான். யாருடன் பேசுகிறான். எதைப் பேசுகிறானென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் நான் ஆழ்ந்து யோசனை செய்து கூடிய சீக்கிரத்தில் அவனைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கொடுக்கிறேன். உங்களை வைத்துக் கொண்டே அப்படிச் செய்கிறேன். அவன் இன்னாரென்று அவனைக் கொண்டே ஒப்புக்

கொள்ளும்படி செய்கிறேன். இதைவிட நான் என்ன செய்ய முடியும். உங்களுக்கும் என்ன தான் வேண்டும். அவனைக் கைது செய்வதோ விடுவதோ அப்புறம் உங்களுடைய பாடு. எனக்கொன்றும் ஸம்பந்தமில்லை" யென்றான்.

செட்டியாருக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஒரு பக்கத்தில் வருத்தம். ஒரு பக்கத்தில் ஆசை. பெயரைச் சொல்லும்படி அவர் கஜகரணம் குட்டிக்கரணம் போட்டாலும் கோவிந்தய்யர் இருப்புத்தூணைப்போல் அசையாமல் ஒரே பிடிவாதமாயிருந்தார். "இதெல்லாம் பலிக்காது. எங்களுடைய தொழிலில் எங்களுக்கும் சில ரஹஸியங்களுண்டு. இப்பொழுதே உங்களிடத்தில் எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் ஏதாவது, தடபுடலாய் நீங்கள் செய்த காரியத்தைக் கெடுத்து விடுவீர்கள். கபடமும் ஆழ்ந்த யோசனையும் பண்ணின மண்ணைத் தொட்டு உங்களைப் பண்ணவேயில்லை. போனால் போகட்டும். இதை மாத்திரம் சொல்லுகிறேன். ஸமீபத்தில் ராவ்பகதூர் இந்திரஜித் மஹாராஜா சென்னைக்கு வருவார். மறுபடியும் சில சில ஏற்பாடுகளைச் செய்து, உங்களை ஏமாற்றப் பார்ப்பார். என் வார்த்தையை நம்புங்கள் 'அவன் மூச்சு விடுவது முதல் எனக்கு அப்போதைக்கப்போது தெரியுமா அல்லவா" வென்று உங்களுக்கு அப்பொழுது காட்டுகிறேன். ஆனால் அதி சீக்கிரத்தில் அவனைப் பிடித்து உங்களிடத்தில் ஒப்புவிக்கலாமென்று நினைக்கிறேன். அதற்காகத் தகுந்த யோசனை செய்திருக்கிறேன். அது மாத்திரமல்ல: உங்கள் எதிரிலேயே அவனைப் பிடிக்கிறேன். அவன் இன்னானென்று எங்களிடத்தில் ஒப்புக் கொள்ளச் செய்கிறேன். இதை இதுவரையில் நான் ஒரு தடவை சொல்லியிருந்தாலும் உங்களுக்கு நம்பிக்கை உண்டாவதற்கும் நானிப்படிச் செய்யாவிட்டால் இந்தத் தொழிலையே விட்டு விடுவேனென்பதற்கும் இதையே பிரமாணமாய் இன்னுமொரு தரம் சொல்லுகிறே" னென்றான்.

அவன் சொன்னது சரியாயிற்று. தென்னாப்பிரிக்காவில் செட்டியாருக்குப் போட்டியாய் வேலை செய்து கொண்டிருந்த மரக்காயருடன் கூட்டு ஏற்பட்டு வேலை நடந்து கொண்டு வந்தது. அதின் விஷயமாய்ப் பம்பாயிலுள்ள ஓர் கம்பெனியாரிடத்திலிருந்து இரண்டு நாள்களுக்குப் பிறகு ஸாதாரணமான ஒரு சங்கதியைப்பற்றி கடிதம் வந்தது. அது செட்டியார்களுக்கு அவ்வளவு முக்கியமாய்த் தோன்றாவிட்டாலும், கோவிந்தய்யருக்கு அப்படித் தோன்றவில்லை. பின்னால் ஏதோ ஓர் பெரிய வேலைக்கு இப்பொழுதே அடிப்போடுகிற ஏற்பாடாய் அவருக்குக் காணப்பட்டது. என்ன

சர்யம், அந்த மனிதனுடைய முன் யோசனைப்படியே ஆயிற்று. ஒரு வாரத்தில் வேறொரு கடிதம் அதே இடத்திலிருந்து வந்தது. அதில் ஒரு வியாபாரத் தகவல் கண்டிருந்தது. வெகு சிக்கலான விஷயம் வெளியில் தெரிந்தால் அனர்த்தம். சுமார் இரண்டாயிர ரூபாய்த் தொகையை அதில் குறிப்பிட்டிருந்த ஒரு பம்பாய் விலாஸத்திற்கு அனுப்பும்படி நேரும். இவ்விரு கடிதங்களையும் அதற்கு முன் இந்திரஜித்தால் செட்டியாருக்கு அந்தந்த ஸமயங்களில் அனுப்பப்பட்ட கடிதங்களையும் ஐயர் ஒத்துப்பார்த்து; ஒரே அசாமி எழுதினதென்று ஸாதித்தார். பார்வைக்கு இரண்டிற்கும் கொஞ்சமேனும் ஸம்பந்தமில்லை. ஆனால் தனித்தனி எழுத்துக்களையும் வால்வீச்சுகளையும் நன்றாய்க் கவனித்துப் பார்த்தால் ஐயர் சொல்வது உண்மையென்று புலப்பட்டது. ஒரே அசாமி வெவ்வேறு பேனாக்களால் தாராளமாயும் நிறுத்தியும் பெரிய எழுத்தாயும் சிறிய எழுத்தாயும் எழுதினதென்றே நிச்சயமாயிற்று.

இப்படிக்கண்டு பிடித்தது எவ்வளவோ சங்கதிகளுக்கு அனுகூலமாமாயிற்று. இந்திரஜித்தைப் பிடித்து விடலாமென்ற நம்பிக்கை வரவர அதிகரித்தது. மோசடி, ஆள் மாறாட்டம், திருட்டு, போர்ஜரி முதலியகுற்றங்களை அவன் பேரில் சாற்றி அவன் தப்பிக்கவழியில்லாமல் மாட்டி விட்டு தண்ணீர் மேல் ஏற்றி ஆயுள் வரையில் மண் கூடை தூக்கும்படி அடிக்க முடியுமென்றும் அது வரையில் எத்தேசத்துப் போலீஸாராலும் துப்பறியும் நிபுணர்களாலும் முடியாத கார்யத்தை நாம் செய்தோமென்றும் பெருமைகொண்டாடும் ஸமயம் ஸமீபித்து விட்டதென்றும் செட்டியாருக்குத் தோன்றிற்று.

ஆனால் எந்த வழியிலும் மோசம் போகாதபடி ஐயர் பம்பாய்ப் போலீஸாருக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதி அவர்களிடத்திலிருந்து வந்த பதில்களை செட்டியாருக்குக் காட்டிக் கொண்டே வந்தார். அதற்குள் அந்தக் கம்பெனித் தலைவனுக்குச் செட்டியார் எழுதுவதை நிறுத்தவில்லை. பம்பாயில் கமலாகர் வாடியில் 48வது வீட்டில் தன் தனி ஜாகை வைத்திருக்கிறதாகவும் அவ்விடத்திற்கு வந்து வியாபாரத் தகவலை முடித்துக்கொண்டு போகலாமென்றும் அந்தப் பேர்வழி எழுதியிருந்தான். அதற்கு அவன் குறிப்பிட்டிருந்த காரணமோ வெகு விசித்திரமாயும் முற்றிலும் நம்பக் கூடியதாயுமிருந்தது. ஆனால் இந்திரஜித் செய்யும் வேலைகள் ஒவ்வொன்றும் ஸாமான்யமாயிருக்குமா!?

நம்ப முடியாததாயிருக்குமா? செட்டியார்களும் ஐயரும்தீர்காலோசனை செய்து, எல்லோரும் பம்பாயிக்குப் போய் ஐயர் செட்டியாரென்று தன்னைச் சொல்லிக்கொண்டு அந்தக் கம்பெனித் தலைவனுக்கு 2000 ரூபாய் கொடுத்து விடுகிறது, செட்டியார்கள் தகுந்த போலீஸ் பந்தோபஸ்துடன் அறைக்கு வெளியில் காத்துக் கொண்டிருந்து, உடனே உள்ளே பாய்ந்து பேர்வழியைக் கைப்பிடியாய்ப் பிடித்து விடுகிறதென்று தீர்மானமாயிற்று

அப்படியே எல்லோரும் பம்பாயிக்குப் போய் செட்டியார் வழக்கமாய்த் தங்கும் ஜாகையில் ஒருவருக்கும் தெரியாமல் அன்றிரவைக் கழித்தார்கள். மறுநாட்காலையில் ஸாதாரண ஜட்காவண்டிகளில் முன் குறிப்பிட்ட தெருவுக்குப் போனார்கள். ஏற்கனவே ஐயர் பம்பாய்ப் போலீஸாருடன் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தபடியால் அவர்களில் மூன்றுபேர் ஸாதாரண உடையுடன் செட்டியார்களுக்கு ஒத்தாசை செய்ய அங்கே தயாராய்க் காத்துக்கொண்டிருந்தார்கள். பெரிய செட்டியார் சென்னை பாங்கி நோட்டுகளில் 2000 ரூபாய் கையில் கொண்டு வந்தார். அந்தத் தொகையைக் கொடுத்து அசாமி பெற்றுக்கொண்ட பிறகு அவன் தப்பிக்க வழியில்லை. மோசடியாய்த் தொகையை வாங்க ஏற்பாடு செய்த குற்றம் மாத்திரம் போதாது. அதற்கு தண்டனை மூன்றுவருஷமே. தொகையை வாங்கிவிட்டாலோ குற்றம் பூர்த்தியாயிற்று. அதற்குத் தண்டனை 15 வருஷம். பெரிய செட்டியாருக்கு ஸந்தோஷம் தாங்கவில்லை, இவ்வளவு காலம் கழித்து அந்த ஜகத் புரட்டனைத் துரத்தித் துரத்தி மோசம் போய் முடிவில் பிடிக்கும் ஸமயம் குறுகிவிட்டதென்று நினைக்க நினைக்க அவருக்கு அது வரையில் நேர்ந்த கஷ்டங்கள் ஞாபகத்திற்கு வரவேயில்லை. கடிதத்தில் கண்டிருந்த விலாஸத்தைப் போய்ப்பார்க்கையில், அது தனிஜாகையல்ல. ஓர் ஹோட்டல். ஐயர் முதலில் போய் ஹோட்டல் காரனைப் பலான பேர்வழி வீட்டிலிருக்கிறாராவென்று விசாரித்து, "நாங்கள் வந்தகாரியம் இது, எங்களுக்கு ஒத்தாசையாய் இந்த நகரத்துப் போலீஸாரும் வந்திருக்கிறார்கள். ஆகையால் இது சர்க்கார்விஷயம் இதற்கு நீர் ஒத்தாசை செய்ய வேண்டியது உமது கடமை. ஆயினும் இந்தப் பேர்வழியைப் பிடித்துக் கொடுப்பதில் நீர் உதவி செய்தால் அவன் உங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகை ஜாடாவையும் செட்டியாரைக் கொடுக்கச் சொல்லுகிறேன். மேலும் தகுந்த இனாமும் கிடைக்கு" மென்றார். ஹோட்டல் காரன் சற்றுத் தயங்கினான், "எனக்கு இன்னது செய்வதென்றே தோன்றவில்லை? தர்மசங்கடமாயிருக்கிறது. ராவ்பகதூர் இந்திரஜித் என்றவர் பெரிய மனுஷ்யன். இங்கேயுள்ள எல்லோருக்கும் அவரிடத்தில் நல்ல மதிப்பு. ஸந்தேஹப்படும்படியான விஷயம் இதுவரையில் அவரிடத்தில் யாதொன்றும் காணப்பட

வில்லை. அவருக்கு இவ்விதமான சங்கடம் நேர்ந்ததைப் பற்றி மிகவும் வருத்தப்படுகிறேன். ஆனால் சர்க்கார் காரியம் எல்லாவற்றிற்கும் மேலானது. நீங்களும் எவ்வளவோ ஜாக்கிரதையாய்த் தீரவிசாரித்து, தகுந்த ருஜுவில்லாமல் இதில் இறங்கமாட்டீர்கள். ஆகையால் நான் உங்களுக்கு என்னாலியன்ற வரையில் உதவி செய்தே தீரவேண்டு"மென்றான்.

போலீஸார் மாடிப்படிக்குக் கீழ் நின்று கொண்டிருந்தார்கள். ஐயரும் பெரிய செட்டியாரும் சட்டைப் பையில் அழுத்தமான கைவிலங்குகளை மறைத்து வைத்துக்கொண்டிருந்தார்கள். முன்பு சித்திரப்படத்தின் விஷயத்தில் பண்டிதரைக் கைது செய்து பிறகு மாட்டிக்கொண்டு திண்டாடினது போல் இப்பொழுதும் மோசம் போகக்கூடாதென்று வெகு ஜாக்கிரதையாய்க் காரியங்களை நடத்தினார்கள். அவன் பலவந்தமாய் எதிர்த்துக் காய்ச்சினாலொழிய விலங்கைப் போடுவதில்லை யென்று நிச்சயித்துக் கொண்டார்கள். மாடிப்படியில் ஏறி அந்தப் பேர்வழி தங்கியிருந்த அறைக்கு ஓசைப்படாமல் அடிமேல் அடிவைத்துச் சென்றார்கள். நோட்டுகளை ஒரு திறந்த கவரில் வைத்துச் செட்டியார் ஐயரிடத்தில் கொடுத்தார் அவர் அதை வாங்கிக்கொண்டு, தயாராய் நின்றார். அவர் தும்பினவுடன் செட்டியார்கள் உள்ளே பாய்ந்து அசாமியைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கொள்ள வேண்டிய தென்று முன்பே சொல்லி வைக்கப்பட் டிருந்தது. ஐயரோ நினைத்தவுடன் தும்மமுடியும்.

அவர் அறைக்குள் புகுந்து சில நிமிஷங்களுக்குப் பிறகு தும்மினார். அதுவரையில் பரபரப்புடன் வெளியில் காத்துக் கொண்டிருந்த செட்டியார்கள் கதவைபடேலென்று திறந்து உள்ளே பாய்ந்தார்கள். உட்கார்ந்திருந்த ஐயர் எழுந்து, இவர்தான் ராவ்பகதூர் இந்திரஜித் ஸிங். பிடித்து ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ளுங்கள். நான் கீழே போய் போலீஸாரை அழைத்துக் கொண்டு வந்து, வாரண்டைக் காட்டி, இவனைக் கிரமப் படி கைது செய்கிறே"னென்று வெளியில் போனார்.

செட்டியார்கள் அதைக் கவனிக்கவேயில்லை. பலநாள் திருடன் அகப்பட்டானென்ற ஆத்திரத்தாலும் ஸந்தோஷத்தாலும் மெய் மறந்து, அவனைப் பக்கத்திற்கு ஒருவராய்க் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு போலீஸாரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படிக் கைப்பிடியாய்ப் பிடித்த அசாமியோ அதிக உயரமில்லை; அதிகப் பருமனுமில்லை. பார்வைக்குத் தகுந்த மனிதன் சற்று நரைத்த மீசையும் தாடியும் காணப்பட்டன. நல்ல அந்தஸ்துள்ளவனென்றே

தோன்றிற்று. அவன் தன் கையில் ஓர் கவரை வைத்துக்கொண்டிருந்தான். அது ஒச்சைப்படாமல் திறந்திருந்தது. செட்டியார் கொடுத்த இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் வைத்திருந்த கவரென்பதில் ஸந்தேஹமேயில்லை. அதை அவன் பிடித்துக் கொண்டு, "என் அறையில் உத்தரவில்லாமல் நீங்கள் வந்த காரணம் தெரியவில்லை. நீங்களோ வேற்று மனிதர்கள். என்னிடத்தில் உங்களுக்கு ஏதாவது காரியமிருந்தால் முன்னமேயே தெரிவித்து, என் சௌகரியப்படி ஒரு காலத்தை ஏற்படுத்திக் கொண்டல்லவா நீங்கள் வரவேண்டும். உங்களுக்கு ஸாதாரண நாகரீமும் மரியாதையையும் நான் சொல்லிக் கொடுத்துத் தெரிய வேண்டுமோ"வென்றான்.

பரபரப்புடன் சற்று ஆத்திரமாய் அவன் பேசினதும் மரியாதை கொஞ்சமேனும் தவறவில்லை. அவன் சொல்வது நிஜமாயிருந்தால் எவரும் அப்படியே நடந்து கொண்டிருப்பார்கள்.

பெரிய செட்டியார் அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளுகிறவரா? இன்னும் கைப்பிடியைக் கெட்டியாய் இறுக்கி, "கடையைக் கட்டு, யாரிடத்தில் இந்த வேலைத்தனமெல்லாம் காட்டுகிறாய். இது வரையில் ஏமாற்றினதுபோல் இப்பொழுதும் பலிக்குமென்றெண்ணுகிறாயோ. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கே. திருடன் பெண்டாட்டி என்றைக்கும் கைம்பெண்டாட்டி யென்று அறியாயோ, உன் கபடமெல்லாம் வெளியாயிற்று. வேஷம் குலைந்தது. நீ ராவ்பகதூர் இந்திரஜித்தென்பதில் எள்ளளவேனும் ஸந்தேஹமில்லை. ஏதாவது தப்பியோடப் பார்த்தாயோ, ஜாக்கிரதை. விலங்குமாட்டி விடுவே"னென்று வெகு அதிகார தோரணையுடன் செட்டியார் கர்ஜித்தார்.

அந்தப் பேர்வழி சற்றுத் திடுக்கிட்டு, "ஆம் ராவ்பகதூர் இந்திரஜித் ஸிங் என்றவன் நானே. இல்லையென்று சொன்னது யார். இதைக் கண்டு பிடிப்பதற்கு இவ்வளவு கஷ்டமென்ன. இதில் என்ன ஸாமர்த்தியம் என்னை எதற்காக நீங்கள் கைதி செய்யப் போகிறீர்கள்" அதைக் கேட்டவுடன் செட்டியாருக்குக் கோபம் கொழுந்து விட்டெரிந்தது. என்ன நெஞ்சழுத்தம் அடே அப்பா! தலை கொண்டு போகிற பயலாயிருக்கிறான். மலை போல் சற்றும் அசையவில்லை கலங்கவில்லை என்ன தைரியம். போலீஸார் ஏன் வரவில்லை.

"ராவ்பகதூர் இந்திரஜித் நான்தானென்று ஒப்புக் கொள்ளுகிறாயா, என்னிடத்தில் நேருக்கு நேராய் அந்த வார்த்தையைச் சொன்ன உனக்குச் சற்றேனும் வெட்கமில்லையா? சீ, சீ, உன் ஜன்மத்தைச் சுட வேண்டும்."

"ஓய் ஜாக்கிரதையாய்ப் பேசும் என் பெயரை இல்லை யென்று ஏன் மாற்ற வேண்டும். (வெட்கமா? எதற்காக? யாரை மோசஞ் செய்தேன்?) யாருடைய சொத்தைக் கொள்ளையடித்தேன்? ஏதோ ஆள் மாராட்ட மாய் மோசம்போய் இவ்விதம் செய்கிறீர்களென்று எண்ணி உங்களை மன்னித்து இது வரையில் பொறுத்திருக்கிறேன். அல்லது பைத்திய ஆஸ்பத்திரியிலிருந்து திருட்டுத் தனமாய் ஓடி வந்து விட்டீர்களோ தெரியவில்லை. கைதி செய்கிறதோ? விலங்கா? மூளை இவ்வளவு கலங்கி விட்டதா? ஐயோ பாவம்.

செட்டியார் "இந்தா போதும், இப்படி யெல்லாம் எங்களுக்கு கடுக்காய் கொடுக்க முடியாது, இனத்திற்காக உன்னைக் கைது செய்கிறோமென்று உனக்குத் தெரியாதோ. இதோ போலீஸாரிடத்தில் உனக்கு வேண்டியதைச் சொல்லிக் கொள்"ளென்றார்.

போலீஸார் அறைக்குள் வந்தார்கள். செட்டியார் தெலுங்கும் தமிழும் இன்னும் தனக்குத் தெரிந்த பாஷைகளும் கலந்து மேற்செய்யவேண்டிய காரியத்தை அவர்களுக்குத் தெரிவித்தார். இந்திரஜித் கடுங்கோபங் கொண்டு, போலீஸாரைப் பார்த்து நல்ல சுத்தமான மராட்டிய பாஷையில் "நான் சர்க்கார் உத்யோகஸ்தன். பஞ்சாபில் பிறந்தவன். என் பேர் அதிகாரிகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். என்ன குற்றத்திற்காக என்னை நீங்கள் இம்மாதிரி தொந்திரவு செய்கிறீர்க" ளென்றான். போலீஸ் தலைவன் காரணங்களைச் சொன்னான். இந்திரஜித் செட்டியாரைப் பார்த்து, "நீர் யார் காணும்" என்றான். செட்டியார் "நான் யாரா? உன்னைப்போல் யாருக்குத் தெரியும். வ. ரா. சி. வெள்ளையன் செட்டியார் நானே. நீ எவ்வளவு தந்திரமாய் வேஷம்மாறி யிருந்தாலும் உன்னை அடையாளங் கண்டு பிடிக்க முடியாமல் போய் விட்டேனோ உன் மூக்கும் காதும் கண்ணும் என் மனதில் ஆழ்ந்து பதிந்தல்லவா யிருக்கின்றன. என்னை ஏமாற்றின சாமியாரும் நீயே தீவில் திண்டாட விட்டராயரும் நீயே. எல்லாம் நீயே' யென்று கூச்சலிட்டார்.

அதைக் கேட்டு அந்த மனிதன், "வெள்ளையன் செட்டியாரா. நீயா! ஒரு காலுமில்லை. நீ யாரோ பித்துப் பிடித்தவன். போலீஸ் உத்யோகஸ்தர்களே ஜாக்கிரதை எதையும் ஆராய்ந்து செய்யுங்கள் இவன் யாரோ சித்த ஸ்வாதீனமில்லாதவன். வயிர வியாபாரி வெள்ளையன் செட்டியாரிடத்தில் இப்பொழுது தான் பேசிக்கொண் டிருந்தேன். இந்தப் புத்தி கெட்டவர்கள் உள்ளே வரும்பொழுதே அவர் வெளியில் போனார். இந்தப் பைத்தியத்தை அடைத்து வைத்துக் கொண்டிருக்கும் காவற்காரன் நீதானோவென்று சின்னச் செட்டியாரைக் கேட்டான்,

உடனே ராமன் செட்டியார் "ஐயையோ அவன் உங்களுடைய கண்ணில் தெள்ளின மண்ணைத்தூவி விட்டு மாயமாய் மறைந்து விடுவான். உஷாராயிருங்கள். கல்லையும் கரைப்பான். கடலையும் குடிப்பான். நான் சொன்னபடி அவனை இப்பொழுதே கைது செய்யுங்கள். லாப நஷ்டத்திற்கு நான் பாத்யமென்றார். ஆனால் தான் கமிஷன் வாங்கின சங்கதியை நினைக்கும் பொழுது அவர் மனது பகீர் என்றது.

அந்த மூன்று போலீஸாரின் தலைவன் சற்று முன்னே வந்து இந்திரஜித்தின் தோளில் கையை வைத்து, ஐயா? உம்மை நாங்கள் கைது செய்கிறோம். இந்த வெள்ளையன் செட்டியார் அவர்கள் பிரமாண வாக்கு மூலஞ் செய்து, உறுதி மொழி எழுதிவைத்தபடி பல குற்றங்களுக்காக உம்மை பிடித்து, நியாயாதிபதியின் முன்னிலையில் கொண்டுபோக வேண்டியிருக்கிறது. ஆக்ஷேபிக்காமல் தகரார் செய்யாமல் எங்களுடன் வருவது நலம். கோர்ட்டில் வந்து உமக்கு வேண்டிய கேள்விகளைக் கேட்டுக் கொள்ளு' மென்றான்.

இந்திரஜித் முகத்தில் கோபம் ஜ்வலிக்க வெகு பெரிய மனிதனைப்போல் நடந்துகொண்டு ஒன்றும் பதில் சொல்லாமல் அவர்களுடன் போனான்.

அதற்குள் செட்டியார் நான்கு புறத்திலும் சுற்றிப்பார்த்து, "ஐயர் எங்கே, நம்முடன் இருந்தால் நலமாயிருக்கு"மென்றார்.

அதற்குள் அந்த ஹோட்டல் காரன் இந்திரஜித்தைப் பார்த்துத் தலையசைத்து; "உங்களுடன் வந்தவரா? வெகு அவசரமாய் ஜட்காவண்டியில் ஏறிப்போனார். இந்தக் கடிதத்தை உங்களிடத்தில் கொடுக்கச் சொன்னா' ரென்றான்,

அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்து, செட்டியார் "மனிதனென்றால் இவனல்லவா மனிதன் என்ன எழுதியிருக்கிறான் தெரியுமா? "இந்திரஜித்தை உங்களிடத்தில் பிடித்துக் கொடுக்கிறே"னென்று சொன்னபடி செய்தேன். நானும் அப்பொழுதிருந்தேன். அவனையே ஒப்புக்கொள்ளச் செய்தேன். இன்னும் என்ன வேண்டும். இப்பொழுது அவனுடைய கூட்டாளியைக் கண்டு பிடிக்கப்போகிறேன். இதே இடத்தில் அவளுமிருந்தாள். நம்மைக் கண்டவுடன் ஓடிப்போய் விட்டாள். இன்ன விடத்திற் கென்று எனக்கு நன்றாய்த் தெரியும். அதி வேகமாய்த் துரத்திக்கொண்டு போகிறேன். வெகு அவசரத்தில் எழுதினதை மன்னிக்கவும். கெட்டிக்காரனென்றால் இப்படி யல்லவா இருக்கவேண்டும். ஐயோ! பாவம். அந்தப் பெண்ணை

உபத்திரவம் செய்யாமல் விட்டிருக்கலாம். அவன் பேரில் குற்றமென்ன" வென்று பெருமூச்செறிந்தார்.

"யாராவது நல்ல அழகும் பால்யமும் வாய்ந்த ஒரு பெண் சில நாளைக்கு முன் இங்கே வந்து தங்கினதுண்டா?" வென்று ராமன் செட்டியார் ஹோட்டல்காரனைக் கேட்டார். அவன் தலையசைத்து, "ஆம், ஆம் இப்பொழுது தான் புறப்பட்டுப் போனாள். உங்களுடன் வந்தவர் அவளைத் துரத்திக் கொண்டு தலைவிரிகோலமாய் ஓடுகிறார்" றென்றான்.

செட்டியார் "அடாடா! என்ன மூளை! என்ன ஸாமர்த்தியம்! சேஷாசாரி சொன்னதில் அணுவும் பிசகில்லை. துப்பறியும் நிபுணர்கள் எல்லோரும் இவனை மூன்று தரம் பிரதக்ஷிணஞ் செய்யவேண்டு" மென்றார். உடனே வண்டிகளைக்கொண்டு வரச் சொல்லி, செட்டியார்களும் இந்திரஜித்தும் போலீஸ்காரர்களும் ஏறிக்கொண்டு கோர்ட்டுக்குச் சென்றார்கள். அங்கே மாஜிஸ்ட் ரேட்டிற்கு முன்பாக குற்றவாளியை ஆஜர்படுத்தி, கோர்ட்டார் விசாரித்தபொழுது, அந்தப் போக்கிரி நான் இந்திரஜித்தே ஆக்ஷேபமில்லை. சர்க்கார் உத்யோகஸ்தன். பஞ்சாபில் பிறந்தவன். பர்மாவில் ராணுவ ஆபீஸில் வேலை. இந்த விலாஸத்திற்கு எழுதி விசாரித்துக் கொள்ளுங்கள். அது போகட்டும் இந்த பம்பாயில் கவர்னருடைய பாரா உத்யோகஸ்தர்களில் குலாப் ஸிங்க என்றவரைத் தருவித்துக் கேளுங்கள் அவர் எனக்கு மாமன் மகன். ஆறு மாஸம் லீவு எடுத்துக் கொண்டு இங்கே வந்திருக்கிறே" னென்றான்.

நியாயாதிபதி உடனே ஸேவகர்களை அனுப்பி, அதி சீக்கிரத்தில் அந்த உத்யோகஸ்தரை அழைத்து வரும்படி கட்டளையிட்டார். காக்கையைப் பிடித்துக்காகத்தில் அடைப்பது போல் இந்திரஜித்தைக் கண்டு பிடித்து ஒப்புக் கொள்ளச் சொல்லி, குற்றஞ்சாட்டி, கைது செய்து கோர்ட்டாரிடத்தில் ஒப்புவிக்கப் போகும் பொழுது அவன் வழக்கபடி ஏதோ மாயஞ் செய்து, தப்புவித்துக் கொண்டு போய் விடுவானென்றும் அதற்குக் கோர்ட்டார் இடம் கொடுப்பது உசிதமல்லவென்றும் பெரிய செட்டியார் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். இந்திரஜித்தும் அவர்களைப் போல் ஆத்திரப்பட்டு, அந்த உத்யோகஸ்தன் வரும் வரையில் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அரைமணி கழித்து ஸேவகர்களும் அந்த உத்யோகஸ்தனும் வந்தார்கள். கைதியைக் கண்டவுடன் அவன் பாய்ந்து ஓடோடியும் வந்து, "இதென்ன ஆச்சர்யம் இந்திரஜித்! எப்பொழுது வந்தாய் இந்தக் கழுதைப்

பயல்கள் உன்னை என்ன செய்கிறார்கள் கண்ணைப் பிடுங்கி விடுகிறேன். அடே! அல்பநாய்களா! ஓடிப்போங்கள். அந்தப் பெரிய மனிதனைக்கண்ணெடுத்துப் பார்த்தால் தோலை உரித்து விடுவேன். யாரென்று நினைத்தீர்கள். ஏனய்யா! நீங்கள்கூட இந்த அக்கிரமத்திற்கு இடம் கொடுக்கலாமா! மனிதனைப் பார்த்தவுடன் யோக்யனென்றும் அயோக்ய னென்றும் தெரியாதா? இவரை இப்படி அக்கிரமமாய் கைது செய்து, நடுக்கோர்ட்டில் நிறுத்தினால் இந்த சங்கதி எதுவரைக்கும் போகுமென்று உங்களுக்குத்தெரியுமா? இவர் யாரென்று நினைத்தீர்கள். பர்மாவில் இவருடைய அந்தஸ்து இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா? ஸேனாதிபதி இவர் உட்காரென்றால் உட்காருவார் எழுந்திருவென்றால் எழுந்திருப்பார். இவருடைய அபார யோக்யதைக்கும் சர்க்காருக்குச் செய்த முக்கியமான உதவிக்குமே இவருக்கு ராவ் பகதூரென்ற பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இவர் பஞ்சாபில் பெரிய வம்சத்தைச் சேர்ந்தவர். கடைசியாய் அதை ஆண்டு வந்த ரணஜித் ஸிங்க என்ற லாகூர் ஸிம்ஹத்தின் நெருங்கின பரம்பரையைச் சேர்ந்தவர். யார் உங்களை இந்த மாதிரி மோசஞ் செய்த" தென்றார்.

அவர் அப்படி போடு போடென்று போட்ட பிறகு செட்டியார்களுக்கு நடுக்கமெடுத்தது. கோவிந்தய்யர் எல்லோரையும் ஸந்தேஹித்து, கடைசியில் குடியைக் கெடுத்து விட்டாரே! உண்மையில் இந்திரஜித்தென்ற பெயருடையவன் போக்கிரியல்ல தலைப்பாகை மாற்றியல்ல. உயர்ந்த குலமும் ஸம்பந்தமும் உத்தியோகமு முள்ளவரென்று வெளிப்பட்டது.

அதற்குள் இந்திரஜித் செட்டியார்களைக் கொளுத்தி விடுகிறவனைப் போல் பார்த்து, "தம்பி குலாப்! கேட்டாயா? இதோ இருக்கும் பைத்தியம் பிடித்தவன் தன்னை வெள்ளையன் செட்டியாரென்ற வயிர வியாபாரியென்று நினைத்திருக்கிறான். ஆனால் இரண்டு மடையன்கள் எந்தப் பைத்திய சாலையிலிருந்தோ தப்பி ஓடிவந்து விட்டார்களென்று நினைக்கிறேன். நான் ஏதோ போர்ஜரி, மோசடி, திருட்டு முதலிய குற்றங்களைச் செய்திருக்கிறேனெ" ன்றான்.

அந்த உத்யோகஸ்தன் செட்டியார்களை உற்றுப்பார்த்து, "இந்தப் பேர்வழி வெள்ளையன் செட்டியார் என்பதில் ஸந்தேஹமில்லை ஒரு தடவை இவன் பம்பாய் குதிரைப் பந்தயத்திற்கு வந்திருந்த பொழுது இன்னாரென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஏனய்யா! செட்டியார்வாள்! என்

பந்துவைப்பற்றி உங்களுக்கென்ன தெரியும். ஏதோ அவர்மேல் குற்றஞ் சாட்டியிருக்கிறீர்களா"மென்றான்.

"உமது பந்துவா? வெகு அழகு. இவன் பலே போகிரிக்கி மஹா மாயாவி. ஜகத்வஞ்சகன்."

அந்த உத்தியோகஸ்தன் குறுக்கிட்டு ஓய் வாயை மூடும். 'நிதானித்துப் பேசும்' ராவ்பகதூர் இந்திரஜித் ஸிங் என்ற கனவான் இவர் தான். பர்மாவில் ஸர்க்கார் வேலை பார்ப்பவர் இதே பெயருள்ள வேறு யாரிடத்திலோ மாட்டிக்கொண்டு பறி கொடுத்து ஊரிலுள்ளவர்களை யெல்லாம் மிரட்டுகிறீர். ஏதோ பிசகு நடந்து விட்டது. இன்னதென்று தெரியவில்லை. எங்கேயோ மோசம் போய்விட்டோமென்று செட்டியாருக்குத் தோன்றிற்று. 'நீங்கள் சொல்வது சரிதான். ஆனாலும் இதே அசாமி. இதே இந்திரஜித் என்னைப் பலதடவைப் பல விதமாய் மோசஞ் செய்து ஆயிரக்கணக்காய் என்னிடத்திலிருந்து கொள்ளை யடித்திருக்கிறான். நான் சொல்வது பொய்யா யிருந்தால் இப்பொழுது அவனுடைய வசத்திலிருக்கும் ஒரு கவரைப்பாருங்கள். அது என்னால் கொடுக்கப்பட்டது. இன்ன விதமானது அதில் 2000 ரூபாய் பெறுமான நோட்டுகள் வைத்திருக்கின்றன. அவைகளின் நம்பர்களை இதோ குறித்து வைத்துக் கொண்டிருக்கிறேன். என்னிடத்திலிருந்து அவைகளை மோசஞ் செய்து பெற்றுக்கொண்ட விதத்தைக் கேளுங்க' ளென்று ஆரம்பம் முதல் நடந்த சங்கதியைச் சொன்னார்.

அதைக் கேட்டவுடன் இந்திரஜித்திற்கு வந்த கோபத்தைக் கண்ணெடுத்துப் பார்க்க முடியாது. ஆனால் அவனுடைய பந்துவோ கைகொட்டிச் சிரித்து, பலே தமாஷ் இன்றைக்கு இவர் இன்ன குற்றஞ் செய்தாரென்று எனக்குத் தெரியாது. இதற்கு முன் ஏதோ பல தடவைகளில் உம்மை மோசஞ் செய்ததாய்ச் சொல்லுகிறீர். இவர் இந்தியாவை விட்டுப் போய் ஆறு வருஷங்களாகின்றன. இப்பொழுது தான் 6 மாஸம் லீவு வாங்கிக் கொண்டு இங்கே வருவதாய் எனக்கு எழுதினார். இந்த சங்கதிகள் நடந்ததாய்ச் நீர் சொல்லும் காலத்தில் நான் இவரைப்பார்ப்பதற்காக பர்மாவிற்கே போயிருந்தேன். ஆகையால் நீர் சொல்வது முன்பின் விரோதமாயிருக்கிறது. நீர் மோசம் போனது வாஸ்தவமே இந்தப் பேர்வழியாலல்ல. இவர் மேல் நீர் கொண்டு வந்திருக்கும் கேஸ் ஒரு தம்படி பெறாது. என்ன சொல்லுகிறீரென்றான்.

செட்டியார் நான் இன்றைக்குக் கொடுத்த 2000 ரூபாய் எங்கே? ஐயையோ அதோ உன் கையில் இருக்கின்றனவே. நான் கொடுத்த கவரை இதோ வைத்துக் கொண்டிருக்கிறாயே. இதைவிட வேறு என்ன ஸாக்ஷி வேண்டு மென்றார்.

இரத்தின மாளிகை.

(முன் தொடர்ச்சி.)

"இருந்தாலும், நீங்கள் வைரத்தில் தேர்ச்சி பெற்றவராகக் காட்டிக் கொள்ள வில்லையே?

"உண்மை தான். உங்கள் அம்மானை, இத்தகைய குணமுடையவரென்று நான் தெரிந்து கொள்ளும் வரை, எனது குணத்தைக் காட்டலாமா? மேலும் நான் ரத்தினங்களை விரும்புவதாகச் சொல்லலாமா?

"அவைகளின் மதிப்பைத் தெரிந்து கொண்டீர்களா?

"ஆமா நீங்கள் சொன்னது மிகக்குறை. ஒரு கோடி வரை சொல்லலாம்.

"இந்த ரத்தினங்களை வேறு உங்களைப் போலுள்ள பரிச்சயமில்லாதவர்களிடம் வருமானால் ஒரு லட்சம் தேறுவது கூடக் கடினம். இது தான் வியாபார ரகஸ்யம். தொழிலறிந்தவன் சமயோசிதமாக, கொஞ்சங் கொஞ்சமாய் விற்று வர வேண்டும். அப்படி யானால் தான் பெருந் தொகையாகும்.

"உங்களுக்கு புத்தி சொல்ல யாருமில்லை. நாடக சாலையில் ஒருவன் பல வேஷம் போடுவது போல், தாங்கள் எந்த வகைக்கும் பொருந்துவீர்கள். இனி என்ன வேலை செய்யப் போகிறீர்கள்?

"இனி என்ன, எலக்ட்ரிக் விளக்கு சம்பந்தமான விஷயங்களை விசாரித்து, அங்கு அமைக்க வேண்டியதைப் பற்றித் தெரிந்து கொண்டு உங்கள் அம்மானுக்கு எழுதவேண்டியது. அந்தக் கடிதத்தில், ரத்தினங்களைப் பத்திரப் படுத்த வேண்டிய விஷயங்களையும் தெரிவிக்க வேண்டும். அவர் இஷ்டப்படுவாரானால் நானே கூட விருந்து சகல ஏற்பாடுகளையும் செய்து வைப்பேன்.

"அவர் உங்களுக்கு பதில் எழுதமாட்டார்.

"அவசியம் எழுதுவார்.

ஐந்தாம் அத்தியாயம்.

ஆகாயக் கோட்டை.

செவந்திநாத பிள்ளை மைலாப்பூரில் முன்னோர் சம்பாதித்த பொருளைக் கொண்டு சுகவாசியா யிருந்து வருகிறார். இளம் பிராயத்திலேயே பெற்றோர்களை இழந்து விட்டார். உறவினர் ரங்கநாயகி என்ற பெண்ணை விவாகம் செய்து கொடுத்தனர். குடும்பத்தை அடக்கியாள தக்க பெரியமனிதரில்லாததால், மனைவியின் உடன்பிறந்தார் அண்ணன் தம்பி மார்களெல்லாம் அடைக் கலமாயிருந்தனர். சில காலம் சென்ற பிறகு தாயாரும், பெண்ணுக்கு உதவியாக வந்து சேர்ந்தாள். செவந்திநாத பிள்ளை க்ஷணகோபி. அப்படியிருந்தும் அவர் கோபத்துக் காவது, தங்கள் மரியாதையைக் காப்பாற்றும் பொருட்டாவது போனார்களில்லை. ருசி கண்ட பூனைகளைப் போல் வீட்டை விட்ட கலாதிருந்தனர். செவந்திநாத பிள்ளை வீடு ஒரு சத்திரம் போலாய் விட்டது. இவர் ஒரு வேலையும் செய்வதில்லை. ஊர் விவகாரம் பேசுவதில் விசால புத்தி யுள்ளவர். சம்பாதிக்கத் திறமை யில்லாது போனாலும் பேராசைக்குக் குறைவில்லை. இவருக்கும் கர்ப்பநாயகம் ஒரு ஆப்த நண்பர். கணபதி முதலியார் சிநேகமானதும், அவர் சேகரித்துள்ள ரத்தினங்களைப் பார்வை யிட்டதும், கடைசியில் அவை தனக்கே தான் கிடைக்குமென்றும், செவந்திநாதப்பிள்ளையிடம் சொன்னார். தனக்கும் ரத்தினங்கள் வேண்டுமென்று அவைகளை வாங்கத் தயாராயிருக்கிறதாயும் சொன்னார். செவந்திநாத பிள்ளைக்கு சுமார் 40 வயதிருக்கும்.

இவரது மனைவி விவேகமுள்ளவளாயிருந்தும் எவர் பக்கத்தையும் கடிந்து பேசுவதற்கின்றி மௌனம் சாதித்து வந்தாள்.

ஆற்றின் மணலையும் எண்ணி விடலாம் மண்ணின் எல்லையையுங் கண்டு விடலாம்; ஆனால் செவந்திநாத பிள்ளையின் எண்ணத்தை அளந்தறியக் கூடியதாயில்லை. பேராசை யென்பது இவரிடமிருந்து

தான் புறப்பட்டது போலும் என்று நினைக்க வேண்டியதாகிறது. ஒரு அரசனை வர்ணித்தால் நான் அவனா யிருக்கக் கூடாதா வென்று எண்ணுவார். இப்பேர்ப்பட்ட செவந்திநாத பிள்ளை கர்ப்பநாயகத்தின் சொற்களுக்கு ஏன் மயங்கமாட்டார். அவர் சிநேகத்தை அதிகமாய் விரும்பி, வேண்டிய பொருள்களை யெல்லாம் கொடுத்து உதவி வந்தார்.

செவந்திநாத பிள்ளைக்கும் அவர் மனைவி ரங்கநாயகிக்கும் அபிப்பிராய பேதம் வளர்ந்து கொண்டிருந்தது. இவர்கள் ஒற்றுமையாய் வாழ்ந்த காலமெல்லாம் சுமார் நாலைந்து வருஷங்கள் தானிருக்கலாம். புருஷன் மனதினாலேயே ஆகாயக் கோட்டை கட்ட ஆரம்பித்ததால் மிக்க மனவருத்த மடைந்து வந்தாள். கடைசியாக ரத்தினமாளிகையையும் வாங்கப் போகிறதாகச் சொல்லிக் கொண்டார். செவந்திநாத பிள்ளை பேசும் போது சரி செய்யுங்கோ, என்று சொன்னால் மிகுந்த சந்தோஷம். கூடாது, நியாயமல்ல வென்று சொன்னால் அவர் கொஞ்சமும் ஏற்றுக் கொள்வதில்லை.

அந்த ரத்தினமாளிகையை வாங்குவதற்கு சொத்து போதுமானதா யில்லை யென்று இன்னுமொரு யோசனை செய்தார். அதாவது திருச்சினாப்பள்ளி ஜில்லா, துரையூர் தாலுக்காவில் புறம்போக்கான புன்செய் நிலம் விசேஷமா யிருக்கிறது. கலெக்டர், தாசில்தார்களுக்கு தக்க மரியாதை செய்து அந்த நிலங்களை சர்க்காரிட மிருந்து நூறு வருஷங்கள் வரை அநுபவிக்க எழுதி வாங்க வேண்டும். பிறகு அந்த நிலத்தை நஞ்செய்யாக மாற்ற வேண்டும். ஒரு ஆற்றின் கால் அப்பகுதியில் போகும் படி செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்.

மனோரஞ்சிதமும் ரங்கநாயகியும் அந்நியோன்னியமான நேசமுடையவர்கள். ஆனால் செவந்திநாத பிள்ளையைப் போல் முடியாத காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைப்பது கிடையாது. இருவரும் நன்றாய்ப் படித்தவர்கள். மனோரஞ்சிதம் கவீந்திரனிடம் அன்புடையவளா யிருக்கிறாளென்பது ரங்கநாயகிக்குத் தெரியும், ரத்தின சம்பந்தமாய்ப் பேசுவதே கிடையாது. ரங்கநாயகி தனது

கணவனின் அபிப்பிராயத்தைச் சொல்லவில்லை. அவள் தன் வாழ்வில் கண்ட விநோதங்களையும் விசித்திரங்களையும் குறித்து வருவாள்.

ஒரு குடும்பத்தில் ஸ்திரி புருஷர்களாய் அமைவது பூர்வ ஜென்ம பாவ புண்ணியத்துக் கேற்றவாறு என்பது அனுபவத்துக்குப் பொருத்தமாகவே யிருக்கிறது. ஒரு மனிதனுக்கு கல்வி மாத்திரம் இருந்தால் போதுமா வென்று யோசிக்குங்கால், விவேக விளக்கம் அதாவது பகுத்தறிவு வேண்டுவது அவசிய மென்ப்படுகிறது. ரங்கநாயகி விருப்பும் வெறுப்புமற்று நிரந்தரமான வாழ்க்கையை விரும்புகிறாள். கணவனோ பேராசைப் பெட்டகமாய் விளங்குகின்றான். ஆசைக்கு தக்கவாறு முயற்சி உண்டோ வெனின் அதற்கும் இடமில்லை. இரத்தினங்களை வாங்கி விடவேண்டு மென்ற எண்ணம் தீவிரமாயிருக்கிறது. ஆனால் எவ்விதமும் சம்மதிக்க வில்லை. ரங்கநாயகி சொல்லுகிறாள்:

“இரத்தின மாளிகையின் ரகஸ்யம் தெரியாமல் ஆசைப்படுகிறீர்கள். தனபதி முதலியாருக்குப் பிள்ளை யில்லை யென்று நினைக்க வேண்டாம், கர்ப்பநாயகத்தை நம்ப வேண்டாம். சூதான மார்க்கத்திலேயே வேலை செய்கிறவன். எந்த விதத்திலாவது திடீரென பணக்காரனாகி விடலாமென்று நடிக்கிறான். அவன் கையில் ரங்கநாத முதலியார் ஒரு பொம்மை போலிருக்கிறார். வக்கீல் சம்பந்த முதலியாருக்குத் தான் சகல விபரமும் தெரியும். சமயம் வரும்போது நீங்களே தெரிந்து கொள்வீர்கள்,” என்று சொன்னாள்.

அதற்கு செவந்திநாத பிள்ளை சொல்லுகிறார்:—நான் நவநீத முதலியாரை ஒரு தடவை சந்தித்த போது, அந்த ரத்தினங்களெல்லாம் ஒரு காலைக்கு விற்பனைக்கு வந்து தீரும் என்று சொன்னார்.

“விற்பனைக்கு வருமானால் வேண்டியதை வாங்கிக் கொள்ளலாம். ஆனால் கர்ப்பநாயகத்தின் பேச்சைக் கேட்டு நீங்கள் அந்த

விஷயத்தை வேறு யாரிடமும் பிரஸ்தாபிக்க வேண்டாம்” என்றாள்.

இப்படி இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது, தனபதி முதலியார் வீட்டில் விருந்துக்கு வரும்படி யெழுதிய கடிதம் ஒன்றை ஒருவன் கொண்டு வந்தான்.

ஆறும் அத்தியாயம்.

ஒரு விருந்துக் கச்சேரி.

தனபதி முதலியாருக்கு வலது கைபோலிருந்து உதவி செய்வதற்கு மனோரஞ்சிதத்தைத் தவிர வேறு யாருமில்லை. போஜன சாலையைக் கவனிக்கவும், அதற்கான பொருள்களை வாங்குவதும், வேலைக்காரர்களைக் கவனித்து நடத்துவதும் மனோரஞ்சிதம் தான்.

தனபதி முதலியார் சொல்லுகிறார்:—

“மனோரஞ்சிதம், என்னுடைய பிறந்த நாள் வருகிறது. அன்றையதினம் சில பேர்களை விருந்துக்கழைக்க வேண்டும்” என்றார்.

“ஆஹா, அப்படியே செய்வோம். யார் யாரை அழைக்கப் போகிறீர்கள்” என்று கேட்டாள்.

“நாலைந்து பேர்களுக்குச் சொன்னால் போதும். பட்டணத்தில் ரங்கநாதத்துக்கும் வரும்படியாக ஒரு கடிதம் எழுதுவோம். செவந்திநாத பிள்ளையையும் அழைப்போம்” என்று சொன்னார்.

மனோரஞ்சிதம் வேறு நல்ல நண்பர்களையும் அழைக்கும்படி சொன்னாள். கர்ப்பநாயகத்துக்கு விருந்து செய்யவேண்டுமென்ற

எண்ணமே தவிர மற்றவர்களை அழைக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் கிடையாது. கர்ப்பநாயகத்துக்கு மாத்திரம் பிரத்தியேகமாய் ஒரு கடிதம் எழுதி அனுப்பினர்.

மின்சார விளக்கு சம்பந்தமாய் விசாரிக்க வேண்டிய விஷயங்களையெல்லாம் தயார் செய்து கொண்டிருந்தார். மின்சார விளக்கு அமைப்பதில் விசேஷ யுக்தி படித்தவர். இதற்காகவே சென்னை கிராம்ப்டன் கம்பெனியில் இஞ்சினீர்கள் யோசனை கேட்பது வழக்கம். இவ்விதமாக ஒரு மாதிரியான கியாதியும் பெற்றவர். கிராம்ப்டன் கம்பெனி ஒரு இஞ்சினீர் தனபதி முதலியாரிடம் கர்ப்பநாயகத்தைப் பற்றி புகழ்ந்து சொல்லிவிட்டார். அந்த வார்த்தைகள் ஆழப் பதிந்து விட்டது. மேலும் வேறே ஒரு எண்ணம் அவர் மனதில் ரகஸ்யமா யிருந்துவருகிறது. இதைப்பற்றியும் விசாரிக்க வேண்டுமென்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்.

"மின்சார விளக்குகளை இரத்தின மாளிகையில் அமைக்கிறதாயிருந்தால் கஷ்டமான காரியம். வெகு நேரம் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். நேரில் தெரிவிக்கலாமென்று நினைக்கிறேன். பதில் தெரிவித்தால் ஒரு குமாஸ்தாவிடம் சொல்லி அனுப்புகிறேன்" என்று கர்ப்பநாயகம் எழுதியிருந்தார்.

இந்தக் கடித விஷயம் வெகு சுருக்கமாக நாலைந்து வரியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கடிதம் விரிவாய் பக்கக்கணக்கில் இருந்தால் படிக்கப் பிரியமுண்டாவதில்லை. அதிலும் சிலர் பென்சலால் கடிதமெழுதி எழுத்துக்களும் மங்கலாயும் சிறு எழுத்துக்களாயு மிருந்தால் பார்க்கவே வெகு கஷ்டம். இதையெல்லாம் உத்தேசித்து அழகாய் எழுதி அனுப்பினர்.

புதியசிநேகமானதால் தனபதி முதலியாருடைய பதிலுக்கு ஆவலோடு எதிர்பார்த்தவரா யிருந்தார். பதிலும் கிடைத்தது. ஆவலையும் தணித்தது. அந்தக் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.

இரத்தின மாளிகை.

மைலாப்பூர் ஜனவரி 8

தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. படித்து சந்தோஷமானேன். ஜனவரி பத்தாம் தேதி நமது மாளிகையில் ஒரு விருந்து நடக்கப் போவதால் அச்சமயம் தாங்களும் வந்திருந்து சிறப்பிக்க வேண்டும். வரும்போது ரங்கநாதத்தையும் அழைத்துவரக் கோருகிறேன்.

தங்களன்புள்ள,

தனபதி

கர்ப்பநாயகம் இந்தக் கடிதத்தைப் பார்த்து, தான் நினைத்திருந்தது சரியென்றும், எல்லாம் தன் மனம்போல் நடக்கும் என்பதாக தீர்மானித்துக் கொண்டார்.

"என்னை அவர் விரும்புகிறார். கூடிய சீக்கிரத்தில் இன்னும் அதிகமாகவே விரும்புவார்" என்று ரங்கநாத முதலியாரைப் பார்த்துச் சொன்னார்.

விருந்துக்கு அழைத்திருப்பதில் தன்னையும் சேர்த்திருக்கிறதை அறிந்தும் ஒரு பொருட்டாய் நினைத்தாரில்லை.

"ஒரு விருந்தா! ரத்தினமாளிகையிலா!" என்று அருவருப்பாய்க் கேட்டார். "அதிலும் ஒரு ரகசியம் இருக்க வேண்டும். அது விதி வழி தான்" என்றார்.

சமீபத்தில் நடந்த சில விஷயங்களைக் கவனிக்கும்போது, கர்ப்பநாயகம் சூதானமார்க்கத்திலேயே வேலை செய்கிறான் போல் தோன்றுகிறது. இவன் பிடிவாதமாய்க் கடைசிவரை நினைத்தபடி செய்தே தீர்ப்பான். நல்லவர்களுக்குள் நற்குணவானும், பொல்லாத

வர்களுக்குள் முதன்மையானவன் போலும் நடிக்கிறான். நெருங்கிப் பழகியதால் இவன் விஷயம் விளங்குகிறது. ஆனால் கஷ்டமான காலங்களிலெல்லாம் அநேக தடவைகளில் பணம் கொடுத்து உதவி செய்திருக்கிறான். இப்பொழுது என்ன செய்கிறதென்று திகைத்தவராய்,—சிந்தை தேக்கியவராய்—கவலைப்பட்டவர் போல்தோற்றப்பட்டார். இதனையறிந்த கர்ப்பநாயகம் ரங்கனாதம் மனதில் கொண்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்துவிட வேண்டும். இல்லாவிடில் சந்தேகத்தின்மேல் சந்தேகமாய் பெருகிவிடும் என்று, ரங்கனாதத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்:—

“நியாய வழியிற் சம்பாதித்து ஒரு நாளும் ஒருவன் பணக்காரனாகமுடியாது. எனக்கு வரும் சம்பளம் என் செலவுக்கே போதுமானதாயில்லை. குமாஸ்தாவாயிருந்து சீமானான எவனையும் பார்த்ததுமில்லை கேட்பதுமில்லை. ஆகையால் சட்ட விரோதமான சில கொள்கைகளை அனுசரித்து நினைத்த காரியத்தை முடிக்க வேண்டும்” என்று சொன்னார்.

“உன் எண்ணம் வெள்ளையாய்த் தான் முடியும். சிக்கலாய் எவ்வளவு தான் சட்ட விரோதமாய் நடந்து கொண்டாலும் நியாயம் ஏற்படாமல் போகாது. சட்டம் எப்படியும் திரும்பும். அதை நம்பி கெட்டவழியில் செல்வது கூடாது, முயற்சியும், நல்வழிப் பட்டதாயிருந்தால் தான் நன்மையுண்டாகும். என்னைப் பற்றிய வரையில், உன் முயற்சி எம்மாதிரியான முடிவை யடைந்தாலும், நான் அதற்கு உடன்படேன்” என்று பதில் சொன்னார்.

ஆஹா! என்ன காரியம்! நானும் ஒரு ராக்ஷசன் கையில் சிக்கிய பொம்மைபோல் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இனி பிரிந்தாலும் கஷ்டமுண்டாவது திண்ணம்; ஆகையால் நடக்கப் போவதைக் கவனித்திருத்தலே உத்தமம் என்று எண்ணி மௌனமாயிருந்தார்.

“உங்களுக்கு சுகவாழ்க்கைக்கான காலம் நெருங்குகிறது. தங்கள் ஆயுளையெல்லாம் வித்தையிலா செலுத்தப் போகிறீர்கள். விவாகம் செய்துக் கொள்ளவேண்டிய வயது வந்தும் ஏன் முயற்சி

செய்யாதிருக்க வேண்டும். தங்கள் விஷயத்தில் நான் எதையும் மறந்தவனல்ல. சுக ஜீவனத்துக்கு வேண்டிய சொத்தையும் சம்பாதித்துக், கொடுக்கிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை; மற்ற விபரம் விருந்துக்குப் போய்வந்த பிறகு தெரிவிக்கிறேன்” என்று கர்ப்பநாயகம் உற்சாகமாய்ச் சொன்னார்.

இது நிற்க இதேசமயம் மைலாப்பூர் இரத்தின மாளிகையில் நடந்த விர்த்தாந்தங்களையும் தெரிந்து கொள்வோம்.

விருந்துக் கழைக்கப் பட்டவர்களில் முன்னதாகவே செவந்திநாதபிள்ளை வந்து சேர்ந்தார். தனபதி முதலியாரோடு பல விஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் போது, மனோரஞ்சிதத்துக்கு விவாகம் செய்யவேண்டாமா, இராமநாத முதலியாருக்கு கலியாணம் செய்து கொடுங்கள் என்று சொல்லி விட்டு, மனோரஞ்சிதத்தைப் பார்த்து, அம்மா, தங்கை உனக்குச் சம்மதந்தானே என்றார்.

அதற்கு மனோரஞ்சிதம்-சொல்லுகிறாள்;—

“இப்பொழுது தான் தாசில்தார் சிபார்சின் மேல் இரண்டரை ரூபாய் பிரமோஷனாயிற்றாம். அதற்காக பிள்ளை யார் கோயிலுக்கு ஐம்பது தேங்காய் உடைத்தார்களாம்” என்றாள்.

“ஆமா ஆமா, நிறம்பக் கெட்டிக்காரன்! என்றார்.

“நீங்கள் தான் மெச்சுக் கொள்ளவேண்டும். இரண்டு வருஷமாய் தெரிந்த கோவில்களுக் கெல்லாம் பிரார்த்தனை செய்து இரண்டரை ரூபாய் பெற்றுவிட்டார்களே, கோடி திரவியம் கொட்டிவிட்டது போலவே தான். எனக்குச் சம்மதமில்லை யென்று தெரிந்திருந்தும் ஏன் அதைப்பற்றி அடிக்கடி சொல்லுகிறீர்கள்” என்று சொன்னாள்.

“ரஞ்சிதம்! கோபப்படாதே உனக்கு இஷ்டமில்லை யென்பது இன்றுதான் வெளிப்படையாகத் தெரிந்தது” என்று செவந்தினாத பிள்ளை சொன்னார்.

“பிள்ளையவாள்! அவள் எப்பொழுதும் அப்படித் தான். அவள்

குற்றம் சொல்லாத மாப்பிள்ளைகள் கிடையாது. இன்னும் நல்லகாலம் வரவில்லை'' என்று சொன்னார்.

"மனோரஞ்சிதத்துக்கு மனதுக் கேற்ற மாப்பிள்ளை எங்கேயோ பிறந்திருக்கிறான். ஆனால் தெரியவில்லை'' என்றார்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போது மைசூர் அரண்மனை ஜோஸ்யர் மகாதேவ சாஸ்திரி வந்து சேர்ந்தார். தனபதி முதலியார் அவருக்கு மரியாதை செய்து ஒரு ஆசனத்தில் உட்காரும்படி செய்தார். இவர் யார் உங்களுக்குத் தெரியுமோ—என்று செவந்திநாத பிள்ளையிடம் கேட்டார். எனக்குத் தெரியாது என்றார். இவர்கள் மைசூர் அரண்மனை ஜோஸ்யர், மகாவித்வான் என்று அறிமுக மாக்கினார். அப்படியா வென்று சொல்லி பிள்ளையவர்கள் நமஸ்கரித்தார்கள். மேலும் சொல்லுகிறார்:—

"ஜோஸ்யரவாள் நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தார்கள். கடவுளே சந்தேக நிவர்த்திக்கு அனுப்பியிருக்கிறார்'' என்றார்.

ஜோஸ்யர் — "என்ன விசேஷம்'' என்று கேட்டார்.

தன—"மனோரஞ்சிதத்துக்கு கலியாணம் செய்ய வேண்டுமென்று பேசிக் கொண்டிருந்தோம். அவர்கள் ஒரு இடத்தில் மாப்பிள்ளையைத் தீர்மானித்து வந்து சொன்னார்கள். அவளுக்கு சம்மதமில்லை''

செவ—ஒரு ஆரூடம் பார்த்துச் சொல்லுங்கள்.

ஜோஸ்—எனக்கு முன்னமேயே தெரியும். முந்திய தடவையில் ஜாதகத்தைப் பார்த்து வைத்தேன். ஆனால் அதைப்பற்றிக் கேட்கவில்லை.

செவ—தயவு செய்து இப்பொழுது தான் சொல்லுங்கள்.

ஜோஸ்—அந்தப் பெண் ஒரு லக்ஷாதிபதியை விவாகம் செய்து கொள்ளப் போகிறாள். ஆனால் விவாகம் ஆகும் வரை கொஞ்சம் கஷ்டப்பட வேண்டியதாயிருக்கும். புருஷனோ புண்ணியம் வாய்ந்தவன். கல்வியில் அவனுக்கு இணையாக எவரும்

இருக்கமாட்டார்கள். மனோரஞ்சிதம் ஒரு இராஜ ஸ்திரீயைப்போல் வாழப்போகிறாள்.

இதைக்கேட்ட செவந்திநாத பிள்ளைக்கு அளவற்ற சந்தோஷம். ஆனால் தனபதி முதலியார் கேட்டுக்கொண்டே சிந்தனையிலிருந்தார்.

"இன்னும் சற்று நேரத்தில் எல்லோரும் விருந்துக்கு வந்துவிடுவார்கள். இந்த விஷயத்தை இம்மட்டோடு நிறுத்திக் கொள்வோம்'' என்று சொல்லி விட்டு, செவந்திநாத பிள்ளையைப் பார்த்து "தங்களுக்கு கர்ப்புநாயகத்தைத் தெரியுமோ'' என்று கேட்டார்.

"ஆஹா, நன்றாய்த் தெரியும். சிறு பிள்ளையிலிருந்தே பழக்கம் அவரைப்பற்றி யென்ன?'' என்று கேட்டார்.

"இல்லை—அவர் எப்படி, நல்லவர் தானாவென்று கேட்கிறேன்'' என்று மெதுவாய்க் கேட்டார்.

"மகா சாமர்த்திய சாலி. சட்டத்தில் பரிச்சயமுண்டு, பேச்சிலோ, காரியத்திலோ அவரை வெல்வதற்கு யாராலும் முடியாது. அவரிடத்தில் விசேஷ குணமொன்று உண்டு. அதாவது காலத்தை வீண் போக்குதல் என்பது கிடையாது. புத்தியால் ஒரு மனிதன் எவ்வளவு தூரம் வேலை செய்ய முடியுமென்று யோசனை செய்வார். இஞ்சினீரிங் வேலை கூடக் கற்றுக் கொண்டிருக்கிறார் என்று சமீபத்தில் தான் கேள்விப் பட்டேன்'' என்று உற்சாகமாய்ச் சொன்னார்.

"நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். இருந்தாலும்—

இப்படிச் சொல்லும்போது மனோரஞ்சிதம் சொல்லுகிறாள்.—

"இருந்தாலுமென்ன நீங்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். சொற்ப பழக்கத்தைக் கொண்டு கௌரவமாக நினைத்து விடக் கூடாது. ஒருவர் மனதின் ஆழத்தை சீக்கிரம் கண்டுகொள்ள முடியாது'' என்றாள்.

" கர்ப்பநாயகம் சொன்ன வேலையைச் செய்யப்போகிறார். அவரைப் பற்றி அதிகமாய்த் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை'' என்று தனபதி முதலியார் மெல்லிய தொனியில் சொல்லிக்கொண்டு எழுந்து சென்றார்.

" செவந்திநாத பிள்ளை சொல்லுகிறார்:—

" அம்மா இப்படியெல்லாம் பேசினால், அவர்கள் மனம் கஷ்டப்படுமல்லவா? என்று சொன்னார்.

" அவர்களுடைய நன்மையை உத்தேசித்துச் சொன்னேன். பிறகு அவர்களிஷ்டம் என்று பதிலளித்தாள்.

விருந்துக்காக சிலர் வந்து சேர்ந்தார்கள். தனபதி முதலியார் ஒவ்வொருவருக்கும் உபசாரம் செய்து ஆசனங்களில் அமரும்படி கேட்டுக்கொண்டார். கடைசியாக எதிர்பார்த்தபடி கர்ப்பநாயகமும் ரங்கனாதமும் வந்து சேர்ந்தார்கள்.

எதிர் எதிராக இரண்டு பங்தியில் இலைகள் போடப்பட்டு எல்லோரும் சாப்பிட உட்கார்ந்திருந்தார்கள். அனைவரும் பக்கத்திலிருப்பவர்களோடு சிரித்துப் பேசிக்கொண்டு புசித்தார்கள். தாம்பூலம் தரித்துக்கொண்டு ஒவ்வொருவராய்ப் பிரிந்துபோக கர்ப்பநாயகமும் ரங்கனாதமும் தங்கினார்கள். அவர்களிலும் கர்ப்பநாயகத்தை தனிமையாய் தனபதி முதலியார் தனது அறைக்குள் அழைத்துச் சென்று பேச ஆரம்பித்தார். மின்சாரவிளக்கைப் பற்றிய விஷயம் ஆரம்பம் செய்யப்பட்டது. நவரத்தினங்களுக்கும் தனித்தனி விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்று வெகு விரிவாகப் பேசினார். தனபதி முதலியார் வெகு உற்சாகத்தோடும் வெகு கவனமாயும் கேட்டுக் கொண்டிருந்தார். உண்மையில் அவருடைய இரத்தின மாளிகை ஓர் புதுமையாய்த் தோற்ற வேண்டுமென்ற எண்ணங் கொண்டவர். ஆகையால் அதைப் பற்றி எவ்வளவு தூரம் தெரிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு தூரம் கேட்டுத் தெரிந்து கொள்ள மிகுந்த ஆவலுள்ளவராயிருந்தார். கர்ப்பநாயகம் அவர் ஆவலுக்குத் தக்கபடி புது

ஊக்கமும் யுக்தியுங் காட்டிப் பேசி வந்தார். அப்படிப் பேசியதிலும், தான் வேறு தனபதி முதலியார் வேறு என்ற வித்தியாசங் காட்டாமல், இரத்தின மாளிகை தனக்குச் சொந்தமானது போலும், அவருடைய லாப நஷ்டம் தனக்கு நேர்ந்தது போலும் பேசினார்.

அவ்விதமே செய்வதாயின் அங்குள்ள ரத்தினங்களை இரண்டு அல்லது மூன்று விடங்களில் பத்திரப் படுத்த வேண்டுமென்று தனபதி முதலியார் சொன்னார்.

மனோரஞ்சிதம் காபூல் மாதுளங் கனியையும், சிறு மலைப் பழத்தையும் ஒரு தட்டில் வைத்து தனபதி முதலியார் முன்னிலையில் வைத்தாள். அப்பொழுது முதலியார் அதை ஒரு சுப சகுனமாகக் கருதி, அடங்கா மகிழ்ச்சி கொண்டவராய், "ரஞ்சிதம்'' உன்னுடைய அத்தானுக்கு கொடுக்க வில்லையா யென்றார். அதற்கு புன்னகை கொண்டு மௌனமாயிருந்தாள். கர்ப்பநாயகம் அப்பெண்மணியை அடிக்கடி பார்த்த வண்ணமாயிருந்தார். கர்ப்ப நாயகத்தின் நோக்கத்தை அறிந்த தனபதி முதலியார் மனோரஞ்சிதத்தை நோக்கி 'ஹார்மோனியத்தை' எடுத்து சற்று நேரம் வாசிக்கும் படி சொன்னார். அப்படியே அந்த ரமணியும் சென்றாள். உடனே கர்ப்ப நாயகம் சொல்லுகிறார்:—

"நான் தங்களுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அதாவது, வேலைக்காரர்கள் மாளிகையில் வேலை செய்யும் போது இரத்தினங்களைப் பத்திரப் படுத்த வேண்டியது முக்கியமான விஷயம், அவ்வளவு தானே'' என்றார்.

"அது தான் எனதபிப்பிராயம். என்னுடைய பாங்கர்களிடம் கொடுத்துப் பத்திரப் படுத்துவதே நலமாகும்'' என்று சொன்னார்.

"நான் சொல்வதையும் சற்று கவனியுங்கள். ரத்தினங்களை எல்லாம் பட்டணத்தில் கொண்டு போய்ப் பத்திரப் படுத்தி விட்டதாகப் பிரஸ்தாபம் செய்து விட்டு, இவ்விடம் தானே தங்கள் பார்வைக்குள் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கர்ப்பநாயகம் சொன்னார்.

" இல்லை—முடியாது அப்படிச் செய்ய எனக்கு இஷ்டமில்லை? இங்கு பத்திரப் படுத்துவதானால் ஓயாத கவலையுண்டாகும். அதை

யுத்தேசித்தே பட்டணத்துக்குக் கொண்டு போகத் தீர்மானித்து விட்டேன" என்றார்.

"நான் லாயராயிருக்கும் அனுபவத்தைக் கொண்டு சொல்லுகிறேன். ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு மாற்றுவதாயின் வழியில் அதிக ஜாக்கிரதை பெடுத்துக் கொள்ளவேண்டும். இது முக்கியமானதென்று நினைக்கிறேன்" என்று கர்ப்பநாயகம் சொன்னார்.

"நீங்கள் சொல்வது சரி. அது நல்ல மந்திரி தான்" என்று சொன்னார்.

இவர்கள் இப்படி ரகஸ்யமாய்ப் பேசுவதை அறியவேண்டி ரங்கனாதம் அந்த அறைக்குப்பக்கத்தில் வந்து நின்று கேட்டுக்கொண்டிருந்தார். அம்மான் புத்தி இப்படியும் போதுமா? அவன் போக்கியதையை நன்றாய் அறியாதபடி அவனுடைய மாயவலையில் சிக்குகிறாரே. தன் மனதிலுள்ள மர்மத்தை யெல்லாம் நல்லவனென்றெண்ணிச் சொல்லுகிறாரே. என்ன தொந்தரவைக் கொடுக்கப் போகிறானோ தெரியவில்லையே. கர்ப்பநாயகத்தை சொந்த மனிதனைப்பாவித்து விட்டார். இங்ஙனமெல்லாம் தன்மனதில் நினைத்து இங்குமங்கும் உலாவிக்கொண்டிருந்தார். உடனே மனோரஞ்சிதம் அவரிடம் சென்று, உள்ளே அவர்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டாள்.

"நான் என்ன சொல்லப் போகிறேன், நேற்று வந்த மனிதனை சொந்தமாய்ப் பாவித்து யோசனை கேட்கிறார். அது எவ்வித ஆபத்தைக் கொடுக்குமோ தெரியவில்லை" என்று சொன்னார்.

"எனக்கும் அவ்வித அபிப்பிராயமே. ஆனால் அவர்கள் பிடிவாத முள்ளவர்கள். நாம் சொன்னால் கேட்கமாட்டார்கள்;" என்று சொன்னாள்.

"நாம் கூடியவரை ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும்" என்று சொன்னார்.

ரங்கனாதம் திரும்பவும் அந்த அறைக்கருகில் சென்று அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்க ஆரம்பித்தார்.

தனபதி முதலியார் சொல்லுகிறார்.—

லாயர்களுக்கு பலநூல்களைப் படித்தும் பேசியும் பழக்கமிருக்கலாம். ஆனால் ஒரு வியாபாரி அல்லது ஒருதொழிலாளருக்குள்ள அனுபவமிருக்குமென்று சொல்ல முடியாது. சட்ட திட்டங்களெல்லாம் ஒரு நன்மையோ தீமையோ நிகழ்ந்த பிறகு தான் ஏற்படுகிறது என்று சொன்னார்.

"நீங்கள் சொல்வது உண்மையே யானாலும், யாருடைய பெட்டியில் சீக்கிரமாக பணம் குவிகிறது? யுக்தியாலும், சாமர்த்தியத்தாலும் ஒருவித உற்சாகத்தோடு செய்யும் வேலையால் செல்வம் தானே வருகிறது. வக்கீல் தொழில் வாக்கு சாமர்த்தியத்தால் ஆகவேண்டியது" என்றார்.

"வெறும் பேச்சு பயன்படாது. முன்பின் யோசனையோடு கூடியதா யிருக்கவேண்டும். மேலும் எதிரியின் நோக்க மறியாமல் பேசுவதிலென்ன பயன்?" என்றார்.

"அந்த தன்மை எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. எல்லாம் புத்தி தீக்ஷணியத்தைப் பொருத்ததா யிருக்கிறது" என்று சொன்னார்.

தனபதி முதலியார் பேசிக்கொண்டே நித்திரையில் ஆழ்ந்தார். இதை யறிந்து கர்ப்பநாயகம் அந்த அறையை விட்டு வெளியே வந்து பார்த்தார். ரங்கனாதம் தனித்திருக்கவும் மனோரஞ்சிதம் ஹார் மோனியாம் வாசித்துக் கொண்டிருக்கவும் கண்டு, ரங்கனாதத்துக் கருகில் சென்று ஒரு நாற்காலியில் அமர்ந்தார். ஒரு வேலைக்காரி தோடு நீக்கிய சில ஆரஞ்சிப் பழத்தை ஒரு தட்டில் வைத்து அவர்கள் முன்னிலையில் வைத்தாள். கர்ப்பநாயகத்தின் பார்வை ரஞ்சிதத்தையே நோக்கிச் சென்றது. ஆனால் அவள் ஒரு சிறிதும் கவனிக்கவில்லை. கர்ப்பநாயகம் ரங்கனாதத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்:—

"ஆஹா! எவ்வளவு தான் உற்சாகமாய் வேலை செய்தாலும், பேசிக்கொண்டிருந்தாலும் வாத்தியப் பெட்டியை மிருந்த சப்த

OFFICE OF THE ... 5-APR 1921 ... MADRAS

முண்டாகும்படி செய்து பாடினால் என்ன பிரயோசனம்'' என்றார்.

ரங்கநாத முதலியார் சொல்லுகிறார்:—

“அந்த மாதிரி அபிப்பிராயப்படக் கூடாது. ஒருவரைப் பற்றி திடீரென மனம் நோகும்படி சொல்வது நியாயமன்று'' என்று சொன்னார்.

“இல்லை நான் வேடிக்கையாகச் சொன்னேன்'' என்றார்.

“நீங்கள் உற்சாக முள்ளவர். எப்பொழுதும் சந்தோஷம் தான் வேடிக்கை தான்— ஆரம்பித்த விஷயம் எப்படி யிருக்கிறது'' என்று கேட்டார்.

ஜெயமடையக் கூடிய ஒரு காரியம் படிப்படியாய் அனுகூலமாகும். பேசிக் கொண்டிருக்கும் போதே அவர்கள் தூங்கி விட்டார்கள். பிறகு பேசிக் கொள்ளலா மென்று வெளியே வந்து விட்டேன் என்றார்.

“கடவுளின் அனுக்கிரகம் வேண்டும். ஆசை யொன்றால் மாத்திரம் காரியம் சித்தியாகாது. பிரயாசை வேண்டும்'' என்றார்.

“ஆசைப்படுவதே பாதிகாரியம் அனுகூலப்பட்டது போலே'' என்றார்.

“ஒருவன் எந்த வேலை செய்தாலும், கடவுளை நம்பி அவர் சக்தியைக் கொண்டு முயற்சி செய்வது சிலாக்கியமானது'' என்று ரங்கநாதம் சிரித்துக் கொண்டே சொன்னார்.

“எனக் கென்னமோ புத்தி அப்படிப் போகிறதில்லை. எந்தக் காரியத்துக்கும் பணம் தான் வேண்டும். பணம் இருந்து விட்டால், கெட்டமனிதன், அதாவது அயோக்கியனும் நல்ல மனிதனாக மாறிவிடுகிறான். கௌரவமாய் நடக்கவும் பட்டங்களைத் தேடவும் சௌகரியமாய் விடுகிறது. பணம் இருந்தால் உற்சாகமுண்டாய் விடுகிறது. கோவில்களுக்குப்போய் புண்ணியத்தேடவும் அந்தப்பணம்தான் வேண்டும். சுருக்கிச்சொல்லின் ஒருமனிதனுடைய இப்பிரபஞ்ச வாழ்க்கைக்கு பணமில்லையானால் அவனைநடைப் பிணமென்று சொல்வதேதகும். மேலும் சில மூடர்கள் வேண்டும் போது முயற்சிசெய்து சொற்ப திரவியத்தைத் தேடுவதும், பிறகு அதைச் செலவு செய்துவிட்டு திண்டாடுவதுமாயிருக்கிறார்கள்'' என்று கடகடவென்று சொல்லி முடித்தார்.

கதாரத்னாகரம் அனுபந்தம்



சர்வதீர்த்தகுளம், காஞ்சீபுரம்.

கடவுள் துணை

... APR 1921 ... MADRAS.

KATHA
கதாரத்னாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்

Vol. 3.	February, 1921	No. 9.
தொகுதி 3.	1921-ம் வருஷம் பிப்ரவரி மீ	பகுதி 9.

உ

"காண லாம்பர மேகட் கிறந்ததோர்
    வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்
பாண னேன்படித் தாக்கையை விட்டெனைப்
    பூணு மாற்றி யேன்புலன் போற்றியே.

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
    றார்தன் மிக்கவன் பாலவைக் கின்றிலே
னேற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
    கூற்ற மன்னதோர் கொள்கையென் கொள்கையே.

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
    கள்ளும் வண்டு மருமலர்க் கொன்றையான்
அள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
    எள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே."

—மாணிக்கவாசகர்

அதிசய ஞானம்.

சண்முக சுந்தரம்.

(முன் தொடர்ச்சி)

சண்முக சுந்தரம் பள்ளிக்கூடத்துக்குப் போய் வருவதால் தனது மனதில் எழுகின்ற சந்தேகங்களைப் பற்றிப் பேசுதற்கு இடமில்லாதிருந்தது. சாவகாசமான நேரங்களில் சந்தேகங்களைக் குறித்து வந்தான்.

தினந்தோறும் தாயோடு இரவில் கோயிலுக்குப்போய் வருவதுண்டு. அப்பொழுது மற்றவர்களைப்போல் கைகூப்பிக் கடவுளை வணங்கியும் கோயிலைச் சுற்றியும் வந்தான். ஒரு நாள் கோயிலுக்குப் போய் வருவதைப்பற்றி சிந்திக்கலானான். பிதாவானவர் அன்று கடவுள் எங்கும் இருக்கிறார். அவர் இல்லாத விடமில்லை யென்றும் ஒரு கதைகூட உபமானமாய்ச் சொன்னார், என்றும் நினைத்துப்பார்த்தான்.

கடவுள் எங்கும் இருக்கிறார் சரி ஒப்புக்கொள்ளுகிறேன் ஆனால் கோயில் எதற்கு? ஏன் தினந்தோறும் கோயிலுக்குப் போக வேண்டும் என்ற சந்தேகம் ஏற்பட்டது.

இந்த சந்தேகம் இச் சிறுவனுக்கு மாத்திரமா யுண்டாகிறது ஏன் கோயிலுக்குப் போகவேண்டும்? கடவுள் எங்கும் இல்லை

யென்று நினைக்கிறவர்களல்லவா கோயிலுக்குப் போகவேண்டும் என்று சிலர் வாய் ஞானம் பேசி வீண்காலம் போக்குவாருமுண்டு. ஒவ்வொரு மதத்தினர்களுக்கும் அவர்கள் ஆசாரத்துக்குத் தக்கபடி கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும் அலக்ஷியம் செய்வார் அநேகராயிருக்கின்றனர். கடவுள் இல்லை என்று பேசும் நாஸ்திகரைப்பற்றி பேசவரவில்லை. ... வனை நினைப்பதற்கும் துதிப்பதற்கும் விசேஷமாய் புண்ணியம் ... வேண்டுமென்று பெரியோர் கூறுகின்றனர். 'கடவுள்' என்று ... வது எம்மதத்தார்க்கும் சம்மதமானது.

ஒருநாள் சண்முகசுந்தரம் கோயிலில் இருந்து வந்ததும் ஸ்வாமி தரிசனம் செய்து வந்தாயா வென்று கேட்டார். அதற்கு அச்சிறுவன் கேட்கிறான்—

"அப்பா! தினந்தோறும் கோயிலுக்குப் போவதில் உற்சாகமாய் இருக்கிறது. ஆனால் எனக்கு அது விஷயமாய்ச் சந்தேகம் அதிகமாய்க் கொண்டிருக்கிறது. நீ இன்றைக்குச் சந்தேகத்தைத் தீர்க்க வேண்டும்" என்று சொன்னான்.

அதற்கு அவனுடைய பிதா சொல்லுகிறார்:—

"சுந்தரம்! சந்தேகம் உண்டானால் தான் நிவர்த்தி யுண்டு. உன் மனதிலுள்ள சந்தேகத்தைச் சொல்லு" என்றார். சிறுவன் கேட்கிறான்;—

"கடவுள் எங்கும் நிறைந்தவராயிற்றே, கோயிலில் இருக்கிறார் என்றால் எப்படிப் பொருந்தும்"? என்றான்.

"கடவுளைத் தெரிந்து கொண்டிருந்தால் கோயிலுக்குப் போக வேண்டிய அவசியமில்லை. கடவுள் எங்கும் இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதற்கே கோயிலுக்குப்போக வேண்டும்" என்றார்.

"அப்பா! அதை நன்றாய் விளங்கும்படி சொல்லு. நான் கோயிலில் நூதனமாய் ஒன்றையுங் காணவில்லை விட்டாலும், எனக்குள் மாறுதல் இருக்கிறதாய்த் தெரிகிறது" என்றான்.

"கோயில் என்பது சுத்தமான விடம். அங்கு போவோர் சரீர சுத்தியோடு மனதில் கவலை கஷ்டம் என்பதில்லாமல் இருக்க வேண்டும். மனம் சுத்தியாயிருந்தால் பக்தி உண்டாகும்."

"அப்பா! அதென்ன ...மென்று சொல்லுகிறாயே"

'பக்தி' என்...றால், நன்மை தரக்கூடிய ஒன்றை எப்பொழுதும் நினைத்துக்கொண்டு அதே ஞாபகமாய் இருக்கிறதே பக்தி. கோயிலுக்கு இன்பமாய் வருவதில் உனக்குள் மாறுதல் உண்டாகிறதென்று சொன்னாயல்லவா, அதுதான்—பக்தி உண்டாக ஆரம்பமாகிறது."

"அப்பா! அது இருக்கட்டும், கோயிலைப்பற்றிச் சொல்லு"

இவ்விதம் அவன் கேட்டதும் பிதாவானவர் சற்று மௌனமாயிருந்தார். இவ்விதம் சில சிறுவர் கேட்டு விட்டால் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் கோபம் வந்து விடுகிறது. சிறு பயல் அவன் தரத்துக்குத் தக்கபடி கேட்காமல் வேறு என்னமோ கேட்கிறான் என்றும் பதில் சொல்ல முடியாமல் கேட்டவர்களை அதட்டி உன் பாடத்தைப்படி என்றும் சொல்லுகிறார்கள். எப்பொழுதுமே சில குழந்தைகள் பேசப்படித்தவுடன் அது என்ன இது என்ன என்று ஓயாமல் கேள்வி கேட்டவண்ணமாயிருக்கும். அவர்களைச் சமாதானப்படுத்த வகையற்றிருப்பினும் இனி அவ்விதம் கேளாதிருக்கும்படி கண்டித்து விடுவார்கள். ஆனால் சண்முக சுந்தரத்தின் பிதாவைப்பற்றி முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அன்புடையவர் நிதானமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

"கடவுளைப்பற்றி எவரும் சிந்திப்பது அபூர்வம். அவரைப் பற்றிய ஞாபகம் உண்டாகப் பெரியோர்கள் கோயில்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கடவுளோ கருணையுள்ளவர். இதற்கு ஓர் உபமானம் சொல்லுகிறேன் கேள். ஒரு பெரிய குளம் இருக்கிறது. நினைத்தபடி எந்த இடத்திலும் இறங்கி தாகத்தைத் தீர்த்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் சில விடங்களில் மடுவும் சிற்சில விடங்களில் சரிவும் சில விடங்களில் பள்ளத்தாக்கும் இருக்கும். அதையுத்தேசித்து தர்ம குணமுள்ள பெரியோர்கள் படித்துறைகளைக் கட்டி வைத்திருக்

வேதாந்த சாஸ்திரி
ஒரு விநோதம்.

"எட்ல ஆயினோ"

"சாப்பாடு போடுகிறாயா சந்நியாசம் வாங்கிக் கொள்ளட்டுமா" என்று மனைவியைக் கேட்டார்.

தெலுங்கு நாட்டில் நெல்லூர் என்னும் நகரில் சில வருஷங்களுக்கு முன்னே கலா சமுத்திரத்தை வாரியுண்ட கவிவாணராய் வேதாந்த சாஸ்திரி என்றொருவர் இருந்தார். இவர் பால பருவத்திலிருந்தே வித்தையை விசேஷமாய் விரும்பிப் படித்துவந்தார். சமஸ்கிருத பாஷையில் விசேஷ பாண்டித்திய மடைந்திருந்தார். வேதாந்தத்தில் கரை கண்டவராய், நான்கு வேதங்களையும் நன்கு

கிறார்கள். அவரவர் சௌகரியத்துக்குத் தக்கபடி இறங்கலாமல்லவா"

"குளம் எதற்குச் சமானம்?"

"குளம் என்பதை கடவுள் என்று நினைத்துக் கொள். அதைப் போல எங்கும் நிறைந்துள்ள கடவுளை வழிபடுவதற்கு கோயிலைச் சாதகமாய் அமைத்திருக்கிறார்கள். நன்றாய்த் தெரிந்து கொண்டாயா"?

"நன்றாய் விளங்குகிறது."

(தொடரும்)

ஆராய்ச்சி செய்தவர். அவர் தம் வாழ்வுக்கு போதுமான சம்பத்துள்ள வராய் விளங்கினார். இவருக்கு விவாகமாகு முன்னரே பெற்றோர் காலமாயினர். வேதாந்த சாஸ்திரி பால பாஸ்கரனைப் போல் பிரகாசித்தாலும், இவரிடத்தில் ஒரே ஒரு துர்க்குணமிருந்தது. அதாவது முன் கோபி. அடிக்கடி கோபம் அவரிடம் தாண்டவமாடும். ஒரு க்ஷணநேரமும் பசி யோடிருக்க மாட்டார். இவரது நோக்க மறிந்து அவர் மனைவி அதி ஜாக்கிரதையாய் பணிவிடை செய்து வந்தாள். அவ்விதம் நடந்து வரும் நாளில், சமையலாக சற்று தாமதமாகுமானால், 'சாப்பாடு போடுகிறாயா சந்நியாசம் வாங்கிக் கொள்ளட்டுமா' என்று கோபத்தோடு சொல்லி வந்தார்.

அவருடைய மனைவிக்கு சந்நியாசம் என்றால் என்ன, எங்கே வாங்குகிறதோ என்று எண்ணியிருந்தாள்.

அவருடைய மனைவிக்கு சீமந்த காலம் வரவே உறவினர்கள் முகூர்த்தத்துக்கு வந்திருந்தார்கள். அப்பொழுது அப்பெண்மணி தன் தோழிகளிடம், எனது கணவன் கோபம் வரும் போதெல்லாம் சாப்பாடு போடுகிறாயா, சந்நியாசம் வாங்கிக் கொள்ளட்டுமா என்று சொல்லுகிறார். அது இன்னதென்று தனக்கு விளங்க வில்லையென்று சொன்னாள். அவர்களில் ஒரு பெண், 'என்ன பிரமாதம் சந்நியாசம் வாங்கிக் கொள்ளுங்கோ என்று சொல்லி விடு, என்று சொன்னாள். சரி, அப்படியே ஒரு தடவை சொல்லிப் பார்ப்போம் என்று தீர்மானித்துக் கொண்டாள். சீமந்த சடங்கான பிறகு ஒரு நாள் வேதாந்த சாஸ்திரி தன் மனைவியைப் பார்த்து பசி பொறுக்க முடியாமல், சாப்பாடு போடுகிறாயா சந்நியாசம் வாங்கிக் கொள்ளட்டுமா என்று வழக்கம் போல் சொன்னார்.

சாதாரணமாக முன் கோபக் காரர்களெல்லாம் ஒரே மாதிரி பேசுகிறதற்கு பழக்கப் பட்டு வந்திருப்பார்கள். அதைப் போல வேதாந்த சாஸ்திரியும் சொல்லி விட்டார். அதற்கு, சந்நியாசம் வாங்கிக் கொள்ளுங்கோ என்று அவர் மனைவியும் சொல்லி விட்டாள். அதற்கு முன் ஒரு நாளாவது புருஷனிடம் எதிர் வார்த்தை யாடின தில்லை; சந்நியாசம் வாங்கிக் கொள்ளுங்கோ என்று சொன்னதும்

கோபம் அதிகமாய் விட்டது. 'அப்படியா இதோ போகிறேன்' என்று சொல்லி வீட்டை விட்டகன்று, பூணூலை அறுத்தெறிந்து தலையையும் முண்டம் செய்து சந்நியாசம் வாங்கிக் கொண்டார். மனைவி சந்நியாசம் வாங்கிக் கொள்ளும்படி சொல்லி விட்டாளே என்ற கோபமே தவிர, தன் குற்றத்தை யுணர்ந்தாரில்லை.

பிறகு வேதாந்த ஸ்வாமி காசிக்குச் சென்றது. அங்கே இவருடைய கல்வித் திறமையைக் கண்டும் அபாரமான வேதாந்த விசாரணையை யுத்தேசித்தும் வேதாந்த ஸ்வாமியை ஒரு மடத்துக்கு அதிபதியாக்கினார்கள். வேதாந்த விசாரணை செய்து பிறவிப் பெருங் கடலை யொழிப்பதற்கு பதினாறு பேர் சிஷ்யர்களானார்கள். அவர்களுக்கு மடாதிபதி வேதாந்த ஸ்வாமி நாள்தோறும் காலை மாலை பிரசங்கம் செய்து வந்தது. ஆனால் ஒவ்வொரு நாளும் பிரசங்கம் முடிந்ததும் 'எட்ல ஆயினோ' என்று சொல்லிக் கொண்டு எழுந்திருப்பது வழக்கமாயிருந்தது. இப்படிச் சொல்லி வருவதின் தாத்பரியம் எவருக்கும் விளங்காமலிருந்தது. சிஷ்யர்களில் ஒருவன் அதன் உண்மையை அறியவேண்டி, தனித்து ஸ்வாமியிடம் 'எட்ல ஆயினோ, என்று சொல்லுகிறீர்களே அதன் காரணமென்ன? எழுந்திருக்கும் போதும், உட்காரும் போதும் நாராயணா! கோபாலா! ஹரே கிருஷ்ணா! என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். தாங்கள் மாத்திரம் புது மாதிரியாகச் சொல்லி வருகிறீர்களே; அதை விபரமாய்ச் சொல்ல வேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்கு ஸ்வாமி சொன்னதாவது — கிரகாஸ்ரமத்தில் நான் இருந்த போது எனக்கு அடிக்கடி முன் கோபம் வருவதுண்டு. மேலும் என்னால் பசி தாங்க முடிவதில்லை. கோபங்காரணமாய், சாப்பாடு போடுகிறாயா சந்நியாசம் வாங்கிக் கொள்ளட்டுமா என்று சொல்லி வந்தேன். ஒரு நாளும் எதிர் வார்த்தை பேசாமல் பக்தியாய்ப் பணிவிடை செய்து வந்த என்னுடைய மனைவி, நான் கோபமாய் வழக்கம் போல் சொன்னவுடன் சந்நியாசம் வாங்கிக் கொள்ளுங்கோ என்று சொல்லிவிட்டாள். உடனே எனக்கும் கோபம் அதிகரித்து விட்டது. சந்நியாசம் வாங்கிக் கொண்டு இவ்விடம் வந்து சுமார் ஆறு வருஷமாகின்றன. ஆகையால் மனைவி கர்ப்பமாயிருந்

தானே, என்ன ஆயிற்றோ என்ற எண்ணம் என் மனதை விட்டகலாதிருக்கிறது என்று சொல்லிற்று. அதைக்கேட்ட சிஷ்யன், அவருடைய ஊர், விலாசம் முதலியவற்றைக் கேட்டு வைத்து கொண்டான். சில மாதங்கள் சென்றதும், இராமேஸ்வர யாத்திரை போக வேண்டுமென்று குருவினிடம் விடை பெற்று நெல்லூர் வந்து சேர்ந்தான் அவர் சொன்ன விலாசப்படி விசாரித்தான். அவருக்கு ஆறு வயதுள்ள புத்திரன் இருக்கக் கண்டான். வேதாந்த ஸ்வாமி காசியில் பெரிய மடாதிபதியா யிருக்கிறதாயும், தன் பிள்ளையைப் பார்க்க வேண்டுமென்று அழைத்து வரும்படி என்னை அனுப்பி யுள்ளார் என்றான். அவர்களும் சம்மதிக்க அக்குழந்தையை வேறு துணையுடன் காசிக்கு அழைத்துச் சென்று ஒரு தனியிடத்தில் இருக்கும்படி ஏற்பாடு செய்து வைத்தான். வழக்கம் போல் பாடம் நடந்தது. பாடம் முடிந்து எழுந்திருக்கும் போது 'எட்ல ஆயினோ' என்றார். உடனே அந்த சிஷ்யன் அவர் புத்திரனை முன்னிலையில் விட்டு 'இட்ல ஆயினு' என்றான். என்ன என்ன என்று பிரமை கொண்டு கேட்டார். சிஷ்யன் நடந்தவற்றைச் சொன்னான். அதற்கு ஸ்வாமி, நான் அழைத்து வரும்படி சொல்ல வில்லையே என்றது. மந்திரம் ஜெபிப்பது போல நாள் தவறாமல் சொல்லி வருகிறீர்களே, இதற்கென்ன செய்கிறதென்று யோசித்து தங்கள் மனக்குறை நீங்குவதற்காகவே அழைத்து வந்தேனென்றான். ஸ்வாமிக்கு ஆச்சரியமாய் விட்டது.

இக்கதையை நமது வாசகர்கள் பூர்த்தி செய்து கொள்வார்களாக.

இந்திராஜித்து

(முன் தொடர்ச்சி)

இந்திரஜித் அதை செட்டியாரிடத்தில் கொடுத்து பிரித்துப் பார். நீ வருவதற்குமுன் என்னிடத்தில்வந்து பேசிக் கொண்டிருந்த பேர்வழி எனக்கு இதைக் கொடுத்தது நிஜமே. தான் வெள்ளையன் செட்டியா ரென்று அவன் சொல்லிக்கொண்டான். மலையாளத்தில் ஏதோ தனக்கு சில காடுகளிருப்பதாயும் அங்கிருந்து மரங்களை வெட்டித் தூலக்கனுப்பி நல்ல வியாபாரஞ் செய்யலாமென்றும் அதற்காகத் தான் ஏற்படுத்தப்போகும் கம்பெனியில் ஒரு டைரக்டராய் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். அதைப்பற்றின அறிக்கை விளம்பரம் ரிப்போர்ட் முதலியவை இதில் வைக்கப்பட்டிருக்கின்றன வென்று என்னைப் படிக்கச் சொல்லி கொடுத்தானென்றார்.

"வெகு நல்லது. எது எப்படிப் போனாலும் பத்திரப் பணமாவது யிருக்கிற தல்லவா? தயவு செய்து அதையாவது திருப்பிக் கொடுத்து விடலாமல்லவா" வென்றார் செட்டியார்.

வந்த உத்தியோகஸ்தர் அந்தக்கவரைத் திறந்து அதிலுள்ளவைகளைக் கீழே கொட்டினார். நோட்டுகளின் வாலில் ஒட்டின தூசியைக்கூட அதில் காணவில்லை. ஊரிலுள்ள கம்பெனிகளின் நோட்டீஸ்களும் விளம்பரங்களுமே.

"ஐயர் இவைகளை அங்கே வைத்து விட்டு, ரொக்கத்தைச் சுருட்டிக் கொண்டு போய் விட்டார். ஐயையோ வென்று சின்னவர் கூச்சலிட்டார். பெரியவருக்கு பேச்சு எழ வில்லை; தலையில் கையை வைத்துக் கொண்டு சற்று நேரம் சும்மாவிருந்து "கோவிந்தய்யரே! இந்திரஜித் தடையில்லை; கண்டு பிடித்து விட்டேனென்று ஒரு புறத்தில் துக்கமும் ஒரு புறத்தில் ஆச்சர்யமும் ஒரு புறத்தில் தன் திறமையைப் பற்றி தற்புகழ்ச்சியும் விளங்க எல்லோரையும் பெருமையுடன் பார்த்தார்.

அதைக் கேட்டு உண்மையான இந்திரஜித் ஓய் நிறுத்தும் இந்திரஜித் நானே யென்று அப்பொழுதே சொல்ல வில்லையா மறுபடியும் அதில் என்ன ஸந்தேஹம் வந்தது. ஆனால் எனக்குப் பெயர் ஒன்றே. நீர் என்னமோ சொல்லுகிற பெயர்களெல்லாம் நமக்குக் கிடையாது. பேசுவதை நிதானித்துப் பேசுமென்றார்:

இப்படி ஒருவர்க்கொருவர் தகவலில்லாமல் பேசிக்கொண்டிருக்கையில் பழய கம்பனி யெல்லாம் வெளியில் வந்தது, ஆரம்பம் முதல் புராணத்தை எடுத்து, ஒன்று விடாமல் படித்து உண்மையான இந்திரஜித்துக்கும் அவனுடைய நண்பனுக்கும் போலீஸாருக்கும் நியாயாதிபதிக்கும் திருப்தி உண்டாகும்படி சங்கதிகளைப் போட்டு அலசி வடிகட்டின பிறகு இருகட்சிக்காரர்களுக்கும் ஆத்திரம் தணிந்து ஒருவருக்கொருவர் ஸஹஜமாயும் மரியாதை யுடனும் பேச ஆரம்பித்தார்கள், செட்டியாருக்கு வந்த நஷ்டம் வந்ததே போன பணம் போனதே, இனியாவது மோசம் போகாமல் உஷாராய் இருக்க வேண்டும். ஆனால் கண்ட பெயரை யெல்லாம் நம்புவதும் அனர்த்தம். கண்டபெயரையெல்லாம் ஸந்தேஹிப்பதும் அனர்த்தம். ஆகையால் இந்த விஷயத்தில் ஸமயத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டியதே யொழிய பிறருடைய யோசனையும் ஸஹாயமும் பலிக்காது. அளவுக்கு மிஞ்சி ஐச்வர்யத்தை குவிக்கிறவர்களுக்கு இவ்விதமான கஷ்டங்கள் நேராமல் போகாது. காய்த்த மரமே கல்லடி படும்; பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடுமென்று அனேக தர்மோபதேசங்களைச் செய்து நியாயாதிபதி எல்லோரையும் அனுப்பி விட்டார்.

இந்திரஜித் செட்டியாரைப் பார்த்து "சில சங்கதிகள் எனக்கு இப்பொழுது தான் விளங்குகின்றன. நான் பல விடங்களில் என் பெயரைச் சொன்னபொழுது எல்லோரும் சற்று ஸந்தேஹப்பட்டுத் தயங்கினார்கள். என்னை அடிக்கடி மறைவாய் ஏற இறங்கப் பார்த்தார்கள். அந்தப் போக்கிரியென்றே என்னை எண்ணி விட்டார்கள் போலும். அவர்களிடத்தில் குற்றமென்ன என்னிடத்திலும் குற்றமில்லை. பணத்தில் கிடந்து புரளும் உம்மைப்போன்ற பேர்வழிகள் இல்லாவிட்டால் இப்படிப்பட்ட போக்கிரிகளுக்கு தங்களுடைய ஸாமார்த்தியத்தைக் காட்டுவதற்கு அவகாசம் கிடைக்குமா. ஆனால் தொழில் செய்து பணம் ஸம்பாதிப்பதையும் நிந்திக்கக் கூடாது. உலகத்தில் கூர்மையான புத்தியும் யுக்தியு முள்ளவர்கள் இருக்கக் கூடாதென்று கட்டுப் பாடு செய்யவும் முடியாது. முன் ஜாக்கிரதை இல்லாதவர்கள் மோசம் போவதையும் தடுக்க முடியாது. இதெல்லாம் ஸஹஜமே. எனக்கு இந்திரஜித் தென்று பெற்றோர்கள் பெயர் வைத்தது அனர்த்தத்துக்கு வந்து விட்டது. ராமாயணத்தில் வர்ணிக்கபடும் இந்திரஜித்திற் குள்ள மாயாவித் தனமும் ஸாமார்த்தியமும் வஞ்சனையும் ஸ்வப்னத்திலும் எனக்குக் கிடையாது. ஆனால் அந்தப் பிணங்கள் பூர்ணமாய் விளங்கும் ஒரு ஜக ஜாலக்காரனை போலீஸார் அகஸ்மாத்தாய் பெயர் தெரியாமல் இந்திரஜித் என்று நாமகரணம் செய்தது அவர்கள்மீது குற்றமென்றும் சொ

ல்ல முடியாது. ஆகையால் தன்னையே நோவேனோ, பிறரை நோவேனோ, தற்காலத்தை நோவேனோ, ஒன்றும் விளங்கவில்லையென்றார்.

செட்டியார் போலீஸாரிடத்தில் கோவிந்தய்யரை எங்கிருந்தாலும் பிடிக்கச் சொல்லி, அபரிமிதமான இனாம் கொடுப்பதாய் வாக்களித்தார்; பிறகு இந்திரஜித்தும் அவருடைய நண்பரும் செட்டியார்களும் பம்பாய் பாங்கிக்குப் போய் குறிப்பிட்ட நம்பர்களுள்ள நோட்டுகள் அங்கே மாற்றுவதற்கு வந்தால் பணம் கொடுக்க வேண்டாமென்று மானேஜரிடத்தில் தெரிவித்தபொழுது, அவர் சிறித்து, "வெகு சேர்த்தி, இன்னும் ஒரு மாதம் கழித்து வராமல் போனீர்களே கண் கெட்ட பிறகு ஸூர்ய நமஸ்காரம் என்பது போல் நல்ல புத்திமான்கள். யாரோ ஒரு சீமாட்டி, அவைகளை நேரில் கொண்டு வந்து கொடுத்து மாற்றி, தொகையைப் பவுன்களாய் வாங்கிக் கொண்டு போனாள்" என்றார். அவளுடைய அங்க அடையாளங்களை விசாரித்தபொழுது ஹோட்டல் காரன் குறிப்பிட்ட பெண் பிள்ளையும் இவளும் ஒன்றென்று வெளிப்பட்டது. சாமியாருடைய கூட்டாளியான பெண்மணி முன்னமேயே பம்பாயிக்கு வந்து உண்மையான இந்திரஜித் இறங்கி யிருக்கும் ஹோட்டலில் தானும் ஜாகை வைத்துக் கொண்டு, கோவிந்தய்யருக்கு யாரோ கம்பெனி டைரக்டர் அனுப்பிய கடிதங்களென்று சொல்லப் படுவதைத் தானே எழுதி அனுப்பிக் கொண்டிருந்தாள். உண்மையான இந்திரஜித்தினிடத்தில் மஹா மாயாவி பேசி விட்டு, கீழே இறங்கி வந்த வுடன் தயாராய் காத்துக் கொண்டிருந்த தன் கூட்டாளி யிடத்தில் அந்த நோட்டுகளைக் கொடுத்து பாங்கிக்கு அதிவேகமாய்ப் போகும்படி அனுப்பி விட்டு, ஏதோ ஓர் குறிப்பிட்ட விடத்தில் அவளுடன் சேருவதாக ஏற்பாடு செய்து கொண்டு, தானும் வேறொரு பக்கமாய் ஓடி போய் விட்டான். எங்கே போனானோ என்ன மாயமானானோ ஒருவருக்கும் தெரியாது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு வழக்கப்படி மாயாவியிடத்தி லிருந்து, கடிதம் செட்டியாருக்கு வந்தது. அது செட்டியாருடைய விலாச முத்திரை யிட்ட சொந்த காகிதத்திலேயே எழுதப் பட்டிருந்தது. போன தடவை எந்த யுக்தி செய்தோ மரக்காயருடைய விலாச முத்திரை யிட்ட காகிதத்தில் எழுதினான்.

கோடீச்வரர்களில் பிருஹஸ்பதியே நான் கோவிந்தய்யர் ரூபமாய் உனக்கு தர்சனம் கொடுத்து, உன் வீட்டில் வஸித்த பொழுது அடிக்கடி சொன்னது உன் மூளையில் பதியவில்லையே. "உடுத்த துணியையும் படுத்த பாயையும் நம்பாதே" யென்று முட்டிக் கொண்டேனே. நான் சொன்னதைக் கேட்டாயா? ஒருவரையும் அதில் நானும் அடங்கினவனல்லவா? என்னை மாத்

திரம் ஏன் ஸந்தேஹிக்கவில்லை. "நீங்கள் சேஷாசாரியிடத்திற்குப் போவதாய்ப் பேசிக்கொண்டிருந்த க்ஷணத்திலேயே என் தேவதை எனக்கு வந்து சொல்லி விட்டது. சேஷாசாரியை எனக்குப் பல வருஷங்களாய்த் தெரியும். உடனே நீ வேண்டுமென்று விரும்பின துப்பறியும் நிபுணனாய் நான் வந்து சேர்ந்தேன். சேஷாசாரிக்குப் பல தடவையில் நான் வேலை செய்து சிக்கலான கேஸுகளை முடித்துக் கொடுத்திருக்கிறேன். என்னிடத்தில் அவருக்குப் பூர்ண நம்பிக்கையுண்டு. நீயும் போலீஸாரும் எனக்கு செலவில்லாமல் வைத்திருக்கும் பெயருள்ள ஒரு உண்மையான அசாமி உண்டென்று வெகுகாலமாய்த் தேடிக்கொண்டிருந்தேன். பர்மாவில் அந்த மஹாநுபாவன் இருப்பதாயும் தகுந்த உத்தியோகஸ்தனென்றும் ஸமீபத்தில் லீவு வாங்கிக் கொண்டு இந்தியாவுக்கு வரப்போவதாயும் என் அசாமிகளின் மூலமாய்த் தெரிந்து கொண்டேன். அவர் வந்தவுடன் சில வேலைகளைச் செய்ய வேண்டுமென்று புள்ளி போட்டிருந்தேன். இன்னும் எத்தனையோ அசாமிகளை ஏமாற்றி யிருக்கலாம். எவ்வளவோ பணத்தைக் கொள்ளையடித்திருக்கலாம். ஆனால், அவர் ஸாது, உன்னைப்போல ஊர்க்கொள்ளையடிக்கிறவரில்லை. நீயே எனக்கு இரை"யென்று பகவான் ஸிருஷ்டித்திருக்கிறார். ஆகையால் இந்தத் தடவை இந்த ஸ்வல்பமான வேலைத்தனத்துடன் நிறுத்திவிட உத்தேசித்தேன். இதனால் அவருக்கு உண்டாகும் தொந்திரவு அதிகமல்ல. சீக்கிரத்தில் விலகிவிடும். உங்களால் எனக்கு இட்டபட்ட பெயரை தெய்வச் செயலால் வைத்துக் கொண்டிருந்த குற்றத்திற்காக அவர் இவ்வளவு கூட கஷ்டப்பட வேண்டாமா? அவர் வரும்வரையில் சும்மாவிருக்க வேண்டுமேயென்று கவலை கொண்ட என் வருத்தத்தை மஹானுபாவன நீ எப்படியோ அறிந்து, என்னைத் தேடி வந்து கைப்பிடியாய்ப் பிடித்து வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய்ச் செட்டியாரோடொத்த சாப்பாடென்ற கதைபோல் ராஜோபசாரம் செய்து முடிவில் சிரம தக்ஷிணையாக ரூபாய் 2000 உன் கையாலேயே மனப்பூர்வமாய் கொடுத்தனுப்பினாய். நான் உன்னை வாயைத் திறந்து கேட்டதுண்டா? என்னை நிர்பந்தப்படுத்தி வாங்கிக்கொள்ளச் சொன்னாய்.

அது போகட்டும், நான் சொன்ன வார்த்தை தவறினதுண்டா? ஸத்ய ஸந்தனென்றால் எனக்கே தகும். அரிச்சந்திரன் இப்பொழுதிருந்தால் என்னைப் பார்த்து, வெட்கி முகத்தில் முட்டாக்குப்போட்டுக்கொண்டு போவான்; இந்திரஜித்தைப் பிடித்துக் கொடுக்கிறேனென்று சொன்னேன். கொடுத்தேனல்லவா? அப்பொழுது உங்களையும் வைத்துக் கொண்டே அவனை உங்களிடத்தில் ஒப்புவிப்பதாய்ச் சொன்னேன். அப்படிச் செய்யவில்லையா? அவனை ஒப்புக்கொள்ளச் சொல்லுகிறேனென்று

உனக்கு வாக்களித்தேன். அப்படி நடந்ததல்லவா? ஒரே ஸமயத்தில் இரண்டு இந்திரஜித்துகளை உனக்கெதிரில் காட்டினேன். இதைக் காட்டிலும் உனக்கு என்ன செய்ய வேண்டும். அவர்களில் ஒருவனுக்கு அந்தப் பெயர் மாத்திரம் உண்டு. குணங்களும் யோக்கியதையுமில்லை; அவனே உன்னால் கைது செய்யப்பட்டு மாட்டிக்கொண்டவன். மற்றொருவனுக்கு அந்தப் பெயரில்லை. யோக்யதையும் குணங்களுமுண்டு. அவனே உன்னை ஏமாற்றி, குற்றமில்லாதவனை கைது செய்யச் சொல்லி, மாட்டிவிட்டு, அதற்கு 2000 ரூபாய் கூலி வாங்கிக்கொண்டு போனவன் நான். நீ பெயரால் மயங்கி, உண்மையான இந்திரஜித்தை அறிய முடியாமல் திண்டாடினதற்காக நானென்ன செய்ய முடியும். உன் மடைத்தனம் உன்னை விடாது. வேஷங்களைப்பற்றியும் மோசங்களைப் பற்றியும் உனக்குப் பாரதமாய் எடுத்துச் சொன்னதெல்லாம் கழுதைக்கு உபதேசம் காதிலே என்றபடி சாம்பலில் செய்த ஆஹுதியாயிற்றே.

உண்மையான இந்திரஜித் இருக்குமிடத்தையும் அந்த நிமிஷத்தில் அவன் என்ன செய்து கொண்டிருக்கிறானென்பதையும் அவன் மூச்சு விடுவது முதற் கொண்டு நான் அறிவேனென்று சொல்ல வில்லையா? அவன் நானாகவே இராவிட்டால் அது எப்படி முடியும். அப்பொழுதாவது என்னைக் கண்டு பிடிக்க உனக்குப் புத்தியில்லையே.

நானிருக்கும் பொழுது அவன் அங்கே நாடவில்லை. ஏன்? என்னிடத்தில் எள்ளளவேனும் குற்றமில்லை. கோவிந்தய்யரின் அபாரமான ஸாமர்த்தியத்தைக் கேள்விப்பட்டு அவர் உன்னிடத்தில் இருப்பதாய்த் தெரிந்து கொண்டு, அவரிடத்தில் தன் வேலை பலிக்காதென்று பயந்து, அவர் இருக்கும் வரையில் உன் வீட்டில் தலை காட்டவில்லையென்று நீயும் உன் மந்திரியும் முடிவு செய்தீர்கள். நானிருக்கும் பொழுது நானே என்னிடத்தில் எப்படி வர முடியும். இந்த ஒரு விஷயத்தைக் கொண்டே உண்மையைக் கண்டு பிடிக்க முடியாத நீ எப்படிப் பிழைக்கப்போகிறாய் அதற்காக இவ்வளவு நீ கஷ்டப்படுவது நியாயமே, உனக்குத் தகுந்த தண்டனையே.

இனி நான் சேஷாசாரியிடத்தில் மறுபடியும் துப்பறியும் வேலைக்குப் போக முடியாது. ஆனால் என்ன நஷ்டம். உன் ஸ்நேகம் எனக்குக் கிடைத்த பிறகு நான் பெரிய வேலைகளை ஆரம்பித்து விட்டேன். முன்போல் அல்ப சங்கதிகளில் என் புத்தி செல்லாது. ஸர்க்கார் பாங்கியில் போட்ட பணத்தைப்பற்றியாவது ஸந்தேஹமுண்டு. உன்னிடத்தில் நான் கொடுத்து வைத்திருக்கும் பணத்திற்கு எல்லையுமில்லை? நினைத்த பொழுது தயாராய்க் கிடைக்கும். இப்பொழுது நான் பெரிய மனிதனாய்விட்டேன். என்

சிலவிற்குப் போதுமான தொகை என்னிடத்திலிருக்கிறது. ஆனால் நானிது வரையில் செய்து வந்த அனேக பாபங்களுக்குப் பிராய்சசித்த ரூபமாக பல தர்மகார்யங்களைச் செய்ய நினைத்திருக்கிறேன். ஸமயம் வரும்பொழுது உன்னிடத்தில் நான் கொடுத்து வைத்திருக்கும் பணத்தை வேண்டிய அளவு வாங்கிக்கொள்ளுகிறேன். இனி அதில் ஒரு பைசாகூட என் சொந்தச் சிலவிற்கு எடுத்துக் கொள்ளப் போவதில்லை.

உனக்கு பண மென்ற வியாதி தேஹத்தில் ஊறி யிருக்கிறது. அதை அடிக்கடி மருந்து கொடுத்து பத்தியம் வைத்து வாட்டினாலொழிய எனக்கு அபாயம் நேரும். ஆகையால் உன் தேஹ சௌக்கியத்தையும் தீர்காயுளையும் பற்றி மற்றவரைக் காட்டிலும் அதிகக் கவலை எனக்குள்ளபடியால் உன் தேஹஸ்திதியைக் கவனித்து, அடிக்கடி அதிகரத்தத்தை வடித்துக் கொண்டு வருவது வைத்தியருடைய கடமை. என்னைப்போல் உனக்கு நண்பனும் உபகாரியும் கிடைப்பதரிது.

நான் உன் குடும்பத்தாரை விசாரித்ததாகச் சொல்லவும். உன் மைத்துனர் என்னை மறக்கவே மாட்டார். ராணியம்மாள் மாத்திரம் என்னிடத்தில் ஏதோ காரணமில்லாமல் வெறுப்புக் காட்டி, என்னைக் கஷ்டப்படுத்தினாள். ஆரம்பம் முதல் என்னிடத்தில் அவளுக்கு ஸந்தேஹமுண்டு. ஸமயம் வாய்க்கும்பொழுது இந்தக் கணக்கைத் தீர்த்து விடுகிறேன்.

இப்படிக்கு உன் பரமோபகாரி. உண்மையான,

இந்திரஜித்.

இதைப்படித்தவுடன் செட்டியாருக்கு மூர்ச்சை போயிற்று. வெகு நேரம் கழித்து கண்ணைத் திறந்து, "அடே ராமா! இனிப் பிரயோஜனமில்லை. நடக்கிறது நடக்கட்டும். வேலியே பயிரை மேய்ந்தால் அப்புறம் வழியென்ன. திருடர்களையும் மோசக்காரர்களையும் கண்டுபிடிப்பதே தொழிலாயுள்ளவர்களை நான் நம்புகிறதாயில்லையா? ஏதோ போராத வேளை கஷ்டமாக வேண்டிய காலம். நமது புரோஹிதரைத் தருவித்து, ஜாதகத்தைப் பார்க்கச் சொல்லி, ஏதாவது இப்பொழுது கிரஹம் போதாமலிருந்தால் அதற்கு வேண்டிய பரிஹாரங்களைச் செய்யச் சொல்லென்றார்.

சின்னவருக்கு ராணியம்மாளிடத்திலிருந்த ஸந்தேஹம் தொலைந்தது.

தங்கச் சுரங்கம்.

சென்னைக்கு வந்தவுடன் செட்டியாருக்கும் சேஷாசாரியருக்கும் கோவிந்தய்யரைப்பற்றி தகரார் நடந்தது. ஐயரே! இந்திரஜித் தென்று

நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டியது. அவனை சிபார்சு செய்தது பிசகென்று செட்டியார் வாதித்தார். தான் இந்திரஜித்தைப் பார்த்ததேயில்லை. செட்டியாரோ பலதடவைகளில் பார்த்ததாய் ஒப்புக்கொள்ளுகிறார். ஆகையால் அவனிடத்தில் மோசம் போனால் அதற்குச் செட்டியாரே பாத்யமென்றும் தன்னிடத்தில் குற்றமில்லையென்றும் சேஷாசாரி மறுத்தார். அவருக்கு கோவிந்தய்யரைப் பத்து வருஷமாய்த் தெரியும். வெகு யோக்யன். ஒரு பைசா கடனில்லை. வீட்டு வாடகை முதலியவைகளைத் தவறாமல் செலுத்துகிறவன். துப்பறிகிறவர்களுக்குள் அவனைப் போன்ற ஸமர்த்தனில்லை. அதுவும் நியாயமே. பாம்பின் கால் பாம்பிற்கே தெரியும். இப்படிக் கொட்டிக் கொட்டி அளந்தும் தொண்டையைக் கிழித்துக் கொண்டும் கார்யமொன்று மில்லை. எப்பொழுதும் போல் செட்டியார் கூச்சல் போடுவதும்; கைநஷ்டப்படுவதுமே மிகுந்தது. மேலும் இந்தப்பாழும் வியாபாரத்தால் இனி அந்த அசாமி சேஷாசாரியிடத்தில் வரமாட்டான். முதல் தரமான வேலைகாரன் போய் விட்டான். அதெல்லாம் செட்டியாருடைய குற்றமே. அவன் யாராயிருந்தாலென்ன, யாரை ஏமாற்றினாலென்ன, சேஷாசாரி ஸம்மந்தப்பட்ட வரையில் வெகு நம்பிக்கையாய்த் திறமையுடன் வேலை பார்த்து வந்தான். அப்படிப்பட்டவனைச் செட்டியாருக்கு ஏற்படுத்திக் கொடுத்தும் திருப்தியில்லாமல் முணு முணுத்தால் அதற்கு யார் என்ன செய்ய முடியும். இனி அந்த மாயாவியை அவரே பிடித்துக் கொள்ளட்டும்.

"அப்படியே செய்கிறேனா இல்லையா பார். இனி துப்பறியும் நிபுணர்களை நம்பி, மோசம் போவதில்லை. அந்தப் பயல்கள் பலே திருடர்கள். தொழிலாய்த் திருடுகிறவரிடத்தில் லஞ்சம் அடிக்கிறவர்கள். நியாயம் அநியாயம், பாபம் புண்யம், பெருந்தன்மை, அவர்களைக் காட்டிலும் பன்றிக் குட்டிகளிடத்தில் அதிகமாய்க் காணலா" மென்றார் செட்டியார்.

"ஒரு தடவையாவது போலீஸாரிடத்தில் இதை விட்டுப்பார்ப்போமே" யென்றார் சின்னவர். ஏதாவது சொல்லித் தொலைக்க வேண்டுமல்லவா? வாங்கிக் கொட்டிக் கொள்ளுகிற காசுக்கு ஒத்தாசையாய் நாலு வார்த்தையாவது சொல்ல வேண்டாமா?

பெரியவர் தலையசைத்து, "அது கெட்டது கழுதை. அந்த அசாமிகளைக் கண்டாலேயே எனக்கு வெறுப்பாயிருக்கிறது. ஏதோ எனக்கு அதிர்ஷ்ட மிருக்கிற வரையில் கொடுக்கும் தெய்வம் கொல்லை வழியாய்க் கொடுக்கும். என் பணத்திற்குப் பிறந்தவனில்லை. வீண் சிலவாகிற காலம் வந்தால் யார் தடுக்க முடியும், நமக்கு வியாதி, ஆபத்து, முதலியவை வரும்பொழு

தெல்லாம் நாம் என்ன செய்து விட்டோம். ஒரே வியாதி அடுத்தடுத்து வந்தால் அதன் மேல் கோபித்து கொண்டு உயிரை விடுவதுண்டா? வேளையும் பொழுதும் வரும்பொழுது தானே அந்த மாயாவி வந்து மாட்டிக் கொள்ளுகிறான். வெகு ஸுலபமாகவே முடியும். அது வரையில் தலைகீழாக விழுந்தாலும் பலிக்காது. இனி எனக்குத் தெரிந்ததே போதும். பட்டுப்பட்டு வேண்டிய அநுபவமாயிருக்கிறது. முன் போல் நான் ஏமாறுகிறவனல்ல. அவனுக்குத் தோன்றின யுக்திகள் வரவரக் குறைந்து கொண்டேயிருக்குமல்லவா? என் புத்தியும் அனுபவமும் திறமையும் வரவர அதிகரித்துக் கொண்டேயிருக்கும். இவ்விரண்டும் எப்பொழுது ஸமமாகிறதோ அப்பொழுது அவனுடைய ஆட்டம் முடியாது. அதற்குப் பிறகு அவன் சக்தி குறைந்து என் சக்தி மேல் காடும்பொழுது அவனை ஒரே அமுக்காய் அமுக்கிக் கட்டி உருட்டி விடுவேன். ஒருவரையும் நம்பக் கூடாதென்பது உண்மையே. ஆனால் எல்லோரையும் பற்றி ஸந்தேஹப் படுவதும் பிசகு. நல்லது கெட்டது, அன்பு வெருப்பு யாதொரு எண்ணமும் பிறரைப் பற்றி நமக்கு முன்னமேயே தோன்றக்கூடாது. சில விஷயங்களை வைத்துக் கொண்டு நாமாகவே முடிவு செய்து விடக்கூடாது. ஜயிப்பதற்கு இதே மார்க்கம். இனி வேறு வழியாய் வேலை செய்கிறேனென்று செட்டியார் உறுதிமொழி சொல்லி விட்டு, தான் சில காலத்துக்கு முன் மைசூர் தேசத்தில் மலைச்சாரலில் வாங்கின ஓர் அழகிய கிராமத்துக்கு போய் விட்டார்.

ஒரு நாள் காலையில் அவர் சின்னவரை அழைத்து, "ஏதேது இந்தப் பயல் நாளாக நாளாக கழுவாய்ப் பிடுங்கித்தின்கிறான். புலி மனிதனுடைய ரத்தத்தைக் குடித்துப் பிறகு அதே நோக்கமாய் பைத்தியங் கொண்டது போலும். தாகத்தை தீர்ப்பதற்கு உப்பு நீரைக் குடித்தது போலும். உருசி கண்ட பூனை உரியைத் தாவுமென்று அவன் ஒவ்வொரு தடவையிலும் வரவர அதிகப் பேராசை யுடையவனாகிறான். மறுபடியும் ஏதாவது ஒரு புது வேஷம் போட்டுக் கொண்டு இங்கே ஸமீபத்தில் வருவானென்று தோன்றுகிறது. என் வார்த்தை பலிக்கிறதா இல்லையா பார்"ரென்றார்.

அப்படியே மூன்று வாரங்களுக்குப் பிறகு டில்லியிலிருந்து ஒரு கடிதம் செட்டியாருக்கு வந்தது. அதைப் பிரித்துப் பார்க்கையில் "இவ்வளவு நெருங்கி இவ்வளவு தடவை நாமிருவரும் பழகினபிறகு ஒருவருக்கொருவர் உபசாரஞ் சொல்வதும் வக்கணையாய் எழுதுவதும் அனுவச்யம். ஆகையால் இதைக்கண்டவுடன் தாமதிக்காமல் நான் உன்னிடத்திலிருந்து பல தடவைகளில் வசூல் செய்திருக்கும் தொகைகளை விவரமாய்க் கண்

டெழுதவும். என் கணக்குக் குறிப்பு எங்கேயோ தவறிவிட்டது. இப்பொழுது ஸர்க்காருக்கு வருமான வரி செலுத்தவேண்டியிருப்பதால், என் வரும்படியைச் சரியாகக் கணக்கிட வேண்டியிருக்கிறது. உன்னால்நான் எவ்வளவு அடைந்திருக்கிறேனென்பதை மறைக்கக்கூடாது. நீ செய்தஉபகாரத்தை நான் எங்கெங்கும் கொண்டாட வேண்டாமா? இதற்குநீ பதில் அனுப்புவதற்கு என் உண்மையான விலாஸத்தை இப்பொழுது எழுதுவது உசிதமல்ல. ஆகையால்சுதேசமித்திரன் பத்திரிகையில் தேவைப்பத்தியில் மடையனென்று கையொப்பமிட்டு, ஓர் விளம்பரத்தில் நான் சொன்னதைக் கண்டு விடுவாய். இதனால் ஸர்க்காருக்கும் உன் உயிர்த்தோழனுக்கும் அதாவது எனக்கும் பெருத்த உபகாரஞ் செய்ததாகும்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள
தர்ம கர்த்தா,
இந்திரஜித்.

செட்டியார் அந்தக் காயிதத்தைப்படித்து, கீழே வைத்துவிட்டு, நான் அப்பொழுதே சொல்லவில்லையா? இன்னும் ஒரு வாரத்திற்குள் அந்த மாரீசனை இங்கே பார்க்கலாம். ஏதோ வெகு தூரத்திலிருப்பதாய் நமக்குப் பாசாங்கு செய்கிறான். ஆனால் இது இன்னுமொரு கொள்ளைக்கு அடி போடுவதாகவும், ஆனால் போன தடவை அவன் இங்கே இருந்தபொழுது திருடர்களையும் வேஷங்களையும் அவைகளைக் கலைத்துப் பிடிப்பதையும்பற்றி அனேக விஷயங்கள் எனக்குச் சொன்னதை நான் மறக்கவில்லை. இந்தத் தடவை அவனுக்கும் எனக்கும் பெரிய யுத்தம் நடக்கப்போகிறது. பழைய கணக்குகளைத் தீர்த்து விடுகிறே"னென்றார்.

அடுத்த சனிக்கிழமை யன்று செட்டியார்கள் எங்கேயோ உலாவப் போய்த் திரும்பி வரும்பொழுது ஒரு கனவான் எதிரில் வரக்கண்டார்கள். ஸாதாரணமான உடை, வெகு தூரம் பிரயாணஞ் செய்தவரைப்போல் தோன்றிற்று. நடு வயது குட்டையுமில்லை. கழுத்தில் ஓர் தோல் பை நாடாவில் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது. எங்களைக் கண்டவுடன் நமஸ்காரம் செட்டியாரவாள் என்றான்.

அவனிடத்தில் ஏதோ ஸந்தேஹமுண்டாய் பெரியவர் உடனே நமஸ்காரமென்று கையைத் தூக்கி, வந்தனஞ் செய்து விட்டுத்திரும்பிப்பாராமல் போய்க்கொண்டிருந்தார்.

"சின்னவர் சற்று தூரம் போனவுடன் "இவன் இந்திரஜித்தல்ல" வென்று உறுதியாய்ச் சொல்லலாம். அவனே நம்மிடத்தில் வந்து பேசுவான். இந்திரஜித்தோ அப்படிச் செய்வதில்லை. தானே வந்து உறுவில்

நமது பரிசயத்தை இதுவரையில் செய்ததுமில்லை. செய்வித்ததுமில்லை. நாம் வலுவில் அவனைத் தேடிப்போய் நமது கார்யம் ஆகவேண்டி பரிசயம் செய்த பிறகே அவன் நம்மை லக்ஷியஞ் செய்து பேசுவா"னென்றார் சின்னவர்.

உடனே பெரியவர் கோபங்கொண்டு "இந்தா நான் அப்பொழுதே சொன்னேனே. எதை வேண்டாமென்றேனோ அதையே சொல்லி வாய் மூடுவதற்கு முன் செய்ய ஆரம்பித்து விட்டாயே. மனதில் யாரைப்பற்றியும் முன்னதாகவே ஒரு எண்ணத்தை வருவித்துக் கொள்ளக்கூடாது. இந்தப் பேர்வழி ஓர் வேளை இந்திரஜித்தாயிருக்கலாம். இந்த மூலை முடுக்குக் கிராமத்தில் வேற்று மனிதர் யார் வரப்போகிறார்கள். இவன் இந்திரஜித் அல்லவென்றால் இவனுக்கு இங்கே என்ன வேலை. ஒரு தம்படி இங்கே கிடைப்பதற்கு வழியுண்டா? என்னிடத்தில் அடித்துக்கொண்டு போகலாமென்பதைத் தவிரவேறென்ன? இருக்கட்டும், விசாரிப்போ"மென்றார்.

அப்படியே அந்தக் கிராமத்திலுள்ள சத்திரத்திற்குச் சென்று, அதின் மணியக்காரனை "யாராவது வேற்று மனிதர் வந்திருக்கிறார்களா?"வென்று கேட்டார்கள். "ஆம் நேற்று இராத்திரித்தான் வந்தார். பட்டணமாம் பெரிய வித்வானாம் இங்கே சில நாள் தங்கியிருக்கப்போகிறாராம். அவருடைய மனைவியும் வந்திருக்கிறா"ளென்றார்.

செட்டியார் "எப்படி எப்படி! மனைவியா! பால்யமா! பார்வைக்கு எப்படியிருக்கிறாள்? ராமா! சங்கதியைக் கவனித்துக் கொள்"ளென்றார்.

மணியக்காரன் "அவ்வளவு பால்யமென்று சொல்லக்கூடாது. ஆனாலும் வெகு லக்ஷணமான அம்மாள் நல்ல மாதிரி. எப்பொழுதும் சிரித்தமுகம் வந்தது முதல் என் குழந்தைகளிடத்தில் உயிராயிருக்கிறாள். அவர்களுக்கு ஈச்வரன் இன்னும் ஸந்தானத்தை அநுக்ரஹம் பண்ணவில்லை. ஐயோ பாவ"மென்றார்.

செட்டியார்கள் அங்கிருந்து தங்களுடைய பங்களாவுக்கு வரும் வழியில், ராமா! நான் சொன்னது சொன்னபடி நடக்கிறதல்லவா? இந்தத் தடவை ஆசாமி வேறு ஏற்பாட்டின் மேல் வந்திருக்கிறான். தன் கூட்டாளியை இதுவரையில் நாலைந்து விதமாய் வேஷம் மாற்றிக் காட்டினான். இப்பொழுது பால்யத்திலிருந்து சற்று வயதான பெண் பிள்ளையாய்க் காட்டுகிறான். அந்தப் பயலுக்கு என்ன புத்தி ஆனாலும் வரவர எனக்கும் அவனுடைய தந்திரங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் தெரிகின்றன அல்லவா?"வென்று தன் ஸாமர்த்தியத்தை நினைத்துத் தானே சிரித்துக் கொண்டார்.

மறுநாள், செட்டியார்கள் மலைப்பக்கத்தில் உலாவப்போகையில் அந்த வேற்று மனிதன் முன் போல் மலைப்பாறைகளை நுட்பமாய்க் கவனித்துப் பார்த்துக்கொண்டும் சிறு சுத்தியால் அவைகளைத் தட்டிக்கொண்டு மிருந்தான். பெரிய செட்டியார் அதைக்கண்டு சின்னவருக்கு ஜாடைசெய்து, ரஹஸ்யமாய் "பார்த்தாயா? இந்தத்தடவை வேறு வேஷம். பூகற்ப சாஸ்திரி ஸாதாரண மல்ல. ஜாக்கிரதை' யென்றார். சின்னவர் உடனே அவனைக் காலோடு தலை உற்றுப் பார்த்தார். பலதடவை அந்த மாயாவின் வேஷங்களைப் பார்த்துப் பார்த்து, அவை ஒட்டைப்பாடமானதால் மூக்கு தலைமயிர் தாடிமாத்திரம் மாறியிருந்த தென்றும் கண்களும் அங்கங்களின் அமைப்பும் ஒரேவித மென்றும் நிச்சயித்தார். சுமார் 40க்குக் குறையாமல் 50க்கு மேற்படாமல் நடுவயதுள்ளவனைப் போல் அந்தத் தடவை அவதார மெடுத்திருக்கிறபடியால் முன்னைவிட சற்று இட்டைநாடியாய்த் தோன்றினார். நெற்றியில் பல கோடுகளும் மடிப்புகளும் இருந்தன. எப்படியோ அவன் இந்திரஜித் தென்பதற்குப் பல காரணங்கள் கிடைத்தன வென்று இருவரும் அகமகிழ்ந்தார்கள்.

அவனுடைய மனைவி பக்கத்திலுள்ள ஒரு கற்பாறையின் மேல் உட்கார்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். இது ஒரு நல்ல யுக்தி தான். இது வரையில் வந்த பெண் வேஷக்காரிகள் ஒருவரும் புஸ்தகமும் கையுமாய்வந்த தில்லை. எவ்வளவு வேஷங்கள் எடுத்தாலும் ஒரு அல்ப விஷயத்திலாவது மோசம் போகாமல் ஒவ்வொன்றையும் கவனித்து, அது வேஷமல்ல உண்மையே யென்று எல்லோரும் பிரமாணஞ் செய்யும் படி அவ்விருவரும் வேலை செய்து வந்தார்கள். கேவலம் போக்கிரிகளல்ல மஹா புத்திசாலிகள். நினைத்த ரூபங்களை எடுப்பதிலும் தோன்றுவதிலும் மறைவதிலும் மாரீசன் காலநேமி முதலிய மாயாவிகளை மிஞ்சினவர்கள்.

செட்டியார் தன் கிராமத்திற்குள் வேற்று மனிதர் உத்திரவில்லாமல் வந்தால் அடங்காக் கோபங்கொண்டு தாறுமாறாய்ப் பேசி எல்லை வரையில் ஆளை விட்டு, தள்ளச் சொல்லுவார். அவரை ஏனென்று கேட்கிறவர் யார். ஆனால் அன்றைக்கு ஏதோ ஒரு கார்யத்தை உத்தேசித்து, அவர் அங்கு வந்த வேற்று மனிதரிடத்தில் வெகு மரியாதையுடன் நடந்து கொண்டார். தானே அந்த அம்மாளிடத்திற்குப் போய் வெகு நாளாய்ப் பரிசய முள்ளவரைப் போல்," என்ன சௌக்கியமா, என்ன காற்று; வெகு ஸுகமாய் அடிக்கிறது. புஷ்பங்களின் வாடை அதின் வழியாய் வருவது எவ்வளவு இன்பமாயிருக்கிறது. சத்திரத்தில் ஜாகையோ" வென்றார்.

அந்தப் பெண் தலையை நிமிர்ந்து அவரைப்பார்த்து வணங்கி, அழகான சிரிப்புடன் "ஆம் என் கணவன் இங்கே சாஸ்திர ஸம்பந்தமான பரீக்ஷ

செய்வதற்காக வந்திருக்கிறார். பூமியின் அமைப்பைப்பற்றின சாஸ்திரத்தில் மிகுந்த பயிற்சியுள்ளவர். இந்தப்புறமெல்லாம் யாரோ வெள்ளையன் செட்டியாருக்குச் சொந்தமாம். அவர் வெகு கோபிஷ்டராம். வேற்று மனிதர்களைக் கண்டவுடன் முன்பின் விசாரிக்காமல் வேட்டை நாயைப்போல் விழுந்து பிடுங்குவாராம். எனக்கென்ன தெரியும். சத்திரத்தில் யாரோ சொல்லிக் கொண்டார்கள்" ளென்றான்.

செட்டியார் தனக்குள் "அந்தச் சிரிப்பு எனக்கு வெகு நாளாய்த் தெரியுமே. எவ்வளவோ தடவை என்னைக் கூட்டிக்கெடுத்த சிரிப்பல்லவா? இந்த விசை அது பலிக்காது. அந்த அம்மன் மலையேறிவிட்டாள். வேட்டைநாயா எப்பொழுதும் அந்த வாய்த்துடுக்கும் கேலியும்போவதில்லையே நானென்று நன்றாய்த் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே இப்படிச் சொல்லியிருக்கிறாள்." பிறகு அவளைப்பார்த்து, "இதென்ன அக்கிரமம். யார் உனக்கு இப்படி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கொடுத்தது. வெள்ளையன் செட்டியார் என்பவர் நானே. என்னைப் பார்த்தால் வேட்டைநாய் மாதிரி இருக்கிறதோ. உன் கணவன் சாஸ்திரப் பரிசயம் உள்ளவரானால் அவரை நான் எவ்வளவோ கொண்டாடிப் பூஜிப்பேன்." தடையென்ன பூலே கர்ப சாஸ்த்திரத்திலேயே நான் இந்த ஸ்திதிக்கு வந்திருக்கிறேன். தென்னாப்பிரிக்காவில் வயிரச்சுரங்கங்களை வெட்டிக் கண்டு பிடிக்காவிட்டால் எனக்கு மொட்டைத் தலையையும் தொள்ளைக்காதையும் விட வேறு ஆஸ்தி யேது? சாஸ்திர நிபுண பண்டிதர்களுக்கு நமஸ்கார மென்று பெருமையுடன் தன் மார்பைக் குனித்து பார்த்துக் கொண்டார்.

அதைக் கேட்ட அந்தப் பெண் பயந்து, முகம் வெளுத்து, தழதழத்து, "ஐயா என்னமோ சொல்லி விட்டேனே. செட்டியாரவாள் மன்னிக்கவேண்டும். ஊரில் பேசிக்கொண்டிருந்த அக்கப்போரை சொன்னேனே தவிர உங்களைப் பற்றி எனக்கு என்ன தெரியும். தெரியாத விஷயத்தைப் பற்றிப் பேசலாமா? ஏதோ பதட்டமாய் வாய்தவறிச் சொல்லி விட்டேன்" என்றாள்.

செட்டியார் தனக்குள் "அடட அப்பா உனக்கா தெரியாது. பலே கைகாரியல்லவா; வேண்டுமென்று சொன்னாயென்பதில் ஸந்தேஹமென்ன. பிறகு அவளைப்பார்த்து அது கிடக்கட்டும். என்ன தலைமூழ்கிப் போயிற்று இந்த மலைகளில் பல அபூர்வமான மரங்களும் செடிகளும் மூலிகைகளும் இருக்கின்றன அவைகளைச்சரியாய் அறிந்து உபயோகிக்கக்கூடியவர்கள் இங்கேவருவதில் எனக்கு மிகுந்த ஸந்தோஷம். ஆனால் ஒரு வேலையுமில்லாமல் பொழுது போக்க வழி தெரியாமல் ஊரூராய்த் திரிந்து கொண்டு பிறருடைய வேலையைக் கெடுத்து தோட்டங்களையும் துறவுகளையும் பாழாக்கி இலையைக் கத்திரிப்பதும் புஷ்பங்களைப் பறிப்பதும் கொடிகளை அறுப்பதும்

இங்குள்ள பக்ஷிகளையும் மான்களையும் மிரண்டோடச் செய்வதும் எனக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. அப்படிப்பட்டவர்களை வெகு கண்டிப்பாகவே நடத்த வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் ஒரு க்ஷணம் கூட நமக்கு ஓய்வில்லாமல் செய்து, அதென்ன இதென்ன, அதைக்காட்டு இதைக்காட்டு. இங்கேயா அங்கேயா நில்லென்று படுத்தாத பாடெல்லாம் படுத்திவிடுகிறார்கள். நானும் அவர்களைப்போல் வேலையற்றவனா யிங்கே இயற்கையாய் அமைந்திருக்கும் காட்சிகளைப் பார்த்து அனுபவிக்க வேணுமென்று இவ்விடத்தை வாங்கி வைத்திருக்கிறேன். குடுக்கைக் கரைப்பைப்போல் ஓயாமல் அலைந்துகொண்டு ஒரு வேலையுமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் வம்புக்காரர்களுக்காக வாங்கி தர்மஸத்திரமாய் விடவில்லை. ஆனாலும் என் சௌகரியத்திற்குக் கெடுதியில்லாமல் ஏதோ ஒரு காரிய நிமித்தமாய் இங்கே வரும் பண்டிதர்களுக்கும் கனவான்களுக்கும் இது எப்போதும் சொந்த வீட்டைப்போல் ஆகுமென்றார்.

அந்தப் பெண் அவரை உற்றுப்பார்த்து "அப்படியா உங்களுடைய நோக்கம் மெச்சத்தக்கதே. ஆனால் இங்கே வருகிறவர்களை வடிக்கட்டிப் பார்த்து விடுவது ஸாத்தியமா மேலும் நாம் நமது என்ற எண்ணமே மனிதனைக்கெடுக்குமென்று இதோ தாயுமானவர் சொல்லுகிறார். "யானெனும் அகந்தை தான் எள்ளளவும் மாறவில்லை, உன்னைச் சிங்காரித்து உன்னழகைப் பாராமல் என்னைச் சிங்காரித்திருந்தேன் பராபரமே" யென்று அவர் முறையிடுவதைப் படித்திருப்பீர்களே" என்றாள்.

செட்டியார் "படிக்கவா; நன்றாய் இருக்கிறது ஒரு நாளைக்கு எவ்வளவோ தடவைப்படித்துப் படித்து நெட்டுருவாயிற்று. பராபரக்கண்ணியென்றால் எனக்கு உயிர் தாயுமானவரே என்குல தெய்வம். அடாடா! அவர் தாயுமானவர் மாத்திரமா? தகப்பனுமானவர். தம்பியுமானவரென்றார். அந்தப்புஸ்தகத்தை வாங்கி, ஏடுகளைப் புரட்டி "ஆகா! பிரஹ்மானந்தம் வெள்ளமாய் ஓடுகிறது. அமிருத மாரிபொழிகிற" தென்றார். ஆனால் அவருடைய கண்களோ அந்த அம்மாளைக் கவனித்துக்கொண்டிருந்தனவே யொழிய புஸ்தகத்திலில்லை. செட்டியாருக்கு வட்டிக் கணக்கு சமாசாரப் பத்திரிகை தபால் போக்கு வரத்து, கம்பெனிகளின் விதிகள் விளம்பரங்கள் முதலியவைகளே பஞ்சகாவ்யம், 18 புராணம், நான்கு வேதம், வேதாந்தம், சித்தாந்தம், யாவுமாகும் அவர் பிறந்தது முதல் அது வரையில் தாயுமானவரென்றால் இன்னாரென்று கேள்விப்பட்டதுமில்லை. இப்பொழுது அவருடைய இயற்கையான குணம் மேலிட்டது. எவ்வளவு தடவை மோசம் போனாலும் மறுபடியும் அவ்வளவு தடவை மோசம் போகத் தயாராயிருப்பவர் ஒரே பேர்வழி. பலவிதமாய் வேஷம்

பூண்டு தன்னை ஏமாற்றி வருகிறானென்று நன்றாய்த் தெரிந்திருக்க, மறுபடியும் அவனே வேறு வேஷம் எடுத்து வந்தவுடன் முன்நடந்த அதையெல்லாம் மறந்து விட்டு, முன் செய்தப் பிரதிக்ஞையையும் எச்சரிக்கையையும் பறக்கவிட்டு, புத்தியைத் தாரைவார்த்து, அவளுக்கு அடிமையாய் அவள் ஆட்டினபடி யெல்லாம் ஆட ஆரம்பித்தார். அவள் போக்கிரி யென்றும் தனக்கு விரோதி யென்றும் தெரிந்திருந்தும் அவள் போட்ட சுக்குப் பொடியால் மயங்கி, நீயே சரண மென்று விழுந்தார். வியாபாரத்தில் என்ன திறமை. என்னயுக்தி. யாராயிருந்தாலும் அவரை ஏமாற்ற முடியுமா? நினைத்தது நினைத்தபடியே செய்து முடிக்கவல்லவர் ஒரு அல்பப் பெண் பிள்ளையின் கண்ணடிக்குத் தப்ப முடியவில்லை.

அதற்குள் அவளுடைய கணவன் அங்கே வந்து சேர்ந்து எல்லோரும் கலந்து பேசினார்கள். அவருடைய பெயர் விச்வநாத சாஸ்திரிகள். அலகாபாத்தில் ஒரு ஸர்வகலாசாலையில் பூமிதத்வசாஸ்திர உபன்யாஸகர் தெற்குச் சீமையிலிருந்து அங்கே போனவர். மலைகளில் உள்ள உலோஹ வர்க்கங்களைக் கண்டுபிடிப்பதில் சில புதுமுறைகளை வெளிப்படுத்துவதற்காக அங்கங்கே சென்று பரீக்ஷித்து வருகிறார். இந்த மலையில் வெகு விசித்திரமான விஷயங்களும் முக்கியமான அமைப்புகளும் இருக்கின்றன. தாதுக்கள் கனிகள் சுரங்கங்கள் பலவித கற்பாறைகள் இன்னும் பூகோள தத்வசாஸ்திரத்தைப் பற்றி அவருக்குத் தெரிந்தது வேறு யாருக்கும் தெரியாது. செட்டியார்களை அழைத்துக் கொண்டு அங்கங்கே சென்று, மலைப் பாறைகளில் ஊடுருவிச் சென்றிருக்கும் தாதுக்களின் ஓட்டத்தைக் கவனிக்கச் செய்து, அங்கங்கே கிடைக்கும் உலோஹங்களையும் அவைகளின் விஸ்தீரணத்தையும் ஆழத்தையும் மதிப்பையும் பற்றி வெகு நேரம் பேசினார்.

செட்டியார் அதை வெகு சிரத்தையுடனும் பக்தியுடனும் கவனித்துக் கேட்டு, மனதில் பதியவைத்துக் கொள்ளுகிறவரைப்போல் அபிநயித்தார் ஆனால் வந்திருக்கும் பேர்வழி மாயாவி யென்றும் இந்திரஜாலக னென்றும் தனக்குத் தெரியுமென்பதைக் கொஞ்சமேனும் காட்டிக் கொள்ளாமல் அந்தத் தடவை எந்த வழியாய் அவன் வேலை செய்கிறான் பார்ப்போமென்று வெகு ஜாக்கிரதையாய் கவனித்துக் கொண்டு வந்தார். கொஞ்சமாவது ஸந்தேஹப்பட்டதாய்த் தெரிந்தால் உடனே மாயமாய், முன்போல் மறைந்து விடுவான், தன்னை மிரட்டுவதற்காகவே இவ்வளவுகலையும் கற்றுவந்தானென்று செட்டியாருக்குத் தெரியாதா? அவன் எதைச் சொன்னாலும் வேதவாக்யம் போல் நம்பினதாய்க் காட்டினார்.

அன்று நெடுநேரம் வரையில் அங்கு மிங்கும் திரிந்து கொண்டிருந்தார்கள், செட்டியார் அவர்களை அழைத்துக்கொண்டு போய் பார்க்கவேண்டிய இடங்களை யெல்லாம் காட்டினார். சாஸ்திரியிடத்தில் வெகு மரியாதையுடன் நடந்து கொண்டார். அந்த அம்மாளிடத்திலோ அவருக்கு உண்மையான மரியாதையும் கவலையும் விசுவாஸமும் அவரை அறியாமலேயே உண்டாயின. அவர்கள் இறங்கியிருக்கும் சத்திரத்திற்கு ஸகல சாமான்களையும் ஆஸனங்களையும் கொடுத்தனுப்பி, அவர்களுக்கு ராஜோபசாரஞ் செய்யும்படி மணியக்காரனுக்கு உத்திரவு செய்து தன் பங்களாவிலிருந்து நான்கு வேலைக்காரர்களையும் வண்டியையும் அனுப்பினார். பங்களாவிற்கும் சத்திரத்திற்கும் அடிக்கடி போக்கு வரத்து ஏற்பட்டு, வெகு தமாஷாய் காலங்கழிந்தது. பெரியவர் மைத்துனனைத் தனியே அழைத்து, நாம் இதுவரையில் மோசம் போனது போல் இப்பொழுதும் மோசம் போகக் கூடாது. இந்திரஜித் நம்முடனிருந்த பொழுது அவனைப் பிடிக்கவில்லை. வேறு யாரையோ அவனென்று நினைத்துப் பிடித்து அவமானப்பட்டோம். ஆசையால் ஒருவரைப் பற்றி, முன்னாடியே நல்லதோ கெட்டதோ நினைக்கக் கூடாது. இவன் இந்திரஜித்தென்றும் முடிவுசெய்யக் கூடாது இந்திரஜித்தல்ல வென்றும் முடிவு செய்யக் கூடாது. எப்படி யிருந்தாலும் நாம் தகுந்தபடி நடந்துகொள்ளத் தயாராயிருக்க வேண்டும், அவசியமானால் ஒரு போலீஸ்காரனைத் தருவித்து வைத்துக்கொள்வோ மென்றார்.

சின்னவர் "முதல்தரமான யோசனை. ஆனாலும் எனக்கு ஒரு ஸந்தேஹம் தோன்றுகிறது. இந்தத் தடவை இவர்கள் நம்மை எவ்விதமாய் மோசஞ் செய்யப் பார்க்கிறார்கள். குறி சொல்லுவதா? வைர வியாபாரமா? ஜமீன் விற்பனையா? வயிரஞ் செய்வதா? அல்லது கூட்டுக் கம்பெனியா? தெரியவில்லை" யென்றார்.

பெரியவர் வெகு கடுமையான பார்வையுடன் "நீ என்ன இவ்வளவு பதட்டமாயிருக்கிறாய். இப்பொழுது தான் மேளங்கட்டித் திரைவிட்டிருக்கிறது. அதற்குள் என்ன தெரியும் இனி மேலல்லவா ஆட்டக்காரர்கள் வேஷம் பூண்டு வரப்போகிறார்கள். பார்ப்போம் என்ன கிராமமோ கம்பெனியோ தர்காஸ்தோ தானே மலிந்தால் கடைத்தெருவிற்கு வருகிறது. மேலும் அவர்களுடைய உபாயங்கள் கடைசிவரையில் நமக்கு வெளிப்படுகிறதில்லை. இலவம் காயைப் போல் படீரென்று வெடித்து, பஞ்சாய்ப் பறந்து போய்விடுகிறது. நமது கையில் வெறும் கூடுமாத்திரம் மிஞ்சுகிறது. கோவிந்தஐயரைப்போல் இனிமேல் யோக்கியனும் ஸாதுவும் ஸமர்த்தனும்பதி

நான்கு லோகங்களிலும் உண்டா" வென்று நாம் வாய் ஓயாமல் புகழ்ந்தோமல்லவா? முடிவில் நாம் விழித்துக்கொண்டிருக்கும் பொழுதே கண்ணைப் பிடுங்கிக் கொண்டுபோனது போல் என்னையே 2000 ரூபாய் கொடுக்கச் செய்து கைநீட்டி வாங்கி, மாயமாய் மறைந்த பிறகல்லவா அவனுடைய தந்திரம் வெளியாயிற்று. அடே அப்பா! வாத்தியாரையும் அவருடைய மனைவியையும் போல் இனி சூதும் வாதும் அறியாத பரம ஸாதுக்களுமுண்டோ, பாக்கியத்தின் பெட்டியிலிருந்து இரண்டு கற்களைத் திருடி அவைகளை நம்மிடத்திலேயே ஏராளமான தொகைக்கு விற்று நாமம் போட்ட பிறகல்லவா நமக்குத் தெரிந்தது. அது வரையில் கொள்ளை லாபமுள்ள பேரத்தை அடித்துக் கொண்டு விட்டோமென்று தொடை தட்டிக் கொண்டிருந்தோமே. நமக்கு அவன் இந்த ஸமயத்தில் என்ன வேலை செய்ய நினைத்திருக்கிறானென்று தெரியாத காரணத்தை வைத்துக் கொண்டு அவன் இந்திரஜித்தல்லவென்றும் முடிவு செய்யமாட்டேன். அவனுடைய உபாயங்களுக்கோ எல்லை இல்லை; அவை கடைசி க்ஷணத்தில் வெடித்து, என் தலையில் விழுகிறவரையில் இன்னதென்று தெரியாமல் ஒளித்து வருகிறான். ஆகையால் எப்பொழுதும் எக்காலத்திலும் எங்கேயும் அவன் இருக்கிறானென்றே எண்ணி நான் நடப்பேன். இன்னுமொரு சங்கதி. இது வெகு முக்கியமானது. இந்தத் தடவை அவன் இன்ன விதமாய் என்னை ஏமாற்ற நினைத்திருக்கிறானென்று நான் ஏற்கெனவே கண்டு விட்டேன்; நான் சொல்வதை தலைப்பில் முடிந்துகொள். அவன் பூ கர்ப்ப சாஸ்திர நிபுணனென்றும் தாதுக்களையும் லோஹச் சுரங்கங்களையும் பரிசோதிப்பதில் நிபுணனென்றும் சொல்லிக் கொள்ளுகிறானல்லவா? நல்லது இன்னும் சில நாள்களுக்குள் அவன் என்னிடத்தில் வந்து, "உமது கிராமத்தில் பெரிய நிலக்கரிச் சுரங்கம் ஓரிடத்தில் இருக்கிறது. அதைக் கண்டு பிடித்துக் கொடுத்தால் என்ன தருவீரென்பான். அல்லது அதோ விருக்கும் மலையில் சில இடங்களில் பச்சை ரத்தினங்களை மறைத்து வைத்து அதை அகஸ்மாத்தாய் கண்டு பிடித்தது போல் காட்டி, அந்தக் கனிகளை கூட்டாய் வேலை செய்வோமென்பான்- அல்லது உலோஹங்கள் ரத்தினங்கள் என்ற வகையில் எப்படியாவது என்னை மடக்கப் பார்ப்பான். அவனுடைய முக ஜாடையை கவனித்தால் இது நன்றாய் விளங்குமே. ஆனால் இந்தத் தடவை அவனுக்கு ஒரு காசுகூடக் கொடுப்பதில்லை. அவனை இங்கிருந்து, தப்பி ஓட விடுவதுமில்லை" யென்று தொடை தட்டினார்.

இரத்தினமாளிகை.

(முன் தொடர்ச்சி)

இவருடைய சாதுர்யமான பேச்சைக்கேட்க வேண்டி ரஞ்சிதம் ஹார்மோனியம் வாசிப்பதை நிறுத்தி விட்டாள்.

ரங்கநாதம் சொல்லுகிறார்:—

"நமது வாழ்வுக்குப் பணம் அவசியம்தானா?" என்று கேட்டார்.

"இந்த உலகில் எந்தவகையிலும் மேன்மையாயிருக்க வேண்டுமாயின் பணம் அவசியம் தேவை. எல்லா நன்மைக்கும் அது முக்கியமானது தான்" என்றார்.

இப்படி இருவர் பேசிக்கொண்டிருக்கும் போது ரங்கநாத முதலியாரைப் பார்த்து ரஞ்சிதம் சொல்லுகிறாள்:—

"எவ்வளவு தான் தெரிந்ததாக ஒருவர் நினைத்திருந்தாலும், கற்றது கைமண்ணளவு என்று சொல்வது வழக்கம்" என்று சொன்னாள்;

இரங்கநாதம் கர்ப்பநாயகத்தின் அபிப்பிராயத்தைக் கேட்டார்.

"உண்மை தான், எல்லாம் தெரிந்ததாக வீண்பெருமை பண்ணிக் கொள்ளக் கூடாது.

எல்லோரும் பேசுவதை நிறுத்தி விட்டார்கள். அன்றிரவு இருவரும் அங்கேயே தங்கினார்கள். மறுநாட்காலையில் காப்பி சாப்பிட்டு விடை பெற்றுச் சென்றார்கள்.

பட்டணத்துக்கு வந்ததும் ரங்கநாதம் கர்ப்பநாயகத்தின் கையைப் பிடித்துக்குலுக்கி தனபதி முதலியார் "ஆப்தநண்பர்" என்று சொன்னார்.

"நான் நண்பனாக மாத்திரம் இருக்கவில்லை. இன்னும் ஒருபடி அதிகமாகவும் இருக்க முடியும் என்று நினைக்கிறேன்" என்றார்.

"எப்படியிருந்தாலும் பிறருக்கு பாதகம் ஏற்படாமலிருக்க வேண்டும்" என்றார்.

ஏழாம் அத்தியாயம்.

மனோரஞ்சிதத்தின் தீர்மானம்.

விருந்து நடந்த மூன்றாவது நாள் தனபதி முதலியார் மனோரஞ்சிதத்தை அழைத்து விவாக விஷயமாய் அவளுடைய விருப்பத்தை விசாரித்தார். இவர்கள் இவ்விதம் அடிக்கடி பேசியிருந்தும் மனோரஞ்சிதத்தின் உள்ளக் கருத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. அன்று தான் அவருக்குப் போதுமான அவகாசம் கிடைத்தது. காலை முதற்கொண்டே அவளுடைய அபிப்பிராயத்தை அறிய வேண்டி காத்துக்கொண்டிருந்தும் மாலை வேளை தான் சௌகரியப் பட்டது.

இரங்கனாதம் கர்ப்பநாயகத்தை நேசனாக ஏற்றுக்கொள்ளவில்லை யென்பதை மனோரஞ்சிதம் நன்றாய் அறிவாள்.

"கர்ப்பநாயகம் மற்ற புருஷர்களை விட எல்லாவிதத்திலும் மேன்மையானவர். பார்ப்பதற்கு யோக்கியமாயும் நாகரீகமாயுமிருக்கிறார். அவரை விரும்பாதிருந்தால் புத்தியில்லாத தன்மையாகும். கர்ப்பநாயகத்தின் நடையையும் குணத்தையுங் கண்டு இரங்கனாதம் பொறாமைப்படுகிறான்" என்றார்.

"அவரைப்பார்த்தா பொறாமைப் படுகிறார்" என்று சொன்னாள்.

"கர்ப்பநாயகத்தின் குணங்கள் புகழத் தக்கவை. ஆழ்ந்த அறிவுள்ளவர் ஊக்கமும் விடாமுயற்சியுமுள்ளவர். இவ்வித குணங்கள் இரங்கனாதனுக்கு இல்லை" என்று சொன்னார்.

"நீங்கள் அவரைப்பற்றி நன்றாயறிந்திருந்தால் குற்றமொன்றும் சொல்லத்துணிய மாட்டீர்கள். கர்ப்பநாயகத்தை தங்களுக்கு அதிகப் பழக்க முள்ளவராக நினைக்கிறீர்கள்; அவரிடத்தில் தான் சில குற்றங்கள் இருக்கக் காண்பீர்கள். இப்பொழுது தாங்கள் மற்றவர்களை விட கர்ப்பநாயகத்தை விசேஷமாய்ப் பாராட்டி வருகிறீர்கள்" என்று சொன்னாள்.

"நீ அவரை ஒருசாதாரண மனிதராக மதித்து விட்டாயா? வரப்பிரசாதம் பெற்றவராக இருக்கிறார்" என்றார்.

"அவர் ஒரு யந்திரமே தவிர மனிதரல்ல. ஒரு காரியம் நடைபெற வேண்டுமானால் யந்திரங்களுக்குச் சாவி கொடுப்பதுபோல இவருக்கு ஒருவர் உற்சாகம் கொடுக்கவேண்டும்" என்றாள்.

"அது வயதுக்குத் தக்கபடி இருக்கும்" என்றார்.

மனோரஞ்சிதம் தொடர்ந்து பேசுதற்கின்றி சற்று தயங்கினாள். மறுபடியும் திடமாய்ப் பேச ஆரம்பித்தாள்.

"அப்பா! எனக்கு ஒரு விஷயத்தைத் தெரிவிக்கப் பயமாயிருக்கிறது. நான் பயப்படவில்லை. ஆனால் அவர் என்னை பயமுறுத்துவார். நீங்கள் அவரை முற்றிலும் நம்பியிருக்கிறீர்கள். அவர் பெருந்தீங்கு செய்யப் போகிறார். மிகவும் வினையாயுள்ளவர்" என்று சொன்னாள்.

தனபதி முதலியாருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் சொல்லுகிறார்:—

"நீ என்னை முட்டாளென்றே நினைத்து விட்டாய். அவர் வஞ்சகமாய் நடக்கிறதாயிருந்தால் நடக்கட்டும். நீ அவரை கெட்டவரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆகையால் அவருடைய நற்குணமும் துர்க்குணமாய்த் தோன்றும். அவருடன் நன்றாய்ப் பழகிக் கொண்டிருக்கிறேன். உன்னைவிட நான் அதிகமாய் விசாரித்திருக்கிறேன். உனக்கு அவரிடத்தில் விருப்பமில்லாவிடில் அவர் மேல் குற்றத்தை சுமத்துகிறதா? எவனையோ, ஏழைத் தடிக் கழுதையை நினைத்துக் கொண்டு, உன் மனம் போல் எனக்கு புத்தி சொல்ல வந்தாயா?" என்று சொன்னார்.

மனோரஞ்சிதம் பதில் ஒன்றும் சொல்லாதவளாய், பூமியை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தாள். தனபதி முதலியார் பின்னும் சொல்லுகிறார்:—

"நீ எப்படியாவது நல்ல விவேக புருஷனோடு வாழவேண்டுமென்று பாடுபடுகிறேன். அதை விட்டு உன் இஷ்டம் போல் வாயில் வந்ததை யெல்லாம் சொல்லி என் மனதை மாற்றவே பிர

யாசைப்படுகிறாய். இவ்வளவு சொத்தையும் உன்னைத் தவிர வேறு யார் பெறப்போகிறார். சொல்லுகிறபடி நீ நடக்கவேண்டும். நீ யாரை நினைத்துக் கொண்டிருக்கிறாயோ அவனை விலக்கித்தள்ளு. உனக்கு சிறந்த புருஷன் வரப்போகிறான். இரங்கனாதம் ஒருக்காலும் உனக்குப் புருஷனாகப் போவதில்லை. நீ அவனை நினைக்காதே'' என்றார்.

இரங்கனாதத்தைப்பற்றி இகழ்வாய் நினைத்துப் பேசுகிறார்கள் என்று ஆக்ரோஷமான துடி துடித்து மனோ ரஞ்சிதம் சொல்லுகிறாள்—

"நீங்கள் ஏன் அவரைக் குறை கூறுகிறீர்கள். அவர் எவ்வித தீங்கும் எவருக்கும் செய்ததில்லையே. நீங்கள் ஒருவரை சிநேகிதரென நினைக்குமுன் நன்றாய் ஆராய்ந் தறிந்திருக்கவேண்டும்'' என்றாள்.

"நான் எல்லாம் விசாரித்து தான் ஏற்பாடு செய்திருக்கிறேன். உனக்குப் பொருத்தமானவர்'' என்றார்.

"எனக்கு ஒரு நாளும் பொருத்தமில்லை. அவரைப் பற்றிய பேச்சே வேண்டாம். என் மனதில் நினைத்திருப்பவரைத் தவிர இவ்வுலகில் வேறு எவரையும் நினைக்கமாட்டேன்'' என்றாள்.

"வீணாய்க் கெட்டுப் போகாதே, உன் வழி போனால் கஷ்டப் படுவாய் நிச்சயம். என்னால் ஒரு நன்மையையும் அடையமுடியாது. சிறு பிள்ளைத்தனமாய்ப் பேசாதே, உன் அறைக்குப் போ நன்றாய் யோசனை செய்து சொல்லு'' என்றார்.

அவர் சொற்படியே மனோ ரஞ்சிதம் அந்த விடத்தை விட்ட கன்றாள். தன் நிலைமையை நினைத்து வருந்தி அழ ஆரம்பித்தாள். விவாக விஷயத்தால் மனத்தாங்கலும் கஷ்டமும் ஏற்படும் என்று அறிந்துகொண்டாள். பெண்ணுக்குப் பெண்ணே விரும்பும் அவ்வளவு அழகமைந்தவள். விசேஷமாகத் தமிழ் ஆராய்ச்சி யுள்ளவள். தனபதி முதலியார் தன் சொத்தை மனோரஞ்சிதத்துக்குக் கொடுத்து விடுகிறதாய்த் தீர்மானித்திருக்கிறார்.

நெடுநாளாய் மனதில் நினைத்து அன்பு செலுத்தப்பட் டிருந்தவரை விட்டுவிடு என்று சொல்லிவிட்டாரே யென்று துக்கித்தாள்; என்றாலும் தன் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடக்கிறதில்லை என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள். இனி பிரிந்திருக்குங் காலம் சமீபித்து விட்டது. இரங்கனாத முதலியாருக்காக நான் இம் மாளிகையை விட்டுப் போகவேண்டும். அன்புக்குக் கடமைப்பட்டு விட்டேன். கடவுளின் ஆக்ஞையின்றி அன்பு இவ்வளவு காலம் நீடித்திருக்க மாட்டாது. எனக்கு இது ஒரு சோதனைக்காலமே. வருவது வந்தே தீரும், இரங்கனாத முதலியாரை மனதை விட்டகலாது நினைந்திருப்பதால் எவ்வளவு தரித்திரத்தை யடைந்தாலும், சரி, என் மனோ உறுதியை எவராலும் மாற்ற முடியாது. கஷ்டப் படுவதற்கு சித்தமாய் விட்டேன் என்று தீர்மானித்துக் கொண்டாள். இவ்வாறு அவளுடைய மனம் பல வழிகளிலும் வேகமாய்ச் சென்று ஒரு முடிவான அபிப்பிராயத்துக்கு வந்தது ஆச்சரிய மாகவே யிருந்தது.

அன்று மாலை இருவரும் சந்திக்க நேர்ந்தபோது அதே விஷய மாகப் பேசி திர்மானிக்கப்படும் என்று தெரிந்து கொண்டார்கள். மனோரஞ்சிதம் திட சித்தத்தோடு நின்றாள். தனபதிமுதலியார் இரத்தினங்களைத் துடைத்துப் பார்த்துக் கொண்டிருந்ததை விட்டு மனோரஞ்சிதம் யோசனை செய்தாயா வென்று கேட்டார்.

"நான் யோசிக்கவேண்டிய விஷயம் ஒன்று மில்லையே. நீங்கள் சொல்லிய வார்த்தைகள் தான் என் மனதைப் புண்படுத்திக் கொண்டிருக்கிறதே. மேலும் நீங்கள் அவ்விதம் சொல்லுவீர்கள் என்று நான் ஒரு நாளும் எதிர்பார்க்கவில்லை. என்னுடைய மனோ பாவத்துக்கு விரோதமாய் நடக்க யாது காரணமென்பதும் விளங்கவில்லை. என்னை எவ்வளவுக்கு அன்பாய் வளர்த்து வருகிறீர்களோ, அவ்வளவுக்கும் மாறான வழியைக் காட்டிக் கொடுக்கிறீர்கள்''; என்றாள்.

"உன்மேல் எனக்கு அன்பு அதிகம்; உன் சுகவாழ்வுக்கான நலத்தைத் தேடுவது என்து கடமை; உன்மேலுள்ள ஆசாபாசம்

மற்றுமுள்ள எல்லாம், வீணுக்கும் காலம் வருகிறதே என்றுவருந்துகிறேன். வருங்காலத்தில் நிகழும் வாழ்வும் தாழ்வும், இவ்விதமிருக்குமென எவரும் அறிந்து கொள்ள முடியாது. ஆதலால் விவாகமானவுடன் கஷ்டமே கதியாய் வாழ்வு தாழ் வடைந்து போகும் கவனித்துப்பார்'' என்றார்.

''அப்படியானால்,கலியாணத்தோடு விவாக சுகமானது ரிஜிஸ்டர் செய்து கொடுக்கப்படுகிறதா ? கடவுள் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாய் நல்ல புத்தியைக் கொடுத்திருக்கிறார்'' என்றாள்.

''எல்லோருடைய புத்தியையும் ஒரே மாதிரியாக நினைக்க முடியாது. மூடன் வேதை தான், புத்திசாலி கெட்டிக்காரன்தான். இவ்விஷயத்தில் நீ தீர யோசித்துச்செய். ஊக்க மென்பது ஒரு சிறிதுமில்லாத பரம ஏழை யொருவனை மணந்து கொள்வது நியாயமன்று'' என்றார்.

''நீங்கள் அவரைப் பற்றி நீண்ட காலம் புகழ்ந்து பேசியதுமுண்டு. அவருடைய பெற்றோர் யாது காரணத்தாலோ அனாதியாக விட்டு விட, இப்பொழுது தாங்களும் இகழ்ந்து பேசுங் காலமாகி விட்டது. என்ன செய்கிறது?'' என்றாள்.

''நீ அவனை இனி மறந்து விடு'' என்றார்.

''நெடுங் கால மனோபாசத்தை எப்படி விட்டு விட முடியும்'' என்றாள்.

''ஏன் மறக்கக் கூடாது, நன்றாய் நீ மறந்து விடலாம், நான் எவ்வளவோ சுக துக்கத்தை அனுபவித்தவன், மேலும் இவ்வுலகத்தைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். என் புத்தி மதியைக் கேட்டு அதன் படி நட; உனக்கு எல்லா வித சம்பத்து முண்டாகும். சந்தோஷமாய் சுகித்து வாழ்ந்திருக்கலாம். இப்பொழுது உன் மனதிலுள்ள கவலையை ஒழித்து விடு. வீணாக மனதைப் புண்படுத்திக் கொள்ளாதே. நாவல் எழுதுகிறவனையும், பல நூல்களைப் படித்துக் கொண்டிருக்கும் பண்டிதனையும் தேடாதே. இவர்கள் மனதை உற்சாகப் படுத்திக் கொண்டு அதன் வழி நடந்து சந்தோஷப்படு

கிறவர்கள். ஆகையால் பெருந்தன்மையும் கௌரவமுமுள்ள எவரையாவது விரும்பு. நமது தரத்துக்குத் தக்கவர்களோடு சம்பந்தம் செய்ய வேண்டும். நீ எப்படியாவது விவாகமாகி சுகமாயிருக்க வேண்டு மென்பதுதே எனது மனப்பூர்வமான எண்ணம். மேலும் நீ நமது கர்ப்பநாயகத்தைக் கலியாணம் செய்து கொள்வது நலமாகவும் எனக்குத் திருப்தியாகவும் தோன்றுகிறது'' என்று சொன்னார்.

இவர் இவ்விதமாகப் பேசுவதற்கு காரணமென்ன. மனம் முற்றிலும் மாறுதலடைந்து விட்டது. கருமேகத்தினிடையே ஒளி தோன்றியது போல காரணம் இன்ன தென்று அவள் மனதில் தோன்றிற்று. சரி, சரி அப்படியாகத் தானிருக்க வேண்டும் என்று தனக்குள் சமாதானத்தை யடைந்தாள்.

''கடைசியாக நான் என்ன சொல்லப் போகிறேன். நீங்கள் ஏதோ இதுவரை இருட்டுக்குள் இருந்தது போலவும், அவர் உங்கள் கண்ணுக்கும் தெரியாத ஒரே பிரகாசத்தை உண்டாக்கியதுபோலிருக்கிறது'' என்று சொன்னாள்.

''இம் மாதிரி மூடத்தனமான வார்த்தைகளைச் சொல்லாதே. கடவுள் கொடுத்த ஒரே புத்தியைக்கொண்டு பேசு. ஒன்றை புத்தியாக்கிக் கொண்டு உளராமல், நீ இரங்கனாதத்தைக் கலியாணம் செய்து கொண்டால் தானென்ன, அல்லது கர்ப்ப நாயகத்தை விவாகம் செய்து கொண்டால் தானென்ன, அல்லது வேறு எந்த பேயைக் கொண்டாலு மென்ன, என்னுடைய நன்மைக்கா உன்னுடைய நன்மைக்காவென்று யோசித்துப்பார். நான் அடையக் கூடிய லாபம் ஏதேனுமுண்டா? ஒரு பெண்ணுக்கு புருஷனைத் தேடுவது வேடிக்கையா விநோதமா? உன் குடும்பத்தில் நீ தான் கெட்டிக்காரி யென்று நினைத்தேன். நீயும் மற்றவர்களைப் போல் தானிருக்கிறாய். வர வர நீ சொல்லுக் கடங்காமல் கூத்தாடுகிறாய். உன் தாய் மனம் நொந்து போகும் படி நடக்கப் பார்க்கிறாய்.

நீ முரட்டுத் தனமாய் நடக்கிறதா யிருந்தால் உனக்கு திருச்சினாப்பள்ளிக்கு ஒரு டிக்கட்டு வாங்கிக் கொடுத்து உன்னையும் மறந்து

விடுகிறேன். கர்ப்ப நாயகத்தைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டு மென்று உன்னை நான் வற்புறுத்த வில்லை. நான் அநீதியாய் நடக்கிறவனல்ல. கர்ப்பநாயகம் விஷயத்தை விட்டு விடு. ரங்கநாதத்தைப் பற்றியே சொல்லுகிறேன். நீ என்னை விட்டுப் பிரிந்ததாக அவன் அறியும்போது அவனுடைய குணம் நன்றாய் விளங்கி விடும். இப்பொழுது என் வார்த்தைகள் உனக்குக் கல் மழை போல் தானிருக்கும். பின்னால் தெரிந்து கொள்வாய்'' என்றார்.

“அவரைப் பற்றி தாங்கள் ஒன்றும் அறியா திருப்பதற்காக மிகவும் விசனிக்கிறேன். மண்ணில் புதைந்த மாணிக்கம். சமயம் வரும்போது நீங்களே உங்கள் குற்றத்தை உணர்வீர்கள்'' என்றாள்.

“போதும் போதும் நிறுத்து உன் வார்த்தையை. கேட்பார் பேச்சைக் கேட்டு இப்படி நடக்க ஆரம்பித்து விட்டாய். இன்று செவ்வாய், நாளை புதன் கிழமை ரயிலில் ஊர் போய்ச் சேர். உன் தாயாருக்கும் ஒரு கடிதம் அனுப்பி வைக்கிறேன்'' என்றார்.

“அதனால் எனக்கொன்றும் நஷ்டமாகாது. உங்களுக்குத் தான் கஷ்டம். என்னை ஊருக்கு அனுப்புவதனால் மிகவும் சந்தோஷம். என் க்ஷேமத்தை விட உங்கள் க்ஷேமத்தையே விரும்புகிறேன்', என்று சொல்லி அவ்விடத்தை விட்டகன்றாள்.

தன் மாமன் சொற்படியே மறு நாள் திருச்சி வழியாய் ஸ்ரீரங்கம் போய்ச் சேர்ந்தாள். தனபதி முதலியாருக்கு இரவெல்லாம் தூக்கமுமில்லை எவருடனும் பேச மனமுமில்லை. கவலை யென்னும் கருமேகம் சூழ்ந்து கொண்டது. சோம்பல் துணையாய் நின்றது. தனித்த விடத்தில் நினைத்த விஷயத்தை சிந்திக்கவும் நேரம் கிடைத்தது. கர்ப்ப நாயகத்தை நினைத்தார். அவரிடத்தில் என்ன புதுமையைக் கண்டு விட்டனரோ தெரியவில்லை. தனபதி முதலியாருடைய கஞ்சத் தனத்துக்குக் கர்ப்பநாயகம் எவ்விதம் பொருந்தினார் என்பது ஆச்சரியமாகவே யிருக்கிறது. அவரை ஒரு அந்தி வேளையில் சந்தித்ததும் மனோரஞ்சிதத்தை விவாகம் செய்து கொடுக்கத் தனக்கும் தீர்மானித்ததும் எல்லாம் சனவு போல் நிகழ்வதாயிற்று. மேலும் அவர் பிடிவாதமாயும் நடந்து கொண்டார்.

பிரபஞ்ச விநோதம்

1. மோட்டார் வண்டியில் ஏறிப்பழக்கப்பட்டவர்களுக்கு மற்ற எந்த வாகனமும் வேகமாய்ப் போகிறதாகத் தெரியவில்லை. ரெயில் வண்டியில் போகும்போது கீழே குதித்து விடலாமென்று தோன்றுகிறதாம். ஆகாய விமானம் வழக்கத்துக்கு வந்து விட்டால் மோட்டார் வண்டியும் அப்படித்தான் போலும்.

2. ஒரு வீட்டில் மனைவியின் வகையினருக்கு உபசாரம்—கவனிப்பு அதிகம். எவ்வளவு காலமிருப்பினும் விருந்தினர் தான். மாமியார் இருந்தால் அதிகமாய் காரணமின்றி வரமாட்டார்கள். மனமொத்தவர்கள் கூடவே உழைப்பார்கள்.

3. ஒரு மாதச்சம்பளம் எப்பொழுது கொடுப்பார் என்று எதிர்பார்த்து ஆவலுடன் இருகை நீட்டி வாங்க, அது மறுநாளோ, மூன்றும் நாளோ பணம் பஞ்சாய்ப் பறந்து விடுகிறது.

4. சம்பளப் பணம் கையில் வந்ததும் யாராருக்குக் கொடுக்க வேண்டுமோ அவர்களுடைய ஞாபக மெல்லாம் வந்து விடும்.

5. ஒரு பெருந்தன்மையான புருஷர் காய் பதார்த்தம் வாங்குகிறதற்காகக் கொத்தவால்சாவடி (மார்க்கட்டு) க்குப் போனார். ஒரு ஸ்திரீ பிஞ்சுக்கத்திரிக்காய்களை கூறுகட்டி வைத்திருந்தாள். அதில் ஒன்றைப் பார்த்து என்ன விலை யென்று கேட்டார். மனித சுபாவம் தெரியாத அந்த ஸ்திரீ 'நேற்று ஒரு பாவி இப்படிக் கைவைக்க நாளெல்லாம் காத்திருந்தேன். இன்று நீ கைவைத்தாயா--கைவைத்தாயா'—என்றாள். அந்த உத்தம புருஷர் பதில் சொல்ல முடியாமல், பின்னும் அன்பாய் விலை கேட்டு, அவள் சொன்ன விலைக்கே வாங்கிச் சென்றார். இப்படி யிருக்கிறது நமது சில்லரை வியாபாரம்!

6. மனைவியும் விலக்கமாகி சோற்றுக்குத் திண்டாடும் போது ஒரு விருந்தாடியும் வந்து விடுகிறது. வீட்டுக்காரன் பாடு தத்தளிப்பு தான்.

7. தன்னுடைய புஸ்தகம் நன்றாயிருக்கிற தென்று நண்பர் ஒருவர் படிக்க இரவல் கேட்கும்போதுதான் தனக்கும் படிக்க ஆவல் உண்டாகிறது.

8. பறக்கும் பட்சிகளை பிடிக்க வலை வீசுகிற வேடனைப்போல சில மனிதர்களும் மனிதர்களை வசப்படுத்த வஞ்சக மென்னும் வலை வீசுகிறார்கள்.

ஸ்ரீமத் பகவத் கீதா வாசகம்.

முன் தொடர்ச்சி.

35. மதுசூதன! இந்தத் துர்யோதனாதியர் என்னைக் கொல்பவராயினும், நான் இவர்களைக் கொல்ல விரும்பவும் மாட்டேன். மூவுலக ராஜ்யமும் எனக்குக் கிடைப்பதென்றிருந்தாலும் இம்மண்ணுக்காக என்ன ?

36. ஜனார்த்தன! திருதராஷ்டிர புத்திரரைக் கொன்ற பின், நமக்கு உண்டாகும் சந்தோஷ மென்ன ? இக் கொடும்பாவிகளைக் கொன்றால் நமக்குப் பாவமே வந்து சேரும்.

37. ஆதலின், நாம் நமது பந்துக்களாகிய திருதராஷ்டிர குமாரர்களைக் கொல்லுதல் கூடாது. ஏனெனில், மாதவ! ஸ்வஜனங்களைக் கொன்றுவிட்டு நாம் எப்படி சுகிகளாக இருப்போம்.

38, 39, லோபத்தால் கெட்ட மனத்தினரான இவர்கள், குலநாசத்தாலான தீங்கையும், மித்திரத் துரோகத்தில் விளையும் பாதகத்தையும் அறியாவிட்டாலும், குல நாசத்தாலான தீங்கை நாம் நன்றாய்ப் பார்க்கும் பொழுது நமக்கு இப்பாபத்தைத் தவிர்க்க எப்படித் தெரியாமற் போகும்.

40. குலம் கெட்டுப்போகும்பொழுது ஸநாதனமான குல தருமங்கள் அனுஷ்டானத்தில் இல்லாமற் போகின்றன. தருமங்கள் இல்லாமற்போக குலம் முழுவதையும் அதர்மம் வியாபிக்கின்றது.

41. அதர்மம் வியாபித்தலால்; கிருஷ்ணா! குல ஸ்திரீகள் கற்பழிந்துவிடுகிறார்கள். ஸ்திரீகள் கற்பழிய வார்ஷ்ணேய! ஜாதிக்கலப்பு உண்டாகின்றது.

42. ஜாதிக் கலப்பானது குலத்தைக் கெடுத்தவரது குலத்திற்கே; நரகத்திற்கு ஏதுவாகின்றது. ஏனெனில் இவர்களுடைய பிதுருக்கள் பிண்டக் கிரியையும் உதகக் கிரியையும் இழந்திட்டவராய் நரகத்தில் வீழ்கிறார்கள்.

43. ஜாதிக் கலப்பை விளைவிப்பனவாகிய குடிகேடர்களுடைய இத்தீத் தொழில்களால் சாஸ்வதமான ஜாதி தருமங்களும் குல தருமங்களும் கெட்டழிந்து போம்படி செய்யப்படுகின்றன.

44, ஜனார்த்தன குல தருமங்கெட்ட மனிதர்களுக்கு நரகத்திலே வாசம் அவசியம் உண்டென்று கேட்டிருக்கிறோம்.

45. ஆ! என்னே! மகத்தான பாபஞ்செய்ய அஞ்சாது துணிந்திட்டோமே! ராஜ்ய சுக விஷயமான கடும்பற்றினாலே சொந்த ஜனங்களைக் கொல்லவும் முயன்றனோமாதலின்.

46. கையில் ஆயுதத்தையுடைய திருதராஷ்டிர புத்திரர், போரில் அவர்களை எதிர்க்காமலும் கையில் ஆயுத மில்லாமலும் இருக்கின்ற என்னைக் கொல்வார்களானால்; அது எனக்கு அதிக நலமாகும்.

சஞ்சயன் சொல்லலுற்றான்.—

47. அர்ஜுனன் இவ்வாறு சொல்லி அம்போடு வில்லையும் போர்க்களத்திற் கீழே எறிந்து சோகத்தாற் பதைத்த மனத்தினனாய்த் தேர்த்தட்டில் உட்கார்ந்துவிட்டான்.

முதல் அத்தியாயம் முற்றும்.

னோர் அதற்குப் பெயரிட்டழைக்க அயல் பாஷையினின்று சொல்கடன் வாங்கினரென்றல் நகையாடுதற்கேதுவாம்.

இனி வடக்கேயுள்ள மொழியாகிய சமஸ்கிருதத்துக்கு வடமொழி யெனப் பெயர் வந்தவாறு போல், தெற்கே தெலுங்கு கன்னடம், துளுவு, மலையாளம் முதலான எத்தனையோ பாஷைகளிருந்தும், இத்தமிழுக்கே தென்மொழி யெனப் பெயரிட்டழைத்தலால், வடமொழியோடொப்புமை தமிழுக்கேயென்பதும் அதன்மேன்மையும் நன்றாயறிதற்பாலது.

மேலும் தெலுங்கு முதலான பாஷைகள் தமிழின் சிதைவும் மரூஉ மென்பதே தமிழர் துணிபு. இந்துண்மையறிந்தல்லவா மகாவித்துவானாகிய சுந்தரம்பிள்ளை அவர்களும்

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோ
ரெல்லையறு பரம் பொருள்முன்னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்து ஒன்று பலவாயிடினும்
ஆரியம் போலுலக வழக்கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைதிறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே"

யென்று தமிழ்வணக்கங் கூறினார்,

தமிழின் பழமை: இத்துணை சிறப்புவாய்ந்த இச்செந்தமிழ் இன்று வந்ததா? நேற்றுவந்ததா? இல்லை இல்லை: எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களாய் விட்டன. 10 வருஷங்களுக்கு முன் நடந்த விசேஷங்களை யறியக் கூட சரித்திர மெழுதிவையாத நம்மவர் 4000 வருஷங்களுக்கு முன் நடந்ததை யெழுதவில்லை யென்றல் வியப்பன்றே.

இமயகிரியில் சிவபெருமான் உமாதேவியாரை மணஞ்செய்து கொண்டகாலத்து, அத்திருமணக்காட்சி காணவெல்லோரும் சென்றிருந்ததாகவும் அவ்விடத்தில் நெருங்கிய கூட்டத்தால் வடதிசை தாழ்ந்ததென்றும், தென்திசையுயர்ந்த தென்றும், கடவுள்கண்டு, தெற்கில் சிலரையனுப்பிப் பாரத்தை சமமாக்கவேணு மென்று பார்த்ததில் தமக்கொப்பாவார் அகத்தியர் ஒருவரே யென்பதை யறிந்து அவரைத் தென்திசை போகக்கட்டளை யிட்டருளும் போது, விடைபெற்றுப் போகும் அம்முனிபுங்கவர் 'நான் போகும் அந்தநாடு தமிழ் நாடாயிற்றே. அதில் வாழும் மாந்தரெல்லாரும் தமிழிலக்கண இலக்கிய ஆராய்ச்சி நிரம்பப்பெற்றவர்களல்லவோ? கேட்டதற்கு சமாதானம் சொல்லத் தெரியவேண்டுமே யென்று விண்ணப்பம் செய்தாரென்பது.

தாம்பூலம் தரித்தல்.

நாட்டுப் பெண் கும்மி.

1. இன்பங் கொடுப்பது தாம்பூலம் அதில்
ஏலம் கிராம்புகள் கூட்டிக் கொண்டால்
தெம்பு கொடுக்கும் முசிப்பாற்றும் பின்னும்
செம்பவ ளம்போல் உதடா கும்.

2. சாப்பிட்ட வாய்க்கொரு தாம்பூலம் பின்னும்
சந்தோஷ வேளைக்கும் தாம்பூலம்
ஆப்பட்ட போதெல்லாம் ஆட்டுரல்போல வாய்
ஆட்டிச் சுவப்ப தழகல்ல வே.

3. மலையாடு பைங்குழை மேய்வது போலவே
வாங்காமல் வெற்றிலை மெல்லாதே
மலையாள தேசத்துப் பெண்டுகள் போலும்
மடியிற் படிக்கமும் வையாதே.

4. வாயிலே போட்டுமீ மென்றதாம் பூலத்தை
மக்கட் கெடுத்துக் கொடுக்காதே
கோயிலில் தெய்வத்தைக் கும்பிடப் போகின்ற
கோதைக்கும் தாம்பூல மாகாதே.

5. களிப்பாக் குள்மல சுத்திசெய்யும் சுண்ணாம்
கண்டித் துணைவைச செரிக்கச் செய்யும்
தளிர்ப்பான வெற்றிலை த்ராதுபுஷ்டி தரும்
தப்பா முக்கால்முறை கொள்பவர்க்கே.

விடை கொடு போவாரொன்றை வேண்டினன் வருந்தேயம்
தொடைபெறு தமிழ் நாடென்று சொல்லுப அந்த நாட்டி
னிடையயில் மாந்தரெல்லாமின் தமிழாய்ந்து செவ்வி
யுடையவரென்ப, கேட்டக் குத்தர முரைக்கல் வேண்டும்''
யென்னும் பாவால் வெளியாகின்றது.

இனி அந்தப்புராணத்தைச் சரித்ரவாயிலாய் ஆராயுங்கால் சிவன் உமாதேவியரை மணந்தாரென்பது சிவம், சக்தி யென்ற அபிப்பிராயமும் வழிபாடு மேற்பட்டதற்கு அறிகுறியென்றும் வடதிசை தாழ்ந்தது எனபது வடதேசத்தில் ஜனத்தொகையதிகமாய் விட்டதை காண்பிக்கிறதென்றும் அகஸ்தியர் தென்திசைக்கேகினரென்பது ஆரியர் தெற்கே போந்ததிற்கு அறிகுறியா மென்பதும் புலனும். ஆகவே, ஆரியர் தெற்கே போந்ததற்கு முன்னமே தமிழர் மிக்க நாகரீகமும் இலக்கண இலக்கிய அமைப்பும் பெற்றிருந்தாரென்பதும் வெள்ளிடை மலையென தெள்ளிதிற் புலப்படும்.

—அமிர்தவசனி

தமிழ்

தாப்புலிப்பா

ஆனைமுகன் அஞ்சலி

அமிழ்தினுமே இனியதென
அமை, தமிழின் சிறப்புரைப்பின்
தமிழ் மொழியைப் படுகிரியில்
தன்னொருகோட்டால் வரைந்தான்
தாண்டத்து கானென்னே.

தாப்புலிப்பா என்னும் பண்டைப்பாவினம் அகத்தியம் குமரம் முதலிய தமிழ் இலக்கணங்களுக்கு முந்திய காலத்ததாகிய "போற்று நெடுந் துறையன் பெருநூல்" என்னும் இலக்கணத்திலும் "இடைக்கழிச் செங்கோடன் இயனூல்" என்னும் இலக்கணத்திலும் உள்ளது.

இத்தாப்புலிப் பாவினாலேயே "செங்கோன் தரைச்செலவு" (The Expedition of Emperor Sengon) என்ற நூல் யாக்கப்பட்டிருப்பதை ஒரு சிலர் அறிவர்.

தரைச்செலவு என்னும் நூலை தாப்புலிப்பா வினத்தாலேயே சொல்லல் வேண்டுமென்பது கட்டளை.

"தாப்புலி கொண்டு தரைச்செலவு சொல்ல" என்பது போற்று நெடுந்துறையன் பெருநூல் கண்டவிதி.

படுகிரி என்பது மூன்பட்டுப் போன மேருகிரி. "முத்தமிழ் அடைவினை முற்படுகிரியினில் முற்பட எழுதிய முதல்வோனே—திருப்புகழ்.

படுகிரி என்றது எற்றுக்கெனில் மேரு கடலில் அமிழ்ந்து விட்ட படியால் மேருகிரியானது செங்கோன் காலம் வரை இருந்தது. சூரபதுமன் காலத்திலும் இருந்தது. சூரபதுமனுடைய இறுதிக் காலத்தில் அழிந்தது. குன்றமெறிந்த குமரவேள் காலத்தில் அம்மேருகிரி இல்லையாயிற்று. சிலர்

"சீதப்பனிக்கோட்டு மால்வரைமேற் பாரதப் போர் நீட்டும் தனிக் கோட்டு வாரணத்தின்றாள்".

என்ற பாடலுக்கு விநாயகக் கடவுள் மேருமலையில் பாரதத்தை எழுதினார் என்ற பொருள் விளங்கும்படி உரையெழுதி யுள்ளார்கள். இது சற்றும் பொருத்தமில் உரையாகும். குமரவேள் காலத்திலேயே அழிந்து போன மேருமலையை பாரதகாலத்தில் இருந்தது எனக்கூறுவது எவ்வளவு பொருத்தம் எனப்பாருங்கள்.

"சீதப்பனிக் கோட்டு மால்வரை என்பதற்கு இமயம் என்னும் பொருளே பொருத்த முடைத்து. இமம் என்றால் பனி; அதை விடுத்து வேறு பொருள் கூறுவது பொருந்தாது. உரையாளர்கள் கவனிக்க.

கலாசிந்தாமணி

தமிழின் பெருமை,

செந்தமிழறிந்த செல்வர்களே,

'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்' எனப் பிங்கல நிகண்டு கூறும். எவ்வாறு சுந்தரமுடைய கடவுளை 'சுந்தரம்' என்றே கூறுவது மரபோ அங்ஙனமே போல் 'தமிழ்' அதாவது 'இனிமை' யுடைய ஒரு பாஷையைத் தமிழெனவே வழங்குவதாயிற்று. தமிழ் என்னும் சொல் 'இனிமை' யென்ற பொருள் தருவதை "தன்பால் தழுனங் குழல்வண்டு, தமிழ்பாட்டிசைக்குந் தாமரையே" யெனக் கம்பர் கூறியபாவில், 'தமிழ்ப் பாட்டு' யென்பதற்கு இனிமையான பாடல் எனப் பொருள்படுதல்காண்க.

'செம்மையாகச் செய்யப்பட்டது' என்று பொருள்பட சமஸ்கிருதம்' எனப் பெயர்வாய்ந்தவாறு போல இதன் இனிமைநோக்கி இதற்கும் தமிழெனப் பெயர் தந்தாரென்க.

இனி 'தமியேன்' என்பதற்கு நான் எனப் பொருளாதலால் 'தமிழ்' என்னும் சொல்லை, 'தமி - ழ்' எனப் பிரித்துத் தன்னிடத்தில் மாத்திரமே, 'ழ' கரவொற்று விசேஷமாக உடைத்தாயிருத்தல் கொண்டு அப்பேர் பெற்றதெனக் கூறுவாருமுளர்.

இந்த 'ழ' கரவொற்றின் விசேஷமென்னையெனின் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலவும், சந்திரோதயத்தில் இங்கிதம்பாடிய குயிலோசை போலவும், கேட்போர் மனமுருகவும், சொல்வார்க்கு இலகுவாயுமிருக்கும் தமிழ்ப்பாடல்கள் அனேகமாய் இடையினங்களும், மெல்லினங்களும் விரவி வருவதல்லாது வல்லினங்கள் அதிகம் வரக்காணோம்.

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய்விண்ணோர் பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப், பள்ளந்தாழுறுபுனலிற் கீழ்மேலாகப் பதைத்துருகுமவர்நிற்க வென்னை யாண்டாய்க், குள்ளந்தாணின்றச் சியளவு நெஞ்சா யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா வெள்ளந்தான் பாயாதா நெஞ்சங் கல்லாம் கண்ணிணையு மரமாந்தீ வினையேனற்கே" யென்று அழுதழுது நெஞ்சுகரைந்த மாணிக்கவாசக சுவாமிகளின் அருமைத் திருவாக்கைநோக்குக.

இனி 'தமிழ்,யென்னும் சொல் "திராவிடம்" அல்லது, 'திரமிளம்' யென்ற வடசொல்லின் திரிபென்பார் ஒரு சிலர். அது இங்ஙு சிறிதும் பொருந்தாது. ஒரு தனிப்பாஷையுண்டாக்கத் தொடரு

12 JUL 1921

பஞ்சாப் துயரம்



ஜாலியன் வாலா பாக்கின் தோற்றம்.

குஜரன்வாலா தலைவர்கள்
விலங்கிடப்பட்டபடி

1. திவான் மங்கல்ஸென் 2. லாலா அமரநாத்
3. லாலா ஹாக்கிம்ராய் 4. லாலா ல்லையராம்
5. பண்டிட் திவாச் சந்த்

12 JUL 1921

ஆகாய விமான குண்டால் குஜரான்வாலா ஸர்தாரி
லால் என்னும் பையன் காயப்
படுத்தப்பட்டது.

பஞ்சாப் துயரம்



லாகூரில் பகிரங்கமாய் சவுக்கடி கொடுக்கப்பட்டது.

பஞ்சாப் துயரம்

(பெரிய புஸ்தகம்)

காங்கிரஸ் ரிபோர்டு

மகாத்மா காந்தி, சி. ஆர். தாஸ் முதலானவர்கள் விசாரித்து எழுதியது.

15 படங்கள், 486 பக்கங்கள் கொண்டது.

ரிபோர்ட்டு வால்யூம் இரண்டு பாகங்கள் ரு. 3.

மானேஜர்;

"நவசக்தி" ஆபீஸ், ...

சென்னை.

REVIEW OF REVIEWS.

பத்திரிகை ஆராய்ச்சி.

ஒன்றை ஒருவன் அடையும் வரையில் அதைமிக அருமையாகவும் பெரிதாகவும் கருதுகிறான். அது அவனுக்குக்கிட்டுவது அருமையாயிருக்கும்வரையில் அதன்மதிப்பும் பெருமையும் அதிகப்பட்டுவளர்ந்து கொண்டே போகிறது. கிடைத்துவிட்டாலோ அதற்கு முன்னர் அலக்ஷியம் வந்து விடுகிறது. எவ்வளவு சுலபத்தில் கிட்டுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மதிப்புக் குறைந்து அவமதிப்பு அதிகமடைகிறது. கிட்டும் வரை பெரிது கிட்டினபின் சிறிது.

ஒருவனுக்கு மனைவியாக வரப்போகிறவளைப்பற்றி விவாகமாகு முன் எவ்வளவு வேண்டுமாயினும் கேலிசெய்து அவன் முன் பேசலாம். எல்லாம் பரிகாசம் என்ற பெயரில் அடங்கிவிடுகிறது. விவாகமான பின்னரோ கணவன்முன் அவன் மனைவியைப்பற்றி யாதொன்றும் பரிகாசம் செய்வதற்கில்லை. தவறி ஏதாவது சொல்லிவிட்டால் வினையாக முடிகிறது. இதுவும் விந்தையே.

ஒருவரது நட்பு நீடித்து நிற்க வேண்டுமாயின் அவரிடத்தில் யாதொரு லேவாதேவியும் வைத்துக்கொள்ளக்கூடாது. கூடியவரை சிநேகனது உதவியைப் பெறாதிருத்தல் வேண்டும். ஒரு முறை உதவியைப் பெற்றுக்கொண்டோமோ மறுமுறை உதவிசெய்ய முன்வரமாட்டார்கள். உதவி வேண்டாம் வேண்டாம் என்று மறுத்துக்கொண்டிருந்தால் உதவி செய்கிறோம் செய்கிறோம் என்று முன்வந்து சொல்வர். வேண்டும் என்றாலோ சமீபத்தில் ஒருவரையும் காணமுடியாது. இது உலகவியற்கை.

நண்பனிடத்தில் நெருங்கி நீண்டநாள் வசிக்கலாகாது. அப்படி வசித்தோமாயின் முன்பு அன்பு தவழ சாந்தத்தோடு அழகமைந்து காணப்பட்ட நண்பனது முகத்தை கோபத்தணலில் வெந்து கருகி சுளித்து பொலிவு குன்றி ஒளிங்கியதாய்க் காணவேண்டிய சந்தர்ப்பம் விரைவில் நேர்ந்துவிடும். அப்பொழுது நமது அறியாமைக்குப் பச்சாத்தாபப்பட வேண்டி வரும்.

ஒருத்தி தனக்கு கிடைக்காதவரையில் ரம்பை, ஊர்வசி, ரதி என அவளைப்பற்றிக் கனவு காண்கிறான். அவள் கிட்டிவிட்டாலோ (தனக்கு

மனைவியாக வாய்ந்தாலோ) அவள் அழகு இவனுக்குப் புலப்படுவதில்லை அவளை குரூபியெனவே கருதி அன்னிய ஸ்திரீயை அழகியென் நினைக்கிறான். இது உலகசுபாவம்.

ஒருவன் தனக்கு வந்த கடிதத்திற்கு பத்துதினங்களோ பதினைந்து தினங்களோ கழித்து பதிலெழுதுகிறான். அப்படி எழுதின உடனே தன்கடிதத்திற்கு மறுநாளே பதில்வர வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். இரண்டு மூன்று தினங்கள் எதிர்பார்த்து பதில்வாராமைக்கு விருந்தி கோபித்து உடனே பதிலெழுதவில்லை சோம்பேரி என்று நிந்திக்க ஆரம்பித்து விடுகிறான். அச்சமயம் தன் செய்கை ஞாபகத்திற்கு வருவது கிடையாது.

—ஆதி திராவிடன்.

மனிதர்கள் சுவாசிக்கும்போதும், உணவு கொள்ளும்போதும், நீரருந்தும்போதும், ஆகாயத்திலும், நிலத்திலும், ஜலத்திலுமிருந்தும் கண்ணிற்குப் புலப்படாத நுண்ணிய பூச்சிகள் ஆயிரக்கணக்காக உள்ளே பிரவேசிக்கின்றன. நாற்பதினாயிரம் பூச்சிகள் பிரவேசிக்கின்றன வென்றும், அவற்றுள் 40பூச்சிகளை வெளிப்பாப்விடுகின்றன வென்றும், ஏனைய பூச்சிகள் சுவாசாயத்திலும், கபிலிலும், தொண்டையிலுமிருந்து கொண்டு பலவித நோய்களை யுண்டு பண்ணுகின்றன வென்றும் ஒரு மேல்நாட்டுச் சாஸ்திரியார் கூறுகின்றார். இதனாலேயே வாசஸ்தானங்கள் சுத்தமாயிருத்தல் வேண்டுமென்றும், ஜலத்தைக் காய்ச்சி, வடிகட்டிக் குடித்தல் வேண்டுமென்றும் சுகாதார நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

—லோகோபகாரி

கடவுள் துணை

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்

—ஔவை குறள்

Vol. 3. தொகுதி 3. | March, 1921 1921-ம் வருஷம் மார்ச்சுமீ | No. 10. பகுதி 10.

உ

எந்தை யாயெம் பிரான்மற்று மியாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே.

செல்வ நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே.

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
எட்டி னோடிரண் டும்மறி யேனையே.

அறிவ னேயமு தேயடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோவெனை யாண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோவல்ல னேவரு ளீசனே.

—திருவாசகம்

சந்தா நேயர்களுக்கு.

கதாரத்நாகரம் — பஞ்சாங்கத்தோடு கூடிய அநுபந்தம் ஏப்ரலில் வெளியாகும்.

பகவத் கீதா வாசகம்.

இரண்டாம் அத்தியாயம்.

ஸஞ்சயன் சொல்லலுற்றான்.

1. அவ்வாறு இரக்கம் மேலிட்டு, கண்களில் நீர் நிரம்பித் ததும்பப் பெற்று மனமேங்கி நிற்கின்ற அவனுக்கு மதுசூதனர் கீழ்க்கண்டவாறு கூறலானார்.

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார்.

2. அசத்துக்கள் கைக்கொண்டதும், ஸ்வர்க்கத்தை அடைய வொட்டாமல் தடுப்பதும், பழியை விளைவிப்பதுமான இம்மன நொய்ம்மையானது இந்த யுத்த சங்கடத்திலே உனக்கு எங்கிருந்து வந்ததோ அர்ஜுனா!

3. பார்த்த! பேடித்தன்மையைக் கொள்ளாதே; உனக்கு இது கூடாது. பரந்தப! இந்த இழிவான மன நொய்ம்மையைத் தள்ளி விட்டு எழுந்திரு.

அர்ஜுனன் சொல்லலுற்றான்.

4. மதுசூதன! புஷ்பாதிகளால் பூஜிக்கத் தக்கவர்களான பீஷ்மரையும் துரோணரையும் யான் எப்படிப் போரில் அம்புகளால் எதிர்த்துச் சண்டை செய்வேன்? அரிசூதன!

5. மாட்சிமை தங்கிய மஹான்களைக் கொல்லாமல் இவ்வுலகிலே பிச்சை யெடுத்துப் புசித்தலும் நல்லதாம்; யான் பெரியோர்களைக் கொன்று விட்டாலோ இரத்தந் தோயப் பெற்றவையான சம்பத்து காமம் போகம் இவைகளை இவ்வுலகிலேயே அனுபவிக்க வேண்டும்.

6. மேலும் பிச்சை யெடுத்துப் பிழைத்தல், ஸ்வ ஜாதி தருமமென்னும் போர் புரிதல் என்ற இவ்விரண்டினுள் எது நமக்கு மேலானதோ நாமே அவர்களை வெல்வோமோ?—அல்லது அவர்களே நம்மை வெல்வாரோ? என்ற இதுவும் நமக்குத் தெரியாது. (நாம் எவர்களைக் கொன்ற பின்னர் உயிர் வாழ விரும்பமாட்டோமோ, அந்த திருதராஷ்டிர புத்திரர்களே இப்போர்க்களத்தில் நமக்கு எதிரே வந்து நிற்கின்றார்கள்.

7. கார்ப்பண்யமென்னும் (மன நொய்ம்மையாகிய) குற்றத்தினால் தன் தன்மை சிதைந்தவனாய், தரும விஷயத்திலே மனம் திகைத்த அடியேன் (யாது நன்மை? எனத்) தங்களை வினவுகின்றேன்; எது உறுதியான நன்மையோ, அதனை எனக்கு உரைப்பீர்களாக; (ஏனெனில்,) நான் தங்களுடைய சிஷ்யனாகின்றேன்: தங்களை வந்தடைந்த எனக்கு, (நல்வழிப் படுமாறு) அறிவுறுத்தி யருளுக.

8. உலகிலே பகைவரற்றதாய்ச் செழித்திருக்கும் ராஜ்யமும், தேவர்கட்குத் தலைவராயிருத்தலும் கிடைக்கப்பெற்றாலும், இந்திரியங்களைத் தீப்போல அழற்றுகின்றதான என் துயரத்தைப் போக்குவது இன்னதென்றெனக்குத் தெரியவேயில்லை இந்திர பதவியைப் பெற்றாலும் என் துயரம் தீருமாறு இல்லை.

சிறு மணித் திரள்.

[ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு எழுதியது.]

"ஜீவகாருண்ய சிந்தை"

ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். வாயில்லாப் பிராணிகளை ஸம்ரக்ஷிப்பது உத்தமமான தர்மம். உதவியைப் பெற்ற மனிதன் உபத்திரவம் செய்வான். பசுக்கள் அவ்விதம் செய்யா. ஒரு துர்த்தேவதைக்கு ஒருமுறை பலி கொடுக்கத் தொடங்கினால் அது அடிக்கடி பலி கேட்கும். கொடாவிட்டால் கோபங் கொள்ளும். கூத்தாடும். அதுபோல் ஒருமுறை பொருளுதவி பெற்றவன் அடிக்கடி அவ்வுதவியை நாடுவான். தாராவிடில் ஏசுவான். பலர் முன்னிலையில் பழிப்பான். ஆகாத கிருத்தியங்களைச் செய்து ஆபத்தையுண்டாக்குவதாய்த் தோள் தட்டுவான். இத்தகையோருக்கு உதவி புரிவதினும் பசுக்களுக்குத் தீனி போடுவதும, அவற்றை ஸம்ரக்ஷிப்பதும் நன்று. அன்னதானம் செய்ய விருப்பமாகில் உத்தமமான அதிதிகளைத் தேடிச்செல்லவேண்டும். இதுவரை நாம் கண்ணுற் பாராதவர்களும், இனி நம்மைக் கண்டு வார்த்தையாட ஸாத்தியப்படாதவர்களுமே அதிதிகளாவர். அப்படிச் செய்யாமல் அண்டைவீட்டுக் காரர்களுக்கும், தொண்டையையறுக்கும் துஷ்டர்களாகிய சோம்பேறி யுற்றார்களுக்கும் இடுவது அனுசிதம். இவர்களால் நமக்கு விளையும் லாபம் ஆபத்துதான். எவ்வித சார்புமின்றி அன்னிய ஜெந்துவினிடத்தே நாம் இரங்கியுருகும் இரக்கத்திற்கே ஜீவகாருண்ய மென்பதாம். அதனிலும் ஜீவஜந்துக்களிடத்து இரங்குதல் இன்னும் விசேஷமுடைத்தாம்.

* * *

"அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே",

என்றார் தாயுமானவர். சண்டாளன் வீட்டினும் சந்திரன் பிரகாசிக்கின்றான். பக்தவத்ஸலராகிய பரந்தாமனுக்கு 'அல்லாதார்' என்றும், ஆகிறவர்களென்றும் தாரதம்மியமில்லை. யாவரிடத்துமே அவர்

அன்பு கொண்டு ஒளிர்கின்றார். ஆனால் உத்தமர்களான தமது மைந்தர்கள் தகாதவழி புகுமிடத்து அவர்களையுடனே சிக்ஷித்து ஸன்மார்க்கமாக்குகிறார். துஷ்டர்களான மைந்தர்களிடத்து, அவர்கள் எவ்வளவு பாபமூட்டையைச் சுமக்க இயலுமோ அவ்வளவுக்கும் அவர்களை விட்டு வைத்து, அப்பாப மூட்டையே அவர்கட்கு நற்புத்தி புகட்டுமாறு பின்னாட்களில் புரிவித்து நல்வழிப்படுத்துகிறார். எத்துணைத் தீயமைந்தராயினும் பெற்றதாய்க்குப் பாசம்போமோ? அவர்களை மெய் வருந்தித்திருந்தட்டுமென விடுவதில் பொல்லாதவர் நன்மை பொருந்துவது போன்றும். நல்லார் மிகவன்றியர் நண்ணுவது போன்றும் வெளிக்குப் புலனாகின்றது. அதை நோக்கி நாம் சித்தம் சலித்திடவொண்ணாது. நல்லவர்க்குப் பொல்லாததும் பொல்லாதவர்க்கு நல்லதும் நிலைபெற்று நில்லாது. எல்லாம் தொல்வினையால் எய்திடும் தொடர்பு. கடவுள் எப்போதுமே பரமதயாநிதி.

* * * * *

"அவனருளாலே அவன் தாள் வணங்கி"

என்பது பெரியோர் மொழி. ஆ! என்ன அற்புதமான திருவாசகம் இது! அகிலலோக நாயகரான ஸர்வேஸ்வரனை நாம் வழிபடுதற்கும் அவன் அருள் நமக்கு இருந்தால் தான் முடியுமாம். அவன் தாள் வணங்குதற்கும் அவன் அருள்வேண்டுமாம். அவன் அருளைப் பெறுதற்கே நாம் வணங்குகிறோம். அப்படி வணங்குதற்குக்கூட நமக்குப் பூர்வ புண்யப் பிராப்தமிருந்து அதனால் அவன் அருள் நம்மீது வீசினால் தான் நமக்கும் அவனை வணங்கி உய்வதற்குச் சித்தம் செல்லுமாம். அவ்விதமான விவேகம் நமக்கு உதயமாகுமாம். அவன் அருள் இல்லாவிடத்து இவ்வுலகமாய்கையினுள் தாமே சிக்குண்டு அலைந்து கெட்டு அவதிக்காளாவோமேயன்றி அவனை அணுமாத்திரமும் நாம் நினைத்திடமாட்டோமாம். என்னே இவ்வற்புத மொழியின் மாண்மை. எனவே நாம் கடவுளின் அருள் பெற்றுய்யுமாறு வணங்குதற்குக்கூட, அவன் அருள் நம்மீது ஆவிர்ப்பவித்தால் தான் கூடுமென்பதாகிறது. தெய்வ வழிபாட்டின் உன்னதத்தை—உயர்நிலையை இவற்றாலேனும் நாம் உணர்ந்து, ஏதோ பூர்வ புண்யம் பலிக்கப் பூரித்த காரணத்தால் நம்மிடத்தே எழுந்த சொற்பமான பக்தியை நித்தியானுசந்தானமாக நிகழ்வித்து, அநுதினமும் அநவரதமும் அவனது பொன்னடி போற்றி ஆத்ம பக்குவவிவேகிகளாய் ஆகக்கடவோம். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" உய்வோமாக?

* * * * *

"இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே"

எனத் தாயுமானவர் பாடியிருக்கின்றார். காயமிது பொய்யடா காற்றடைத்த பையடா! மாயனார் குயவன் செய்த மண்ணு பாண்டம் ஓடடா! மலபாண்ட மாகிய சரீரம் அநித்தியம். எந்த நிமிஷத்தில் பிராணன் இதைவிட்டுப் பிரிகிறதோ! அந்த நிமிஷத்திலேயே சவமென்னும் பெயர் உண்டாய்விடுகிறது. பருத்த சரீரியான கும்பகர்ணனும், பரம துஷ்டனான ராவணனும், கொடியவனான ஹிரண்யனும் பரந்தாமனால் மாண்டனர். மகா பலசாலிகளாகிய அவ்வரக்கர்கட்கு இன்ன நிமிஷத்தில் எமன் வருவானென்று தெரியவில்லை. ஆகவே, அற்பர்களாகிய நமக்கு சரீரம் அழியுங்காலம் எப்படித் தெரியும்? நமது கண்களுக்கு எதிரில் பிளேக் கட்டியுண்டாகி படீரென வெடித்து இறந்தவர்களும், பேதி கண்டு ஆவி முடிந்தவர்களும், 'மகோதர' மென்னும் வியாதி தோன்றி வயிறு பெருத்து வையகம் துறந்தவர்களும் கணக்கிலர்; நோய்களையே மிருத்யுக்களென்னலாம். நோயில் இரண்டுவிதமுண்டு. ஒன்று சரீரத்தைப் பற்றியது. மற்றொன்று மனதைப் பற்றியது. சரீரத்திலுண்டாகும் நோயை மருந்தால் பரிகரிக்கலாம். மனோ வியாதிக்கு மருந்தில்லை. மனதுக்கு ஏன் வியாதியுண்டாகிறது? பொறாமை முதலிய தீக்குணங்களே காரணம். பிறருடைய செல்வத்தையேனும் பிறவற்றையேனும் நோக்கிப் பொறாமை மிகுவதால் நம்மனம் கெடுகிறது. அயலார்க்குத் தீங்கிழைப்பதிலேயே திருஷ்டி பாய்கிறது. அத்திருஷ்டியுடனேயே அதற்கான பிரயத்தனங்கள் செய்தும் அவை பலியாமற் போவதால்—அவற்றின் மூலமாக நாமே கெடுவதால்—மனம் வியாதியை யடைகிறது. நம் வாழ்க்கையே அநித்யமாயிருக்கும் போது, விரோத கோப மோக லோப ரோகாதிகள் நமக்கெதற்காகவோ? பிறர்க்குக் கேடு சூழ்ந்திடும் சித்த விருத்தியை யொழித்து ஸ்வசித்தர்களாய் தர்ம மார்க்க தரிஸிகளாய் ஆகவொண்ணாதோ?

"காடோ செடியோ கடற்புறமோ கனமே மிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமே செறிந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேன் உடல் விழுமிடம்
நீடோய் கழுக்குன்றில் ஈசா உயிர்த்துணை நின்பதமே!

* * * * *

"நன்றி மறப்பது நன்றன்று"

என்றார் நாயனார். நாய்க்கு ஒரு பிடி சோறு போட்டால் போதும். அது முதல் பட்சம் பாராட்டும். நாம் வலியத் துரத்தும்

வரையில் வாலைக் குழைத்துக்கொண்டு நம்முடன் ஓடிவரும். கிட்ட நெருங்கும். நம் வீட்டையே நாடும்; அடித்தாலும், தள்ளிவிட்டாலும் போகாது. ஒரு தடவை உணவளித்தவனிடம் விசுவாசம் பாராட்டும் வழக்கம் நாய்க்கு இல்லை. ஐயோ! இந்த நன்றியறிவும் தன்மை மாந்தர்க்கு ஏன் இல்லையோ? மனிதன் பன்முறை ஒருவரிடத்து அன்னமுண்டாலும் அத்துடன் கை கழுவுவதையன்றி அன்னமிட்டவனிடம் அன்பு பாராட்டான். அவன் வீட்டில் கன்னமிட, அவன்மீது கோள் கூற, அவனைக் கெடுக்க, ஒழிக்க எப்போது சமயம் வாய்க்குமென்று எதிர்பார்ப்பான். இத்தகைய நராதமர்களை ஞாலத்தில் எண்ணிறந்தோர், "அரிதரிது மானிடராதலரிது" என்றனர். நன்றியற்ற மானிட ஜன்மத்திலும் நாயின் பிறப்பு உயர்வுடையதாகு மன்றோ!

* * *

"பெண்ணென்றால் பேயும் இரங்கும்"

என்பார். பேயினுங் கொடிய பேய்கள் ஞாலமீது மிகுந்து போயினர்! இரும்பினுங் கல்லினுங் கொடிய இளகாத மனத்தினராயினர். இறைவனே இவர்களை ஏன் படைத்தாய்? சிலர் பற்பல காரணங்கள் ஸ்திரீகளை ஸதா ஹிம்ஸிப்பதும், அன்னிய நங்கையரை அம்பிகை போற்கருதிடாமல் வேறுவிதமாகத் துர்நினைவு மிகுந்து நிந்தை புரிய வழங்குவதும், நித்தியமும் காணும் காட்சியாக நிலவுகின்றது. இது படிப்பு வாசனையுள்ள மனிதர்களிடத்தும் தோன்றுவதும் இன்னும் பெரு வியப்பு—பரம ஆச்சரியம். பேயினும் கடையர்களென அவர்களை ஏன் கூறவொண்ணாது? பரஸ்திரீகளைச் சகோதரிகளாகப் பாவித்து அன்பு பாராட்டுவது விவேகிகளின் இயல்பு. அவ்வாறின்றி அவர்களைக் கெட்ட நோக்குடன் பார்ப்பதும், பிறரிடம் அவர்களைப்பற்றி மானபங்கமான வார்த்தைகளை வசனிப்பதும், அபலைகளான அவர்களை அடிப்பதாயும், கொல்வதாயும் வேறுவித உபத்திரவங்கள் செய்வதாயும் வீரம் பேசித்திரிவதும் பரம துஷ்டர்களின் ஸ்வபாவம். கெட்ட நினைவோடு அபலமாதர்களைக் கிட்டுவது பெருங்குற்றம். அத்தகைய மூடர்களுக்குப் புத்திவரும்படி தக்க சிக்ஷை விதிக்கக் கடவுளும், அவ்வொரு பெருந் தெய்வத்தின் அருமைபெறு மதிகாரம் உலகில் வரும் வழியாகி நிற்கின்ற மன்னனும்; அவனது ஆக்ஞையும் ஸர்வசித்தமாயுள்ளது. அடாதுசெய்பவர் படாது படுவர். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். எனவே மண்ணினின்றும் பெண்ணோரம் சொல்லவேண்டாம்.

* * *

"இலவங்காத்தகிளிபோல்"

மனிதனுடைய வாழ்க்கை. எதை அதிருஷ்டமென்று கருதி எதிர் நோக்கி நிற்கின்றனனோ—அதுவே அவனை ஏமாறவைத்திடுகின்றது. மணிமாடமேடை சதுரங்க சேனையொடு கூடிய வாழ்வுமோர் இந்திர ஜாலக்கோலம். மனிதனுக்கு இகலோகபோகம், அஸ்திரம், தனம், ஸதிசுதர், ஹிதர் இவை யெல்லாம் சாஸ்வதமென்று நம்பி மெய் மறந்து பாழ் படுவோர் பல்லோர். எண்ணெய் இருக்குந்தனையும் தீபம் அத்தியந்த பிரகாசத்தோடும் எரியும். அதுபோல் புண்ணியமிருக்கும் பரியந்தம் மேற்கூறிய ஸதிஸுத ஹிதர்களிருப்பார்கள். புண்ணிய முடிந்த மறுநாட்போது எண்ணெய் முடிந்த தீபத்தைப் பிரகாசம் விட்டொழிவது போல்தொலைந்துபோவர்—அகன்றிடுவார். தேனை மொய்க்கும் ஈக்கள்போல் ஜனங்கள் மனிதனைப் பணம் இருக்கும்வரைப் பற்றித்திரிவார். அவனைப் பற்றிய புகழ்ப்பறை கொட்டி முழக்கிடுவார். இன்னிசை, நன்னயம் வழங்கிடுவார். அந்த ஜனங்கள் பணம் முடிந்து வெறும் பையான நிமிஷத்தில் அந்நியமான சவமொன்றைக் கண்டது போல் தூரத்தில் ஓடி மறைந்திடுவார். எல்லாம் உண்டானபோது கோடானு கோடி உறவின் முறையார் தொண்டாகவே வந்து தொழுதிடுவார். செல்வம் சிந்திவிட்டால் கண்டாலும் பேசார், அழைத்தாலும் வாரார். கலைக்குதவாதவன் எதற்கு-அவன் உறவு எற்றிற்கு என்பார். ஞால இயற்கை இதுவே தான். இப்பூதலத்தில் தன் அங்கத்தை விட தனக்கு எது ஹிதமுள்ளது? அங்கம் பெரிதோ — தங்கம் பெரிதோ? அங்கமே பெரிது. அம்மாட்சி மிக்க அந்த அங்கமும் தன்னை விட்டு பிரியும் போது, தன்னுடன் பின் தொடராத போது—அந்நியரும் ஸம்பத்தும் ஸதிஹிதரும் துணை வந்து நிற்பாரோ? ஏன் கருதிடவில்லையோ இதனை? மனிதன் இஹலோகத்தை நம்பி, வீணே துன்மார்க்கத்தில் பிரவர்த்திப்பதால் அவிவேகியாகி அல்லல் அடைகிறான். குணமே பூஷணம். மானமே சௌந்தரியம், மரியாதையே சொந்த பந்து. அதில்லாமல் மணிஹேமாதிகள் பூஷணமல்ல, நல்ல நடத்தையோடு, எல்லாரிடமும் சாந்த ஸ்வபாவமுள்ளவனாய் வசனிப்பதும், வசிப்பதும், வாணாள் கழிப்பதுமே மனிதனுய்யும் வழி, அதுவே கீர்த்திக்கு மார்க்கம்; உய்யும் வழி. பிரபஞ்சம் அநித்தியமென்று மனதில் பட்டுவிட்டால் அக்கிரமத்தில் புத்தி செல்லாது.

* * *

"கொக்கு ஒட்டையைப் பழித்தது போல"

என்பதோர் பழமொழி. கொக்கு ஒட்டையின் கழுத்து நீளமென்று இகழ்ந்ததாம். தன் கழுத்தை யது பார்த்துக் கொள்ள

வில்லை. இது போல சிலர் தங்கள் வீடு நிறையக் குப்பைகளை வைத்துக் கொண்டு எதிர் வீட்டுக்காரனுக்கு சுகாதார விரோத தேசம் புரிகின்றார்கள். மதவிஷயங்களிலும் இப்படியே. பிழைகள் கூறுவதற்கு இடமில்லாத மதஸ்தாபிதம் இல்லை. ஒவ்வொரு மதத்திலும் மற்றவர் குறைபேசுதற்கு சில அம்சங்கள் இருக்கவே செய்கின்றன. மூடபக்தியும் அவிவேகமும் எந்தநாட்டிலும் முண்டு. ஒருநாட்டில் குறைவாயும் மற்றொரு நாட்டில் அதிகமாயும் இருக்கலாம். பிறர் போதனையின் வசமாகி ஸ்வமத நம்பிக்கையை யிழந்து அன்னிய மதப் பிரவேசமாகுகை பெரியதோர் பாவ கிருத்தியம். கடவுள் ஸர்வ பரிபூரணர் எந்த மதத்தில் நாட்டினும், தம் முன்னோர்களின் மதமார்க்க அநுஸாரணியாகத் தான் நடந்து கொண்டால் ஈருலக வாழ்விலும் இன்ப நலம் துய்த்திடலாம். நம்பினவன் நலம் பெறுவான். நம்பினால் வம்பில்லை. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

* * *

"இல்லாள் அகத்திருக்க இல்லாத தோன்றில்லை"

பெண் மணிகளை நம்பிய ஆடவர்களின் வாழ்க்கை நலம் செம்மையுற வேண்டியுளது. ஈசனார் தம் கட்டளை அவ்விதம். அங்ஙனமாக தங்களை நம்பியுள்ள ஆடவரையும் அதற்கேற்பத் திருப்தியாக தர்வித்துப் புளகித முறச்செய்திட வேண்டும். ஸ்திரீகள் புருஷனையே ஸர்வமுமாகக் கருதிப் போற்றக்கடவர். புருஷனை அலக்ஷியம் செய்யும் ஸ்திரீக்கு மங்களம் அரிது. யாவும் வட்டியும் முதலுமாகக் கடைசியிற் பெற்றிடுவாள். அவள் உயிரோடிருப்பினும் பிரேத சரீரமேயாவாள். தன் கொழுநன் பேச்சை லக்ஷியம செய்யாமாது பிறகு அவன் ஒன்று சொல்லத் தான் ஒன்றாக நடப்பதுமாய் மாறிக் கடைசியில் புகுந்த வீட்டை விட்டு யாவருக்கும் தெரியாமல் பிறந்த இல்லத்திற்கோடி அங்கு சில தினங்கள் கிடைக்கும் சோற்றையுண்டு, அப்பால் அதற்கும் திண்டாட்டமாகிப் பரம ஸங்கடமடைவாள். பெற்றோர்கள் தம் புத்திரிகளை இளமையிலிருந்துதானே அறிவின் கனிகளாக்கி விநயம் குளிர்ந்த வசனம் ஸாந்தம் அடக்க மாதிய நற்குணங்களைப் புகட்டித் திருத்தி கிரமப்படுத்தவேண்டும். ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே.

இந்திரஜித்

(முன்தொடர்ச்சி)

பெரிய செட்டியார் சொன்னதை நன்றாய் மனதில் வாங்கிக்கொண்ட சின்னவர் அந்தச் சாஸ்திரியை நன்றாய்க் கவனித்துக் கொண்டிருந்தார். அவருடைய தலை மயிரைப்பற்றி ஏதோ ஸந்தேஹமுண்டாயிற்று. அதில் சில இடங்களில் நிறம் ஒரேவிதமாயில்லை. அதைப் பார்க்கப் பார்க்க அது பொய் மயிரென்றே தோன்றிற்று. ஆனால் அந்த மாயாவி இவ்வளவு அஜாக்கிரதையாய்ப் பிறர் எளிதில் கண்டு பிடிக்கும்படி விடமாட்டானே யென்று ஸந்தேஹமுண்டாயிற்று. அது வரையில் காசி நாதராய ராய் வந்த ஸமயத்தில் அவனுடைய செம்பட்டை மயிரையும் தாடியையும் கண்டு, ஸந்தேஹமுண்டாயிற்று. அவை பொய்யென்று அவனுடைய கூட்டாளியே அதை ஒப்புக் கொண்டு சுட்டிக் காட்டிச் சிரிக்கவில்லையா? மற்றத் தடவைகளில் இந்திரஜித்தென்ற ஸந்தேஹமுண்டாகவில்லை. ஒரு வேளை வெகு ஜாக்கிரதையாய் கவனித்துப் பார்த்திருந்தால் அந்தந்த வேஷம் வெளியாயிருக்குமென்று தோன்றுகிறது.

கோவிந்தய்யராய் வந்தபொழுது அனேக உபாயங்களை செட்டியாருக்கு உபதேசித்திருந்தான். காசிநாத ராயராய் வந்த பொழுது, ஸந்தேஹமுண்டானவுடன் பொய் மயிரை ஏன் தட்டி விடக்கூடாது. அப்படியே சின்னவர் பல ஸமயங்களில் அஜாக்கிரதையாய் கைபட்டு இடித்ததுபோல் முழங்கையால் சாஸ்திரியின் தலை மயிரைத் தட்டி விடுவதற்குப் பார்த்தார். ஆனால் எப்படியோ அவர் அதற்கு அகப்படாமல் தப்பித்துக் கொண்டேயிருந்தார்.

இந்த புது விஷயத்தைக் கண்டு பிடித்தவுடன் சின்னவர் அதை மனதில் அடக்கமுடியாமல் குடுக்கைக் காய்போல் பறந்துகொண்டு பெரியவரிடம் அவருடைய மனைவியையும் தனியே ஜாடை செய்து அழைத்து, தன் ஸந்தேஹத்தையும் அதற்குக் காரணங்களையும் தெரிவித்தார்.

பாக்கியம் "பொய் மயிரென்பதில் ஸந்தேஹமேயில்லை. எனக்கு அப்பொழுதே தெரியுமே அதிலும் வெகு வேலைத்தனமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது" புருஷர்களுக்கு இந்த நுட்பமெல்லாம் தெரியாது. எங்களுக்கு இது கண்டவுடனேயே கண்ணில் படும். இதை நீ கண்டு பிடித்தது புத்திசாலித்தனமே" யென்றான். செட்டியார் அப்படி மெச்சி அவருக்கு வெகுமானம் செய்யாமல் "அடே மட சாம்பிராணி! அப்படித்தான் இருந்ததென்று வைத்துக்கொள், அதைத் தட்டிவிட்டு, அவனை வெளிப்படுத்துவதில் நமக்

கென்ன லாபம் அதைக் கண்டு பிடித்து, ஜாடையாய் ஒதுங்கியிருந்து, நாம் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டுமல்லவா? ஆசாமி யாரென்று தெரிந்திருந்தும் நாம் அவனை ஸந்தேஹிக்கிறோமென்று காட்டிக் கொண்டால் அவனை எச்சரிக்கை செய்ததற்கு மேலாகுமே. அதிலென்ன லாபம். மேலும் ஒருவன் பொய் மயிரை வைத்துக் கொண்டிருந்தால் அவனை அதற்காகக் குற்றஞ்சாட்டி, போலீஸில் அடைக்கமுடியுமா? தலை மயிர் சரியாயில்லாதவர்கள் பொய் மயிரை வைத்துக் கொள்வது வழக்கமே. எவ்வளவோ கனவான்கள் அப்படிச் செய்யவில்லையா? அழகிற்காகப் பேர் போன அனேக சீமாட்டிகளின் மயிரும் நிறமும் தேஹ அமைப்பும் உண்மையல்லவென்று ருஜுப்படுத்தி, அவர்களை கிரிமினல் குற்றஞ் சாட்டுவதுண்டோ? ஆகையால் நாம் எவ்வளவு தூரம் இதை உபயோகிக்கலாமென்று பார்க்கவேண்டுமேயல்லாது அசட்டுத் தனமாய் காரியத்தைக் கெடுத்துக் கொள்ளுவதில் லாபமென்ன? அவன் நம்மை மோசஞ் செய்ய ஏதாவது குற்றமான வழியில் மாட்டிக் கொள்ளுகிறானா?" வென்று கவனிக்கவேண்டும். ஏதாவது அற்ப விஷயத்தில் அவனுடைய கையைக் காட்டினாலும் போதும். உடனே பூனை எலியைப் பிடிப்பது போல் குறவனைப் பிடித்துக் கைக்கட்டை மாட்டி விடுவதில் தடையென்ன? அவனுடைய உபாயங்களை வந்தவுடனாவது திடீரென்றாவது வெளிப்படுத்தி விடமாட்டான். அடே அப்பா! அவனுடைய ஆழத்தைக் கண்டு பிடிப்பதென்றால் ஸாமான்யமா?" வென்றார்.

ஆகையால் அவர்களை எப்பொழுதும் கண் பார்வையில் வைத்துக் கொண்டிருப்பதற்கு ஒரு யுக்தி செய்தார்கள். அதாவது அவர்களை பங்களாவிலேயே ஜாகை வைத்துக் கொள்ளச் சொல்லவேண்டும். முன் தடவையைப் போல் மாட்டேனென்று தட்டி விட்டால் நினைத்த பொழுது ஓடிப்போவதற்கு சௌகரியமென்று அந்த ஏற்பாடு செய்தார்களென்று நிச்சயித்து, ராணியை அந்தச் சத்திரத்திலாவது வேறு பக்கத்து வீடுகளிலாவது ஜாகைவைத்துக் கொள்ளச் சொல்லி மாறுவேஷங் கொண்டு, அவர்களை இரவு பகலாய் கண் கொட்டாமல் கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்தி, அங்கேயே அமர்த்தி விடுகிறதென்று ஆலோசிக்கப்பட்டது. ஆனால் செட்டியார் அழைத்தவுடன் தடை சொல்லாமல் அவர்கள் ஒப்புக்கொண்டதைக் கண்டு, ஆச்சரியமுண்டாயிற்று. "சத்திரத்தில் இடமில்லை. சுத்தமாய் வைத்துக் கொள்வதில்லை. எப்பொழுதும் சந்தடியும் சச்சரவும் இரைச்சலுமாய் இருப்பதால் சற்றுநேரம் அயர்ந்து, தூங்கவாவது படிக்கவாவது இடமேயில்லை. இப்படி முன் பின் தெரியாதவர்களிடத்தில் அன்பு பாராட்டி, ஸகல சௌக்கியங்களையும் செய்துக் கொடுக்கும் உங்களுடைய பெருந்தன்மையையும் தாராள மனதையும் நாங்கள் எப்படிக் கொண்டாட முடியும். மேலும் நான் ஆதியில் செட்டியாரிடத்தில் வாய்ப்புதட்டமாய்ப் பேசி, அபராதம் செய்ததற்கு எனக்கு நல்ல புத்தி கற்பிப்பது போல் செய்யாதவர்களுக்குச்செய்து காட்டென்ற நீதியை அனுசரித்து, இப்படி நடப்பவரும் உலகிலுண்டோ? உங்களைப்போல் ஐச்வரியத்திலும் அடக்கத்திலும் பொறுமையிலும் மரியாதையிலும் லோகமெங்கும் சுற்றிப் பார்த்தாலும் கிடைப்பதரிதென்று, பிரமாதமாய் அந்த அம்மாள் கொண்டாட ஆரம்பித்தான்.

அதைக்கண்டு சின்னவர் ஸந்தேஹித்து செட்டியாரை அழைத்து, "இவன் மாயாவியல்ல. இப்படி அழைத்தவுடன் அவன் வரவே மாட்டான். ராயராய் வேஷம் போட்டபொழுது நம்முடன் ஜாகைவைத்துக் கொள்ள வேண்டிய அவச்யமிருந்தாலும் தான் அகப்பட்டுக் கொள்ளக் கூடாதென்று தூரத்திலேயே இருந்துவிட்டான்"

பெரியவர் "ராமா! ஏது உன்னைத் திருத்துவது ஈச்வரனுக்கும் முடியாது. எதையாவது மனதில் எண்ணிக்கொண்டு, அதின்படியே மோசம் போகாதே'; யென்று முட்டிக்கொண்டேனே அவன் இங்கே ஜாகைவைத்துக் கொள்வதற்கு என்ன காரணமோ நமக்கு எப்படித் தெரியும். ஒரு தடவை செய்தபடி வேறொரு தடவை அவன் செய்யமாட்டானென்று நமக்குத் தெரியாதா? சற்றுப் பொறு அவன் மையிலுள்ள சீட்டு இன்னதென்று முதலாவது இறங்கத்தைக் கொண்டு கண்டுபிடித்துப் பார்ப்போ" மென்றார்.

சாஸ்திரியும் அவருடைய மனைவியும் பங்களாவில் வந்தது முதல் செட்டியார் தன் வேலையைக்கொஞ்சமேனும் கவனிக்காமல் எப்பொழுதும் அவர்களுடன் இருந்து, அவர்களுக்கு ஸகல உபசாரங்களையும் செய்வதிலேயே நோக்கமாயிருந்தார். ஒரு தடவை சாஸ்திரியாரின் பெண்ஜாதி அதைக் கவனித்து, "உங்களுடைய சொந்த வேலை நடவாமல் நாங்கள் இடையூறாய் வந்து சேர்ந்திருக்கிறோமென்றெண்ணுகிறோ" மென்றாள். ஆனால் செட்டியார் அதைக் காட்டிக்கொள்ளாமல் வெகு அழகாய் பதில் சொல்லிவிட்டார் 'நீங்கள் என்ன அடிக்கடி வந்து நிற்கிறீர்களா? கோடி ரூபாய் வைத்தழைத்தாலும் வரக்கூடியவர்களா புருஷனும் பெண்ஜாதியும் இப்படிக் கல்விமான்களாய் அமைந்திருப்பது வெகு ஆச்சர்யம். கல்வியென்றால் உயிரைக் கொடுப்பேன். மேலும் என் காரியத்தை கவனிப்பதற்கு எத்தனையோ ஆசாமிகளுண்டு. உங்களைக் கவனிப்பதைத் தவிர எனக்கென்ன வேலை" யென்றார்.

சாஸ்திரியோ ஓயாமல் மலைகளில் சுற்றுவதும் அபூர்வமான கல்லுகளையும் உலோஹங்களையும் கண்டுபிடித்துச் சேர்ப்பதுமாயிருந்தார். செட்டியார் "ராமா! கவனித்தாயா? என்னவேலைக்காரன். வேஷம்போட்டால் இப்படியல்லவா இருக்கவேண்டும்' தலை முறை தலைமுறையாய் இந்தத் தொழிலில் பழகினவன்கூட இவ்வளவு சுறு சுறுப்பாய் வேலை செய்யமாட்டான். ஒரு நிமிஷமும் வீண் போகாமல் உழைக்கிறான். சமீபத்தில் ஏதோ வெளிப்படப் போகிற'! தென்றார்.

ஒருநாள் சின்னவரும் சாஸ்திரியும் வெளியில் போயிருக்கும் பொழுது, சின்னவர் பொழுது போகாமல் "சாஸ்திரியாரே அதோ ஜலம் பட்டு வழவழவென்றிருக்கும் பாறை எந்த வகுப்பைச் சேர்ந்ததென்றார். சாஸ்திரியார் அதை உற்றுப் பார்த்து, "இன்னும் சற்று அதிகமாய் அதில் அப்பிரகம் கலந்திருந்தால் முன்காலத்தில் மலைபோன்ற பனிக்கட்டிகளில் அகப்பட்டுக் கொண்டு வரப்படும் கற்பாறையின் லக்ஷணங்களுள்ளதென்று சொல்வேன் ஆனால் சற்றுக் குறைந்திருக்கிறதென்றார். சின்னவர் "அப்படியா? வழக்கமாய் இருக்கவேண்டியது கூட காணப்படவில்லையா?" வென்றார். சாஸ்திரியார் செட்டியாரை ஏதோ ஒரு விதமாய்ப் பார்த்து, மெதுவாய் வேறு குரலுடன் நூற்றுக்குப் பத்துவீதமிருப்பது வழக்க"மென்றார் உடனே சின்னவருடைய வயிற்றில் இடிவிழுந்தது, நடு நடுங்கி, ஐயோ! அந்த மஹாபாவி வந்து விட்டானே, நாம் எண்ணினது உண்மையாயிற்றே. நம்முடைய ரஹஸ்யத்தை வெளியில் போட்டு உடைத்து, வாயில் மண்ணை வாரிப் போட்டு விடுவானோ, வென்று, பயந்தார். "என்னைக் காட்டிக் கொடுத்தால்——" சாஸ்திரி தாங்கள் சொல்வது விளங்கவில்லையென்று, ஒன்றும் தெரியாத ஸாதுவாய்த் தான் விளங்கினார். ஆனால் ஒன்றையும் முன் யோசனையில்லாமல் ஒப்புக்கொள்ளக்கூடாதென்று வாயை மூடிக்கொண்டிருந்தார்.

மறுநாள் செட்டியார் தடபுடலாய் ஓடிவந்து, துடை தட்டிக் கொண்டு "ராமா! கேட்டாயா? நான் சொன்னேனே கையைக் காட்டிவிட்டான்' எனக்கு அப்பொழுதே தெரியுமே, இன்றைக்கு என்னிடத்தில் வந்து என்ன கொண்டுவந்தான் தெரியுமா? நமது மலையிலிருந்து தங்கம் பாய்ந்த ஒரு சிறு பாறையைக்கொண்டுவந்து காட்டினான். சின்னவர் "உண்மையா?" பெரியவர் "ஸந்தேஹமென்ன, அவ்விடத்தில் ஓர் தங்கக்கோடு ஓடுகிறதென்றும் அதை வெட்டியெடுத்து வேலை செய்தால் நல்ல லாபம் கிடைக்குமென்றும் சொன்னான். இப்படி அடிப்போட்டால் எங்கே முடியுமென்று எனக்குத் தெரியாதா? இது இருக்கட்டும் அதைப்பற்றின விஷயங்கள் எல்

லாம் அவருக்கு கெட்டுறவாயிருக்கிறது. இந்த விடத்தின் பூகர்ப்பம் ஆழம் அமைப்பு இதைச் சுற்றியிருக்கும் தேசத்தின் அமைப்பு முதலிய யாவும் அவன் பண்டிதர்களுக்குக் கொடுத்த பிச்சை". சின்னவர் "இதென்ன மோசமாயிருக்கிறதே; நாம் பேலே செய்யவேண்டியதென்ன? பெரியவர் வாயை மூடிக்கொண்டு, மேல் இறக்கம் எப்படி வருகிறதென்று கவனிக்கவேண்டும். அந்தச் சுரங்கத்தை வேலை செய்வதற்காக ஒரு கம்பெனி ஏற்படுத்தி அதில் தனக்குப் பங்கு கொடுக்கவேணுமென்று கேட்பான். அல்லது தனக்கு ரொக்கமாய் இவ்வளவு கொடுத்து விடவேண்டுமென்று கேட்பான். உடனே கையும் களவுமாய்ப் பிடித்துப் போலீஸில் ஒப்புவிக்கலா"மென்றார்.

அடுத்த சில நாள்கள் வரையில் சாஸ்திரிகள் முன்னைவிட அதிக சுறுசுறுப்பையும் ஊக்கத்தையும் காட்டினார். மலைகளில் எப்பொழுதும் திரிந்து கொண்டு சுத்தியால் பாறையைத் தட்டிக்கொண்டேயிருந்தார். தங்கக்கோடு பாய்ந்த சிறிய கற்பாறைகளை பெயர்த்துக் கொண்டுவந்து செட்டியாரைப் பார்த்து, அவைகளைப் பொடியாக்கிக் கழுவி சுத்தஞ் செய்வதற்கு இவ்வளவு செலவாகுமென்று எடுத்துச் சொன்னார். இப்படிப்பட்ட வார்த்தை செட்டியாருக்குக் கேட்டுக்கேட்டு அலுத்துப் போனதே. பொழுதுவிடிந்தால் இதைப்பற்றி ப்ராஸ்பெக்டஸ்களும் விளம்பரங்களும் விதிகளும் விலக்குகளும் எழுதியனுப்புவதும் கம்பெனிகளை உண்டுபண்ணுவதுமே அவருக்குத் தொழில்; ஆகையால் அவர் இதைக்காதில் போட்டுக்கொள்ளாமல் இன்னும் மேல் விஷயங்கள் எப்படி வெளிப்படுமென்று காத்துக் கொண்டிருந்தார். அதி சீக்கிரத்தில் அது வெளியாகுமென்பதில் அவருக்கு ஸந்தேஹமேயில்லை. ஆகையால் அதில் ஏதோ ஆசைப்பட்டவரைப்போல், காட்டிக்கொண்டு அவர் சொல்வதையெல்லாம் வேத வாக்கியமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார். இப்படிக் கடவுளும் இந்திரஜித்தும் எப்படி வழி விடுவார்களோ வென்று செட்டியார்கள் காத்துக் கொண்டிருக்கையில் ஒரு நாள் அவர்கள் சாயங்காலத்தில் பேடா போகும்பொழுது எதிரில் யார் வந்தார்கள் தெரியுமா? விசுவநாத சாஸ்திரியும் செட்டியாரின் பழைய நண்பரான கங்காதர சாஸ்திரியும் வெகு அன்யோன்யமாய் கைகோர்த்துக்கொண்டு வந்தார்கள். ஏதோ வெகு முக்கியமான விஷயத்தைப்பற்றி வாதித்துக் கொண்டிருந்தார்கள்.

வடக்கிலிருந்து வந்த பண்டிதராய் வேஷம் போட்டு, வயிரங்களைச் செய்து காட்டி, செட்டியாருடைய கம்பெனியின் பங்குகளைப் பறக்கவிட்டு ஏராளமான நஷ்டத்தை இந்திரஜித் உண்டுபண்ணினது முதல் வெள்ளையன் செட்டியாருக்கும் கங்காதர சாஸ்திரிகளுக்கும் சற்று மனத்தாங்கல்

உண்டாயிற்று. ஆனால் அதெல்லாம் இப்பொழுது கொண்டாடக்கூடிய சமயமா? அந்த மாயாவியைப் பிடிக்கப் போகிறோமென்ற ஆத்திரத்தில் செட்டியார் விச்வநாத சாஸ்திரியாரை சின்னவருடன் பங்களாவிற்கு அனுப்பிவிட்டுத் தானும் கங்காதர சாஸ்திரியாரும் பின் தங்கினார்கள்.

செட்டியார் "சாஸ்திரிகளே! இந்த ஆசாமியை உமக்குத் தெரியுமா?"

சாஸ்திரியார் "தெரியுமாவா? தெரியாமலென்ன; இவருடைய பெயர் விச்வநாத சாஸ்திரியார். ஸர்வ கலாசாலையில் பூகர்ப சாஸ்திர உபன்யாஸகர். தத்வ சாஸ்திரத்தில் நிபுணரென்று எங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவர். தாதுவர்க்கங்கள், கனிகள் உலோஹங்கள் முதலியவைகளைப்பற்றி, இவருடைய வார்த்தைக்கு அப்பீல் இல்லை. செட்டியார் "அது சரிதானய்யா இந்த ஆசாமி அவரே யென்று உமக்கு எப்படித் தெரியும். இதற்கு முன் இவரைப் பார்த்துப் பேசி பழகியிருக்கிறீரா? வங்காளிப் பண்டிதர் நம்மை வேலைத்தனஞ் செய்ததற்கு இது தம்பியோ."

சாஸ்திரியார் "அதே ஆசாமி யென்று நான் எங்கே வேண்டுமானாலும் பிரமாணஞ் செய்கிறேன். விச்வமும் நானும் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தவர்கள். இவருக்கு விவாஹமாயிற்று. அவள் என் மனைவிக்கு ஸாக்ஷாத் அத்தை பெண். அவளால் இவருக்கு ஏராளமான சொத்துக் கிடைத்திருக்கிறது. இவ்விருவரையும் என்னைவிட யாருக்கு நன்றாய்த் தெரியும். இங்கே வந்திருப்பதாய்க் கேள்விப்பட்டேன். ஏதேனும் தகுந்த காரணமில்லாமல் அவன் இங்கே வரமாட்டானென்று, அவனைப் பார்க்க வந்தேன்,"

செட்டியார் "அப்படியானால் அவன் பொய் மயிர் ஏனையா வைத்துக் கொண்டிருக்கிறான்"

சாஸ்திரியார் "அதிலென்ன பிசகு அவனுடைய தலை முன் புறத்தில் ஒரே வழுக்கை விழுந்திருக்கிறது. அதை மறைப்பதற்குப் பொய் மயிர் வைத்துக்கொண்டால் அதுவும் ஒரு குற்றமா ?.

செட்டியார் "இது முற்றிலும் அக்கிரமம் படுமோசம், இப்படி மனிதர்களை ஏமாற்றுவது ஸஹிக்கமுடியாத விஷயமென்று சீறினார்.

சாஸ்திரிகள் கொஞ்சமாவது தயை தாக்ஷிண்யமில்லாமல் ஹோவென்று இடிபோல் சிரித்து, 'பலே பலே என்ன புத்திசாலி சங்கதி இப்படியா? விச்வநாத சாஸ்திரி இன்னாரென்று கண்டுபிடித்து விட்டீரோ. உமது வெகு நாளைப்பற்று வீரவுக்காரனை ராவ்பகதூர் இந்திரஜித்தென்று எண்ணினீரல்லவா? அடாடா! என்ன தந்திரம் என்ன ஸாமர்த்தியம்

என்ன சாதுர்யம். சிரித்துக் குடல் அறுந்து போய்விடும் போலிருக்கிறதே" யென்று துள்ளித் துள்ளிக் குதித்து சிரிப்புத் தாங்காமல் கண்களில் நீர் சொரியத் தவித்தார்.

செட்டியார் கோபமும் கர்வமும் முகத்தில் பொங்க "நிறுத்தும் உமக்குச் சிரிப்புக்கூட வேணுமா? இப்படி முன் ஒருதரம் என்னைத் தொழுவில் மாட்டிவிட்டு, நீர் மெள்ளக் குழி நரிபோல் தப்பித்துக் கொண்டுவிட்டீர். பெரிய மனுஷ்யனென்றால் உமக்கே முதல் தாம்பூலம் கொடுக்கவேண்டும். சிரிப்பதற்கு வெட்கமில்லையா? மேலும் அந்தப்பயல் யாராயிருந்தால் எனக்கென்ன அத்தானும் அம்மாஞ்சியாம். என்னை ஏமாற்றுவதற்கு வழக்கம் போல் அடி போட்டிருக்கிறான். இந்திரஜித்தோ இல்லையோ அது எப்படி வேண்டுமானாலும் போகட்டும் இந்த முடிச்சவுக்கும் பேர்வழி இந்த மலைகளில் தங்கரேகை ஓடின கல்லுகளை அங்கங்கே ஒளித்து வைத்துத்தான் கண்டு பிடித்ததாகவும் ஒரு கம்பெனி ஏற்படுத்த வேண்டுமென்றும் காக்கையும் நரியும் வெள்ளரித் தோட்டம் போட்ட கதையைப்போல் ஏதோ கந்தப்புழுகை என்னிடத்தில் அவிழ்க்கிறான்."

சாஸ்திரிகள் வயிற்றைப் பிடித்துக்கொண்டு "கூஹூ இனி என்னால் சிரிக்கமுடியாது. செத்துப் போய்விடுவேன். இப்பொழுதே ஓடிப்போய் சாஸ்திரியிடத்தில் சொல்லா விட்டால் எனக்கு வயிறு வெடித்து விடுமென்று ஓட்டமாய் ஓடி விசுவநாத சாஸ்திரியும் சின்ன செட்டியாரும் மெதுவாய்ப் போய்க் கொண்டிருப்பவர்களை பிடித்து என்னமோ அலறினார்.

அதற்குள் செட்டியார் வேறு வழியாய் பங்களாவிற்கு வந்தார். அரை மணி நேரத்திற்குள் விச்வநாத சாஸ்திரியார் தன் மனைவியுடன் செட்டியார் இருக்கும் அறையில் பாய்ந்து கோபத்தால் உடம்பெங்கும் படபடக்க கண்கள் நெருப்புப் பொறிபோல் சிவக்க, காது செவிடு படும்படி என்ன போக்கிரித்தனம் இது. உம்மைப்பல தடவை நாமம் சாத்தின பலேகைக்காரனை இந்திரஜித்தென்று ஸந்தேஹப்பட்டு, தந்திரமாய்ப் பிடித்து, ஜயிலுக்கு அனுப்புவதற்காக என்னையும் என் மனைவியையும் உமது பங்களாவிற்கு அழைத்திருக்கிறீராம்.

செட்டியார் "அதற்கதிகமான கோபத்துடன் தடையென்ன. நீ இல்லையென்று இப்பொழுதும் யார் நிச்சயமாய்ச் சொல்ல முடியும். அதெல்லாமென்னத்திற்கு நீ கன்னக்கோல் பேர்வழி. யாராவது ஏமாந்தவன் அகப்பட்டால் தலையில் மிளகு அரைக்கப் பார்ப்பாய் என்னிடத்தில் உன் கையைக்காட்டிவிட்டாயே".

சாஸ்திரியார் [illegible] மெய்மறந்து, தன் மனைவியைப் பார்த்து நமது சாமான்களை அப்புறம் ஆளை அனுப்பி வருவித்துக் கொள்வோம். இந்த அற்பப் பயலின் வீட்டில் இனி ஒரு நிமிஷமாவது இருக்கக்கூடாது. வட்டிச் சீட்டுப் போட்டு, எல்லோருடைய குடியையும் கெடுத்து, வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்ட இந்த மொட்டைப் பயலுக்கு பங்களா ஆள், தேர், வண்டி, குதிரை, முண்டாசு, சட்டை என்ன வேண்டியிருக்கிறது. நாய் குப்பைமேட்டில் இருக்க வேண்டியது. அதைத்தூக்கிப்பல்லக்கில் வைத்தால் ஜாதிக்குணம் போகுமா? நான் அப்பொழுதே சொன்னேன். யாரைக் கேட்டாலும் இந்தச் செட்டிப்பயல் மஹா தரித்திரன். கோடிக் கணக்காய்க் கொள்ளையடித்து வைத்துக் கொண்டிருந்தாலும் அற்ப புத்தியிலும் பரதைத் தனத்திலும் வெடிக்கட்டின பேர்வழி யென்று ஊரார்கள் முதல் சொல்லவில்லையா? இந்த அழகிற்கு நம்மை அழைத்து வைத்து உபசாரம் பண்ணி வாழ வேண்டுமாம். திருட்டுப்பயல்களையும் மோசக்காரர்களையும் பிடிப்பதற்கு இங்கே என்ன வலைபோட்டிருக்கிறானே எவனோ வஞ்சகக்காரப்பயல் இந்த மடையனை நல்ல இரையென்று கண்டு கொண்டு பட்டை நாமம் சாத்துகிறான். அவனைக்கண்டு பிடிக்கத் திறமையில்லாமல் கண்டபேரையெல்லாம் வழி மறித்து வெகு ஸாமார்த்தியமாய் வேலைசெய்கிறதாய் நினைத்துத் துப்பறியும் தொழிலைப்பழக்கிக் கொள்ளுகிறானே. கையால் ஆகாதவன் குட்டிச்சுவற்றை உதைத்தது போல் அவனிடத்தில் ஜோட்டடிபட்டால் அந்த ஆத்திரத்தை யாரிடத்தில் வைத்துச் சாத்துகிறான். அற்பனுக்குப் பவுஷு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பானென்று இந்த முழுமூடனைப பார்த்தால் விளங்கும். இந்த மஹாநுபாவனுடைய குணங்களையும் மேன்மையையும் நாகரீகத்தையும் பற்றி இது வரையில் யாருக்கு மோசம்போய் எழுதியிருக்கிறோமே அவர்களுக்கெல்லாம் இந்த புண்யவானுடைய அற்பத்தனத்தையும் அயோக்யத்தனத்தையும் மறுத்தெழுவது ஸாத்யமல்ல. எல்லோர்க்கும் பொதுவாய் சமாச்சாரப் பத்திரிகைகளில் இந்தக் கழுதையைச் சாட்டை பிடித்து வாங்குகிறேன். இப்படி ஓர் துஷ்ட மிருகம் எங்கேயோ காட்டிலிருந்து தப்பி ஓடி வந்து மாரீசனைப்போல் வேஷம் பூண்டு எல்லோரையும் கொலை செய்கிறதென்று எச்சரிப்பது மஹா புண்யம். சீ சீ இப்படிப் பத்துப்பேர் இவனுடைய பணத்தைத் துரும்பாய் நினைத்து, மூஞ்சியில் காறித்துப்பி உண்மையைச் சொன்னாலொழிய இவனுக்கு புத்தி வராது. இனி இவன் பெரிய மனிதர்களுக்கு நடுவில் தலை காட்டாதபடி அடிக்கிறேன். புறப்படு; போவோம் வா; இந்தக் [illegible]பாவியின் வீட்டிலிருந்து அவனுடைய அன்னத்தைத் தின்றதற்காக ராமேச்வரத்திற்குப்போய் மஹாப் பிராயச்சித்தஞ் செய்து கொள்ள வேண்டுமென்று கல்மாரி பொழிவது போல் போடு போடென்று போட்டு செட்டியாரை வாயெடுக்க வொட்டாமல் அடித்தார்.

தெருவில் போகும்பொழுது ஓரத்தில் படுத்திருக்கும் நாய்கள் நாம் சற்று தூரம் சென்ற பிறகு பின்னால் குலைத்துக்கொண்டு நாம் எட்டிப்போகப் போக அதிகமாய்ச் சீறுவதுபோல் சாஸ்திரியார் அறையை விட்டுப்போனவுடன் செட்டியார் வெகு தைர்யமாய் எழுந்திருந்து "ஆனால் நீர் பொய் மயிரை மாத்திரம் வைத்துக்கொண்டிருக்கலாமோ. எனக்குத்தெரியாதென்று நினைத்தீரோ வென்று வார்த்தைக் குளறக் கோவென்று கத்தினார்.

அதைக்கேட்ட சாஸ்திரியார் திரும்பி, ஒரே பாய்ச்சலாய் செட்டியாரின் மேல் தாவி, ஆம் அப்படித்தான் வைத்துக்கொண்டிருக்கிறேன். உனக்கு இன்னும் ஸந்தேஹமிருந்தால் நன்றாய்ப்பாரென்று தலையிலிருந்த பொய்மயிரை எடுத்து, அவருடைய முகத்தில் அடித்து, இப்பொழுதாவது தெரிந்ததா வென்று அதற்கு மேல் கோபத்தால் பேச முடியாமல் வெளியில் போய்விட்டார்.

ஒரு ஜாமம் வரையில் செட்டியாருக்குப் பேச்சுமூச்சில்லை. கண் காது கிடையாது. இடித்த புளியைப் போல் உட்கார்ந்திருந்தார். தன்னை சனம் பொருந்தின திவான்பகதூர் வா. ரா. சி. வெள்ளையன் செட்டியாரை, சட்டசபை மெம்பரை, கோடீச்வரனை, ரத்தினங்களில் கிடந்து புரளுகிறவனை இப்படி ஒரு ஸாதாரண ஆசாமி நேருக்கு நேராய் சக்கைசக்கையாய்ப்பெயர்த்தெறிந்து அங்கத்தில் ஓரிடம் பாக்கியில்லாமல் அலசி, இனி உயிரை வைத்துக்கொள்ள வேண்டியதில்லை யென்று சொல்லும்படி செய்து விட்டானே. உண்மையான திருடனோ அசப்படாமல் மாயமாய் மறைந்து ஆயிரக் கணக்காய் அபராதம் விதித்து, பைசாவாரியாய்த் துரும்பு போட்டு வசூல் செய்கிறான். கண்டவனையும் போனவனையும் திருடனென்றெண்ணி எக்கச் சிக்கமாய் மாட்டிக் கொண்டு படாதபாடெல்லாம் பட்டு நாயும் பேயும் வாயில் வந்ததை யெல்லாம் சொல்லும் படியாய் ஆயிற்றே" யென்று மனம் நொந்திருக்கையில் சின்னவர் இது தான் ஸமயமென்று,

"நான் அப்பொழுதே சொன்னேனே. கேட்டாயா? எதையும் நிச்சயமாய் நம்பி விடலாமா? முதலில் ஒரு பிசகு செய்தோம். பொய் மயிர் வைத்திருக்கும் பேர்வழிகளெல்லாம் போக்கிரிகளென்று முடிவுகட்டினோம். அது தவைக்கு உதவுமா? உலகத்தில் இந்திரஜித்து மாத்திரம் தலையில் பொய் மயிர் கட்டிக்கொள்ளுகிறானென்று நினைத்தல்லவா மோசம் போனோம். எவ்வளவோ காரணங்களுண்டு பொய் மயிர் வைத்துக் கட்டிக் கொள்வதற்கு. முன் போல் நாமாவே எதையோ மனதில் நினைத்துக் கொண்டு மறுபடியும் மோசம் போனோம்.—

செட்டியார் ஆத்திரத்துடன் எழுந்து, "ஐய் ராமன் செட்டியாரவாட்! தங்களுடைய வேதாந்த உபதேசம் போதும். நீர் யாரென்றும் இங்கே உமது வேலை இன்னதென்றும் சற்று ஞாபகப் படுத்திக் கொண்டு பேசுமென்றார்.

இதில் ஒரு விசித்திரமான விஷயம். விச்வநாத சாஸ்திரியார் இந்திரஜித்தல்லவென்று தெரிந்த பிறகும் செட்டியாருக்கு அவரிடத்தில் நல்லெண்ணமில்லை. தன்னை ஏமாற்றுவதற்காக தங்கரேகை ஓடிய பாறைகளை அங்கங்கே வேண்டுமென்று மறைத்து வைத்தானென்றே நம்பினார். பிறகு, அதைப் பற்றி சுத்தமாய் மறந்து விட்டார். அதனால் விளைந்த அனர்த்தமென்ன தெரியுமா? அவருக்கு ஏதோ சில காரணங்களால் அந்தக் கிராமம் மனதிற்குப் பிடிக்காமல் அதை விற்பதாய்த் தெரிவிக்க அவருடைய போட்டியாகிய மரக்காயர் அதை உடனே சொன்ன விலைக்கு வாங்கி விட்டார். பிறகு அதின் ரஹஸ்யம் வெளிக்கு வந்தது. இரண்டு சாஸ்திரியார்களும் மரக்காயரிடத்திற்குப் போய் ஏதோ ஒரு கிராமத்தில் கோடிக் கணக்காய் லாபம் கிடைக்கும் தங்கக் கனிகள் இருப்பதாய் சில மாதிரிக் கல்களைக் கட்டினார்கள். அவர்கள் பெயர் பெற்ற வித்வான்களென்றும் அந்தத் தொழிலில் நிகரற்ற நிபுணர்களென்றும் நன்றாய் விசாரித்தறிந்த மரக்காயர் அவர்கள் சொன்ன காரணங்களால் திருப்தியடைந்து, அந்தக் கிராமத்தை வெளிப்படுத்தி, தனக்குத் தகுந்த லாபம் கிடைக்கும்படி செய்தால் அந்தக் கம்பெனியில் இவ்வளவு பங்குகளைக் கொடுப்பதென்று ஒப்பந்தம் பேசிக் கொண்டார். இது ஒருவருக்கும் தெரியாது. செட்டியாரோ ஸாதாரணமாய் நிலத்தை விலைக்குக் கணக்குப் பார்த்து, வேலிக்குக் கொஞ்சம் லாபம் வைத்து, விற்று விட்டார். அதை வாங்கிச் சட்டப்படி ஸ்வாதீனப் படுத்திக் கொண்டவுடன் மரக்காயர் ஒரு பெரிய கம்பெனியை ஏற்படுத்தி அந்தக் கிராமத்திலுள்ள தங்கத்தை வெட்டி யெடுக்க ஆரம்பித்தார்.

இப்பொழுது விச்வநாத சாஸ்திரியாரும் கங்காதர சாஸ்திரியாரும் அதில் ஏராளமான பங்குகளையுடையவர்களாய் நூற்றுக்கு 50 வீதம் வட்டி வாங்கிக் கொண்டு ஸுகமாயிருக்கிறார்கள். மரக்காயரைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. நமது செட்டியார் அவர்கள் இந்திரஜித்தைக் கண்டு பிடிக்க முடியாமல் போனது ஒரு புறத்திலும் சாஸ்திரியாரை ஸந்தேஹித்து, அவரால் அவமானப்பட்டது ஒரு புறத்திலும் தனக்கெதிரியான மரக்காயர் தன் கிராமத்தைத் தாழ்ந்த விலைக்கு வாங்கிக் குபேரனுடைய ஐச்வர்யத்தைக் கொள்ளையடிப்பது ஒரு புறத்திலும் வாட்ட, இனி எது எப்படியானாலும் எக்கேடு கெட்டாலும் கண்டு பிடிக்கும் தொழிலுக்கு நாம் பிறக்கவில்லையென்று வைராக்கிய மடைந்து ஒதுங்கி விட நிச்சயித்தார். ஆனால் செட்டிப் பிள்ளையானதால் பணத்தைக் கண்ணை மூடிக் கொண்டு பறி கொடுக்க மனம் வரவில்லை.

இப்படிச் சண்டை பேரிடத்தில் அவமானப் படவும் மனம் வரவில்லை. இன்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார். இப்படியிருக்க இந்திரஜித்தோ தனக்குச் செட்டியார் கப்பம் கட்ட வேண்டிய நாள் வந்து விட்டதென்று ஞாபகப் படுத்திக் கொண்டு அது வரையில் போட்ட வேஷங்களையும் செய்த உபாயங்களையும் ஒரு புறத்தில் வைத்து விட்டு அவைகளைக் காட்டிலும் வெகு சாதுர்யமான ஓர் தந்திரத்தைச் செய்ய ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

தஸ்தாவேஜுப் பெட்டி.

ஒருநாள் செட்டியார் தன் மைத்துனனைப் பார்த்து, "ராமா! இனி இந்தப் பாழும் பட்டணங்களில் இருப்பதில்லை. இவைகளைக் கண்டால் விஷத்தைக் கண்டதுபோலாகிறது. எங்கே பார்த்தாலும் எந்தப் பேச்சைக் கேட்டாலும் இந்த மஹா மாயாவியின் ஞாபகமே வருகிறது. ஒருவரோடும் சொல்லாமல் மூட்டையைக் கட்டிக்கொண்டு, காடோ வனமோ மலையோ தீவோ, மனிதர் கண்ணில்படாமல் நம்மையாரென்று ஒருவன் கேட்காமல் கவலையற்று சில நாளாவது காலங்கழிக்கா விட்டால் நான் அதிசீக்கிரத்தில் இறந்து விடுவேனென்று தோன்றுகிறது. எவ்வளவு காலந்தான் இப்படி நித்ய கண்டம் பூர்ணாயுஸாய் வாழ்கிறது." என்று பெரு மூச்சு விட்டார்.

சின்னவர் "ஸ்வர்க்கமா? கைலாஸமா? பாதாளமா? இந்த லோகத்தில் எங்கே போனாலும் வெள்ளையன் செட்டியாரைத் தெரியாத அசாமி இல்லை. ஒரு நாளாவது மறைந்திருக்க முடியாதென்று பிரமாணஞ் செய்வே"னென்றார். புதிதாய்ப் பணம் படைத்து பெருமை வாய்ந்திருக்கிறவர்களிடத்தில் வேலைக்கிருப்பவன் இப்படிப் பேசினாலொழிய அவர்களுக்குப் பிரிய முண்டாகாது.

பெரியவர் "அது கிடக்கட்டும். எப்படியாவது பார்த்துக் கொள்ளுகிறேன். ஸதா ஸர்வகாலம் கோடீச்வரனும் நினைக்கப்பட்டு அதற்குத் தகுந்த வேஷம் போட்டுப்போட்டு, அலுத்துப் போய்விட்டது.' என்னிஷ்டப்படி இருக்க முடியாவிட்டால் இந்தக் காசு இருந்து தான் என்னப் பிரயோஜனம். ஒருவருக்கும் தெரியாமல் மாறு வேஷம் பூண்டு, விக்ரமாதித்யனைப் போல் காடாறுமாதம் நாடாறுமாதமாயிருப்பே"னென்றார்.

சில மாதங்களாய் இந்திரஜித்தன் ஜாடையைக் காணவில்லை. ஆனால் அவன் வருவதும் போவதும் வேலைத்தனங்களைச் செய்வதும் அதற்கு பதில் செய்வதும் வெகு தமாஷாயும் போது போக்காயும் சின்னவருக் கிருந்தது. 'கெடுகின்றவனுடைய குடி கிழக்கிலே' என்பதைப்போல் இவருக்கென்ன கஷ்டம். பெரியவருக்கோ வர வர ஸந்தேஹமும் அதியரியமாய் விருத்தி யடைந்தது. ஒருவர் பாக்கியில்லாமல் ஸந்தேஹப்பட்டார். தன் மேல் தோலிடத்திலும் தலைமயிரிடத்திலும் நம்பிக்கை யில்லை. யாரைக் கண்டாலும் இவன் அந்தப்பயலே யென்று ஸந்தேஹித்துப் பின் தொடர்ந்தான். ஜனப் பரிசோதகன், உயரமும் பருமனுமுள்ள போலீஸ்சேவகன், வண்ணாரப் பையன், செட்டி குமாஸ்தா, சர்க்கார் கஜானா, டபேதார், சிதம்பரம் தீக்ஷதர், ஸப் கலெக்டர் முதலிய ஒன்றிற்கொன்று தகவில்லாத பேர்வழிகளை மாயாவியென்று நம்பித் துரத்திப் பரிசோதித்து, மாயாவி யல்லவென்று நிச்சயங் கொண்டார். தனக்குப் பயந்தே அவன் அவ்வளவு வேஷம் பூண்டதாயும் அதைத் தாண்டின பிறகு மற்றொன்றை எடுப்பதை இவர் கண்டு பிடித்து விட்டதாய் தனக்குள் மகிழ்ந்தார். முடிவில் இவருக்கு இந்திரஜித் வைத்தியம் சதளித்தாலொழிய கூடிய சீக்கிரத்தில் அவருடைய நிகரற்ற புத்தியும் தைரியமும் இருந்தவிடம் தெரியாமல் எங்கேயோ போய், முடிவில் அசாமி கேவலம் துணியைக் கிழித்துக் கொண்டு கிளம்பி விடுவாரென்று அவருடைய மைத்துனனுக்கும் தங்கைக்கும் பயம் பிடித்து விட்டது. ஆகையால் தேச யாத்திரை செய்யப்போகிறேனென்று அவர் தெரிவித்தவுடன் பாக்கியத்தம்மாளுக்கும் சின்னவருக்கும் ஸர்வமான்யம் விட்டது போலாயிற்று. பாக்கியம் கூடப் போவதில்லை யென்பதே இதற்குக் காரணம்.

செட்டியாருக்கு ஓர் யுக்தி தோன்றிற்று. ஓரிடத்தில் சிலகாலமாவது தங்கினாலல்லவா அந்த மாயாவி பின் தொடருவான். யாதொரு விசாரமுமில்லாமல் முற்றிலும் கவலையற்றிருப்பதற்கு கப்பல் யாத்திரையைப் போல் வேறொன்றுமில்லை. தபால் தந்தி டெலிபோன் சமாசாரப் பத்திரிகைகள் வட்டிக்கணக்குகள் ரிப்போர்ட்டுகள் மீட்டிங்குகள் யாதொரு பிடுங்கலுமில்லை. மார்கெட்டில் ஷேர்கள் ஏறினாலென்ன இறங்கினாலென்ன. இராஜ்யம் ஒழிந்தாலென்ன செழித்தாலென்ன. ஒரு விசேஷமும் காதில் விழ வேண்டியதில்லை.

அப்படியே பரம ரஹஸ்யமாய் தன் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்தார். தன் பெயரைச் சொல்லாமல் சின்னவருடைய பெயரில் இப்பலாமீவில் கடிதம் எழுதி, முதல் தரமான கப்பலில் முதல்தரமான சௌகர்யங்களுள்ள ஏற்பாடுகளை பணத்தை லக்ஷியஞ் செய்யாமல் முடித்துக் கொண்டார். தான் புறப்படும் சமாசாரம்

சின்னவருக்கும் பாக்கியத்திற்கும் தவிர வேறு ஒரு பிராணிக்குத்தெரியாது. பாக்கியம் ஒருவருக்கும் சொல்லவில்லை. ஒருவருக்கு மென்றால் ராஜ்யம் மாளா அதில் சேர்க்கவில்லையென்று கருத்து. அவளிடத்தில் மாத்திரம் சொல்லிவிட்டு இதை நீ ஸ்வப்னத்திலாவது ஒருவரிடத்தில் மூச்சுவிட்டாயென்று தெரிந்தால் அந்த நிமிஷமே நீ இங்கிருந்து போகவேண்டியது தான். உன்னை இன்னது செய்வேனென்று இப்பொழுது சொல்லமாட்டேன். ஜாக்கிரதையென்று 1000 கோரப்பிரமாணம் செய்யச் சொல்லி கட்டுப்படுத்தினர். அப்படியே இந்த வேலைக்காரியும் தனக்கு உயிருக்குயிராய் அந்தரங்கமாயிருக்கும் மனிதர்களிடத்தில் இதை எப்படிச் சொல்லாமலிருக்கமுடியும். படிப்படியாய் இது எவ்வளவு தூரம் போயிற்றோ யாருக்குத் தெரியும். பெரியவர் தன் பெயரைமாற்றி, கந்தஸ்வாமி முதலியாரென்று நாமகரணம் செய்து கொண்டு சின்னவருடன் தூத்துக்குடியில் கப்பலேறினார்.

அதற்கு முதல் நாள் இருவரும் சென்னை தம்புசெட்டித் தெருவிலிருக்கும் துபாஷ் கம்பெனிக்குப் போய் அங்கே மானேஜரை அழைத்து, ஏதோ ரஹஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் வந்தவுடனே ஒரு வாலிபக் கனவான் எழுந்து ஒய்யாரமாய் வெளியில் போனான். பெரியவருக்கு யாரைக்கண்டாலும் ஸந்தேஹமல்லவா. "அதோ யார்? உன் தம்பியைப் போல் தோன்றுகிறதே. அந்தக் காலிப்பயலை பினாங்கிற்கோ கொழும்பிற்கோ கப்பலேற்றி விட்டதாய்ச் சொன்னாயே" யென்று கூவினார்.

மானேஜர் சற்றுத்தயங்கி, "ஆம் ஏற்றிவிட்டதில் தடையில்லை. போகச் சொன்ன இடத்திற்கு மாத்திரம் போகவில்லை. புத்தியறியாத சிறு பிள்ளை வேடிக்கையிலும் விளையாட்டிலுமே நோக்கம். சீனாவிற்குப் போவதாய் என்னிடத்தில் போக்குக்காட்டி விட்டு, ஆக்ராவிற்கு அப்பால் ஒரு அடி கூட எடுத்துவைக்கவில்லை. அதுமுதல் இங்குமங்கும் எங்கும் குட்டிபோட்ட பூனையைப் போல் அலைந்து கொண்டிருக்கிறான். அவனுக்காவது அவனைச் சேர்ந்தவர்களுக்காவது ஒரு காசுகூட சல்லி பிரயோஜனமில்லை. நாலு வருஷங்களுக்கு முன் நல்ல காலம் பிறந்தது போலிருந்தது. தென்னாப்பிரிக்காவிற்குப் போய் தங்களுடைய வழியில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்து சென்னைக்கு வந்திருக்கிறான். காசு பணத்திற்குக் குறைவில்லை. அழகும் குணமும் ஸாமர்த்தியமும் வாய்ந்த ஒரு பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொண்டான். அவளே இவனைத் திருத்தி நல்ல வழிக்குக் கொண்டு வந்தாளென்றே சொல்லவேண்டும்" மென்றார்.

செட்டியாருக்கு ஆப்பிரிக்கா அமெரிக்கா ஆஸ்திரேலியா மோரிஸ ஜமைகா பிஜீ முதலிய பலவிடங்களில் ஏராளமான வியவஹாரங்களுண்டு. அவைகளைத் தானே நேரில் போய் சரியாய் நடக்கின்றனவா வென்று பேன்

பார்வைபார்த்து வரவேண்டுமென்ற உத்தேசத்துடன் இந்த ரூப்பிரதக்ஷிணத்தைச் செய்ய நிச்சயித்தார். அதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகளையும் செக்குகளையும் தன் வக்கீல்களிடத்திலிருந்தும் பாங்கிகளிடத்திலிருந்தும் துபாஷ்களிடத்திலிருந்தும் எடுத்து, கோர்த்திடமான எஃகால் வெகு சாதுர்யமாகச் செய்யப்பட்டு, அழகாய வர்ணம் கொடுக்கப்பட்ட ஓர் கைப்பெட்டியில் வைத்து, அதைத்தன் உயிரைப்போல் விட்டுப்பிரியாமல் பாதுகாத்து வந்தார். இன்னவருக்கு அதைக் கவனிப்பதே வேலை. அதற்கு 10000 விதமாய் அபாயங்கள் நேருமென்றும் அவைகளுக்கு இந்த உபாயங்களைச் செய்து தடுக்கவேணுமென்றும் இராத்திரியும் பகலும் தன் மைத்துனனுக்கு உபதேசிப்பதே செட்டியாருக்கு வேலை. "ராமா! ஜாக்கிரதை! வெகு ஜாக்கிரதை தெரியுமா? பிரயாணஞ் செய்யும் பொழுது கண்ணில் எண்ணெயைக் குத்திக் கொண்டிருக்கவேண்டும். அப்படியிருந்தால் அந்தக் கழுதை முண்டை நம்மை ஏமாற்றிவிட்டு, பாக்கியத்தின் நகைப்பெட்டியிலிருந்த வயிர அட்டிகையிலுள்ள கல்லுகளை அடித்துக்கொண்டு போயிருப்பாளா? ஜாக்கிரதையாயிரு? ஹுஷார். தூங்காதே. ஒரு க்ஷணமாவது இதை நமது கண் பார்வையில்லாமல் விடக்கூடாது. தெரியுமா? கப்பல் கவிழ்ந்து நாமெல்லோரும் மூழ்கினாலும் இந்தப் பெட்டியை விடக்கூடாது. செத்தாலும் இத்துடனே சாகவேண்டுமென்றார்.

அப்படி நேரவில்லை. கப்பலோ முதல்தரமான கப்பல்; கப்பல் தலைவரோ பலேகைக்காரன். தொட்டிலில் வைத்து ஆட்டுவதுபோல் ஸுகமாய்க் கப்பலை நடத்தினான். செட்டியார் ஸகல கவலைகளையும் மறந்து, சிறு பிள்ளையைப்போல் வேடிக்கையும் விளையாட்டும் சிரிப்பும் தமாஷுமாய் காலம் கழித்தார். அந்தக் கொலைகார தஸ்தாவேஜுப் பெட்டி ஒன்று மாத்திரம் இல்லாவிட்டால் செட்டியாரைக் கட்டிப்பிடிக்க முடியுமா? கப்பல் கேவலம் ஸ்வர்க்கலோகமல்லவா? அதில் ஏறின ஒரு நாழிகைக்குள்ளேயே புது ஸ்நேஹம் பிடித்து விட்டார். ஜீவாம்ருத பண்டிதரென்ற ஒரு ஆயுர்வேத நிபுணரும் அவருடைய மனைவியும் இந்தியாவிலிருந்து புறப்பட்டு பீஜீத்தீவிற்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அங்கே அதிகாரிகளின் வரவழைப்பால் ஏழுவருஷங்களுக்கு ஒப்பந்தம் செய்துகொண்டு கூலிகளுக்கு டாக்டராய் வேலையை ஒப்புக்கொண்டார். அவருடைய மனைவி பார்ப்பதற்கு வெகு புத்திசாலியான பெண். கள்ளங் கபடில்லாமல் பெருந்தன்மையுடன் செட்டியாரிடத்தில் அவள் தாராளமாய்ப் பேசுவதும் தனக்குத் தெரியாத புதிய விஷயங்களை அவள் எடுத்துச் சொல்லக் கேட்டு ஆச்சர்யப்பட்டு, மகிழ்வதும் செட்டியாருக்கு மிகுந்த திருப்தியையும் ஸந்தோஷத்தையும் கொடுத்தது. அதுவரையில் தன் பணத்திற்கும் செல்வாக்கிற்குமே பயந்து தன்னிடத்தில் பிரியமும் கௌரவமும் மரியாதையும் உண்மையாயுள்ளது போல் வெளிக்குக் காட்டிக்கொள்ளுகிறார்களென்றும் தன் தலை மறைந்தவுடன் அவர்களே தன் பிறப்பையும் வளர்ப்பையும் படிப்பையும் ஒழுக்கத்தையும் நாகரிகத்தை

யும் பரிஹாஸஞ் செய்கிறார்களென்றும் செட்டியாருக்குத் தீர்மானமான கொள்கை. இப்பொழுது அவர் இன்னாரென்று தெரியாமல் கேவலம் ஸாதாரணமனிதனாய் இருக்கையில் அவரிடத்தில் அன்பும் விஸ்வாஸமும் மரியாதையும் காட்டுவது உண்மையேயென்றும் வேஷமல்லவென்றும் அவருக்கு மனதில்பட்டு அந்தப் பெண்ணிடத்தில் விசேஷ அபிமானம் கொண்டு அவளுடைய நற்குணங்களையும் சாதுர்யத்தையும் பற்றி மட்டில்லாமல் புகழ்வதே வேலையாயிருந்தார். பாக்கியத்தம்மாள் அங்கில்லாதிருந்தது நல்லது. தஸ்தாவேஜுப் பெட்டி டாக்டரின் மனைவி என்ற இரண்டு விஷயங்களைப்பற்றியே மாற்றி மாற்றி அலுக்காமல் கப்பல்யாத்திரை முடியும்வரை பேசிக்கொண்டேயிருந்தார்.

அந்த அம்மாள் சித்திரப்படம் எழுதுவதில் விசேஷ திறமைவாய்ந்தவள். அதிக அலையில்லாமல் கடல் சாந்தமாயிருந்த தினங்களில் செட்டியாரின் உருவப்படங்களை பலதினுசாய் எழுதிக்காட்டி அவருடைய மனதை முற்றிலும் கவர்ந்து விட்டாள். டாக்டரோ ஸாதாரண ஆசாமியல்ல. எந்த விஷயத்தையும் பற்றி கொஞ்சம் கொஞ்சம் தெரிந்து வைத்துக்கொண்டு அதை பிரமாதமாய் எடுத்துக்காட்டும் திறமையுள்ளவன். தான் முன்நிற்கு வருவதற்காகச் செய்திருந்த பல யோசனைகளைத் தெரிவித்து, அவைகளைப் பற்றி செட்டியாரின் அபிப்பிராயத்தையும் ஆலோசனையையும் கேட்டான். தன்னை ஏதோ அபாரயோக்யதையும் புத்தியும் அனுபவமுமுள்ளவனென்று நினைத்து, இப்படிக் கேட்டதால் செட்டியாருக்கு ஸந்தோஷம் தலை கால் தெரியவில்லை "ராமா! இந்த டாக்டர் ஆசாமி லேசான பேர்வழியல்ல. நல்ல மூளை. அஸாத்யப் பேர்வழி. என்ன தைரியம். இவனைப்போல் 100 பயல்கள் தென்னாப்பிரிக்காவில் கொண்டு போய்விட்டால் உலகத்தையே தலைகீழாய்ப் பிடித்துவிடுவே" னென்றார்.

இந்த எண்ணம் அவருடைய மனதில் வர வர வேரூன்றி அதையே யோசித்துக்கொண்டிருந்தார். அதற்கேற்றபடி தென்னாப்பிரிக்கா வயிரச் சுரங்கக் கம்பெனியில் ஒரு மானேஜரை சில நாளைக்கு முன் வேலையிலிருந்து நீக்கிவிட்டார். அதை இந்த டாக்டருக்குக் கொடுக்கலாமா வென்று பலமான எண்ணமுண்டாயிற்று. வருஷத்தில் மூன்று மாதங்கள் தென்னாப்பிரிக்காவில் கழிக்க வேண்டும்; அங்கே தன் வேலைகளைத் தானே நேரில் கவனித்துப்பார்க்காமலிருப்பது பிசகு. இனியாவது அதை அலக்ஷியஞ் செய்யக்கூடாதென்று செட்டியாருக்கு தோன்றினதற்குக் காரணம் டாக்டரைப் போன்ற புத்திசாலியைப் எப்படியாவது தன்னிடத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதே. ஆயினும் அவருடைய மனைவியின் அழகும் சாதுர்யமான பேச்சும் பல வித்தைகளில் திறமையும் மனதைக் கவரும் விநயம் முதலிய உத்தம குணங்களும் முக்கிய காரணமாயிருக்கலாமென்று தோன்றுகிறது.

சின்னவர் "நீ இன்னாரென்று சொல்லாமல் அவனுக்கு அந்த வேலையை எப்படிக்கொடுக்க முடியும்."

பெரியவர் "அதைப்பற்றிக் கஷ்டமேயில்லை. எல்லாம் ஏற்பாடாய் கடைசி நிமிஷம் வரையில் சொல்லாமலிருக்கலாம். 'தென்னாப்பிரிக்காவில் எனக்குச் சில பிரபலமான வியாபாரிகள் உண்டென்று மாத்திரம் சொன்னாலும் போதும்."

அப்படியே ஒரு நாள் காலையில் டாக்டரும் அவருடைய மனைவியும் கப்பலின் மேல் தட்டில் வேடிக்கையாய் உலாவிக்கொண்டிருக்கும் பொழுது செட்டியார் தனக்கு தென்னாப்பிரிக்காவில் ஏராளமான வயிர வியவஹாரங்கள் இருப்பதாயும் சீராக்கவேலை செய்யுமிடத்தில் தன் காரியஸ்தனாயிருப்பதற்கு ஒருவன் வேண்டுமென்றும் வருஷம் ஒன்றிற்கு 1500 வெள்ளி கொடுப்பதாயும் சொன்னார். உடனே டாக்டரின் மனைவி "ரூபாயா? முதலியாரவாள்! அவ்வளவு தூரத்தில் போய் வேலை செய்வதற்கு இந்தச்சம்பளம் கட்டாதென்று எனக்குத் தோன்றுகிறது. பிறகு உங்களுடைய இஷ்டமென்றாள். செட்டியார் "அடே! என்ன அப்படி எண்ணி விட்டாய். வெள்ளியென்றால் ரூபாயென்று நான் சொல்லவில்லையே. ஒரு வெள்ளி மூன்று ரூபாய் சொச்சமாகிறது. ஆகையால் கிட்டத்தட்ட 5000 ரூபாய் சுமாராய் கிடைக்கும். பிறகு சௌகரியத்திற்குத் தகுந்தபடி சம்பளம் உயராதென்று யார்சொன்னார்கள்."

"அப்படியா? ஆனால் அதை ஒப்புக் கொள்வதில் நம்மவர் ஆக்ஷேபிக்க மாட்டார். கரும்பு தின்னக் கூலியா" யென்று சிரித்தார்.

டாக்டர் மெதுவாய் ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்திப்பேசி தீர்க்காலோசனை செய்து முடிவான அபிப்பிராயத்தைத் தெரிவிப்பவர் போல் "எல்லாம் சரிதான் முதலியாரவாள்! நானோ வைத்யன். அந்தத் தொழிலில் அதிகமாய் உழைத்தவன், அதற்காகக் கொள்ளைப் பணத்தைச் செலவிட்டு ஓரிடம் பாக்கியில்லாமல் போய் ஆயுர் வேத முறைகளைப்பற்றி இனி என்னைக் காட்டிலும் தெரிந்தவன் ஒருவனுமில்லை யென்று தைரியமாய்ச் சொல்லும்படி செய்து கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் மற்றத்தொழில்களைப்பற்றி எனக்கு அவ்வளவு நன்றாய்த் தெரியா விட்டாலும் புத்தியைச் செலுத்தினால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. ஆனால் இவ்வளவு சிரமப்பட்டு ஒரு வேலைக்குத் தயார் செய்துகொண்டு அதையெல்லாம் வீணாக்கி எனக்குப் பரிசயமில்லாத வேலையில் மாற்றிக்கொண்டு அதில் கஷ்டமோ லாபமோ வென்று நிச்சயிக்க முடியாமல் தடுமாறுவதைப் பற்றித்தான் எனக்கு யோசனையாயிருக்கிற" தென்றார்.

இரத்தின மாளிகை

(முன்தொடர்ச்சி)

600 008

ஒருவருக்குக் கோபம் வந்து விடுமானால் பலகால் படித்த படிப்பெல்லாம் பாழ்பட, புத்திசிதற, மனம் நிலை தடுமாற, கோபாக்னியால் உடலெல்லாம் தீப் பொறி பறக்க, அதனால் கண்கள் சிவக்க, இவ்வித புது உருக்கொள்கின்றார்கள். மனிதருக்கு அவசியமானால் க்ஷண கோபமே மேலெனச் சொல்லப்படுகிறது. ஆனால் தனகோப முதலியாருக்கோ ஒரு விதமான பிடிவாதத்தின் மேல் ஏற்பட்ட கோபமாகும். மைசூர் ஜோஸ்யர் சொன்னதெல்லாம் கர்ப்ப நாயகத்தைப்பற்றிய தாகுமென்றும், மனோரஞ்சிதம் இப்பொழுது வேண்டாமென்று சொல்லி தன் கோபத்துக்கு இலக்காகி பின்னரே விவாகம் செய்து கொள்வாளெனவும் தனக்குள் நினைத்துக் கொண்டார். அவர் பெண் சுபாவத்தை சிறிதும் அறியாதவர். இவ்வித சங்கடத்தில் அகப்பட்டவருமன்று.

மனோரஞ்சிதத்தை மிக்க அன்போடு வளர்த்து வந்தார். புன்னகை பூத்த முகத்தையும், இனிய வசனத்தையுமே அவர் தம் நினைவினின்றும் நீக்க கூடாதவரானார். அவள் அம்மாளிகையில் இல்லாதது, தாமரை யற்ற தடாகம் போல் சோபிதமற்றிருந்தது.

மேலும் அவள் மாளிகையிலுள்ள எல்லா வேலைகளையும் கவனித்துவந்தாள். செலவுகணக்குகளை யெல்லாம் எழுதிவந்தாள். தனபதி முதலியார் செய்யவேண்டிய எந்த வேலைக்கும் யோசனை சொல்லக்கூடியவளாயிருந்தாள். அவருக்குச் சந்தோஷமும் திருப்தியுமுண்டாகக்கூடிய விதமாகவே நடந்து வந்தாள். இங்ஙனம் பிரிவினை ஏற்படுமென்று எதிர் பார்க்கவேயில்லை. என்றாலும் ஸ்ரீரங்கத்தில் நீடித்திருக்கமாட்டாள் எவ்விதமும் திரும்புவாள் என்று நினைத்துக்கொண்டார்.

மனோரஞ்சிதம் பள்ளியில் படித்து வரும் நாளில் எழுத்து வேலை யென்றால் வெகு பிரியமாய்ச் செய்வாள். சாமர்த்தியமாய்க் கடிதமெழுதுவதில் இதர எந்தப்பெண்ணும் இணையாகமாட்

டான். அவர்கள் குடும்பத்தில் எந்த விதத்திலும் மனோரஞ்சிதம் மேலாகவே யிருந்தாள். சிநேகிதிகளுக்குக் கடிதமெழுதினால் அவர்கள் திருப்பித்திருப்பிப் படிப்பார்கள். அவ்வளவு ரசிகமாய் அடைமொழி கொடுத்து இன்புறத்தக்க விதம் எழுதுவாள். வாக்கியங்களை சுருங்க எழுதிக்காட்டி உற்சாகத்தை உண்டாக்குவாள். அவளுடைய தனித்தமிழ் நடை அவளுக்கே சொந்தம்.

அவள் எழுதிய கடிதங்கள் சோபாவிலிருந்து படிக்கச்செய்தன. அவளுடைய கடிதத்தை தனபதி முதலியார் இரவுநேரத்தில் படித்துப்பார்ப்பார். முந்திய பல கடிதங்களையும் சேர்த்து வைத்து திரும்பவும் படித்துப்பார்ப்பார்.

மனோரஞ்சிதமோ இரவில் உற்சாகத்தோடு காலத்தைப் போக்குவாள் இப்பொழுது கவலையால் இரவில் விழித்திருக்க நேர்ந்து விட்டது. ஒருநாள் இரவு இரண்டுமணி வரை நித்திரை வரவில்லை. எதையும் படிக்க மனம் இடம் கொடுக்க வில்லை. கண்களை மூடிப்பார்த்தாள். சிறுதூக்க முண்டாயிற்று. அதில் ஒரு கனவைக் கண்டாள். அந்த இரவு ரத்தினமாளிகையிலிருப்பது போன்ற நினைவு. நித்திரை வரவில்லையே யென்று ஜன்னலைத் திறந்து தோட்டத்தைப் பார்த்தாள். பட்டம் பகல் போல் சந்திரனுடைய ஒளியானது குளிர்ந்து பிரகாசிக்கின்றது. பிச்சிலைக் கொடிகளால் சூழப்பெற்ற ரத்தினமாளிகையைக் கண்ணுற்றாள். அங்கே இருவர் பதுங்கி சப்தமின்றிப் போவதை அறிந்தாள். மாளிகையில் எதையும் திருடமுடியா தென்பது நிச்சயமாயினும், பயமும் நடுக்கமும் உண்டாயிற்று. உடனே விழித்துக் கொண்டாள். கண்டது கனவாயிருந்தாலும் மறுபடி நித்திரை வரவேயில்லை. விடியும் வரை விழித்துக்கொண்டு பலவிதமாய் சிந்தனை செய்து கொண்டிருந்தாள்.

எட்டாவது அத்தியாயம்

உல்லாசமான காலப்போக்கு

மனோரஞ்சிதம் ஊருக்குப்போய் ஒருவாரமாயிற்று. கர்ப்ப நாயகம் ரங்கநாத முதலியாரோடு ரத்தின மாளிகைக்கு வந்து சேர்ந்தார். அன்று இருவரும் அங்கேயே புசித்தார்கள்.

கர்ப்பநாயகம் ரங்கநாதத்தை எவ்விதத்தும் தன்னைப்போல் ஆடை யலங்காரம் செய்து நாகரிகமான மனிதனைப் போல் செய்துவிட முயற்சி செய்கின்றார். ஆனால் சீக்கிரத்தில் சித்தியாவதாயில்லை.

ஆகாரமானதும் ரங்கநாதம் அவசர வேலையாய்ப் போக வேண்டுமென்று விடை பெற்றுச் சென்றார். நாலைந்து மனிதர்கள் இருந்து பேசிக்கொண்டிருந்து விட்டு மத்தியில் ஒருவர் எழுந்து போனால், அவரைப்பற்றி ஏதாவது பேசுவது உலக வழக்கம். 'எழுந்து போனவர் யார்' என்றாவது கேட்பார் அதைப்போல ரங்கநாத முதலியார் விடைபெற்றுச் சென்றதும், அவரைப்பற்றி தனபதி முதலியார் விசாரிக்க ஆரம்பித்தார். கர்ப்பநாயகம் புதிய சிநேகம். அவருடன் பல விஷயங்களையும் பேசமிக்க ஆவல் கொண்டார். இன்னும் உறவினராக்கவும் கருதுகின்றார். அதுவரை பேசிக்கொண்டிருந்த மின்சார விளக்கு விஷயத்தை நிறுத்திவிட்டார்கள்.

"கவிராஜர் வாழ்க்கை எப்படி நடந்து வருகிறது" என்று கேட்டார்.

"இப்பொழுது அவர் புது மனிதனாக மாறுகிறார். அப்படிச் சொல்வதைப் பற்றி எனக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. ஆதியில் தரித்திரத்தில் மூழ்கியிருந்தார். தலையெடுக்க முடியாத வித நிலையில் ஆழ்ந்திருந்தார். நல்ல ஸ்திதிக்கு வருகிறார்; அதைப் பற்றி யாதொரு சந்தேகமுமில்லை" என்று கர்ப்பநாயகம் சொன்னார்.

"அவர் யார் என்று தங்களுக்குத் தெரியுமோ" என்றார்.

"அவர் இங்கிலீஷை விசேஷமாய்ப் படித்திருந்தும் தமிழ் பாஷையில் பாண்டித்திய முடையவரா யிருப்பதுபற்றி நான் அவரை விரும்பலானேன். அவர் கஷ்டப்படும்போது அநேக தடவைகளில் பணம் கொடுத்து உதவி புரிந்தேன். என்னை யறியாமலே அவரிடத்தில் மிக்க அன்பு உண்டாயிற்று. அவர் விஷயத்தில் எனக்கு எவ்விதத்திலும் சந்தேகம் கிடையாது. அவரைப்பற்றி அதிகமாய் விசாரிக்கவும் நினைக்கவில்லை. அவரிடமிருந்து ஒரு உபகாரத்தை விரும்பினேன்; நான் எதிர்பார்த்ததற்கு மேல் பலன் தருகிறது. அது யாதென்று கேட்பீர்களாயின், தங்கள் தரிசனமும், நவரத்னக் காட்சியுமாகும். இப்பிரபஞ்சத்தில் பார்த்திராத ஓர் புதுமை தங்களிடத்திலிருக்கிறது; அது காரணமாய் இருவர் நேசமும் இணை பிரியாதிருக்கிறது."

இதைக் கேட்ட தனபதி முதலியார் சிரித்துக் கொண்டு "அவர் ஒரு பொன் சுரங்கத்தைக் கண்டு கொண்டதுபோல" என்றார்.

"என்னமோ அவர் மௌனம் சாதித்து நிதானமாய்ப் பேசுவதைப் பார்த்தால் அவர் ஒரு ஸ்திரீயைப்போலிருக்கிறார். என்ன செய்கிறது! நான் இப்படிச் சொன்னேன் என்று அவரிடம் சொல்ல வேண்டாம்" என்றார்.

"கால வித்தியாசம்; எங்கள் வகையில் இவன் முழுச்சோம்பேறியாய், தாய் தந்தையரை விட்டுத் தனித்து கஷ்டப்படுகின்றான். என்னுடைய சொத்துக்கு இவனே வார்சாகவரக்கூடியவன். மேலும் நான் பந்துக்கள் வீட்டுக்கு அதிகமாய்ப் போகிறதில்லை."

"உங்கள் சொத்துக்கு அவர் ஒரு பாத்தியஸ்தர்தான்" என்றார்.

"இல்லை; இந்த உலகில்யாருமில்லை. அந்த மாதிரியாக ஏற்பாடு செய்து வைத்திருக்கிறேன்" என்று சொன்னார்.

"மனோரஞ்சிதமும் இவ்விடமில்லை. உங்களை விட்டு விட்டு போய்விட்டாள்" என்றார்.

இப்படிச் சொன்னதும் கர்ப்ப நாயகத்தைச் சற்று உற்று நோக்கி, "நன்றாய்த் தெரியுமோ?" என்றார்.

"நல்ல பெண் அன்று பாடிக் கொண்டிருக்கும்போது கவனித்தேன். நன்றாய் வாசித்தவளாகவும் தோன்றுகிறது; புத்திசாலி" என்று சொன்னார்.

"என்னுடைய அபிப்பிராயமும் அது தான். ஆனால் கடைசியாக இஷ்டம்போல் நடக்க வேண்டுமென்று அறியாத்தனமாய்ச் சொல்லுகிறாள்" என்றார்.

"அதற்காகப் பிரித்து விட்டீர்களோ?"

"ஆம், கீழ்ப்படிய மாட்டேனென்று, ஊருக்குப் போய்விட்டாள்" என்றார்.

"பெண்களுக்கு தக்கவயது வந்து விடுமாயின் உறவினர்களுக்குத் தொந்தரவு கொடுப்பது வழக்கமாயிருக்கிறது."

"அவள் மனோகரமான வாழ்க்கைக்குகந்த புருஷனைத் தேடுகிறாள். அவள் உங்களைப் பார்த்தாளா"?

கர்ப்பநாயகம் சீக்கிரம் பதில் சொல்லாமல் சற்று நேரம் மௌனமாயிருந்து சொன்னதாவது:—

"விவாகம் என்ற விஷயம் ஒரு மனிதன் மனதில் பற்றிக் கொண்டுதானிருக்கும். சில சந்தர்ப்பங்களில் நன்றாய்ப் புலப்படும்."

"மனோரஞ்சிதத்தைப்பற்றி தங்களுடைய அபிப்பிராயமென்ன? தங்களுடைய நன்மையை உத்தேசித்தே கேட்கிறேன். திடீரென இப்படிக் கேட்டு விட்டதாக நினைக்க வேண்டாம். என்னைத் தங்களுடைய பிதாவைப் போல் கருதிச் சொல்லுகிறேன்."

"ஒரு அழகுடைய பெண்ணை அதிலும் மனோரஞ்சிதத்தைக் கண்ட என் போலுள்ள சிறுவர் விரும்பாதிருக்கமாட்டார்."

"அப்படியானால் தங்களுக்கு அவள் மனைவியாகலாம்."

"அந்த விஷயம் தங்கள் அபிப்பிராயத்தைப் பொருத்தது."

"விவாகம் செய்து கொள்ளும் படியான எண்ணம் தங்கள் மனதில் உண்டா யிற்றோ?"

"மனிதன் உலகில் எவ்வளவோ நினைக்கிறான், நாமொன்று நினைக்க, கடவுள்—."

"பெண்கள் எப்பொழுதும் பிடிவாதமான குணமுள்ளவர்கள். நமது மனோரஞ்சிதத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. என்ன படித்தும் முட்டாளாய் மற்றோர் முட்டாளைத் தேடுகிறாள். ஆடவர்களைப் பற்றி அவ்ளுக்கென்ன அனுபவமுண்டு. அவளை எப்படியாவது நமது வழிக்குத் திருப்பவேண்டும்" என்றார்.

"இப்பொழுது எந்த ஊருக்குப் போயிருக்கிறது?"

"சொந்த ஊருக்குப் போயிருக்கிறாள்; எப்படியும் திரும்ப இவ்விடத்துக்கு வரவழைக்க வேண்டும். அவளை ஒரு பெரிய சீமாட்டியாக்க வேண்டு மென்ற எண்ணம்; அதற்குத் தகுந்தபடி, ஒரு புத்திசாலியான புருஷனுக்கு விவாகம் செய்து கொடுக்க எண்ணி யிருக்கிறேன்."

"அப்படியாயின் அவள் குணத்துக்குத் தக்க புருஷனைத் தேடிக்கொடுப்பதில் நான் தங்களுக்கு உதவி செய்யலாமல்லவா?"

"அதுவும் ஒரு நல்ல யோசனை தான். அதற்கு நீங்களே சரி. நீங்கள் உங்களைத் தேடுங்கள்."

இதைக் கேட்டதும் கர்ப்பனாயகம் சிரித்துக் கொண்டு" ஒருவர் மனதைத் துளைத்து, உள்ளே ஏதாவது ரகஸ்யமிருக்கிறதா வென்று பார்க்கிறீர்களே. நான் எப்படி ஒப்புக் கொள்ளாதிருக்க முடியும். என்றாலும் தங்கள் தங்கை பெண்ணுக்கு என்னை விட்டு வேறு நல்ல இடமாகப் பார்ப்பது தான் நலம். என் விஷயத்தில் சிரத்தை—."

"போதும், போதும், இன்னொருவர் இன்னொருவர் என்று தினந்தோறும் யோசனை செய்து கொண்டிருந்தால் நன்றாயிருக்குமே. அம்மாதிரி நீங்கள் பேசினால் எனக்குக் கோபம் வரும்."

"நான் என்ன செய்ய வேண்டும்?"

"தங்களுக்குச் சம்மதமா பதில் சொல்லுங்கள். சம்மதமானால் அதைப் பற்றி யோசிப்போம்."

"எனக்குச் சம்மதம் தான்; உண்மையாக லபிக்கு மானால் என்னைவிட பாக்யசாலி யில்லை. அந்த பெண்ணுக்கு இன்னும் எத்தனை இளைஞர்கள் முயற்சி செய்கிறார்களோ?"

"அதிர்ஷ்டமும் பாக்கியமும் எங்கே வருகின்றன. வீண் வார்த்தைபேச வேண்டாம். நீங்கள் இருவரும் விவாகமாகி யான் பார்க்கவேண்டு மென்பதே எனது ஆவல். உங்களுக்கு விசேஷமான அனுபவ மிருக்கிற தென்பதே எனது எண்ணம். எனக்கு இப்பொழுது திருப்தி".

"தங்கள் மனம்போல் ஒப்புக் கொள்ளுகிறேன்."

"ஆனால் போட்டி வியாபாரமா யிருக்கிறது."

"கஷ்டமான விவகாரம். நான் தோல்வியடைந்தால் தங்களுக்கு ஒரு லாபமுமில்லை."

"நீங்கள் தோல்வியடைய மாட்டீர்கள். பெண் சுபாவத்தைப் பற்றி ஒரு சிறிதே தெரியும்; அதுவே போது மானது; தங்களுக்கும் தெரியாததல்ல. தாங்கள் முதலாவது செய்ய வேண்டிய வேலையைச் சொல்லுகிறேன். எப்படியாவது மனோரஞ்சிதத்தை என்னிடத்துக்கு அழைத்துக் கொண்டு வர வேண்டும். அப்படி வருவதே தங்கள் நன்மைக்கு அறிகுறியாகும்."

"அவள் யாரை விரும்புகிறாள். அவர்களுடைய விலாசமென்ன?"

"நல்ல கேள்வி கேட்டீர்களே! அது தான் ஒழுங்கு செய்ய வழியோ? அந்த விஷயம் பரமரகஸ்யமாயிருக்கிறது. நங்கனைத்திடத்திலும் அன்புடையவளா யிருக்கிறாள். காதலனை வேண்டு மென்ற எண்ணத்தோடு காதலிப்பதாகத் தெரிய வில்லை. அவளுடைய தாயின் அபிப்பிராயம் எவ்விதமா யிருக்கிறதோ, அது எனக்குத்

தெரியாது. ஆனால் எனது அபிப்பிராயத்துக்கு மாறுதலாக நடக்க மாட்டாள்."

"நமக்கு எதிரி எப்பேர்ப்பட்டவனென்று தெரிந்து கொள்ள வேண்டும்."

"நமது மாளிகையிலிருக்கும் ரத்தினங்களை பத்திரப் படுத்தி, மின்சார விளக்கை அமைத்து, முன் போல ரத்தினங்களை வைத்து விட்டு நீங்கள் முயற்சி செய்யலாம். நானும் உதவி செய்ய அனுகூலமாயிருக்கும்."

"கல்மனதையும் கரைத்து விட முடியும்; என்னாலான முயற்சி செய்கிறேன்."

"ரஞ்சிதத்தின் மனம் கல்லல்ல, ஆனால் கெட்டியான இரும்பு."

"அடைய வேண்டுமென்ற ஆவலுண்டாய் விடுமானால் அந்த நேரத்துக்குத் தக்க யுக்தி தோன்றாமல் போகாது."

"தத்துவ விசாரணையுள்ளவள். வேதாந்த ஆராய்ச்சிக்கு ரங்கநாதமே குரு. அவள் அடிக்கடி சில விஷயங்களில் பிடிவாதம் செய்திருக்கிறாள்."

இவ்விதமாக உல்லாசமாய்ப் பேசிக் கொண்டு ரத்தினமாளிகைக்குச் சென்றார்கள். கர்ப்பநாயகம் பேசிய வார்த்தைகள் உதட்டிலிருந்து உதிர்ந்தனவேயன்றி உள்ளத்திலிருந்து வந்தவையல்ல. தன்னிடத்தில் தனபதி முதலியாருக்கு முழு நம்பிக்கை உண்டாகி விட வேண்டுமென்பதே முக்கிய கருத்து.

தனபதி முதலியார் ரத்தினங்களின் ஒளிகளை மாற்றி விசித்திரக்காக்ஷிகளைப் பார்க்கும் படி காட்டினார். இதனால் அவர்களுடைய உறவு சற்று அதிகப்பட்டது.

ஒன்பதாம் அத்தியாயம்.

நூதன வழி.

கர்ப்பநாயகம் தனபதி முதலியாரோடு பேசி உல்லாசமாயிருந்த விஷயங்களை முற்றிலும் தெரிவித்தார். அதைக் கேட்ட கவீந்திரனான ரங்கநாத முதலியார் மிகுந்த கவலையுடையவரானார். ஒன்றுமறியாத ஒரு பேதைப் பெண் இவன் கையில் சிக்கி அவஸ்தைப்படப் போகின்றாள். இன்னும் இவன் விவாகமானவன், மனைவி மலை போல சேர்மாதேவியில் இருக்கிறாள்.

இந்த விஷயம் விசேஷமாய் யாருக்கும் தெரியாது. கர்ப்பநாயகம் ஆதியில் பரம ஏழை. அவர் படித்துக் கொண்டிருக்கும் போது பெற்றோர் ஒரு ஏழைப் பெண்ணை விவாகம் செய்து வைத்தார்கள். ஆனால் இருவருக்கும் சம்மதமில்லை. தன்னுடைய கௌரவமான வாழ்க்கைக்கு அவள் பொருத்தமாயில்லை. பெண்ணின் பிதாவானவர் கூடிய வரை முயற்சி செய்தார். கர்ப்பநாயகத்துக்கு ஆப்த நண்பர் ரங்கநாதமென்றும் ஓரினமென்றுமறிந்து சந்தோஷித்து, ஒரு தடவை அவரிடம் பூர்வ சரித்திரத்தைச் சொல்லி சிபார்சு செய்தார். இதனால் கர்ப்பநாயகத்தின் ரகஸ்யம் ரங்கநாத முதலியாருக்கும் தெரியக் காரணமாயிற்று. கர்ப்பநாயகத்துக்கு ஒரு பெண் குழந்தையுமுண்டு. ஆயிர ரூபாய் பொறுமான முள்ள ஆபரணங்களைப் போட்டு அழைத்து வருவதாயின் சம்மத மென்றார் பெண் கொடுத்தவர் வீட்டில் தரித்திரம் தாண்டவமாடுகிறது. அவர்களுடைய ஒரு நாட்பொழுது ஒரு யுகம் போலிருக்கிறது. புண்பட்ட விடத்தில் கோலிட்டுப் பார்ப்பது போல கர்ப்பநாயகம் தன் கருணையைக் காட்டினார். அந்த விஷயம் நடந்து அதிக காலமாய் விட்டது.

கர்ப்பநாயகத்தை உத்தம புருஷனென்று புரசைவாக்கத்திலுள்ள ஒரு நாயுடு வகைப் பெண் இவரை நம்பி, காதலே பெரிதென்று குடும்பத்தை விட்டு விலகி நாகரிக சாஸ்திரம் பேசி, விவாகச் சடங்கின்றி வாழ்ந்து வந்தாள். அவளிடத்தில் இருந்த ஆபரணங்

களில் ஒவ்வொன்றாய் விற்று இல்லறம் நடைபெற்றது. நாகம்மா ளென்னும் அப்பெண் உண்மையாய்க் காதலித்து வந்தாள். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் கர்ப்பநாயகம் காரியம் சித்தியாகும் வரை, காதலிப்பது போல் நடந்து வந்தார். அவளுடைய ஆபரணங்களை விற்றுத் தீர்ந்ததும் விலகிவிட்டார். அப்பெண் கூலி வேலை செய்து ஜீவனம் செய்ய ஆரம்பித்தாள். அவளைக் கவனிப்பதேயில்லை. அவள் தினந்தோறும், தனது ஒருமாதிரியான வாழ்க்கையையும் ஏமாற்றத்தையும் நினைக்கும் போதெல்லாம் அழுதழுது உடலை, வெந்தணலில் மெழுகென உருக்குகின்றாள். பெற்ற அந்தப் பிள்ளையை யாவது ஏற்றுக் கொள்ளும்படி மன்றாடினாள். கர்ப்பநாயகம் எங்ஙனம் ஏற்றுக் கொள்ளுவார். முடியாதென மறுத்து விட்டார்.

இந்த ஸ்திதியிலா மனோரஞ்சிதத்தையும் கல்யாணம் செய்துக் கொள்ளப் போகிறார் என்று ரங்கநாத முதலியார் நினைத்து பெருமூச்செறிந்தார். கர்ப்பநாயகத்தின் ரகஸ்யங்களை ஒவ்வொன்றாயறிந்து, அவருடைய ஸ்நேகத்தை நீக்கவும் சேர்க்கவும் முடியாத நிலையில் ரங்கநாதம் தத்தளித்துக் கொண்டிருக்கும் போது புதியதாய் ஒன்றும் சேர்ந்தது.

இத்தியாதி குணமுள்ள கர்ப்பநாயகம் எவ்வளவு அன்போடு தம்பதி முதலியாரிடம் பேசியிருக்க வேண்டும் என்பதை இதனை வாசிப்போர் அறிந்து கொள்ளலாம். ஒரு நாளைக்கு மூன்று வித உடைதரித்துக் கொள்வார்; ரிக்ஷா வண்டியில் தான் அதிகமாய் ஏறுவார். அப்போது தன்னை எல்லோரும் பார்க்கிறார்களா வென்று அங்கு மிங்கும் கவனித்துக் கொள்வார். தன்னை ஒரு இராஜ குமாரனைப் போல் பிறர் நினைக்க வேண்டு மென்று கருதுவார். அவரிடம் எவராவது பேசினால் தன் காரியக் குட்டியாகவே, தனக்கனுகூலமானதையே கருத்தாய்க் கவனிப்பார். இவர் வக்கீல் வேலையில் பழையவரானதால், தடபுடல் அதிகம். கட்சிக்காரர் டெலிபோனில் ஐந்து நிமிஷம் பேசினால் ரூ. 5க்கு (பில்) சிட்டை போட்டு அனுப்பிவிடுவார். காலத்தை பணமாக்குகிறவர் இவர் தான்.

கர்ப்பநாயகம் இரத்தின மாளிகையில் நடந்ததைச் சொன்னார் என்று அத்தியாய ஆரம்பத்தில் சொன்னோம். அதற்கு ரங்கநாதம் "அவர் எப்படியிருந்தால் எனக்கென்ன? நான் ஒருவருக்கும் சொந்தமில்லை" என்று பதில் சொன்னார்.

"நான் ரஞ்சிதத்தை விவாகம் செய்து கொள்வதாயின் சகல செலவையும் அவரே செய்வார். ரஞ்சிதத்தினிடத்தில் எனக்கு விருப்பம் அதிகம். அவள் எவனோ ஒரு முட்டாளை நேசிக்கிறாளாம்; அது யாரென்று தெரியவில்லை. கூடிய சீக்கிரம் ரஞ்சிதம் திரும்பி வருவாள். அவளை நேசிக்கிற எவருக்கும் தீங்கு செய்யமாட்டேன். உங்கள் அம்மான் சொற்படி கீழ்ப்படிந்து நடக்கவே தீர்மானித்திருக்கிறேன்; தங்களுடைய அபிப்பிராய மென்ன?" என்றார்.

"என்ன சந்தேகம்; நீங்கள் செய்வதே சரி" என்று அபரிஷ்டப்படி பதிலளித்தார்.

"உங்களுக்கனுகூலமான காரியத்தைக் கவனிக்க வேண்டாமா ——"

இப்படி பேசிக் கொண்டிருக்கும் போது எதிர் பாராதபடி ஸ்ரீரங்கத்திலிருந்து இராமானுஜலு நாயுடு வந்துசேர்ந்தார். ரங்கநாதம் அவரைக் கண்டதும் எழுந்து பணிந்து நமஸ்கரித்து ஓராசனங் கொடுத்து அமர்ந்திருக்கச் செய்தார். நாயுடுவினிடத்தில் தான் ரங்கநாதம் மனம் விட்டுப் பேசுவார். இருவருக்கும் ஏககாலத்தில் உண்டான உள்ளக் களிப்பால் புன்னகை கொண்டு, பேசமுடியாம லிருந்தனர். இருவரும் அன்பின் வழியில் கட்டுப்பட்டவர்கள். கர்ப்பநாயகம் தான் இருப்பதால் பேசாதிருக்கிறார்கள் என்று விடை பெற்று வெளியே சென்றார். பிறகு இருவரும் ஒருவருக்கொருவர் க்ஷேமம் விசாரித்துக் கொண்டார்கள். நாயுடு தன் வீட்டுக் கருகி லிருக்கும் மனோரஞ்சிதத்துக்கு தங்கள் ஞாபகம் அதிகம் என்றார். அதற்கு எல்லாம் கடவுள் செயல் என்றார். இரங்கநாத முதலியார் புதிய நண்பர் கர்ப்பநாயகத்தின் விஷயத்தை யெடுத்துச் சொன்னார். மேலும் மனோரஞ்சிதத்தை கர்ப்பநாயகம் விவாகம்செய்து

கொள்ளப் போகிறாராம். தனபதி முதலியார் தன்னை உதவி செய்வதாயும் சொல்லி யிருக்கிறாராம் என்று சொன்னார்.

நீங்கள் சொல்வதெல்லாம் விநோதமாயிருக்கிறது. மனோரஞ்சிதம் தங்களையே விவாகம் செய்து கொள்வதாய்ச் சொல்லுகின்றாள். அப்பெண்ணின் தாயாருக்கும் அவ்விஷயத்தில் சம்மதமே. ஆகையால் கர்ப்பநாயகம் நினைப்பது கனவு தான் என்று நாயுடு சொன்னார். கர்ப்பநாயகத்தின் வார்த்தைகளை நம்பமுடியாது. பெண் இலேசாகக் கிடைத்து விட்டால் ஏற்றுக் கொள்வார். பெண்ணுக்குச் சம்மதமில்லையாயின் அவ்வழி திரும்ப மாட்டார். ஏனென்றால் அவர் எண்ணமெல்லாம் பணத்தில் தான் இருக்கிறது என்று ரங்கநாதம் சொன்னார்.

அதற்கு இராமனுஜலு நாயுடு, எனக்கு பிரபஞ்ச விலாசம் எழுதுவதற்குப் போதுமான சரக்குக் கிடைத்தது. எனக்கு நாலு கவி எழுதிக் கொடுங்களென்று சொன்னார். அவ்விதமே காலத்துக் கிசைந்த கவிபாடிக் கொடுத்தார். நாயுடு சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டு விடைபெற்றுச் சென்றார்.

அன்று மாலை கர்ப்பநாயகம் வந்து சேர்ந்தார். இன்று சில முக்கியமான விஷயங்களைப் பற்றி தங்களிடம் சொல்ல வேண்டிய தாயிருக்கிறது. பிராட்வே வழியாகச் சென்று சங்கரய்யர் ஓட்டலில் காப்பி சாப்பிட்டு விட்டு பீபில்ஸ் பார்க்குக்கு போவோம் என்றார். கர்ப்பநாயகம் கொடிய வஞ்சகன் என்பது தனக்குத் தெரிந்திருந்தும் அவருடைய உள்ளக் கருத்தை முற்றிலும் அறிய வேண்டி அவர் சொற்படி இசைந்து வந்தார். இரத்தின மாளிகைக்கு எவ்விதமாகவோ பெருந்தீங்கைச் செய்யப் போகிறார் என்பது அவருக்கு நன்றாய்த் தெரிந்து விட்டது. இருவரும் பிராட்வே வழியாக ட்ராம் வண்டியிலேறி பீபில்ஸ் பார்க்குக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

என்னுடைய காரியம் அதிக முக்கியமாய் விட்டபடியால், தனபதி முதலியாரிட மிருந்து தங்களை விலக்கி வைத்திருக்கிறேன்'' என்றார்.

தனபதி முதலியார் சிநேகத்தைச் சம்பாதிப்பதற்கு முதலாவது ரங்கநாத முதலியார் அவசியமாயிருந்தது. இப்பொழுது கர்ப்பநாயகம் அந்நியோன்னியமான நண்பராகி, ரங்கநாதத்தை விலக்கி விட்டாராம். உலக விவகாரம் இப்படி யிருக்கிறது!

“உண்மை தான் நீங்கள் செய்யக்கூடிய உதவி என்னால் நடக்கக் கூடியதன்று. தாங்கள் சிநேகத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். வயது முதிர்ந்தகாலத்தில் தங்களை நம்பி யிருப்பதும் பாராட்டத் தக்கது தான். தங்கள் சாமர்த்தியம் அசாத்தியமானதென்பதும் தெரிந்தவிஷயம். நீங்களோ விதியை மதிப்பவரல்லர். மேலும் உங்கள் வழி எனக்குச் சற்றும் பொருந்தாது. நீங்கள் சொல்லுகிற விஷயத்தை ஒப்புக் கொள்ள முடியாதாயினும் அதற்காக வீண்வார்த்தைகளை வளர்த்துக் கொண்டு இருவரும் ஏன் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்'' என்று சொன்னார்.

கர்ப்பநாயகம் விஷயங்களை விவரித்துச் சொன்னார். தனபதி முதலியார் மின்சார விளக்கு அமைப்பதற்கு ஒப்புக் கொண்டார். அவ்விடத்திலுள்ள ரத்தினங்களை பெட்டிகளில் அடக்கம் செய்து பட்டணத்துக்கு அனுப்பி பத்திரப்படுத்துகிறதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பட்டணத்தில் எந்த விடத்தில் வைக்கப் போகிறாரென்பது அவருக்கு மாத்திரம் தெரியும். மாற்றப் படுகிற விஷயத்தில் தான் தலையிடுவது ஆபத்தான நிலைமைக்குக் காரணமாகும் என்று நன்றாயறிந்திருந்தார். இப்பொழுது கர்ப்பநாயகம் மேற்கண்ட விஷயத்தில் விருப்பும் விரோதமும் இருக்கிறதாய்க் காட்டிக் கொள்ள வில்லை. தனபதி முதலியாருக்கு முற்றிலும் உதவிசெய்யக் கடமைப் பட்டதுபோல் நடித்தார். ரங்கநாதம் தனபதி முதலியார் விஷயத்தில் எவ்வளவு கவனிப்புள்ளவர் என்பதைத் தெரிந்து கொள்ள ஆவல் கொண்டார். கர்ப்பநாயகம் தன்னை மிக உயர்ந்த அந்தஸ்துள்ளவனாகவும், தாழ்ந்தவனாகவும் காட்டிக் கொள்ளாமல் நடு நிலைமை யிலிருந்தார்.

“தனபதி முதலியார் தங்கள் விஷயமாய்ப் பேசியதைக் கவனித்ததில் தங்களைக் கொஞ்சமும் விரும்பவில்லை யென்று நெடு நேரம்

பேசிவிட்டுக் கடைசியாகச் சொன்னார். நீங்கள் இப்பொழுது செய்ய வேண்டிய வேலை யென்ன வென்றால், அடிக்கடி அவர்களை சந்தித்து, பணத்தால் மாத்திரம் ஒருவன் பெரிய மனிதனாகிறதில்லை யென்றும், மனிதனுக்கு மனிதன்சமத்துவமுடையவனே யென்றும் அவர்கள்மனதில் பதியும் படி சொல்லுங்கள். ஆழ்ந்து சிந்தனை செய்து பதில் சொல்லும் படி கேள்வி கேளுங்கள்" என்றார்.

"இந்த சந்தர்ப்பத்தில் நான் அப்படி நடந்து கொள்வதில் ஒரு பிரயோசனமும் உண்டாக மாட்டாது. என்னை நம்பவுமாட்டார்; ஒரு பொருட்டாகவும் நினைக்கவு மாட்டார்."

"நம்பிக்கை வேறு, மதிப்பது பிரத்தியேகம். சற்றே பேச இடம் கொடுத்தால் போதும் பேசுந் திறமையில் ஒழுங்காய்விடும்; ஆனால் முக்கியமான விஷயமொன்று, அதாவது இனி நாமிருவரும் பிரிந்திருக்க வேண்டும். அதற்கான வேலையை நிதானமாய்ச் செய்யுங்கள். நான் முன் எச்சரிக்கையோடு நடந்துகொண்டிருக்கிறேன். நான் தங்களை விட்டுத் திடீரென பிரிந்து விட நேரிடும்" என்று கர்ப்பநாயகம் சொன்னார்.

முற்றிலும் நன்றாய்க் கவனித்துக் கேட்டுக் கொண்டார். சமீபத்தில் ஏதோ பெருந் தீங்கு செய்யப் போகிறான் என்பதைத் தெரிந்து கொண்டார்.

சிலர் மௌனமாயிருந்தால் ஒன்றும் தெரியாதவர்கள், வீண் மனிதர்கள், காரியப்படமாட்டார்கள் என்று நினைத்து விடுகிறார்கள் அது பெருந்தவறு; பேசுகிறவர்களை விட பேசாதிருப்போர் நன்றாய் ஆலோசனை செய்வார்கள்.

இரங்கநாத முதலியார் அன்று மாலையில் இரத்தின மாளிகைக்குச் சென்று, தனக்குத் தாய் மாமன் என்று சொல்லப்படுகிற தனபதி முதலியாரிடம் கர்ப்பநாயகத்தைப் பற்றி எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று சொன்னார்.

"கர்ப்பநாயகம் உனக்குப் போட்டியாக வேலை செய்கிறார். ஆனால் ஜெயம் பெறுவது கடினம்" என்றார்.

"நாங்கள் ஆதிமுதல் உண்மையாக சிநேகித பாவனையோடில்லை, என் குணத்துக்கு அவர் குணம் நேர் விரோதம். கபடமான எண்ணமுள்ளவர். எனக்கு அவரிடத்தில் நம்பிக்கை கிடையாது. நான் நம்புவதுமில்லை."

"அவரும் உன்னை நம்ப வில்லை யென்றுநினைக்கிறேன்."

"எவருமே என்னை நம்புகிறதில்லை. நான் மாத்திரம் என்னிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறேன்."

"நீ சொல்வது சரிதான். தனக்கு தன்னிடத்தில் நம்பிக்கையில்லையென்றில் எந்த வேலை தான் நடக்கும்."

"கர்ப்பநாயகத்துக்கு புதிய சிநேகிதம் ஏற்பட்டிருக்கிறது. மனோரஞ்சிதத்துக்கு எந்த புண்ணிய புருஷன் மாப்பிள்ளை யாவானோ அவன்தான் ஆப்தநண்பன்."

"நீதான் கலியாணம் செய்துக்கொள்ளப் போகிறாய் என்று கேள்விப்பட்டேன்."

"மனோரஞ்சிதம் எனக்குத்தங்கைமுறையாயிருக்கிறாள். முற்றிலும் பொருந்தாத விஷயமாயிருக்கிறது. மேலும் என்னுடைய அந்தஸ்துக்கு விவாகம் ஒன்றுதான் குறையா யிருக்கிறது எவனோ மனோகரனை நேசிக்கிறதாய்க் கேள்விப்பட்டேன்."

"ஆனால் கர்ப்பநாயகம்?"

"மனோகரனை கர்ப்பநாயகம் தேடுகிறார். மனோகரன் ஒரு பெரிய சீமானுடைய பிள்ளை. கல்வியிற் சிறந்தவன். நுட்பஅறிவு உள்ளவன். நான் கர்ப்பநாயகத்துக்கு நண்பனானதுபோல அவன் சீக்கிரத்தில் நேசனாக மாறிவிடமாட்டான். சுபாவகுணத்தைத் தெரிந்து கொள்வதன் முன் காலணாவுக்குக்கூட நம்பமாட்டான்."

"கர்ப்பநாயகம் உனக்கு அடிக்கடி பணம் கொடுத்து உதவி செய்திருக்கிறார் என்று கேள்விப்பட்டேன்."

"திருப்பிக்கொடுக்க வேண்டியதுதான். அவர் எனக்குத்

கொடுத்து உதவி செய்ததற்கு வேறுகாரணமில்லாதிராது. கூடிய சீக்கிரம் கொடுத்துவிடப்போகிறேன்."

"இப்பொழுது உன்னுடைய நிலைமை யெப்படி யிருக்கிறது?"

"எல்லாவற்றையும் தர்மாம்பாள் புருஷனிடம் கேட்டால் தெரியும். தங்கள் பராமரிப்புக்குப் பஞ்சம் ஏற்பட்டாலும் இனி எனக்கு ஒரு குறைவுமில்லை."

"ஏதாவது புஸ்தகம் எழுதி வெளியிட்டிருக்கிறாயா?"

"அந்த விளையாட்டெல்லாம் தீர்ந்தது."

"வேறு எந்த வழியில்? விவாகத்துக்கு தக்க இடம் அமர்ந்து விட்டதோ."

"அந்த விபரமெல்லாம் என்னால் சொல்லமுடியாது. தயவு செய்து மன்னிக்கவேண்டும். ஆனால் ஸ்டாண்டர்டு பத்திரிகைக்கு உதவி ஆசிரியாய்ப் போகிறேன்."

"சரி, சரி எப்படியாவது பணக்காரனாகவேண்டியது" என்று தனபதிமுதலியார் சொன்னார்.



கடவுள் துணை

12 JUL 1921

KATHA
கதாரத்நாகரம்
RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்
—ஔவை குறள்

Vol. 3. தொகுதி 3. | April, 1921 1921-ம்ஸு ஏப்ரல்மீ | No. 11. பகுதி 11.

உ

ஈச னேயென் னெம்மானே யெந் தைபெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே செய்வ தொன்று மறியேனே.

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனு னுண்டுடுத்திங் கிருப்பதானேன் போரேறே.

போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளியிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள அருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ கொடியே னுயிர்தா னுலவாதே.

உலவாக் காலந் தவமெய்தி யுறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப் பாவி யேனைப் பணி கொண்டாய்,
மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன் மணியே யுனைக்காண்பா
னலவா நிற்கு மன்பிலே னென்கொண் டெழுகே னெம்மானே.

—மாணிக்க வாசகர்.

கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடி.

(ஸ்ரீமான் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு எழுதியது)

"இடர்மிகு விழைவில் தம்பி! இருளென இருண்ட தீய நீ
படர்நெறி இருந்தபோதும் பயப்படேல்; பணிவுள்ளோர்க்குத்
தடையற வழியைக் காட்டும் தாரகை ஒன்றுண்டது
"கடவுளை நம்பி நேர்மை கடைப்பிடித் திடுதலே ஆம்"

கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.

இதை யறியாத சிலர், செத்துப் பிறக்கும் சிறு மானிடரை நம்பி இலவு காத்த கிளிபோலாகின்றனர். நம்பிக்கை என்பது உலகத்தை ஒன்றாகப் பிணிக்கும் ஒரு விலங்கு போல்வது. நம்பிக்கை யில்லாமல் ஒன்றும் நடைபெறாது. உண்மையாய்ப் பார்க்குமிடத்து எல்லாம் நம்பிக்கையினாற்றான் நடை பெறுகின்றது. பிள்ளைகளைப் பெற்றோர் அன்பு செய்வதும், கணவனை மனைவி அன்பு செய்வதும், குருவைச் சிஷ்யன் உபசரிப்பதும், எல்லாம் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. தளர்ந்த வயதில் நம்மை ஆதரிக்கும், நமது சொத்துக்களைக் காத்துக்கொள்ளும் இக்குழந்தையென்று நம்பியே பெற்றோர் பிள்ளைகளின்மீது அன்பு பாராட்டுகிறார்கள். அந்த நம்பிக்கை யில்லாவிடில் அந்தப் பிள்ளைகளுக்காக விசேஷித்த சொத்துக்களை வைத்து அவ்வளவு கவலை எடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

* * *

பெண்டாட்டி யாத்தாள் பெரியாத்தாள்

என்று பெற்றோரை யாதரிக்காத பேய் மகனைப் பார்த்து "அட சண்டாளா! தளர்ந்த வயதில் எங்களை யாதரிப்பாயென்றல்லவோ நாங்கள் பாடுபட்டோம்; முட்டையிற் பிஞ்சைப் பிட்டு வளர்த்து உன்னை வளர்க்க நாங்கள் பட்டபாடும், கெட்ட கேடும் இப்படிப் பலனற்று முடிந்ததே; கிளியை வளர்த்துப் பூனை கையிற் கொடுத்தது போல! கிளிபோல வளர்த்துப் பெண்ஜாதிப்பூனை கையிற் கொடுத்து நாங்கள் வயிறெரிந்து நிற்குங் காலம் வந்ததே"—என்று நொந்து பேசும் வழக்கத்தை நாம் இன்றும் காணலாம். அம்மனைவியிடத்து அந்த மந்தமதி மயங்கிக் கிடப்பதும், ஒரு நம்பிக்கையா முன்

னிட்டே. இவள் நம்மை விட்டு வேற்று ஆடவர் முகம் பாராள் என்ற நம்பிக்கை யில்லாவிடில் அவனும் அவள் மயக்கில் ஒருபோதும் அகப்படான். பரஸ்பரம் அவள் பாடும் அப்படியே நாம் இவனிடத்து அன்புறவாய் இருப்பின் இவன் நம்மை விட்டு ஒருபோதும் அகலான். நமக்கு எவ்விதத்தும் அன்ன வஸ்திரம் தருவான். என்ற நம்பிக்கை யில்லாவிடில், அவளும் அவனை மயக்க எத்தனிக்கமாட்டாள்.

* * *

குருவே துணை;

என்று முதலில் தலையிற் குட்டிக் கொள்ளும் சிஷ்யன்றானும், வெறும் புண்யத்திற்காக மட்டும் குருவை அன்பு செய்யவில்லை. நாம் இப்படி அன்பு செய்தால் குரு நம்மை ஒரு போதும்கைவிடார். தன் மனதில் இருப்பனவெல்லாம் மறைக்காமற் போதகம் செய்வார். நாம் அவற்றை ஐயந்திரிபு அற ஓதியுணர்ந்து அவரைப்போலே நாமும் உலகில் நற்பெயரெடுக்கலாம். நல்ல லாபமும் பெறலாம் என்னும் நம்பிக்கையில்லாவிடில், உண்மையாய்ச் சொல்லுகிறேன் ஒருபோதும் யாதொரு சிஷ்யனுக்கும் குரு விஸ்வாசம் வருவது சந்தேகம் தான். பரஸ்பரம் குருவும் இவனுக்கு நாம்தெரிந்தவைகளைப் போதித்தால், எதையும் மறைக்காமல் கற்பித்து வைத்தால், அப்போதனைகளால் முன்னுக்கு வரும் நம் சிஷ்யன் காலாந்தரத்தில் நம்மையாதரிப்பான்: அல்லது நமது பெயரை உலகில் சிறப்பிப்பான் என்னும் நம்பிக்கை யில்லாவிடில், அவரும் அவனுக்குத் தமது மனதிற்குள் கிடப்பதனைத்தையும் ஒளிக்காமற் சொல்லார். வஞ்சனையாய்ப் பாடம் சொல்லும் குருமாரும் உளர். அவர்கள் செய்வது அறிவீனமும் அடாத செய்கையுமேயாயினும், இவன் நம்மைப் பிற்காலத்தில் மதியான் என்னும் நம்பிக்கையீனமே அவரை அங்ஙனம் செய்ததென்றுணர்க. நம்பிக்கையொன்று மாத்திரம் இருந்திடில் தீயதாயினும் அது நன்மையாகவே தோன்றும். நம்பிக்கையீனமே ஓர் காலத்தில் நன்மையான காரியத்தையும் தீயதென்று ஒதுக்கிவிடும்படி செய்கிறது. நம்பிச் செய்யும் சிஷ்யனுக்குக் குருமொழி உண்மையில் தவறாயிருந்தாலும், அவனது நம்பிக்கையே அவனை முன்னுக்குக் கொண்டு வந்து விடுகிறது. இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு சிறு சரிதம் இங்கு உதஹரிக்கின்றோம்.

* * *

நல்ல வேளை வந்தால் எல்லா வியாதியும் தீரும்

என்பது ஓர் குருமொழி. இந்தக் குருமொழி ஒரு குன்மத்தையும் தீர்த்தது. ஆலங்குடி என்ற கிராமத்தில் வேளாளன் ஒருவன் நெடுங்காலமாய்க் குன்ம வியாதியால் வருந்தினான். அந்த வியாதி

யைப் போக்கடிக்க அவன் உண்ணாத மருந்தில்லை. பண்ணாத வைத்தியமில்லை. எண்ணாத சூழ்ச்சியில்லை. கண்ட கோயிலுக்கெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டான். என்ன செய்தும் பயன்படவில்லை. அவன் ஓர் சிறு வியாபாரி. தோசையும், மோரும், பட்டாணிக் கடலையும் வெற்றிலைப் பாக்குப் புகையிலையும் தான் அவன் செய்யும் வியாபாரம். கொஞ்சம் கஞ்சாவும் விலைக்குப்பெற்றுக் கடையில் பெட்டியில் பத்திரமாய் வைத்திருப்பான். இவ்வியாபாரம் செய்வது வயிற்றுப் பிழைப்புக்கேயாயினும், முக்கியமாய் அவன் கருத்து, அவ்வழியே பரம ஸாதுக்களுக்குத் தன் கடையிலுள்ள வஸ்துக்கள் உபயோகப்படட்டும். அதனாலாயினும், அவர்கள் கிருபை கிடைக்காதா என்பதே. மகான்களுடைய கிருபை இருந்தாலன்றி இனிமேல் இவ்வியாதி நீங்குதல் அரிதென்று திடம் பண்ணிக் கொண்டான். அவன் கடை பெரிய வழி நடைப்பாதையிலுள்ளது. அவ் வழியில் ஸாதுக்கள் எவரையேனும் கண்டு விட்டால் அவர்களை உபசரியாது விடான். புதிதாக போலி ஸாது வேடம் பூண்டவரினும் அவர்களை வணங்கி அவர்கள் வேண்டுவதைக் கொடுத்தனுப்புவான். சமயம் வாய்த்தால் தன் குறையையும் எடுத்துக்கூறி முறையிடுவான். இவர் பொய் வேஷம் பூண்டவரென்று அவன் ஒருவரையும் கருதினதில்லை.

* * *

கல உமி தின்றால் ஒரு அவல் தட்டாதா ?

எல்லோருமா பொய்வேடம் பூண்டவர்களாயிருப்பார்கள்? உண்மையுணர்ந்தவர்களும் இருப்பார்களே பதினாயிரம் பேர் பொய் வேடம் பூண்டவர்களாகவரினும், ஒருவர் இருவரேனும் உத்தமர்களாய்க் கிடைக்கமாட்டார்களா? என்று சொல்லிக்கொள்வான். ஒரு நாள் காஷாயதாரியாய்த் தண்டூன்றி தாடி வளர்த்த சன்யாசி யொருவர் அவ்வழியே போய்க் கொண்டிருந்தார். இவ்வேளாளன் தனக்கு இயல்பாயுள்ள வழக்கப்படி அவரை எதிர்கொண்டு போய் அழைத்து வந்து உபசரித்து தோசையும் நீர் மோரும் தந்து அவர் உண்டபின் வெற்றிலைப் பாக்கும் சிறிது கஞ்சாவும் கொடுத்தான். அவர் அதையும் வாங்கிக் கொண்டார். சிறிது நேரஞ் சென்றபின், குன்மநோயினால் தான் படும் துன்பத்தை வாயினால் சொல்லாமல், குறிப்பாக அவருக்குக் காட்டினான். அவர் என்ன அப்பா வருந்துகிறாய் என்றார். சுவாமி! நெடுங் காலமாக என்னைப்பற்றி வருத்தும் குன்ம நோய்க்கு வகை காணாது வருந்துகின்றேன். என் செய்வேன்! மகான்களுடைய திருவடியன்றி வேறு துணையில்லேன். தங்களுடைய திருவருள் இருந்தால் இது தீர்ந்து சுகப்படுவேன் என்றான். அவர், அதற்கு வேறொரு மருந்தையும் சொல்லாது,

நல்லவேளை வந்தால் எலலா வியாதியும் தீரும் என்று சொல்லிப் போய்விட்டார்.

* * *

காலத்திற்கேற்ற புத்தி

அவனுக்குண்டாயிற்று. நல்லவேளை வந்தால் என்றதை நல்ல காலம் என்று பொருள் பண்ணாமல், "நல்லவேளை"—(தயிர் வேளை) என்னும் பச்சிலையைக் கொண்டு வந்து உண்டால் வியாதி நீங்குமென்று அவர் சொன்னதை கைப்பொருள் பண்ணிக்கொண்டு, ஒருவருடனும் சொல்லாமலும், ஆலோசிக்காமலும், கொல்லையிற்போய் நல்லவேளைக் கீரையைப் பிடித்துப் பறித்து, வந்து, அவன் பழம் புண்ணாளியல்லவா, மருந்துகளும் மாந்துகளை உபயோகிக்கும் முறையும் அவனுக்கு வழக்கமுண்டன்றோ? பழம் புண்ணாளி பாதி வைத்தியனல்லவா நெய்யில் அதை வதக்கியுண்டான்.

* * *

காக்கை உட்காரவும் பனம் பழம் விழவும்

என்றபடி காகதாளி நியாயமாய் அவன் வினை நீங்குங்காலமும், அந்தக் கீரையை உண்ணுங்காலமும் ஒத்திருந்ததால் ஒரு முறை உண்டதனாலேயே, உண்ட அன்றைக்கே அவனைப்பற்றிய குன்ம நோயும் ஒழிந்தது. அன்றைக்கு அந்நோயின் உபத்திரவம் சிறிது இல்லாதிருக்கவே,

* * *

"குணமது கைவிடேல்"

என்றபடி தினந்தோறும் அதை அவ்வாறே உண்ணத் தொடங்கினான். வியாதி நீங்குங் காலமோ, அல்லது அந்தப் பச்சிலையின் குணம் தானோ, அன்றி அந்த சன்யாசியின் உறுதி மொழியோ யாது அவனுக்கு அவ்வியாதியை நீக்கி சுகப்படுத்தியது? அவைகள் ஒன்றுமேயல்ல அவன் கொண்ட நம்பிக்கையே அவன் வியாதியை யொழித்துச் சுகப்படுத்தியதென்க பின் சில நாள் கழித்து அவ்வழியே திரும்பிவந்த மேற்படி சந்யாசி இவனைக் கண்டு இவன் வரலாறுணர்ந்து இவனுக்குச் சொல்லியதும் இதுவே.—அப்பா! உன் வியாதியைத் தீர்த்தது மருந்துமன்று; காலமுமன்று, என் உறுதிமொழி தானோ—அதுவுமன்று, உன் நம்பிக்கையே.

* * *

நம்பிக்கெட்ட பேரில்லை

உன் நம்பிக்கை உனக்கு ஸர்வ மங்களங்களையும் உண்டாக்குக என்று ஆசிர்வதித்துப் போயினர். நம்பும்படி செய்து, பின் அதை மறந்து

நம்பிக்கைத் துரோகிகளாய் நரகினுக்காளான நாசகாலர் எத்தனையோ பேர்களையும் கேட்டிருக்கலாம் பார்த்து மிருக்கலாம். நம்பிக் கெட்ட பேரை நாம் பார்த்திருக்கமாட்டோம். நம்பிக்கெட்ட பேரென்று சிலரை உலகம் மதித்தாலும், அது உலகின் மயக்கே யன்றி உண்மையாய் நம்பிக்கெட்ட பேரில்லை. நம்பிக்கெட்டா ரென்று சிலரை எடுத்துக்கூறி நம் கொள்கையை மறுத்து மயக்கினும், அம்மயக்கமும் மனிதரை நம்பினதால் வந்த தாழ்வேயன்றி வேறன்று. இதுபற்றியே இவ்வியாஸத்தின் தலைப்பில் "முன்— செத்துப்பிறக்கும் சிறு மானிடரை நம்பி இலவுகாத்த கிளிபோல் ஆகின்றனர். என்றோம்.

* * *

குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டும்.

பிடித்தாலும் நல்ல கொழுக்கொம்பைப் பிடிக்கவேண்டும். இளங் கொப்பைப் பிடித்தால் இடையில் அது முறிந்துவிடும். செத்துப் பிறக்கும் சிறு மானிடரை யெல்லாம் யோசிக்குமிடத்து இளங் கொம்பரே. நம்மைப் போலப் பிறந்து நம்மைப்போல வளர்ந்து நம்மைப் போல இருந்து, நம்மைப்போல இறக்கும் நம்மோடொத்த மானிடரை நாம் நம்பினால் நமக்கு வரும் பயன் என்ன? நம்பினும் அவர் செல்வர், அவர் யாதுஞ் செய்ய வல்லவர் என்போமாயின், உறத்தினாலும் நீர்வள நிலவளத்தினாலும் மற்றக் கொம்புகளைவிட, பார்வைக்கு அழகும் சிறப்பும் அடைந்திருந்தாலும், இளங்கொம்பானால் அது இடையில் முறிந்துவிடுவது நிச்சயம். அதுபோலவே மானிடரை நம்பி அவர் எதற்கும் பயன்படுவார் என்று நினைப்பது சித்தி பெறாது. வீழ்வார்க்கு வீழ்வார் துணையாவதெங்ஙனம்? ஒரு கால் அவர் நம்பிக்கைக்குத் துரோகிகளாகாமல் நம்பியபடியே பயனளிக்கக் கூடியவர்களேயாயினும், அந்தப் பயனும் யோசிக்குமிடத்து, பலனற்ற பயன் ஆகுமேயன்றி உறுதிப்பயனாகாது. அழியும் தன்மையானவர்களாலே செய்யப்படும் பயன் எத்தன்மையாயிருக்கும்? அழியும் பயனாகவே முடியும். உலகமே அழிவதானால், அதிலுள்ள உயிர்களும், அவ்வுயிர்களால் செய்யப்படும் பயனும் அவ்வாறே பயனற்றதாகு மென்பதில் யாது சந்தேகம்? அந்தப் பயன் நம்பினவர்களுடைய அறியாமையினாலேயும், முட்டுப்பாட்டினாலேயும் உறுதியாகக் காணப்படினும், கூர்ந்து யோசிக்கின் அதுவும் உறுதியற்ற பயனாகவே முடியும். உறுதியற்ற பயனைக் கொண்டு அடையும் சந்தோஷம் யாதாகும்? அற்ப சந்தோஷமாகும். அற்ப சந்தோஷம் அத்தனை சிறப்பன்று. உறுதியும் பயனுமுள்ள சந்தோஷம் நமக்குக் கிடைக்குமாயின் அது எத்தனை நன்மையாய் இருக்கும். அறிவுடையோரெல்லாம் எந்த சந்தோ

ஷத்தை விரும்புகிறார்கள்? உறுதியும் பயனுமுள்ள சந்தோஷத்தையே விரும்புகிறார்கள். இப்பொழுது உலகிலும் கொஞ்சக் காலம் அநுபவிக்கும் சந்தோஷத்தை அற்ப சந்தோஷமென்றும், அனுபவிப்போரை அற்ப சந்தோஷி யென்றும், சொல்வது சர்வ சாதாரண வழக்கமாயிருக்கிறது. உள்ளபடியே எவ்வளவு அதிக காலம் அநுபவிக்கினும், உலக சந்தோஷமாயின் அற்ப சந்தோஷமாகவே இருக்கும். அதிலும் கொஞ்சகாலம் அனுபவிக்கும் சந்தோஷத்தை அற்பத்திலும் அற்பமான ஸந்தோஷமாய் எண்ணி ஒதுக்கி விடுவார்களாயின்—என்றும் நிலையாயுள்ள சந்தோஷத்தில் யாருக்கும் விருப்பமிருக்குமென்பது சொல்லாமலே அமையவேண்டும். அங்ஙனமாயின், என்றும் நிலையாயுள்ள சந்தோஷம் யாது?

* * *

மோக்ஷ நிலையே.

அற்ப சந்தோஷத்தைத் தருவதாகிய உலக காரியங்களில் சித்தி பெறுதற்கே நாம் எவ்வளவு முயற்சி எடுக்கிறோம்? யார் யாரை நம்புகிறோம் முயற்சி எடுத்தும், நம்பியும், அந்த அற்ப சந்தோஷமுமே ஒரு காலத்தில் நமக்கு அரிதாய் முடிகிறது. என்றும் நிலையுள்ளதாய், எல்லோராலும் விரும்பப்படுவதாய் விளங்கா நின்ற நித்திய சந்தோஷத்தை யடைய நாம் எவ்வளவு முயற்சி புரிய வேண்டும்? அது தருபவரை நாம் எப்படி நம்பவேண்டும்? செத்துப் பிறக்கும் சிறு மானிடரை நம்பாது, மதியாது ஏகபரம் பொருள் ஒன்றினிடத்திலேயே நமது சிந்தையைச் செலுத்தவேண்டும். அவரை நம்புதல் வேண்டும். செத்துப் பிறக்கும் சிறுமானிடர் எவ்வளவு தான் செல்வராய்க் காணப்படினும், அப்படிக் காணப்படுதல் நமது மதி மயக்கத்தா லன்றி உண்மையில் அவர்கள் செல்வர்களல்லர். நாம் அவரை நம்புதலும் வீண். நம்பினும் அவர்கள் நமக்குச் செய்வதொன்று மில்லை. செய்யவும் அவர்களால் முடியாது. செய்யும் வல்லமையும் அவர்களிடத்திலில்லை. உறுதியாக நம்பினால் நமக்கு நித்தியானந்த பயனை யளிக்கத் தகுந்தவர் பராபர வஸ்துவாகிய கடவுளே யாவார். அவர் ஒருவரே நித்தியர். அவரால் எல்லாம் செய்ய முடியும். மனிதனாலாகாத காரியத்தை அவர் செய்து முடிப்பார். அவரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை.

* * *

அவன் அருள் அற்றால் அனைவரும் அற்றார்.

பூர்வம் சபையில் வீஷ்டுமரில்லையா? துரோணரில்லையா? சல்லியரில்லையா? விதுரரில்லையா? மற்றையரசர்களில்லையா? அவர்களை

வேண்டாம். ஐம்புலன்களைப் போல ஐவரும் இல்லையா? ஐயோ— என்றலறின திரௌபதைக்கு ஆர் உதவினார்? அவள் நம்பிக்கை யாது பயனாய் முடிந்தது? ஆருமற்ற பரதேசியைப் போல் அவளை பரிதவிக்கும்படி செய்ததேயன்றி, அந்த நம்பிக்கையாதொரு பயனை யும் தரவில்லையே. ஏன் செத்துப் பிறக்கும் சிறு மானிடரை நம்பி னால், அது யாது பயனைத் தரும்? கடைசியில் அவளைக் காத்தது யாது? ஒப்பற்ற பரம்பொருளான ஸர்வேஸ்வரனை நம்பின நம்பிக்கை யொன்றே. ஓ! ஹிருதயவாசா! என்று ஓலமிட்ட அந்த நிமிஷ மல்லவா அவள் நம்பிக்கை பயன்பட்டது. வீஷ்டுமர், துரோணர், சல்லியர், விதுரர், மற்றையரசர்கள், பாண்டவர்கள் முதலியவர்களை விட, சாதாரண மனிதர்களை நம்பும் நம்பிக்கை யாது பயனைத் தரும்? பந்துக்களால், அதிவிவேகிகளாய் நன்கு மதிப்புடையவர்களாய்ச் சிற ந்து விளங்கா நின்ற அவர்களே இவளுடைய நம்பிக்கையை திருப்தி பண்ணக் கூடியவர்களா யில்லாமற் போன போது, சாமன்யர்களிட மிருந்து ஒரு உதவியைப் பெற எப்படி நம்பலாம்? நம்பிப் பயன் என் னவோ? ஏழை அறிவினர் உண்மை யுணராதவர்களாய், அற்பவாழ் வொன்றையே கருதி அதையே நிலையென்று எண்ணி அதன் பொரு ட்டு தம்மோடொத்த மானுடரை நம்பினும், அந்த நம்பிக்கையை நிறைவேற்ற அச்செல்வர்களும் ஸக்தியற்றவர்களாய் இருக்கிறார் கள். அதை அறிந்து கொள்ளவும் ஏழை அறிவினர்கட்குச் சக்தி யில்லை.

* * *

ஆதிமூலமே என்று அழைத்த யானைக்கு உதவினவர் யார்?

மடுவில் முதலையாற் கொளவப்பட்டுத் தத்தளித்தபோது யாரை அது நம்பினது? தன்னோடொத்த அற்ப மிருகங்களையா? அல்லது நம் மோடொத்த அற்ப மானுடரையா? அல்ல, அல்ல எல்லாம் வல்ல ஒரு முழு முதற் பொருளையே. நம்பிக்கையின் அருமை யறிந்தது அந்தப் பொருள் தான் அந்தப் பொருளின் அருமையை உள்ளவாறறி ந்து ஆதிமூலமே என்று அழைத்து அந்த யானை யாது பயனை பெற் றது? என்றும் அழிவில்லாத நித்திய சந்தோஷத்தைப் பெற்றது. இதனால் நம்பிக்கை யார் பால் வைக்கத் தக்கது? கடவுளர் பால். கடவுளர் பால் வைக்கும் நம்பிக்கை எப்படிப் பட்டது? நிலையேறப் பெற்றது. தக்க பயனைத் தரத்தக்கது. அதை எப்படிச் செய்ய வேண்டும்? இடையறாது செய்யவேண்டும். செய்திடுவாயாக.

* * *

நம்பினால் வம்பில்லை

என்றபடி மனஸ்பூர்வமாக அவரை நம்பி விடவேண்டும். "எப்படி வைத்தாலும் நன்றே நின்கருணை—என்று அவர் சித்தத்திற்கு நம் மை ஒப்புக்கொடுத்து விடவேண்டும். எல்லாம் உன்னடிமை, எல் லாம் உன்னுடைய செயலே என்று அவர் மாட்டு, அனைத்தையும் விட்டுவிடவேண்டும். அவர் திருவுள்ளம் போலாகுக—என்று நம்பி நிற்கவேண்டும். நம்பிக்கையையே ஆதாரமாகக் கொண்டு சாஸ்திர ஆராய்ச்சி செய்யவேண்டும். நம்பிக்கை யில்லாவிடில் சாஸ்திரங்க ளில் மனம் செல்லாது. பாரத ராமாயணங்கள் கட்டுக்கதை என் போர் நம்பிக்கை யில்லாதவர்கள். இராமனென்றொருவன் இல்லை யென்போர்க்கு யோசிக்குமிடத்தும் எல்லாமே இல்லையென்றே முடி யும். இராமரைப் பேசினவர்கள் வால்மீகர், கம்பர் முதலானவர்கள். அவர்களால் பேசப்பட்ட இராமரே இல்லையென்றானபோது வால் மீகரும் இல்லை, கம்பரும் இல்லை. அவர்களே இல்லாமற்போயின் மற்றவர்களும், அவரவர்கள் செய்நூல்களும், அவ்வவற்றிலடங் கிய விஷயங்களும் இல்லையென்றே முடியும். அப்படிப் பார்த்தால் உகலமும் இல்லை, உலகம் பொய்யாவிடின், அதற்குத் தலைவராகிய கடவுளும் இல்லை எல்லாம் வெறுங்கட்டென்றே பெறப்படும். எல்லாம் வெறுங்கட்டென்பதும் தக்க ஸம்பிரதாயமுமன்று. ஆதலின் முத லில் பெரியவர்கள் சொல்லும் சாஸ்திரங்களிலும், அவர்களின் சொல்லிலும் நம்பிக்கை வைத்து, ஆராய்ந்து உண்மை யுணர்ந்து உண்மையான கடவுளைத் தெரிந்து அக்கடவுள் மாட்டு அழுத்த மான நம்பிக்கை வைப்பின் ஸகல நலங்களும் கைகூடிவரப் பெற லாம். நற்கதி யடையலாம். பிறவிப் பிணியைப் போக்கிக்கொள்ள லாம், நித்தியானந்தப பெருவீட்டினை அடையலாம். பரமாத்மா வுடன் கலந்திடலாம். ஆகவே ஆஸ்திக புத்தியுடனும் ஸர்வ சாஸ் திரங்களையும் உண்மையெனக் கொண்டு—கடவுளை நம்பினோர் கை விடப்படார்.

* * *

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

அகலிகை வெண்பா.

இரண்டாம் பதிப்பின் அனுபந்த வசனம்

(ALL RIGHTS RESERVED)

அகலிகையைக் கௌதமர் அடைந்த வரலாற்றை இந்திரன் நினைவுகூர்தல்.

அகலிகையை அடைவதற்குப் பிரம்மதேவன் நியமித்த முதற் சபதம்

தேவர்கள் அமிர்தம் பெறுதற்காகக் கடலைக் கடைந்த காலத்திலே உண்டாகிய உண்ணமுதத்தோடு அந்தப் * பெண்ணமுதும் தோன்றினாள். அவள் தோன்றிய அப்பொழுதே † நானும் கௌதமனும் அவளைக் காதலித்தோம். அவ்வாறு காதலிக்கவே, எங்களில் எவன் அவளைப் பெறுதற்குரியனென்று முடிவுசெய்வதற்காகப் பிரம்மதேவர், எங்களை நோக்கி நீங்கள் இருவீரும் இந்தக் கடல் நீர்க்குள் முழுகுங்கள். உங்களில் எவன் பின் எழுவானோ அவனே இவளுக்கு நாயகன் என்றார். அப்படியே நாங்கள் முழுக நான் முன்னெழுந்துவிட்டேன். எனக்குப்பின் அவன் எழுந்தான். இவ்வாறாக, யான் தோற்றதனால் ஏங்கி இனிச் செய்யத்தக்க தென்னென்று ஆலோசித்துப் பின்வருமாறு பிரமதேவரை நோக்கிக் கூறினேன்.

இரண்டாம் சபதம் நியமிக்கும்படி பிரம்ம தேவரை இந்திரன் வேண்டல்.

பிரம்மதேவரே! யானும் யோகஞ் செய்யும்படி நேர்ந்த சமயங்களில் மூச்சடக்கப் பழகியுள்ளேனாயினும், இவன் அதுவே எப்போதும் செய்வோனாய் என்னினும் அதிகமாக மூச்சடக்கப் பழகியிருக்கின்றான். ஆதலினாலேதான், இப்போது நீர்கூறிய சபதத்தில் வெற்றிபெற்றான். இது இருவருக்கும் சமமான சபதமன்று. நியாயம் தவறிப்போகாமல், எங்கள் இருவருக்கும் சமமானதாக, வேறொரு சபதம் கூறுதல் வேண்டுமென்றேன். உடனே பிரம்மதேவர்

* அகலிகை † இந்திரன்

என்மேற் கோபங்கொண்டு, சீசீ! இந்திரா, இப்படிப்பட்ட வார்த்தைகள் கூறுவது யோக்கியமாமோ! ஆசையினாலே புத்திகெட்டுப்போனாயோ! அயோக்கியர் கூறும் வார்த்தைகளைக் கூறினாய்! போ! போ தூர ஒழிந்துபோ! என்றார். உடனே, கௌதமன் பிரம்மதேவரை நோக்கி ஈசுவரன் கிருபையினால் நானே இன்னமும் வெற்றி பெறுவேன்; இவன் வேண்டிக்கொண்டபடியே வேறொரு சபதம் நியமிப்பீராக என்றான். அப்போது பிரமதேவர், என்னை நோக்கி உன் எதிரியே வேறொரு சபதங் கூறும்படி சொன்னதனால், நான் புதுமையானதாக ஒரு சபதங் கூறுவேன். இதுவே முடிவானது. இனிமேல் வேறொரு சபதமுங் கூறமாட்டேன். இது உறுதியென்று நன்றாகத் தெரிந்துகொள்வாயாக.

இரண்டாம் சபதம்.

அந்தச் சபதமாவது. முன்புறம்போலப் பின்புறமும் முகமுள்ள ஒரு பசுவை எவன் முந்திக்கண்டு மூன்றுமுறை வலஞ் செய்துவருவானோ, அவனே இவளுக்கு கணவனாவான் என்பது.

இரண்டாம் சபதத்தைப்பற்றி இந்திரன் எண்ணுதல்.

என்றுபிரம்மதேவர் கூறவே, இந்தச் சபதம் எனக்கே அநுகூலமானது. ஏனெனில், இந்தக் கௌதமன்வாகனம் ஒன்றும் இல்லாதவனாதலால், காலால் வருந்திநடந்து திரிந்து தேடி அப்படிப்பட்ட அருமையான பசுவைக் காணமாட்டான். நான் மேக வாகனனூடனாய் விரைவாக எங்கும் சென்று அதனைக் கண்டு, அதனால் மேன்மையும் மகிழ்ச்சியும் கொண்டு, இங்கே திரும்புவேன். திரும்பின உடனே அகலிகையை அடைந்து விடுவேன். இவன் * அணிலேறவிட்ட நாய்போல ஆகி, ஏக்கமடைந்து வருந்த, நான் இவளை இந்த மண்ணுலகத்திலே கல்யாணம் செய்து கொண்டு, இவளுடன், விண்ணுலகம் போய், அங்கே என் குடிகளாகிய தேவர்கள் இவள் குடிகளாக, இவள் கிரீடஞ்சூடிச் செங்கோல் கைக்கொண்டு அரசாள, நான் இவளுக்கு அடிமைக்கும் அடிமையாய்த் தொண்டு புரிந்து வாழ்வேன். அவ்வாறு வாழ்வது நான் இதுவரை அரசாண்ட இன்பத்தினும் அதிக இன்பந் தருவதாம். சரசுவதியைக் கலியாணம் செய்து கொண்ட இந்த பிரம்ம தேவரும், இலக்குமியைக் கல்யாணஞ் செய்து கொண்ட அந்தத் திருமாலும், பார்வதியைக் கல்யாணஞ் செய்து கொண்ட பரமசிவனும் இவளைக் கல்யாணஞ் செய்து கொண்ட எனக்

* அணியேறவிட்ட நாய்போல் என்பது ஒரு பழமொழி. தான்பிடிக்க முயன்ற அணிற் பிள்ளையைத் தான் ஏறக்கூடாத மரத்தின் மேல் ஏறவிட்ட நாய்போல் என்பது கருத்து.

குச் சமானமாகார். ஆதலால் மற்றத் தேவருள் என்னை நேர்வார் யார் இருக்கின்றார்கள். ஒருவருமிலர். மேற்கூறிய மூன்று மாதரும் முறையே தங்கள் கணவரது நாவையும் மார்பையும் இடப்பாகத்தையும் தாங்கள் வாழு மிடமாகக் கொண்டு, தங்கள் கணவரது உடலையே அடைந்தார்கள். உடலிலும் முழுதும் அடையாமல் ஒரு பாகத்தையே அடைந்தார்கள். ஆதலால் அவர்கள் அறிவில்லாதவர்கள். இவளோ, தனது கணவனாகிய எனது (உடலை இலட்சியம் பண்ணாமல், அதனினும் மிகச்சிறந்த உள்ளம் முழுமையுமே தனக்கு உறைவிடமாகக் கொள்ளை கொண்டுவிட்ட) கள்ளம் மிகுந்த சமர்த்தியாயுள்ளாள். இவள் தன் கணவனது இருதயத்திலே வாழ்தல் போலத் தங்கள் தங்கள் கணவரது இருதயத்திலே வாழப்பெற்றோமில்லையே என்ற ஏக்கத்தினாலோ, அவர்களுள் சரசுவதி வெளுத்தும், இலக்குமி சிவந்தும், பார்வதி பசந்தும் நிறமாறிப் போவார்கள் அவர்களெல்லாரும் தங்கள் தங்கள் கணவரது உடலிலேயெப்போதும் நீங்காமல் வாழ்வோராய்த் தங்கள் கணவருக்கு உடலோடுடலானார்கள். இவளோ, தன் கணவனாகிய எனக்கு உயிரோடுயிரானாள். கண்ணிற் சிறந்த கண்ணாகவும் கருத்திற் சிறந்த கருத்தாகவும் உயிரிற் சிறந்த உயிராகவும் உள்ள இவளோடுகூடி வாழும் வாழ்வே வாழ்வாவது.—மற்றெந்த வாழ்வும் தாழ்வாவதேயன்றி வேறொன்றுமாகாது.

இந்திரன் இரண்டாம் சபதத்தை நிறைவேற்ற முயன்று தவறி வருந்தல்

என்று பல பல இனிய எண்ணங்களை எண்ணிக்கொண்டு மேக வாகனத்தின் மீதேறி எல்லாத்திசைகளிலும் சென்று அந்தப் பசுவை நாடித் தேடுவானாயினேன். பகலெல்லாம் தேடியதனோடு அமையாமல், என் ஏவுதலால் மேகம் முன்னால் நின்று இருளை ஓட்டிவிட, இரவு பகல் போலாக, இராக் காலங்களிலும் விடாமல் நான் தேடி அலைந்து நொந்து சோர்ந்து துன்பமடைந்தேன். அந்தப் பசுவை நான் பூலோகத்திலே காணவில்லை. தேவலோகத்திலும் காணவில்லை. பாதாள லோகத்திலேயுங் காணவில்லை. இவ்வாறாக அப்பசுவைக் காணாததனால் எனக்கு உண்டாகிய துன்பம் மிகவும் கொடிதாயிருந்தது. இப்படிக்கொடுந் துன்பமடைந்திருந்த சமயத்திலே, யான் விரைவாக மேகத்தின் மேலேறிப் பலநாளாக இராப் பகல் ஓயாமல் எங்கெங்கும் அலைந்து தேடியும் காணமுடியாமற் போன பசுவை ஒருவேளை கௌதமன் கண்டுவிட்டானோ வென்ற நினைவு தோன்றவே என் தேகம் வேர்க்க மனம் சாகுந் தருணத்திலுள்ளார் படும் மரணவேதனை போன்ற வேதனையை அடைந்தது.

நாரதர் உதவியினால் கௌதமர் இரண்டாம் சபதத்தை நிறைவேற்றல்.

யான் இவ்வாறாக மன வேதனையோடு அந்தப் பசுவைத் தேடி அலைந்து கொண்டிருந்தேன். அவன் அதைத் தான் எவ்வாறாயினும் கண்டு கொள்ளுதற்கு ஈசுவரன் கிருபை செய்யும்படி அவரை நோக்கித் தவஞ் செய்வேனென்று தியானம் பண்ணிக் கொண்டிருந்தான். அப்படி அவன் தியானம் செய்து கொண்டிருக்கும் போது, வானத்திலே, நெடுந்தூரத்திலே, ஒரு ஜோதி பிரகாசிக்கக் கண்டான். கண்டவன் அது எவ்வாறு தோன்றியது, என்ன தன்மை யுடையது என்று ஆராய ஆரம்பிக்கும முன்பே, அந்த ஜோதி அவனை நோக்கி விரைந்து சமீபிக்க, அதிலே சிவந்த மேனியும் சடைமுடியும் தோன்ற, தான் தியானித்துக் கொண்டிருந்த சிவபெருமானே பெருங்கருணை புரிந்து பிரத்தியட்சமாகக் காட்சி தந்தருள வந்தாரென்று கருதிப் பூமியின்மீது பகவானே என்று தோத்திரஞ் செய்து கொண்டு விழுந்து சாஸ்டாங்க நமஸ்காரம் பண்ணினான். அப்படி நமஸ்காரம் பண்ணிய சமயத்திலே கிட்ட வந்து விட்ட * நாரதன் அவனை வாரியெடுத்து ஆலிங்கனம் பண்ணி எனது நண்பனே, இங்கே நடந்த தெல்லாம் நானறிவேன், நீ சொல்லித் தெரிய வேண்டிய தொன்று மில்லை. எப்படி யறிவேனென்றால், சொல்லுகிறேன் கேள். ஒருவர் மனத்திலே நினைப்பது தூரத்திலேயுள்ள மற்றொருவருடைய மனத்திலே தோன்றுவது ஆச்சரியமானதாயினும் உண்மை நிகழ்ச்சியன்றோ! அத்தகைய தூரஉணர்ச்சியினாலே நீ பிரம்மதேவர் கூறிய பசுவை எவ்வாறு காண்பது, கண்டாலன்றி அகலிகையை அடையலாகாதேயென்று கவலையடைந்தது என் மனத்திலே தோன்ற, உடனே அந்தக்கவலையை நீக்கும் பொருட்டு நான் உன்பால் வந்தடைந்தேன். ஒருவன் தன் சிநேகிதனைச் சந்தித்து அளவளாவுங்கால், அவன் கவலையுள்ளவனாயிருந்தால், அந்தக் கவலை (சிநேகிதனால் பாகிக்கப்பட்டுப்) பாதியாதலும், களிப்புள்ளவனாயிருந்தால், அந்தக்களிப்பு (சிநேகிதனாற் கூடச் சேர்ந்து அநுபவிக்கப்பட்டு) இரட்டியாதலும் அநுபவசித்த மானவை. உன்னை உலகத்தார் 'பிரமசாரி பிரமசாரி' என்று வழங்குவது ஒழிய, ஓர்

* மிகுந்த தூரத்திலே கேவலம் பகுத்தறியக் கூடாத ஒரே பிண்டமான ஜோதியாகவும் குறைந்த தூரத்திலே சிவந்த தேகமும் ஜடைமுடியும் உடையதாகத் தோன்றித்தான் தியானித்துக் கொண்டிருந்த சிவனேயாகவும், (சிவனென்றெண்ணிக் கீழே விழுந்து தொழுதுகிடந்த தன்னை தூக்கி நிறுத்தப்பட்டபோது) சமீபத்திலே தன் சிநேகிதனாகவும் கௌதமர் கண்டது நாரதர் உரு.

அழகிய மனைவியுடன் இல்வாழ்வனாகை வைக்கும்படி யான் நெடுங்காலமாகக் கருதியிருந்த கருத்து நிறைவேறுங்காலம் நான் எதிர் பார்த்ததினும் விரைவாக வந்திருக்கின்றது. அதோ தோன்றுகின்ற சமீபத்திலே உள்ள தொழுவிலே, ஆயிரம் பசுக்கள் நிற்கின்றன. இந்தக் காலம் பசுக்கள் பூரண கர்ப்பமாகியிருக்குங் காலமாதலால் நீ பார்க்க வேண்டிய முன்னும் பின்னும் முகமுள்ள பசுவை அங்கே போய் எளிதில் காண என்னோடுவா, வேறிடங்களிற் காண கருதி வீண் முயற்சி செய்ய வேண்டாம் என்று நாரதன் கூறக் கௌதமன் அவனை நோக்கி, இந்தப் பூமியிலே முன்புறத்திலே இரண்டு முகமுடைய கன்றை நான் பார்த்திருக்கின்றேனென்றாலும், எந்த இடங்களிலும் உள்ள பசுக்களிலும் முன்னும் பின்னும் முகமுடைய பசுவொன்றையும் நான் பார்த்ததில்லையென்று கூறினான். அதற்கு நாரதன், மறுமொழி யொன்றுங் கூறாமல் அப்படிப்பட்ட பசுவைப் பிரத்யட்சமாகக் காட்டுதலே தக்க மறுமொழியாமென்று கருதிக், கௌதமனது கையைப்பற்றிச் சென்று முன் சொன்ன தொழுவினுள்ளே கொண்டு விட்டு அங்கே நின்ற பசுக் கூட்டத்திலே சூலுளைந்து கொண்டிருந்த ஒரு பசுவைச் சுட்டிக் காட்டி இந்தப் பசுவுக்கு பின்புறமும் முகமிருக்கிறது, கிட்டப்போய் உற்றுப்பார் என்றான். அப்படியே கௌதமன் அப்பசுவின் அருகேபோய் பார்த்து நாரதன் சொன்னபடி பின்புறத்தே முகம் காணப்படாமையால், ஏ, நாரதா, நீ என்னைப் பரிகாசம் பண்ணுகிறாயோ? என்றுசொல்ல ஆரம்பித்த தற்சமயத்திலே: அப்பசுவின் பின்புரத்திலே கன்றின்முகம் வெளிப்பட அதனால் முன்போலப் பின்னும் முகமுடையதாகத் தோன்றிய அந்தப் பசுவை மூன்றுமுறை வலம்வந்து, அகலிகையை அடைந்து விட்டோமென்று மனமுவந்து தன் தோழனைப் பார்த்துக் கூறுகின்றான்.

நாரதருக்கு கௌதமன் நன்றியறிவுகூறல்.

தியானஞ் செய்வோர்களுடைய துன்பங்களெல்லாவற்றையும் நிவர்த்தி செய்யும் சிவபெருமானது திருவடிகளைத் தியானித்து அவருடைய திருவருளால் யான் அடைய விரும்பியதை அடையப் பெற்றேன். அவருடைய திருவடிகள் வாழ்க. அவரே போலே வந்து என்னை வாழ்வடையச் செய்த நீ எல்லா நன்மைகளும் எய்தி வாழ்வாயாக! ஆடை அவிழ்ந்தவன் கை, அவன் வேண்டாமலே அதனை உடனே கட்டி உதவுதல் போல, எனக்குற்ற கவலையை நான் வேண்டாமலே உடனே நீக்கி உதவி செய்தாய். நீ எனக்கு என் உயிருக்குயிராகிய அகலிகையைத் தந்ததனால், சாதாரணமான தேவியைத் தந்தாயில்லை; எனது ஆவிக்கு ஆவியையே தந்தாயானாய். ஆகாயத்திலே நீண்ட சடையுடனும் சிவந்த மேனியுடனும் தோன்றிச் சிவபெருமானேயென்று நான் காலில்விழுந்து கும்பிடச்

செய்த உருவினாலும், (நான் அகலிகையை அடைய) எண்ணியதை எண்ணியபடியே அடையும்படி செய்த அருளினாலும் நீ ஈசனை ஒத்தாய். எனக்கு எண்ணினும் இனியவளும் எல்லாப் பொருள்களினும் சிறந்தவளுமாகிய அகலிகையையே கொடுத்துதவினாய். அவ்வாறு உதவிய உனக்குச் செய்யத்தக்க கைம்மாறு ராசராசர்களிடத்துமேயில்லை. அப்படியிருக்க என்னிடத்தில் உனக்குப் பிரதி உபகாரமாகக் கொடுக்கத்தக்கது யாதிருக்கக்கூடியது, என்னையன்றி வேறு ஒன்றுமில்லை. ஆதலால் என்னையே கொடுத்தேன். ஏற்றுக் கொள்வாயாக. உனக்கு உன்னையன்றி ஒரே சமானப் பொருள் உள்ளது அது ஈசனே. உனக்கு உடைமையாகிய எனக்கு யானே நேர். என்னையன்றி வேறொரு சமானப்பொருளும் இல்லை. நீங்கள் இருவீரும் அவரவர் அவரவரை யொத்தும் ஒருவர் மற்றொருவரை யொத்தும் இரண்டு சமானப் பொருள்களை உடையீர்கள். யானோ, உனது உடைமையாகிய காரணத்தால், என்னை யன்றி ஒருவரையும் ஒவ்வாமற் ஒரே சமானப்பொருளுடையேனாய் நும்மிருவரினும் அதிகனாகினேன் என்று புகழ, நாரதன், அவ்வாறு புகழ்வதைத் தடுத்து, எனக்கு உபசார வார்த்தை எதற்காகக் கூறுகின்றாய்? அந்நியனுக்கன்றோ கூறவேண்டும். நான் உன்னினின்று வேறானவனல்லேனன்றே. ஆராய்ந்து பார்த்தால் நாம் இருவரும் ஓருருவமே. உன்னினின்று நான் வேறல்லேன் என்னினின்று நீ வேறல்லாய் எல்லாம் தெரிந்த உனக்கு இவ்வுண்மை தெரிந்தது தானே. நாம் இருவரும் அபேதமாய் ஒருவராகவே இருத்தலாலன்றோ, நீ ஒருவருக்கும் சொல்லாமல் உன் மனத்துக்குள்ளே நினைத்ததை, நினைத்தபடியே என் மனம் உணர, அதனால் நான் உன்னிடம் வந்து சேர்ந்தேன். அவ்வாறு சேர்ந்த என்னை நீ அந்நியனாகக் கருதிப் புகழலாமோ என்றுகூறிப் பின்னும் கூறுகின்றான்.

அகலிகையை கௌதமன் அடைதல்.

நான் உபசார வார்த்தைகளில் விருப்பில்லாதவன். அகலிகையை நீ அடைவதற்குப் பிரம்மதேவரது கட்டளையைப் பெறும்படியாக, நாம் இனித் தாமதஞ் செய்யாமல் அவரிடம் செல்வதே நல்லதென்று கூறி, வளமாகப் பால் கொடுக்கும் பசுக்கள் வாழும் அந்தத் தொழுவை நீங்கித் தன் சிநேகிதனோடு பிரம்மதேவரை அடைந்து, அவருக்கு அவர் நியமித்த சபதத்தைக் கௌதமன் நிறைவேற்றிய விவரத்தைத் தெரிவித்தான். உடனே, அவர் இந்நாள் நன்னாள், இன்றே அகலிகை கல்யாணத்தை நிறைவேற்றுக என்று சொல்லிக் கௌதமனுக்கு அகலிகையைக் கொடுத்து, எல்லாருக்கும் விடை கொடுக்க, அவர்கள் மகிழ்ச்சியடைந்து தங்களிடம் சென்றார்கள்.

இந்திரன் தான் உற்ற தோல்விக்கு வருந்தல்.

இமைப்பொழுதும் இளைப்பாறுதற்கும் தங்காமல் பொறுமையுடனே அலைந்து (என் தெய்வப்பிறப்புக்கு இயல்பாக உள்ள) இமையாத கண்களால் அந்தப் பசு எங்கேயுள்ளதென்று நான் தேடிப் பார்த்துக் கொண்டிருந்த நாள்களிலே கடைசியான ஒருநாளிலே இந்த வரலாறு முழுதுங் கேள்வியுற்றேன். அதனால் வாடி வருந்தினேன். வேறொன்றும் செய்தற்கில்லாதவனாயினேன். நான் மேகவாகனாரூடனாய்ச் சுவர்க்க மத்திய பாதாலமென்ற திரிலோகங்களும் சென்றும் எனக்குக் கிடையாத அகலிகை கௌதமனுக்கு எளிதாகக் கிடைத்தது. மேகந் தோயும்படி உயர்ந்த கொம்பிலுள்ள தேன் ஒரு முடவனுடைய வாய்க்கு நேராக வாய்ந்து வடிதலின் ஒத்தது. கொடிய தீயிலே விழுந்து சுடப்பட்டெழுந்தோர் திரும்பவும் அந்தத் தீயிலே விழுந்தார்போலவும் ஒருமுறை மாண்டார் மறுமுறையும் மாண்டார்போலவும், நான் இரண்டுமுறை தோல்வியடைந்து வருந்துவேனாயினேன்.

அகலிகை வெண்பா முற்றும்.

ஒரு விநோத கதை.

ஒரு இடையனுக்கு ஒரு மந்தை ஆடுகள் இருந்தன. அவைகளுள் ஒன்று வியாதியால் வருந்தினது கண்டு மதுரை வீரன் என்ற தேவதைக்குப் பிரார்த்தனை செய்து கொண்டான். மதுரை வீரசாமி! உன்னுடைய திருவருளாலே நோய் நீங்கினால், இந்த மந்தை ஆடுகளை உனக்கே காணிக்கையாகக் கொடுத்து விடுகிறேன்—என்று இரண்டு கையாலும் கும்பிட்டுக்கொண்டு சொன்னான். அப்பொழுது அவன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அவனுடைய மனைவியானவள் அவனை அதட்டி,—"என்னங்க, அப்படிச் சொல்றிங்க, ஆட்டை முழுதும் கொடுத்திடுறதா?" என்று மெல்லக் கேட்டாள். அதற்கு அவன் கும்பிட்டுக்கொண்டிருந்த கையால் அப்படியே மதுரைவீரசாமிக்குத் தெரியாமல், தன் முகத்தை அவள் பார்க்கச் சாய்த்து மறைத்துக்கொண்டு நாக்கை நீட்டி, "ஆட்டிலொட்டிய மயிர்கூடத் தரமாட்டேன், நீ சும்மாயிருடி, விசாதி தீரட்டும்" என்றான். இப்படித்தான் இருக்கும் உலக நம்பிக்கை. சுவாமியென்று மதித்துப் பிரார்த்திப்பவனுக்கே இப்படிப்பட்ட நம்பிக்கை இருக்குமானால், மற்ற மனிதரிடம் வைக்கப்படும் நம்பிக்கை எப்படி நிலைபெறும்? கடவுளிடத்து இப்படிப்பட்ட நம்பிக்கை வைக்கக்கூடுமோ? ஒருபோதும் கூடாது. கடவுளை வஞ்சிக்க முடியாது. கடவுளிடத்து வைக்கும் நம்பிக்கை அன்பும் அழுத்தமும் உடையதாய் இருத்தல்வேண்டும். உலக காரியங்கள் எல்லாவற்றிற்கும் அந்த நம்பிக்கையையே பிரதிநிதியாகக் கடவுள் மாட்டு அனுப்பினால், அது எல்லாக்காரியங்களையும் சித்தியாக்கிக் கொண்டுவரும்.

இந்திரஜித்

(முன்தொடர்ச்சி)

செட்டியார் எவ்வளவு பிடிவாதம் பிடித்தும் பலிக்கவில்லை. டாக்டரின் மனைவி செட்டியாருக்கு அநுகூலமாகவே பேசினாள். ஆனால் அவனோ எப்பொழுதும் பரபரப்பில்லாமல் அமைதியுடன் மெதுவாய் முதலில் சொன்னதையே எள்ளளவேனும் மாற்றாமல் சொல்லிக் கொண்டு வந்தான். கட்டாற்றில் குதிரையை மாற்றுவது ஸாத்யமாகுமா? எவருக்கு எந்தத் தொழிலில் ருசி உண்டாய் சிரமப்படுகிறானோ அவனுக்கு அதைத்தவிர வேறொன்றும் ஒத்துவராது. அறியாத்தனத்தாலோ ஆசையாலோ தனக்குப் பழக்கமில்லாத தொழிலைச் செய்யப்புகுந்தால் குருடனை ராஜவிழி விழிக்கச்சொன்னது போலாகு மென்றான்.

அவன் தடுத்துத் தடுத்துப் பேச அவனை எப்படியாவது வளைத்துப் போடவேண்டுமென்று செட்டியாருக்கு ஆசையும் பிடிவாதமும் வலுத்தன. அவரை இன்னும் ஆசைகாட்டுவது போல் டாக்டர் ஒவ்வொரு நாளும் தன் புத்திசாலித்தனத்தையும் திறமையையும் பலவிதமாய்க் காட்டினான். நான் இவைகளையெல்லாம் தொழிலாய்க் கற்றவனல்ல. ஒரு விஷயத்தின் முக்கியமான அம்சங்களைக் கவனித்து ஸாரத்தை எடுத்துக் கொண்டு சக்கையை எறிந்து விடுவதைத்தவிர வேறுவழி எனக்குத் தோன்றவில்லை. அதனால் கிடைத்த மட்டும்போதுமேயென்று வெகு வணக்கமாய்ச் சொல்லிக் கொண்டான். அவன் மனது வைத்தால் எதையும் செய்யக்கூடியவனென்பதற்கு ஆக்ஷேபமில்லை. மண் வெட்டி பிடித்து வெட்டுவது கோடாலியெடுத்து கட்டை பிளப்பது முதல் நுட்பமான யந்திரங்களைக் கையாடுவது பழுது பார்ப்பது வரையில் அவனுக்கு ஜலப் பிராயம். மாட்டிற்கு லாடம் அடிப்பது முதல் மனுதர்ம சாஸ்திரத்தைப்பற்றி உபன்யாஸஞ் செய்கிற வரையில் அவனுக்கு ஒரு பொருட்டல்ல. ரஸாயன சாஸ்திரம் அவனுக்குச் சொந்தம்; ஆயுர்வேதம், ரணசிகித்ஸை, அவன் வருஷக் கணக்காய் இரவும் பகலும் உழைத்து பிரஸித்திபெற்ற தொழில்; மாடு குதிரை கடா காளை கௌதாரி ராஜாளி நாய் முதலிய பந்தய விஷயங்களில் அவன் ஜகத்குரு. சீட்டு சொக்கட்டான் சதுரங்கம் முதலியவை ஆடுவதில் நளனை ஜயித்த புஷ்கரனும், தர்மனை ஜயித்த சகுனியும் இவனுக்கு ஜோடுதாக்க வேண்டும்; ஸமயம் வாய்த்தால் மடாதிபதியைப்போல் அமுலும் அதிகாரமும் நடத்துவதற்கும் தத்வோபதேசம் செய்வதற்கும் இவனைத் தவிர வேறு யோக்யனில்லை.

யென்று எல்லோரும் பிரமாணம் செய்வார்கள். அவன் ஓர் விசித்திரமான தையல் இயந்திரத்தைக் கண்டு பிடித்து சர்க்காரில் பதியவைத்து அதற்காக வருஷம் ஒன்றிற்கு ரூபாய் 1000 இனும் பெற்று வருகிறான். அராபிப் பாஷையில் தாம்பிரத்தின் குணங்களையும் அந்த பஸ்மம் ஸிந்தூரம் சுன்னம் முதலியவை குஷ்டம் முதலிய கொடிய வியாதிகளை அகற்று மென்பதைப் பற்றி ஒரு நூலை மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறான்.

பினங்கில் போய் இறங்கும் வரையில் டாக்டர் ஒன்றும் நிச்சயமாய்ப் பிடி கொடுத்துப் பதில் சொல்லவில்லை. துறைமுகத்தில் செட்டியார்களை விட்டுப் பிரியும் பொழுது அதே புன்சிரிப்புடன் "ஏதோ இதுவரையில் வெகு ஸந்தோஷமாய் காலம் கழிக்கும்படி எங்களுக்குக் கொடுத்து வைத்திருந்தது. எப்பொழுதுமே பாலை பழுக்குமா? நமக்குக் கிடைத்ததைக் கொண்டு நாம் திருப்தியடைய வேண்டியது. எங்களிடத்தில் எவ்வித குற்றங் குறைகள் இருந்தாலும் அவைகளைப் பொருட் படுத்தாமல் மன்னிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

செட்டியாருக்கு அவர்களைவிட்டுப் பிரிய மனம் வரவில்லை. "என்ன மறுபடியும் நாம் சந்திக்கப்போகிறதில்லையா? ஏன் அப்படி? தாங்கள் என்ன குற்றம் செய்தோ" மென்று தழதழத்த குரலுடன் உண்மையாகவே மன முருகிச் சொன்னார்.

அந்த அம்மாள் எனக்கும் வருத்தமாய்த்தான் இருக்கிறது. ஆனால் நீங்கள் எவ்விடத்தில் இறங்கப்போகிறீர்களோ தெரியவில்லை யென்று அவரைக் கடைக்கண்ணால் ஒரு பார்வை பார்த்தாள்.

செட்டியார், "நாங்களா? வயிரவன் கோயிலுக்குப் பக்கத்திலிருக்கும் செட்டி சத்திரத்தில் இறங்குவதாய் ஏற்பாடு செய்திருக்கிறோ"மென்றார்.

அவள் கை கொட்டிச் சிரித்து, "என்ன ஆச்சரியம். சொல்லி வைத்ததுபோலவே நடக்கிறது. நாங்களும் அங்கே இறங்குவதாய்க் கடிதம் எழுதியிருக்கிறோ" மென்றாள்.

செட்டியாருக்குதான் இருப்பது பூலோகமா கைலாஸமா வென்று தெரியவில்லை. வாயில் ஈ புகுந்தது தெரியாமல் அவளைப் பார்த்துக் கொண்டே" நீங்கள் இங்கே எவ்வளவு நாள் தங்கியிருந்தாலும் உங்களுக்கு வேண்டிய ஸகல சௌகரியங்களையும் நான் ஏற்பாடு செய்யும்படி அனுமதி கொடுக்கவேண்டும். இங்கே பல முறை நான் வந்து சுற்றியிருக்கிறேன். பார்க்க வேண்டிய விநோத காக்ஷிகளையும் ஆச்சர்யங்களையும் என்னைவிட

வேறொருவர் அழைத்துப்போய் காட்டமுடியாது. பத்து நாள் முந்திப்பிந்தி இருந்தாலும் இங்கே பார்க்கவேண்டிய விஷயங்களை நன்றாய்ப்பார்த்து விட்டே போகவேண்டும். அடிக்கடி வரப்போகிறீர்களா வென்ன" வென்றார்.

டாக்டரும் அவருடைய மனைவியும் ஒருவரை யொருவர் பார்த்து சிரித்தார்கள். செட்டியாருடைய அற்புதமான குணதிசயத்தையும் பெருந்தன்மையையுமே அவர்கள் மெச்சினார்களென்பதற்குத் தடையென்ன. வேறுவிதமாய் நினைக்க நியாய முண்டோ. ஆனால் செட்டியாருடைய நோக்கம் வேறு. இன்னும் பத்துநாள் பழகினால் அந்தப் பிடிவாதக்கார அசாமியை எப்படியாவது சரிப்படுத்தி விடலாமென்று அவருக்கு நம்பிக்கை.

அப்படியே அவர்கள் பினங்கில் சத்திரத்தில் ஜாகை செய்துகொண்டு ஒவ்வொரு நாளும் வெளியில் சுற்றித்திரிந்து காடு மலை ஏரி ஆறு அபூர்வமான மரங்கள் மிருகங்கள் பக்ஷிகள் காக்ஷிகள் முதலியவைகளைப் பார்ப்பதும் இரவில் வெகு நேரம் கழித்து ஜாகைக்கு வருவதுமாகவே யிருந்தார்கள்.

ஒரு நாள் சின்னவருக்கு ஏதோ ஒரு யோசனை தோன்றி அதுவரையிலும் சுத்தமாய் மறந்திருந்த இந்திரஜித்தின் ஞாபகம் வந்து விட்டது. ஐயோ, அந்த மஹாபாபி தன் கூட்டாளியுடன் டாக்டரும் அவருடைய மனைவியையும் போல் வேஷம் தரித்து, எங்கேபோய் ஒழித்தாலும் நிழலைப் போல் பிரியாமல் தூரத்து கிறானோ வென்று கிலிபிடித்துக் கொண்டது. பெரியவரிடத்தில் சொன்ன பொழுது அவர் அதைக் காதுகொடுத்தே கேட்கவில்லை. டாக்டரின் மனைவியிடத்தில் அவர் வைத்த விச்வாஸமும் அவளுக்குச் செய்யும் உபசாரமும் பிரமாதமா யிருந்தபடியால் சின்னவருடைய தாபம் ஒன்றும் பலிக்கவில்லை.

மறு நாள் அவர்கள் வெளியில் ஏரிக்கரையில் திரிந்து கொண்டிருக்கும்பொழுது ஓர் வாய்க்காலின் கரையில் மிருதுவான புல் தரையில் இளைப்பார உட்கார்ந்தார்கள். டாக்டர் காலை நீட்டிக்கொண்டு சௌகரியமாய் படுத்துப் புரண்டு கொண்டிருந்தார். அவனுடைய தலைமயிர் வெகு அடர்த்தியாயும் படிப்படியாயுமிருந்ததை இரண்டு செட்டியார்களும் கண்டு கவனித்து பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். இருவருக்கும் ஒரே காலத்தில் சாமியாருடைய ஞாபகம் வந்து இதே விதமான தலைமயிர் அவனுக்கிருந்ததல்லவா வென்று இந்திரஜித்தின் முதலாவது அவதார சரித்திரத்தை ஞாபகப்படுத்திக்கொண்டார்கள். பெரியவர் குனிந்து அந்த மயிரை ஊக்கமாய் கவனித்தார். டாக்டருடைய மனைவி திடுக்கிட்டு பின்னடைந்தாள்: அவ்வளவு நெருக்கமாயும் அழுத்தமாயும் ஒருவளுக்கும் தலைமயிர் இருக்காது. மேலும் நெற்றியில் வரி பிளந்ததுபோல் நூல் பிடித்து அளந்ததுபோல்

அதன் வரிசை முடிந்தது. இது இயற்கையல்ல. அப்படியானால் பொய் மயிராவென்று செட்டியார் ஸந்தேஹிக்கலானார். அடுத்த நிமிஷத்தில் திடீரென்று டாக்டரின் தலை மயிரை ஒரு கையால் சேர்த்துப்பிடித்து, அப்படியே தூக்கி எறியப்பார்த்தார். உடனே டாக்டர் 1000 தேள்கள் கொட்டினதுபோல் ஈரிட்டுத் துள்ளிக் குதித்தார். செட்டியாரின் கையில் வேருடன் பிடுங்கப்பட்ட சில மயிர்கள் வந்து விட்டன; அவ்விடத்தில் இரத்தம் கசிய ஆரம்பித்தது. பொய் மயிரல்ல. டாக்டரின் ஸ்வபாவ மயிரே. செட்டியார் சக்தியில் நின்றார்.

அதற்குப் பிறகு நடந்த காக்ஷியை யாரால் வர்ணிக்க முடியும். டாக்டருக்குக் கோபம் ஒரு பக்கத்திலும் ஆச்சர்யம் ஒரு புறத்திலும் மேலிட்டு வார்த்தை குறைவாய் எதற்காக இப்படிச் செய்தீரென்று கண்களில் நெருப்புப் பொறி பறக்க கர்ஜித்தார்.

செட்டியார் என்ன செய்வார். வணக்கமாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்; கண்ணீர் விட்டழுதார்; தான் செய்த குற்றத்திற்கு எவ்விதமான பரிஹாரத்தையும் செய்யத்தயாராயிருப்பதாய்த் தெரிவித்தார். எவ்வித அவமானத்திற்கும் சிக்ஷைக்கும் உட்பட ஸம்மதித்தார்; பச்சாத்தாபமும் துக்கமும் தாங்காமல் தன் வயிற்றெரிச்சலையெல்லாம் வெளியிட்டார். "நானே வெள்ளையன் செட்டியாரென்ற வயிர வர்த்தகன். இந்திரஜித்தென்ற ஓர் மாயாவீ யமதூதனைப்போல் சிலகாலமாய் இராப்பகலாய் ஓய்வு ஒழிவில்லாமல் தலை வைத்துப் படுக்க விடாமல் ஊரூராய்ப் பின் தொடர்ந் ஆயிரக்கணக்காய் கொள்ளையடிக்கிறான். அவனுடைய மாறு வேஷத்தையும் தந்திரத்தையும் உபாயங்களையும் கண்டு பிடிப்பது அவனைப் படைத்த கடவுளுக்கும் ஸாத்யமல்ல. இப்படிக் கொள்ளை கொடுத்த நான் யாரைக் கண்டாலும் அந்தக் கொலைபாவியாய் எண்ணி சந்தேஹிப்பது பிசகா? என்னைப் போல் நீங்களுமிருந்தால், இப்படிச் செய்ய மாட்டீர்களா? சொல்லுங்களென்று டாக்டரையும் அவருடைய மனைவியையும் தீனமாய்க் கேட்டார். அந்த அம்மாள் ஆம் உண்மை தானே, இவருடைய மயிர் விசித்திரமாய் வளர்ந்திருப்பதை எத்தனையோ பேர்கள் கவனித்து ஆச்சரியப்படிருக்கிறார்கள். இதோ பாருங்களென்று எடுத்து காட்டினார்.

ஆனால் டாக்டர் கோபந்தணியாமல் குனிந்த தலை நிமிராமல் "சரி தான் காணும்; அப்படி உமக்கு ஸந்தேஹமுண்டாய் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தால் ஒளிக்கவென்ன; தாராளமாய் ஏன் கேட்கக் கூடாது. என் தலை மயிர் இயற்கையா செயற்கையா வென்று அறிவதற்கு என்னை உபத்திரவித்துதான் ஆக வேண்டுமோ" வென்றார்.

செட்டியார் "சுவாமி நானென்ன செய்வேன் திடீரென்று அந்த எண்ணமுண்டாய் இன்னது செய்கிறோமென்று தெரியாமல் ஏதோ தவறிச் செய்து விட்டேனென்றார்.

டாக்டர், "பத்துப் பேருக்கு நடுவில் பழகும் நாகரீகமுள்ள மனுஷ்யன் அடக்கம் ஒடுக்கத்துடன் கால தேசத்தையும் மற்றவரின் ஸௌக்ய துக்கங்களையும் கவனித்தே நடக்க வேண்டும். இல்லாவிட்டால் காட்டிலேயே இருக்கலாமே. இதற்கெல்லாம் காரணம் என்ன வென்று தெரியுமா? நீர் தென்னாப்பிரிகாவில் இருந்ததாய்ச் சொல்லுகிறீரே! அங்கே நாட்டு ஜனங்களுடன் பழகி அவர்களின் வாடிக்கைகளையும் ஆசாரங்களையுமே நன்றாய்ப் பழகி விட்டதாகத் தெரிகிறது. நீர் யாரோ இதுவரையில் நாங்கள் எண்ணியிருந்த படி கந்தசாமி முதலியாரோ அல்லது புத்தி சாலியும் நாகரீகமுள்ளவருமான வெள்ளையன் செட்டியாரோ யாருக்குத் தெரியும். உமது நடத்தையைப் பார்த்தால் செட்டியாரென்று சொல்லுவதற்கு மனம் துணியவில்லை யென்றார்.

மூன்று நான்கு நாள்கள் வரையில் செட்டியார் தவித்த தவிப்பு கணக்கு வழக்கில்லை. பிறருடைய கஷ்ட ஸுகங்களை சற்றேனும் கவனிக்காமல் முரட்டுத் தனமாய் நடக்கும் செட்டியார் பணத்திமிரையும் அசம்பாவத்தையும் விட்டு டாக்டரின் மனதை புண்படுத்தி விட்டோமே யென்பதைப் பற்றி ஆராத்துயர மடைந்ததாய்க் காணப்பட்டார். தன்னை மன்னித்து முன் போல் ஸ்நேகமாய் இருப்பதற்கு எவ்வளவு 1000 ரூபாய் வேண்டுமானாலும்செலவு செய்யத் தயாராயிருந்தார். அவருடைய வார்த்தைகளால் டாக்டரின் மனைவிக்கும் அது புலப்பட்டது. செட்டியாரை ஸமாதானப்படுத்துவதற்கு அவள் எவ்வளவோ சிரமப்பட்டான். அவள் உண்மையாகவே இளகின மனதுள்ளவள்; ஆனால் வேடிக்கையிலும் விஷமத்திலும் பிரியமுள்ளவள். டாக்டரோ வரவர ஒதுங்கினார். அவனை எப்படியாவது வேலைக்கு ஒப்புக் கொள்ளச் செய்ய வேணுமென்று செட்டியார் பகீரதப் பிரயத்தனஞ் செய்தார். அவனோ கல்லுப் பிள்ளையாராய் அணுவேனும் அசையவில்லை. "நீர் இவ்வளவு தூரம் கேட்டுக் கொண்டதால் ஒரு வேளை ஒப்புக் கொள்ளலாமோ வென்று அரை மனதாய் இருந்தேன். ஆனால் உமது போலீஸ் தந்திரத் திற்குப்பிறகு அந்த எண்ணமே பறந்து விட்டது. ஒருவனுடைய ஸ்திதி கதியைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவனுக்கு கௌரவமான வழிகளில்லையா? பிரபலமான வர்த்தகனென்றும் லக்ஷாதிபதி யென்றும் பெயர் வைத்துக் கொண்டிருக்கும் ஒருவருடைய ஏஜண்டாய் நான் போவதாயிருந்தால் இதைக்காட்டிலும் இன்னும் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டியது நியாயமென்றெண்ணுகிறேன்" னென்றான்.

அவன் தன்னிடத்தில் வேலைக்கு ஒப்புக்கொள்ள மாட்டேனென்று சொன்னதால் வருத்தமுண்டாயிற்றோ என்னமோ. ஆனால் தன்னை லக்ஷாதிபதியென்று சொன்னதைக் காட்டிலும் பிரபுவென்று சொன்னதால் அவருக்குள்ள ஸந்தோஷத்திற்கு எல்லை இல்லை.

மூன்று நாளைக்குப் பிறகு டாக்டரும் அவருடைய மனைவியும் தாங்கள் வேறிடத்திற்குப் போவதாய்த் தெரிவித்தார்கள். செட்டியாருக்கும் பல விடங்களில் கார்யமிருந்தது. அந்த அம்மாள் செட்டியாரிடத்தில் சொல்லிக்கொள்ள வந்தபொழுது அவர் உன் கணவனையும் உன்னையும் விட்டுப் பிரியாமலிருப்பதற்கு என்னால் கூடிய பிரயத்னங்களைச் செய்தும் வீணானது என் குற்றமல்லவென்று உனக்காவது தெரியுமென்றார்.

அந்த அம்மாள் "நான் அந்த விஷயத்தில் எவ்வளவு முயற்சி செய்தேனென்பது யாருக்குத் தெரியும். நாங்கள் உத்தேசித்துப் போகிற விடத்தில் பொழுது போக்கிற்கு ஒரு வித வியவஹாரமுமில்லை. உண்பதும் உடுப்பதும் தூங்குவதுமே ஒவ்வொரு நாளும் மாறி மாறி ஏற்படும் விசேஷம். உம்மைப் போன்ற பெருந்தன்மையுள்ள கனவான்களின் ஸஹவாஸத்தால் எங்களுக்கு எவ்வளவோ லாபமுண்டு. கணவர்கள் தங்களுடைய மனைவிகளின் வார்த்தைக்குக் கட்டுப்படாமலிருப்பதில்லை யென்று லோகாபவாதம். டாக்டர் விஷயத்தில் அதைத் திருப்பி வாசிக்கவேண்டும். பிடிவாதம் இன்னதென்று அறியவேண்டுமானால் அவரையே அதின் அவதாரமாய் கோயில் கட்டிக்கும்பிடலாமென்றாள்.

அன்று முழுவதும் செட்டியாருக்கு ஒரே ஏக்கம் பிடித்திருந்தது. மறுநாட்காலையில் அவர் அவ்விடத்தைவிட்டு அங்கங்கே சுற்றிப் பார்த்து வருவதற்காகப் புறப்பட்டார். தன் வியாபார விஷயங்களை அடிக்கடி கவனித்துக் கொண்டிருப்பது அவஸ்யமென்று அவருக்குத் திடீரென்று தோன்றினது போலும்.

அவரும் சின்னவரும் பெட்டி படுக்கைகளைக் கட்டி வைத்தார்கள். மாறு வேடம்பூண்டு பிரயாணஞ் செய்ததால் தங்களுடைய தவசிப்பிள்ளைகளையும் வேலைக்காரர்களையும் கொண்டு வரவில்லை. ரயிலுக்குப்போக எல்லாம் தயாராய் விட்டது. மூட்டைகளை வண்டிகளில் ஏற்றுவதற்காகக் கூலியாட்கள் ஓட்டமும் பிடியுமாய் இருந்தார்கள். யாரோ ஒரு வேலைக்காரி அங்குமிங்கும் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தாள். ஏதாவது இனாம் கொடுப்பார் செட்டியாரென்று எண்ணியிருக்கலாம். செட்டியார் தன் தஸ்தாவேஜுப் பெட்டிகளை ஒரு க்ஷணம்கூட கையிலிருந்து கீழே வைக்காமல் மார் போட்டணைத்துக் கொண்டிருந்தவர் தன்

சில்லறை சாமான்களைச் சேர்த்து அனுப்புவதற்காக அறையின் நடுவிலிருந்த மேஜையின்மேல் அதை ஒரு நிமிஷம் வைத்தார். திடீரென்று ஏதோ ஞாபகம் வந்து சட்டைப்பையைத் தடவிப்பார்த்தார். வெற்றிலை பாக்கு செல்லத்தைக் காணவில்லை. விலையுயர்ந்த ரத்தினங்கள் இழைக்கப்பட்டு வெகு விசித்திரமாய் வேலைப்பாடு அமைந்த தங்கப்பெட்டி படுக்கையறையில் வைத்ததாய் ஞாபகம். இருவரும் ஓடி அங்குமிங்கும் தேடிப்பார்த்து ஏதோ ஒரு மூலையில் தலையணையின் கீழ் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அதை எடுத்துக்கொண்டு திரும்பி வருவதற்குள் தஸ்தாவேஜுப் பெட்டியைக் காணவில்லை. குடிமூழ்கிப் போய்விட்டது. ஊசி நாட்ட இடமில்லாமல் அந்த அறைமுழுவதும் தேடினார்கள். வேலைக்காரர்களை விசாரித்தார்கள். குறுக்கு விசாரணை செய்தார்கள். கெஞ்சினார்கள் அதட்டினார்கள். இனாம் கொடுப்பதாகச் சொன்னார்கள். பயமுறுத்தினார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. ஐயோ! இரண்டு நிமிஷத்திற்கு முந்தி இவ்விடத்திலேயே வைத்தேனே! யென்றார் செட்டியார். அது நிஜமே. பிறகு என்னமாயிற்றென்று யாருக்குத் தெரியுமென்றார் சின்னவர். கோபத்தால் செட்டியார் மெய் மறந்து உடனே சத்திரத்து மணிய காரனிடத்திற்குச் சென்று புகார் செய்தார். அவனோ அதைப்பற்றி அதிகமாய் மேலே போட்டுக் கொள்ளாமல் "ஆமாமய்யா இங்கே தங்கும் பிரயாணிகள் பணம் நகை முதலியவைகளை என்னிடத்தில் கொடுத்து வைக்க வேண்டியதென்றும் ரசீது பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் புறப்படும் பொழுது அவைகளைக் காட்டி சாமான்களை வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் இப்படிச் செய்யத்தவறினால் சொத்துக் காணமற்போயிற்றென்று புகார் செய்யக் கூடாதென்றும் லாப நஷ்டத்திற்கு தான் ஜவாப் தாரியல்லவென்றும் பதில் சொல்லி அனுப்பிவிட்டான்.

செட்டியாருக்கோ கண் சிவந்து விட்டது. "கூட கூட பகற்கொள்ளை. போலீஸ் என் தஸ்தாவேஜுப் பெட்டி கிடைக்கும் வரையில், ஒருவரும் இந்தக்கட்டடத்தை விட்டு போகக்கூடா" தென்றார். மணியகாரர் கொஞ்சமேனும் அதைப்பற்றி கவலைப் படாமல் தன் வெற்றிலைப் பெட்டியைத் திறந்து சாவகாசமாய் வெற்றிலை போட்டுக்கொண்டு நாழிகைக் கொருவார்த்தையாய் "இதென்ன. ஏதாவது குப்பக் காட்டு சத்திர மென்று எண்ணமோ. ஆயிரக் கணக்காய் ஜனங்கள் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள் ஒருதேசமா ஒரு பாஷையா ஒரு ஜாதியா ஒரு மதமா யாரைக் கட்டுப்படுத்த முடியும். வேணுமானால் போலீஸில் எழுதிவையும் நீர் என்ன சுத்த நாட்டுப்புறத்து அசாமியாயிருக்கிறீர். ஊரும் பெயரும் தெரியாது உமது வார்த்தையை நம்பி இவ்வளவு ஜனங்களின் பிரயாணத்தை தடை செய்யப்புகுந்தால் என்னை பைத்தியக்கார னென்று எல்லோரும் கல்லால் அடிப்பார்கள். போம். போம். உமக்கு இஷ்டமானதை செய்து கொள்ளு மென்றான்.

ஊரும் பெயரும் தெரியாத அசாமி யென்றவுடன் செட்டியாருக்கு தலை கால் தெரியவில்லை. "ஏய் யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொன்னீர். சென்னை வெள்ளையன் செட்டியாரென்றால் லோகப் பிரஸித்தம். வயிர வர்த்தகத்தில் நான் வைத்தது சட்டம் தெரியுமா. சட்ட சபை மெம்பர் நினைத்தால் உங்களுடைய இந்த ஒட்டைச்சாண் ஊரை எட்டுத் தடவை விலைக்கு வாங்குவே"னென்று கூச்சலிட்டார்.

மணியக்காரன் "ஏன் காணும் வாள் ஊளென்று கத்துகிறீர். நீர் யாராயிருந்தால் எனக்கென்ன; ஸாக்ஷாத் வைஸ்ராயாக வேண்டுமானால் இரும். இங்கே எல்லாம் ஒரே தினுசு தான். அவனவனுக்கு எது நியாயமாய் கிடைக்கவேண்டுமோ அந்த மரியாதை தான் கிடைக்கும். ஒரு எள்ளளவும் குறையாது. அதிருக்கட்டும். நீர் வெள்ளையன் செட்டியாரானால் என் ரிஜிஸ்டரில் கந்தசாமி முதலியாரென்று பெயர் மாறாட்டமாய் எழுதி வைத்திருக்கிறீரே இதென்ன வேலைத்தனம். ஏன் ஆடு திருடின கள்ளன்போல் விழிக்கிறீர். இது வரையில் பிரமாதமாய் ஆகாசத்தில் தாவிக் குதித்தீரே. இப்பொழுது வாய் அடைத்துப் போய்விட்டதா வென்று அதட்டினான்."

செட்டியாருக்கு இன்னது சொல்வதென்று தோன்றவில்லை. பெரிய சங்கடத்தில் மாட்டிக் கொண்டார். தன் தஸ்தாவேஜு பெட்டியின் உட்புறத்தில் வெள்ளையன் செட்டியாரென்று பெயர் எழுதியிருக்கிறது. ரிஜிஸ்டரிலோ வேறு பெயர் காணப்படுகிறது. மணியகாரனுக்கு தன்னிடத்தில் அலக்ஷ்யமும் ஸந்தேஹமும் வரும்படி நடந்து கொண்டார். தஸ்தாவேஜுப் பெட்டியின் சங்கதியே சுத்தப் பொய்யென்றும் இது ஏதோ பெரிய வேலைத்தனமென்றும் இந்த அசாமி யாரோ தெரியவில்லை. போலீஸாரைவிட்டு கவனிக்கச் சொல்லவேணுமென்றும் பேச ஆரம்பித்தான். கோடிக்கணக்காய் வியவஹாரம் நடப்பதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகள் மாயமாய் மறைந்தன; தன்னை ஒருவரும் நம்பவில்லை; வேறு வழியும் தோன்றவில்லை. செட்டியார் பித்துப் பிடித்தவரைப் போல கண்டவரையெல்லாம் என் தஸ்தாவேஜுப் பெட்டியைப் பார்த்தீர்களா வென்று கேட்டுக்கொண்டே இருந்தார். ஏதோ தங்களை அயோக்கியர்களாய் எண்ணி தங்களிடத்தில் ஸந்தேஹப்பட்டுக் கேட்டதாய் பலர் எண்ணிக்கொண்டு செட்டியாரைக் கண்டபடி திட்ட ஆரம்பித்தார்கள். சிலர் ஏதோ பைத்தியமென்று தள்ளிவிட்டார்கள். சிலர் இவன் யாரோ திருட்டுப்பயல் இப்படி வேஷம்போட்டு எதையாவது அடித்துக்கொண்டுபோகப் பார்க்கிறான் என்றார்கள். சிலர் இவனை பைத்திய ஆஸ்பத்திரியில் ஏன் அடைக்கவில்லை என்றார்கள்; சிலர் இவனுடைய மூட்டைகளைப் பரிசோதித்தால் என்னென்ன

வெளிப்படுமோ வென்றார்கள்; ஒருவன் தன்காலிலிருந்த ஜோடைக் கழற்றினான்; ஒருவன் கையையோங்கி அறையப்போனான். இப்படி தடபுடலாயிற்று. செட்டியார் எதையோ நினைத்துக்கொண்டு ஜட்கா வண்டி பிடித்து போலீஸ் ஆபீஸிற்குப் போய் தன தபாசுகளுக்குத் தந்தியடித்து தன் தஸ்தாவேஜுகள் இன்ன நம்பர் அடையாளமுள்ளவை யென்றும் அவைகளை யார் எங்கே கண்டாலும் போலீஸில் ஒப்பிவிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். ஆனால் அவர்கள் பதில் தந்தியடித்து எங்களால் கூடியவரையில் பந்தோபஸ்து செய்கிறோமென்றார்கள். தன் தஸ்தாவேஜுப் பெட்டியைக் கண்டு பிடிக்காமல் வருஷம் எட்டானாலும் அவ்விடத்தை விட்டு அசைவதில்லை யென்று பிடிவாதமாய் உட்கார்ந்தார். எட்டு வருஷமென்ன. 80 வருஷங்களானாலும் அசையமாட்டார்.

அன்று ராத்திரி அவர்கள் படுத்துக் கொண்டிருக்கும் பொழுது சின்னவருக்கு ஏதோ ஓர் யோசனை தோன்றி செட்டியாரை எழுப்பி, "நாம் மறுபடியும் ஏமாந்தோமே. காலடியில் தேடுவதை விட்டு கடைத் தெருவெல்லாம் சுற்றினோமே. டாக்டர் அந்த தஸ்தாவேஜுப் பெட்டியை ஏன் அடித்துக் கொண்டு போயிருக்கக் கூடா" தென்றார்.

செட்டியார் "அடே மடையா! இதற்குத் தானா என்னை நல்ல தூக்கத்தில் எழுப்பினாய். அவன் முந்தா நாள் காலையிலே இவ்விடத்திலிருந்து போய் விட்டானே. களவு இன்றைக் கல்லவோ நடந்திருக்கிறது. உனக்கென்ன பைத்தியமா மயக்கமா வென்றார்.

சின்னவர் "அவன் சொன்ன வார்த்தையைத் தவிர வேறு என்ன ஆதார மிருக்கிறது. ஒரு வேளை நமக்கு போக்குக் காட்டி விட்டு இங்கே தங்கியிருந்து எப்படியோ தந்திரஞ் செய்து பெட்டியை அடித்துக் கொண்டு போயிருக்கக் கூடாதோ" வென்றார்.

செட்டியார் "நாளைக்குப் பார்த்துக் சொல்வோம். இதற்காகவா என்னை எழுப்பினாய் மேலும் அந்த அம்மான் விஷயத்தில் ஏதாவது நாம் ஸந்தேஹப்பட்டு ஒரு வார்த்தை சொன்னால் நாக்கு அழுகி போகாதா? அவனுடைய பெருந்தன்மைக்கும் யோக்யதைக்கும் நான் ஜாமீன்" யென்றார். தன் ஆஸ்தி முழுவதையும் அவன் அடித்துக் கொண்டு போய் விட்டானென்றாலும் செட்டியார் நம்புவாரா? அப்படியே ஸந்தேஹமில்லாமல் ருஜுவானாலும் வாயை மூடிக்கொண்டு எல்லாவற்றையும் தாரை வார்த்து அவனைப் பார்த்துப் பார்த்து பல்லிளித்துக் கொண்டே உட்கார்ந்திருப்பார்.

மறுநாள் அதைப் பற்றி விசாரித்ததில் டாக்டரும் அவருடைய மனைவியும் அந்த சத்திரத்திலிருந்து புறப்பட்டுப் போனது உண்மையே; ஆனால் வேறு தெருவிலுள்ள மற்றொரு சத்திரத்திற்குப் போய் அங்கே மறுநாள் தங்கி அங்கிருந்து ரயிலுக்கு ஜட்கா பிடித்துக் கொண்டு போனார்களென்றும் அந்த அம்மாள் தன்கையில் ஓர் சிறிய மூட்டையை வைத்துக் கொண்டிருந்தாளென்றும் வெளிக்கு வந்தது. உடனே செட்டியார்களுக்கு கண் திறந்தது இருள் நீங்கிற்று; ஸ்வப்னம் முடிந்து ஞாபகம் வந்தது "ஓகோ! அந்த அறையில் அங்குமிங்கும் திரிந்து கொண்டு இனாம் கிடைக்குமென்று பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரி யார் தெரியுமா? டாக்டரின் மனைவியே. அவளுடைய உடுப்பை இப்படி மாற்றுதற்கு வெகு நேரம் செல்லாது. அந்தப் பெரிய சத்திரத்தில் அதைப்போன்ற வேலைக்காரி கணக்கு வழக்கில்லாமல் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். "இந்த நிமிஷமே ரயில் ஏறி அவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும். "ராமா! இங்கே பணத்தைக் கொடுத்துக் கணக்குத் தீர்த்து விட்டு, கண்மூடிக் கண் திறப்பதற்குள் புறப்பட வேண்டு"மென்றார்.

சின்னவர் "ஆகா! உன்னிடத்தில் ஏதாவது பணமிருந்தால் கொடு"வென்றார். செட்டியார் சட்டைப்பையில் கையைப் போட்டார். காலியாயிருந்தது. "ஐயையோ! எல்லாம் அந்தப்பெட்டியில் அகப்பட்டுவிட்டதே"யென்று பறக்க விழித்தார். அந்தக் காரணத்தால் ஒரு நாள் அங்கே வீணாய்த் தங்க வேண்டி வந்தது. செட்டியார் தனக்குத் தெரிந்த ஓர் வர்த்தகனுக்குத் தந்தியடித்து, பணம் வருவித்து மணியகாரனுக்குக் கொடுத்து, கணக்குத் தீர்த்த பிறகே புறப்பட வேண்டியிருந்தது. இல்லாவிட்டால் அவன் அவருடைய செக்கைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் இஷ்டப்படவில்லை. ரொக்கம் கீழே வைத்தாலொழிய அவ்விடத்திலிருந்து அடியெடுத்து வைக்கக்கூடாதென்று கண்டித்து விட்டான். ஆகையால் அனாவஸ்யமாய் அங்கே அவர்கள் கைதி செய்யப்பட்டதுபோல் உட்கார்ந்திருந்தார்கள்.

அன்று சாயந்திரம் சின்னவர் திடீரென்று "அந்த டாக்டர் யார் தெரியுமா? இந்திரஜித்தென்பதில் ஸந்தேஹமில்லை. எவ்விடத்தில் வேணுமானாலும் வந்து பிரமாணஞ் செய்கிறே"னென்றார்.

செட்டியார் ஆத்திரமெல்லாம் அடங்கிப் போய், "என்ன பாபமோ தெரியவில்லை. யாரைக் கண்டாலும் இப்பொழுது இந்திரஜித்தென்று சொல்வதில் பிசகில்லை. ஆனால் நான் யாரை அந்த மாயாவியென்று நம்பி, ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறேனோ, அந்த அசாமிகள் ஒருவர்

பாக்கியில்லாமல் என்னை மோசஞ் செய்துவிட்டு, ஸாதாரணமான குற்றமற்ற பேர்வழிகளாய் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். நான் அவனுடைய தலை மயிரைப் பிடித்து இழுத்த பிறகும் அவனே யென்று எப்படி ஸந்தேஹிக்க முடியும். மேலும் நாம் அவனிடத்தில் ஸந்தேஹம் உண்டான பிறகு அவன் அந்த வேலையை அப்பொழுதே விட்டு விடுவேனென்று நமக்கு முந்தி எழுதின கடிதத்தில் சொல்லியிருக்கிறானல்லவா? அதற்கு விரோதமாய் இப்பொழுது நடப்பானென்று யார் நினைக்க முடியு"மென்றார்.

சின்னவருக்கு வேறொரு ஸந்தேஹமுண்டாய், ஆனால் முன் தடவைகளில் மோசம்போனதை நினைத்துக்கொண்டு, அதை ஜாடையாய்த் தெரிவித்தார். "ஒருவேளை நாம் மறுபடியும் முன் போல் அசட்டுத் தனம் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சாஸ்திரியார் பொய் மயிரை வைத்துக் கொண்டிருந்த ஒரே காரணத்தால் அவரை இந்திரஜித்தென்று நம்பி, மோசம் போனோம். இந்த டாக்டர் பொய் மயிரை வைத்துக் கொள்ளாததால் இவன் இந்திரஜித்தல்லவென்று முடிவு செய்து மோசம்போனோம். இது இருக்கட்டும் அந்த மாயாவி பொய் மயிர் வைத்துக் கொண்டிருக்கிறானென்று நாம் ஏன் நம்ப வேண்டும். நம்மிடத்தில் அவன் கோவிந்தய்யராய் வேலை செய்துகொண்டிருந்தபொழுது சொன்ன ரஹஸ்யங்கள் வேண்டுமென்றே நம்மை மோசஞ் செய்வதற்காக ஏன் யிருக்கக் கூடாது. முன்பு காசிநாத ராவாய் வேஷம் பூண்டு நம்மை அந்தத்தீவில் பறக்க விட்டபொழுது, அவன் சொன்ன புத்திமதிகளும் ஏன் மோசடியாயிருக்கக் கூடா"தென்றார்.

"அந்த அபாரமான விஷயத்தைக் கண்டுபிடிப்பதற்கு உன்னைப் போன்ற பிருஹஸ்பதி அவதாரமாகவில்லையென்று இது வரையில் லோகம் பாழாயிருந்தது. நல்ல வேளையாய் நீ வந்து காப்பாற்றினாயே"யென்றார்.

சின்னவர் "இது வரையில் இந்த யோசனை உனக்குத் தோன்றவில்லை. நான் சொல்லித்தானே தெரியவேண்டியதாயிருந்தது. கோவிந்தய்யராய் நம்மிடத்தில் வந்தபொழுது தன் மயிரைக் கத்தரித்து வைத்துக் கொண்டிருந்தான்; அது பொய்மயிரல்ல. இப்பொழுதோ அதை தாராளமாய் வளரவிட்டிருக்கிறான். காசிநாத ராவாய் வந்த பொழுது அதை நடுத்தரமாய்வளரவிட்டு, மீசையையும் தாடியையும் அதற்குத் தகுந்தபடி வைத்துக்கொண்டு அழகான வெப்புச் சாயம் ஏற்றி விட்டான். சாமியாராய் வந்தபொழுது டாக்டரைப்போல் மயிர் வளர்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அதைப்படியும்படி வாரி விட்டுக்கொண்டிருந்தான். வைத்தியராய் வந்தபொழுது அதற்குக்கறுப்புச் சாய மேற்றித் தலையில் படிந்துஒட்டியிருக்கும்படி செய்து கொண்டான்

க்ஷவரமாய் வந்த பொழுது கிருதா தாடி எல்லாவற்றையும் எடுத்துவிட்டு தலைமயிரை ஒட்டக் கத்தரித்துவிட்டு, மீசையை மாத்திரம் எட்டின வரையில் வளர்த்துக் கருப்புச் சாய மேற்றித் துருக்கனைப் போல் வேஷம்போட்டான். பொய் மயிரை வைத்துக் கொள்ள வேணுமென்ற நிர்ப்பந்தமுண்டா? அவனுடைய சொந்த மயிரையே பலதினுசாய் மாற்றிக் கொண்டால் போதுமே யென்றார்.

செட்டியார் "ராமா! நீ சொல்வது நல்லயுக்தி. அவனைக்கண்டு பிடிக்கும் விஷயத்தில் இவ்வளவு புத்திசாலித் தனமாய் நீ இது வரையில் பேசினதேயில்லை யென்று தட்டிக் கொடுத்தார்.

மறுநாட் காலையில் செட்டியாருக்கு ஓர் கடிதம் வந்தது; அதைப் பிரித்துப்பார்த்தார்; இந்திரஜித் தானே கையெழுத்துப் போட்டு எழுதினது: அதற்கு முன் அனுப்பின கடிதங்களைப் போலல்ல. முற்றிலும் வேறுதினுசு.

வெள்ளிக்கிழமை
கால்வே நகர்
ரங்கய்யர் ஹோட்டல்

கனம் வெள்ளையன் செட்டியார் அவர்களுக்கு அநேக நமஸ்காரம். இத்துடன் தங்களுடைய தஸ்தா வேஜுப் பெட்டியை அனுப்பி யிருக்கிறேன். அதை நான் திறந்து பார்க்கக் கூட வில்லை யென்பது உங்களுக்குத் தெரியும். இப்படி நான் நடந்து கொண்டதற்கு என்ன காரணமென்று தெரிந்து கொள்ள விரும்புவது ஸஹஜமே. நான் சொல்வதை இந்தத் தடவை உண்மையென்றே நம்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். நானும் என் மனைவியும் (கூட்டாளியும்) உங்களுடன் கப்பலில் யாத்திரை செய்தோம்; ஏதாவது உங்களிடத்தில் ஸம்பாதிக்கலாமென்ற உத்தேசமே. பழக்கப்படி நீங்களே எங்களை வருந்தி அழைக்கும் விதமாய் சங்கதிகளை சரிப்படுத்திக் கொண்டு வந்தேன். ஒரு விசித்திரமான யோசனையைச் செய்து, அதன்படி உங்களுக்கு அபராதம் விதிக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தேன். தஸ்தாவேஜுப் பெட்டியை திருடவேண்டுமென்பது எங்களுக்கு ஸ்வப்னத்திலும் எண்ணமில்லை. அவ்வளவு அல்பமான ஒரு வேலையை என்னைப்போன்ற நிபுணன் செய்வதாய் நினைப்பதே மானக்குறைவு. என் உத்தேசத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை வெகு விரைவாய்ச் செய்து கொண்டிருந்தேன். நீங்கள் என் தலை மயிரைப் பிடித்திழுத்தவுடன் என் யோசனை முற்றிலும் மாறிவிட்டது. அது வரையில் உம்மைப்பற்றி எனக்குக் கொஞ்சமேனும் நல்ல எண்ணமாவது மதிப்பாவது இல்லை. பெரிய மனிதனுக்குரிய மரியாதை ஜீவகாருண்யம் தாராளம் ஸத்தியம் பொறுமை தன்னயம் பாராட்டாமை

முதலிய நற்குணங்கள் உம்மிடத்தில் சூன்யமென்றே என் கொள்கை. ஆனால் எனக்கு ஏதோ கெடுதியைச் செய்துவிட்டதாயும் அவமரியாதை செய்து விட்டதாயும் என் மனதைப் புண் பண்ணியதாயும் நீர் உணர்ந்து பட்ட வருத்தத்தையும் பச்சாத் தாபத்தையும் பார்த்தேன். அதற்கு உம்மாலியன்ற அதிகாரத்தைச் செய்ய வேணுமென்று நீர் தவித்ததையும் வணக்கமாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதையும் கவனித்தேன். உமக்கு அவ்வளவு பெருந்தன்மை இருக்குமென்று நான் அது வரையில் எண்ணவில்லை மேலும், எப்படியாவது என்னிடத்திலுள்ள ஸாமர்த்தியத்தையும் திறமையையும் நீர் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று என்னை உம்மிடத்தில் காரியஸ்தனாயிருக்கும்படி நீர் மிக்க முயற்சி செய்ததையும் குறித்தேன். உடனே என் எண்ணம் மாறி விட்டது. என் மனது உருகி விட்டது. இந்தத் தடவை உமக்கு யாதொரு கெடுதியும் செய்வதில்லையென்று ஒதுங்கி விட்டேன்.

உமது நிர்ப்பந்தத்திற்கிணங்கி, காரியஸ்தன் வேலையை ஒப்புக்கொண்டு ஆப்பிரிக்காவிற்குச் சென்று, சில காலமிருந்து ஆயிரக் கணக்காய் மடக்கிக் கொண்டு போய் விடுவது எனக்கு ஒரு பெரிதல்ல. ஹரிஹர ப்ரஹ்மாதிகள் வந்தாலும் என்னைக் கண்டு பிடிப்பதரிது. ஆனால் நீர் என்னிடத்தில் கொஞ்சமேனும் ஸந்தேகப்படாமல் என்னை முற்றிலும் நம்பி, என்னிடத்தில் உமது வியவஹாரங்களை கோடிக் கணக்காய் ஒப்புவித்து, நான் உம்மிடத்தில் நம்பிக்கையாய் நடந்து கொள்வதாயும் உமக்கு லாபகரமான காரியங்களையே செய்கிறதாயும் எள்ளளவேனும் கெடுதியைச் செய்வதில் மனதைச் செலுத்தவில்லை யென்றும் வாக்குத் தத்தஞ் செய்த பிறகு அதை மீறி நடந்து உமக்கு விரோதம் செய்ய மாட்டேன். அவ்வளவிற்கு இன்னும்நான் துணியவில்லை. ஏதோ இன்னும் கொஞ்சம் பாபபுண்யம் நியாயா நியாயம் தர்மாதர்மமென்ற தடை காலைத் தட்டுகிறது. இது வரையில் எந்தத் தடவையிலும் நீர் என்னை நம்பினதே யில்லை. ஸந்தேகிக்காமல் இருந்ததே யில்லை. ஏமாற்றப் பார்க்காமலிருந்ததே யில்லை. ஆகையால் உம்மைக் கொள்ளை யடிப்பது பாபமல்ல. உமது பணத்தையும் அந்தஸ்தையும் பெருமையையும் அதிகாரத்தையும் மேலா யெண்ணி உலகத்தில் யாவரையும் கட்டுப் படுத்த முடியுமென்று கர்வங் கொண்டு பிறருடைய கஷ்ட சுகங்களைக் கொஞ்ச மேனும் கவனிக்காமல் கேவலம் பணத்தைக் குவிப்பதே தர்மமென்றிருந்த உம்மை என்ன செய்தாலும் தோஷமில்லை. உம்மிடத்தில் நற்குணங்களும் இருக்கின்றன வென்று அறிந்த பிறகும் அப்படிச் செய்வது நியாயமென்று எனக்குத் தோன்ற வில்லை. இதனால் நான் என்னமோ மஹா சுத்தனென்றும் யோக்கியனென்றும் சொல்ல வரவில்லை. என்னிடத்தில் மற்ற எந்த தோஷங்களிருந்தாலும் ஆஷாடபூதி ருத்ராக்ஷப் பூனை குள்ள நரி முதலியவை கூட வேஷம் போடுவது ஒருநாளும் கிடையாது. என் தன்மையை நான் மறைக்கும் வழக்கமில்லை. நான் உம்மைப் போன்ற

அசடுகளை ஏமாற்றிப் பிழைக்கிறவனென்று தாராளமாய்ச் சொல்லிக் கொள்ள வெட்கப்படவில்லை. வேலை செய்யாமல் கூலியைக் கழித்துக் கொண்டு போகிறவன் மோசக்காரனே. தான் கஷ்டப்பட்டு ஸம்பாதிக்காத பொருளை அதின் சொந்தக்காரனுடைய உத்திரவில்லாமல் அடித்துக் கொண்டு போகிறவன் திருடனே. உம்மைப் போன்றவர்களை எளிதில் ஏமாற்ற முடியுமா? வில்லாதி வில்லன்களையெல்லாம் திணர வடிக்கும் உம்மை ஏமாற்றுவதானால் என்னுடைய யுக்தியும் தைரியமும் ஸாமர்த்தியமும் எப்படியிருக்க வேண்டும்? இயற்கையாய் அது எனக்கு அமைந்திருக்கிறதென்று நீர் சொன்னால் இயற்கை யென்பதற்கு அர்த்தமென்ன? சென்ற ஜன்மங்களில் கஷ்டப்பட்டு ஸம்பாதித்து இந்த ஜென்மத்தில் ஆரம்பத்திலேயே வெளிப்பட்டு, முதலாய் வைத்துக் கொண்டு வியாபாரஞ் செய்யும் குணங்களேயல்லவா? இந்த ஜன்மத்தில் அவைகளை ஸம்பாதிக்காவிட்டாலும் அதை சற்று ஆழ்ந்து யோசிப்பவனுக்கு அதன் வரலாறு தெரியாதா? ஆகையால் இப்பொழுது வேலை செய்தாலென்ன முன்ஜென்மங்களில் வேலை செய்தாலென்ன. எல்லாம் ஒரே வேலையே ஆகையால் நான் கஷ்டப்படாமல் ஸம்பாதிக்கவில்லை யென்பதை நீரே ஒப்புக் கொள்வீர்.

மேலும் நான் திருடனல்ல. உமது அனுமதியில்லாமல் உம்மிடத்திலிருந்து ஒரு தம்பிடியாவது நான் எடுத்திருக்கிறேனென்று நீர் சொல்வீரா? ஒவ்வொரு தடவையும் நீர் மனப்பூர்வமாய் என்னை அழைத்துக் கொடுக்காமல் உண்டோ. ஆகையால் அந்தக் குற்றத்தை என்னிடத்தில் சுமத்த முடியாது. ஆனால் தஸ்தாவேஜுப் பெட்டியை ஏன் திருடினாயென்று கேட்கலாம். திருடினால் மறுபடியும் திருப்பிக் கொடுப்பதில் பிரயோஜனமென்ன வென்று கேட்கலாம். பொழுது போகாமல் கேவலம் விளையாட்டிற்காகச் செய்ததா? நான் அப்படிப்பட்ட சிறு பயலல்ல. வேண்டுமென்றே செய்த கார்யம் அப்படியில்லாமல் இந்தக் கடிதத்தை உமக்கு எழுதியிருந்தால் நீர் அதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தை ஒரு பொழுதும் நம்பப் போகிறதில்லை. ஏன் தெரியுமா? இதெல்லாம் வெறும் மிரட்டுதல் என்று உமக்கு படுமே யொழிய நான் நினைத்ததைச் செய்யக்கூடியவனென்று எண்ணப் போவதில்லை. ஆகையால் இனியாவது என் வேலைத் தனத்தின் போக்கை நீர் நன்கு அறிவீரென்று எண்ணுகிறேன்.

ஏதோ நான் செய்த யோசனை பலிக்கவில்லை யென்றும் உமது ஸாமர்த்தியத்தால் அதைத் தடுத்து விட்டதாயும் நீர் எண்ணுவீர் நீர் உயிரைக் காட்டிலும் அருமையாய் நினைத்து, இரவும்பகலும் ஒரு நிமிஷங்கூட கைவிடாமல் வைத்துக் கொண்டிருந்த சாமானைப் பட்டப் பகலில் உமது கண்ணுக்கெதிரே அடித்துக் கொண்டுபோய் உம்மை பறக்க விடுவது எனக்கு எவ்வளவு ஸுலபமென்று காட்டினாலொழிய நீர் நம்பப்போகிறதில்லை.

மார்பு தட்டிக் கொண்டே இருப்பீர். ஆகையால் உமக்கு எச்சரிக்கை செய்ய வேண்டியது அவஸ்யமாயிற்று.

நான் இப்பொழுது சொல்லிவந்ததை நீர் உண்மை யென்றும் வேறு ஏதோ வேலைத்தனத்திற்கு அஸ்திவாரம் போடுவதல்ல வென்றும் நம்பும். அப்படியும் நம்பா விட்டால் உமது தலைவிதி.

இப்படிச் சொல்வதால் இனி உம்மை ஒன்றும் செய்யப் போவதில்லை யென்றும் என் பயம் உமக்குத் தீர்ந்ததென்றும் எண்ணவேண்டாம். முன்போல் நீர் நடக்க ஆரம்பித்தால் அந்தக்ஷணமே என் நடத்தையும் மாறி விடுமென்பதை நன்றாய் அறிய வேண்டும். மேலும் இப்பொழுது நான் எழுதியிருப்பதை எவ்வளவு வரையில் நீர் நம்பி நடக்கிறீரென்பதை நன்றாய் கவனித்துக் கொண்டிருப்பேன். இனி உமக்கு முன் போல் கஷ்டம் நேருவதும் நேராமலிருப்பதும் அதைப்பொறுத்திருக்கின்றன. என் நடத்தைக்கு அதை தாரசென்று நீர் வைத்துக் கொள்ளலாம்.

நான்கொண்ட தொழில் கெட்டதாயிருந்தாலும் நற்குணங்கள் யாவற்றையும் வேருடன் பிடுங்கிவிடவில்லை. இன்னும் கொஞ்சம் மனிதத் தன்மை என்னிடத்தில் இருக்கிறதென்றே நம்பும். நான் ஏழை. நீரோ கோடீஸ்வரன். உம்மால் எனக்குப் பிழைப்பு. என்னால் உமக்குப் பிழைப்பில்லை. அப்படியிருந்தும் உம்மிடத்தில் எப்பொழுதாவது பெருந்தன்மையை நான் கண்டுவிட்டால் உமக்கு எவ்விதத்திலும் கெடுதி செய்ய எனக்கு மனம் வராதென்பதை நீர் வேத வாக்யமாய்க் கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதால் எனக்குப் பிழைப்பில்லாமல் பட்டினி கிடந்து இறந்தாலும் இறப்பேனே யொழிய உமக்குக் கெடுதி செய்ய விரும்ப மாட்டேன். நான் இன்னும் போக்கிரியே—மோசக் காரனே. ஆயினும் இப்பொழுது உம்மிடத்தில் பச்சாத்தாபம் கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு,

உமது விதேயன்

இந்திரஜித்.

இந்த விசித்திரமான கடிதத்தைப்பார்த்தவுடன் செட்டியார் தலைவிரிகோலமாய் தெருவில் ஓடிவிசாரிக்கையில் கடிதத்தில் கண்டிருந்தபடி தஸ்தாவேஜுப் பெட்டி திரும்பவும் அனுப்பப்பட்டு பத்திரமாய் வந்து சேர்ந்ததென்று அறிந்து, போன உயிர் வந்ததுபோல் ஆனந்தக்கடலில் மூழ்கினார். அதைத்திறந்து பார்த்தார்; தஸ்தாவேஜுகளை ஒவ்வொன்றாய் எண்ணினார்; எல்லாம் சரியாயிருந்தது. "ராமா! இதுவரையில் அவன் அனுப்பின கடிதங்களைக்காட்டிலும் இது என்னை வேண்டுமென்றே அவமரி

யாவைத் செய்த தாய எண்ணுகிறே" னென்றார். ஆனால் அவர் அப்படிச் சொல்ல நியாயமில்லை. இந்திரஜித் எழுதியிருந்த ஒவ்வொரு வார்த்தையும் உண்மையே. அவன் போக்கிரி யென்பதில் ஸந்தேஹமில்லை; ஆனால் செட்டியாரைப்பற்றி அவன் சொன்ன வார்த்தைகளும் உண்மை யென்பதில் ஸந்தேஹமில்லை. அவனுக்கும் நியாயா நியாய விவேக முண்டு. சிலாக்கியமான குணங்களும் அவனிடத்தில் உண்டு. தன் கையில் கிடைத்ததைத்தானாகவே விட்டுக் கொடுத்தான். இப்படிச் செட்டியார் செய்வாராவென்பது தான் ஸந்தேகம். அவரால் நம்பப்பட்டு அவருக்குக் காரியஸ்தனாய் இருந்தால் அவருடைய விஷயத்தில் துரோஹஞ் செய்யக்கூடாதென்று அவனுக்கு நல்லபுத்திதோன்றி, ஆயிரக்கணக்காய்க் கொள்ளையடிக்கக்கூடிய பணத்தை விட்டுக் கொடுத்தான். செட்டியாரோ தன்னை நம்பியிருந்த ஏழை-பாழைகளின் பணத்தைத் தன் கம்பெனிகளில் ஏகத்தாராய் வாங்கி அடக்கிவிட்டு, தனக்கு நஷ்டம் வராமலிருப்பதற்காக தகுந்த ஸமயத்தில் ஒருவருக்கும் தெரியாமல் தன் பங்குகளை தடபுடலாய் விற்று விட்டு, வெளிப்படையாய் லக்ஷம் வந்தாலும் லக்ஷம் போனாலும், தான் அப்படிச் செய்வதில்லை யென்று எல்லோருக்கும் உபதேசித்தார். தன்னைப் போல் பிறரும் அப்படி செய்து நஷ்டம் வராமல் தப்பித்துக் கொள்ளாதபடி அவர்களை தடுத்துக் கெடுத்தார். இந்த விஷயத்தில் செட்டியாரையும் இந்திரஜித்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் யாருடைய நடத்தை மேன்மையானதென்று நாம் அறிந்துகொள்வது கஷ்டமல்ல. அப்படிச் செய்ததால் அவருக்கு ஆயிரக்கணக்காய் நஷ்டம் நேர்ந்தது. அந்த கிலிதீர்ந்தவுடன் கம்பெனியும் அதின் பங்குகளும் எப்பொழுதும் போல் அபாயமின்றி விளங்கின. மற்றவர்களுக்கு நஷ்டமில்லை. பிறரை ஏமாற்றநினைத்தசெட்டியாருக்கு அதற்குத் தகுந்த வெகுமானம் கிடைத்தது. அப்படி அவரை தண்டிக்கவேணுமென்பதே இந்திரஜித்தின் நோக்கமென்று தெரிகிறது. அவரைத் தவிர மற்றவர்களை நஷ்டப்படுத்தவேண்டுமென்பது அவனுடைய கருத்தல்ல.

முன்பு காசி காதராவின் வேஷம் போட்டுக்கொண்டு, இந்திரஜித் வந்தபொழுது சின்னவர் அவனிடத்தில் தனக்காக டிஸ்கௌண்டு பேசிக்கொண்டு செட்டியாருக்கு துரோஹஞ்செய்ய நினைத்ததற்கும் அந்த மாயாவி இப்பொழுது தன்னை நம்பின செட்டியாருக்குத் தான் துரோஹஞ் செய்யக் கூடாதென்று ஒதுங்கினதற்கும் உள்ள தாரதம்யத்தையும் நியாயாநியாயத்தையும் நாமே யோசித்துப்பார்த்தால் யார் யோக்கியன் யார் அயோக்கியனென்று ஒரு நிமிஷமாவது ஸந்தேஹம் ஏற்படாது.

"ராமா! கந்தசாமி முதலியார் இத்துடன் சரி. மாறுவேஷம் பூண்டு காடாறு மாதம் திரிந்தது போதும். அது நமக்கு எவ்விதத்திலும் பொருந்தவில்லை. இந்திரஜித் இவ்விடத்தில் இருக்கிறானென்று தெரிந்த பிறகும்

இனி நமது பெயரையும் ஊரையும் அந்தஸ்தையும் ஒளிப்பதில் லாபமென்ன. நமக்கு இயற்கையாயுள்ள சௌகரியத்தை ஏன் வீணாய்க் கெடுத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் சென்னைக்கு வெளியில் நம்மை இன்னானென்று தெரியாவிட்டால் நமக்கு எவ்விதத்திலும் அசௌகரியமே தவிர வேறல்ல. கையில் ரொக்கப்பணம் வைத்துக் கொள்ளாவிட்டால் நம்மைக் கண்டு தெருவில் படுத்துக் கொண்டிருக்கும் நாய்கூட குலைக்காது. ஆகையால் இனி ஒளி களவு வேஷம் முதலியவை வேண்டாமென்று உண்மையான பெயருடன் இருவரும் பலவிடங்களில் சுற்றித் திரிந்தார்கள். செட்டியாருடைய வியவஹாரங்கள் பல தேசங்களில் பரவியிருந்தன. தங்கம் வெள்ளி வயிரம் இரும்பு தகரம் தாமரம் நிலக்கரி ரஸம் முதலிய சுரங்கங்களும்; ஆயிரக்கணக்கான ஆடுகளும் மாடுகளும் குதிரைகளும் வளர்க்கப்படும் விஸ்தாரமான கிராமங்களும் மண்ணெண்ணெய்க் கிணறுகளும் ஏரிகளும் பஞ்சாலைகளும் ரயில்பாதைகளும் இன்னும் எவ்வளவோ ஏற்றுமதி இறக்குமதி ஆபீஸுகளும் அவருடைய எல்லையற்ற ஐஸ்வர்யத்திற்கும் வியாபாரத் திறமைக்கும் அதிருஷ்டத்திற்கும் கைராசிக்கும் அடையாளமாய் விளங்கின. அவைகளை ஒன்று விடாமல் செட்டியார் கவனித்துப் பார்த்துக் கொண்டு அங்கங்கே கண்டிக்கவேண்டிய விஷயங்களைக் கண்டித்து அதிகச் செலவுகளை மட்டுப்படுத்தி, உசிதமான செலவுகளை ஏற்படுத்தி, அயோக்யர்களையும் ஸந்தேஹப்பட்டவர்களையும் வேலையிலிருந்து நீக்கி, திறமையும் நயமும் வாய்ந்த வேலைக்காரர்களை நியமித்து, மேன் மேலும் விருத்திக்கு வரவேண்டிய உபாயங்களை எடுத்துக் காட்டினார். வியாபார விஷயத்தில் அவருக்குள்ள திறமையும் ஸாமர்த்தியமும் கல்பனையும் யுக்தியும் கேவலம் அபூர்வமென்றே சொல்லவேண்டும். அந்த விஷயத்தில் அவரை ஏமாற்றுவது ஸ்வப்னத்திலும் முடியாத காரியம். தன்னை மோசஞ் செய்யவேண்டுமென்று பிறர் எவ்வளவு யுக்தியாய் கணக்குகளை ஜோடித்தாலும் ரிப்போர்ட்டுகளை எழுதினாலும் ஒரு விஷயத்தின் குணங்களை மாத்திரம் எடுத்துக் காட்டி குறைகளை மறைக்க முயன்றாலும் அவைகளை அவர் ஒரு தடவை கண்ணோட்டம் விட்டவுடன் எந்த விஷயத்தைத் தன்னிடத்திலிருந்து மறைக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்களோ, அதையே முதலில் கவனித்து, கண்டிப்பார். ஒரு வியவஹாரத்தில் இவ்வளவு லாபம் இவ்வளவு நஷ்டம் நேருமென்று தராசு பிடித்து நிறுப்பதுபோல் அவர் தயங்காமல் உடனே சொல்வார். தனக்கு லாபகரமாயுள்ள விஷயங்களில் பிறருடைய உதவி வேண்டியிருந்தால் ஸாம தான பேத தண்டமென்ற உபாயங்களால் அவர்களை வசப்படுத்தி எப்படியாவது தன் காரியத்தை முடித்துக் கொள்வதில் அவருக்கு இயற்கையாக அமைந்திருக்கும்

திறமை ராஜ நீதியில் நிபுணன் சாணக்யனுக்கும் வராது. அந்தத் தடவை தேசாதேசமெல்லாம் சுற்றியடித்ததால் அவருடைய லாபம் முன்னை விட இருமடங்காயிற்று. ஆயிரக்கணக்காய் நேரக்கூடிய கஷ்டங்களும் விலகின. தேஹ சௌக்கியமும் விருத்தி யாயிற்று. இவை எல்லா வற்றையும் காட்டிலும் வேறொரு பரமலாபம் நேர்ந்தது. அதாவது இன்று தங்கின இடத்தில் மறு நாள் தங்காமல் யாத்திரை செய்து கொண்டிருந்ததால் இந்திரஜித்தின் உபத்திரவம் நேரவில்லை மேற் கண்ட கடிதத்தை எழுதி விட்டு எங்கே மாயமாய் மறைந்தானோ. இன்னும் யாருடைய தலையில் கை வைக்க நினைத்து அதற்கு வேண்டிய அஸ்திர சஸ்திரங்களை தயார் செய்து கொண்டிருக்கிறானோ, யாருக்குத் தெரியும்.

சீட்டாட்டம்.

வெள்ளையன் செட்டியாரும் அவருடைய மைத்துனனும் இப்படி தேச ஸஞ்சார செய்து கொண்டு மறு படியும் சிங்கப்பூருக்கு வந்து அங்கே சில நாள் தங்கி சென்னைக்குக் கப்பலேறுவதாய் உத்தேசித்திருந்தார்கள். பல மாதங்களாய் தனக்கு இந்திரஜித்தின் உபத்திரவம் நேராததால் செட்டியாருடைய தேஹ சௌக்கியமும் குதூஹலமும் அதிகரித்தன. ஆனால் இந்திரஜித் அவரை மறந்து விட்டானோ, அல்லது அவரிடத்தில் இரக்கம் வைத்து இனி உபத்திரவிக்கிறதில்லை யென்று முடிவு செய்தானோ; அல்லது அவரைக் காட்டிலும் இன்னும் பசையுள்ள ஆசாமி கிடைத்து, அவனை கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறானோ, அல்லது எங்கேயாவது தெய்வச் செயலாய் ஜலத்தில் விழுந்திறந்தானோ, வியாதியால் மெலிந்து உயிர் துறந்தனோ, இப்படிப் பலவிதமாய் செட்டியார் கல்பனை செய்து கொண்டிருந்தார்கள். சிங்கப்பூரில் செட்டியாருக்கு ஒரு நண்பன் உண்டு. அவனும் கோடீஸ்வரனே. இருவருக்கும் பல பெருத்த வியவஹார ஸம்பந்தம் உண்டு. வெள்ளையன் செட்டியாரின் வரவை அவர் பத்திரிகை மூலமாய் அறிந்து மறுநாள் அவரைப் பார்க்க வந்தார். ஏதோ தேவரஹஸ்யங்களைப் பற்றி நெடு நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு முடிவில் சிங்கப்பூருக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள தன் கிராமத்தில் கட்டப்பட்டிருக்கும் தேவேந்திர ஸபையைப் போன்ற தன் அரண்மனையில் சில நாட்கள் வரையில் தங்கியிருக்க வேணுமென்று மிகவும் நிர்பந்தித்தார். அவ்விடத்திலும் இந்திரஜித் தன்னைத் துரத்திக் கொண்டு வரப் போகிறானென்று செட்டியார் நினைத்து அதற்கு சம்மதித்தார். ரத்ன சிகாமணி செட்டியாரால் தனக்கு யாதொரு அபாயமும் நேராது. அவர் தன்னை ஏமாற்றினால் வியவஹார

தோரணையில் லாபம் ஸம்பாதிக்கப் பார்ப்பாரேயொழிய தலைகுப்புறக்கவிழ்த்து படுமோசம் செய்யமாட்டார். வியாபார விஷயத்தில் தனனைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமென்பது செட்டியாருடைய ஸித்தாந்தம்.

அந்த அரண்மனையில் ஒருவாரம்வரையில் செட்டியாரும் அவருடைய மைத்துனனும் அங்கே ஆனந்தமாய்க் காலம்கழித்து வந்தார்கள். முதல் நாள் ராத்திரி செட்டியாருக்கு ஒரு சிறு விருந்து நடந்தது. ஏழெட்டு ஸ்நேஹிதர்களுக்கு அதிகமாய் அழைக்கப்படவில்லை. விருந்தான பிறகு தமாஷாய் சீட்டாட்டம் போடுவதென்று ஏற்பாடு.

இரத்னசிகாமணிசெட்டியார் அவிரிச்சாயம் எள்ளு மணிலாக்கொட்டை தேங்காய் முதலிய சரக்குகளில் ஏராளமாய் வியாபாரஞ்செய்து லக்ஷக் கணக்காய் ஸம்பாதித்தவர்; புதுப்பணம் படைத்தவர்; அதற்கு முன் மாதம் ஐந்துரூபாய் சம்பளத்திற்கு கிராமகாரியம் பார்த்தவர். ஏழெட்டு வருஷங்களுக்கு முந்தி அவருக்கு நல்லகாலம் வாய்த்தது. தொட்டதெல்லாம் தங்கமாய் விளைந்தது. தனக்கு வேண்டிய பணத்தை ஸம்பாதித்துவிட்டதால் இனி மென்மேலும் வாரிக் கொட்ட வேணுமென்ற எண்ணம் அவருக்கில்லை. தான் தாழ்ந்த நிலைமையில் பிறந்தவனென்பதையும், நாகரீகம் படிப்பு, கனவான்களின் பழக்கம் முதலிய செல்வாக்கு இயற்கையாய்த் தனக்கு இல்லையென்பதையும் மறைக்கவேணுமென்றும் அவையெல்லாம் வாய்த்தவர்களைப்போல் தானும் பெருமையுடன் விளங்கவேணுமென்றும் அவருக்கு இருந்த ஆசைக்கு அளவில்லை. ஸங்கீதம் சிற்பம் கவனம் ஸாஹித்யம் முதலியவைகளில் நிபுணர்களை அடிக்கடி தருவித்து, ஆதரிப்பதால் அந்தத் துறைகளில் தனக்கு அதிக அபிமானமும் பழக்கமும் உண்டென்று எல்லோரும் எண்ணவேண்டுமென்பதே அவருடைய கருத்து. அந்த விஷயத்தில் அவர் பணத்தை முன்பின் பாராமல் செலவு செய்துவந்தார். தன் அரண்மனையில் எங்கேபார்த்தாலும் அபூர்வமான வேலைபாடுள்ள சித்திரப்படங்களும் ஸங்கீத வாத்யங்களும் உலகத்தில் அங்கங்கே நடக்கும் கண்காக்ஷிகளில் வரும் ஆச்சரியகரமான பதார்த்தங்களும் மட்டுமிதமில்லாமல் வாங்கி வைக்கப்பட்டிருந்தன.

செட்டியாருக்கு விசேஷ கௌரதை செய்வதற்கும் தான் நவீன நாகரீகத்தின் முறைகளில் நல்ல பழக்கமுள்ளவரென்று காட்டிக்கொள்வதற்கும் பரம்பரை பிரபுவிற்கும் தனக்கும் எவ்விதத்திலும் பேதமில்லையென்று காட்டிக் கொள்வதற்கும், பினுங்குசெட்டியார் சிற்பத்திலும் கவனத்திலும் ஸங்கீதத்திலும் பெயர்வாய்ந்த சிலரை அன்று விருந்திற்கழைத்திருந்தார். தென்னிந்தியாவில் புதுதினுசாய் கர்நாடக ஸங்கீதத்தில் உழைத்துப்

பிரசித்தி பெற்ற கட்டுத்தரி கந்தசாமிபிள்ளை யென்ற வித்வான் ஏதோ கார்யமாய் பினங்கிற்கு வந்திருப்பதாய் செட்டியார் அறிந்து, அவரை அன்று விருந்துக் கச்சேரிக்கு அழைத்திருந்தார். அதனால் வெள்ளையன் செட்டியாருக்கு விசேஷ ஸந்தோஷமுண்டாகுமென்று அவருடைய கருத்து.

"தங்களுக்கு கட்டுத்தரி கந்தசாமி பிள்ளை அவர்களை தெரிந்திருக்கு," மென்று நமது செட்டியாரைக்கேட்டார்.

"யார்? கந்தசாமி பிள்ளையா? நான் பழகும் கோஷ்டியில் அந்தப் பெயருள்ள ஒரு அசாமியும் கிடையாது. யாராவது சில்லரைப் பேர் வழியோ எந்தக் கம்பெனி? என்ன வர்த்தகம்? முதல் என்ன?" வென்று நம்மவர் கேட்டார்.

பினங்கு செட்டியார் சற்றுப்பின்வாங்கி, "பிள்ளை வாள் அவர்கள் வர்த்தகரல்ல. ஸங்கீதத்தில் ஒப்பற்ற திறமையுள்ளவர். புதிய மாதிரியாய்ப் பாடுகிறவர்; ஆயிரக்கணக்காய் ஸம்பாதிக்கிறவர்; வெகு கிராக்கி; தங்களுக்கு அவரைக் கட்டாயமாய்த் தெரிந்திருக்க வேண்டுமே. இப்படிப்பட்டவர்கள் நமது அபிமானத்தையும் ஆதரவையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களல்லவா? மேலும் இம்மாதிரி நாகரீக விஷயங்களில் கவனம் செலுத்துவது நமது அந்தஸ்திற்கு அவசியம் வேண்டியதல்லவா?"

வெள்ளையன் செட்டியார் "நான் பழகும் கோஷ்டியே வேறு. இந்த மாதிரி பேர்வழிகள் அதைக்கண்ணெடுத்துப்பார்க்கவும் முடியுமோ. இவர்களை கவனிப்பதற்கு அவகாசம் எங்கே? இவர்களால் நமக்காகவேண்டியதென்ன? எப்பொழுதாவது இவர்களை உபயோகிக்க வேண்டிய ஸமயம்வந்தால் காசை லக்ஷ்யம் பண்ணாமல் விட்டெறிந்தால் மற்ற கொல்லன் தச்சன் கொத்தன் முதலிய தொழிலாளிகளைப் போல் வந்து வேலைசெய்துவிட்டுப் போகிறார்கள். அவர்களை வைக்கவேண்டிய இடத்தில் வைக்கவேண்டியது. நம்முடன் பழகுவதற்கு அவர்கள் லாயக்கா? எந்த சாஸ்திரமும் எந்தத் தொழிலும் நமது வர்த்தகத்திற்கு எவ்வளவு ஒத்தாசை செய்கிறதோ அவ்வளவு மாத்திரம் நாம் அதைக் கவனித்து ஆதரிக்கவேண்டும் காசை தோதோவென்று கொஞ்சினால் மூஞ்சியை நக்கும். அவரவர்களுடைய மனப்போக்கும் இஷ்டமும் வெவ்வேறு விதமென்று வெகுராஜீயாய்ப் பதில் சொன்னார்.

பினங்கு செட்டியார் ஏராளமாய் வியாபாரஞ் செய்து பணத்தைச் சம்பாதித்தாலும் வியாபாரத்தின் கௌரதையைக்காப்பாற்ற அவருக்குத் தெரியவில்லை. பிரபுவாய் பிறரால் எண்ணப்படவேண்டுமென்று அல்ப

ஆசைகொண்டு அதற்காகத் தகாதவர்களுடன் பழகுகிறாரே யென்று வெள்ளையன் செட்டியார் நினைத்தார். வெள்ளையன் செட்டியார் பெருத்த வயிர வியாபாரஞ் செய்து, மலை மலையாய்ப் பணத்தைக்குவித்தாலும், அவர் கேவலம் கடை வைத்து வியாபாரஞ் செய்யும் செட்டியின் நாகரீகத்திற்கும் அந்தஸ்திற்கும் மேல் கிளம்பவில்லை. கேவலம் பணமே யாவுமென்றும் அதைத்தவிர வேறு புருஷார்த்தமில்லை யென்றும் பணத்தால் அடைந்து அநுபவிக்கக்கூடிய வேறு ஸுகமும் போகங்களும் உண்டென்று அவர் அறியாதிருப்பது புத்திக்குறை யென்றும் பினங்கு செட்டியார் நினைத்து, இரக்கங்கொண்டார்.

சற்று நேரத்திற்குப் பிறகு விருந்திற்கழைக்கப்பட்ட கனவான்கள் ஒவ்வொருவராய் வந்து சேர்ந்தார்கள். முடிவில் ஸங்கீத வித்வான் கந்தசாமி பிள்ளை அவர்களும் வந்தார். அதற்கு முதல் நாள் பினங்கு தமிழ் சங்கத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஓர் வரவேற்புக் கூட்டத்தில் அவரை எல்லோரும் பார்த்துப் பேசிக் கொண்டிருந்ததால் வெள்ளையன் செட்டியாரைத்தவிர மற்றவர்கள் அவருடன் தாராளமாய்ப் பழக ஆரம்பித்தார்கள். அந்தப் பாடகரும் அதற்கு இரண்டு நாள் முந்தியே பினங்கிற்கு வந்தார்.

ரத்ன சிகாமணி செட்டியார் அந்தப்பாடகரை வெள்ளையன் செட்டியாருக்கு அறிமுகஞ் செய்வித்தார். தன்னைக் கண்டு அவன் திகைத்து, தன் பெயரைக் கேட்டவுடன் திடுக்கிட்டு, தனக்கு விசேஷ மரியாதை செய்வாரென்று எதிர்பார்த்திருந்தார். ஆனால் அந்தப் பாடகரோ மிகுந்த இறுமாப்புடன் அவரை ஏதோ அலக்ஷ்யமாய்க் கடைக்கண்ணால் பார்த்து, சற்றுத் தலையசைத்து, ஏதோ மஹாராஜாவை பேட்டிகாண வருபவர்களை அவர் பார்த்து, கடாக்ஷிப்பது போல் பராக்காயிருந்தார். அதைக் கண்ட பினங்கு செட்டியாரும் வெள்ளையன் செட்டியாரும் ஆத்திரமடைந்தார்கள்; "நான் அப்பொழுதே சொன்னேனல்லவா? இந்தப்பயல்கள் தருதலைகள் குப்பை மேட்டில் கிடக்கவேண்டிய நாயைப் பல்லாக்கில் தூக்கிவைக்கலாமா வென்று கருத்து வாய்ந்த வெள்ளையன் செட்டியார் ஜாடையாய் தன் நண்பரைப்பார்த்தார்.

பாடகரோ ஜமீன்தாரைப் போல் தங்கஜரிகை வேலை செய்த தொப்பியும் நறுக்கு மீசையும், கிருதாவும் கல்மாவும் புஸ்தியும் பட்டுச் சட்டையும் ஜோடி ஸால்வையும், தங்க கெடியாரமும் வயிரக் கடுக்கனும் பத்து விரல்களுக்கு மோதிரமும் தங்கமுகப்பு வைத்த கைத்தடியும் ரத்னங்களிழைக்கப்பட்டு விசித்திரமான வேலைப்பாடுள்ள தங்க வெற்றிலைப் பெட்டியும் புக்மலிலின் ஆடையும் காலில் நேர்த்தியான சீமை பூட்ஸும் விளங்க திரி

லோகமும் நிகரற்றவர் போல் ஸங்கீதத்தால் மலைமலையாய்ப் பணத்தை வாரிக் கொட்டி, அலுத்துப் போனவனைப்போல் அபிநயித்தார்.

யாரோ கேட்டதற்கு "ஆம் இந்த நாளில் ஸங்கீதத்தின் மர்ஜீயே கெட்டுப் போய் விட்டது. அதின் அருமையையும் பெருமையையும் அறிந்து அனுபவித்து, ஆதரிக்கக் கூடிய பிரபு வெங்கே. நேற்றைக்கோ முந்தா நாளோ எந்தத் தொழிலையாவது செய்து விட்டு பத்துக் காசைச் சேர்த்து விட்டார். அவனே பிரபு. ஆடு மாடு வீடு வாசல் நிலம் புலம் முதலியவைகளைப் பணத்தால் வாங்குவது போல் புத்தியையும் ஞானத்தையும் பணத்தால் வாங்க முடியுமோ? அரைவாய் கால் வாய் பேர் வழிகள் வயிற்றுக் கொடுமையால் அவர்களுக்குக் கட்டுப் பட்டு, அவர்களுடைய காசை வாங்கித் தின்று பிழைக்கிறார்கள். பாபம்! எல்லோருக்கும் அதே கதிதானா? கனகாபிஷேகப் செய்தாலும் ஞானமில்லாதவனிடத்தில் நான் பாடமாட்டேன். ஒரு பைசா கொடுக்காவிட்டாலும் ஞானஸ்தனைத் தேடிப்போய் பாடுவேன். அவர்கள் பணத்தில் பெருத்தவர்களானால் நாங்கள் வித்தையில் பெருத்தவர்கள். இதைக் கேட்ட இரண்டு செட்டியார்களுக்கும் முகம் சிவந்தது.

பிறகு எல்லோரும் விருந்திற்கு உட்காரும்பொழுது பாடகரை வெள்ளையன் செட்டியாருக்குப் பக்கத்தில் உட்காருவிப்பதாய் ஏற்பாடு செய்திருப்பதை பினாங்கு செட்டியார் மாற்றி வேறிடத்தில் வைத்தார். தானிருக்கும் இடத்தையும் தன்னுடனிருக்கும் மனிதர்களையும் கவனிக்காமல் அந்த பாடகர் தனக்குத் தோன்றினபோதெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் பாடிக்கொள்வதும் முணுமுணுப்பதும் பிறர் பேசும் பொழுது ஸமய சந்தர்ப்பமில்லாமல் கலந்து கொள்வதுமாய் தன் இஷ்டப்படி கட்டுக் காவலில்லாமல் நடந்து கொண்டிருந்தார்.

அதைக்கண்டு வெள்ளையன் செட்டியார் எதையோ மனதில் வைத்துக் கொண்டு இந்திரஜித்தின் புராணத்தை ஆரம்பித்து வெகு விஸ்தாரமாய் ஒரு அத்யாயங்கூட விடாமல் கல்பனை மத்காரங்களுடன் பாராயணஞ் செய்து கொண்டுவந்தார். தனக்கு விரோதமான விஷயங்களை அங்கங்கே மறைத்தது ஸஹஜமே. ஆனால் அது தனக்கு ஒருபொருட்டல்லவென்றும் ஏதோ விநோதமாயும் பொழுது போக்காயும் தனக்குத் தோன்றினதால் அதைப்பற்றி தான் வருத்தப்படவில்லையென்றும் தன்னால் நாலுபேர் எப்படியாவது பிழைக்கட்டுமென்றே அவர் அதை அவ்வளவு லக்ஷ்யஞ்செய்யவில்லையென்றும் மனது வைத்தால் அவனைக்கண்டு பிடித்தது அடக்குவது தனக்கு ஒரு கொடிவேலை யென்றும் சொல்லிக்கொண்டார். அதைக்கேட்டபாடகர் "வர்த்தகர்களுக்குள் இவ்விதமான பெருந்தன்மையும் தாராளமும் புத்திக்கூர்மையும் திறமையும் பிடிவாதமுமிருப்பது அபூர்வம். நீங்கள் சொன்ன மதன

களை வைத்துக்கொண்டு ஒரு காவ்யம் செய்து அழகான வர்ணமெட்டுகளுடன் அதைப்பாடினால் வெகு நன்றாயிருக்கு" மென்றார்.

செட்டியார் தனக்குள் ஸந்தோஷித்து, பாடகரிடத்தில் அது வரையிலுள்ள கோபம் சற்றுத்தணிந்து, "அப்படி ஓர் காவ்யத்திற்காவது நாடகத்திற்காவது நான் நாயகனாயிருக்கத்தகுந்த யோக்யதை என்னிடத்தில் உண்டாவென்று ஸந்தேஹப்படுகிறேன்" னென்றார். அவர் ஸந்தேஹப்படவேண்டியதில்லை. உண்மையாகவே அவரிடத்தில் அவ்வித யோக்யதை இல்லையென்று சொல்வது பொய்யாகாது.

பாடகர் "நான் சொல்வதை நீங்கள் சரியாய் அர்த்தஞ்செய்து கொள்ளவில்லை. உங்களை நாயகனாய் வைப்பதென்ற எண்ணம் எனக்கு இல்லவேயில்லை. இந்திரஜித்தைப்பற்றியல்லவா சொல்லிக்கொண்டேனென்றார்."

செட்டியார் கோபத்தால் முகஞ்சிவந்து, "ஞாயந்தான். அவனைப் போன்ற அயோக்யர்களிடத்தில் மதிப்பும் அன்பும் ஆச்சர்யமுமிருப்பது உங்களுக்கு வழக்கந்தானே" யென்றார்.

உடனே பாடகர் அவரை ஏறிட்டுப்பார்த்து, என்னசொன்னீர். வர்த்தகத்தில் பாபபுண்யம் தயாதாக்ஷிண்யம் மானாவமானம் பாராமல் காசையே பிரதானமாய் எண்ணி கோடிக்கணக்காய் குவித்திருக்கும் சிலரிடத்தில் அபிமானம் வைப்பதைக்காட்டிலும் இது எவ்வளவோ மடங்கு மேலானதல்லவா" வென்றார்.

அங்கிருந்த வர்த்தகர்கள் அதைக்கேட்டு மனம் நொந்து, ஒருவரையொருவர் ஜாடையாய் பார்த்துக்கொண்டார்கள். பேச்சை மாற்றவேண்டுமென்று பினாங்கு செட்டியார் முயன்றும் வெள்ளையன் செட்டியார் அதற்குச் சற்றேனும் இடங்கொடாமல் "இத்துடன் விட்டால் போதாதா? அவன் போக்கிரியென்றுமாத்திரம் சொன்னால் ஒருவேளை மன்னிக்கலாம். மஹா யோக்யனைப்போலவும் தத்வோபதேசம் செய்கிறவனைப் போலவும் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறான். அதை நினைக்க நினைக்க அவனிடத்திலுள்ள வெறுப்பும், கோபமும் அதிகரிக்கின்றனவென்று இந்திரஜித்து தனக்குக் கடைசியாய் எழுதின கடிதத்தைப் படித்துக் காட்டினார். அதைப் பொறுமையுடன் அந்தப்பாடகர் கேட்டு "ஏனய்யா! நீர் சொல்லுகிறபடியே எண்ணவேண்டுமோ. இந்தக் கடிதத்தில் கண்ட விஷயங்கள் உண்மையாயிருக்கக் கூடாதோ. எந்தத் தொழிலாளிக்கும் ஏதாவது ஒரு ஸமயத்தில் பாபபுண்ய விவேகமும் நல்ல புத்தியும் ஏன் வரக்கூடாது. வயிற்றுக் கொடுமைக்காக ஏதோ ஒரு தொழிலைச்செய்தால் அவனுக்கு நல்லெண்ணமும் நற்கதியும்

கிடையாதோ. கள்ளனாயிருந்தாலும் கன்னக்கோல் சாத்துவதற்கு ஓரிடம் வேண்டாமா? ஆகையால் அவனிடத்தில் இருப்பதாய்ச் சொல்லும் நற்குணமும் உங்களிடத்திலிருப்பதாய்ச் சொல்லும் தோஷங்களும் உண்மையென்றே ஒப்புக்கொள்வதில் யாதொரு நியாயவிரோதமும் எனக்குத் தோன்றவில்லை"யென்றார்.

செட்டியார் "நான் அப்பொழுதே சொல்லவில்லையா? கஷ்டப்படாமல் பணத்தை லகுவாய் அடித்துக்கொண்டு போகவேண்டுமென்று பார்க்கும் உங்களைப்போன்றவர்களுக்கு இவ்விதமான அயோக்யர்களிடத்திலேயே பற்றுதலிருக்கும். ஆச்சர்யமென்ன" வென்றார்.

பாடகர் அவனை நம்பின உம்மை மோசஞ் செய்யக்கூடாதென்று அவன் ஏன் எண்ணக்கூடாது. மஹா பாபிகளிடத்திலும் கொஞ்சமாவது நற்குணம் இராமல் போகாது. இந்திரஜித்தைப்போன்றவர்கள் நற்குணமுள்ள ஸ்திரீகளின் பிரியத்திற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாயிருக்கிறார்கள். அவர்களுக்காக அந்தப் பெண்கள் உயிரைக்கொடுக்கத் துணிகிறார்கள். மேலும் நம்மில் பரமசுத்தன் யார்? அப்படி ஒருவனிருந்தால் வேறொருவனை குற்றஞ்சாட்டி விசாரித்துத் தீர்ப்புச்சொல்லி, தண்டிக்கட்டுமென்று மௌனமாயிருந்துவிட்டார்.

பிறகு அவர்கள் அவ்வறையைவிட்டு மாடிக்குப்போய் அங்கே தாம்பூலம் சுருட்டு விகாரட் பழவர்க்கங்கள் முதலியவைகளால் உபசரிக்கப்பட்டார்கள். இரண்டுசெட்டியார்களும் சில நேரம்வரையில் வயிரம் தங்கம் வெள்ளிச்சரக்குகள் கம்பெனிகள் நிர்வாகசபை ஷேர்கள் வட்டி குத்தகை கிராமம்முதலிய வியாபார விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதை சில சமாசாரப்பத்திரிகைகளின் ரிப்போர்ட்டார்கள் ஆவலுடன் குறித்துக்கொண்டிருந்தார்கள். பாடகர் மாத்திரம் தனியே உட்கார்ந்து ஒருவருடனும் பேசாமல் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு மனதை எங்கேயோ செலுத்தி விட்டு ஸமாதியிலிருந்தார். பிறகு எல்லோரும் யதோக்தமாய் சீட்டுக் கச்சேரி போட ஆரம்பித்தார்கள். பாடகர் வெகு தூரம் நிர்பந்தம் செய்யப்பட்ட பிறகு ஒரு கையில் உட்கார ஸம்மதித்தார். தான் ஏழையென்றும் தன்னைத் தவிர மற்றவர்கள் லக்ஷாதிபதிகளென்றும் அவர்களிடத்திலிருந்து தான் ஜயிக்கும் பணம் ஒவ்வொரு பைசாவும் தனக்கு மிகுந்தப் பிரயோஜனப்படுமென்றும் ஆனால் அவர்களுக்கு லக்ஷ்யமில்லையென்றும் தான் அவர்களுக்குத் தோற்கும் ஒவ்வொரு பைசாவும் தனக்கு மிகுந்த கஷ்டமென்றும் அவர்களுக்கு வரவு சில வில்லையென்றும் ஆனால் தன் கையில் வழக்கமாய் தசை ஏறுவதில்லையென்றும் தான் அதிருஷ்டப் பஞ்சையென்றும் ஆனது பற்றியே காசு வைத்துச் சீட்டாடுவதில்லையென்றும் சொன்னார்.

கதாரத்நாகரம் அனுபந்தம்



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

ஸ்வாமி விவேகானந்தர்.

கடவுள் துணை.

KATHA கதாரத்நாகரம் RATNAKARAM

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்

—ஔவை குறள்

Vol. 3.	May, 1921	No. 12.
தொகுதி 3.	1921-ம் ௵ மே௴	பகுதி 12.

உ

மானேர் நோக்கி யுமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின் றெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் றிருக்குறிப்புக் கூடு வார்நின்கழல்கூட
வூனா ருடுக்கை யுதகாத்திங் கிருப்ப தானே னுடையானே.

உடையா னேநின் றனையுள்கி யுள்ள முருகும் பெருங் காதல்
உடையா ருடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேனெஞ் சுருகாதேன் கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதாக முடித்தாயே.

முடித்த வாறு மென்றனக்கே தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறு முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து கேடென் றனக்கே சூழ்ந்தேனே

தேனைப் பாலைக் கன்னலின் றெளியை யொளியைத் தெளிந்தார்தம்
ஊனை யுருக்கு முடையானை யும்ப ரானை வம்பனேன்
நானின் னடியே னீயென்னை யாண்டா யென்றா லடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் றன்மையே.

—மாணிக்கவாசகர்,

"ஒப்புரவொழுகு"

'ஒப்புரவொழுகு'வென்று இப்பூவுலகில் மானிடராய்ப் பிறந்தநாமெல்லோரும் உலகநடையினை யறிந்து ஒழுகி பொதுவாக எல்லார்க்கும் பயனளித்து அதனால் பெறற்குரிய புகழடையு மாற்றை நல்லிசைப் புலவராகிய ஒளவையார் சுருங்கச் சொல்லி விளங்கக் காட்டியுள்ளார். இவ்வாறு ஒளவையார் கூறியவாறே, தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், தம் அருமைத் திருக்குறளில் ஜன சமூகவாழ்க்கைக்கு வேண்டப்படும் பொது நன்மைக்கு 'ஒப்புரவறிதல்' என்னும் பெயரிட்டு அதனைப் பத்துக்குறள்களால் ஓரதிகாரமாக வைத்து விளக்கியருளினர். வள்ளுவனார் உலகத்தார்க்கு இன்றியமையாது அறிவுறுத்தற்குரிய விஷயங்களை முப்பாலாகத் தொகுத்து, அம்மூன்றனுள் ஒவ்வொன்றையும் பற்பல அதிகாரங்களாக விரித்துரைத்தாரென்பது யாவரு மறிந்த விஷயம். அம்மூன்று பகுதியுள் முதலதாகிய அறத்துப்பால் இல்லறவியல் துறவறவியல் என இருபான்மைப்படும். இல்லறவியல் இல்வாழ்க்கை முதலாகப் புகழீறாகப் பத்தொன்பது அதிகாரங்களை யுடையது. இப்பத்தொன்பதனுள் 'ஒப்புரவறிதல்' என்பது மொன்று. ஒப்புரவென்னுஞ் சொல் உபகாரம், ஒற்றுமை, சமாதானம் ஆகிய பொருளையுணர்த்தும். ஆனால் தெய்வப்புலவர், திருக்குறளில் எக்கருத்தில் அதையுபயோகித்துள்ளார் என்பது நாம் இங்கு ஆராயவேண்டிய தவசியம். ஒப்புரவறிதல் என்னுமதிகாரத்துக்கு உரையாசிரியராகிய பரிமேலழகர் முகவுரை கூறவந்தவிடத்து ஒப்புரவறிதல் என்பதற்கு 'உலக நடையினை யறிந்து செய்தல், உலகநடை வேதநடைபோல் அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமேயறிந்து செய்யுந் தன்மைத் தாகலின் ஒப்புரவறிதல் என்றார்" எனவுரைத்துள்ளார்.

இவ்வாறு 'உலகநடையறிந்து செய்தல்' என்று அவ்வுரையாசிரியர் பொருள் கூறுதலால் ஆன்றோர் ஒழுகியவாறு ஒழுகல் என்பதை அவ்வுலக நடையென்று நாம் கருதுவோமானால் ஒப்புரவறிதலென்ற அதிகாரத்துவரும் எக்குறளேனும் அவ்வொழுக்கத்தைப் பற்றிக்கூறாமையானும், உயர்ந்தோரொழுக்கத்தை மேல்வரிச்சட்டமாக வைத்து ஒழுகுதலை "ஒழுக்கமுடைமையென்னும் அதிகாரத்துள்

'உலகத்தோ டொட்ட வொழுகல்
பலகற்றுங் கல்லா ரறிவிலா தார்"

என்ற குறளில் விளக்குதலாயினும், உரையாசிரியரும் அதற்கு விசேடவுரை கூறவந்தவிடத்து 'உலகத்தோடு பொருந்த வொழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகிய வாற்றான் ஒழுகுதல்— ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல்" எனக்கூறுதலானும் அது கருத்தாகாதென்பது பெறப்படும்.

இனி "ஒப்புரவறிதல்" என்ற சொற்றொடருக்குப் பொருள் யாது? ஆசிரியர் கூறிய 'உலக நடையை யறிந்து செய்தல் என்பதில் உலகநடையென்னுந் தொடர்க்கு ஜன சமூகவாழ்க்கைக்கு இன்றியமையாத உதவிகளையறிந்து செய்தலென்று ஒவ்வொரு திருக்குறளும் விளக்குகின்றலால் கருதலாகும். ஜன சமூக வாழ்க்கையாவது தோட்டி முதல் தொண்டைமானீறாகவும், துறவி முதல் பற்றேமிக்கோனீறாகவும், வீரன் முதல் பேடியீறாகவுமுள்ள மானிடரெல்லாம் பரஸ்பர வுதவியானே வாழும் நிலை.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை"—என்பதனால்,

துறவிக்கும் இல்வாழ்வானது துணை இன்றியமையாதென்று பெறப்படும். அவ்வாழ்க்கையின் வளர்ச்சிக்குரிய உபகாரங்களாவன குளங்கட்டுவித்தல், கல்லூரி யேற்படுத்தல், வைத்தியசாலை செய்வித்தல், தேச நன்மைகளைச் செய்வன செய்வித்தல், ஒழிக்கத் தக்கன ஒழித்தல் முதலியனவும் பிறவுமாம்.

"கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை"— என்னுங் குறளில் 'உலகியல்'
என்பதற்கு உலக நடை யெனப் பொருள் கூறி விசேடவுரையில் உலக நடையாவது ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தலெனப் பரிமேலழகர்கூறிப் போந்தமையால் உலக நடையென்பது உயர்ந்தோர் ஒழுக்கம் என்னும் பொருளில் வழங்கவில்லை யென்பது புலப்படும்.

இவ்வுலக நடைக்குரிய உதவி ஒருவாறு முறையாக நடைபெறுவதாயினும், மக்களிற் சிறந்தவன் தன் அரிய பெரிய ஆற்றலால் பிறர்க்குப்புரியுஞ் சிறப்பையே கூறி, பொருளால் மட்டுமன்றி மனமொழி மெய்களால் செய்யப்படும் எல்லா வுதவிகளையு மடக்கிக் கூறியுள்ளார் நம் நாயனார். தவிர பரிமேலழகர் "ஒப்புரவு இம்மையில் பயனளிப்பதாகலின்" என்று கூறிய வாற்றானே இன்றியமையாதது என்று கவனிக்கத்தக்கது.

ஒப்புரவின் பெருமை:—

'அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடைந்து'சால் பூன்றியதூண் "எனச்சான்றாண்மைக்கு ஆதாரவானவைகளில் ஒன்றாகவைத்துக் கூறுதலால் ஒப்புரவின் பெருமை விளங்கும்.

"மக்களாலாய பெரும்பயனும் ஆயுங்கால் எத்துணையும் ஆற்றப்பலவானால்—தொக்க உடம்பிற்கே ஒப்பரவுசெய் தொழுகாதும் பர்க்கிடந்துண்ணப் பண்ணப்படும் "என்ற நாலடியின் கருத்தொத்து நன்மைகள் உடல் வளர்ப்பது அறப்பகுதியன்று, தன்னுடைய நன்மையைக் கருதாது பிறர் மேம்படுத்தற்கானவைகளைச் செய்வது ஒப்புரவென்பதாம். ஒப்புரவொழுகும் விழுமியோர்.

"தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறும் வெங்குறை தீர்க்கிற்பார்." அவர் 'உளவரையால் செய்வர் செயற்பாலவை' ஏனெனில், உளவரை தூக்காத ஒப்புரவாண்மை, வளவரை வல்லைக் கெடும்" என்றாலும் அவர்கள் "செல்வம் பலர்க்காற்றிக் கெட்டு வந்தக்கண்ணும், சிலர்க்காற்றிச் செய்வர் செயற் பாலவை"

"அடர்ந்து வறியராய் ஆற்றாத போழ்தும்
இடங் கண்டறிவாமென் றெண்ணியிரார் அர்
மடங் கொண்ட சாயல் மயிலன்னாய்! சான்றோர்
கடங் கொண்டுஞ் செய்வார் கடன்."

'இக் கடப்பாடு கைம்மாறு நோக்குவதல்ல; தவிருந் தன்மையதல்ல; ஒருவனுக்குப் பொருட் கேடு வருமென் பாருள ராயின் அக் கேட்டைத் தன்னை விற்றாயினுங் கொள்ளுந் தகுதியை யுடைத்து; வறுமையால் இது ஒழிதற் பாற்றன்று. வேத நடை வழுப் போன்று இவ்வுலக நடை வழுநீர் திறனுடைத்தன்று. பிறர்க்குதவாதார் போலத் தாமே உண்டற் பொருட்டும் வைத்திழத்தற் பொருட்டல்லாமல் பொருள் முழுதும் ஒப்பரவு செய்தற் பயத்தது.

இக் கடப் பாடு தன்னைப் பற்றியதும், தன் குடியைப் பற்றியதும், நாட்டைப் பற்றியதும், மன்பதைகளைப் பற்றியதும் எனபலதிறத்தது.

இது நாட்டுக்கு நாடு வேறு படுதலும், காலத்துக்கு காலம் வேறு படுதலும் கூடும். அதனால் அற நூல்கள் இதைக் குறிப்பிட்டுக் கூறுவதில்லை அவ்வந் நாட்டில் அவ்வக் காலத்தில் உள்ள மேலோர் மேற் கொள்ளும் முறைகளைக் கண்டறிந்து ஏனையோர் கொள்ளத் தக்க கடப்பாடாதலின் திருவள்ளுவரும் இதைப் பொதுப் படக் கூறிப் போந்தார். இனி ஒருவன் எத்

தகைய செல்வத்தை உடையனாயினும் ஒப்புரவைக் கடைப்பிடியாதிருப்பானேல் அவன் உலகிற் செத்தவனேயாவனென்னுங் கருத்து

"ஒத்த தறிவா னுயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்" என்னுங் குறளால்

அறியலாகும். இனி இவ்வொப்புரவு ஈகைபோல வறியார்க்குமட்டுமன்றி ஜன சமூகத்திற்கே பெரும்பயனளிப்பதாதலாலும், அவன் பெற்ற செல்வம்பாழ் போகாது கெடாது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவுதலாலும் அது "ஊருணி நீர் நிறைந்தற்று" எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுத்தலால் அது "பயன்மரமுள்ளூர்ப் பழுத்தற்று" தன் குறை நோக்காது எல்லா வருத்தமுந் தீர்த்தலால் அது மருந்தாகித் தப்பா மரத்தற்று" இன்னோரன்னோரே கடப்பாட்டாளராவர்.

இனி இவ்வொப்புரவு செல்வத்தான் மட்டுமாவதன்று; மனமொழி மெய்களாற் செய்யப்படும் எல்லா வுதவிகளையும் குறிப்பதென்னுங்கருத்து.

"இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறிகாட்சியவர்."
"நயனுடையானல் கூர்ந்தானுதல் செயு நீர
செய்யாதமைகலாவாறு"
என்னுங் குறள்களில் அமைக்கப்பட்டது.

ஆகவே இது காறுங்கூறியவாற்றால், ஜன சமூக வாழ்க்கைக்கு வேண்டப்படும் பொது நன்மைக்கு ஒப்புரவென்றும், வேளாண்மைக்கு ஒப்புரவென்றொரு பெயருண்டென்றும், ஒப்புரவு கடப்பாடு என வழங்கப்பெறுவதென்றும், ஒப்புரவறிதல் என்பது உலக நடையறிதலென்பதெனறும் ஒப்புரவொழுகென்றால் உலக நடையையறிந்து உலகத்துக்கு வேண்டிய உபகாரத்தைக் கருதிச் செய்து ஒழுகவேண்டுமென்றும், ஒப்புரவின் பெருமையின்னதென்றும், ஒப்புரவு இம்மையில் பெரும்பயனையும் புகழையும் பயப்பதென்றும், பொருளானே யன்றி மனமொழி மெய்களாலும் ஒப்புரவு செய்யத்தகுமென்றும், அறியப்படும்.

"ஒப்புரவறிந்தார் தமக்குடையாரல்லர்—கிழமைப்பட
வாழ்வார் அவரே, அவர் பிறர்க்கு என்புமுரியர்.'!
"தமக்கெனவாழ நோனாட்
பிறர்க்கெனமுயலுநர் உண்மையானே". (புறம் 182)

M. E. வீரபாகு பிள்ளை.

சுந்தர ஞானம்

1. ஒருவன் தத்துவ விசாரம் செய்து ஞானவானாக விரும்பினால் குரு தரிசனம் பெறவேண்டும்.

2. பக்குவ முள்ளவன் குருவைத் தேடிச் செல்லவேண்டுவதில்லை. மூன்றுமாதம் அல்லது மூன்று வாரத்தில் குரு தரிசனம் உண்டாகும்.

3. ஒழுங்காய்ப் பூர்த்தி செய்யப்பட்ட சாரிய நூல்களாகிய சசிவன்ன போதம், கைவல்லியம் முதலிய நூல்களில் ஒன்றை மூன்று முறைபடிக்க வேண்டும்.

4. யந்திரத்திலாக்கப் பெற்ற பொருளைப் போல மனம் பொன் போல் இலங்கும். எந்தப் பொருளை நோக்கினும் அகக்கண் மெய்ப் பொருளைத் தேடா நிற்கும். 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.'

5. "உண்பானு முடுப்பானு முழல்வானு முடல் சாத்திக் கண்காண வரிலலது கலக்கருமே வெம்பாவாய்" என்பதற்கிணங்க மெய் ஞானத்தை விளக்குதற்கு சற்குரு நாதன் வந்து சேர்வர். தன்னைப் போலவே மனிதவடிவாய் வரவே விரும்புகின்றனன்.

6. எத்தனை தான் இங்கு மங்குமோடி பிரசங்க வாசகத்தை செவி வாய் மடுத்துப் பருகினும், சொன்ன வண்ணம் செய்வதே மிகக் கஷ்டம்.

7. தான தர்மங்களைச் செய்யலாம். புண்ய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்திடலாம். மூர்த்திகளைக் கண்டு தரிசிக்கலாம். ஆனால் மனதை தன்னிலையில் நிறுத்துவது கடினம். "நான் மறையோதிப் பொருளுரைத்து நாடறியக் கல்வி சாற்றினும் தானது வகை யரிது காணும் சலிப்பற நிற்கை யரிது காணும்."

8. சாத்திரங்கள் பல கற்கினும், இலக்கண வழுவின்றி அவைகளுக்கு உறைவிரித்துக் கூறினும் பயனில்லை. ஆனால் சொன்ன வண்ணம் நடக்கும் திறமுடையவரா யிருத்தல் வேண்டும்.

9. இல்லற தொல்லையை நீக்கி மனம் பதைப்பற நிறுத்த நினைக்கிறவன் கடல் அலை ஓயவேண்டிக் காத்திருப்பவனை யொக்கும ஞானமோ காலங் கடந்தது.

10. உனக்கு ஸ்வராஜ்ய சுதந்தரத்தை நீயே கொடுக்கவேண்டும். உனக்கு வழி நீயே தேடவேண்டும். பகற்பொழுதில் செய் தொழிலை அறிகின்றாய். கனவில் தோன்றும் காட்சியை அறிகின்றாய். காடாந்த காரமாய் யாதும் புலப்படா விடத்தில் அயர்ந்து நித்திரை சுகமாய்ச் செய்தேன் என்றும் அறிகின்றாய். இந்த மூன்று ஜாக்ர ஸவப்ன சுழுப்தி காலத்திலும் எப்படி யிருந்தாய். சிந்தித்துப்பார். நிதானித்துப்பார்.

பகவத்கீதா வாசகம்.

(முன்தொடர்ச்சி)

9. ஸஞ்ஜயன் சொல்லலுற்றான்.

பகைவரை எரிக்கும் குடாகேசன், இவ்வாறு ஹ்ருஷீகேசனிடம் சொன்னபின்பு, "போர் புரியமாட்டேன்" என்றும் கோவிந்தனிடம் சொல்லிவிட்டு மேலொன்றும் பேசாமலே இருந்திட்டான்.

10. பாரத! இருசேனைக்கும் இடையே இவ்வாறு மனங்கலங்கி நிற்கும் அவனுக்கு, ஹ்ருஷீகேசன், புன்னகை செய்கிறவர்போன்று இவ்வார்த்தையைக் கூறலாயினர்.

ஸ்ரீ பகவான் சொல்லலுற்றார்.

11. நீ, யாவராலும் துக்கிக்க வேண்டாதவரைப் பற்றித்துக்கப் படுகிறாய்; ஞான வார்த்தைகளையும் பேசுகிறாய். உயிர் போனவரையும், உயிர் வாழ்பவரையும் பற்றி ஞானிகள் துக்கியார்.

12. நானும் நீயும, இந்த அரசர்களும் ஒருபொழுதும் இல்லாதிருந்ததில்லை. இனிமேலும் நாமெல்லோரும் இல்லாமற்போவதில்லை.

13. தேகிக்கு, இந்த தேகத்திலே பால்யமும், யௌவனமும், மூப்பும் எப்படியோ, அப்படித்தான் வேறு தேகத்தை அடைவதும்; அவ்விஷயத்தில் ஞானி மயங்கமாட்டான். தேகி—தேகமுடையது. ஆத்மா.

14. கௌந்தேய! இந்திரியஸ்பர்சங்கள் குளிர் வெப்பத்தையும், இன்பதுன்பங்களையும் கொடுத்துத் தோன்றி மறையுந் தன்மை யனவாய் அநித்தியமா யிருக்கின்றன; பாரத! அவற்றை நீ பொருக்கக்கடவாய்.

15. மனிதரிற் சிறந்தோனே! ஸுகதுக்கங்களை. ஸமமாகக் கொண்ட எந்தத் தீர புருஷனை, இவை உண்மையாகவே துன்பப்படுத்த மாட்டாவோ, அவன் சாகாநிலைக்கு உரிவனாகிறான்.

16. மெய்ம்மையோடுகாணும் இயல்பினாலே "பொய்ப் பொருளுக்கு உண்மையில்லை, மெய்ப்பொருளுக்கு இன்மையில்லை என இவ்விரண்டிற்கும் முடிவு கண்டுவைக்கப்பட்டுளது.

17. இதெல்லாம் எதனால் வியாபிக்கப்பட்டுளதோ, அதனையே அழிவில்லாததாகத் தெரிந்துகொள். தன நிலைதெரியாத இதற்கு ஒருவராலும் அழிவுசெய்ய இயலாது.

18. நித்தியமாய், கேடில்லதாய், அறிதற்கு அரியதான தேகியின் இச் சரீரங்கள், முடிவுள்ளவையாகக் கூறப்பட்டிருக்கின்றன; ஆதலின், போர் செய்யக்கடவாய், பாரத!,

19. எவன் இதனைக் கொல்வதாக அறிகிறானோ, எவன் இதனைக் கொல்லப்படுவதாக அறிகிறானோ, அவ்விருவரும சரியாக அறிபவராகார். ஏனெனில், இது கொல்வதும் இல்லை, கொலைப்படுவதும் இல்லை.

0. இது பிறப்பதில்லை. ஒரு காலத்து இறப்பதுமில்லை. ஒருகாலத்து இருந்து மறுபடி இலலாமற்போவது மில்லை. ஒருகாலத்து இலலாதிருந்து மறுபடி இருப்பதுமில்லை. பிறவாததாய், நித்தியமாய், ஸாஸ்வதமாய், புராணமாயுள்ள இது, சரீரம் கொலையுண்ணும் பொழுது, தான் கொல்லப்படுவதில்லை.

21. எவன் இதனை அழிவற்றதாய், நித்தியமானதாய், பிறவாததாய் குறைபாடில்லாததாக அறிகின்றானோ, அப்புருஷன், பார்த்த! எப்படி யாரைக்கொல்லும் படிசெய்கிறான்? யாரைக்கொல்கிறான்.

22. எப்படி ஒரு மனிதன் பழைய ஆடைகளைக் கழித்து வேறுபுதிய ஆடைகளை எடுத்துக் கொள்ளுகின்றானோ, அப்படியே, தேகியானது பழைய உடல்களைக் கழித்து வேறு புதிய உடல்களை அடைகின்றது.

23. இதனை ஆயுதங்கள் வெட்டா: இதனை நெருப்பு எரிக்கா: இதனை நீரும் நனைக்கா: இதனைக்காற்றும் உலர்த்தா.

24. இது வெட்டமுடியாதது: இது எரிக்கமுடியாதது: நனைக்கமுடியாதது: இது நித்தியமானது: எங்கும் உள்ளது: நிலையானது: அசைவற்றது: எப்பொழுதும் உள்ளது.

25. இது புலப்படாதது இது நினைக்கமுடியாதது: இது விகாரப்படாதது என்று வேதங்களால் கூறப்படுகின்றது. ஆதலால், நீ இதனை இவ்வாறு தெரிந்து கொண்டு, வருந்தவேண்டாம்.

26. ஒரு கால் நீ இதனை என்றும் பிறப்பதும், என்றும் இறப்பதுமாக எண்ணினாலும், உயிர் தோழ! நீ இவ்வாறு துக்கிக்கவேண்டாம்.

27. பிறந்ததற்கோ இறப்பு நிச்சயம்; இறந்ததற்குப் பிறப்பும் நிச்சயம். ஆதலின், தவிர்க்கமுடியாத விஷயத்திலே நீ துயரப்படுதல் தக்கதன்று.

28. பூதங்கள் அவ்யக்தத்தை காணப்படாமையை ஆதியாகவும், காணப்படுதலை நடுவாகவும், காணப்படாமையை முடிவாகவுமே உடையன. பாரத! அவ்விஷயத்திலே புலம்பு என்ன?

29. ஒருவன் இதனை ஆச்சரிய மானதுபோலப்பார்க்கிறான்: அப்படியே வேறொருவன் இதனை ஆச்சரியமானது போலப்பேசுகிறான்: பின்னும் மற்றொருவன் இதனை ஆச்சரிய மானது போலக்கேட்கிறான்: கேட்டும், ஒருத்தனும் இதனை அறிவதேயில்லை.

30. எல்லாருடைய சரீரத்திலுமுள்ள இந்தத் தேகியானது, ஒரு பொழுதும் கொல்லமுடியாதது; ஆதலால் பாரத! நீ எந்த பூதங்களைப்பற்றியும் வருந்துதல் தகாது.

31. ஸ்வ உன் தருமத்தை நோக்கும் பொழுதும், நீ பின்னிடவேண்டாம்; ஏனெனில், நியாய மான யுத்தத்தினும் நன்மையானது க்ஷத்திரியனுக்கு வேறு இல்லையன்றோ.

32. தற்செயலாய் நேர்ந்திருக்கின்றதும், திறந்துள்ள ஸ்வர்க்கவாசலுமான இத்தகைய யுத்தத்தை, பார்த்த பாக்கியவான்களான க்ஷத்திரியர்கள் பெறுகிறார்கள்.

33. இனி, இந்த நியாய மான யுத்தத்தை நீ செய்யாவிடில், அதனால் ஸ்வதருமத்தையும் புகழையும் இழந்து பாவத்தை யடைவாய்.

34. ஜனங்கள் உன்னுடைய அபகீர்த்தியை என்றைக்கும் சொல்லுவார்கள்: மதிப்பைப்பெற்றவனுக்கோ அபகீர்த்தியானது மரணத்தினும் அதிகமாம்.

35. மகாரதர்கள், உன்னை, பயத்தால் யுத்தத்தினின்று பின்வாங்கினவனாக நினைப்பார்கள். நீ எவர்களால் மிக்கு மதிக்கப்பட்டிருக்கிறாயோ, அவரது வெகு மதிப்பை முதலில் பெற்றவனாகப்பின்னர் அவரது அவமதிப்பைப்பெறு வாய்.

(முன் தொடர்ச்சி)

பத்தாவது அத்தியாயம்.

"காதற் கடிதங்கள்"

வைதீகமுறையில் கட்டுப்பட்டு, கடவுளை அந்த மகா விஷ்ணுவே, அநாத ரக்ஷகனே விதியும் மதியுமென்றெண்ணி கமல நாயகி பக்தி செய்துகொண்டிருந்தாள். தான் மாத்திரமன்று தன் குழந்தைகளை யெல்லாம் அதிகாலையில் எழுப்பி ரங்கநாதர் கோவிலுக்குப் போங்கள், காலையில் பசு தரிசனம் செய்யுங்கள் என்று சொல்வாள். கமல நாயகி ஸ்ரீரங்கநாதனை தூக்கத்தில் மறந்தால் எப்படியோ, ஆனால் நனவிலும் கனவிலும் பள்ளிகொண்ட பெருமாள் ஞாபகமாகவே யிருந்தாள்.

கஷ்ட ஜீவனத்தில் தான் கடவுள் ஞாபகம் பொதுவா யுண்டானாலும், பணம் படைத்தவர்களும் இயற்கையில் கடவுளிடத்தில் அகலாத பக்தியுள்ளவர்களா யிருப்பார்கள்.

கமலநாயகி தன் குடும்ப விஷயங்களை நினைத்தாலன்றி, அது தானாய் மனதில் தோன்றுவதில்லை. இந்த நிலைமையில் தன் குமாரத்தியான மனோரஞ்சிதத்தை நினைப்பது அபூர்வமா யிருந்தது. எதிர்பாராமல் மனோரஞ்சிதம் வந்து சேர்ந்ததால் எல்லோருக்கும் சந்தோஷ முண்டானாலும் திடீரென வந்த காரணத்தை அறிந்து கொள்ள ஆவல் கொண்டவர்களாயிருந்தார்கள்.

தன் தாயினிடத்தில் சென்னையில் நடந்த விஷயங்களையும் தன்னுடைய தீர்மானத்தையும் தெரிவித்தாள். அந்த பரந்தாமன் நமக்கு நன்மை செய்வான். ஸ்ரீரங்கநாதனையே நம்பியிரு என்று சொன்னாள். அதைக் கேட்டுக்கொண்டிருந்த இராமானுஜலு நாயுடு, ஆமாம் அம்மா, அந்த ரங்கநாதனை நம்பியிரு; அவர் உன் மனதிலிருந்து ஓர் உருவாய் வந்து காட்சி கொடுப்பார்'' என்றார். எல்லோரும் கலகல வென்று நகைத்தார்கள். உள்ளக்கருத்தை யறிந்த மனோரஞ்சிதம் மாத்திரம் சிரிப்பை அடக்கிக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டாள். உடனே நாயுடுகாரை நோக்கி, என்ன சொன்னீர்கள் என்று கேட்டாள்.

"கோவிலில் இருப்பவரும் ரங்கநாதர்தான். மனோரஞ்சிதத்தை நாடிவரக் கூடியவரும் ரங்கநாதம் தான் என்றார்." அப்பொழுது அந்தரங்கமான அர்த்தத்தை அறியலானாள். எந்த விவகாரத்தைப் பற்றிப் பேசினாலும், கமலநாயகி தன் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்குப் பதிலாக, மகாவிஷ்ணுவை நம்புங்கள் கஷ்டம் நீங்கும்; உங்கள் மனம் போலாகும்; அவரை ஸ்தோத்திரியுங்கள்; வணங்குங்கள்; என்று விடையளிப்பாள். ஆகையால் மனோரஞ்சிதம் தன் தாயிடமிருந்து எவ்வித ஆறுதலையும் யோசனையும் பெறுவதற்கில்லாதிருந்தது.

இரத்தினமாளிகையில் கடைசியாக நடந்த விபரீதங்களை மனோரஞ்சிதம் தன் சகோதரனிடத்தில் தெரிவித்தாள்.

இரங்கநாதம் இன்னாரென்று இன்னும் புலப்படவில்லையே. சமீபத்தில் சந்தித்தபோது, தான் தொண்டமண்டல முதலியார் வகுப்பினர் என்பது திட்டமாய்த் தெரிகிறதென்றும், அதைப்பற்றிய துப்பு விசாரித்துக்கொண்டிருக்கிறதாயும் சொன்னார். அவரை வளர்த்து வந்த போஷகர் தனக்கு ஏழு அல்லது எட்டு வயதாயிருக்கும்போதே இவ்வுலகைத் துறந்தாரென்றும் சொன்னார். ஆனால் அவரை வளர்த்து வந்த வேதவல்லியம்மாள் தன் குழந்தைகளில் ஒருவராகப் பாவித்து தன் குடும்பத்துக்குச் சம்பந்த மற்றவரென்று எவரும் லகுவில் அறிந்து கொள்ள முடியாதபடி அவ்வளவு அன்பாய்ப் போஷித்து வந்திருக்கிறாள். மேலும் அவர்களுடைய சொந்தக் குழந்தைகளும் அவர் விஷயத்தில் வித்தியாசமின்றி சகோதரனாகப் பாவித்து வந்தார்கள். குடும்ப சொத்தை பிள்ளைகள் பாகம் பிரித்துக்கொள்ளும் போது தான் தனக்கும் அந்தக் குடும்பத்துக்கும் யாதொரு பாத்தியமில்லை யென்றறிந்தார். சோழவந்தான் சோமசுந்திர முதலியார் வேதவல்லியம்மாளுக்குத் தமையனாபடியால், அவருடைய தொந்தரவினாலேயே தான் இரங்கநாதத்துக்குச் சொத்தில்லாமற் போய்விட்டது. ஐந்தாறு வருஷமாய் தன்னை இன்னாரென அறிந்து கொள்வதற்கே பாடு படுகிறார்.

இன்னுமொரு விஷயம் சொல்லுகிறேன்:—ஸ்டாண்டர்டு பத்திரிகைக்கு உபபத்திராதிபராய் அமர்த்தப் பட்டிருக்கிறதாய் நேற்று தினம் பத்திரிகையில் படித்தேன். பத்திரிகை ஆபீசில் இருப்

பதால் அவர் தன் குலத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளக் கூடும் என்று மனோரஞ்சிதத்துக்குச் சொன்னார்.

மூன்று வாரத்துக்குப் பிறகு சென்னையிலிருந்து கடிதம் வரப்பெற்றாள். அதில் கண்ட விஷயம் ஒருவிதத் தீர்மானத்துக்கும் வரக்கூடியதாயில்லை. கடிதத்திலுள்ள விஷயம் பின் வருமாறு:—

ஸ்ரீமதி மனோரஞ்சிதத்துக்கு, உனது நற்காலத்தில் நீ சந்தோஷப்படுகிற காலத்தில் கொஞ்சம் இந்தக் கடித மூலமாய் பிடுங்கிக் கொள்ளுகிறேன். எனக்கும் சுகோதயம் உண்டாயிருக்கிறது. எனது பால்ய நண்பர் ஒருவர் ஸ்டாண்டர்டு பத்திரிகைக்கு மானேஜராக இருந்து வருகிறார். ஒரு நாள் மாலை சுமார் 4 மணிக்கு கடற்கரைக்குப் போயிருந்தபோது தற்செயலாய் அவரைச் சந்திக்க நேர்ந்தது. எனது க்ஷேம செய்தியை விசாரித்தார். எனக்கோ பதில் சொல்ல முடியவில்லை. என்ன பதில் சொல்லுகிறதென்று சிந்தனை செய்தேன். இருவரும் ஒரு பக்கத்திலிருந்தோம். தான் வகித்திருக்கும் மேற்கண்ட உத்தியோகத்தைப் பற்றியும் தெரிவித்தார். நான் எழுதிய நூல்களைப் படித்திருப்பதாயும், நேரில் காண ஆவல் கொண்டிருந்ததாயும் சொன்னார். எங்கள் இருவருக்கும் சம்பந்தமில்லாத உலக விவகாரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். கடைசியாக என்னைக் கட்டாயப்படுத்தி அவர் வீட்டுக் கழைத்துச் சென்றார். அன்றிரவு அவரோடு புசித்தேன். பிறகு எனக்குத் துணையாக வண்ணாரப்பேட்டை வரை வந்து வீட்டில் விட்டுச் சென்றார். நான் இருந்த விடத்தைப் பார்த்தவுடன், தனக்குள் என்ன நினைத்துக்கொண்டாரோ தெரியவில்லை. தனித்துத் தான் இருக்கிறீர்களோ, என்று கேட்டார். ஆம் என்று விடையளித்தேன். அன்றிரவு கழிந்தது. மறுநாள் என் இருப்பிடத்துக்கு வந்து என்னை அழைத்துச் சென்று காப்பி சாப்பிடச் செய்து, பத்திரிகை காரியஸ்தலத்தையும் காட்டினார். அவர் என் விஷயத்தில் பொழியும் அன்புக்கு கங்கு கரையில்லை. அன்றே என்னை உபபத்திராதிபர் வேலையை யேற்றுக்கொள்ளும்படி செய்தார். அப்படிக் கட்டுப்பட்டிருக்க, உண்மையில் எனக்கு இஷ்டமில்லையானாலும், காலத்தை அனுசரித்து ஏற்றுக்கொண்டேன். எப்படியாவது எனது பெற்

ரோரைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கான முயற்சியைச் செய்து வருகிறேன்.

என்னை வளர்த்துவந்தவர்கள் வீட்டுக்குச் சென்றேன். என்னை வளர்த்த தாய் என்னைக் கண்டதும் அன்போடு உபசரித்து, அங்கேயே யிருக்கும்படி கேட்டுக்கொண்டாள். சம்மதித்த பாவனையாய் இரண்டு நாள் தங்கியிருந்தேன். நான் அவர்களுக்குக் கிடைத்த வரலாற்றை விசாரித்தேன். 'ரங்கா, நான் என்ன சொல்லப் போகிறேன்— நீ என் வீட்டுக்கு வரும்போது 6, 7, மாதக் குழந்தை ஒங்கப்பா நீ யாருடைய பிள்ளை யென்பதைத் தெரிந்து கொள்ள ரொம்பவும் பிரயாசைப்பட்டார். நியூஸ் பேப்பரில் வெளியிட்டார். போலீஸுக்கு எழுதித் தெரிவித்தார். எவ்விதமான அடையாளமும் வெளிவரவில்லை. உன் இடுப்பில் ஒரு மோதிரம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அது இப்போ ஞாபகத்துக்குவந்தது; என் கைப்பெட்டி கள்ள அறையில் வைத்தேன், எத்தனையோ வருஷங்களாய்விட்டன். நீ இப்பொழுது கேட்கும்போது நினைப்பு வந்தது, என்று பழைய தன் கைப்பெட்டியைத் திறந்து செருகு பலகையால் மூடப் பட்ட ஒரு சிறு கள்ள அறை இருந்தது. அதிலிருந்து அந்த மோதிரத்தை வெளியிலெடுத்தாள். அது முற்றிலும் அழுக்குப் படிந்திருந்தது. அதில் இரண்டு எழுத்து செதுக்கப் பட்டிருந்தது. அதை என் கையில் கொடுத்தாள். அது என்ன பலன் தருமோ!

கர்ப்பநாயகம் உன்னை விவாகம் செய்து கொள்ளப் போவதாயும் அதற்கு உனது அம்மான் முயற்சி செய்வதாயும் சொன்னார்களாம். என்னைப்பற்றி மிகக்குறைவான அபிப்பிராயங் கொண்டிருக்கிறார். நான் எதற்காக மௌனம் சாதித்து வருகிறேன் என்பதை அறியாதவர்கள். கர்ப்பநாயகத்தின் விஷயத்தில் நீ எச்சரிக்கையா யிருக்க வேண்டும். நீ சென்னையை விட்டுப் போகாமலிருந்தால் நலமாயிருந்திருக்கும். இரத்தின மாளிகையில் கூடிய சீக்கிரம் சில மாறுதல் ஏற்படும். அப்பொழுது இங்கிருக்க வேண்டிய தவசியமாகும்.

நினதன்புள்ள,

இரங்கநாதம்.

இந்தக் கடிதத்தைப் படித்து விட்டு ஆழ்ந்த யோசனையிலிருந்தாள். கர்ப்பநாயகத்தின் முகத்தைக்கூட பார்க்க மனமில்லாதவளா யிருந்தாள். மறு நாள் எதிர்பாராத விதமாய் ஒரு கடிதம் வரப்பெற்றாள். அதில் கண்ட விஷயம் பின் வருமாறு:—

அன்பான மனோரஞ்சிதத்துக்கு,

எனது அருமை நண்பர் மிஸ்டர் இரங்கநாதம் கேட்டுக்கொண்டதன் மேல் உனக்கு இக் கடிதத்தை யெழுதத் துணிந்தேன். மேலும் அதி சீக்கிரம் நீ இவ்விடம் வரப்போகிறாய் என்று உன தம்மான் சொல்லக் கேட்டேன். உனக்கு நான் கடிதம் எழுதுவதில் அவர்களுக்கும் அத்தியந்த திருப்தி. ஏனென்றால் அவர்கள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டே இக் கடிதம் வரையலாயிற்று. உன் விஷயத்தில் யான் கொண்ட அபீஷ்டமானது நிறைவேறுமாயின் அதுவே யான் செய்த தவப்பயனாகும்.

இரத்தினமாளிகைக்கு நீ திரும்பி வந்ததும் நியாயமான வழியில் விவேகமாய் நடந்துகொள்வாய் என்பது திண்ணம். உனதம்மான் எனக்கு ஆப்த நண்பரானதும், யாங்கள் இருவரும் நின் பிரிவாற்றால் வருந்துகிறோம். இரத்தினமாளிகையே சோபித மற்றிருக்கிறது. நினதம்மான் உன்னை ஊருக்கு அநீதமாய் அனுப்பியது பற்றி துன்புறுகிறார். அவர் தன் குற்றத்தை நன்கு உணருகிறார். நீ திரும்பி வருவதாய் மாத்திரம் எழுதினால் அளவற்ற சந்தோஷத்தை யடைவார். மிஸ்டர் ரங்கநாதம் சில நாளாக நல்ல நிலைமையில் இருந்துவருகிறார்.

மாளிகையிலுள்ள இரத்தினங்களை பட்டணத்துக்குக் கொண்டு போய்ப் பத்திரப்படுத்தப் போகிறார். உன் உதவியின்றி இரத்தினங்களை என்ன செய்யப்போகிறார் என்பது விளங்கவில்லை.

மிஸ்டர் ரங்கநாதத்தால் எவ்வித பிரயோசனமு மில்லை யென்பது உனதம்மான் அறிந்துளார். உன்னைவிட அதிக அன்புடையவராயிருந்தும் அவர் விரும்பவில்லை. என்ன செய்யலாம். தனக்குத் தானே விரோதியாய் யிருக்கிறார்.

இக்கடித ஆரம்பத்தில் எழுதியிருக்கிறதை நன்றாய் ஆலோசித்து அதன் படி நடந்து கொள்வாய் என்று முற்றிலும் நம்பி

யிருக்கிறேன். அதனால் விளையக்கூடிய நன்மை அளவிடக்கூடாதது. மைலிக்கு வருகிறேன்' என்று இரண்டு வார்த்தைகளைப் பதிலாக அனுப்பினால் போதுமானது. அதுவே எனக்கு எல்லையில்லா ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியதாகும்.

இக்கடிதத்தை மிஸ்டர் ரங்கநாதமும் படித்துப்பார்த்திருக்கிறார், என்பதை நீ தெரிந்துகொள்ளவேண்டி இக் கடிதத்துக்கு மேல் விலாசம் எழுதிக் கொடுத்தார். அவருடைய ஆதரவுக்கும் விருப்பத்துக்கும் கட்டுப்பட்டேயிக் கடிதத்தை அனுப்பலானேன்.

உனது உயிருக்குயிரான

கர்ப்பநாயகம்.

இக்கடிதத்தை மனோரஞ்சிதம் இரு முறை படித்துப்பார்த்தாள். என்றாலும் அதில் ஏதோ சூது இருக்கிறதென்று ஊகித்துக்கொண்டாள். தன் தாயினிடம் கடிதத்தைக் காட்டினாள். அம்மான் மனம் ஜோல் நடந்துகொள். கடவுள் தீர்க்காயுளைக் கொடுப்பார் என்று ஆசீர்வதித்தாள். இப்படிச் சொல்வது தன் தாயின் வழக்கமென்றறிந்திருந்தாள். தன்னுடைய அம்மானுக்கு மேற்கண்ட கடித விஷயத்தையாவது, தனது விருப்பத்தையாவது காட்டாமல், உத்திரவு கிடைக்குமாயின் திரும்பிவர சித்தமாயிருக்கிறேன் என்று எழுதினாள். அதற்கு விடை மறு தபாலில் மூன்றும் நாள் வரப்பெற்றாள். மனோரஞ்சிதம் எதிர்ப் பார்த்ததற்கு அதிகமாகவே வார்த்தைகள் குளிர்ந்த தன்மையில் எழுதப்பட்டிருந்தன.

என தன்பான ரஞ்சிதத்துக்கு எழுதிக்கொண்டது, உனது கடிதங் கண்டு களிப்புற்றேன். குழந்தாய்! அங்ஙனம் கோபித்துக் கொண்டு போய்விடுவாயென்று நினைக்கவில்லை. உன்னைப் பாராத என் கண் புண்ணாயிருக்கிறது. பழைய விஷயங்களை மறந்து விடு. நானும் மறந்து விட்டேன். சென்றதை மீண்டும் நினைக்க வேண்டுவதில்லை. கடிதங் கண்டதும் வந்து சேருவாய் எனமிகுந்த ஆவலோடு எதிர்பார்க்கிறேன். சனிக்கிழமை காலையில் வந்து சேர வேண்டும். ஞாயிறன்று இரத்தினங்களை இரும்புப் பெட்டியில வைத்துப் பட்டணத்துக்குக் கொண்டுபோய்ப் பத்திரப்படுத்த நிச்ச

யித்திருக்கிறேன். ஆகையால் நீயும் எனக்கு உதவியாயிருப்பாய் ஆகையால் துணைக்கு உன் தமயனையும் அழைத்துக்கொண்டு வந்து சேரவேண்டும்.

நின் தாய் மற்றுமுள்ளோர் க்ஷேமத்துக்குத் தெரியப்படுத்தவும்.

இங்ஙனம்

தனபதி.

இந்த விஷயத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மனோரஞ்சிதத்தின் தாய் முதலானோர் அவசியம் நீ போகவேண்டும். இது சமயம் உதவியாயிருக்க வேண்டியது என்று சொன்னார்கள். ஆனால் மனோரஞ்சிதம் கர்ப்பநாயகம் என்ன தீங்குசெய்வானோ வென்றதில் மனதைக் கலங்கச் செய்தது. எல்லாம் வல்ல கடவுள் உதவி செய்வார் என்பதாய் மனதில் உதித்தது. சென்னை போவதாகத் தீர்மானித்து உற்சாகங் கொண்டாள்.

பதிமூன்றாம் அத்தியாயம்.

தனபதியின் பரம ரகஸ்யம்.

தேன் பூசிய கத்திபோல கர்ப்பநாயகம் இனியவசனம் பேசி குலாவினார். அவரது உள்ளக் கருத்தை இன்னதென்றறியா தனபதி முதலியார் சிலகாரணங்களை உத்தேசித்து அன்பா நேசித்து வந்தார். இவர்கள் உறவு நாளுக்கு நாள் அன்னியோன்னியமாய் வளர்ந்து கொண்டிருந்தது.

எதிர்பார்த்தபடி சனிக்கிழமை மனோரஞ்சிதம் வந்து சே வில்லை. ஒருவேளை மறுநாள் வரலாமென நினைத்துக்கொண்ட கள். இரங்கநாதம் இவர்களுடைய காரியங்களை அடிக்கடி கவனி

கொண்டு வந்தார். சனிக்கிழமை இரவு கர்ப்பநாயகத்தையும் இரங்கநாதத்தையும் இரத்தின மாளிகையில் தங்கிப் போகும்படி கேட்டுக்கொண்டார். இரங்கநாதம் போஜனம் செய்ததும் சீக்கிரமாகப் போய்விட்டார்.

கர்ப்பநாயகம் என்ன விஷயமாகப் பேசலாமென சிந்திக்கலானார். கடைசியாக ஒரு விஷயத்தை ஆரம்பம் செய்தார். அதாவது "முதல் தடவை சந்திக்கும் போது என் பெயரைக் கேட்டு ஆருவருப் படைந்தீர்களே அந்த நினைக்க நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது அதன் காரணமென்ன?" என்று கேட்டார்.

தனபதி முதலியார் உடனே பதில் சொல்லவில்லை. ஒரு சாரபாயப் பார்த்துக்கொண்டு ஆலோசனையில் ஆழ்ந்தவரா யிருந்தார். இவரும் உலகெலாம் சுற்றி நாகரீக நடபுடலில் ஈடுபட்டவரானதால் ஆகாரமானதும் உயர்தரமான ஒரு சிகரட்டை உபயோகித்து முடிந்ததும் "பரம ரகஸ்யமானது. இவ்வுலகில் அதன் உண்மையை ஒருவரும் அறியமாட்டார்" என்று பதில் சொன்னார்.

"அப்படியானால் தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். அதன் விர்த்தாந்தத்தை சொல்லும்படி கேட்டு தொந்தரவு செய்யமாட்டேன்" என்றார்.

எப்பொழுது மனதுக்குள்ளேயே நெடுங்காலமாய் வைத்திருக்கும் விஷயத்தை பரம ரகஸ்யம் என்பதாகப் பெயரிட்டு வெளியிட்டாரோ, அப்பொழுது அதைச் சொல்லவும் எண்ண முடையவராயிருக்கலாம். ஒருக்கால் சொல்லாமலிருந்து விட்டால் என் செய்வதென்று தந்திரமாய்ப் பதிலளித்தார்.

"உங்களுக்கு அவ்விஷயத்தை முற்றிலும் சொல்லவேண்டுமென்ற எண்ணமுண்டு. ஆனால் இதுவரை சரியான சந்தர்ப்பம் நேரவில்லை. அதைக் கேட்பதற்குத் தக்க மனிதருண்டோ வென நெடுநாளாய் நினைத்துக் கொண்டிருந்தேன்" என்றார்.

"அது தங்கள் வாழ்நாட்களில் நடந்த சம்பவமாயிருந்தால் எனக்குக் கேட்க ஆவல் அதிகம். மேலும் ஆச்சரியப்படக்கூடியதாகவே யிருக்கிறது".

உண்மையில் ஆச்சரியப்படக் கூடியதுதான். முதலாவது விஷயம்—அநேக வருஷங்களுக்கு முன் எனக்கு விவாகம் நடந்தது.

"அப்படியா! கல்யாண மில்லாமலேயே யிருக்கிறீர்கள் என்று நினைத்திருந்தேன்—.

"எனக்குத் தீர்மானிக்கப்பட்ட பெண்ணை இன்னொருவன் விவாகம் செய்துகொள்ள பால்ய முதல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இந்த விஷயம் எனக்கு விவாகம் ஆனபிறகே தான் தெரிய வந்தது. என் மனைவியோ அவளுடைய பெற்றோர் சொற்படி நடக்கக்கூடியவளா யிருந்தாள். என்றாலும் அவன் அவளை அடித்துக் கொண்டு போகிறதற்கே துவஜங்கட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய பங்களாவுக்குக் 'கற்பக விலாசம்' என்று பெயர். அவன் பெயர் விநாயகம்.

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கர்ப்பநாயகம் திடுக்கிட்டார். என்னவென்று கேட்க 'ஒன்றுமில்லை, சுருட்டு நெருப்பு கையில் பட்டுவிட்டது' என்று சொல்லி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"உண்மையாகப் பேசுமிடத்து விநாயகம் என்னிலும் மிக்க அழகுடையவனே. ஆனால் நல்ல நடத்தையில்லை யென்றே விவாகம் தடைபட்டதென்று கேள்விப்பட்டேன். என் மனைவியும் ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொள்வதில்லை. என் மனைவியை அபகரிக்கச் சூழ்ச்சிகள் பல செய்தான். அவள் தன் சாமர்த்தியத்தால் தப்பித்து வந்தாள். இவ்விஷயம் எனக்குத் தெரிந்த பிறகும் இன்னது செய்கிறதென்றே தோன்றவில்லை. நான் சந்தோஷமாயிருந்தால் அவள் முகம் புன்னகையோடிருக்கும். என்முகம் வாடியிருந்தால் அவள் முகமும் அவ்விதமே யிருக்கும். அவளால் சந்தோஷம் இரண்டு பங்காகவும் துக்கம் ஒன்றுக்குப் பாதியாகவும் ஆகின்றது.

கர்—விவாகமான பிறகு கூட ஏன் கஷ்டப்படுத்த முயன்றார்?.

"ஆசை வெட்கமறியாது. அது ஒரு விதமான பைத்தியம். கையில் இருக்கிற உன்னதப் பொருளின் அருமை தெரியாது, கைக்கெட்டாத பொருளுக்கு அவஸ்தைப்படுவது சர்வசாதாரணமாயிருக்கிறது. அவள் தன்னை விவாகம் செய்ய மறுத்ததால் கொலை செய்ய வழி தேடுகிறான் என்றும் கேள்விப்பட்டேன். எனது இல்

லற வாழ்க்கை யெல்லாம் இரண்டு வருஷம் தான் நடை பெற்றது. பிறகு அவள் கர்ப்பமாகி ஒரு சிங்கக் குட்டியைப் பெற்றாள்—"

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது அவர் தம் கண்களினின்றும் ஜலம் வடிந்து கொண்டிருந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"தங்களுக்கு இவ்வளவு துக்கம் உண்டாகுமென்று நினைக்கவேயில்லை. இவ்வுலகில் சுகவாழ்வு எவருக்குமே யில்லை. எல்லாம் வினைக்கீடாய் நிகழ்கின்றது.

"என்னமோ, நேற்று நடந்தது போல் என்மனம் மெழுகாய் உருகிவிட்டது."

"பட்டமனம் நினைத்ததும் வருத்தத்தை உண்டாக்கி விட்டது அந்தக்குழந்தை யெங்கே, தாயெங்கே ?"

"குழந்தை பிறந்தது என்று சொல்லக்கேட்டு மிகுந்த சந்தோஷப் பட்டுக்கொண்டிருக்கும்போதே, இடி விழுந்தாற்போலப் பிரசவித்த அறையில் "அம்மா! அம்மா!! என்ன இப்படி விழிக்கிறாய், என்று ஒருவர் சொல்லியதும் மற்றும் சிலர் அழ ஆரம்பித்தார்கள். அப்பொழுது என்மனம் புழுப்போல் துடித்தது. சற்று நேரத்துக்கெல்லாம் தாய் இறந்தாள் என்ற செய்தி எட்டிற்று. இறந்ததற்கு பலகாரணங்களைச் சொன்னார்கள். அந்தக் குழந்தையைச் சிலகாலம் வைத்திருந்தேன். அதற்கும் பல தீங்குகள் சம்பவிக்கும் போலிருந்தது. தாய்க்குப் பதிலாய்க் குழந்தையோடு சமாதான வாழ்க்கையிலிருக்க எண்ணினேன். அதற்கும் வழியில்லாமற் போய்விட்டது.

"குழந்தையை எவருக்காவது கொடுத்து விட்டீர்களா ?

"அதைத்தவிர எனக்கு வேறு வழிதோன்றவில்லை. தாதி வைத்து ஆறுமாதம் வளர்த்து வந்தேன். குழந்தையின் அழகை யென்னென்று சொல்வேன். அதைக் கையிலெடுத்து ஒரு நள்ளிருளில், சென்று ஒருவர் வீட்டு வாசற்படிக் கருகில் வைத்துவிட்டு வந்தேன். தாயும் குழந்தையும் இறந்ததாகச் செய்தி பரவவும் விராயகத்தின் விரோதம் ஒழிந்தது. என் வாழ்வுக்கு எமனாய் வந்து,

பின் அவன் தன்வாழ்வையுங் கெடுத்துக்கொண்டு பத்து வருஷங் கழித்து இறந்தான். என் குழந்தை அவனுக்கு என்ன பாவஞ் செய்ததோ தெரியவில்லை.

"நீங்கள் குழந்தையை விட்டு எத்தனை வருஷமாயிற்று? அதின் கதி யென்ன?

குழந்தையை விட்ட பத்து வருஷங்களுக்குப் பிறகு விநாயகம் இறந்தான்.—அநேக வருஷங்கள்—முப்பதுக்குள் இருக்கலாம். ஆனல் குழந்தை என்ன ஆயிற்றென்பது தெரியவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னர் தான், விசாரித்துத் தெரிவிக்கும்படி போலீஸாருக்கு எழுதியிருக்கிறேன். முழு விவரங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் அந்தக் குழந்தை உயிரோ டிருந்தால் உன்னைப் போலவே யிருக்கவேண்டும். அந்தக் குழந்தை வளர்ந்தால் அதனிடமிருந்து என்னென்ன வித்வத்தன்மை யெல்லாம் எதிர்ப் பார்த்தேனோ அவைகளெல்லாம் உன்னிடம் அமைந்திருக்கக் காண்கிறேன். வயது முதலிய மற்றெல்லா விதத்திலும் என் பிள்ளையாகவே இருக்கிறாய்.

"அத்தகைய யான் திடீரெனத் தந்தையென்ற அன்போடு உங்களை 'அப்பா' வென் றழைத்தாலோ!

"நான் கூர்மையாக பரிசை செய்து பார்க்கவேண்டும்.

"எல்லா விதத்திலும் பொருந்தியுள்ளவன் பரீக்ஷையிலும் தேர்ந்து விடுவான். தங்களை எவரும் எளிதில் ஏமாற்ற முடியாது. நானும் தங்களைப் பிதாவென்றே நினைக்கிறேன். ஆனல் பிள்ளை தந்தையின் குணத்துக்கு முற்றிலும் பொருந்தி விடுமென்று சொல்வதற்கில்லை.

"ஆயினும் குற்றமில்லை. நீ மனோரஞ்சிதத்தை விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்று என் சொல்லென்பது இப்பொழுதாவது விளங்கு மல்லவா?

மனதில் அளவற்ற சந்தேகங்கொண்ட கர்ப்பூரநாயகம் அதிக நேரம் யோசனை செய்ய ஆரம்பித்தார். பிள்ளை யென்று போவதும், அதனல் இரத்தினங்களை அடைந்துவிடலாம் என்பதும் சரியான வழியல்ல ஆபத்தான மார்க்கம் என்பதாகத் தீர்மானித்துக் கொண்டார்.

"எல்லாம் கடவுள் செயலால் நடக்கும். இப்படிப்பேசிக்கொண்டிருக்கும்போது போலீஸ் கமிஷனர் ஆபீஸிலிருந்து ஒரு கடிதம் தபாலில் வரப்பெற்றார். அதில் குழந்தையைப் பற்றி விசாரித்ததாகவும், அது வளர்ந்து இப்பொழுது நல்ல ஸ்திதியிலிருக்கிறதாகவும், முற்றிலும் விபரம் தெரிவிப்பதாகவும் எழுதியிருந்தது. அக்கடிதத்தை கர்ப்பநாயகமும் படித்துப்பார்த்தார். தாம் அவர் பிள்ளையென்று பாசாங்கு செய்ய முடியாதென்பதை நன்றாயறிந்துகொண்டார். இரத்தினங்களைக் கைப்பற்றுகிறதற்கு யோசனை செய்ய ஆரம்பித்தார்.

இரத்தினமாளிகையைப் பார்வையிடத் தனபதிமுதலியார்சென்றார். அவர் பின்னால் கர்ப்பநாயகம் தொடர்ந்து சென்றார். மாளிகையின் வாசற்படிக் கருகிலுள்ள செடிகளில் இருவர் பதுங்கியிருந்தனர். மாளிகைக்குள் தனபதி முதலியார் சென்றதும் கர்ப்பநாயகம் அவ்விருவர்களையும் பார்த்து ரகஸ்யமாய்ப் பேசிவிட்டுச் சென்றார். உயர்தரமான இரத்தினங்களையெல்லாம் ஒரு சிறு பெட்டியில் வைத்தார்கள். மற்ற இரத்தினங்களை வேறு பெட்டிகளில் வைத்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று பதுங்கியிருந்த இருவரும் மாளிகைக்குள் சென்று தனபதி முதலியாரையும் கர்ப்பநாயகத்தையும் தனித்தனியே கயிறுகளால் கட்டி, வெளியே தயாராயிருந்த ஒரு மோட்டார் வண்டியில் தனபதி, முதலியாரை மாத்திரம் வைத்து வெகுதூரம் கொண்டு போனார்கள்.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

மனோரஞ்சிதத்தின் மனோராஜ்யம்.

எதிர்பாராத வலை.

ஸ்ரீரங்கத்திலிருந்து மனோரஞ்சிதம் திருச்சிக் கோட்டைக்குத் தன் தமயனோடு வந்து சேர்ந்தாள். ஆனால் பட்டணம் போகிற வண்டியைச் சந்திக்கப்போகும் வண்டி போய் ஐந்து நிமிஷம் ஆய்விட்டது. என்றாலும் ஒரு ஜட்கா வண்டியிலேறி திருச்சி ஜங்ஷன் போய் வண்டியில் ஏறினார்கள். மறுநாள் காலையில் சென்னை எழும்பூர் வந்து சேர்ந்தார்கள். தனபதி முதலியார் அழைத்துவரும்படி வண்டி அனுப்பியதாக ஒருவன் சொன்னான், இருவரும் மோட்டார் வண்டியில் ஏறினார்கள்.

மனோரஞ்சிதம் தனக்கு இனி யாதொரு கஷ்டமும் இல்லையென்றும் சொந்தத்தில் மோட்டார் வண்டியும் வாங்கி யிருக்கிறார்கள். தன் மனம் போல் விவாகமும் நடக்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. மாப்பிள்ளை நன்றாய்ப் படித்து புத்திசாலியாயிருந்தால் போதாதா. நமது அர்மானிடம் அளவற்ற சொத்து இருக்கிறது. என்று இவ்விதமெல்லாம் எண்ணி தனக்குள் மனம் பூரித்தவளாயிருந்தாள். புதுப்பேட்டையிலுள்ள ஒரு பங்களாவின் வாசலில் மோட்டார் வண்டி வந்து நின்றது. ஏன் வண்டியை இவ்விடத்தில் நிறுத்திவிட்டாய். மைலாப்பூருக்கல்லவோ போக வேண்டும். என்றாள்.

மோ-வ—இவ்விடத்தில் தான் முதலியார் வந்திருக்கிறார். அவர்களையும் அழைத்துக் கொண்டு போக வேண்டும். அரங்கநாத முதலியாரவர்கள் இங்கே தான் வசிக்கிறார்கள்.

'அப்படியானால் நானே போய் அழைத்து வருகிறேன்' என்று வண்டியை விட்டுக் கீழே இறங்கினாள். தமயனும் கூடவே சென்றான்; பங்களாவோ பார்ப்பதற்கு ரமணீயமாயும், கட்டடம் சற்று தூரத்தில் அதாவது மத்தியிலிருக்கக் கண்டார்கள். பங்களாவின்

வாசற்படிக்குச் சென்றதும் நாலைந்து முரட்டு மனிதர்கள் அவர்கள் முன் தோன்றி இருவரையும் தனித்தனி அறையிலிட்டுப் பூட்டி விட்டார்கள்.

மனோரஞ்சிதம் மிகுந்த கவலை கொண்டவளாய் அந்த அறையி லுள்ள ஜன்னல்களைப்பார்த்தாள். அவைகள் திறப்பதற்கின்றி நன் றாய்ப் பூட்டப்பட்டிருந்தன. இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. ஜாக்கிரதையா யிருக்க வேண்டு மென்று தீர்மானித்துக் கொண் டாள். ஆனால் தமயன் கதி என்ன ஆயிற்றோவென்று வருந்தினாள்.

சுமார் ஒரு மணி நேரம் சென்று கதவு திறக்கப்பட்டதும் ஒரு விருத்த ஸ்திரீ கையில் பலகாரமும் ஜலமும் கொண்டு வந்தாள். ஏனம்மா படுத்திருக்கிறாய்? எழுந்திரு, கால் கை சுத்தி செய்து கொண்டு சாப்பிடு என்றாள்.

மனோ—அம்மா!—பாட்டி இது யாருடைய பங்களா? இங்கே யார் குடி யிருக்கிறார்கள்.

"என்னைப்பார்த்தால் உனக்குப் பாட்டியென்று சொல்ல வந் ததா, நல்லது நல்லது உங்கள் வீட்டுப் பாட்டி இப்படித்தானிருக் கிறாளா?" என்று வெகு துடுக்காய்ச் சொன்னாள். இதைக்கேட் டதும் மனோரஞ்சிதம் 'அம்மா கோபித்துக் கொள்ளாதே, என க்கோ அதிகப் பசியால் கண் பஞ்சடைகிறது. அதனால் அப்படிச் சொல்லி விட்டேன். தயவு செய்து மன்னிக்க வேண்டும்' என்றாள்

'மன்னிப்பென்ன மன்னிப்பு, இதோ இருக்கு சாப்பிடு' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றாள்.

கிழவியைப் பாட்டி யென்று சொன்னதற்கு எவ்வளவு கோபம் வந்துவிட்டது. இவளை எப்படிச் சமாதானம் செய்கிறது. இது யாருடைய பங்களாவோ தெரியவில்லை. அம்மானையும் காணோம், வேறு தெரிந்தவர் ஒருவரையுங்காணோம். என்ன வினை இப்படி வந்து மூண்டது. ஐயோ தெய்வமே! என்று மனோரஞ்சிதம் தலை யில் கையை வைத்துக் கொண்டு மௌனமாய்த் துக்கித்துக்கொண் டிருந்தாள். வாசற் கதவு திறக்கப்பட்டிருந்தது. இன்னது செய் கிறதென்று ஒன்றும் தோன்றாதவளாய், ஏன் வந்தோம் என்று நினை

த்து அழுதாள். கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியே போய்ப் பார்ப்போமென்று எழுந்து வந்தாள். முன் வந்த ஸ்திரீ உள்ளே வந்தாள். சீக்கிரம் சாப்பிடு நான் போக வேண்டும் என்று சொன்னாள்.

"அம்மா நான் சாப்பிடாமல் எங்கே போகப்போகிறேன். இது யாருடைய பங்களா? என்னையார் இங்கு அடைத்திருக்கிறார்கள். தயவு செய்து சொல்லுங்கள்.

'பதில் சொல்ல எனக்கு உத்திரவு இல்லை.

"ஆனால் சரி, நான் கொஞ்சம் வெளியே போய்வர வேண்டும்.

என்னுடன் வா வென்று பங்களாவின் பின் பக்கமாக அழைத் துச் சென்றாள். தோட்டமோ மிகப் பெரிது. தப்பித்துப் போவ தற்கோ வழியொன்றும் தெரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோலிருக்கிறது. ஒரு பக்கத்தில் ஒரு கிழவன் பூச்செடி களுக்கு ஜலம் விட்டுக் கொண்டிருந்தான். கால் கை சுத்தி செய்து கொண்டு உள்ளே வந்தாள். தனக்குப் பசியில்லை என்றும் வேண் டும்போது சாப்பிடுவதாகவும் சொல்லிவிட்டாள். அந்த ஸ்திரீ போய் விட்டாள். கர்ப்பநாயகத்தின் சூழ்ச்சியாய்த் தானிருக்கும் என்று தீர்மானித்துக் கொண்டாள். எப்படியாவது தப்பித்து வெளியே போக வேண்டும் இதற்கென்ன வழி, என்று சிந்திக்க லானாள். உடனே எழுந்து தோட்டக்காரன் இருக்குமிடம் சென் றாள். இங்ஙனம் மனோரஞ்சிதம் போவதைத் தெருவாசலில் காவல் புரியும் இருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தப்பித்துப்போவ தற்கு வழியில்லையாதலால் வேலைக்காரர்கள் தடுக்க வில்லை.

வேலைக்காரனுடைய குடிசையின் முன்னால் போய் நின்றாள். உள்ளே ஒரு கிழவி யிருந்தாள். 'யாரம்மா எங்கே வந்திங்கோ' என்று கேட்டாள். அதற்கு 'இல்லை, இது தான் உங்கள் வீடோ என்று பார்க்கவந்தேன்' என்றாள்.

"எசமான்மாரு தயவு பண்ணிக் கொடுத்தாங்கோ. இதிலே சுகமா யிருக்கோம்.

"இந்த பங்களா யாருடையது?

மைலாப்பூரிலே ஒரு பணக்காரர் வாங்கியிருக்கிறார். இன்னைக்கி நகைகளை, ரத்தினங்களை இங்கே வைக்கப்போறாவளாம். என்னமோ சொல்லிக்கிறாங்க. எங்களுக்கென்னத்திற்கு அந்தச் சங்கதியெல்லாம்.

“அந்த எஜமான் பெயரென்ன?

“எனக்குத் தெரியாதம்மா”

“அவர் எப்படிப்பட்டவர்”

“அதுவும் எனக்குத் தெரியாது”

“உங்களை இங்கே வேலைக்கு வைத்தது” யாரோ?

“ஒருவர் கறுத்த மனிதர்”,

இதுவரைக்கும் பேசினதினால் பிரயோஜனமில்லையென நினைத்து அவர்களை விட்டு விலகினாள். ஒன்றும் தோன்றவில்லை.

ஆனால் தன்னை முன் பின் தெரியாத இடத்தில் வைத்திருப்பதைத் தெரிந்து கொள்ளலானாள்.

தன் தமையனை நினைத்தாள். அவர் கதி யாதாயிற்றோவென நினைக்கத் துக்கமேலிட்டது. தன் அறைக்குட் சென்றாள். தன் படுக்கையிற் சாய்ந்தாள். மதிமயங்கி, மனம்கலங்கி, தியங்கினாள். அந்த ரங்கநாதரையே துதித்தாள். சற்று அயர்ந்தாள். பின் சிறிது தேறி எழுந்தாள். தன்னிடம் இருந்த கடிதத்தில் ஊற்றுப் பேனாவால் எழுதலானாள். போலீஸ் கமிஷனருக்கு மனு தயாரித்தாள். மனுவில் தன் விஷயத்தைப் பற்றிச் சொன்னாள். தான் இன்ன விடத்திலிருப்பதாய்ச் சொல்ல முடியவில்லை என வரைந்தாள். தன் பெயரை எழுதினாள். கை நடுக்கமுற்றாள். எழுதி முடித்தாள். திரும்பப் படித்தாள். உறையை விரித்தாள். தாளை மடித்தாள். உள் அடக்கஞ் செய்தாள். விலாசம் எழுதினாள். தன்னிடமிருந்த 10 ரூ. நோட்டைக் கையிலெடுத்தாள். கடவுளை நினைந்து கண்ணீர் விட்டாள். பஞ்சினும் மெல்லிய கரத்தால் துடைத்தாள். எழுந்து நடந்தாள். தோட்டக்காரனை அணுகினாள். வாய் திறந்தாள். மொழி யாடலானாள்.

தோட்டக்காரனும் மௌனமாய்க் கேட்டு வந்தான். ரூபாயைப் பார்த்தான். பண ஆசை கொண்டான். தலையை அசைத்தான்.

இந்திரஜித்.

(முன் தொடர்ச்சி.)

பின்னுஞ் செட்டியார் “உமக்கு இஷ்டமில்லாவிட்டால் ஆட்டம் கேட்க வேண்டியதில்லையே. மேலும் இந்த ரங்காட்டத்தில் அவரவர்களுக்கு இஷ்டமானபடி பந்தயம் வைக்கலாம். ஆட்டம் சொல்லுகிறவர் மாத்திரம் இப்படிமுடியாது. நீர் ஆட்டம் சொல்ல வேண்டுமென்று நிர்ப்பந்தமா” வென்றார்.

பாடகர் “அப்படி ஆடத்தான் வேண்டுமென்றால் எனக்கு ஆக்ஷேபமென்ன. பின்னால் உங்களுடைய தமாஷ் கடை வேண்டாம். ஒரு சங்கதி மாத்திரம் சொல்லுகிறேன். நானோ பாடகன். ஆட்டத்தில் பரிச்சயமில்லாதவன், உங்களுடைய விதி விலக்குகளை அடிக்கடி மீறி நடப்பேன். பொறுத்துக் கொள்ளவேணு”மென்றார்.

ஆட்டம் ஆரம்பித்தது. சீட்டுக்களின் மூலையில் ஜாதியும் எண்ணிக்கையும் சிறியதாய் அச்சடிக்கப்பட்டிருந்தன. முதலில் மேஜை வெகு ஸ்வல்பமாய் வைத்து ஆடினார்கள். பாடகர் ஆட்டம் கேட்பதுமில்லை. பந்தயம் பிடிப்பதுமில்லை. அப்படி இரண்டு மூன்று தடவை செய்தபொழுதும் தோல்வியே தவிர வேறல்ல. ஆனால் சொல்வதொன்று செய்வதொன்றாய் மற்றவர்கள் கால் அரை என்று பந்தயம் வைக்கும் பொழுது அவர் கால் பவுன் அரை பவுன் சவரனுக்குக் குறைந்து வைப்பதில்லை. நமது செட்டியார் அதைக் கவனித்து, அவரை உற்றுப்பார்த்தார். மேஜையோ வரவர உயர்ந்தது. ரொக்க லேவாதேவியே யொழிய கடன்கட்டில்லை. நோட்டுகளும் பவுன்களும் ரூபாய்களும் குவிந்து கிடந்தன.

செட்டியார் “என்ன பாடகரே! ஜோர்பிறக்கவில்லை. வரவர ஸ்வரம் குறைகிறதோ. மேல் ஸ்தாயியில் ஒரு வாங்கு வாங்குமே” யென்றார்.

பாடகன் “இப்பொழுது நமது பக்ஷி உறக்கமாயிருக்கிறது. அரசுக்கு வரும் பொழுது சொல்லுகிறேன். ஜாக்கிரதையாய் ஆடு”மென்றார்.

அந்த ஆட்டம் போக மறு ஆட்டத்தில் செட்டியார் சீட்டைக்கலைத்துப் போட்டார்; தானே ஆட்டம் சொன்னார். பாடகருடைய கைக்கு வந்தவுடன் அவர் சீட்டைப் பார்க்காமல் தன் பணப்பையிலிருந்து ஒரு கட்டு நோட்டுகளை எடுத்து சீட்டின் மேல் வைத்து, மெதுவாய் நாலடி ஆறு

மூன்று பெற்றார்; இருபத்தியேழு பந்தயம் கெலிக்கிறதென்றார். அந்த கோட்டுகளை கணக்குப் பார்த்தால் 5000 வெள்ளி இருந்தது. கேவலம் ஒரு பாடகனுக்கு அது பெரிய பந்தயமல்லவா? நமது செட்டியார் சீட்டைத் திருப்பினார். பாடகரும் சீட்டைத் திருப்பினார். டைமண்ட் ஆஸ்காணப் பட்டது; செட்டியார் கையில் இஸ்பேட் ராணி தோன்றிற்று; பாடகருக்கு 10000 வெள்ளி ஜயம். செட்டியார் அலக்ஷ்யமாய்ச் சிரித்து, பொட்டாங் குறிப்பாய் அடித்தீரென்றார்; ஆனால் அவருக்குத் தோல்வியென்றால் விஷம். மனதில் வருத்தந்தான்.

அடுத்த ஆட்டத்தில் செட்டியார் கேள்வி கேட்டார். பாடகர் அதைக் கவனிக்காமல் எதையோ முணு முணுத்துக் கொண்டு விரல்களால் தாளம் போட்டு சரி பார்த்துக்கொண்டிருந்தார். செட்டியார் பந்தயம் பிடிக்கிறீரா இல்லையா கண்டிப்பாய்ச் சொல்லுமென்று கேட்டார். பாடகர் திடுக்கிட்டு கண்ணைத்திறந்து தன் சீட்டின் பின்புறத்தை உற்றுப்பார்த்து, 6, 8, 48, ராவணனுக்கு ராமன் விரோதி, வீதைக்கு மந்தோதரி அத்தை மகள் வேண்டாம் ஆட்டம் கேட்கவில்லை யென்று மறுபடியும் முன்போல் கண்ணை மூடிக்கொண்டு, மனதிற்குள் பாட ஆரம்பித்தார்.

அதற்குள் வேறு ஆட்டம் வந்தது. செட்டியார் மறுபடியும் ஆட்டஞ் சொல்லி “பாடகரே! என்ன தூக்கமா? பந்தயம் உண்டா இல்லையா” வென்றார். பாடகர் மூன்றே முக்காலும் ஏழே யரைக்காலும் எட்டரை குஞ்சத்துக் கோட்டான் மணிக்குன்றில் மறைந்தது. சரி, நல்லது. ஆட்டம் பிடித்தேன். கெலிப்பு. 5000 மென்று கண்ணைப் பாதிதிறந்துநோட்டுச் சுருளை நகர்த்தினார். செட்டியார் தன் சீட்டைத் திருப்பினார். பாடகரும் தன் சீட்டைத் திருப்பினார். மறுபடியும் 10000 வெள்ளி ஜயம். பாடகர் அதை அலக்ஷ்யமாய் எடுத்து வைத்து பினாங்கு செட்டியாரைப் பார்த்து இங்கே வீணையாவது பிடிலாவது உண்டா” வென்றார்.

நமது செட்டியாருக்கு 10000 வெள்ளி தோற்றதும் ஆத்திரமல்ல. மற்றவர் தன்னைப்பார்த்து மறைவாய்ச் சிறித்ததும் ஆத்திரமல்ல. இந்த நட்டுவப்பயல் கெலித்தானே யென்று உடம்பு தெரியாமல் கோபம் மூண்டது. “ஓய்? இது பெரிய மனிதர்களின் அரண்மனை. கூத்தாடிகளின் வீடல்ல. இப்பொழுது சீட்டாடிக் கொண்டிருக்கிறோம். கேளிக்கை நடப்பதாய் எண்ணமோ. கண்ணைத் துடைத்துக் கொள்ளு” மென்றார்.

பாடகர் அவரை ஏறஇறங்கப் பார்த்து, “உம்முடன் சீட்டாடுவதென்றால் அதைத் தவிரவேறு வேலைகிடையாதோ. என்வழி வேறு. உமது

வழிவேறு. என்பணம் யாவற்றையும் கெலிப்பது உமக்கு இஷ்டந்தான். அப்படியே உமது பணம் யாவற்றையும் கெலிப்பது எனக்கும் இஷ்டந்தான். ஆனால் என் முறைப்படி நான் ஆடுவேனே யல்லாது உமது பள்ளிக்கூடத்தில் படிக்கமுடியாது. உமது சங்கதியை நீர் கவனித்துக்கொள்ளும். என்னைத் தொந்திரவு செய்யவேண்டா” மென்றார்.

செட்டியார் சீட்டை மறுபடியும் கலைத்துப் போட்டு, பந்தயம் உண்டா? இல்லையா? உடனே சொல்லு” மென்றார். உடனே பாடகர் எல்லாமறிந்தவரும் இங்கில்லை. யாதுமறியாதவரும் இங்கில்லை. தாயுமானவர் நல்ல கணக்காளி. பட்டணத்துப் பிள்ளைக்கு கொழுந்தன் மகன். விட்டறிய நேர்ந்தாலும் ஒட்டுள்ள வானாளும் நட்டில்லாமாந்தரே. 10000 வெள்ளி பிடி பந்தயம் தோல்வி” யென்றார். எல்லோரும் சீட்டைத் திருப்பினார்கள் சிலர் கெலித்தார்கள். சிலர் தோல்வியடைந்தார்கள். ஆனால் பாடகருக்குத் தன் வரிசையில் செட்டியாரிடத்திலிருந்து 10000 ஜயம்.

“இப்பொழுது என்னிடத்தில் அந்தத்தொகை ஆஜரில்லை. நாளைக்குள் அனுப்புகிறேனென்று செட்டியார் சற்றுக் கடுகடுத்த குரலுடன் பதில் சொல்லி எழுந்தார்.

“இன்னுமொரு ஆட்டம் போடுவோமா” மென்றார் பினாங்கு செட்டியார். “வேண்டாம். இன்று பாடகருக்குச் சுக்ரதசை அடிக்கிறது. என் கையில் சீட்டு சரியாய் ஏறவில்லை. நான் ஒதுங்கி விடுகிறே” னென்றார் பெரிய செட்டியார்.

அப்பொழுது ஒரு வேலைக்காரன் உள்ளே வந்து, ஒரு கடிதத்தைப் பாடகரிடத்தில் கொடுத்து, ஐயரென்று இதைக்கொண்டுவந்தவன் சொன்னானென்றான். பாடகர் அதைக் கிழித்துப்பார்த்து, முகம் கலங்கி கவலை கொண்டு, கனவான்களே; என்னை மன்னிக்க வேண்டும். என் மனைவிக்கு திடீரென்று மூர்ச்சை போட்டுவிட்டதாம். உடனே போகவேண்டும். செட்டியார்வாள்! நாளைக்கு ஜயம் முழுவதும் தங்களுக்கே யென்று அதி வேகமாய் வெளியில் சென்றார்.

ஐயோ? பாவம் அவருக்கு மனைவியிடத்தில் வெகு விச்வாஸம் போலிருக்கிறதே. பயமும் துக்கமும் ஆச்சர்யமும் முகத்தில் கூத்தாடுகின்றன. நமக்கும் அப்படித்தானே யென்று மற்றவர் சொன்னார்கள்.

வாசல் கதவுமூடி ஒருநொடிக்குள் வேறொருவிருந்தாடி தடபுடலாய் உள்ளே வந்து “இப்பொழுது என்மேல் இடித்துக் கொண்டு ஓய்வாய்ச்சலாய்த் தெருவில் ஓடுகிறவர் யாரய்யா? கேட்டீர்களா நம்மெல்லோருக்கும்

பட்டை நாமம் சாத்தி விட்டான் ஒரு பேர்வழி. ஊரெல்லாம் கொல்லென்றிருக்கிறது. நேற்று நமது ஸங்கீத ஸமாஜத்தில் கச்சேரி வைத்து, விருந்து வைத்தவர் பாடக கந்தசாமி பிள்ளையல்லவாம். வேறுயாரோ அந்தப் பேர்வைத்துக் கொண்டு தகல்பாஜித்தனஞ் செய்து இங்கே வெளிச்சம் போடுகிறான். அசல் பேர்வழியோ சென்னைக்கடுத்த பல்லாவரத்தில் பிரமாத ஜ்வரமடித்துக் கிடக்கிறான். பிழைப்பது பெரியோர்களின் புண்யமே' யென்றான்.

உடனே பெரிய செட்டியார் "குடிகெட்டுப் போயிற்றே, இந்திரஜித் மாயாவி சாமியார் கூஹூ கொள்ளை கொள்ளை திருடன் திருடன் பிடி பிடி விடாதே"யென்று கூவிக்கொண்டு வெளியில் ஓடினார்.

கைக்கெட்டினது வாய்க்கெட்ட வில்லையே யென்று எல்லோரும் வெளியில் ஓடி நான்கு புறத்திலும் பரவி; திருடனைத் துரத்தினார்கள். நல்லவேளையாய்ச் சின்ன செட்டியார் தளர்ந்த வயதும் பருத்த வயிறும் இல்லாதவர். தெருவில் மேற்கிலும் கிழக்கிலும் உற்றுப் பார்த்து, 100 கஜத்திற்கப்பால் யாரோ ஒருவன் குறுக்குச் சந்தில் நுழைவதைப் பார்த்து, அதி வேகமாய்ப் பின்தொடர்ந்தார். அந்த சந்திற் கருகில் வந்தவுடன் அந்த அசாமி தலைவிரிகோலமாய் ஓடுவதைக்கண்டு தானும் அந்த வழியாய்ப் பந்தயக் குதிரையைப் போல் ஓடினார். முன்னே போய்க் கொண்டிருந்தவன் இந்திரஜித்தே; தன் வேஷம் வெளிப்பட்டதென்றறிந்தான். ஓட்டத்தில் மானும் இவனுக்கு நிகரல்ல. ஒரு மூலை திரும்பி மறைந்தான்; செட்டியார் விடாமல் துரத்தினார். ஐயோ! பாவம் அந்த சந்திற்கு அப்புறம்வழியில்லை அதைக்கண்டு மாயாவி திகைத்துத் தயங்கி போன வழியே திரும்பி ஓடி வந்தான். செட்டியார் இருகைகளாலும் வழி மறித்துக்கொண்டு நின்றார். அதை கண்டு மாயாவி அவரருகில் வந்தவுடன் குப்பென்று மேலே கிளம்பி அவர் தலைக்கு ஒரு ஜாண் உயரத்தில் பாய்ந்து, காலைந்து அடிக்கப்பால் குதித்தான். செட்டியார் அவனுடைய காலை பிடிக்கப் பார்த்துப் பிடிதவறி அவன் மேலே போட்டுக் கொண்டிருந்த நீண்ட சட்டையைப் பிடித்துத் தடுத்தார். அந்த தீரனோ இருகைகளையும் தனக்குப் பின்னால் மின்னலைப் போல் நீட்டினான். சட்டை நழுவி செட்டியாருடைய கையுடன் வந்து விட்டது. அந்த வேகத்தால் அவர் பூமியில் பொத்தென்று விழுந்தார். இந்திரஜித்தோ "பலே செட்டியார்! நூற்றுக்கு 10 தரு வேண்டுமோ? 5 போதாதோ, என் சட்டையை உமது கணக்கில் வைத்துக் கொள்ளுகிறேன்" னென்று கடு வேகமாய் ஓடி மறைந்தான்.

செட்டியார் மண்ணும் சேரும் சாணியுமாய் எழுந்து, அடி வலுவாய்ப் பட்ட படியால் கஷ்டப்பட்டு மூச்சு விட்டுக் கொண்டு, உடம்பெங்கும் தட

விக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பெரிய செட்டியாரும் மற்றவர்களும் அங்கே வர நடந்த சங்கதியை அவர்களுக்குத் தெரிவித்தார். தன் புத்திசாலித் தனத்தைக் கொண்டாடி, தனக்கு ஆறுதல் சொல்வார்களென்று எதிர் பார்த்த அவரை பெரியவர் கடுமையாய்க் கண்டித்து எப்பொழுதும் கார்யத்தைக் கெடுக்கும் அசடு நீ யென்றே ஏற்பட்டிருக்கிறது. கலியாணத்துக்கு சகுனம் பார்க்கிறவன் தோளில் கரிப்பூனையை வைத்துக் கொண்டிருப்பதுபோல் உன்னைப் பக்கத்தில் வைத்துக்கொண்டிருந்தால் எந்தக் காரியந்தான் உருப்படுமென்று சீறினார்.

சின்னவருக்கு நல்ல அடிபலவிடங்களில் கைகால்கள் சிராய்த்து ரத்தம் கசிந்து, நெருப்பாய் எரிந்து கொண்டிருந்தது. பெரியவருடைய வார்த்தைகள் புண்ணில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினது போல் வெகு குளிர்மையாயிருந்தது. ஆயினும் எல்லா விஷயங்களையும் உத்தேசித்துக் கோபத்தையடக்கிக் கொண்டு, 'இப்பொழுது என்ன கெட்டுப் போய் விட்டது. அசாமி கிடைக்கா விட்டாலும் அவனுடைய சட்டை கிடைத்தது பரம லாபம். அதைத் தடையமாய் வைத்துக் கொண்டு எவ்வளவோ கண்டு பிடிக்கலாமென்றார். நொண்டி நொண்டிக் கொண்டு தலை கிறுகிறு வென்று சுற்ற உடம்பெல்லாம் ரணமாய் வலிக்க சின்னவர் வீட்டிற்குத் திரும்பினார். அவருக்கு நல்ல அடி யென்பதில் ஸந்தேஹமில்லை. வீட்டிற்கு வந்து அந்த சட்டையைப் பரிசோதித்து பார்த்தார்கள். தையற்காரனுடைய பெயராவது சொந்தக்காரனுடைய பெயராவது காணப்படவில்லை. சட்டைப்பைகளில் பார்த்த பொழுது நேர்த்தியான பட்டுக் கைக் குட்டையைத் தவிர வேறொன்றும் அகப்படவில்லை. அதிலும் யாதொரு அடையாளமுமில்லை. ஒரு பையில் மாத்திரம் ஏதோ ஒரு கடிதத்தைப் போல் கையில் தட்டுப் பட்டது. அதை எடுத்துப் பார்த்து சின்னவர் அடங்கா மகிழ்ச்சி கொண்டார். சற்று நேரத்திற்கு முன் ஒரு வேலைக்காரன் அவனுக்குக் கொண்டு கொடுத்த கடிதமென்பதில் ஸந்தேஹமில்லை. அதைப் பிரித்துப் பார்க்கையில் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

என் உயிருக்குயிரான லக்ஷ்மணா! இந்த வேலைத் தனம் வெகு அபாயகரமென்று அப்பொழுதே நான் சொல்ல வில்லையா? என் பேச்சை இனி மேலாவது கேட்பாயல்லவா? உயிரோடிருப்பவனைப் போல் வேஷம் போடுவது ஒரு நாளும் உதவாதென்று உனக்கு எவ்வளவு தடவை சொன்னாலும் தெரிகிறதில்லை. எந்த நிமிஷத்தில் எது நேருமோ, யாருக்குத் தெரியும். இறந்தவர்களும் கேவலம் நம்மால் கல்பிக்கப் பட்டவர்களும் நமது வழிக்கு வர மாட்டார்கள். தெய்வச் செயலாய் தபாலாபீசிற்குப் போயிருந்தேன். அங்கே சென்னையிலிருந்து வந்த தந்திகளை வேடிக்கையாய்ப் பார்த்துக்

கொண்டிருக்கையில் பாடகர் கந்தசாமி பிள்ளை சாகும் தருவாயில் பல்லாவரத்தில் கிடப்பதாய்த் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இதற்குள்ளூரெங்கும் புடைபுடைத்து விடும். ஒரு க்ஷணம் கூட தங்காதே. எனக்குத் திடீரென்று மூர்ச்சை வந்து விட்டதாய்ச் சொல்லி உடனே வந்து விடு. நாம் இறங்கியிருந்த ஜாகைக்கு போகாதே. நாம் முன்பு ஏற்படுத்திக் கொண்ட உத்தேசப் படி ராமனுஜத்தின் கிடங்கில் என்னைக்காணலாம். உன் அன்பிற்குரிய,

சந்திர காந்தை.

'இது நமக்கு முக்கியமான ஆதாரம். இதை வைத்துக் கொண்டு அந்த அசாமியைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யலாம். இப்பொழுது இரண்டு சங்கதி வெட்ட வெளிச்ச மாயிற்று. மாயாவியின் உண்மையான பெயர் லக்ஷ்மணன். அவன் கூட்டாளியின் பெயரோ சந்திர காந்தை" யென்றார் பெரிய செட்டியார்.

சின்னவர் மறுபடியும் சட்டைப் பைகளைத் தேடிப் பார்த்தார். ஒரு மோதிரம் அகப்பட்டது தன்னைத் துரத்த ஆரம்பித்த பொழுது அவன் இவ்விரண்டையும் அவசரமாய் சட்டைப் பையில் வைத்து மறந்து விட்டானென்று தோன்றுகிறது. எட்டுப் பட்டை தீர்ந்தது; பலவித வயிரங்களால் கட்டப்பட்டது. ஆனால் ஒரு பட்டை மாத்திரம் அதைப் போட்டுக் கொண்டிருக்கிறவனுடைய கண்ணிற்கு நேராய் அமைக்கப் பட்டிருந்தது. அதில் வயிரத்திற்குப் பதிலாய் மிகவும் நுட்பமான ஓர் பூதக் கண்ணாடித் துண்டு பதிக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டவுடன் அந்த வேலைத்தனம் முழுவதும் வெட்ட வெளிச்சமாயிற்று. பெரிய செட்டியார் சீட்டைக்கலைத்துப் போட்டுக் கொண்டிருக்கும் பொழுது பாடகர் மேஜையின் மேல் தன் கையை அலக்ஷ்யமாய வைத்துக் கொண்டிருந்தார். கலைக்கப்படும் சீட்டுகளின் ஜாதியும் எண்ணிக்கையும் தன் மோதிரத்திலுள்ள கண்ணாடியில் பிரதி பலித்ததால் செட்டியாருக்கு விழுந்த சீட்டுகளைக் காட்டிலும் தன் சீட்டுகள் மேலானவை யென்று கண்டால் மாயாவி பந்தயம் பிடிப்பதும் மட்டமாயிருந்தால் விட்டு விடுவதும் ஏதோ மஹா ரஹஸ்யமான கணக்குப் போடுவதும குறி சொல்லுவதும் சுத்த வேஷமே. அவன் போட்டுக் கொண்டிருந்த கண்ணாடி விசேஷ பலமுள்ள பூதக் கண்ணாடியே யொழிய வழக்கமாய் உபயோகிக்கும் வகையல்ல வென்று தோன்றிற்று. அதைப் பரிசைபார்ப்பதற்காக மறுபடியும் ஓர் ஆட்டம் போட்டார்கள். சின்னவர் அந்த மோதிரத்தைப் போட்டுக் கொண்டு அதின் மூலமாய் எல்லோருக்கும் விழுந்த சீட்டுகளின் விபரங்களைச் சொல்லிக் கொண்டே வந்தார்.

'ஐயோ! இதென்ன சுத்தப் போக்கிரித்தனமாயிருக்கிறதே. சீட்டாடுவதில் அதிருஷ்டத்தை நம்புவது மூடத்தனம். திறமையை நம்புவது ஸஹஜம் நியாய விரோதமல்ல. ஆனால் சீட்டுகளைத் திருட்டுத் தனமாய்ப் பார்த்து விட்டு, அதை நம்பி, ஆடுவது கேவலம் திருட்டுத்தன மென்று சொல்ல வேண்டும். என் வீட்டில் இப்படிப்பட்ட அயோக்யன் வந்ததும் நம்மெல்லோரையும் மோசஞ் செய்ததும் என் நண்பரான செட்டியாரை என் கண்ணிற்கெதிரே ஏமாற்றிக் கொள்ளையடித்ததும் சொல்ல முடியாத வருத்தத்தையும் அவமானத்தையும் எனக்குண்டு பண்ணுகிற"தென்றார் பினங்கு செட்டியார்.

ஆனால் பெரியவரோ தான் மோசம்போனதைப்பற்றி அடிக்கடி பிறர் பேசுவது இஷ்டமில்லாமல் உடனே பேச்சை மாற்றி,

"அதெல்லாம் போகட்டும் இதனால் எனக்கென்ன நஷ்டமா? அவனுடைய போக்கிரித்தனத்தை இப்பொழுது நன்றாய் வெளியாக்கி விட்டேன். பெரியோருடைய புண்யத்தால் இந்தத் தடவை ஒரு மயிரிழையால் தப்பினான். வரவர அவனுடைய சக்தியும் குறைகிறது. எனது யுக்தியும் ஸாமர்த்தியமும் வலுக்கிறது. அசாமியை பயந்து ஓடச் செய்து விட்டோம் முன் தடவைகளில் இப்படியில்லை. அடுத்த தடவை அவனைக் கட்டாயம் நானே கைப்பிடியாய்ப் பிடித்து விடுகிறேன். மேலும் இந்தத் தடவை அவனுடைய கூட்டாளி இங்கில்லை. அதனால் தகுந்த புத்திக் கூர்மையும் ஜாக்கிரதையும் அவனுக்கில்லை. வேறொருவன் இந்த உபாயத்தைச் செய்திருந்தால் உடனே கண்டு பிடித்திருப்பேன். இவன் என்னமோ பாட்டும் கூத்தும் கணக்கும் தடபுடல் பண்ணினதால் சற்று அஜாக்ரதையா யிருந்து விட்டேன். அவனுடைய வேலைத்தனத்தைக் கண்டு பிடிக்காதபடி அப்பொழுது நமது கவனத்தை வேறிடத்தில் இழுத்து விடுகிறான். காரியம் முடிந்து, நாம் மோசம்போன பிறகே விழித்துக் கொள்ளுகிறோ மென்றார்.

போலீஸில் தெரியப்படுத்தி விசாரிக்கச் சொன்னதில் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. இராவணன் புத்திரனான இந்திரஜித்தைப்போல் அவன் எங்கு மறைந்தானோ, கடிதத்தில் கண்ட ராமானுஜம் யாரோ, அங்கே இரண்டு வாரமிருந்து சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்தும் அந்தப் பெயருள்ள ஒருவனையும் காணவில்லை. ஆனால் அந்த மாயாவி அவ்வூரை விட்டுப் போகாமல் அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தானென்பதற் கடையாளமாய் வழக்கப்படி கடிதம் கிடைத்தது.

அடே! மடையச் சக்கரவர்த்தியே! போன தடவை உனக்குப் புத்தி மதி சொன்னபிறகு சென்னைக்கு சிலகாலம் போக வேண்டியிருந்தது.

அவைகளை முடித்துக் கொண்டு, அவ்விடத்துப் போலீஸார் என்னிடத்தில் வைத்த எல்லையற்றப் பிரியத்தையும் என்னை நேரில் பேட்டி காணவேணுமென்று அவர்கள் செய்த உபத்திரவத்தையும் உபசாரத்தையும் தாங்க முடியாமல் அங்கிருந்து வெளிப்பட்டேன். நான் செய்த பரமோபதேசம் உனக்கு ஏதாவது பலித்ததா வென்று பார்க்கத் திரும்பி, இவ்விடம் வந்தேன். என் முயற்சி யெல்லாம் வீணாயிற்று. இலவுகாத்த கிளியைப்போலும் விழலுக்கிறைத்த நீரைப்போலும் சாம்பலில் செய்த ஆஹுதியைப் போலும் நான் உன்னிடத்தில் மனமுருகி, வைத்த நல்லெண்ணமும் கருணையும் பயன் பெறாமல் பாம்பிற்குப் பால் வார்த்ததைப் போல் விஷத்தையே விருத்தி செய்தது. நான் கள்ளம் கவடில்லாமல் மனதை விட்டு, சொன்னதை வேஷமென்றும் மோசமென்றும் நினைத்து பிறரிடத்தில் வீண் பெருமை பேசிக் கொண்டிருக்கிறாய். நான் இங்கே வந்தவுடன் பிறகு செட்டியாரைச் சந்தித்து அவரால் விருந்திற்கழைக்கப் பட்டேன். உன்னைக் கண்டு உன் ஸ்வபாவம் ஏதாவது மாறினதா வென்றறிய விரும்பியே அவருடைய வரவேற்பை ஒப்புக் கொண்டேன். கழுதைக்கு உபதேசம் காதிலே சொன்னாலும் அபயக்குரலன்றி அங்கொன்று மில்லையென்பதுபோல் உன் தன் மதிப்பும் கர்வமும் திமிரும் கன்மனமும் குறையவில்லை. ஆகையால் இன்னுமொரு தடவை உனக்கு புத்தி கற்பிக்க வேண்டுமென்று நினைத்தே உன்னுடன் சீட்டாடச் சம்மதித்தேன். என் உத்தேசப்படி இந்தத் தடவை நிறைவேறவில்லை; இனி இந்தத்தொழிலை அற்றறுதியாய் விட்டு ஆத்தூர் கிராமத்தில் நான் வாங்கி யிருக்கும் மாளிகைக்குப்போய் ஸ்வஸ்தமாய் ஸஹவாஸஞ்செய்யத் தீர்மானித்திருக்கிறேன். ஆனால்,அதற்கு முன் இன்னுமொரு சிறிய வேலைத்தனம் செய்து விட்டுப் போக நினைக்கிறேன். அது முடிந்தவுடன் இந்திரஜித் இல்லறத்தைத் துறந்து, துறவறம் பூண்டு, அறத்தையே நம்பிச் சன்மார்க்கத்தில் நடந்து தன்னாலியன்ற லோகோபகாரத்தையும் ஈஸ்வர கைங்கரியத்தையும் செய்வதை உலகத்தார் பார்த்துக் களிப்பார்கள். என்னைக் கண்டு நீ நடுங்காதே. எனக்கு வேண்டியளவு பணத்தை ஸம்பாதித்து விட்டேன். ஆசைக்கோர் அளவில்லை. அகிலமெல்லாம் கட்டி ஆளினும், கடல் மீதிலே, ஆணைசெலவே நினைவர்; அளகேச நிகராகவம்பொன் மிகவைத்த பேரும் நேசித்து ரஸவாத வித்தைக்கு அலைந்திடுவர்; யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும். உள்ளதேபோதும் ஒன்றை விட்டு ஒன்றுபற்றிப் பாசக் கடற்குள்ளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாயென்று தாயுமானவர் சொன்னது உண்மையென்றெண்ணுகிறேன். அதற்கு நீயே சாக்ஷி. மேலும் என்னைப்போல் இன்னும் எவ்வளவோ புத்திமான்கள் என்னுடைய அதிருஷ்டமில்லாமல் உலகத்தில் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்

கிறார்கள். அவர்களுக்கு நான் இடங் கொடுக்க வேண்டியதும் நியாயமே. என் சட்டையும் கைக் குட்டையும் மோதிரமும் கடிதமும் உன்னிடத்தில் இருக்கின்றன. அவைகளுக்கு எவ்வளவு ஆயிரங் கொடுத்தாலும் போதாது. இது வரையில் நம்மிருவருக்கும் நடந்து வந்த லேவா தேவியை நினைத்து நினைத்து, இனி வெகு ஸந்தோஷப்படுவேன். ஒரு சங்கதி மறந்து விட்டேன். நீ எனக்குச் சீட்டாட்டத்தில் 10000 வெள்ளி பாக்கி கொடுக்க வேண்டும். இப்பொழுது அதைப் பெற்றுக் கொள்வதற்கு சௌகரியமில்லாததால் அந்தத் தொகையை உன்னிடத்திலே வைத்து விட்டு அடுத்த வியவஹாரத்தில் வட்டியுடன் சேர்த்து வசூல் செய்து விடுகிறேன்.

இப்படிக்கு,
உன் க்ஷேமத்தைக் கோரும்,
கந்தசாமி பாடகர்.

"பார்த்தாயா? ராமா! இந்தப் பயல் ஜாதித் தொழிலை விடுகிறதில்லையே. இன்னுமொரு தடவை என்னைக் கொள்ளையடிக்கப்போகிறானாம். அப்படித் தான் அது முடிந்த பிறகாவது தொலையப்போகிறானா! அவனுடைய வார்த்தையை தண்ணீரில் எழுத வேண்டியது தான். என்னை அஜாக்கிரதையாய் இருக்கச் செய்வதற்கு இதுவும் ஒரு வேஷமாயிருக்கலா"மென்றார்.

பின்னவர் "ஏனப்படி எண்ண வேண்டும். இது வரையிலும் அவனுக்குத் தெரிந்த வேஷங்களை யெல்லாம் போட்டுப் பார்த்து, ஓய்ந்து போய் உயிரோடிருக்கும் ஆசாமிகளைப் போல் எப்பொழுது ரூபம் தரித்து மோசஞ் செய்ய ஆரம்பித்துவிட்டானோ அப்பொழுதே அவனுடைய வென்னல் ஓய்ந்ததென்று எனக்கு வெட்ட வெளிச்சமாய்த் தெரியுமே. உடம்பெல்லாம் ஒடுங்கிப்போய் உயிர் வாலில் வந்து படபட வென்று அடித்துக் கொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் கொட்டாவி விட்டுவிடு" மென்றார். ஆனால் பிறகு செட்டியார் இதை வெகு அழகாய் எடுத்துச் சொன்னார். "கஷ்டப்பட்டு வேலை செய்வதாலும் நாணயத்தாலும் உலகத்தில் முன்னிற்கு வருகிறானென்பது உபன்யாசங்களிலும் புஸ்தகங்களிலும் நாடகங்களிலுமே சொல்லிக்கொண்டிருக்க வேண்டியது. அநுபவத்தில் பலிக்காது. சீட்டாட்டத்திலும் லோக வ்யவஹாரத்திலும் ஒரே முறை. முதலாவது அதிருஷ்டமிருக்க வேண்டும். இரண்டாவது அப்படியில்லாவிட்டால் அஸஹாய சூரனாய் பகலில் விழித்துக் கொண்டிருக்கும் பொழுதே கண்ணைப்பிடுங்கிக் கொண்டு போகும் திறமையுடன் மோசஞ் செய்ய வேண்டும். மூன்றாவது வழியில்லை யென்றார்.

இந்திரஜித் கட்டுண்டது.

பினங்கிலிருந்து செட்டியார்கள் கப்பலேறி காற்றிலும் மழையிலும் அடிபட்டு சென்னைத் துறைமுகத்தில் வந்திறங்கும் வரையில் தலை தூக்காமல் படுத்திருந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள். பாக்கியத்தம்மாள் தன் கணவனைக் கண்டவுடன் கண்ணீர் உதிர்த்து அழுதாள். ஏதோ தன்னை விட்டுப்பிரிந்த துக்கம் தாங்காமல் மறுபடியும் தன்னைக் கண்டவுடன் வருத்தப்படுகிறாளென்று செட்டியார் களிகூர்ந்து, அவளை ஸமாதானஞ் செய்யப்போனார். அதற்குள் அவள் "ஐயோ இனி நான் என்ன செய்வேன். யாரை நம்புவேன். யார் எனக்கு கதி. எனக்கு இவ்வளவு ஐஸ்வரியமும் அதிகாரமும் இருந்தும் கேவலம் பரதேசியைப்போல் அநாதையாய் என்னை விட்டாயே. என் மனதில் நினைக்கும் எண்ணத்தை வாய்விட்டுச் சொல்லுவதற்கு முன் அறிந்து நடத்தி வைத்த உன்னை விட்டு நான் எப்படி உயிர் தரிப்பேன். 1000 ரூபாய் கொடுத்தாலும் உன்னைப் போன்ற நம்பிக்கையுள்ள பிராணி கிடைக்குமோ. உன்னையே நம்பி யிருந்த என்னை இப்படி நட்டாற்றில் விட்டுப் போகிறாயே யென்று வாய்விட்டழுவதைக்கேட்ட செட்டியார்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இன்னாரைப்பற்றி அப்படி வருத்தப்படுகிறாளென்று கண்டு பிடிக்க முடியாமல் ராமன் செட்டியார் தன் மனைவியை ஜாடையாய்க் கேட்க அவள் "ராணியம்மாள் இனி தான் இங்கு வேலையிலிருப்பதில்லை யென்று நோடீஸ் கொடுத்திருக்கிறாளாம். சம்பளத்தை எவ்வளவு உயர்த்தினாலும் இஷ்டப்பட்ட இனும் கொடுக்கிறேனென்றாலும் வேண்டாமென்று மறுக்கிறாள். வேறு எங்கும் வேலைக்குப் போவதில்லையாம். இனி ஒருவரிடத்தில் வேலை செய்து பிழைக்க வேண்டு மென்ற அவஸ்யம் அவளுக்கில்லையாம். இதற்காக நாலுவாரமாய் அழுகையும் துக்கமும் கூக்குரலுமாய் இரவு பகலாய் இங்கே உத்ஸவம் நடக்கிறதென்றாள். இதன் காரணம் அப்பொழுது எங்களுக்குப் புலப்படவில்லை.

பெரிய செட்டியாருக்கு ஓர் காரண மில்லாதபயமுண்டு. தனக்குகோடிக் கணக்காய் ஐஸ்வர்யமிருந்தும் தான் முடிவில் பரதேசியாய் திக்கற்று தெருவில் கிடந்து பிராணனை விடுவோமென்ற பயம் அவருக்கு உண்டு. இது வெறும் கிலியே தவிர வேறல்ல. இவரைப் போன்ற லக்ஷாதிபதிகளுக்கும் இந்த வியாதி பிடிப்பதுண்டு. அவரைத் தவிர மற்றவர்களுக்கு இது ஸ்வப்னத்திலும் தோராது. செட்டியார் பல வருஷங்களுக்கு முந்தியே இருபது லக்ஷரூபாய்க்கு கவர்ன்மெண்ட் பத்திரங்களை வாங்கிவைத்தார். தன் ரயில்வேகளும் கப்பல்களும் சரக்குகளும் கம்பெனிகளும் மூழ்கிப் போனாலும் இது பிராணாதாரமாய் இருக்கட்டுமென்பதே அவருடைய நோக்கம். மற்றவர்களைப்போல் அதின் வட்டியை வருஷத்திற்கு நாலு தடவை தபாலில் பெற்றுக்கொள்ள அவருக்கு இஷ்டமில்லை. நாட்டுப்

புறத்து மிராசுதாரர்களைப் போல் தானே பாங்கிக்கு நேரில் போய் கையெழுத்திட்டு, பணத்தைப் பெற்றுக் கொள்வது வழக்கம். அங்குள்ள குமாஸ்தாக்களுக்கு இவரை நன்றாய்த் தெரியும். ஒவ்வொரு தவணைத் தேதியில் சூர்யன் உதித்து அஸ்தமிப்பதைப் போல் தவறாமல் அங்கே வருவாரென்று நிச்சயம். ஆகையால் சென்னைக்கு வந்த மறுநாள் "ராமா! பாங்கியிலிருந்து வட்டி இரண்டு தவணை பாக்கியிருக்கிறது. போய் வாங்கப் போகிறே"னென்றார். இருவரும் கவர்ன்மெண்ட் பாங்கிற்குப் போனார்கள். கவர்னரைக் கண்டும் எழுந்திராத அந்த மானேஜர் செட்டியாரைப் பார்த்தவுடன் தன் ஆஸனத்திலிருந்து எழுந்து வந்தனஞ் செய்தார். குமாஸ்தாக்கள் தலையசைத்தார்கள். தவணைவட்டி டிபார்ட்மெண்ட் தலைமை குமாஸ்தா அவரிடத்தில் வழக்கமாய் வந்து, தொகையென்ன வென்று கேட்டான். செட்டியார் வழக்கப்படி 20 லக்ஷமென்றார். குமாஸ்தா கணக்குப் புஸ்தகங்களைப் புரட்டிப் பார்த்து "கொடுத்தாய்விட்டது. செட்டியார்வாள்! இதென்ன தமாஷ். " செட்டியார் "கொடுத்தாய் விட்டதா", வென்று ஆச்சர்யத்தால் திறந்த வாய் மூடாமல் நின்றார். குமாஸ்தா அவரை உற்றுப்பார்த்து, கடுகடுத்த குரலுடன் "செட்டியார்வாள் போன வாரத்தில் இவ்விடத்திலேயே நான் உங்களுக்கு ஒரு தவணை வட்டி கொடுத்ததை மறந்து விட்டீர்களா"வென்றான். செட்டியார் பித்துப்பிடித்தவரை போல் அவனை ஏற இறங்கப் பார்த்து "ரசீதைக் காட்டு"மென்றார். ஏதோ வேலைத்தனம் நடந்து விட்டதென்று அவருக்குப்பட்டது. குமாஸ்தா ரசீது புஸ்தகத்தை எடுத்துக் கொடுக்க செட்டியார் கையெழுத்தை கவனித்துப் பார்த்து,

"ஐயையோ குடிகெட்டதே. மாயாவி ராமா? அந்தப்பயல் முடிவில் என்னைப் போல் வேஷமெடுத்து நான் பிராணாதாரமாய் வைத்துக்கொண்டிருந்த இதையும் கையாடிவிட்டான். ஏது இனி நான் எந்தச் சாவடியிலோ மடத்திலோ ஆற்றங்கரையிலோ அநாதைப் பிரேதமாய்க் கிடக்கப் போகிறே"னென்றார். சின்னவர் திடீரென்று விழித்துக் கொண்டு, "ஆஹா மோசம்போனேனே! கப்பல்யாத்திரைசெய்தபொழுது டாக்டருடைய மனைவி அடிக்கடி உன்னைப்போல் படமெழுதினதின் கருத்து இப்பொழுதல்லவா விளங்குகிறது. உன் அங்க அடையாளங்களை நன்றாய்க் கவனித்து உன்னைப்போல் ரூபமெடுத்து, இப்படிக் கொள்ளையடிப்பதற் கல்லவா"வென்றார். பெரியவர் கைகால் விலவிலக்க குமாஸ்தாவைப் பார்த்து, 'கடைசித் தவணைவட்டியோ" வென்றார். "ஜுலைமாதம் 10-ம்தேதி செலுத்தப்பட்டது பாருமென்று அந்தப் பதிவைக் காட்டினான் குமாஸ்தா. பினங்கிலிருந்து மாயாவி சென்னைக்கு ஏதோ ஒரு காரியமாய்ப் போயிருந்ததை கடைசி கடிதத்தில் கண்டிருந்ததின் தாத்பர்யம் இப்பொழுது புலப்பட்டது. செட்டியார் தள்ளாடிக் கொண்டு, "ராமா என்னை எப்படியாவது வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேரு. என் குழந்தைகள் உண்ணச் சோறு இல்லாமல்

உடுத்தத் துணியில்லாமல் மூலைக்கு மூலை பிச்சை எடுக்கப் போகிறார்கள். என் வாயில் மண் விழுந்தது. 50 லக்ஷமாவது மீளுமென்று நம்பிக்கையில்லை அந்தத் தீவட்டிக் கொள்ளைக்காரன் விட்டாலல்லவா"வென்றார். பாக்கியத்தம்மாளின் பெயரால் 1500000 ரூபாய் பெறுமான சொத்து எழுதி வைத்திருக்கும் பொழுது குழந்தைகள் தெருவில் பிச்சைவாங்கும் கதி எப்படி நேருமோ தெரியவில்லை. ஆயினும் செட்டியாருடைய விசித்திரமான கல்பனைகளில் இது ஒன்று.

வழக்கப்படி போலீஸில் தெரிவித்து, தடபுடல் நடந்தது. வழக்கப்படி அசாமி மாயமாய் மறைந்தான். பாங்கியில் ஒரு தடவை கொடுக்கப்பட்ட பணம் எவ்விதமாயாவது தவறிப்போனால் அதற்காக பாங்கி ஜவாப்தாரியல்ல. அந்த நஷ்டத்தை கக்ஷிக்காரர்களே பொருத்துக் கொள்ள வேண்டும். மறுபடியும் அந்தத் தொகை கொடுக்கப்படாது. இந்த விதி இப்பொழுது செட்டியாருக்கு வெகு அக்கிரமமாயும் கொடுமையாயும் தோன்றிற்று. அவர் அப்பொழுதிருந்த நிலைமையை மாயாவி பார்த்திருந்தால் அவனுடைய கல்மனதும் உருகியிருக்கும்.

மறுநாள் அவர் சற்றுத் தைரியங்கொண்டு வீட்டிலிருப்பவர்களுடன் பேச ஆரம்பித்தார். "ராமா குற்றவாளிகளை அளப்பதற்கும் நிறுப்பதற்கும் யாரோ ஓர்புதிய முறைகண்டு பிடித்திருப்பதாய் சமாசாரப் பத்திரிகையில் படித்த ஞாபக"மென்றார். சின்னவர் "ஆம். வங்காளத்தில் மோஹன போஸ் என்பவர் அதைக்கண்டு பிடித்தாரென்று கேள்வி ஆனால் நமக்கென்னப் பிரயோஜனம். அசாமியை பிடித்தல்லவா நிறுக்கவேண்டும். தலையில் என்னைப் போட்டுக் கொண்டு சனுக்கண்ட பிருஹ்மசாரியைப் போல் இந்திரஜித்தைப் பிடித்ததாய் ஸ்வப்னம், கண்டு மேல் கட்டடம் கட்டுவதில் லாபமென்ன"வென்றார். செட்டியார் அவரைத் தடுத்து; "அது யாருடைய குற்றம். பேர்வழி கையில் அகப்பட்ட பொழுது அவனுடைய சிண்டைப்பிடித்துக் கொள்ள முடியாமல் தவறவிட்ட பேர்வழி நியா நானா?" வென்று குத்திக் காட்டினார்.

சின்னவர் அதைக் கவனிக்காததுபோல் அப்படி அவனைப் பிடித்ததாய் வைத்துக் கொள்வோம். அவனுடைய மூக்குக் கன்னம் காது நெற்றி முதலியவைகளை வெகு ஜாக்கிரதையாய் அளப்பதாய் வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு தடவையும் இவைகளை முற்றிலும் மாற்றி எல்லோரையும் ஏமாற்றும் திறமையை உடைய அவனிடத்தில் எந்த முறையும் பலிக்காது. வேறு ஏதாவது யுக்தி சொல்"லென்றார்.

பெரியவர் "அது போகட்டும். அந்த வங்காளிப்பண்டிதரின் சிஷ்யர் யாரோ ஒருவர் சென்னைக்கு சில தினங்களுக்குமுன் வந்திருப்பதாய்க் கேள்வி. அவரிடத்தில் போகட்டுமா அல்லது அவரையே இங்கே நாளை போஜனத்திற்கு அழைக்கிறே"னென்றார்.

சின்னவர் "அவரைப்பற்றி உனக்கு யார் சொன்னது? சாமியாரா? பண்டிதரா? பாடகரா?" வென்றார். செட்டியார் சற்று யோசித்து, "அதெல்லாமில்லை. பினாங்கு செட்டியா"ரென்றார். "அப்படி யானால் சரி ஏதோ ஒரு ஆசை பார்ப்போ"மென்றார் சின்னவர்.

அப்படியே அவருக்குக் கடிதமெழுதி மறுநாள் இராத்திரி போஜனத்திற்கு வரும்படி கடிதமனுப்பினார்கள். அவரும் வந்தார். அதிக உயரம் பருமனில்லாமல் கூர்மையான கண்களுடன் அடர்ந்த புருவத்தால் அவைகளை மூடிக்கொண்டு, யாரையும் யாவற்றையும் துளைப்பவரைப் போல் பார்த்துக்கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் தெய்வமே உருவமெடுத்ததுபோல் தோன்றினார். அவரைப் பார்த்தவுடன் செட்டியார்களுக்கு ஸந்தேஹமும் திகிலும் பிடித்தது. முன்பு இப்படியே இந்திரஜித்தைக் கண்டுபிடிக்க கோவிந்தப்பரென்ற கைகாரனை வருவித்து, மோசம் போனது ஞாபகத்திற்கு வந்தது. அந்த மாயாவீ ஒரு வேளை செட்டியாரின் உத்தேசத்தை எப்படியோ அறிந்து இந்த வேஷத்தை எடுத்து வந்திருந்தாலாகாதோ. வந்த பேர் வழியோ ஒருவரையும் லக்ஷ்யஞ் செய்யாமல் 10 வார்த்தைக்கு ஒரு வார்த்தை பதில் சொல்லி, "குற்றவாளியைப் பிடித்தாலொழிய இந்தப்புது முறையைச் செய்து பார்ப்பது முடியாத கார்யம். ஆனால் இதற்கு முந்தியே நீங்கள் என்னை யோசனை கேட்டிருந்தால் இவ்வளவு கஷ்டங்கள் உங்களுக்கு நேர்ந்திருக்காது. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அவன் ஸாமான்யனல்ல. இந்தப் புதுமுறை அவனுக்குத் தெரியாமலிருக்குமா? இதற்கும் அகப்படாமல் தப்பித்துக் கொள்ள எல்லா பந்தோபஸ்தும் செய்திருப்பானென்பதில் தடையில்லை. ஆகையால் அவனுடைய மூக்கு கன்னம் மோவாய்க்கட்டை மீசைமயிர் முதலிய அங்கங்களைக் கவனிக்கவேண்டாம்; அவை யாவையும் நினைத்தபடி மாற்றலாம். ஆனால் உயரம் தலை கழுத்து பருமன் விரல்கள் முதலியவைகளின் அமைப்பு விழியின் நிறம் குரலின் ஓசை முதலிய சில அம்சங்களை மாற்றுவது அவ்வளவு ஸுலபமல்ல. ஏன் நல்ல வேலைக்காரனுக்கு இவைகளை மறைப்பதும் மாற்றுவதும் கஷ்டமல்ல. தலைமயிரை வைத்துக் கொள்ளும் விதத்தாலும் சட்டையில் பஞ்சு வைத்துத்தெய்ப்பதாலும் கழுத்தில் காலர்களைப் பலவிதமாய்த் தரிப்பதாலும் கண் மயிர்நக்கடியில் மெல்லிய கோடாய் வர்ணம் கொடுப்பதாலும் முகச்சாயலை முற்றிலும் மாற்றிவிடலாம். மேலும் குரலை மாற்றுவதற்குப் பல உபாயங்களுண்டு. சில மருந்துகளைத் தின்பதாலும் வெளியில் பூசுவதாலும் வாயில் சில சாமான்களை அடக்கிக் கொள்வதாலும் குரலைப் பலவிதமாய் மாற்றிக்காட்டமுடியும். அவன் ஒவ்வொரு தடவை போட்ட வேஷம் வெவ்வேறு குரலுடன் பேசவேண்டியிருந்ததென்று சொன்னீர்களல்லவா?" வென்றார்.

செட்டியார் "ஆம். சாமியாராய் வந்தபொழுது ஆண்டித் தமிழ் பேசினான் வாத்தியாராய் வந்தபொழுது செந்தமிழ் பேசினான். காசி சாதாரவாய்

வந்தபொழுது தஞ்சாவூர் மராட்டியினுடைய தமிழ் பேசினன். நவர்பாய்த் தோன்றின பொழுது தலுக்கத்தெலுங்கு பேசினன். பண்டிதராய் வேஷம் பூண்ட பொழுது வங்காளி கலந்த தெலுங்கு பேசினன். வைத்யனாய் வெளிப்பட்டபொழுது வாகடத் தமிழ் பேசினன். பாடகனாய் கடைசியில் தர்சனங்கொடுத்த பொழுது பட்டணத்து முதலியாரைப்போல் பேசினன். "பார்த்தீர்களா? நாம் சொன்னது ருஜுவாயிற்று. இப்பொழுது ஒரு விஷயம் உங்களைக் கேட்கிறன். மாயாவி யென்பது ஒருவனா அல்லது ஒரு கூட்டமா? இந்திரஜித் என்றால் தனிப்பெயரா பொதுப்பெயரா. அவனுடைய அந்தந்த வேஷங்களின் உருவப்படங்கள் உங்களிடத்தில் இருக்கின்றனவா" வென்றான்.

செட்டியார். "அந்த விஷயத்தில் மோசம் போய்விட்டோம். கோவிந்தய்யராய வந்தபொழுது சில படங்களைக் கொண்டு வந்து காட்டினன். ஆனால் அவைகளில் ஒன்றையாவது எங்களிடத்தில் கொடுக்கவில்லை."

போஸ் "படம் பிடித்தவனுடைய பெயரும் விலாஸமுமாவது தெரியுமா? இப்பொழுது எங்கேயாவது கிடைக்குமா?"

செட்டியார் "அது இப்பொழுது ஸாத்யமல்ல. ஆனால் சாமியாராய் வந்தபொழுது போலீஸார் ஏதோ இரண்டு படங்களை எங்களுக்குக் காட்டினார்கள். ஒரு வேளை அவர்களுக்கு எழுதிக்கேட்டால் இரவல் கொடுக்கலாம்."

போஸ் "அவை வரும் வரையில் ஒன்றும் செய்யமுடியாது. உண்மையான பேர் வழியின் தனித்தனியான இரண்டு படங்கள் எனக்குக் கிடைத்தால் அவை எவ்வளவு வேஷம் மாறியிருந்தாலும் ஒரே அசாமியைப்பார்த்து எடுக்கப்பட்டனவா இல்லையா வென்று சொல்லி விடுவேன். பிறகு பொதுவான சில விஷயங்களைக் கண்டுபிடித்து, அவைகளிலிருந்து அந்த லோக வஞ்சகனைக் கண்டுபிடிக்க உபாயஞ் செய்யலா"மென்றார்.

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது பாக்கியத்தின் அண்ணன் மகள் கூட விருந்தாள். வரவர அவளுடைய முகம் வெளுத்தது; ஏதோ மனதில் கலவர முண்டாய் அதினால் கஷ்டப்படுவதாய்த் தோன்றிற்று. சின்னவர் அதைக் கவனித்து அருண்டவன் கண்ணிற்கு இருண்டதெல்லாம் பேயென்ற பழமொழிப் படி ஒரு வேளை இந்திரஜித்தே அவளைப் போல் வேஷம் பூண்டு வீட்டில் வந்து என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டிருக்கிறானோ வென்றும் தன்னை பற்றி செய்யப் படும் ஏற்பாடுகளைக் கண்டு பயந்தானோ வென்றும் ஸந்தேஹப்பட ஆரம்பித்தார். ஆனால் அடுத்த நிமிஷத்தில் அப்படி பயந்ததிற்காக வெட்கப்பட்டு இந்திரஜித்தின் கூட்டாளியாய் ஒரு வேளை யிருக்கலாமென்று மாற்றிக் கொண்டார். சிற்று நேரம் கழித்து அந்த எண்ணமும் போய் பாக்கியத்தின் அண்ணன் மகளே யென்று பயந்தீர்ந்து அவளிடத்தில் எப்பொழுதும் போல் பேசினார்.

அவள் அவரைத் தனியே ஓர் அறையில் அழைத்துக் கொண்டு போய் வெட்கத்தால் தலை குனிந்து, மாமா! என்னிடத்தில் கோபித்துக் கொள்ளாமலிருந்தால் ஒரு சங்கதி சொல்வேன். அது உங்களுக்கு இப்பொழுது உபயோகமா யிருக்கு மென்று நம்புகிறே னென்றாள்.

சின்னவர் "அப்படியா? உன்னிடத்தில் நான் எப்பொழுதாவது கோபித்துக் கொள்வதுண்டா? மேலும் எங்களுக்கு உபயோகமா யிருக்கு மென்று நீ எண்ணும் விஷயத்தைச் செய்வதில் எனக்கு ஸந்தோஷமே யல்லாது வேறென்ன. தாராளமாய்ச் சொல்" லென்றார்.

அதைக் கேட்டவுடன் அவளுக்குப் பயம் தீர்ந்து, தைர்ய மடைந்து "இந்திரஜித்தின் உருவப் படங்கள் என்னிடத்தில் நாலைந்து கிடைத்திருக்கின்றன" வென்றாள்.

செட்டியார் "இந்திரஜித்தா? உருவப்படமா? உன்னிடத்திலா? எப்படி கிடைத்தன வென்று ஆச்சர்யத்தால் திறந்த வாய் மூடாமல் ஈ புகுந்த படி நின்றார்.

அந்தப் பெண் "ஆம் அவைகளை நானே பிடித்தேன். எப்படி யென்று சொல்ல பயமா யிருக்கிறது. கோபித்துக் கொள்ள மாட்டீர்களே" யென்றாள்.

சின்னவர் "கோபமா? நன்றாயிருக்கிறது. தலை போனாலும் கோபித்துக் கொள்வேனா? அதுவும் உன்னிடத்தில் கோபம் யாருக்காவது வருமா? வென்றார்.

அப்பொழுதும் அந்தப் பெண் ஸந்தேஹப்பட்டு, "அத்தையிடத்திலாவது மாமியிடத்திலாவது சொல்லுவதில்லை யென்று உறுதி செய்தாலொழிய நான் வாயைத் திறக்க மாட்டே" னென்றாள்.

சின்னவர் "நல்ல கார்யம் செய்தாய். போயும் போயும் நீ பரம ரஹஸ்யமாய் என்னை நம்பிச் சொல்வதை நான் மெனக்கிட்டு பாக்யத்தினிடத்திலும் வேறொருவரிடத்திலும் சொல்லுவேனா? அவ்வளவு மடையனாய் என்னை எண்ணி விட்டாயா? தலையோடு தலை போனாலும் என்னை விட்டு இந்த வார்த்தை அப்புறம் போகாது. பயப்படாமல் சொல்" லென்றார்.

இவ்வளவு உறுதி சொன்னதின் மேல் அந்தப் பெண் தழ தழுத்த குரலுடன் "முன் தடவை அந்த மாயாவி இங்கே காசிநாத ராவைப் போல் வேஷம் பூண்டு வந்திருந்தானல்லவா? அந்த ஸமயத்தில் அவனும் அத்தையும் உட்கார்ந்திருக்கையில் அவர்களுக்குத் தெரியாமல் ஓர் மறைவி லிருந்து ஒரு படம் பிடித்தேன். அதற்காக என்னிடத்தில் கோபித்துக் கொள்ள மாட்டீர்களல்லவா" வென்றாள்.

சின்னவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. இப்படிச் செய்வதினால் என்ன கெடுதி காசிநாதரும் பாக்கியமும் லோகாபிராமமாய் பேசிக் கொண்டிருப்பதில் தவறென்ன. அப்பொழுது அவர்களைப் படம் பிடிப்பதால் யாருக்கென்ன நஷ்டமென்றார்.

பெரிய செட்டியார் இதை ஒரு பிரமாதமாய் எண்ணிக் கொண்டு கோபிப்பாரென்று ஒரு மடையனும் நினைக்க மாட்டான்.

அந்தப் பெண் இன்னும் அதிகமாய் வெட்கப் பட்டு, "மேதி வித்யானந்தத்தை உங்களுக்குத் தெரியுமல்லவா? படம் பிடிப்பதில் அவனுக்கு மிகுந்த பைத்தியம். அதைப் பற்றி என்னிடத்தில் பேசுவதற்காக அடிக்கடி வருவதுண்டு. ஏதோ ஓர் புது முறையை கண்டு பிடித்திருக்கிறானாம். அதனால் அசாமியின் உண்மையான உருவம் வெளிப்படுமாம்; ஆனால் அது தொழிலுக்குக் கொஞ்சங் கூட உபயோகப்படாதாம். அவ்விதமாய் தயார் செய்யப்பட்ட 5, 6, கண்ணாடிகளை எனக்குக் கொடுத்தான். அவைகளை வைத்துக் கொண்டு நான் அத்தையைப் பார்த்து, படம் பிடித்தேனென்றாள்.

சின்னவர் "எனக்கு இன்னும் சங்கதி விளங்கவில்லை. என்ன குடி முழுகிப் போயிற்று"

அந்தப் பெண் "என்ன மாமா! இதை விட அதிகமாய்ச் சொல்ல வேண்டுமா. இது அத்தையின் காதில் விழுந்தால் என்னை என்ன பண்ணுவாள் தெரியுமா? இதைவிட இன்னும் பச்சையாய் எப்படிச் சொல்லமுடியும். சாயமும் பவுடரும் அதைப் போன்ற வேறு சில சாமான்களும் ஸ்திரீகளுக்கு மிகவும் உபயோகமுள்ளவை யென்று உங்களுக்குத் தெரியாது போலும்".

சின்னவர் "அப்படியா? அவை தடவின இடங்கள் படத்தில் நன்றாய் எடுத்துக் காட்டப் படுகின்றனவோ"

அந்தப் பெண் "நன்றாயா நல்ல வேலை செய்தீர் அத்தையின் முகத்தைப் பார்த்தாலல்லவா தெரியும். சோளக் கொல்லையில் கழியின் மேல் வைத்திருக்கும் பானையில கரும் புள்ளி செம்புள்ளி குத்தினது போலிருக்கிறது. என்ன வேஷம் என்ன வேஷமென்று அடக்க முடியாமல் கை கொட்டிச் சிரித்தாள்.

"சின்னவர் அந்தப் படங்களில் மாயாவியும் பிடிக்கப் பட்டிருக்கிறானே'.

பெண்கள் பகுதி.

ஸ்ரீமதி காந்திமதி எழுதியது.

கோபமற்ற மனைவி.

அமெரிக்கா தேசத்தில் பர்குஸன் என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு மனைவியுண்டு. அம்மனைவிக்கு எப்போதும் கோபமே வருகிறதில்லையாம். இருவருக்கும் கலியாணமாய் வெகு வருஷங்களாயும் புருஷனிடத்தில் எக்காரணத்தைக் கொண்டும் அவள் கோபமுகம் காட்டினதேயில்லை. தன் மனைவியைக் குறித்து பேச்சு வந்த விடத்தில் அவளை ஒரு நாளும் கோபமூட்ட முடியாதென்று புகழ்ந்து பேசிக் கொள்ளுவான். தன் பெண்சாதிக்கு எப்படியாவது முகம் கோணுமா அல்லது எரிந்து விழுவாளா வென்று தனக்குண்டான ஒரு சந்தேகத்தை நிவர்த்தி பண்ணிக் கொள்ளவாவது பலவிதமாய் முயற்சி செய்து பார்த்தும் முடியவில்லை.

எவ்வளவுக் கெவ்வளவு பர்குஸன் கோபம் வரும்படியாய் நடந்து கொள்வானோ அவ்வளவுக் கவ்வளவு அவன் மனைவிக்கு கணவனிடத்தில் மாறாத அன்பும் ஆசையும் அதிகரித்ததென்று நினைக்கும்படியாய் நடந்து கொள்ளுவாள். இப்படி யிருக்கையில், ஒரு நாள் பர்குஸன் தன் சிநேகிதன் ஒருவனோடு தன் மனைவிக்கு கோபமே வருகிறதில்லை யென்றும் தான் பலவிதமாய் அவளைக் கோபமூட்டப் பார்த்தும் முடியவில்லை யென்றும் பேசிக்கொண்டான். அப்போது தன் சிநேகிதன் "நீ வீட்டுக்குப் போகும் போது பூரணமாய்க் குடித்து விட்டுப்போய் கோவென்று அலறி, மேஜையிலிருக்கும் கலம் கிண்ணிகளெல்லாம் கீழே விழுந்துடையும்படியாய் மேஜைத்துணியைப் பிடித்திழு. அவள் கோபித்துக் கொள்ளாமற் போனால் உனக்கு ஐம்பது பவுன் கொடுக்கிறேன்" என்று பந்தயம் போட்டுக்கொண்டான். அதற்கு பர்குஸன் "என்

சிநேகிதன் பணத்தில் ஐம்பது பவுனைப் பிடுங்கிக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை" நான் தான் ஜெயிப்பேன் என்றான்.

ஆகிலும் சிநேகிதன் பிடிவாதமாய் பந்தயம் போட்டே தீர்த்தான். பர்குஸன் வீட்டு வாசலில் சிநேகிதன் ஒளித்திருந்து பர்குஸனும் மனைவியும் சண்டை போட்டுக் கொள்ளுகிறதை சன்னல் வழியாய்ப் பார்த்திருந்தான். பர்குஸன் அன்றைக்கு நாழி கழித்து வீட்டுக்கு வந்தான். வரும்போதே குடித்து வெறி கொண்டவன் போல பாசாங்கு செய்து தள்ளாடித் தத்தளித்துக் கொண்டு வந்தான். மனைவியோ புருஷன் வருகிறதைப் பார்த்து வாசலண்டை வந்து நின்று அவனைப்பிடித்துக்கொண்டு மெதுவாய் அழைத்துக் கொண்டு போனாள். போகும் போதே பர்குஸன் சட்டென்று தரையில் உட்கார்ந்து என்னடி மூதேவி, நானுட்கார்ந்திருந்த நாற்காலியைப் பிடித்திழுத்து என்னைக் கீழே விழித்தினையென்ன? ஆ அப்படியா, உங்களுக்கு எங்கேயாவது அடிபட்டுவிட்டதோ, நான் செய்தது தப்பிதம், இனி செய்கிறதில்லை யென்று சொல்லி கையைப் பிடித்துத் தூக்கிவிட்டு உட்காரவைத்தாள். பிறகு பர்குஸன் அங்கிருந்த ஒரு சிறு கட்டிலில் உட்கார்ந்து மெதுவாய் அதிலிருந்து நழுவிக் கீழே தொப்பென்று குதித்து வெறித்தவன் போலவே விழுந்தான். விழுந்து கட்டிலின் மற்றொரு கோடியைப் பிடித்துத் தூக்கி "என்னைக் கீழே தள்ளினையா" வென்று வாய்க்கு வந்த படியெல்லாம் திட்டிக் கூச்சலிட்டுக் திருடன் போலத் திட்டினான். அதை யெல்லாம் அவன் மனைவி சாந்தமாய்ப் பொறுத்துக் கொண்டு மெதுவாய் தன் கணவனைப் பிடித்துத் தூக்கி விட்டு சாப்பிடும் மேஜை யண்டை அழைத்துக் கொண்டு போய் நாற்காலியில் உட்காரவைத்தாள். அப்பொழுது ஒரு தட்டை யெடுத்து அவள் பேரில் எறிந்தான். அதை அவள் கண்டு கொள்ளாதவள் போல் "உங்களுக்கு என்ன வேண்டும் காப்பி அல்லது டீ கொண்டு வரலாமா" என்று அன்பாய்க் கேட்டாள். பிறகு அந்த குடியனாகிய மிருகம் மேஜை மேல் மூடியிருந்த துணியைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளிவிட்டு அந்தத் துணி மேலிருந்த கிண்ணம் முதலான சாப்பாட்டு சாமான்களை யெல்லாம் தரையில் விழுத்தி உடைத்து விட்டான். அப்பொழுது அந்த உத்தம ஸ்திரீ என்ன செய்தாள்? அவள் முணுமுணுத்துக் கொண்டு 'நான் என் தாய் வீட்டுக்குப் போய் விடுகிறேன்' என்று சொல்லி யிருப்பாளா? அல்லது பெண்களைப்

போல, மூலையில் உட்கார்ந்து கொண்டு விம்மி, விம்மி அழுதாளென்று தான் நினைக்கிறீர்களா? அப்படி யொன்றும் செய்யாமல் புன் சிரிப்போடு "பர்குஸன் (அந்த ஜாதியாருள் ஸ்திரீ தன் புருஷனைப் பேர் சொல்லிக் கூப்பிடுவது வழக்கம்) இதென்ன புது மாதிரியாயிருக்கிறதே அல்லவா? நமக்குக் கலியாணமாய் பத்து வருஷமாயும் இதுவரையில் நாம் தரையில் கலம் கிண்ணி வைத்துக் கொண்டு சாப்பிட்டதில்லை!" என்று சொன்னாளே தவிர கோபங் கொள்ளவே யில்லை. கீழே விழுந்தவைகளைப் பொருக்கி மேஜை மேல் வைக்காமல், அங்கேயே உட்கார்ந்து அவைகளை நன்றாய் அடுக்கி, தன் கணவனுக்குக் கீழே உட்கார்ந்து சாப்பிட இஷ்டமாக்கு மென்று எல்லாம் பரிமாற ஆரம்பித்தாள். இதைப் பார்த்து பர்குஸனுக்கு இனிமேல் இவளைப் பரிக்ஷிப்பது சரியல்லவென்று தோன்றி "பண்ணினதெல்லாம் வேடிக்கைக்காக உன் பொன் போன்ற குணத்தைப் பரிக்ஷித்தேன்" என்று ஒப்புக் கொண்டான். தான்பந்தயம் கெலித்ததனால் வந்த ஐம்பது பவுனையும் அவளுக்குப் புதிதாய் ஒரு தொப்பி வாங்கிக் கொள்ளச் சொல்லிக் கொடுத்தான். அவள் அதை வாங்கி தன் புருஷனுக்குப் புதிதாய் ஒரு ஜோடி உடுப்பும் நல்ல சுருட்டாய் ஒரு கட்டு சுருட்டும் வாங்கிக் கொடுத்தாள்.

அடுத்த சஞ்சிகையில்

மனைவி தன் கணவனிடத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகள்—பிரசுரிக்கப்படும்.

குறிப்பு:—பிரதி மாதமும் பெண்கள் பகுதி, பாலர் பகுதி, சுகாதாரம், வியாபாரம், தமிழ் ஆராய்ச்சி முதலியவைகளோடு அதிகப் பக்கங்கொண்டதாய் வெளிவரும்.

மானேஜர்,
சுதேசமித்திரன்.

பால பார்யையும் கிழக்கணவனும்.

நாராயண சாஸ்திரி:— என்னடி என்னைப் பார்க்கவந்த பெரியமனிதர் மேல் சாணத்தின் ஜலத்தை அவ்விதம் கொட்டினாய்? ஏதாவது சொன்னால் பிரம்ம ராக்ஷஸியைப் போல மேல் விழுந்தடிக்கிறாய், ஐயோ! அடிபடவா உன்னை விவாகம் செய்து கொண்டேன். அந்தப் பெரிய மனிதருக்கு எவ்வளவோ நல்லவார்த்தைகளால் சமாதானம் சொல்லி நான் அனுப்பப்பட்டபாடு ஜென்ம ஜென்மத்துக்குப் போதும்.

நூபாவதி:— வாசலில் பெரியமனிதர் வந்திருக்கிறாரென முன்னதாகவே சொல்லியழ முடியாமற் போய்விட்டதா? நீங்கள் ஒருவரே இருக்கிறீர்களென எண்ணி சுவற்றின் மறைவிலிருந்து சடக்கென ஊற்றினேன்.

நா—சாஸ்திரி:— அந்த அபிஷேகம் எனக்கு மாத்திரம் வேண்டும் போலும், காலையில் ஸ்நானம் செய்து நீர்க்காவி வேஷ்டிகட்டிக்கொண்டேன் அந்த வேஷ்டி யெல்லாம் வீணாயிற்று.

நூபாவதி:— போதும் போதும்! அந்த மட்டும்! எப்போது பார்த்தாலும் என்னை அதட்டி அழச் செய்வதே உங்களுக்கு ஸதா வேலையாய் விட்டது என் தங்கையைக் கொடுத்து விவாகம் செய்த அந்தக் கிழப்பிராமணனுக்கே என்னையும் கொடுத்திருந்தால், நான் எவ்வளவோ சுகப்பட்டிருப்பேன். அவள் அப்பொழுதே—நான்கு வருஷங்களுக்கு முன்பே—விதவையாகி சுகமாக இருக்கிறாள். என்னைவிட மூன்று வயது சின்னவள். என்னை முதன்முதல் அந்தப் பிராமணனுக்கே கொடுப்பதாய் என் தகப்பனார் சொன்னார். எமகிங்கரன் போல் நீர் மத்தியில் வந்து, நூறு ரூபாய் அதிகம் தருகிறேன் என்றதினால், நாசமாய்ப் போன என் அப்பன் மாம்ஸவிக்கிரயம் போல என்னை உமக்குக் கலியாணம் பண்ணித் தொலைத்தான். நீர் மாத்திரம் என் தங்கை புருஷனைவிடப் பாலியமா? உமக்கு ஆயுள் கெட்டியாயிருக்கிறது. அவள் மகாராஜியாய் (!) தலைமுழுக்க மூக்காழிட்டு (!) முயேச்சையாயிருக்க, நான் உம்முடன் தொல்லைப்பட்டுக் கொண்டு கிடக்க பாழும் பிரம்மன் என் தலையில் எழுதினான்.

நா—சாஸ்திரி:— என்னடி என்னை சாகச் சொல்கிறாயா?

நூபாவதி:— நான் ஏன் உங்களைச் சாகச் சொல்லுகிறேன். என் எண்ணமெல்லாம் பின்னமாகி, என் ஆசை யெல்லாம் வீண் ஓசையாகி, என் வாழ்வெல்லாம் தாழ்வாகி, என் கோலமெல்லாம் அலங்கோலமாகி, என் விருப்பத்திற்கு மாறாக கிழப்பூதமான உம்மைக் கணவனாயடைந்து, இந்த அருவெறுப்பான வாழ்க்கை வாழ்வதைவிட ஒன்று மடியவோ, அல்லது மாங்கல்ய மிழக்கவோ காலம் குறுக்கிடுமானால் கன சந்தோஷமாகிட நாளை எண்ணிக்கொண்டு நிற்கிறேன். உங்களைச் சாகச் சொல்லவில்லை. எப்போதும் பெண்டாட்டியை அழச் செய்துகொண்டு, இன்னும் வருஷத்திற்கு ஒரு சிறுமியாகக் கட்டிக்கொண்டு அவள் பிராணனுக்கும் உலைவைத்துக் கொண்டு ஆயிரவருஷகாலம் இருங்களேன். நான் விதவையாக வேண்டுமென்றேனே தவிர உங்களைச்சாகச் சொல்லவில்லை. அவ்விதம் சொல்ல வைதீகர் வீட்டில் பிறந்த எனக்கு புத்தியில்லாமலா போய்விட்டது.

நா—சாஸ்திரி:— நீ மிக்க விவேகமுடையவள்தான். நீ விதவையாக வேண்டுமென்றால் நான் சாவது என்று அர்த்தமா அல்லவா?

நூபாவதி:— அந்த வார்த்தை நான் ஏன் சொல்லுகிறேன். நீங்கள் பண்டிதர் எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் செய்துகொள்ளுங்கள். உங்கள் வாக்காகிலும் பலிக்கட்டும்.

நா—சாஸ்திரி:— என்னை நீ தூக்கிக்கொண்டு அலைவது என்ன?

நான் உன்னைக் கண்டிக்கிறேனா தண்டிக்கிறேனா? உனக்குக் குழந்தை குட்டி இல்லாததால், என்னை அடித்துவைது குழந்தையின் ஆவலெல்லாம் தீர்த்துக் கொள்கிறாய். போகட்டும் வயதானவன் என்று வேளா வேளையில் இத்தனை சாதம் மட்டும் போட்டுவிட்டால் போதும்.

நூபாவதி:— பாழும் பிராமணா! என்னை விவாகம் செய்து கொண்டு நீ சுகப்பட்டதென்ன! உன்னை நான் விவாகம் செய்து கொண்டு சுகப்பட்டதென்ன? ஒரு பாடுமில்லையே. இந்தச் சாப்பாட்டுக்காகவா உயிருடன் ஒரு பெண் கொலையைச் செய்வது போல் என்னை மணந்து என் வாழ்வை—ஜீவியத்தைப் பாழ்படுத்த வேண்டும்? ஏனோ இந்த வயோதிகத்தில் இந்த ஹீன புத்தி. சொத்திருந்து என்ன செய்ய? என்னுடன் பள்ளியிற் படித்த பெண்கள் தங்கள் வயதை யொத்தகணவர்களை மணந்து உலக இன்பங்களை அனுபவித்துக்கொண்டு மகாலக்ஷ்மியைப் போல் விளங்குகிறார்கள். உம்மை யொத்த விருத்தாப்பிய மாப்பிள்ளைகள் புறப்படாவிட்டால் எங்களின் ஜீவியகாலம் எத்தனையோ இன்ப ஊற்றாக விளங்கிடுமோ! ஐயோ என் வாழ்வையும் ஜெயத்தையும் கெடுத்தாயே பாவி. (என்று அழுதுகொண்டே வீட்டிற்குட் செல்கிறாள்.)

நா—சாஸ்திரி:— ஐயோ பாவம்! அழுது கொண்டு உள்ளே செல்கிறாள். மிக்க உத்தமி. மகாபதிவிரதை கிழவனாகிய என்னை மணந்து ஒரு

சுகமும் அடையாவிட்டாலும் கற்புலக்ஷணத்தில் உன்னதம் கொண்டவள். பிறரை ஏறிட்டுப் பாரான். தினமும் ஆலயஞ்சென்று அம்பிகையை வழிப்பட்டு அங்கிருந்து அழுத முதுசோர்ந்து, கண்களெல்லாம் சிவந்து இல்லம் திரும்புகிறாள். ஐயோ இந்தப் பெண்பாவத்தை எந்த ஜென்மத்தில் அழுது தொலைப்பேனோ? கடைசிகாலத்தில் கண்மூடும் வேளையில் பூத்தில் ஒருத்தி தர்மபத்தினியாகத் துணைக்கு இருக்க வேண்டுமென்ற பாழும் ஆசையால் இந்தப் பாதகமான செயலுக்கு உட்பட்டுப் போனேன். என்னையொத்த கிழவர்கள் ஏன் விவாகத்திற்கு ஆசைப்படுகிறார்களோ? உயிரோடு வதைக்கிற பெண்கொலையல்லவா இது? தன் மீறிய ஆத்திரத்தில் என்னை எவ்வளவு திட்டி அடித்த போதிலும், மறுபடியும் அழுத கண்ணீரோடும் என் முன்பு தோன்றி, என் மடியில் குழந்தைபோன்றும் படுத்துத் தூங்கி விடுகிறாள். பாவம் அவள் குழந்தை தானே. வயது பதினொன்றுதானே ஆயிற்று. எனக்கோ எழுபது ஆகிறது. இனி என்வயதுவரை அவள் இருந்துவிட்டால் அதைகூட நரகம் அவளுக்கு வேறு வேண்டாம். தன் ஜீவியத்தையே கசப்பாக அவள் நினைத்து விட்டாள், இந்த நிமிஷம் அவளுக்கு அந்தியம் பிராப்தமானாலும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளும் பக்குவ நிலையாய் விட்டாள். மூன்றாவது பாரம் வரையில் வாசித்தவளாம். அவள் படிப்பும் பயன்படாமற் போயிற்று. பொழுது போக்குக்கு நாவல்களைத் தருவித்து அவளிடம் தரலாமென்றாலும், காதல்—சிருங்காரம் கலவாத நாவல் இல்லவேயில்லை. நாடகத்திற்கு அழைத்தேகலா மென்றாலோ அங்கும் காதலர் விளையாட்டுகள் தான். அதை அவள் பார்ப்பின் அவள் வயிறு பற்றி எரியும் நாவல்களைப் படிப்பினும் அவள் மனம் தவித்துத் துடிக்கும். என்ன செய்வேன் எவ்விதம் திருப்திபடுத்துவேன்! விவாகமில்லாமல் இருப்பேனாயின் எவ்வளவு பாக்கியசாலியாகக் கவலையற்று நிற்பேன்.

அந்தக்காலம் எனக்கும் உண்டா? உள்ளே அவளுடைய பிரலாபம் அதிகரிக்கிறது. போய் சமாதானப்படுத்த வேண்டும்.

(உள்ளே போகிறார்.)

விடுகதைகள்:

1. தட்டி விட்டால், ஆடிவரும் தாசியல்ல, தணலிலே செம்பருக்கும் ஈசன் அல்ல, குட்டியெடுத்து ஓடிப்போம் ஓணானல்ல, குளத்திலே தண்ணீர் குடிக்கும் குதிரை அல்ல, கட்டி விட்டால் கட்டி வரும் கள்வனல்ல, கை விட்டால் ஓடிப்போகும் பக்ஷியல்ல, புகர்ந்திடுவாய்.

செக்கச் சிவந்தவர்கள் நாலு பேர், செவ்வெண்ணெய் இட்டுக் கொண்டவர்கள் நாலு பேர், மஞ்சள் குளித்தவர்கள் நாலு பேர், மையிட்டுக் கொண்டவர்கள் நாலு பேர், பதினாறு பேர்களுக்கு இரண்டே ஆம்படையான்.

3. ஓட்டாலே வீடுகட்டி, உள்ளே பிரிசுத்தி, நாட்டாருக்கு ஞானியைப்போல் நலமளிக்கும், ஆகாரத்தை ருசிக்கச் செய்யும்.

4. பச்சை பச்சை நிறத்தாள், பவழம்போல நிறத்தாள், தாம்பரக் கொடிபோல தானு வளர்ந்தாள், முச்சுகட்டப் பிறந்தாள், முறம் கட்டப் பிறந்தாள், மாடு மேய்க்கப் பிறந்தாள், அரண்மனை வாசலுக்குக் கொடி கட்டப் பிறந்தாள்.

ஹாஸ்ய விலாஸம்.

1. காணச் சகியாத தெது?
குதிரைக்கு மற்றொரு பெயரென்ன? கோரம்
2. உன் மகனுடைய பெயர் என்ன?
கடலில் மூழ்கி எடுப்பது எது? முத்து
3. மூன்று என்பதற்கு வடமொழியில் எப்படி?
விளக்கு எண்ணெயுடன் இன்னும் வேண்டியதெது? திரி
4. நாவிதனின் ஜாதிப்பட்டம் என்ன?
நன்கு படித்தவர்கட்கு என்ன பட்டம்? பண்டிதர்
5. பாலின் நிறம் என்ன?
சுவற்றில் அடிப்பது எது? வெள்ளை
6. மழையைக் கொணர்வது எது?
விலைமகளிர் விற்பது எது? மேகம்
7. அரிசித்தாளுக்கு என்ன பெயர்?
குதிரையின் வேறு பெயரென்ன? மா
8. இனிது இனிது எது?
காந்தம் என்ற பெண்ணை எப்படி யழைப்பது? ஏகாந்தம்
9. தந்தையுடன் பிறந்த தங்கை உனக்கு என்ன முறை?
வித்வான் அதை என்பதை எப்படிச் சொல்லுவர்? அந்தை
10. மதுரை யாற்றின் பெயரென்ன?
சைவை என்பதைத் தலைக்கீழாகக் கூற? வைகை.
11. இவ்வுலகிடை நாம் விரும்புவதெது?
"போவோம்"—என்பதற்கு வேறு பதமென்ன? செல்வம்
12. விளங்குகிறதா என்பதற்கு வேறு மொழியென்ன?
உன் வீட்டின் திண்ணையில் கட்டியிருப்பதெது? படுதா.

ஸ்வாமி விவேகானந்தரின் அமிர்தவாக்கு.

தம்மை புகழ்ந்த ஒருவரைப்பார்த்து ஸ்வாமிகள் பின்வருமாறு கூறினார்:—

என்னைப் புகழாதே. இந்த உலகத்தில் இசைக்கும் வசைக்கும் மதிப்பு கிடையாது. ஊஞ்சலை ஆட்டுவது போல ஒரு மனிதனை, இசையின் புறமாகவும், வசையின் புறமாகவும், இங்கு மங்கும் ஆட்டுகின்றார்கள். எனக்குப் போதிய அளவு இசையும் கிடைத்தது. வசையும் கிடைத்தது. ஆனால் அவைகளைப் பற்றிச் சிந்திப்பதால் என்ன பிரயோஜனம்? பலன் கருதாது ஒவ்வொருவனும் அவனவன் கடமையைச் செய்யட்டும். அந்தியகாலம் நெருங்கிய பொழுது எனக்கும் உனக்கும் ஏனையவர்களுக்கும் இசையும், வசையும் ஒன்றாய் விடுகின்றன. இங்கே ஸேவை செய்வதற்காகவே வந்திருக்கின்றோம். ஈஸ்வராக்ஞை பிறந்தவுடன் நாம் அவ்வேலையை விட்டுவிடவேண்டும்.

இசை—கீர்த்தி. வசை—தூஷணம்.

ஞானிகள் அடைய விரும்பும் அறிவின் பூர்ணத்வம் அவரது அருள் வாய்ந்த பாதங்களிலே தானிருக்கின்றது. பக்தர் பெறும் ஆவலும் அன்பும் அந்தப் பாதங்களில் தான் இருக்கின்றது.

அந்தோ! அந்தப் பாதங்களைத் தவிர, ஆடவர்க்கும் பெண்டிருக்கும் புகலிடம் வேறெதிருக்கின்றது?

* *
*

ஐயோ! இந்த உலகத்திலே மனிதர்கள் ஒருவரோடொருவர் சண்டைச்சச்சரவு செய்வதிலேயே தங்கள் காலத்தைக் கழிக்கின்றார்கள். இது எவ்வளவு பெரும் பிழை? அவ்விதம் அவர்கள் எத்தனை காலம் தான் செல்லமுடியும்? வாழ்க்கையின் அந்திய காலத்தில் எல்லோரும் மாதாவின் கரங்களின் கீழ் வந்தடையவேண்டியது தானே.

சென்னை 600 008